நீதிநூற்றிரட்டு

மூலமும்,

மஹாவித்வான் - கா. இராமசாமிநாயுடு அவர்களால்

இயற்றப்பட்ட

விருத்தியுரையும்.

[இரண்டாம் வாலியம்.]

(6-ம் பாகம் முதல் 11-ம் பாகம் வரையில்.)

இவை

பென்ஷன் சுபேதார்-தஞ்சை. சாம்பசிவம்பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை - எஸ். குமாரசுவாமிபிள்ளையால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

[முதற்பதிப்பு]

1910.

Copyright] விலை ரூபா 1—8—0. [Regis

யிக்கப்பட்டது. தம்போல்வாரையு முளப்படுத்து அணிவோம்-என டனப்பாட்டுத் தன்மைப்பன்மையாற் கூறினார். இவ்வாறு நூன்முகத்து விநாயகவணக்கம் கூறுவது ஆன்றோ ரொழுக்க மாதலாலும், இந்நூலாசிரியர்க்கு விநாயகர் வழிபடுகடவு ளாதலாலும் இதுகூறப்பட்டது கூறவே, தாம் எடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி இனிது முடியுமென்பது கருத்து.

நூற்பயன்.

வெற்றிவேற்கை வீரராமன்
கொற்கையாளி குலசேகரன்புகல்
நற்றமிழ்தெரிந்த நறுந்தொகைதன்னால்
குற்றங்களைவோர் குறைவிலாதவரே.

(ப-ரை.) கொற்கை ஆளி - கொற்கைநகரை ஆள்வோனும், குலசேகரன் - தன் குலத்துக்கோர் முடிபோற் சிறந்தவனும் இருக்கிற, வெற்றி வேல் - வெற்றிவேலைத் தாங்கிய, கை - கையினையுடைய, வீரராமன் - அதிவீரராமபாண்டியனானவன், புகல் - சொன்ன, நல் தமிழ் தெரிந்த - நல்ல தமிழாகிய கடலிலே யாராய்ந்தெடுத்த, நறுந்தொகை தன்னால் - (நன்மணித் திரள்போன்ற) இந்த நறுந்தொகை யென்னும் நீதிமொழிகளால், குற்றம் - (உயிர்களிடத்துள்ள) குற்றங்களை, களைவோர் - நீக்குவோர், குறைவு இலாதவர் - (தம் குறைகளை ஒருவர் தீர்க்கவேண்டாது) தமக்குத்தாமே குறைதீர்த்தவராவர், எ-று.

(க-ரை.) அதிவீரராமபாண்டியன் செய்த இந்த நறுந்தொகையைக் கொண்டு உயிர்களிடத்துக் குற்றங்களைப் போக்குவோர் தம் குறைகளைத் தாமே யொழித்துக்கொண்டவருமாவர் என்பதாம்.

(வி-ரை.) குறை தீர்ப்பவரும் தீர்க்கப்படுவோருமாகிய இருதிறத்தாருள்ளும் தீர்ப்பவரைப் பிரித்து நிற்றலால், ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. நறுமை - நன்மை. தொகை - தொகைச்சொல். பயப்

மிகைபடக்கூறாது படுத்தான் என்றாற்போல, தெரிந்து எடுத்தற் காதலால் தெரிந்தெடுத்தவெனை மிகைபடக்கூறாது 'தெரிந்த' என்றார். நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை யெனவே நற்றமிழாகிய கடலில் ஆராய்ந்தெடுத்த நன்மணித்திரள்போன்ற நறுந்தொகைச்சொற்கள் என்பது பெறப்பட்டது. நறுந்தொகை யென்னுங் களைகளை கருவியால் உயிர்களாகிய பைங்கூழின் குற்றங்களாகிய களைகளைப் பறித்தெறியு மரசராகிய உழவர் குறைவிலர் என நின்றமையால் இது இயைபுருவகவணியாமெனக் காண்க.

திருக்குறள் - செங்கோன்மை - ௯ - ம் பாட்டு,

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்."

என்றாராதலால் இது அரசனை நோக்கிற்று. இதன் கருத்து விளங்கிக்கிடந்தது. இந்நூல் செய்தோன் இத்தொழிற்கு உரியவனாதலால் இவ்வாறு கூறுதற் கியைந்தனெனக் காண்க. இது சிறப்புப் பாயிரம். கொற்கை - மதுரைக்கருகிலுள்ள ஓரூர். சேகரம் தலையாதலால் குலசேகரன் என்பதற்குக் குலமாகியசரீரத்துக்குத் தலைபோலச் சிறந்தவன் என்றும், குலமாகிய தலைக்கு முடிபோல விளங்குவோன் என்றும் கூறிக்கொள்க. சேகரம் இடவாகுபெயராய் முடியை யுணர்த்திற்று. குற்றம்-உயிர்க்குற்றங்கள், அவை காமவெகுளி மயக்கங்கள் முதலாயின.

நூல்.

1. எழுத்தறிவித்தவன் இறைவனாகும்.

(ப-உரை.) எழுத்து - ஒருவனுக்கு எழுத்தோடுகூடிய இலக்கிய இலக்கண நூல்களை, அறிவித்தவன் - அறிவித்தவனாகிய ஆசிரியன், இறைவன் ஆகும் - (அவனுக்குக்) கடவுளாவன், எ-று.

(க-ரை.) ஒருவனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியன் அவனுக்குக் கடவுளாவன் என்பதாம்.

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தால் ௳[தின்
மொழித்திறத்தின் முட்டறுத்தோ னாகும்-மொழித்திறத்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்."

என்றாராதலால், எழுத்தறிதல் கடவுளை யறிதற்கும் வீடுபெறு தற்கும் காரணமாமாதலால் அதனை யறிவித்தோனைக் கடவுளென் றுது 'ஆகும்' என்றார். அக்கடவுள பிறர்கடவுள், தன்கடவுள் ஆசி ரிய னென்பது இதன்கருத்து. இன்னும் ஆசிரியனை,

"தெய்வத்தின் மதித்த றிரிபொன் றின்மை"
எனப் பிறருங் கூறுதல் காண்க.

இனி—திருக்குறள் - கல்வி - ௫ - ம் பாட்டு,

"உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்."

எனக்கூறிய திருவள்ளுவ நாயனார்க்கும் இதுவே கருத்தென் பதை, 'உடையார்மு னில்லார்போ லேக்கற்றும்' என்றதனானுங் காண்க. (க)

2. கல்விக்கழகு கசடறமொழிதல்.

(ப-ரை.) கல்விக்கு - (இவ்வாறு எழுத்தறிவிக்கிற ஆசிரியனு டைய) கல்விக்கு, அழகு - அழகாவது, கசடு அற மொழிதல் - (தன் னை வழிபட்டுக் கேட்போர்க்குக்) குற்றமறச் சொல்லுதலாம், எ-று.

(க-ரை.) எழுத்தறிவிப்போனுடைய கல்விக்கு அழகாவது தன் மாணவருக்குக் குற்றமறச் சொல்லுதலாம்.

(வி-ரை.) கசடு - சந்தேக விபரீதங்கள். (ஐயம் - திரிபு.) அற - ஒழிய. மொழிதல் - கடாவிடைகளான் விரித்துரைத்தல். இவ்வாறு சொல்லாவிடின் அவன் உலகத்தாரால் இகழப்படுவோன் என்பது கருத்து. இதற்குதாரணம்:—

திருக்குறள் - சொல்வன்மை - ௩0 - ம் பாட்டு,

"இணரூழ்த்து நாறு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்."

எனத் திருவள்ளுவ நாயனாருங் கூறுதல் காண்க. (உ)

3. செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்.

(ப-ரை.) செல்வர்க்கு - செல்வ முடையோர்க்கு, அழகு - அழகாவது, செழு - வளம் பொருந்திய, கிளை - வறிஞராகிய தமது உறவினருடைய குடும்ப பாரத்தை, தாங்குதல் - சுமத்தலாம், எ-று.

(க-ரை.) வறிஞராகிய தமது உறவினருடைய குடும்ப பாரத்தைச் சுமத்தல் செல்வர்க்கு அழகாகும் என்பதாம்.

(வி-ரை.) பெரும்பாரம் சுமந்து வருந்திவருவோருடைய வருத்தத்தைச் சுமைதாங்கி யேற்றுக்கொண்டு அவர்க்குச் சுகந்தருதல் போல, வறுமையால் வருந்துவோராகிய தமது சுற்றத்தாருடைய குடும்ப பாரச்சுமையைத் தாமேற்றுக்கொண்டு அவர்க்குச சுகந்தருதல் செல்வர்க்கழகாகு மென்பது இதனாற்போந்த பொழிப்புப்பொருள். இவர் செல்வர் என்றமையாலும், செழுங் கிளை தாங்குதல் என்றமையாலும் உறவினர் வறிஞரென்பது விளங்கிற்று. செல்வத்திற் குறைந்தவரைச் செழுங்கிளையென்பா னென்னெனின், எக்காலத்தும் ஒருதன்மையராய்க் கூடிக்குலாவி யிருத்தற்குரிய நல்லுறவினராதலாலென்க.

இதற்குதாரணம்:—திருக்குறள் - சுற்றந்தழால் - ௬ - ம் பாட்டு,

"சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்." (௩)

4. வேதியர்க்கழகு வேதமுமொழுக்கமும்.

(ப-ரை.) வேதியர்க்கு - மறையோர்க்கு, அழகு - அழகாவது வேதமும் - வேதமோதுதலும், ஒழுக்கமும் - அதற்கேற்ப தமது ஒழுக்கங் குன்றாது நிற்றலுமாம், எ-று.

(க-ரை.) வேதமோதலும் அதற்கேற்ப நல்லொழுக்கில் நிற்றலும் மறையோர்க்கு அழகாவன வென்பதாம்.

(வி-ரை.) வேதமோதலினும் ஒழுக்கஞ் சிறந்ததென்பதுதோன்றுதற்கே அதனை யிறுதியில் வைத்தார். ஒழுக்கம் என வாளாகூறினுரேனும் வேதமு மொழுக்கமும் என வேதமோதலை முன் வைத்ததனால் அதற்கேற்ப நல்லொழுக்கமென்பது தானே பெறப்பட்டது. வேதமும் ஒழுக்கமும் காரணகாரியங்கள். இவ்விரண்டனுள் வேதமோதுதலை மறந்தாலும் மீண்டும் பெற்றுக்கொள்ளலாம்; ஒழுக்கங் குன்றின் பிறப்புக்கெடுமென்பது இதனாற் போந்தபொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - ஒழுக்கமுடைமை - ௪ - ம் பாட்டு,

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்."

இதனுள், ஓத்து மறப்பினுமென் றொழியாது மறப்பினுங்கொளலாகும் என்றது மறந்தால் அவர் பிறப்புக் கெடுமென்பது நோக்கி யெனக்காண்க. (௪)

5. மன்னர்க்கழகு செங்கோன்முறைமை.

(ப-ரை.) மன்னர்க்கு - அரசருக்கு, அழகு - அழகாவது, செங்கோல் முறைமை-செங்கோல் செலுத்து முறைமையேயாம், எ-று.

(க-ரை.) செங்கோல் முறைமையைச் செலுத்துதலே அரசருக்கு அழகாவது என்பதாம்.

(வி-ரை.) செவ்வியகோல் போலுதலாற் செங்கோல் எனப்பட்டது. செங்கோல் முறைமையாவது மநுமுதலிய நூல்களால் விதிக்கப்பட்ட ராஜநீதியிற் றவறாது நடத்தல். முறைமை - தருமம். அரசன் செங்கோல் செலுத்துவனாயின் அவனுக்குப் புகழ் நிலைபெறும், செலுத்தானாயின் புகழ் நிலைபெறாது என்பது இதன் பொழிப்புப்பொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - செங்கோன்மை - [illegible] - ம் பாட்டு,

"மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல்
மன்னுவா மன்னர்க் கொளி." (௫)

6. வணிகர்க்கழகு வளர்பொருளீட்டல்.

(ப-ரை.) வணிகர்க்கு - வைசியர்க்கு, அழகு - அழகாவது, வளர் - வளர்கின்ற, பொருள் - பொருளை, ஈட்டல் - சேர்த்து வைத்தலாம், எ-று.

(க-ரை.) மேன்மேலும் வளர்கின்ற பொருளைச் சேர்த்துவைத்தல், வைசியர்க்கு அழகாகு மென்பதாம்.

(வி-ரை.) கொள்வதும் கொடுப்பதும் ஆகிய இரண்டினும் கடு வுநிலைமை தவறாமையால் தானே வளருமென்பது தோன்ற, 'பொருள்' என்னது 'வளர்பொருள்' என்றார். இவ்வாறு வளர்பொருளீட்டினார்க்கு ஏனைய அறங்களும் இன்பங்களும் எளியவாகி அவரை யழகுசெய்யுமென்ப திதனாற் போந்தபொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - பொருள்செயல்வகை - க௦ - ம் பாட்டு,

"ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டு மொருங்கு."

"வைசியர்க்கழகு......" என்றும் பாடம். (௬)

7. உழவர்க்கழகே ருழுதூண்விரும்பல்.

(ப-ரை.) உழவர்க்கு - பூவைசியருக்கு, அழகு - அழகாவது, ஏர் உழுது - (நிலத்தை) ஏரினாலுழுது (பயிர்செய்து), ஊண் - உண் பதையே, விரும்பல் - விரும்புதலாம், எ-று.

(க-ரை.) உழவர்க்கு நிலத்தை யுழுது பயிர்செய் துண்ண விரு ம்புதலே அழகாகு மென்பதாம்.

(வி-ரை.) உழவர் - நிலத்தையுழுது பயிர்செய்வோர். [illegible]
[illegible]

குழுதாண்விரும்பல், மற்றொருவகையான் வருமூண் விரும்பல் அழகன்றென்பதும் பெறப்பட்டது. இவ்வாறு விரும்பின் இவரேரின் பின்யாவரும் செல்லவேண்டுவரேயன்றி, அவர் சீரின்பின்னே இவர் செல்லவேண்டாமை தானே பெறப்பட்டது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - உழவு - ௩ - ம் பாட்டு,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்."

"உழவர்க்கழகிக் குழுதாண்விரும்பல்" என்றும் பாடம். (எ)

8. மந்திரிக்கழகு வருபொருளுரைத்தல்.

(ப-ரை.) மந்திரிக்கு - அமைச்சனுக்கு, அழகு - அழகாவது, வரு பொருள் - இனிவரப்போகிற காரியங்களை, (முன்னேயறிந்து) உரைத்தல் - அரசனுக்குச் சொல்லுதலாம், எ-று.

(க-ரை.) இனி வரப்போகிற காரியத்தை முன்னே யறிந்து அரசனுக்குச் சொல்லுதல் மந்திரிக்கு அழகாகு மென்பதாம்.

(வி-ரை.) இவ்வாறு முன்னறிந்து சொல்லுதல் அவனுக்குஅழகாதலாவது தான் குற்றத்தி னீங்குதலாம்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - அமைச்சு - அ - ம் பாட்டு,

"அறிகொன் றறியா னெனினு முறுதி
உழையிருந்தான் கூறல் கடன்."

அறி கொன்று - அறிந்து சொன்னதையுந் தள்ளி. (அ)

9. தந்திரிக்கழகு தறுகணாண்மை.

(ப-ரை.) தந்திரிக்கு - படைத்தலைவனுக்கு, அழகு - அழகாவன, தறுகண் - (போர்செய்யுங்கால்) இரக்கமில்லா திருத்தலாகிய பேராண்மையும், ஆண்மை - மிக்க உபகாரியாந் தன்மையாகிய பேராண்மையுமாம், எ-று.

(க-ரை.) போர்க்களத்தில் இரக்கமின்மையும், பகைவரிடத்தில் உபகாரகுணமுமே படைத்தலைவனுக்கு அழகாவன என்பதாம்.

(வி-ரை.) ஊராண்மை ஆண்மையெனக் குறைந்து நின்றது. போர்செய்யுங்கால் பகைவர்மேல் இரக்கமில்லையாது போர்செய்த லும், போர்செய்யுங்கால் அவர்க்கொரு தாழ்வுண்டாயின் அதற்கிர ங்கி உதவிசெய்தலும் அறமாதலால் 'அழகு' என்றார்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - படைச்செருக்கு - ௪ - ம் பாட்டு,

"பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதனெஃகு."

ஊராண்மை - மிக்கவுபகாரியாந்தன்மை. அது இலங்கையர் கோன், தன் சேனைகளெல்லா மடிந்து தான் றனியே நின்றது கண்டிரங்கி, இன்றுபோய் நாளைவா வென்ற அயோத்தியர் கோமா னாகிய சக்ரவர்த்தித் திருமகன் சொல்லிவிடுத்தது போல்வது. தந்தி ரம் - சேனை. அதனையுடையவ னாதலால், சேனைத் தலைவனுக்குத் தந்திரியெனப் பெயர் வழங்கிற்று. தறுகணாண்மை யென்பதற்கு அஞ்சாமையை ஆளுந்தன்மை யென்றுரைத்தலுமாம். (௯)

10. உண்டிக்கழகு விருந்தோடுண்டல்.

(பூ-ரை.) உண்டிக்கு - (ஒருவனது) போஜனத்துக்கு, அழகு - அழகாவது, விருந்தோடு - விருந்தினரோடு கூடியிருந்து, உண்டல் - உண்பதேயாம், எ-று.

(க-ரை.) விருந்தினரோடு கூடியிருந் துண்பதே ஒருவனது போஜனத்துக்கு அழகாவ தென்பதாம்.

(வி-ரை.) விருந்து - பண்பாகுபெயர். விருந்தினர் பண்டறிவு ண்மையிற் குறித்து வந்தாரும், அது இன்மையிற் குறியாது வந்தா ரும் என இருவகையர். இங்கு விருந்தென்றது அவ்விருவகையின ரையுமே, உண்டிக்கழகு விருந்தோடுண்டல் என்றமையால் அவ்வா றுண்ணுமை உண்டிக் கழகன்றென்பது பெறப்பட்டது. தனித்துண் பதற்கு வறுமையும் இழிவும் உண்டாமாதலால் விருந்தோடுண்டல் அழகாயிற்று. இதற்கு உதாரணம்:—

திருக்குறள் - ஈகை - ௯ - ம் பாட்டு,

"இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்."

இதனுள், நிரப்பிய வென்பதற்குப் பொருள், தம் வயிற்றை நிரப்பும்பொருட்டு என ஆத்திருடியுரையி லுரைத்தாங்குரைத்துக் கொள்க. (க0)

11. பெண்டிர்க்கழ கெதிர்பேசா திருத்தல்.

(ப-ரை.) பெண்டிர்க்கு - மாதர்க்கு, அழகு - அழகாவது, எதிர் பேசாது - தம் கணவருக் கெதிர்நின்று பேசாமல், இருத்தல் - அடங்கியிருத்தலாம், எ-று.

(க-ரை.) தம் கணவருக் கெதிரேநின்று பேசாம லடங்கியிருத்தலே மாதர்க்கழகாவ தென்பதாம்.

(வி-ரை.) எதிர் பேசாதிருத்தல் என்பதற்கு எதிர்த்துப் பேசாதிருத்தல் எனப் பொருள் கூறலுமாம். எதிர்நின்று பேசுதலாகிய அடங்காமை அவரைத் தாழச்செய்தலால், பேசாதடங்குந் தன்மை அவரை மேன்மேலு முயர்த்தி அவர்க்கு அழகு செய்யுமென்ப திதனாற்போந்த பொருள். இது குலமாதர் விலைமாதர் என்னும் இருதிறத்தார்க்கும் பொதுவாய் நின்றது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - அடக்கமுடைமை - க - ம் பாட்டு,

"அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
ஆரிரு ளுய்த்து விடும்." (கக)

12. குலமகட்கழகுதன் கொழுநனைப்பேணுதல்.

(ப-ரை.) குலமகட்கு - குலப்பெண்ணுக்கு, அழகு - அழகாவது, தன் - தன்னையும், கொழுநனை - தன்கணவனையும், பேணுதல் - பாதுகாத்தலாம், எ-று.

(க-ரை.) குலமாதர்க்குத் தன்னையும் தன் கணவனையும் பாதுகாத்தலே அழகென்பதாம்.

(வி-ரை.) தன் என்பதில் ஐயுருபும் எண்ணும்மையும் தொக்கு நின்றது. பொறப்படப் பேணுதல் என்றமையால் தன்னைக் கற்பில் வழுவாமலும், தன் கணவனை அவன் சொல்லினும் உணவுதவல்முத லிய வுபசாரங்களினும் வழுவாமற் பாதுகாத்தலும் அடங்கும். இவ் வாறு பாதுகாத்தலே கற்பிற்கு இலக்கணமாதலால் குலமகட்கு அழ காயிற்று. இதற்குதாரணம்:—

திருக்குறள் - வாழ்க்கைத் துணைநலம் - ௬ - ம் பாட்டு,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

தன்கொழுநனை யென்பதற்குத் தன்கணவனை யென்றுரைத் தலுமொன்று. (கஉ)

13. விலைமகட்கழகுதன் மேனிமினுக்குதல்.

(ப-ரை.) விலைமகட்கு - விலைமாதுக்கு, அழகு - அழகாவது, தன் மேனி - தன் உடம்பை, மினுக்குதல் - மஞ்சள்முதலியவற்றால் விளங்கச்செய்தலாம், எ-று.

(க-ரை.) விலைமாதுக்குத் தன்னுடம்பை மஞ்சள் முதலியவற் றால் விளங்கச்செய்தலே அழகாவ தென்பதாம்.

(வி-ரை.) மேனி மினுக்குதலாவது - உடம்பை மஞ்சள், பரி மளதிரவியங்கள், மலர்மாலை, பட்டாடை, பொன்மணிப் பணிகள் முதலியவற்றால் அலங்கரித்துக் கொள்ளுதல். இவள் தெய்வப்பெ ண்போல நின்று அறிவிலாப் புருடரை மயக்கி வஞ்சிப்பதற்கு இவ் வலங்காரமே கருவியாதலால், 'விலைமகட்கழகுதன் மேனிமினுக்கு தல்' என்றார். இது அவளுக்கு அழகாயினும் அறிவிலாரை மயக்கி வஞ்சித்துக் கொல்வதற் கேதுவாதலால் அவர்க்கு விடமாமென்பது மாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வரைவின்மகளிர் - அ - ம் பாட்டு,

"ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு."

தம்மேனியையினுக்கி மாயமகளிர் அறிவிலாரைத் தீண்டுவது, காமநெறியால் உயிரைக் கவரவந்த தெய்வமகளிர் தீண்டுவதுபோலு மென்பர் என்பதிதன்பொருள். (௧௩)

14. அறிஞர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்.

(ப-ரை.) அறிஞர்க்கு - அறிவுடையோர்க்கு, அழகு - அழகாவது, கற்று - கற்கவேண்டிய நூல்களையெல்லாங் கற்று, உணர்ந்து - அவற்றின் பொருளை ஐயந்திரிபற அறிந்து, அடங்கல் - (அக்கல்வி யுணர்ச்சிகட் கேற்பத் தம்முடைய மனமொழி மெய்கள்) அடங்கி யிருத்தலேயாம், எ-று.

(க-ரை.) கற்றுணர்ந்தடங்கலே அறிஞர்க்கழகாவ தென்பதாம்.

(வி-ரை.) அறிஞர் என்பதில் ஞகரம் பெயரிடைநிலை. கற்கவேண்டிய நூல்கள் என்றது அறிவுநூல்களை. அறிவுநூல்களைக் கற்றுணர்ந்தாலன்றி மனமொழிமெய்க ளடங்காவாதலால், கற்று என்பதற்கு அறிவுநூல்களைக் கற்று எனப் பொருளுரைக்கலாயிற்று. மனமொழிமெய்களை முக்கரண மென்பர். கற்றுணர்ந்தடங்காமை பேதைமையாதலால் கற்றுணர்ந்தடங்கல் 'அழகு' என்றார். இவ்வாறடங்கி யிருப்பின் அறக்கடவுள் ஏவல்செயு மென்பதாம்.
இதற்குதாரணம்:—திருக்குறள்- அடக்கமுடைமை - ௧0 - ம் பாட்டு,

"கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
அறம்பார்க்கு மாற்றி னுழைந்து."

இச்சூத்திரத்தன் அடங்கல் என்பதில் மனத்தின்கண் வெகுளி தோன்றுமற் காத்தலு மடங்கிநிற்றல் காண்க. (௧௪)

"அறிவோர்க்கழகு..." என்றும் பாடம்.

15. வறிஞர்க்கழகு வறுமையிற்செம்மை.

(ப-ரை.) வறிஞர்க்கு - தரித்திரர்க்கு, அழகு - அழகாவது, வறுமையில் - வறுமைக்காலத்திலும், செம்மை - செவ்வனே யிருத்தலாம், எ-று.

(க-ரை.) வறுமைக்காலத்திலும் செவ்வனே யிருத்தலே வறிஞர்க்கு அழகாவதென்பதாம்.

(வி-ரை.) "வறியோர்க்கழகு" என்றும் பாடம். செம்மை-ஒழுக்கமும் நாணும் கெடாதிருக்குந் தன்மை. என்னெனின், வறுமைவந்ததென்று ஒழுக்கத்தைக் கைவிட்டால் குலத்தார் நிந்திப்பார், நாணத்தைக் கைவிட்டால் அறக்கடவுள்காயும், ஆதலால், இரண்டையும் கைவிடாதிருத்தலே செம்மையென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - நாணுடைமை - க - ம் பாட்டு,

"குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை."

ஆதலால், வறுமையிற் செம்மையெனச் சென்றுட்டுதலால், திருவள்ளுவநாயனுரு மிவ்வாறு கூறினு ரெனக்காண்க. கொள்கை-ஒழுக்கம். இதற்குப் பரிமேலழகர் குலத்தைக் கெடுக்கும் நலத்தைக் கெடுக்கும் எனப் பொருள்கூறினுர். குலஞ்சுடுதல் - குலத்தார் நாவினுற்சுடுதல், "ஆறுதே, நாவினுற் சுட்ட வடு" என வருதல்காண்க. நலம் -அறம். அன்பிலதனை யறங்காயும்' என வருதலால், நலஞ்சுடும் என்பதற்கு அறக்கடவுள் காயும் என்றுரைத்துக்கொள்க.

16. (1) தேம்படுபனையின் றிரள்பழத்தொருவிதை
வானுறவோங்கி வளம்பெறவளரினும்
ஒருவற்கிருக்க நிழலாகாதே;
(2) தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்க்கயத்துட் சிறுமீன்சினையினும்
நுண்ணிதேயாயினு மண்ணல்யானை
அணிதேர்ப்புரவி யாட்பெரும்படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே;
(3) ஆதலால்,

(4) பெரியோரெல்லாம் பெரியருமல்லர்;
(5) சிறியோரெல்லாஞ் சிறியருமல்லர்;
(6) பெற்றோரெல்லாம் பிள்ளைகளல்லர்;
(7) உற்றோரெல்லாம் உறவினரல்லர்;
(8) கொண்டோரெல்லாம் பெண்டிருமல்லர்.

(1) (பதவுரைமுதலியன.) தேம்படு-மதுரம்பொருந்திய, பனையின்-பனையினது, திரள் - திரண்ட, பழத்து - கனியினது, ஒரு விதை - ஒரு விதையானது, வான் உற - ஆகாயத்தைத் தீண்டும்படி, வளம் பெற வளரினும் - செழுமையுண்டாக வளர்ந்தாலும், இருக்க - இருப்பதற்கு, ஒருவற்கு - ஒருவனுக்காயினும், நிழல் ஆகாது - நிழலைத் தராது; ஏகாரம் - ஈற்றசை. (தேம்படுபழம் எனக்கூட்டுக.)

(2) ஆலின் - ஆலினது, தெள்ளிய - தெளிவாகிய, சிறு பழத்து - சிறிய கனியிலுள்ள, ஒரு விதை - ஒரு (சிறிய)வித்தானது, (ஆலின் சிறுபழம் எனக்கூட்டுக.) தெள் - தெளிவாகிய, நீர் - நீரையுடைய, கயத்துள் - தடாகத்திலிருக்கிற, சிறு மீன் - சிறிய மீனினது, சினையினும் - முட்டையைக் காட்டிலும், நுண்ணிதே ஆயினும் - நுட்பமானதாகவே யிருந்தாலும், அண்ணல் - பெருமை பொருந்திய, யானை - யானையும், அணி தேர் - அழகுபொருந்திய தேரும், புரவி-குதிரையும், பெரு - பெரிதாகிய, ஆள் படையொடு - காலாளுமாகிய சேனையுடனே, மன்னர்க்கு - அரசருக்கு, இருக்க-தங்கியிருக்க, நிழல்ஆகும்-நிழலைத்தரும்.

(3) ஆதலால்—அதுபோல,

(4) பெரியோர் எல்லாம் - உருவினால் பெருமையுடையோ ரெல்லாரும், பெரியரும் அல்லர் - பெருமையுடையோருமல்லர், (என்றமையால்) குணம் தொழில் கல்வி முதலியவற்றால் சிறியாராகவுமிருப்பார்க ளென்பது குறிப்பெச்சம். உம்மை எதிரதுதழீஇயது. அவர் வடிவு நோக்கிப் புகழலாகாதென்பது கருத்து.

இதற்குதாரணம்:—திருக்குறள்-ஊக்கமுடைமை-கூ-ம் பாட்டு,

"பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்."

சிறியோர் எல்லாம் - உருவினால் சிறியராயிருப்பவ ரெல்லா ரும், சிறியரும் அல்லர் - சிறியராகவே யிரார்கள், (என்றதனால்) குணம் தொழில் கல்வி முதலியவற்றில் பெரியராகவு மிருப்பார்கள் என்பது குறிப்பெச்சம்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வினைத்திட்பம் - எ - ம் பாட்டு,

"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து."

பெற்றோர் எல்லாம் - ஒருவர் பெற்ற பிள்ளைக ளெல்லாரும், பிள்ளைகள் அல்லர் - பகிரதன் முதலியோர்போல நல்ல பிள்ளைக ளாகவே யிரார்கள்; துரியோதனன் முதலியோர்போலக் கெட்டபிள் ளைகளாகவு மிருப்பார்கள் என்பது குறிப்பெச்சம். உம்மை குறைத் துநின்றது.

இதற்குதாரணம்:—திருக்குறள்-புதல்வரைப்பெறுதல் உ-ம் பாட்டு,

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்."

இக்குறளின் எதிர்மறை முகத்தால் கெட்ட பிள்ளைகட்கு உதாரணமுங் காண்க. பெற்றோர் கொண்டோர் என்பன, யானுண் டது சோறு என்புழிப்போலச் செயப்படுபொருள் வினைமுதல்போ னின்றன.

உற்றோர் எல்லாம் - உறவினரெல்லாரும், உறவினர் அல்லர் (துரியோதனனுக்கு விதுரன் கர்ணன் முதலியோர்போல, நல்லுறவி னராகவே யிரார்கள்; சல்லியன் சகுனி முதலியோர்போலக் கெட் டவுறவினராகவு மிருப்பார்கள் எனக்கொள்க. இத்தொடர்க்கும் உம்மை விகாரத்தாற் றொக்கது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - சுற்றந்தழால் - [illegible] - ம் பாட்டு,

"விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா
வாக்கம் பலவுந் தரும்."

இதன் எதிர்மறை முகத்தால் கெட்ட சுற்றத்திற்கும் உதார ணங் காண்க.

கொண்டோர் எல்லாம் - கொள்ளப்பட்ட மனைவிய ரெல்லா ரும், பெண்டிரும் அல்லர்-அருந்ததி முதலியோர் போலக் கற்புடை மனைவியராகவே யிரார்கள், தீக்குடை மனைவியராகவு மிருப்பார் கள் எனக்கொள்க.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வாழ்க்கைத் துணைநலம் -
ரு - உ - ம பாட்டுகள்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."
"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில்"

இவற்றை இருதிறத்தார்க்கும் உதாரணமாகக் கொள்க.

தேம்படுபனையின் என்பது முதல் பெண்டிருமல்லர் என்னு மளவும் ஒரு.தொடர். இதனுள், தேம் - நிழலாகாதே என்பதும், தென் - நிழலாகுமே என்பதும் எடுத்துக்காட்டுவமையெனக் கொண்டு, ஆதலால் அதுபோல என்பதைக் கூட்டி, பெரியோரெல் லாம் பெரியருமல்லர், சிறியோரெல்லாஞ் சிறியருமல்லர், பெற் றோரெல்லாம் பிள்ளைகளல்லர், உற்றோரெல்லா முறவினரல்லர், கொண்டோரெல்லாம் பெண்டிருமல்லர் என முடித்துப் பொருள் காண்க.

இத்தொடரின் கருத்து: பெருமை பெருமையேயாகாது, சிறு மை சிறுமையேயாகாது; பெருமையினுஞ் சிறுமையுண்டு, சிறுமை யினும் பெருமையுண்டு என்பதாம். (கசு)

17. (1) வடமொழியின்பா றன்சுவைகுன்றாது:

(2) சுடினுஞ்செம்பொன் றன்னொளிகெடாது;
(3) அரைக்கினுஞ்சந்தனந் தன்மணமறாது;
(4) புகைக்கினுங்காரகில் பொல்லாங்குகமழாது;
(5) கலக்கினுந்தண்கடல் சேறாகாதே;
(6) அடினும்பால்பெய்துகைப் பறாதுபேய்ச்சுரைக்காய்;
(7) ஊட்டினும்பல்விரை யுள்ளிகமழாதே;
(8) ஒருநாட்பழகினும் பெரியோர்கேண்மை
இருநிலம்பிளக்க வேர்வீழ்க்கும்மே;
(9) நூறாண்டுபழகினு மூர்க்கர்கேண்மை
நீர்க்குட்பாசிபோல் வேர்க்கொள்ளாதே.

(ஆதலால்)

(10) பெருமையுஞ்சிறுமையுந் தாந்தரவருமே.

(பதவுரை முதலியன.)

(1) ஆவின்பால் - பசுவின்பாலே, அடினும்-வற்றக் காய்ச்சினும், தன் சுவை குன்றாது - தன்சுவையிற் குறையாது (மிகும்), அதுபோலவும்;—

(2) செம்பொன் - செம்பொன்னானது, சுடினும்-நெருப்பினாற் சுடப்பட்டாலும், தன் ஒளி கெடாது - தன்னொளியிற் குறையாது (மிகும்), அதுபோலவும்,—

(3) சந்தனம்-சந்தனக்கட்டையானது, அரைக்கினும்-அரைக்கப் பட்டாலும், தன் மணம் அறாது - தன் பரிமளம் குறையாது (மிகும்) அதுபோலவும்;—

(4) கார் அகில்-சேகுபற்றிய அகிற்கட்டையானது, புகைக்கினும்-நெருப்பிலிட்டுப் புகைத்தாலும், பொல்லாங்கு கமழாது-தன்மணமின்றித் தீநாற்றம் நாறாது (நறுநாற்றமே மிகும்), அதுபோலவும்;-

(5) தண்கடல் - குளிர்ச்சியாகியகடலானது, கலக்கினும்-கலக்

தெளிவாகவே யிருக்கும்) அதுபோலவும்;—மேன்மக்களை ஒருவர் பொல்லாங்குசெய்து கெடுப்பினும் தம் மேன்மைக்குணங் கெடாமலே, கெடுப்பவர்க்கு இன்பமானவற்றையே செய்வார்கள். இதற்குதாரணம்:—திருக்குறள்-சான்றாண்மை-எ-ம் பாட்டு,

"இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு."

இனி அருத்தாபத்தியால், நன்மை செய்தார்க்குத் தீமைகளே செய்வது கீழ்மக்களுக்கு இயல்பெனக்கொண்டு, வருந்தொடர்க்கும் இக்குறளையே யுதாரணமாகக் கொள்க.

(6) பேய்ச்சுரைக்காய்-பேய்ச்சுரைக்காயானது, பால்பெய்து அடினும் - பால்விட்டுச் சமைத்தாலும், கைப்பு அறாது - தன்குணமாகிய கசப்பு நீங்காது (அந்தப்பாலுங் கெட்டுப்போகும்), அது போலவும்;—

(7) பல்விரை ஊட்டினும்-பலவாசனைகளை யூட்டினாலும், உள்ளி-உள்ளியானது, கமழாத-தன் தீநாற்ற மொழிந்து நன்மணங் கமழாது,(அந்த பல நல்லவாசனைகளையுங் கெடுத்துவிடும்), அதுபோலவும், கீழ்மக்களைப் பல நன்மைகள் செய்து போற்றினும் அவற்றையெல்லாங் கெடுத்துத் தமது துர்க்குணங்களையே காட்டுவர் என்பதாம். இதற்குதாரணம்:—

"தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா
வுளிநீரர் மாதோ கயவர்—அளிநீரார்க்
கென்னானுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே
இன்னாங்கு செய்வார்ப் பெறின்."

"வேங்கை வரிப்புலியைத் தீர்த்த விடகாரி
யாங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்

"தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
யெக்காலுங் குன்ற லிலராவர்—அக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாம்
தேவரே தின்னினும் வேம்பு."

இவற்றுள், கயவர் போற்றுவோர்க்கு நற்குணங் கொடாமைக்கும் தீகுணங் கொடுத்தற்குமே உதாரணங் காண்க. இவ்விரண்டு தொடர்க்கும் பொருள் பெரியோர் - மூர்க்கர் எனவும், பெருமையுஞ் சிறுமையுந்தாந்தர வருமே எனவும் பின்னர்க் கூறுதலால் ஒட்டலங்காரமன்று, எடுத்துக்காட்டுவமையென்றேகொள்க. விளங்குதற்பொருட்டு இவ்விடத் தெடுத்துரைக்கப்பட்டன.

(8) ஒருநாள் பழகினும்-ஒருநாள் பழகினாலும், பெரியோர் கேண்மை-மேன்மக்களுடைய நட்பாகிய மரமானது, இருநிலம் பிளக்க-பெரிய பூமியானது பிளக்கும்படி, வேர் வீழ்க்குமே - வேரூன்று நிற்கும்;—

வீழ்க்குமேயென மகரவொற்று விரித்தல் விகாரமாயிற்று. ஏகாரத்தை மாறிக்கூட்டுக. நட்பென்னு மரமானது நாளுக்குநாள் பூமியெல்லாம் பிளக்கும்படி வேர்வீழ்த்திக்கொண்டே தழைத்தோங்கும் என்பதாம். இதற்குதாரணம்:—திருக்குறள்-எ௱அ-உ-ம் பாட்டு,

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு." எனவும்,

"கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை யெஞ்ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற்
கெதிர்செலத் தின்றன்ன தகைத்தரோ வென்றும்
மதுர மிலாளர் தொடர்பு." எனவும் காண்க

(9) நாளுண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை-கீழ்மக்களுடைய நட்பாகிய மரமானது நாடோறும் பழகினாலும், நீர்க்குள் பாசி போல்-நீரிலுள்ள பாசிபோல, வேர் கொள்ளாதே-வேரூன்றாமலே அலையும்:—

பாசி நீர்க்குள் வேர்க்கொள்ளா தலைதல்போல வேர்க்கொள்ளா தலையுமெனக் கூட்டி விரித்துரைத்துக் கொள்க. ஏகாரம் - அசைநிலை. இதற்குதாரணம் மேற்காட்டியவற்றுட் காண்க. (அதினுல்).

(10) பெருமையும்-(மேன்மக்களிடத்துப்) பெருமையுண்டாதலும், சிறுமையும் - (கீழ்மக்களிடத்துச்) சிறுமை யுண்டாதலும், தாம் தர வருமே - அவர்தர வுண்டாவதேயன்றிப் பிறர்தர வுண்டாவதில்லை, எ-று.

மேன்மக்களுக்கு மேலானகுணமே யியற்கை, கீழ்மக்களுக்குக் கீழான குணமே யியற்கை; ஆதலால், இது ஒருவராலும் மாற்றப் படாதென்பது கருத்து. இதற்குதாரணம்;—திருக்குறள்-தெரிந்து தெளிதல்-ரு-ம் பாட்டு,

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்."

"தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
யெக்காலுங் குன்ற லிலரவர்—அக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாந்
தேவரே தின்னினும் வேம்பு."

ஆயின், மேன்மக்கள் கீழ்மக்களுக் குதாரணம் இரண்டிடத்துங் காட்டவேண்டுவ தென்னெனின், அங்கே வகுத்துக்கூறி இங்கே தொகுத்துக்கூறியதனுல் இரண்டிடத்துங் காட்டவேண்டிற் றென்க.

அடினு மாவின்பா றன்சுவை குன்றாது என்பதுமுதல் பெருமையுஞ் சிறுமையுந் தாந்தர வருமே யென்னுமளவும் ஒருதொடர். இதனுள், அடினும் என்பதுமுதல் கலக்கினுந்தண்கடல் சேறுகாதே யென்னுமளவும் மேன்மக்களுக்கும், அடினும் பால்பெய்து என்பதுமுதல் . உள்ளிழுழாதே யென்னுமளவும் கீழ்மக்களுக்கும் எடுத்துக்காட்டவேண்மை யெனவும், பின்பு ஒருநாள் பழகினும் பெரி
[illegible]

மேன்மக்கள் நட்புக்கும், நாளுண்டு பழகினு மூர்க்கர் கேண்மை நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே என்பது கீழ்மக்கள் நட்புக்கும் உவமையெனக் கொண்டு, அதனால், எனக் காரணங்காட்டி, பெருமையுஞ் சிறுமையுந் தாந்தர வருமே எனத் தொகுத்து முடித்துக்கொள்க. (கஎ)

18. (1) சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம்
பெரியோராயிற் பொறுப்பதுகடனே;
(2) சிறியோர்பெரும்பிழை செய்தனராயிற்
பெரியோரப்பிழை பொறுத்தலுமரிதே.;
(அதனால்)
(3) கற்கைநன்றே கற்கைநன்றே;
ஐயம்புகினும் கற்கைநன்றே.

(பதவுரை முதலியன.)

(1) சிறியோர் செய்த - கீழ்மக்கள் செய்த, சிற பிழையெல்லாம் - சிறு குற்றங்களையெல்லாம், பெரியோராயின் - பெரியோராயிருக்கவேண்டின், பொறுப்பது கடனே - பொறுத்திருப்பதே நீதியாம்;—

ஆயின்என்பதை ஆயிருக்கவேண்டின் என விரித்துக்கொள்க.

இதற்குதாரணம்:—திருக்குறள்-பொறையுடைமை-சு-ம் பாட்டு,

"நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்."

(2) சிறியோர் பெரும்பிழை செய்தனராயின்-சிற்றறிவுடையோர்பெரிதாகிய குற்றத்தைச் செய்தாரானால், பெரியோர்-பெரியவர், அப்பிழை-அந்தக் குற்றத்தை, பொறுத்தலும் அரிதே - பொறுத்திருப்பதும் அரிதேயாம்;—

அவ்வாறு பொறுப்பவராயினும் இதற்குக் கோபங்கொள்வர், கொண்டால் காப்பது அரிதென்பது கருத்து. இதற்குதாரணம்:—

திருக்குறள்-[illegible] பாட்டு

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது."

(அதனால்)

இப்பெருமை சிறுமைகளை யெல்லாம்ஒருவன் அறிந்தொழுகுதற்பொருட்டு, கற்கை நன்றே கற்கை நன்றே - எல்லா நூல்களையும் இளமையிற் றொடங்கிக் கற்பதே நன்மை, கற்பதேநன்மை;

(4) ஐயம் புகினும் கற்கை நன்றே-பிச்சை யேற்கவந்த காலத்தும் கற்பதே நன்மை. எ-று.

இதனுள், சிறியோர்செய்த சிறுபிழை யெல்லாம் என்பது முதல் ஐயம்புகினுங் கற்கைநன்றே என்னுமளவும் ஒருதொடர். கடன் - அரிது, அதனால், கற்கைநன்றே யென முடித்து, அப்பெருமை சிறுமைகளை யறிந்தொழுகுதற்பொருட்டு, எவ்வளவு கற்பினும் அவ்வளவுக்கவ்வளவு அறிவு சுரக்குமாதலால் அதுபற்றி, அடுக்கியும் தேற்றேகாரம் கொடுத்து வலியுறுத்தியும் அமையாது, மீட்டும் அதுபோலத் துன்பநோ யொழித்தற்கேற்ற மருந்து பிறிதில்லை யாதலால், ஐயம்புகினுங்கற்கைநன்றே யெனக்கூறினாரெனப்பொருள் கொள்க. இதற்குதாரணம்;—திருக்குறள்-கல்வி-௯-ம் பாட்டு,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

எனக் கற்றவளவாக அறிவு சுரத்தற்கும்,

"இம்மை பயக்குமா லீயக் குறையின்றால்
தம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்ம ரறுக்கு மருந்து."

எனத் துன்பநோ யொழித்தற்கு அதைவிட மருந்தில்லை யென்பதற்கு உதாரணங் காண்க. ([illegible])

19\. (1) கல்லாவொருவன் குலநலம்பேசின்
நெல்லினுட்பிறந்த பதராகும்மே;

(2) நாற்பாற்குலத்தின் மேற்பாலொருவன்
கற்றிலனாயிற் கீழிருப்பவனே;

(3) எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடிக்கற்றோரை மேல்வருகென்பர்;

(4) அறிவுடையொருவனை யரசனும்விரும்பும்.

(5) (அதனால்)

(6) அச்சமுள்ளடங்கி யறிவகத்தில்லாக்
கொச்சைமக்களைப் பெறுதலினக்குடி
எச்சமற்றேமாந் திருக்கைநன்றே.

(பதவுரை முதலியன.)

(1) கல்லா ஒருவன் குலநலம் பேசின்-கல்லாத வொருவனையும் அவன் குலத்திற் கற்றவருடைய மேன்மையையும் எடுத்துப் பேசுமிடத்தால், நெல்லினுள் பிறந்த பதர் ஆகும்மே-நெற்பயிருட் பிறந்த பதரும் நெல்லுமாய் முடியும்;—

இவனைப் பதரெனவே அக்குலத்திற் பிறந்து கற்றவர் நெல்லென்பது தானே யமைதலால் மிகைபடக் கூறாதொழிந்தார். குலம் - ஆகுபெயர். பதர் வடிவிலே நெல்லைப்போலிருந்து பயன் படாததுபோலப் பயன்படார் கல்லாதவரென்பது கருத்து. இதற்கு உதாரணம்:—திருக்குறள்-கல்லாமை-௬-ம் பாட்டு,

"உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்."

(2) நாற்பாற்குலத்தின் மேற்பாலொருவன்-அந்தணன் அரசன் வணிகன் சூத்திரன் என்னும் நான்கு வருணத்தின் முன்னின்ற வருணத்திற் பிறந்த வொருவன், கற்றிலன் ஆயின் - கல்லாதவனு

ளுல், கீழ் இருப்பவனே - (அவன்) தாழ்ந்த இடத்தில் இருக்கத்தக்கவனே;—

(3) எக்குடி பிறப்பினும்-கடைநின்ற எந்தக் குலத்திலே பிறந்திருந்தாலும், யாவரே ஆயினும்-(அழைப்பவர் தேவர் முனிவர் அரசர் என்பவருள்) யாராயிருந்தாலும், அக்குடி கற்றோரை - அக்குலத்திற் கற்றவராயினரை, மேல் வருக என்பர்-மேலிடத்து வந்திருக்கவென்றுபசரித்தழைப்பர்,—

யாவரேயாயினும் என்றது அழைப்பவரைக் குறித்துநின்றது. யாவரேயாயினும் என்றதனுல் பெருமைபொருந்திய தேவர் முதலியோருள் என்பது பெறப்பட்டது. வருகவென்பர் என்பது வருகென்பர் என விகாரமாயிற்று. கருத்து விளங்கிக் கிடந்தது. இதற்கு உதாரணம்:—திருக்குறள்-கல்லாமை-கூ-ம் பாட்டு,

"மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றா ரனைத்திலர் பாடு."

திருக்குறள்-கல்வி-ரு-ம் பாட்டு,

"உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்."

(4) அறிவுடையொருவனை அரசனும விரும்பும்-இன்னும் கல்வியறிவுடையோனை அரசனுங்கூட விரும்புவான்;—

அரசனும் எனச் சிறப்பும்மை இறந்தது தழுவியும் நின்றது. பெற்றவர் கற்றவர் யாவரும் மற்றக்குடிகளும் விரும்புவதன்றி யெனப் பொருள்தருதலால் எனக்காண்க. இதற்குதாரணம்:—திருக்குறள்-புதல்வரைப்பெறுதல்-அ-ம் பாட்டு,

"தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது."

(5) அதனுல் - கற்றதனுல் இவ்வாறு மேன்மையும் கல்லாமையால் இவ்வாறு கீழ்மையும் பெறுவதலால்,

(6) அச்சம் உள் அடங்கி - பயமொன்றே யதனுள் நிறைந்து, அறிவு அகத்து இல்லா - மனத்தின்கண் அறிவொதுங்கிய, கொச்சை மக்களை - ஆடுகளை நிகர்த்த பிள்ளைகளை, பெறுதலின் - பெற்று வருந்துதலினும், அக்குடி - (அந்தப் பிள்ளைகளைப்பெற்ற) அக்குலத்துள்ளார், எச்சம் அற்று - சந்ததியற்று (வந்திகளாய்), ஏமாந்திருக்கை நன்றே-இன்புற்றிருத்தலே நன்மையாம், எ-று.

அப்பிள்ளைகளைப் பெற்றுத் தாமும் அவரும் துன்புறுதலொழிதலால், 'எச்சமற்றேமாந்திருக்கை நன்று' என்றார். கொச்சை - வெள்ளாடு. கல்லாவொருவன் குலநலம்பேசின் என்பதுமுதல் எச்சமற்றேமாந்திருக்கைநன்றே என்னுமளவும ஒருதொடர் எனக்கொண்டு, கற்றதனுல் இவ்வாறு பெருமையும் கல்லாமையால் சிறுமையும் வரும், அதனுல், கல்வியறிவில்லாப் பிள்ளைகளைப் பெற்று வருந்துதலினும், பெறாது இன்புற்றிருத்தலே நன்று எனப்பொருள்காண்க. (கூ)

20. (1) யானைக்கில்லை தானமுந் தருமமும்

(2) பூனைக்கில்லை தவமுந் தயையும்

(3) ஞானிக்கில்லை யின்பமுந் துன்பமும்.

(பதவுரை முதலியன.)

(1) தானமும் தருமமும் - (கை கொடைக்கு நீண்டதுபோல விருப்பினும்) கொடையும் மற்றைத் தருமங்களைச் செய்தலும், யானைக்கு இல்லை-யானைக்கியல்பாகவே யில்லை அதுபோலவும்,

(2) தவமும் தயையும்-(தவஞ்செய்வதுபோலக்கண்ணை மூடிக்கொண்டும் அருளுடையதுபோல மிகவும் சாந்தகுணத்தோடு கூடியுமிருந்தாலும்) அவ்விரண்டும், பூனைக்கு இல்லை - பூனைக்கு இயல்பாகவேயில்லை, அதுபோலவும்,

(3) இன்பமும் துன்பமும் - (உலகத்தாரோடு கூடி இன்புற்றிருப்பவன்போலவும் துன்புற்றிருப்பவன்போலவும் தோன்றினும்) அவ்விரண்டும், ஞானிக்கு இல்லை-ஞானிக்கு இயல்பாகவே யில்லை,

இதன் கருத்து விளங்கிக் கிடந்தது. இதற்குதாரணம்:—

திருக்குறள் - கடவுள்வாழ்த்து - ரு - ம் பாட்டு,

"இருள்சே ரிருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

இருவினையின் பயன் இன்பதுன்பங்களாதலாற் காண்க. (உ0)

21. (1) சிதலைக்கில்லை செல்வமுஞ்செருக்கும்;
(2) முதலைக்கில்லை நீத்துநிலையும்;
(3) அச்சமுநாணமு மறிவிலோர்க்கில்லை;
(4) நாளுங்கிழமையு நலிந்தோர்க்கில்லை;
(5) கேளுங்கிளையுங் கெட்டோர்க்கில்லை.

(பதவுரை முதலியன.)

(1) செல்வமும் - இது செல்வமென்பதும் (இது பிறர்க்குப் பயன்படு செல்வமுடையவ ராடையென்றெண்ணுமெண்ணமும்), செருக்கும்-இது செருக்கென்பதும், (இது பிறர்க்குதவாது தாமே யுண்டுடுத்துக் களித்திருப்பவராடை யென்றெண்ணு மெண்ணமும்), சிதலைக்கு இல்லை-செல்லுக்கு இயல்பாகவேயில்லை, (சேர்ந்தால் இரண்டையுந் தின்றுவிடுவதேயன்றித் தின்னா திருப்பதில்லை; அதுபோலவும்;—

(2) நீத்தும்-இது நீந்தத்தகுந்த நீர், (இதிலே செல்லலாகா தென்றெண்ணு மெண்ணமும்), நிலையும் - இது நிலைகொள்ளத்தக்க தென்பதும், (இது நிலைகொள்ளத்தகுந்தநீர், இதிலே செல்லலாமென் றெண்ணுமெண்ணமும்), முதலைக்கு இல்லை - முதலைக்கு இயல்பாக வே யில்லை. (சேர்ந்தால் இரண்டிலுஞ் செல்வதேயன்றிச் செல்லா திருப்பதில்லை), அதுபோலவும்;

(3) அச்சமும் நாணும்-இது அஞ்சத்தக்கது,இது நாணத்தக்கது என்பதும், தக்கதிதுவென்றெதங்குதலும்,தகாததிதுவென்றதனைச் செய்ய வுடன்படாதலும், அறிவு இல்லோர்க்கு-பேதையர்க்கும்;—

(4) நாளும் கிழமையும்-இந்தநாள் இந்தக்கிழமை தக்கதென்று ஒன்றைச்செய்ய வுடன்படுதலும், தகாதென்று விலக்கலும், நலிந்தோர்க்கு - வறுமையால் நொந்தவர்க்கும்;—

(5) கேளுங்கிளையும்-இவர் சிநேகிக்கத்தக்கவரென்பதும்,இவர் விரும்பத்தக்க சுற்றத்தாரென்பதும் (தக்கவரென்று தழுவலும், தகாதவரென்று விலகலும்), கெட்டோர்க்கு - தமது குலநிலையிலே தவறிக் கெட்டுப்போனவர்க்கும், இல்லை - (நேர்தால் இரண்டு மொன்றுவதேயன்றி) இயல்பாகவேயில்லை, எ-று.

வறுமையிலென்பது சொல்லெச்சம். நலிந்தோர் என்பது செயப்பாட்டு வினையாலணைந்தபெயர். செல்வம் செருக்கு என்பன ஆகுபெயர்கள். தின்பதன்றி யெண்ணுவதென்பது குறிப்பெச்சம். ஏனையவற்றையும் ஏற்குமா றய்த்துணர்ந்துகொள்க. இவற்றிற்குதாரணம்:—

திருக்குறள் - அறிவுடைமை - அ - ம் பாட்டு,

"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்."

திருக்குறள் - நாணுடைமை - ௧0 - ம் பாட்டு,

"நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று."

திருக்குறள் - நல்குரவு - ௯ - ம் பாட்டு,

"தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை."

இக்குறளினுள் தொல்வரவென்பது நாளுங் கிழமையும் பார்த்தன் முதலியவாதலால் உதாரணங்காண்க.

"சீரிது தன்னிது செய்யேன்பார் செய்யினும்
யாரு மறிவர் புகைநுடபம—மதின்
திரப்பிடும் பையா னன்புகுமே புகையும்
பகற்கரிய புழை நுழைந்து."

இதில், புகையும் நுழைதற்கரிய துவாரத்திலே நுழைந்துபோவான் என்றதனால் செல்வரைத் தடுத்த நாட்கிழமைகளிலும் நுழைந்துபோவான் என வுதாரணங் காண்க.

திருக்குறள் - மானம் - ௯ - ம் பாட்டு,

"தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை." என்றும்,

திருக்குறள் - நெஞ்சொடு புலத்தல் ௯ - ம் பாட்டு,

"கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்." என்றும்,

முறையே காண்க. சிதலைக் கென்பதுமுதல் கேளுங்கிளையும் என்பதனளவு மொருதொடரெனக்கொண்டு அதனுள், சிதலைக் கில்லை யென்பன விரண்டும் எடுத்துக்காட்டுவமை யெனவும், அச்சமுநாணு மறிவிலோர்க்கில்லை, நாளுங்கிழமையு நலிந்தோர்க்கில்லை, கேளுங்கிளையுங் கெட்டோர்க்கில்லைஎன்பன மூன்றும் பொருளெனவுங் கொண்டு, அவற்றிற்கியையும்படிபொருள் விரித்துரைத்து முடித்துக்கொள்க. செய்யுளின்ப நோக்கித் தனித்தனி முடிபாக்கிக் கூறினோரேனும், சிதலைக்குச் செல்வமுஞ் செருக்கும் முதலைக்கு நீத்து நிலையுமில்லை, அதுபோல, அறிவிலோர்க் கச்சமு நாணும் நலிந்தோர்க்கு நாளுங்கிழமையும் கெட்டோர்க்குக் கேளுங் கிளையும் இல்லையென ஒருவினை முடிபாக்குக. (௨௧)

22. (1) உடைமையும்வறுமையு மொருவழிநில்லா;

(2) குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந் தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினுநண்ணுவர்;

(3) சிறப்புஞ்செல்வமும் பெருமையுமுடையோர்
அறக்கூழ்ச்சாலை யடையினுமடைவர்;

(4) அறத்திடுபிச்சை கூவிரப்போர்
அரசோடிருந்தர சாளினுமாளுவர்;

(5) குன்றத்தனையிரு நிதியைப்படைத்தோர்
அன்றைப்பகலே யழியினுமழிவர்;

(6) எழுநிலைமாடங் கால்சாய்ந்துக்குக்
கழுதை மேய்பா ழாகினு மாகும்;

(7) மணவணியணிந்த மகளிராங்கே
பிணவணியணிந்துதங் கொழுநரைத்தழீஇ
உடுத்தவாடை கோடியாக
முடித்தகூந்தல் விரிப்பினும்விரிப்பர்;

(8) பெற்றமுங்கழுதையு மேய்ந்தவப்பாழ்
பொற்றொடிமகளிரு மைந்தருஞ்செறிந்து
நெற்பொலி நெடுநகராயினுமாகும்;

(9) இல்லோரிரப்பது மியல்பேயியல்பே;

(10) இரந்தோர்க்கீவது முடையோர்கடனே.

(பதவுரை முதலியன.)

(1)- உண்டைமையும் வறுமையும் ஒருவழி நில்லாது - செல்வமும் தரித்திரமும ஆகிய இரண்டும் அதுநின்றவிடத்ததுவேயாகவும் இதுநின்றவிடத் திதுவேயாகவும் நில்லாது மாறியும் நிற்கும்;—

மாறியுநிற்கு மென்பது குறிப்பெச்சம். இதையேதுவாக்கி இனி வருவனவற்றோடு ஒட்டுக. இதற்குதாரணம்:—

திருக்குறள் - நிலையாமை - உ - ம் பாட்டு,

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று."

"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்."

(2) வெண்கொற்றக் குடைநிழலிலேம்படி யானையின் கழுத்திலி ருந்து அகைச்செலுத்திப் பவனிவந்த அரசரும் எல்லாவற்றையு மிழ ந்துநடப்பதற்குச் சத்தியில்லாமல், உடம்பு மெலிந்து மற்றொரு தே சத்திலே சீவநத்தின்பொருட்டுச் சென்று சேரினுஞ் சேருவர்;—

சிறப்பும்மை விகாரத்தாற் ருெக்கது. உதாரணம் மேற்காட் டிய குறளும்,

"யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
· வினையுப்ப வேருகி வீழ்வர் தாங்கொண்ட
மனையாளை மாற்றார் கொள." என்பதுங் காண்க.

விசேடித்த வுயர்வும் செருக்கிய செல்வமும் மானமும் உடைய வர் அவையாவு மிழந்து நித்திய தரித்திராகி வயிற்றுப்பசியினுல், கூழின்பொருட்டு அவற்றை யிழந்தவ்வூரிலே யிருக்கிற அன்னசத்தி ரங்களைப் போயச் சேரினுஞ் சேர்வர்; இதற்குதாரணம்:—

திருக்குறள் - நல்குரவு - ரு - ம் பாட்டு,

"நல்குர வென்னு மிடும்பையுட் பல்குறைத்
துன்பங்கள் சென்று படும்."

"அறுசுவை யுண்டி யமர்ந்தில் லாளூட்ட
மறுசிகை நீக்கி யுண்டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்திற் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று."

(4) தருமத்தைக்குறித் திடப்பமேம் பிச்சை யுண்டோவென்று வீதிகளிலே நின்று கூப்பிட்டிரந்துதிரிபவர் அரசியலோடு கூடியிரு ந்த உலகத்தை யாளினும் ஆளுவர்;—

அரசியலோடு கூடியிருத்தல்-படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு அரண் என்னு மாறங்கத்தோடுங் கூடியிருத்தல்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - ஊழ் - ௮ - ம் பாட்டு,

"நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவும்
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு."
"வளம்படவேண்டாதார்—இல் - எ-ம்" காண்க.

(5) மலையளவாக வுயர்ந்த சங்கநிதி பதுமநிதிகளைப் படைத்தவர், படைத்த வன்றைத்தினத்திலேதானே அவற்றை அநுபவியாமல் இறப்பினு மிறப்பர்;—

இதற்குதாரணம்:—திருக்குறள் - நிலையாமை - ௩ - ம் பாட்டு,
"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு."

நாலடியார் - யாக்கைநிலையாமை-௩-ம் பாட்டு,
"மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட்டா ரல்லால்
எஞ்சினா ரிவ்வுலகத் தில்."

(6) செல்வர்களுடைய எழுநிலைகளையுடைய மாடங்களானவை அடியோடே சாய்ந்து கொறுங்கிப்போகக் கழுதைகளும் மேயத்தகுந்த பாழ்நிலங்க ளாயினுமாகும்;—

உக் என்பது உக்கு எனத் திரிந்துநின்றது. இறந்தது தழீஇய எச்சவும்மை குறைந்துநின்றது. அதனால் ஆடுமாடுகள் மேய்வது மன்றி யெனப் பொருள்படுதல் காண்க. இதற்குதாரணம்:—

மேற்காட்டிய குறளினும்,

நாலடியார் - இன்மை - ௩-ம் பாட்டு,
"கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி
யடகு பறித்துக்கொண் டட்டுக் - குடைகலனா
வுப்பிலி வெந்ததின் றுள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால்."

என்ற இதனுள்ளும் எழுநிலைமாடங் கால்சாய்ந்துக்குக் கழுதைமேய் பாழாக இவ ரிவ்வாறுயினு ரெனக்காண்க. அதற்குக் கடகஞ் செறிந்த கையே சான்றாகலால்.

(7) மணக்கோலத்தோடு மணவேதிகையில் வீற்றிருந்த மாதர்கள் அந்த மணப்பந்தலிலேதானே (கணவரிறந்ததனால்) பிணக்கோலம் பூண்டு, மாலையிட்ட தங்கணவரைக் கட்டியணைத்துக்கொண்டு, முன்னுடுத்த மணக்கூறையே அறுப்புக்கூறையாகவும், முன்பு மகிழ்ந்து முடித்த கூந்தலை விரித்துப் புலம்பினும் புலம்புவர்;—

விரித்தல் புலம்புதற்காதலால் வருவித் துரைக்கப்பட்டது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - நிலையாமை - எ - ம் பாட்டு,

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல."

இக்குறளினுள், அன்றைத்தினம் வருவ துணராது கலியாணஞ் செய்ய நினைந்து செய்தலால் உதாரணங் காண்க.

"மன்றங் கறங்கு மணப்பறை யாயின
வன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் - பின்றை
ஒலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்."

எனவும் காண்க.

(8) மாடுகளும் கழுதைகளும் மேய்ந்த மேற்கூறிய பாழ்நிலம் போன்றதும், பொன்வளையை யணிந்த மங்கையரும் புருடருமாக நெருங்கி, நெற்பொலிகளையுடைய பெரும்பதி யாயினுமாகும்;—

பொலி - அம்பாரம். செறிய என்பது செறிந்த எனத் திரிந்து நின்றது. காடு நாடாயினுமாம் என்பது கருத்து. உதாரணம் வந்த வழிக் காண்க.

அதனால் - அக்காரணத்தால்,

(9) தரித்திரர் யாசகஞ் செய்வதும் அவர்க்கு இயற்கையேயாம்;—
வலியுறுத்தற்பொருட்டு அடுக்கித் தேற்றேகாரமும் கொடுத்து

"இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை."

என்றாற்போல இங்கே செயற்கை இயற்கை யெனப்பட்டது. இயல்பு - இயற்கை.

இதற்குதாரணம்:—திருக்குறள் - இரவு - ௬ - ௯ - ம் பாட்டுகள்,

"இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பின்
அவர்பழி தம்பழி யன்று."

"ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோள்
மேவா ரிலாஅக் கடை."

(10) அவ்வாறு யாசித்தார்க்கு இல்லையென்னாது கொடுப்பதும் செல்வர்க்குக் கடன்மையேயாம்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - ஒப்புரவறிதல் - ௭ - ம் பாட்டு,

"மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்."

உடைமையும் வறுமையு மொருவழி நில்லா வென்பதுமுதல் இரந்தோர்க்கீவது முடையோர் கடனே என்னுமளவு மொருதொடர். இதனுள் உடைமையும் வறுமையுமொருவழி நில்லாவாதலால் குடை - நண்ணினுநண்ணுவர், அடைகினுமடைகுவர், ஆளினுமாளுவர், அழியினுமழிகுவர், ஆகினுமாகும், விரிப்பினும்விரிப்பர், ஆயினுமாகும், அதனால், இரப்பதியல்பு, ஈவதுகடன் என முடித்துப் பொருள்காண்க. உம்மைகளேழும் ஐயத்தின்கண் வந்தன. பிற இலக்கணங்களு முய்த்துணர்ந்துகொள்க. (௨௨)

23. நல்லஞாலமும் வானமும்பெறினும்
எல்லாமில்லை யில்லில்லோர்க்கே.

(பொழிப்புரை.) நல்ல பூமியின் செல்வமுழுதும் வானுலகின் செல்வமுழுதும் பெற்றாராயினும், நற்குண நற்செய்கைகளையுடைய

(வி-ரை.) பயன் படாமையின் 'இல்லை' என்றார். நற்குண நற் செய்கைகளை யுடையவளே இல்லாளாதலால் இல் என அடைகொடாதே கூறினார். "இல்லாளகத்திருக்க வில்லாததொன்றில்லை" என இவ்வாறே அடைகொடாமல் ஔவையார் கூறுதலுங் காண்க. இதன்கருத்து விளங்கிக் கிடந்தது.

இதற்குதாரணம்:—திருக்குறள்-வாழ்க்கைத்துணைநலம்-உ-ம் பாட்டு,

"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்." (உரு)

24. தறுகண்யானை தான்பெரிதாயினுஉம்
சிறுகண்மூங்கிற் கோற்கஞ்சும்மே.

(ப-ரை.) தறுகண்-கொலைசெய்தற்கஞ்சாத வீரத்தன்மை பெரிதாயினும், தான் பெரிது ஆயினும் - அதுவும் உருவத்தாற் பெரிதாயிருப்பினும், சிறுகண் மூங்கில் கோற்கு-(ஒருவன்பாதுகாவலுக் குட்பட்டபோது அவன் கையிலிருந்த) கணுக்களையுடைய சிறிய மூங்கிற்கோலுக்கும், யானை அஞ்சும்மே - யானை அஞ்சுவது நிச்சயம், எ-று.

(வி-ரை.) சிறுகண் என்னும் இரண்டு விசேடணமும் கோல் என்னும் முதற்பொருட்கு வந்தது. ஏகாரம் தேற்றம். தறுகண் பெரிதாயினும் தான் பெரிதாயினும் சிறுகண் மூங்கிற் கோற்கு யானையஞ்சும் மே யெனக் கூட்டுக. கோற்கஞ்சும் என்றதனால், ஒருவன் பாதுகாவலுக் குட்பட்டபோது அவன் கையிலிருந்த என்பது பெற்றும். ஒருவன் சுத்தவீரனாயிருந்தாலும் அரசனுடைய பாதுகாவலுக் குட்பட்டபோது அவனுக்கு அஞ்சி நடப்பது மல்லாமல், அவனடையாளம் பெற்று வந்தவர்க்கும் அஞ்சி நடக்கவேண்டு மெனப் பிறிது பொருள் தருதலால் இது ஒட்டலங்காரமெனக் காண்க. நடவாக்கால் அவன் பாதுகாப்பை யிழந்து துன்புறுதல் நிச்சயமாதலால் கருத்து விளங்கிற்று. இதற்குதாரணம்:—

"இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்."

இதனுள், இளைய ரினமுறைய ரென்று தொழுகப்படுத லெனக்கொண்டு அரசனுக்கஞ்சி நடத்தற்கும், நின்ற வொளியோடொழுகப்படுத லெனக்கொண்டு அவனுடையாளத்திறகஞ்சிநடத்தற்கும் உதாரணங் காண்க. (உ௪)

25. (1) குன்றுடைநெடுங்கா டூடேவாழினும்
புன்றலைப்புல்வாய் புலிக்கஞ்சுமமே;
(2) ஆரையாம்பள்ளத் தூடேவாழினும்
தேரைபாம்பிற்கு மிகவஞ்சும்மே;
(3) கொடுங்கோன்மன்னர் வாழுநாட்டில்
கடும்புலிவாழுங் காடுநன்றே.

(பதவுரை முதலியன.)

(1) குன்று உடை - மலைகளைத் தன்னிடத்தேயுடைய, நெடு காடு ஊடே - நெடிய காட்டின்கண், வாழினும் - அதுவும் இதுவும் ஒத்து வாழ்ந்தபோதினும், புல் தலை - சிறிய தலையையுடைய, புல் வாய் - புல்வாயானது, (வாய்வலியையும் வன்றலையையுமுடைய), புலிக்கு அஞ்சும்மே - புலிக்கஞ்சியே வாழாநிற்கும்;—

புல்வாய் - அன்மொழித் தொகை; புன்மையாகிய வாயினையுடையது. புன்றலைப் புல்வாய் என்றதனால், புலி வன்றலையையும் வல்வாயையு முடையதென்பது பெற்றாம்.

(2) ஆரை ஆம்பள்ளத்தூடே வாழினும் - ஆரையோடு கூடிய நீரோடையில் அதுவு மிதுவு மொத்து வாழ்ந்தபோதினும், தேரை- தவளையானது, பாம்பிற்கு - நீர்ப்பாம்புக்கு, மிக அஞ்சும்மே - மிகவும் அஞ்சியே வாழாநிற்கும்;—

ஆரை - நீரிற்படர்வதோர் பூண்டு. ஆம் - நீர். இவை யஞ்சி வாழ்வதற்கேது வென்னெனின், சிறிய தலையுள்ளவாயிற் கொன்று தின்னுமென்பது கருதியாதலால்.

(3) கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்-கொடுங்கோ லரசரோ டொத்துவாழ்கின்ற நாட்டினும், கடும் புலி வாழும் காடு நன்றே - (ஒருவனுக்குக்) கடுமையையுடைய புலி வாழ்கின்ற காடு குடியிருத்தற்கு மிகவும் நன்றாம், எ-று.

அதனோடுகூடி வாழாமல் அதற்கஞ்சியே அது சஞ்சரியாத இடத்திற் குடியிருக்கலா மாதலால் 'நன்று' என்றார். கொடுங்கோல் - வளைந்தகோல். இது அரசநீதி கோணுதற்கு உவமையாகுபெயராய் நின்றது. கொலைசெய்யும் புலியினும் கொடுங்கோல் மன்னர் கொடியர் என்பதாம்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - கொடுங்கோன்மை - க-ம் பாட்டு,

"கொலைமேற் கொண்டாரிற் கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து."

எனக் கூறுதலுங்காண்க. இதனுள், புல்வாயும் புலியும்,தேரையும் பாம்பும் ஒத்து வாழ்தல்போல, ஒருவன் கொடுங்கோன் மன்னரோடொத்துவாழ்தலெனவும், வாழினும்,புல்வாயும் தேரையும் புலிக்கும் பாம்பிற்கும் அஞ்சியே வாழ்தல் போல,அவன் கொடுங்கோன் மன்னர்க் கஞ்சியே வாழவேண்டும், ஆதலால், அதைவிட அவனுக்குக் கடும்புலிவாழுங் காடே நன்று என முடித்துப் பொருளுணர்ந்துகொள்க. (உரு)

26. சான்றோரில்லாத் தொல்பதியிருத்தலிற்
தேன்றேர்குரவர் தேயநன்றே.

(ப-ரை.) சான்றோர் இல்லா - (கல்வியறி வொழுக்கங்கள்) நிறைந்த பெரியோரில்லாத, தொல் பதி இருத்தலின் - பழமையான நகரத்தில் ஒருவன் குடியிருப்பதினும், தேன் தேர் குரவர் தேயம் நன்றே - உணவின்பொருட்டாகத் தேனையாராய்ந்துதிரிகின்ற குறவர் குடியிருக்கும் நாடே அவன் குடியிருத்தற்கு நன்று, எ-று.

(வி-ரை.) ஏகாரம் - தேற்றப்பொருளது. அக்குறவர் நாட்டிலும் இதுபாவமிகுதியாற் கேடு பூண்டிருப்ப தாதலால், சான்றோரில்லாத நாடு நாடன்றென்பதும், அச்சான்றோர் சார்பு பெற்றவன் பகைவராலும் தீங்குசெய்யப்படான் என்பதும் கருதி இவ்வாறு கூறினரெனக்காண்க.

இதற்குதாரணம்:—திருக்குறள் - நாடு - க - ம் பாட்டு,

"தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு." எனவும்,

திருக்குறள் - பெரியாரைத்துணைக்கோடல் - ௬ - ம் பாட்டு,

"தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்." எனவும்

முறையே காண்க. (௨௬)

27. வித்துமேரு முளவாயிருப்ப
எய்த்தங்கிருக்கு மேழையும்பதரே.

(ப-ரை.) வித்தும் - விதைத்தற்கு வித்தும், ஏரும் - உழுதற்கு ஏர்முதலியவும், உளவாயிருப்ப - அமைந்திருக்க, எய்த்து அங்கு இருக்கும் - (உழுது பயிர்செய்து வாழமாட்டாமல் சோம்பலாலே) வறுமையுற் றிளைத்திருக்கும், ஏழையும் - பேதையும், பதரே - ஒரு மக்கட்பதரே யாவன், எ-று.

(வி-ரை.) தன் சரீரத்தை யொளிக்காமலே வருத்தப்பட்டு அந்தக் கைத்தொழிலைச் செய்வானாயின், தானு மிரவாது பிறர்க்கீந்தும் வாழ்தலாயிருக்க, அதனைச் செய்யாமலே சோம்பி வருந்துவோனைக் கண்டால் பூமிதேவியும் நகைப்பா ளாதலால் 'பதர்' என்றார்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - உழவு - ௫ - ௪௦ - ம் பாட்டென்,

"இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்." எனவும்,

"இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னு நல்லா ணகும்." எனவும்

அவ்விருதிறத்திற்கும் உதாரணங் காண்க. (உ௭)

28. காலையுமாலையு நான்மறையோதா
அந்தணரென்போ ரனைவரும்பதரே.

(ப-ரை.) காலையும் - காலைப்பொழுதினும், மாலையும் - மாலைப் பொழுதினும், நான்மறை ஓதா - நான்கு வேதங்களையும் ஓதாத, அந்தணர் என்போர் அனைவரும் - பார்ப்பாரென்போ ரெல்லாரும், பதரே - பார்ப்பனப் பதரேயாவர், எ-று.

(வி-ரை.) நான்மறை யோதி அதன் பொறையை யுட்கொளா மையிற் 'பதர்' என்றார்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - ஒழுக்கமுடைமை - ௪ - ம் பாட்டு,

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்."

எனத் திருவள்ளுவநாயனாரும் மறக்கலாகா தென்னுங் கருத் தையுட்கொண்டு 'ஓதிக்கொளலாகும்' எனக் கூறினார். கொள்ளா விடின் பிறப்புக் கெடுமென்பதே அவர்க்குங் கருதது. ஆதலால் இவர் 'பதர்' என்றார். (உ௮)

29. குடியலைத்திரந்து கோலொடுநின்ற
முடியுடையிறைவ னூர்க்கனும்பதரே.

(ப-ரை.) குடி அலைத்து - குடிகளை வருத்தி, இரந்து - (தன் பகுதியின் மேற்படப் பொருள் கொடுக்கும்படி அவர்களை யடித்துப் பறிப்பவன்போல) யாசகஞ் செய்து, கோலொடு நின்ற - கொடுங் கோலோடு கூடிநின்ற, முடி உடை - முடியையுடைய, இறைவன் ஆம் மூர்க்கனும் - வேந்தனாகிய மூர்க்கனும், பதரே - அரசப்பதரே யாவன், எ-று.

(வி-ரை.) விரைந்துகெடுத லுணராது நெடுங்காலம் வாழலா மென்றெண்ணி அவ்வாறு செய்தலால் 'பதர்' என்றார்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-கொடுங்கோன்மை - உ - ம பாட்டு,

"வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு." எனவும்

திருக்குறள் - வெருவந்தசெய்யாமை - ௯ - ம் பாட்டு,

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்த மொல்லைக் கெடும்." எனவும்

முறையே குடியலைத் திரத்தற்கும் அவன் விரைந்து கெடுமொ னென்பதற்கு முதாரணங் காண்க. (உ௯)

30. முதலுளவாகக் கொண்டுவாணிபஞ்செய்
ததன்பயனுகரா வணிகராய்பதரே.

(ப-ரை.) முதல் உளவாக - முதலாகப் பொருளிருக்கவும், கொண்டு - (அதனாலே கொள்ளும் பண்டங்களைக்) கொண்டு விற்று, வாணிபஞ்செய்து - வர்த்தகஞ் செய்து, அதன் பயன் - அதனால் வருகிற ஆதாயப்பயனை, நுகரா - அநுபவியாத, வணிகர் - தனவைசியர், ஆய் பதர் - (வைசியர்க்குள்ளே) தெரிந்தெடுக்கப்படும் பதர்களாவர், எ-று.

திருக்குறள் - பெரியாரைத்துணைக்கோடல் - ௯ - ம் பாட்டு,

"முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை."

என்றாராகலின், இவர் முதலிருந்தும் ஊதியத்தை யிழத்தலால் 'பதர்' என்றார். (௩௦)

31. தன்மனையாளைத் தாய்மனைக்கனுப்பிப்
பின்பவட்பேணாப் பேதையும்பதரே.

(ப-ரை.) தன் மனையாளை - தன் மனையாட்டியை, தாய் மனைக்கு அனுப்பி - அவளுடைய தாய்வீட்டுக் கனுப்பிவிட்டு, பின்ப

பிறகு, அவன் பேறு - அவனைப் பாதுகாவாமலேயிருக்கிற, பேதையும் - அறிவிலானும், பதரே-குடிசெய்வோருட் பதராவன், எ-று.

(வி-ரை.) இல்லாளிடத் தன்புடையனாகக் கூடி அறஞ்செய்து இல்வாழ்வானுயின் அவ்வன்புடைமை வடிவாகவும் அறம் பயனாகவும் இல்வாழ்க்கை முற்றுப்பெற்று, அது அவனைத் தேவருள் ஒருவனாக்கற்பாலதாயிருக்க, முதலே யில்லாளை நீக்கி, இல்வாழ்க்கையுருவைக் குலைத்தலால் 'பதர்' என்றார்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-இல்வாழ்க்கை-ரு-௪0-ம் பாட்டுகள்,

"அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது." எனவும்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்." எனவும்

அன்பு அறன் இல்வாழ்க்கைக்குப் பண்பு பயனாதற்கும், அதன் பயன் அவனைத் தேவருள ஒருவனாக்கற்கும் உதாரணம் முறையே காண்க. இன்னும்,

"மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமை."

என அவளிடத்து நற்குண நற்செய்கைகளும் நன்மக்கட்பேறும் இல்லாவிடினும், கொண்டவன் புறக்கழித்து வாழலாகாதெனப் பிறர் கூறுதலுங் காண்க. (௩௧)

32. தன்மனையாட்டியைத் தனியேயிருத்திப்
பிறன்மனைக்கேகும் பேதையும்பதரே.

(ப-ரை.) தன் மனையாட்டியை - தன் மனைவியை, தனியே இருத்தி - தனியே வைத்து, பிறன் மனைக்கு ஏகும் - அந்நியன் மனைவியை விரும்பி அவன் மனைக்குச் செல்கின்ற, பேதையும் - அடையும் பதரே - பேதையாகட் பதராவர், எ-று.

(வி-ரை.) பகை பாவம் அச்சம் பழி என்பவற்றுளகப்பட்டுத் தான் கெடுவதுமன்றித் தன் மனைவியும் தன்புறந்தழீதற்கேதுவாதலால் 'பதர்' என்றார். பகை முதலியவற்றாற் கெடுதற்குதாரணம்:— திருக்குறள் - பிறனில் விழையாமை - ௬ - ௨ - ம் பாட்டுகள்,

"பகைபாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்."

"அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்."

எனப் பேதையருட் பதரென்பதற்கு முதாரணங் காண்க. (௩௨)

33. தன்னாயுதமுந் தன்கையிற்பொருளும்
பிறன்கையிற்கொடுக்கும் பேதையும்பதரே.

(ப-ரை.) தன் ஆயுதமும் - தன்னுடைய ஆயுதத்தையும், தன் கையில் பொருளும் - தன் கையிலுள்ள திரவியத்தையும், பிறன் கையில் கொடுக்கும் - ஒருசார்பு மில்லாத அந்நியன் கையிலே கொடுத்த, பேதையும் - மூடனும், பதரே - ஏமாறவோருட் பதராவன், எ-று.

(வி-ரை.) யாம் பண்டு விளையாடுஞ் சோலை யென்றாற்போலக் கொடுக்கும் பேதையென இறந்தகாலம் எதிர்காலமாக மயங்கி நின்றது. இனி இதற்குத் தன்னாயுதத்தையாயினுந் தன்கைப்பொருளையாயினும் பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரெனினும் அமையும். பொருளைப் பிறன்கையிற் கொடுத்து அதனால்வரு மூதியத்தை யிழந்து துன்பத்தைக் கொண்டதனால் 'பேதை' என்றும், அதன்மேலும் தன் ஆயுதத்தையுங் கொடுத்து நிராயுதனானதனால் 'பதர்' என்றுங் கூறினார்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - பேதைமை - க - ம் பாட்டு,

"பேதைமை யென்ப தொன்றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல்."

எனத் துன்பத்தைக்கொண்டேயிழக்தற்குகாரணங் காண்க. ()

34. ஏந்திழையாரியலாத தந்திரங்கொடு
வாய்ந்ததென்றதின் முயல்வானுமோர்பதரே.

(ப-ரை.) ஏந்திழையார் - மனைவியரது, இயலாத - பொருந்தாத, தந்திரம் கொடு - உபாயத்தைக் கேட்டு, வாய்ந்தது என்று - இதுவே பொருத்தமான வுபாயமென்று எண்ணி, அதின் - அதனாலே, முயல்வானும் - ஒருகாரியத்தைச் செய்யத் தொடங்குவோனும், ஓர் பதரே - ஒப்பற்ற பதராவன், எ-று.

(வி-ரை.) அறிவோடு நாணு மிழந்து பெண்ணேவல் புரிதற்கமைந்த இவனது ஆண்டன்மையினும் அப்பெண்டன்மை சிறத்தலின், மேற்கூறிய பலவகைப் பதருள்ளுந் தாழ்ந்த பதரென்பார் 'ஓர்பதர்' என்றார். இதற்குகாரணம்:—

திருக்குறள் - பெண்வழிச்சேறல் - எ - ம் பாட்டு,

"பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து." (நஎ)

35. (1) வாய்ப்பறையாகவு நாக்கடிப்பாகவும்
சாற்றுவதொன்றைப் போற்றிக்கேண்மின்;

(2) பொய்யுடையொருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய்போலும்மே;

(3) மெய்யுடையொருவன் சொனமாட்டானேல்
பொய்போலும்மே பொய்போலும்மே;

அதனால்,

(4) இருவர்தஞ்சொல்லையு மெழுதரங்கேட்டு
இருவரும்பொருந்த வுரையாராயின்
மனுமுறைநெறியின் வழக்கிழந்தவர்தாம்
மனமுறமறுகிநின் றழுதகண்ணீர்

முறையுறத்தேவர் மூவர்காப்பினூஉம்
வழிவழியீர்வதோர் வாளாகும்மே;
(5) பழியாவருவதூஉ மொழியாதொழிவது;
(6) சுழியாவருபுன லலையாதொழிவது.

(பதவுரை முதலியன.)

(1) வாய் பறையாகவும் - என் வாயே ஒருபறையாகவும், நா கடிப்பாகவும் - அதனுள்ளிருக்கிற நாவே அந்தப் பறையடிக்குங் குறுந்தடியாகவும், (உறுதியாக அறைந்து) சாற்றுவது ஒன்றை-என்னால் சொல்லப்படுவதொன்றை, போற்றி கேண்மின் - (உங்களுடைய மனம் வேறொரு விடயத்திற் செல்லாமலே அதனைப்) பாதுகாத்துக் கேளுங்கள்;—

பறையறைந்தபின் உலகிற்கு ஒன்றைத் தெரிவித்தல் உலகியலாதலால் 'வாய்ப்பறையாகவு நாக்கடிப்பாகவும்' என்றவுடனே சாற்றுவது என்றது சொல்லுவதாதலால், அதன்முன் அறைந்து என்பது சொல்லெச்சமாய்க் குறைந்து நின்றது. அது யாதெனின்,

(2) பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் - உள்ளே பொய்யை வைத்திருக்க ஒருவன் பேசுகிற சொல்வலியினாலே, மெய்போலும்மே மெய்போலும்மே - மெய்போலவே தோன்றும் மெய்போலவே தோன்றும்;—

உறுதிப்பொருள் தோன்றற்கு மெய்போலும்மே யென்றது அடுக்கின்றது. போலும்மே யென மகரவொற்று விரித்தல் விகாரம். ஏகாரத்தை மாறிக் கூட்டுக.

(3) மெய்யுடை ஒருவன் - மெய்யை யுள்ளேவைத்திருந்த ஒருவன், சொல்மாட்டானேல் - அது மெய்யென்று விளக்கச் சொல்ல மாட்டானாயின், பொய்போலும்மே பொய்போலும்மே - பொய்போலவேதோன்றும் பொய்போலவே தோன்றும்;—

சொலமாட்டானேல் என்பது சொல்மாட்டானேல் என அக ரம் குறைந்து நின்றது. விரிக்கவேண்டிய மேற்சொல்லியபடி விக

க்கணைக் காண்க. இவ்விரண்டையு மேதுவாகக் கொண்டு அதனால் என்பதனோடு கூட்டி இனிவருவனவற்றோ டொட்டுக.

(4) வழக்குரைக்க வந்த இருதிறத்தாருடைய வாய்மொழிகளையும் ஒருவன் எழுதர மடக்கி மடக்கிக் கேட்டு, பிறகு மநுநீதி நெறியோடு பொருந்தும்படி அவ்விருவர்க்கும் வழக்குத் தீர்ப்புச் சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்லானாயின், மநுமுறைநெறியிற் பொருந்த வுரையானாயி னெனக் கூட்டுக. முறை - நீதியென்பதை,

திருக்குறள் - செங்கோன்மை - ௭ - ம் பாட்டு,

"இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்."

என்பதனாற் காண்க. பொருந்த என்னும் வினையெச்சம் நெறியோடு என்று மூன்றனுருபையும் இருவர்க்கும் என்ற குவ்வுருபையும் முடித்து நிற்றலின், உருபு பலவடுக்கி யொருபயனிலை கொண்டதெனக் காண்க. இருவர்க்கும் பொருந்த வுரையானாயின் எனவே ஒருவர்க்குப் பொருந்த வுரைப்பானாயின் என்பது அருத்தாபத்தியாற் பெறப்பட்டது. படவே அதனாலேயெனக் காரணங் கண்டு, கண்ணீர் வாளாகுமெனச் செயற்கைப் பொருள் காரண முன்வர ஆக்கம் பெற்றதெனக் காண்க.

வழக்கிழந்துவிட்ட மற்றொருவருடைய மனமானது மிகுதியாய்க் கலங்கித் திகைத்துநின்று அழப்படுங் கண்ணீரானது ஒழுங்குபட எல்லாக் கடவுளரோடுங்கூட அரி அரன் அயன் என்று மூவரும் வந்து, அவ்வொருதலை சாய்ந்து வழக்குத் தீர்ப்புச் சொன்னவனைக் காக்கப்புகினும், (அக்காவலாற் பயனின்றி) அவனையும் அவன் பின் அவன் சந்ததியிலே தோன்றினவர் தோன்றுவோராகிய எல்லாரையும் பிளந்துகொண்டே வருவதோர் ஈர்வாளாகும்;—

வழிவழி யென்றதனால் இனித் தோன்றுமவரையு மென்பது பெறப்பட்டது. வழி என்பது சந்ததிக்கும் பின் என்பதற்கும் பெயர். தேவர் மூவர் - தேவரோடு மூவர். வழிவழி - வழியின் வழி.
[illegible]

அவனையும் அவன் வழியின் வழியையும் எனப் பொருள்கொள்க. கண்ணீர் வாளாகும் என்றது ஏகதேச வுருவகவணி. (அதுவு மன்றி),

(5) நிலைத வென்பதுமோ எக்காலமும் வருவதும் ஒழிவதும் ஒழியாது;—

இறுதியிலும்மை விகாரத்தாற் றொக்கது; பழியா வருவது மொழிவது மொழியாது எனக் கூட்டுக. பழியு மொன்றின்பின் னொன்றாக வந்துகொண்டேயிருக்கு மென்பது கருத்து.

(6) சுழிந்து வரும் கீர்த்திரையானது ஒழிவதேது, எ-று.

யாது என்னும் ஐயக்கிளவி யிங்கே இன்மை குறித்து நின்றது. இதுபோலப் பழியாவருவது மொழிவது மொழியாது என இவ்வெ டுத்துக்காட்டுவமையை முற்கூட்டி யிதன் பொருளாகிய பழியாவரு வது மொழிவது மொழியாது என்பதைப் பிற்கூட்டுக. வாய்ப்பறை என்பதுமுதல் சுழியாவருபுன லலையாதொழிவது என்பதனளவு மொருதொடர். இதனுள் முன்னைய விரண்டடியும் தனிநின்றபொ ருள் முற்றினும் இன்ன தெனனுமையிற் றொகுத்துச் சுட்டலென வும், மற்றவெல்லாய்யுடை என்பது முதல் சுழியா ... என்பதனளவு மொருதொடராய் வகுத்துக்காட்டல் எனவுங் கொள்க. இவ்வகுத் துக்காட்டலுள் மெய்போலும்மே, பொய் போலும்மே, அதனால், உரையானாயின், அழுத கண்ணீர் வாளாகும்மே, அதுவுமன்றி, சுழி யா வருபுன லலையா தொழிவது, அதுபோலப் பழியாவருவது மொ ழிவது மொழியாது எனக் கூட்டிநோக்கி அதனால் என்னுமேதுவு க்கு ஏழுதரக் கேட்டுப்பொருந்த வுரைத்தல்வேண்டுமெனப் பயனி லை வருவித்து, அவ்வாறு உரையாது ஒருதலை பொருந்த வுரைப்பா னாயின், அதனால், ஒருதலை யழுதகண்ணீர் வாளாகும், பழியுமாகும் எனப்பொருள்கொண்டு, அது யாதெனின் என்னும் வினாவுக்கு விடையாக்கிக்கொள்க. விரிவஞ்சி விடலாயிற்று. பிறவிலக்கணங்களு முய்த்துணர்ந்து கொள்க. மநுமுறை நெறியி னிருவரும் பொருந்த வுரைத்தற் குதாரணம்:—

இடைக்காடன் - நடுவுநிலைமை - அ - ம் பாட்டு.

"சமஞ்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி."

எனக்காண்க. இனி ஒருதலைபொருந்தவுரைத்தற்குக்காரணம்:— இக்குறளினுள் உவமையடை பொருளடைகளுள் உடன்பாட்டை யெதிர்மறுத்தும் எதிர்மறையையுடன்பாடாக்கியுங்காண்க. என்னை,

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமையாது
ஒருபாற்கோடுத லிழிந்தோர்க்குப் பழி." ௯.என்.

36. துணையோடல்லது நெடுவழிபோகேல்.

(பொ-ரை.) துணையோடுகூடிச் செல்வதன்றி, அஞ்சாமல் தனியே நெடுந்தூர வழியுள்ள வூருக்குச் செல்லாதே, எ-று.

(வி-ரை.) வழி - ஆகுபெயர். அஞ்சாமல் என்பது சொல்லெச்சம். துணையோடல்லது என்றமையால் துணையோடு கூடியே செல்லவேண்டுமென்பதும், நெடுவழிபோகேல் என்றமையால் சமீபமாயிருக்கிற வூருக்குப்போகலாம் என்பதும்பெறப்பட்டன. துணை-சகாயம் (வழித்துணை). (௩௬)

37. புணைமீதல்லது நெடும்புனலேகேல்.

(பொ-ரை.) தெப்பத்தின்மீதேறிச் செல்வதன்றி நீண்ட யாற்று நீர் முதலியவற்றை அஞ்சாமல் நீந்திப்போகாதே, எ-று.

(வி-ரை.) அஞ்சாமல் நீந்தி யென்பது குறிப்பெச்சம். புணைமீதல்லது என்றமையால் புணைமீதேறியே செல்லல்வேண்டுமென்பதும், நெடும்புன லேகேல் என்றமையால், ஆழமில்லாத கொஞ்ச நீரில் நீந்திச்செல்லலா மென்பதும் பெறப்பட்டன. (௩௭)

38. வழியேயேகுக வழியேமீளுக.

(பொ-ரை.) அவ்வாறு துணையோடு போகினும், புணைமீதேறிச் செல்லினும், வழிவிலகுதற்கு மேன்மக்கள் அஞ்சவேண்டுமாதலால் வழிதப்பாமலே போய் வழிதப்பாமலே திரும்புக, எ-று.

'ஏகுக'வென்னும் வியங்கோள் முற்றெச்சப்பொருள்பட நின்றது. இனி அவ்வாறு எனச் சுட்டாது பொதுப்பட வழிதப்பாமலே செல்க, வழிதப்பாமலே திரும்புக, விரைந்துபோகவேண்டினும் என வுரைப்பினும் அமையும். இதற்கு விரைந்து போகவேண்டினும் என்பது இசையெச்சம். இம்மூன்றிற்கும் கருத்து: அஞ்சத் தகுவதற் கஞ்சுவது அறிவுடைமை யென்பதும், அஞ்சத்தகுவதற்கு அஞ்சாமை பேதைமை யென்பதுமாம்.

உதாரணம்:—திருக்குறள் - அறிவுடைமை - அ - ம் பாட்டு,

"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்." (௩அ)

39. இவைகாணுலகிற் கியலுமாறே.

(பொ-ரை.) இது புறனடை, உலகத்தார்க்கு நடக்கத்தக்க நெறிகளானவை இவைபோல்வன பிறவுமாம், எ-று.

(வி-ரை.) காண், ஏ - இரண்டும் அசைநிலைகள். ஆறு - தொகுதிப்பொருமை. போல்வன என்பது சொல்லெச்சமாய்க் குறைந்து நின்றது. இனி, இவைகாண் என்பதை இவைபோல்வன வெனக் காண்க என விரித்து, என இடைச்சொல் தொக்கு நின்றதெனக் கொண்டு காண் என்பதை முன்னிலை யேவலாக்கினும் அமையும். உலகநெறி முழுதும் இதனுளடங்காமையால் இவைகாண் என்பதை இவைபோல்வன பிறவு மென்றுரைத்து இதைப் புறனடையென வேண்டிற்றெனக் காண்க. (௩௯)

40. வாழியநலனே வாழியநலனே.

(பொ - ரை.) எல்லா நன்மைகளும் வாழ்க. எல்லா இன்பங்களும் வாழ்க, எ-று.

(வி-ரை.) நலம் என்பது சொருதி யொருமையாய் நன்மைகளையும் இன்பங்களையும் குறித்து நின்றது. ஏகாரமிரண்டும் அசைநிலைகள். இனி இவ்வாறன்றி நன்மையே வாழ்ந்திருக்கக் கடவது, நன்மையே வாழ்ந்திருக்கக் கடவது என உறுதி தோன்றற் பொருட்டுத் தேற்றேகாரமுங் கொடுத்து இருமடி வாழ்த்தினு ரெனினுமாம். இது வாழ்த்து. (௪0)

வெற்றிவேற்கையென்னும் நறுந்தொகை விருத்தியுரை

நீதிநூற்றிரட்டு விருத்தியுரை 7-ம் பாகம்.

உ

சங்கச் செய்யுள்.

மதுரைத்தமிழாசிரியர்மகனார்

பூதஞ்சேந்தனார்செய்த

இனிதுநாற்பது

மூலமும்,

மஹாவித்வான் கா. இராமசாமி நாயுடு அவர்களால்

இயற்றப்பட்ட

விருத்தியுரையும்.

இவை

பென்ஷன் சுபேதார் - தஞ்சை. சாம்பசிவம்பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை - எஸ். குமாரசுவாமிப்பிள்ளையால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1909.

Copyright] விலை அணா 2. [Registered.

கடவுள்துணை.

இனிது நாற்பது

மூலமும் உரையும்.

வெண்பா.

கண்மூன் றுடையா னடிசேர் கடிதினிதே
தொன்மாண் டுழாய்மாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்த லினிது.

பதவுரை. மூன்று கண் உடையான் - மூன்று கண்களையுடையவனாகிய சிவபெருமானது, அடி - திருவடியை, சேர் - அடைதல், கடிது இனிது - மிகவுமினிதாம்; தொல் - பழமையாகிய, மாண் - மாட்சிமைப்பட்ட, - துழாய் மாலையானை - துளவமாலையை யணிந்தவனாகிய திருமாலை, தொழல் - வணங்குதல், இனிது - இனிதாகும், முந்துற - முற்பட, நான்கு முகம் உடையானை - நான்கு முகங்களை யுடையவனாகிய பிரமதேவனை, பேணி - விரும்பி, சென்று அமர்ந்து ஏத்தல் - போயிருந்து துதித்தல், இனிது - இனிதாகும். எ-று.

கருத்துரை. திரிமூர்த்திகளையும் வணங்குதல் இனிதென்பதாம்.

விசேடவுரை. கண் மூன்று என்பதனைப் பொருளியையுக்கேற்ப மூன்றுகண் என முன்பின்னாக மாற்றிக்கொள்ளலாயிற்று. முகநானகு என்பதனையு மிவ்வாறே. சோ - முதனிலைத் தொழிற்பெயர். கண்மூன்று - சோமசூரியாக்கினிகள், கண்மூன்றுடையான் என்றமையால் சிவபெருமான் என்றும், தொல் மாண்டுழாய் மாலையான் என்றமையால் திருமால் என்றும், முகநான்குடையான் என்றமையால் பிரமதேவன் என்றும் பொருள் கொள்ளப்பட்டது. இங்ஙனம கூறியதனால் இது முதற்கடவுள் வணக்கமெனக் காண்க, கண்மூன்றுடைமை முதலியனவே யிவர்கட்குச சிறந்த அடையாளங்க ளென்பதிதனாற் பெறப்பட்டது ஏகாரங்க ளிரண்டும் அசைகள்.

பிசைபுக காயினுங் கற்றன் மிகவினிதே
கற்றவை கைகொடுத்தல் சாலவு முன்னினிதே
முததோ முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவு மேலாயாரச் சேரவு.

ப - ரை. பிசசை புக்காயினும் - ஐயமேற் றுண்டாயினும், கற்றல்-நூல்களைக் கற்றல், மிக இனிது - மிகவு மினிதாம்; கற்றவை - (ஒருவன்) கற்ற நூல்கள், கை கொடுத்தல் - (அவனுக்குக் கற்றோர் சபையின்கண் வந்து) உதவுதல், சாலவும் - மிகவும், முன் இனிது - முற்பட இனிதாம் ; முத்து - முத்தைப்போன்ற, எ- அழகாகிய, முறுவலார் - பல்வரிசையை யுடையவராகிய மாதரது, சொல் - சொல்லானது, இனிது - இனிதாகும்; ஆங்கு - அதுபோல, தெற்றவும - தெளியவும், மேல் ஆயார் - மேலாயினாரை, சேர்வு - சேர்தல், இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. பிசசைபுக்காயினுங் கற்றல்முதலியவைபோல, மேலாரைச சேர்தல் மிகவும இனிமையைத் தருவதாகும் என்பதாம்.

வி - ரை. ஏகாரங்கள் மூன்றும் அசைகள். பிச்சைபுக்காயினும் என்றதனால் வறுமைக் காலத்தும் என்பதும் கல்வியினருமை

யும் விளங்கின. கைகொடுத்தல் - உதவுதல். மாதர் என்னாது மூத்தோர் முறுவலார் என்றமையால் அவரது உயர்வு பெறப்பட்டது; படவே, சொல் என்றது இன்சொல்லைக் குறித்தது. மேலாயார் - மேலாயினோர். (கல்வி கேள்வி யறிவொழுக்கங்களால் மேம்பட்டவர்). பிச்சை புக்காயினும் கற்றல் முதலிய மூன்றையுங் கூறி, ஆங்கு என வுவமவுருபுகொடுத்துப் பிரித்து, மேலாயார்ச் சேர்வு இனிது என இறுதியிற் கூறினமையால், மேற்கூறிய மூன்றினிமைகளினும் மேலோரது சேர்க்கையினிமை சிறந்ததென்பது தெற்றெனவிளங்குகின்றது. சேர்வு - தொழிற்பெயர். (உ)

உடையான் வழக்கினி தொப்ப முடிந்தான்
மனைவாழ்க்கை முன்னினிது மாணாதா மாயி
னிலையாமை நோக்கி நெடியார் துறத்த
றலையாகத் தானினிது நன்கு.

ப - ரை. உடையான் செல்வமுடையவனது, வழக்கு - கொடை, இனிது - இனிதாகும்; ஒப்ப - (கணவன் மனைவியென்னும் இருவர் மனமும்) ஒத்திருக்க, முடிந்தால்-(அவரது) வாழ் முற்றப்பெற் றிருக்குமாயின், மனை வாழ்க்கை - [அவரது] இல்வாழ்க்கையானது, முன் இனிது - மிகவு மினிதாகும்; மாணாதாயின் - மாட்சிமைப் படாதாயின், நிலையாமை நோக்கி - நிலையாமையை ஆராய்ந்து, நெடியார் - பெரியார், துறத்தல் - துறத்தலானது, தலையாக - முதன்மையாக, நன்கு இனிது - மிகவு மினிதாகும், எ-று.

க - ரை. செல்வமுடையவன் வழக்கும், கணவன் மனைவியென்பவர் மனமொருமித்துச் செய்யு மில்வாழ்க்கையும், நிலையாமை நோக்கித் துறக்கும் பெரியோரது துறவும் இனிய வென்பதாம்.

வி - ரை. உடையான் என வாளாகூறினேனும் மேல் வழக்கு என வருதலால், "உடையார்மு னில்லார்போன்று" என்புழிப்

போல செல்வமுடையவனைக் குறித்தது. மனைவாழ்க்கை யினிது என்றதற்கேற்ப, ஒப்ப என்பதற்கு கணவன் மனைவியென்னு மிரு வர் மனமும் ஒத்திருக்க எனப் பொருளுரைக்க லாயிற்று. நிலையா மை-யாக்கை நிலையாமை முதலியன. நெடியார் - அறிவிற் சிறந்தவர். துறத்தல்-யான் எனது என்னும் அகப்பற்று புறப்பற்றுக்களை யொ ருங்கே விடுதல். தலை - தலைமையென்பத னீறுதொகுத்தல். (௩)

ஏவது மாறா விளங்கிளை முன்னினிதே
நாளுநவை போகான் கற்றன் மிகவினிதே
யேருடையான் வேளாண்மை தானினி தாங்கினிதே
தேரிற்கோ ணட்புத் திசைக்கு.

ப - ரை. ஏவது - ஏவினவேலையை, மாறா - மறக்காமற் செய் கிற, இளங்கிளை - இளங்கிளையை யுடைத்தா யிருத்தல், முன் இனிது - முற்பட இனிதாகும்; நாளும் - தினந்தோறும், நவை - கெட்டவழியில், போகான் - செல்லாதவனாய், கற்றல் - (ஒருவன்) கல்வியைக் கற்றல், மிக இனிது - மிகவும் இனிதாகும்; ஏர் உடை யான் - ஏரையுடையவனது, வேளாண்மை - வேளாண்மையானது, இனிது - இனிதாகும்; ஆங்கு - அதுபோல, தேரின் - ஆராயின், திசைக்கு - தான்போகுந் திசைக்கு, நட்புக்கோள் - (அத்திசையிலு ள்ள செல்லாரையும்) நட்புக்கொள்ளுதல், இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. ஏவாமலே குறிப்பறிந்து செய்கிற வுறவினரை யுடை த்தாதல் முதலியவும் இனியவென்பதாம்.

வி - ரை. மறா என்பது மாறா என நீட்டல் பெற்றது. இளங் கிளை-அடங்கின வுறவு. கிளை - உவமையாகுபெயர். நவை - குற்றம்; அது குற்றத்தையுடைய நெறிக்காயிற்று. குற்றத்தையுடைய நெறி- தீநெறி. போகான் - முற்றெச்சம். வேளாண்மை - உபகாரம். பிற

றெல்லாஞ் செய்யும் வேளாண்மை போலாது என்றும் நிலைபெற்றிருப்பதாதலால், எருடையாண் வேளாண்மை தானினிது என்றார். கோள் - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். (ச)

யானை யுடையபடை காண்டன் மிகவினிதே
யூனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு.

ப - ரை. யானை உடைய - யானைகளையுடைய, படை - படையை, காண்டல் - காணுதல், மிக இனிது - மிகவுமினிதாகும்; ஊனை - (பிறிதோருடம்பின்) தசையை, தின்று - உண்டு, ஊனை - தன்னுடம்பை, பெருக்காமை-வளர்க்காமையானது, முன் இனிது-முற்பட இனிதாகும்; கான்யாற்று-காட்டாற்றினது, கரை அடை-கரையையடைந்த, ஊர் - ஊரிலிருத்தல், இனிது - இனிதாகும்; அங்கு - அதுபோல, மானம் உடையார் மதிப்பு - பெருமையுடையவரால் மதிக்கப்படும் மதிப்பானது, இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. யானைப்படையைக் காணுதல் முதலியவும் இனியவென்பதாம்.

வி - ரை. நால்வகைப் படையினும் யானைப்படை சிறந்ததாதலால் யானையுடைய படைகாண்டன் மிகவினிது என்றும், புலாலுண்ணாமை தவத்திற்குச் சிறந்த அங்கமாதலால் ஊனைத்தின் றூனைப்பெருக்காமை முன்னினிது என்றும், எல்லாப் பொருள்களும் எளிதிற் கிடைக்கப் பெறுதலால், கான்யாற் றடைகரை யூரினிது என்றும், மாசஞ்சிறுகக் குவித்து நிதிக்குவை யீகையி னெக்கழுத்தரிக்குடைத்தாதலால், 'ஆங்கினிதே மானமுடையார் மதிப்பு' என்றும் கூறினார். படை - பகைவரைப் படுத்தற்குரியது. ஊன் இரண்

டனுன் பின்னேயது சினையாகுபெயர். பெருக்கல்-வளர்த்தல். பெருக்காமை - எதிர்மறைத் தொழிற்பெயர். (ஞ)

கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்னினிது செங்கோல னாகுத
லெய்துந் திறத்தா லினிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு.

ப - ரை. கொல்லாமை - ஒருயிரையுங் கொல்லாதிருத்தல், முன் இனிது - முற்பட இனிதாகும்; மாராயன் - பெருமையையுடைய அரசன், கோல் கோடி - நீதி தப்பி, செய்யாமை - (அநீதி) செய்யாதிருத்தல், முன் இனிது - முற்பட இனிதாகும்; செஙகோலன் ஆகுதல் - (அவ்வரசன்) செங்கோலே யுடையவனுதல், முன் இனிது - முற்பட இனிதாகும்; யார்மாட்டும்-யாவரிடத்தும், பொல்லாங்கு உரையாமை - தீமையெடுத்துச் சொல்லாதிருத்தல், நனகு - நன்மையாக, எய்தும் திறத்தால் - பொருநதும் விதத்தால், இனிது என்ப - இனிதாகுமென்று சொல்லுவர் (பெரியோர்), எ - று.

க - ரை. ஒருயிரையுங் கொல்லா திருத்தலும், அரசன் அநீதி செய்யாது செங்கோலனு யிருத்தலும், ஒருவரிடத்தும் தீங்குரையாமையும் இனியவென்பதாம்.

வி - ரை. ராயன் - ராஜன் என்னும் வடமொழித் திரிபு. கோல்கோடி என்றதனுல் செய்யாமை யென்பதற்கு அநீதி செய்யாமை யெனப் பொருள் கூறலாயிற்று. கோல்கோடலாவது - கொடுங்கோலனுதல். கோடுங்கோல் கொடுங்கோல் எனக் குறுக்கல் பெற்று வழங்குகின்றது. (சு)

ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரை
காப்படையக் கோட லனிது.

ப - ரை. ஆற்றும் துணையால் - தமக்கியலு மளவினால், அறம் செய்கை - தருமத்தைச் செய்தல், முன் இனிது - முற்பட இனி தாகும்; பால்பட்டார் - நன்னெறிப்பகுதியிற்பட்டவர், கூறும்-சொல் லுகிற, பயம் மொழி - பயனுடைய சொல்லின், மாண்பு - மாட்சிமை யானது, இனிது - இனிதாகும்; வாய்ப்பு உடையர் ஆகி - குற்றமற் றவராகி, வலவைகள் அல்லாரை - (நாணத்தக்க) அலிகளல்லாத வரை, காப்பு அடைய - காவலாகப்பொருந்த, கோடல் - கொள்ளு தல், இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. தமக்கியன்றவளவால் தருமஞ் செய்தலும், பெரியோ ரது சொல்லும், வீரரைக் காவலாகவுடைத்தாதலும் இனியவென் பதாம்.

வி - ரை. ஆற்றுந்துணை - ஒல்லுந்துணை; அதாவது இல்லறம் பொருளளவுக் கேற்பவும், துறவறம் யாக்கைநிலைக் கேற்பவுஞ்செய் தல். செய்கை - தொழிற்பெயர். கூறும் பயமொழி மாண்பினிதே யென மேல்வருதலால் பாற்பட்டார் என்பதற்கு நன்னெறிப் பகுதி யிற் பட்டவர் எனப்பொருள் கூறலாயிற்று. பயம் - பயன். கோடல்- கொள்ளுதல்; கொள்தல் எனப் பிரியும். (எ)

அந்தண ரோத்துடைமை யாற்ற மிகவினிதே
பந்த முடையான் படையாண்மை முன்னினிதே
தந்தையே யாயினுந் தானடங்கா னாகுமேற்
கொண்டடையா னாத லினிது.

ப - ரை. அந்தணர் - பிராமணர், ஒத்து உடைமை - வேதத் தையுடையாராயிருத்தல், ஆற்ற மிக இனிது - மிகவு மினிதாகும்; பந்தம் உடையான் - சுற்றத்தை யுடையவன், படை ஆண்மை - படை யெடுத்தாளுந்தன்மை, முன் இனிது - முற்பட இனிதாகும்;

தந்தையே ஆயினும் - தந்தையேயானாலும், தான் அடங்கான் ஆகு மேல் - அவன் அடங்காதவனானால், கொண்டு அடையாதல் - (மகன்) அவனைச் சேராதவனாயிருத்தல், இனிது-இனிதாகும், எ-று.

க - ரை. அந்தணர் வேதாத்தியயந முடைத்தாதலும், சுற்ற முடையவன் ஆயுதமாளுந் தன்மையும், தந்தையாயினும் கொடிய னானால் அவனைச் சேராதிருத்தலும் இனியவென்பதாம்.

வி - ரை. அந்தணர் - அழகிய தட்பத்தினை யுடையார் என எதுப்பெயராதலால், அருளுடையார் எனவும் பொருள்படும்;படவே ஒத்துடைமை அருளுடைமை முதலிய வேதமார்க்க முடைமை யென்க. தந்தை-தன்றந்தையென்பதன் மரூஉ. அடைதல்-சேர்தல்.

[பஃறொடைவெண்பா.]

ஊருங் கலிமா வுரனுடைமை முன்னினிதே
தாரணி மன்னர் தமக்குற்ற போர்க்களத்துக்
கார்வரைபோல் யானைக் கதங்காண்டன் முன்னினிதே
யார்வ முடையவ ராற்றவு நல்லவை
பேதுறார் கேட்ட லினிது.

ப - ரை. ஊரும் - தாம் நடத்துகிற, கலிமா - மிக்க குதிரை, உரன் உடைமை-வலியுடைமை, முன் இனிது-முற்பட இனிதாகும்; தார் அணி - மாலையை யணிந்த, மன்னர் - அரசர், தமக்கு - தங்களுக்கு, உற்ற - நேரிட்ட, போர்க்களத்து - யுத்தபூமியில், கார் வரைபோல் - கரியமலைபோலத் தோன்றுகிற, யானை - யானையின், கதம் - கோபத்தை, காண்டல் - காணுதல், முன் இனிது - மிகவு மினிதாகும்; ஆர்வம் உடையவர் - (எல்லா வுயிர்களின்மீதும்) அன்புடையவர், ஆற்றவும் நல்லவை - மிகவும் நல்ல கேள்விகளை, பேதுறார் - மயங்காமல், கேட்டல் - சிரவணஞ் செய்தல், இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. குதிரைவலி யுடைத்தாதலும், அரசர் தமது யுத்த பூமியில் யானையின் கோவத்தைக் காண்டலும், எல்லாவுயிர்களின் மேலும் அன்புடையவர் நல்ல கேள்விகளைக் கேட்டலும் இனிய வென்பதாம்.

வி - ரை. ஊர்தல் - நடத்துதல். உரம் - உரன் எனப் போலி யாயிற்று. தாரண்ணி மன்னர் என்பதற்கு உலகத்தை யாளுகின்ற அர சர் என்றுரைப்பினுமாம். ஆர்வம் - அன்பு. பேதுறூர் முற்றெச்சம். பேதுறு - பகுதி; பேதுறல் - மயங்கல். (௯)

தங்க ணமர்வுடையார் தாம்வாழ்தன் முன்னினிதே
யங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கு
மன்புடைய ராத லினிது.

ப - ரை. தம் கண் - தம்மிடத்து, அமர்வு உடையார் - சேர்த லுடையார், தாம் வாழ்தல் - தாம் வாழ்ந்திருத்தல், முன் இனிது - மிகவுமினிதாம்; அம் கண் - அழகிய இடத்தையுடைய, விசும்பில் - ஆகாயத்திலுள்ள, அகல் - அகன்ற, நிலா - சந்திரனை, காண்பு - காண்டல், இனிது - இனிதாகும்; பங்கம் இல் - பழுதில்லாத, செய் கையர் ஆகி - செய்கையுடையவராகி, பரிந்து - இரங்கி, யார்க்கும் - எல்லாரிடத்தும், அன்பு உடையர் ஆதல் - அன்புடையராயிருத்தல், இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. தம்மைச் சேர்ந்தவர் செல்வராயிருத்தலும், ஆகாயத்தி லுள்ள சந்திரனைத் தரிசித்தலும், எல்லாரிடத்தும் அன்புடையராத லும் இனியவென்பதாம்.

வி - ரை. அமர்வு - விருப்பம் எனினுமாம். பங்கமில் செய்கை - நற்செய்கை. பரிதல் - இரங்கல். யார்க்கும்-உருபுமயக்கம். காண்பு - தொழிற்பெயர், தம்கண் என்பதில் கண்-ஏழனுருபு. (௧0)

கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்கலினிதே
மனமாண்பி லாதாரை யஞ்சி யகற
லெனைமாண்பு தானினிது நன்கு.

ப - ரை. கடம் உண்டு வாழாமை - கடன்பட் டுண்டுவாழாமையை, காண்டல் - காணுதல், இனிது - இனிதாகும்; நிறை - நிறைந்த, மாண்பு இல் - மாட்சிமைக்குணங்க ளில்லாத, பெண்டிரை - மனைவியரை, நீக்கல் - நீக்கிவிடுதல், இனிது - இனிதாகும்; மனம் - மனத்தின்கண், மாண்பு - மாட்சிமைக்குணங்கள், இலாதாரை - இல்லாதவரை, அஞ்சி அகறல் - பயந்து விலகிவிடுதல், எனை மாண்பு - எவ்வகையாகிய மாட்சியினும், இனிது நன்கு - மிகவும் இனிதாகும், எ-று.

க - ரை. கடன்பட்டு உயிர் வாழாமையும், மனைமாட்சியில்லாத மனைவியை நீக்கிவிடுதலும், வஞ்சகரைவிட்டு நீங்குதலும் இனிய வென்பதாம்.

வி - ரை. கடம் - கடன் என்பதன் போலி. வாழாமை - எதிர்மறைத் தொழிற்பெயர். நிறைமாண்பு - நிறைந்த மாட்சிமைக் குணங்கள்; அவை துறந்தார்ப்பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட்டருளுடைமையும் முதலிய நற்குணங்களும், வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்க ளறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில் வன்மையும், ஒப்புரவு செய்தலும் முதலிய நற்செய்கைகளுமாம். மனமாண்பு - அருள் அன்பு முதலாயின. மனமாண்பிலாதார் என்றதனால் வஞ்சகர் என்றுரைத்துக்கொள்க. அகறல் - அகல்தல். இலாதாரை அகறல் என வியையும். (கக)

அதர்சென்று வாழாமை யாற்ற வினிதே
குதர்சென்று கொள்ளாத கூர்மை யினிதே

யுயிர்சென்று தான்படினு முண்ணார்கைத் துண்ணாப்
பெருமைபோற் பீடுடைய தில்.

ப - ரை. அதர் சென்று - வழிகட்டிப்பறித்து, வாழாமை-(அதனால்) உயிர் வாழாதிருத்தல், ஆற்ற இனிது - மிகவு மினிதாகும்; குதர் சென்று - நெறிதப்பி, கொள்ளாத யாதானு மோர்நூற்குப் பொருள் கொள்ளாத, கூர்மை - அறிவுநுட்பம், இனிது - இனிமையாகும்; உயிர்சென்று படினும்-உயிர் (பசியால்) நீங்கிவிடுவதா யிருப்பினும், உண்ணார் கைத்து - உண்ணத்தகாதவருடைய கைப்பொருளை, உண்ணா - உண்ணாத, பெருமைபோல் - மாட்சிமைபோல், பீடு உடையது இல் - பெருமையுடையது வேறொன்று மில்லை, எ-று.

க - ரை. வழிபறித்து வாழாமையும், நூற்பொருளை யுள்ளபடி யறியும் அறிவு நுட்பமும், உயிர் நீங்கநேரினும் உண்ணத்தகாதவருடைய கைப்பொருளை யுண்ணாமையும் இனியவென்பதாம்.

வி - ரை. அதர் செல்லுதல் பறித்தற்காதலால், அதர்சென்று என்பதற்கு வழிகட்டிப் பறித்து என்று பொருள் கூறலாயிற்று. குதர் - தப்புவழி. உண்ணார்கைத் துண்ணாப்பெருமை யெனமேல் வருதலால், உயிர் சென்று தான்படினும் என்புழி பசியாலென ஒரு சொல் வருவித்துரைக்கப்பட்டது. (கஉ)

குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வி யினிதே
மயலிக ளல்லராய் மாண்புடையார்ச் சேருந்
திருவுந் தீர்வின்றே லினிது.

ப - ரை. குழவி - மக்கள், பிணிஇன்றி - நோயில்லாமல், வாழ்தல் - வாழ்ந்திருத்தல், இனிது - இனிதாகும்; கழறும் - உரைத்துப்

பேசுகிற, அவை - சபையார்க்கு, அஞ்சான் - பயப்படாதவனது, கல்வி - கல்வியானது, இனிது - இனிதாகும்; மயலிகள் அல்லர் ஆய் - மயக்கமுடையவ ரல்லாதவராகி, மாண்பு - மாட்சிமைக் குணங்களை, உடையார் - உடையவராகிய பெரியோரை, சேரும் - அடைகிற, திருவும் - பாக்கியமும், தீர்வு இன்றேல் - நீங்குத லில்லையாயின், இனிது - இனிதாகும், எ-று.

க-ரை. குழந்தைகள் நோயின்றி வாழ்தலும், சபைக்கஞ்சாதவனது கல்வியும், பெரியாரைச் சேர்தலும் இனிய வென்பதாம்.

வி-ரை. குழவி - ஈன்றணிமையுடைய ஆண்பெண் மக்களுக்குப் பொதுப்பெயர். கழறுதல் - பேசுதல். மயலிகள் - மயக்கமுடையவர்கள். திரு - செல்வம். தீர்வு - தொழிற்பெயர். இன்றேல் என்பதில் எல் எனின் என்பதன் மரூஉ. (கரு)

மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமை தானடங்கி வாழ்வினிதே
யூன மொன்றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது.

ப-ரை. மானம் அழிந்தபின் - மானங்கெட்ட பின்பு, வாழாமை - உயிர்வாழாமை, முன் இனிது - மிகவு மினிதாகும்; தானம் - (தான்வாழும்) இடம், அழியாமை - கெடாதவகை, தான் அடங்கி வாழ்வு - தான் அடக்கமுடையனாய் வாழ்தல், இனிது - இனிதாகும்; ஊனம் ஒன்று இன்றி - குற்றம் சிறிது மில்லாமல், உயர்ந்த பொருள் உடைமை - சிறந்த திரவியமுடைத்தாதல், மானிடவர்க்கு எல்லாம் - மனிதருக்கெல்லாம், இனிது - இனிதாகும், எ-று.

க-ரை. மானங்கெட்டு வாழாமையும், தான் வாழுமிடங் கெடாதவகையாய் வாழ்தலும், நல் வழியில் வந்த பொருளுடைமையும் இனியவென்பதாம்.

வி - ரை. மானமழிந்த பின் வாழாமை-உயிர்விடுதல். தானம்-இடம். மாணிடவர் - மநுவழியில் வந்தவர். (கச)

குழவி தளர்நடையைக் காண்ட லினிதே
யவர்மழலை கேட்ட லமிழ்தி னினிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும்போழ்து
மனனஞ்சா னாக லினிது.

ப - ரை. குழவி - மக்களுடைய, தளர் நடையை - தளர்ந்த நடையை, காண்டல் - காணுதல், இனிது - இனிதாகும்; அவர் - அந்த மக்களுடைய, மழலை - மழலைச் சொற்களை, கேட்டல் - காதாரக் கேட்டலானது, அமிழ்தின் - அமுதம்போல, இனிது - இனிதாகும்; வினையுடையான் - வினைக்குரியவன், வந்து அடைந்து - வந்து சேர்ந்து, வெய்துறும் போழ்து - தான் வெப்பமடையும் போதில், மனம் அஞ்சான் ஆகல் - மனமஞ்சாதவனா யிருத்தல், இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. மக்களுடைய தளர் நடையைக் காண்டலும், அவரது மழலைச் சொல்லைக் கேட்டலும், பகைவன் வந்தபோது மனமஞ்சாமையும் இனியவென்பதாம்.

வி - ரை. தளர்நடை - துவணடை. மழலை - நிரம்பா மென்சொல். அமிழ்தின் என்பதில் இன் ஐந்தாவத னுறழ்பொருளில் வந்ததெனக்கொண்டு அமிர்தத்திலும் எனப் பொருள் கூறினுமாம். மனன்-மனம் என்பதன் போலி. மனனஞ்சானுதலாவது மனவுறுதி கெடாதிருத்தல் (தைரியமாயிருத்தல்). (கரு)

பிறன்மனை பின்னோக்காப் பீடினிதாற்ற
வறஞுழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர் வினிதே
மறமன்னர் தங்கடையின் மாமலைபோல் யானை
மதமுழக்கங் கேட்ட லினிது.

ப - ரை. பிறன் - பிறனது, மனை-மனையாளை, பின் நோக்கா - பின்பாராத, பீடு - பெருமை, ஆற்ற இனிது - மிகவுமினிதாம், அறம் உழக்கும் - நீரின்பொருட்டு வருந்துகிற, பைங் கூழ்க்கு - பயிர்களுக்கு, வான் சோர்வு - மழைபெய்தல். இனிது - இனிதாகும்; மறம் - வீரத்தையுடைய, மன்னர் - அரசருடைய, கடையில் - கடைவாயில், மா - பெரிய, மலைபோல் - மலையை நிகர்த்த, யானை - யானைகளுடைய, மத முழக்கம்-மதச்செருக்கா லுண்டாகிற முழக்கமானது, கேட்டல் - கேட்கப்படுதல், இனிது - இனிதாகும், எ-று.

க - ரை. ஒருவன் பிறன் மனைவியை விரும்பாத பெருமையும், பயிருக்கு மழைபெய்தலும், அரசர் முற்றத்தில் மதயானை முழக்கமும் இனியவென்பதாம்.

வி - ரை. மனை - இடவாகுபெயர். அறல் - நீர். வான் - இடவாகுபெயர். சோர்வு - தொழிற்பெயர்; பெய்தல் என்பது பொருள். மதமுழக்கம் - மதக்களிப்பான் முழங்கு முழக்கம். (கசு)

கற்றார்முற் கல்வி யுரைத்தன் மிகவினிதே
மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே
யெட்டுணை யானு மிரவாது தானீத
லெத்துணையு மாற்ற வினிது.

ப - ரை. கற்றார் முன் - கற்றவர்க்குமுன்பு, கல்வி - தாம் கற்ற கல்வியை, உரைத்தல் - சொல்லி யேற்கச்செய்தல், மிக இனிது - மிகவுமினிதாகும்; மிக்காரை - மேலானவரை, சேர்தல் - அடைதல், மிக மாண - மிக மாட்சிமைப்பட, முன் இனிது - மிகவு மினிதாம்; எள் துணை ஆனும் - எள்ளளவாயினும், இரவாது - இரவாமல், தான் - ஒருவன், ஈதல் - பிறர்க்குக் கொடுத்தல், எத்துணையும் - எல்லா வகையாலும், ஆற்ற இனிது - மிகவு மினிதாகும், எ-று.

க - ரை. ஒருவர் தாம் கற்ற கல்வியைத் தம்மினுங் கற்றார் முன் சொல்லுதலும், பெரியோரைச் சேர்ந்திருத்தலும், இரவாது உயிர் வாழ்தலும், தன்னிடத் திரந்தவர்க்கு இல்லையென்றது கொடுத்தலும் இனிய வென்பதாம்.

வி - ரை. கற்றார் என்றது தம்மினுங்கற்றாரை. மிக்கார் - கல்வியறி வொழுக்கங்களால் மேம்பட்டவர். துணை - அளவு. இரவாது தானீதலாவது உயிர் நீங்க நேரினும் தான் ஒருவரிடத் தூச் சென்றிரவாது தன்னிடத்து வந்திரப்பவர்க்குத் தானில்லையென்னாது இயன்றவளவாகக் கொடுத்தல். (கஎ)

மன்றின் முதுமக்கள் வாழும் பதியினிதே
தந்திரத்தின் வாழும் தவசிகண் மாண்பினிதே
யெஞ்சா விழுச்சீ ரிருமுது மக்களைக்
கண்டொழுதல் காலை யினிது.

ப - ரை. மன்றில் - சபையில், முதுமக்கள் - பெரியோர்கூடி, வாழும் - வாழ்கின்ற, பதி - ஊரானது, இனிது - இனிதாகும்; தந்திரத்தின் - நூல்வழியாலே, வாழும் - வாழ்கின்ற, தவசிகள் - தவசிகளுடைய, மாண்பு - பெருமை, இனிது - இனிதாகும்; எஞ்சா - குறையாத, விழு சீர்-பெருஞ்சிறப்பினையுடைய, இருமுது மக்களை - தாய்தந்தையரை, காலை கண் - காலைப்பொழுதில், தொழுதல்-வணங்குதல், இனிது - இனிதாகும், எ-று,

க - ரை. பெரியோர்கள் வாழுஞ்சபையுள்ளவூரில் இருத்தலும், வேதநூனெறியி லொழுகும் தவசிகளுடைய பெருமையும், காலைப் பொழுதில் தாய்தந்தையரை வணங்கலும் இனிய வென்பதாம்.

வி - ரை. மன்று - சபை. முதுமக்கள் - வயதினாலும் அறிவினாலும் முதிர்ந்த மக்கள். தந்திரம் - நூல் (வேத நூல்). தவசி - தவஞ்

செய்வோன். கண்தொழுதல் என்பதற்கு, கண்ணினால் தரிசித்தல் எனினு மமையும். (கஅ)

நட்டார்ப் புறங்கூறான் வாழ்த லினிதினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுக னின்னினிதே
முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கா லத்தைத்
தக்குழி யீதலே நன்று.

ப - ரை. நட்டார் - நட்டவரை, புறங்கூறான் - பழிகூறுதலை ஒழித்து, வாழ்தல் - வாழ்வது, நனி இனிது - மிகவும் இனிதாகும்; பட்டாங்கு - உண்மைநூற்பொருளை, பேணி - விரும்பி, பணிந்து-யாவரையும் வணங்கி, ஒழுகல் - ஒழுகுதல், முன் இனிது - மிகவும் இனிதாகும், முட்டு இல் - குறைவில்லாத, பெரும் பொருள் - மிக்கபொருளை, ஆக்கியக்கால் - தேடினகாலத்தில், அது-அப்பொருளை, தக்குழி - தகுந்தவிடத்தில், ஈதல் - கொடுத்தல், இனிது-இனிதாகும், எ - று.

க - ரை. நட்டாரைப் புறங்கூறாமையும், உண்மை நூற்பொருளை விரும்பி எல்லார்க்கும் பணிவா யொழுகலும், பொருளுண்டாயின் தகுதியுடையார்க் கீதலும் இனியவென்பதாம்.

வி - ரை. நட்டார்-உறவினர்; அன்றிச் சிநேகிதர். பட்டாங்கு-உண்மை; அது இங்கு உண்மையைக்கூறும் நூல்களைக் குறித்தது. முட்டு - தடையெனினுமாம். ஆக்குதல் - தேடுதல். தக்க உழி-தகுதியான இடம்; அது தக்குழியென நிலைமொழியீறு தொகுத்தலாயிற்று. சற்பாத்திரம் என்பது பொருள். (கக)

சலவரைச் சாரா விடுத லினிதே
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாந்
தகுதியால் வாழ்த லினிது.

ப - ரை. சலவரை - வஞ்சகரை, சாரா விடுதல் - சேராது ஒழிதல், இனிது-இனிதாகும்; புலவர் - அறிவுடையாரது, வாய்மொழி, வாய்ச்சொல்லை, போற்றல் - போற்றி யொழுகுதல், இனிது - இனிதாகும்; மலர் - பரந்த, தலை - இடத்தையுடைய, ஞாலத்து-உலகத்தில், மன் - பொருந்திய, உயிர்க்கு எல்லாம் - உயிர்களுக்கெல்லாம், தகுதியான் - தத்தம் தகுதியோடு, வாழ்தல் - ஒழுகுதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. வஞ்சகரைச் சேராமையும், புலவர் வாய்மொழி போற்றலும், தகுதியால் வாழ்தலும் இனியவென்பதாம்.

வி - ரை. சலம் - தீராக்கோவமாதலால் சலவரை யென்பதற்குத் தீராக்கோவமுடையவரை யென்றுரைப்பினுமாம். சாராது என்னும் வினையெச்சத்தீறு தொகுத்தலாய் சாரா என நின்றது. புலம் - அறிவு ; அதனை யுடையவராதலால் அறிவுடையாரைப் புலவர் என்றார். அவரது மொழிப்பெருமை தோன்ற, 'வாய்மொழி' என்றார். தலை - இடம். தகுதி - முறைமை. (உ0)

பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்தலினிதே
யறம்புரிந் தல்லவை நீக்க லினிதே
மறந்தேயு மாணா மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்த லினிது.

ப - ரை. பிறன் - பிறனது, கை - கையிலுள்ள, பொருள் - பொருளை, வெளவான் - கவர்ந்து கொள்ளாதவனாய், வாழ்தல் - ஒருவன் வாழ்ந்திருத்தல், இனிது - இனிதாகும்; அறம் - தருமத்தை, புரிந்து-செய்து, அல்லவை-பாவங்களை, நீக்கல்-நீக்குதல், இனிது - இனிதாகும்; மறந்தேயும் - மறந்தாயினும், மாணா - மாட்சிமைப்படாத, மயரிகள் - அறிவிலிகளை, சேரா - அடையாத, திறம் - உபாயத்தை, தெரிந்து - தெரிந்துகொண்டு, வாழ்தல் - வாழ்வது, இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. பிறன்பொருளை விரும்பாது வாழ்தலும், தருமஞ்செய்து பாவத்தை யொழித்தலும், மறந்தாயினும் அறிவிலிகளைச் சேராதிருத்தலும் இனிய வென்பதாம்.

வி - ரை. வெளவான் - முற்றெச்சம்; வெளவல் - கவர்தல். அறம் புரிந்து என்றதையடுத்து அல்லவை யென்றதனால் பாவங்கள் எனப் பொருளுரைக்க லாயிற்று, மயரி-அறிவிலான். சேராத்திறம் - சேராதவுபாயம். (உக)

வருவா யறிந்து வழங்க லினிதே
யொருவர் பங்காகாத வூக்க மினிதே
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்த லினிது.

ப - ரை. வருவாய் - தன்பொருள் வருவாயை, அறிந்து - தெரிந்துகொண்டு, வழங்கல் - அதற்கேற்ப வழங்குதல், இனிது - இனிதாகும்; ஒருவர் பங்கு ஆகாத - ஒருவருடைய சார்பு ஆகாத, ஊக்கம்-மனவெழுச்சி, இனிது - இனிதாகும்; பெருவகைத்து ஆயினும் - பெரும்பயனுடைய தாயினும், பெட்டது - தாம் நினைத்த காரியத்தை, செய்யார் - ஆராயாது செய்யாதவராய், திரிபு இன்றி - வேறுபாடில்லாமல், வாழ்தல் - வாழ்ந்திருத்தல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. வருவாயறிந்து வழங்கலும், நடுவுநிலையா யிருத்தலும், பெரும்பயனுடைய காரியங்களையும் ஆராயாது செய்யாது இயற்கையாய் வாழ்தலும் இனிய வென்பதாம்.

வி - ரை. வருவாய் - வருவழி (வருமானம்). வருவாயறிந்து வழங்கல் - இல்லறத்திருப்பான் பொருளளவுக் கேற்ப வழங்கல்; வழங்கல் - கொடுத்தல். ஒருவர் பங்காகாமை - நடுவுநிலைமை. பெட்

டவை - விரும்பினவை, செய்யார் - முற்றெச்சம். திரிபின்மை - மாறுபடாமை (இயற்கை). (உஉ)

காவோ டறக்குளந் தொட்டன் மிகவினிதே
யாவோடு பொன்னீ தலந்தணர்க்கு முன்னினிதே
பாவமு மஞ்சாராய்ப் பற்றுந் தொழின்மொழி
சூதரைச் சோர்த லினிது.

ப - ரை. காவோடு - சோலையோடு, அறக்குளம் - தருமத்திற்குக் குளத்தையும், தொட்டல் - வெட்டுதல், மிக இனிது - மிக இனிதாகும்; அந்தணர்க்கு - பிராமணர்க்கு, ஆவோடு - பசுவோடு, பொன்-பொன்னையும், ஈதல்-தானமாகக்கொடுத்தல், முன் இனிது - மிகவும் இனிதாகும்; பாவமும் - பாவஞ்செய்தற்கும், அஞ்சாராய் - பயப்படாதவராகி, பற்றும் - தொடர்கின்ற, தொழில் - தொழிலையும், மொழி - சொல்லையுமுடைய, சூதரை - வஞ்சகரை, சோர்தல் - கைவிடுதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. சோலைவைத்தலும், தருமத்துக்குக் குளமெடுத்தலும், அந்தணர்க்குக்கோதாந ஹிரண்யதாநங்களைச் செய்தலும், பாவத்துக்கஞ்சாத வஞ்சகரைக் கைவிடுதலும் இனிய வென்பதாம்.

வி - ரை. கா - தோப்பு எனினுமாம். அறக்குளம் - பலருக்கும் உதவும்படி தருமங்கருதி யெடுத்தகுளம். தொடுதல்-தோண்டுதல். சூது - வஞ்சனை; அதனையுடையவர் சூதர். சோர்தல் - கைவிடுதல்.()

வெல்வது வேண்டி வெகுளாதா னோன்பினிதே [தே
யொல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினி
யில்லது காமுற் றிரங்கி யிடர்ப்படார்
செய்வது செய்த லினிது.

ப - ரை. வெல்வது - தான்வெல்வதையே,வேண்டி - விரும்பி வெகுளாதான் - கோபியாதவனது,நோன்பு - தவம், இனிது - இனி தாகும்; ஒல்லும் துணையும் - தனக்கியன்றவளவும், ஒன்று - தானே டுத்துக்கொண்ட எதேனும் ஒரு கருமத்தை, உய்ப்பான் - நடத்து வானது, பொறை இனிது - பொறுமையினிதாகும்; இல்லது-தனக் கில்லாத பொருளை, காமுற்று - விரும்பி, இரங்கி - அது கிடையா மையால் இரங்கி, இட்ர்ப்படார் - துன்பப்படாதவராகி, செய்வது - செய்யத்தகுந்த காரியத்தை, செய்தல் - செய்துமுடித்தல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. தான் வெல்வதையே விரும்பிக் கோவியாதவனது நோன்பும், இயலுமளவும் எடுத்த காரியத்தை நடத்துவோனது பொறுமையும், தமக்கில்லாத தொருபொருளை விரும்பி அது கிடை யாமையால் துக்கியாதவராய்த் தாம் செய்யவேண்டியவற்றைச் செய் யுந்திறமையும் இனியவென்பதாம்.

வி - ரை. வெல்வது - வெற்றி. வெகுளல் - கோவித்தல். நோ ன்பு - பொறுமையுமாம். ஒல்லுதல் - இயலுதல். உய்த்தல் - நடத்த தல். காமுறல் - ஒருசொல்; விரும்பல் என்னும் பொருளது; பகுதி- காமுறு. இடர்ப்படார் - முற்றெச்சம். செய்வது செய்தல் - செய்யத் தகுவனவாகிய நன்மைகளையே செய்தல். (உச)

ஐவாய வேட்கை யவாவடக்கன் முன்னினிதே
கைவாய்ப் பொருள்பெறினுங் கல்லார்கட் டீர்வினிதே
நில்லாத காட்சி நிறையின் மனிதரைப்
புல்லா விடுத லினிது.

ப - ரை. ஐவாய - ஐந்து வாயில்களையுடைய, வேட்கை அவா - சப்தாதி விஷயங்களாகிய ஆசைகளை, அடக்கல் - அடக்குதல், முன் இனிது - முற்பட இனிதாகும்; கைவாய் - கையினிடத்து, பொருள்

பெறினும் - பொருளைப் பெற்றாலும், கல்லார்கள் - கல்லாதவரிடத்தையும், தீர்வு - விட்டொழிதல், இனிது - இனிதாகும்; நில்லாத காட்சி நிறை இல் - நிலைபெறாத அறிவு நிறைவில்லாத, மனிதரை - மக்களை, புல்லா - சேராமல், விடுதல் - விட்டொழிதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. ஐம்பொறிகளை வாயில்களாகவுடைய ஐம்புலன்களையடக்குதலும், பொருள் பெறுவதாயிருப்பினும் கல்லாதவர்களைச் சேராது கைவிடுதலும், நிலைபெறாத அறிவினையுடைய கீழ்மக்களைக் கூடாது ஒழிதலும் இனியவென்பதாம்.

வி - ரை. வாய் - வாயில். ஐவாய - ஐம்பொறிகளை வாயில்களாகவுடைய. ஐம்பொறிகளாவன: மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. சப்தாதி விஷயங்களாவன : சப்த, ஸ்பர்ஸ, ரூப, ரஸ, கந்தங்கள். அவா - விஷயங்களின் மேற்செல்லு மாசை. பெறினும் என்னும் உம்மை உயர்வு சிறப்பு. கல்லார்கண் தீர்வு என்றமையால் அவரைத் தீர்வு என்பது சொல்லாதே யமையும். தீர்வு-தொழிற் பெயர். காட்சி - அறிவு. புல்லாது என்பது புல்லா என ஈறுதொகுத்தலாயிற்று. (உ௫)

நச்சித் தறமசென்றார் நசைகொல்லா மாண்பினிதே
யுட்கில் வழிவாழா வூக்க மிகவினிதே
யெத்திறத் தானு மியைவ கரவாத
பற்றினிற் பாங்கினிய தில்.

ப - ரை. நச்சி - விரும்பி, தன் சென்றார் - தன்னை யடைந்தவரது, நசை கொல்லா - ஆசையைக் கெடுக்காத, மாண்பு - மாட்சிமையானது, இனிது - இனிதாகும்; உட்கு இல்வழி - மதிப்பில்லாதவிடத்தில், வாழா - வாழாத, ஊக்கம் - மனவெழுச்சியானது, மிக இனிது - மிகவுமினிதாகும்; எத்திறத்தானும் - எவ்வகையாலும்,

இயைவ - கொடுக்கக்கூடுவனவற்றை, காவாத - ஒளிக்காத, பற்றினில் - இல்வாழ்வுபோல, பாங்கு இனியது - மிக இனியது, இல் - வேறொன்றுமில்லை, எ - று.

க - ரை. தன்னை விரும்பி வந்தவரது விருப்பத்தை நிறைவேற்றுதலும், மதிப்பில்லாதவிடத்தில் வாழாமையும், கொடுக்க இயல்வதை இரப்பவர்க் கொளியாமையும் இனியவென்பதாம்.

வி - ரை. நச்சல் - விரும்பல். நசை - விருப்பம். கொல்லல் - அழித்தல். உட்கு - நினைத்தல் (மதித்தல்). காத்தல் - ஒளித்தல். தன்சென்றார் - இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். இயைதல் - இசைதல். இல்வழி - பெயரெச்சத்தொடர். (உசு)

தானங் கொடுப்பான் றகையாண்மை முன்னினிதே
மானம் படவரின் வாழாமை முன்னினிதே
யூனங்கொண் டாடா ருறுதி யுடையவை
கோண்முறையாற் கோட லினிது.

ப - ரை. தானம் கொடுப்பான் - தானஞ் செய்வோனது, தகை ஆண்மை-பேராண்மையானது, முன் இனிது-முற்பட இனிதாகும்; மானம் படவரின் - மானங் கெடவருமாயின், வாழாமை-உயிர் வாழ்ந்திராமை, முன் இனிது - மிகவு மினிதாகும்; ஊனம் கொண்டாடார் - குற்றத்தைக் கொண்டாடாமல், உறுதி உடையவை - உறுதியுடையவாகிய பொருள்களை, கோள்முறையால் - மனத்திற்கொள்ள வேண்டிய முறையினால், கோடல் - கொள்ளுதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. தானங்கொடுப்பவனது பெருமையும், மானமழிந்து உயிர்வாழாமையும், குற்றங் கொள்ளாமல் குணத்தைக் கொள்ளுதலும் இனியவென்பதாம்.

வி - ரை. தானம்-கோதாந பூதாந ஹிரண்யதாநாதிகள். தகை-பெருமை. மானம் படவரின் என்புழி படுதல் கெடுதல் என்னும் பொருளது. கொண்டாடார் - முற்றெச்சம். கோள் - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். (உஎ)

ஆற்றுனை யாற்றென் றலையாமை முன்னினிதே
கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே
யாக்க மழியினு மல்லவை கூறுத
தேர்ச்சியிற் றேர்வினிய தில்.

ப - ரை. ஆற்றுனை - ஒன்றுஞ் செய்யமாட்டாதவனை, ஆற்று என்று - செய்யென்று, அலையாமை - அவனை வருத்தாமை, முன் இனிது - மிகவு மினிதாகும்; கூற்றம் - யமனனவன், வரவு - வருதலின், உண்மை - உண்மையை, சிந்தித்து - ஆலோசித்து, வாழ்வு - வாழ்தல், இனிது - இனிதாகும்; ஆக்கம் அழியினும்-செல்வம் அழியுமாயினும், அல்லவை கூறுத - பாவம் பயக்குஞ் சொற்களைச் சொல்லாத, தேர்ச்சியின் - தெளிவைப் பார்க்கினும், தேர்வு-தெளித்தறிதற்குரிய, இனியது இல்-இனியதாவது வேறொன்றுமில்லை, எ-று.

க - ரை. செய்யமாட்டாதவனைச் செய்யென்று வருத்தாதிருத்தலும், யமன் வருவானென்கிற வுண்மையை நினைத்து வாழ்தலும், செல்வமழிந்தாலும் பாவம் பயக்குஞ் சொற்களைச் சொல்லாமையும் இனியவென்பதாம்.

வி - ரை. ஆற்றுன் - செய்யும் வலியில்லான். அலைத்தல் - வருத்தல். வரவு - தொழிற்பெயர். உண்மை - உளதாந்தன்மை. அல்லவை - பாவங்கள். இது திருக்குறள் - இனியவை கூறல் ருக-ஆம் பாட்டு, "அல்லவை தேய வறம்பெருகு நல்லவை, நாடி யினிய சொலின்" என்பதனுல் இனிது விளங்கும். (உஅ

கயவரைக் கைகந்து வாழ்த லினிதே
யுயர்வுள்ளி யூக்கம் பிறத்த லினிதே
யெளிய ரிவரென் றிகழ்ந்துரையா ராகி
யொளிபட வாழ்த லினிது.

(ப-ரை.) கயவரை - கீழ்மக்களை, கைகந்து - நீங்கி, வாழ்தல்- வாழ்ந்திருத்தல், இனிது - இனிதாகும்; உயர்வு - உயர்தற்குக் காரணமாகிய நற்செயல்களை, உள்ளி - ஆலோசித்து, ஊக்கம் பிறத்தல்- (அவற்றின்கண்) மனவெழுச்சி யுண்டாதல், இனிது - இனிதாகும்; இவர் எளியர் என்று-இவர் எளியரென்று, இகழ்ந்து உரையாராகி - (அவரை) அவமதித்துப் பேசாதவராகி, ஒளிபட - புகழுண்டாம்படி, வாழ்தல் - வாழ்ந்திருத்தல், இனிது - இனிதாகும், எ - று.

க-ரை. கீழ்மக்களை நீங்கி வாழ்ந்திருத்தலும், உயர்வான காரியங்களை யாலோசித்து அவற்றில் ஊக்கத்தோ டிருத்தலும், எளியவரை அவமதித்துப் பேசாதவராய்ப் புகழ்பட வாழ்தலும் இனியவென்பதாம்.

வி-ரை. கயவர்-கயமையென்னும் பண்படியாகப் பிறந்த பெயர்; கயமை - கீழ்மை. கைகத்தல் - ஒருசொல்; நீங்குதல் என்பதுபொருள். உள்ளல் - ஆலோசித்தல். ஒளியென்பது இங்குப் புகழ் என்னும் பொருள்பட்டது. (உக)

நன்றிப் பயன்றூக்கி வாழ்த னனியினிதே
மன்றக் கொடும்பா டுரையாத மாண்பினிதே
யன்றறிவார் யாரென் றடைக்கலம் வெளவாத
நன்றியி னன்கினிய தில்.

ப-ரை. நன்றி - ஒருவர்செய்த உதவியின், பயன் - பிரயோசனத்தை, தூக்கி - ஆராய்ந்து, வாழ்தல் - வாழ்ந்திருத்தல், நனி

இனிது - மிகவுமினிதாகும்; மன்றம் - சபையிலிருந்து, கொடும்பாடு உரையாத-ஒருதலைவழக்குப் பேசாத, மாண்பு-மாட்சிமை, இனிது - இனிதாகும்; அன்று - (வைத்த) அப்பொழுது, அறிவார்யார் என்று- அறிபவர் யாரென்று, அடைக்கலம் - ஒருவன் அடைக்கலமாக வைத்தபொருளை, வெளவாத - கவர்ந்துகொள்ளாத, நன்றியின் நன்கு - நன்மையினும் நன்மையாகிய, இனியது இல் - இனிதாவது வேறொன்றுமில்லை, எ - று.

க-ரை. ஒருவர் செய்த வுதவிப்பயனை மறவாது வாழ்தலும், சபையிலிருந்து ஒருதலைவழக்குப் பேசாத பெருமையும், வைத்தபோ தறிவாரில்லையென்று ஒருவன் வைத்த அடைக்கலப் பொருளைக் கவர்ந்துகொள்ளாமையும் இனியவென்பதாம்.

வி-ரை. நன்றி-நன்மை (உதவி). தூக்கல் - ஆராய்தல். கொடு ம்பாடு - கொடுமை, (ஒருதலைவழக்குப் பேசுதல்). அடைக்கலம் - ஒருவன் கொண்டுவந்து ஒளித்துவைத்தபொருள். (௧௦)

அடைந்தார் துயர்கூரா வாற்ற லினிதே
கடங்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே
சிறந்தமைந்த கேள்வியா ராயினு மாராய்ந்
தறிந் துரைத்த லாற்ற லினிது.

ப-ரை. அடைந்தார்-தம்மை யடுத்தவர், துயர் கூரா - துன்பப் படாமைக் கேதுவாகிய, ஆற்றல் - செய்கையுடைத்தாதல், இனிது - இனிதாகும்; கடம் கொண்டும் - கடன் வாங்கியாயினும், செயவன - செய்யத்தகுந்த காரியங்களை, செய்தல் - செய்தலானது, இனிது - இனிதாகும்; சிறந்து அமைந்த - மிகவும் நிறைந்த, கேள்வியர் ஆயி னும் - கேள்வியுடையாராயினும், ஆராய்ந்து அறிந்து - பலவகையா லும் ஒரு காரியத்தை ஆலோசித்து இதுவே சரியென்று தெரிந்து கொண்டு, உரைத்தல் - சொல்லுதல், ஆற்றஇனிது-மிகஇனிதாகும், எ-று.

க - ரை. தம்மை யடுத்தவரது துன்பத்தை யொழித்தலும், கடன்வாங்கியுஞ் செய்யவேண்டுவனவற்றைச் செய்தலும், மிகச்சிற ந்த கேள்வியாயிருப்பினும் யாதொரு காரியத்தையும் பலவகையாலு மாராய்ந்து சொல்லுதலும் இனியவென்பதாம்.

வி - ரை. துயர்கூரா என்பதற்கு துன்பப்படாமைக் கேதுவா கிய காரியங்கள் என்றுரைப்பினுமாம், அவை அவர்கட்கு வேண்டு வன வுதவிக்காப்பாற்றல். செய்வன செய்தல் - தவறுமற் செய்யத் தகுந்த காரியங்களைச் செய்தேவிடுதல். செய்யத்தகுந்த காரியங்களா வன: இருமுது குரவருடைய சிரார்த்தாதிகளும், மற்றுஞ் செய்யவே ண்டிய உபவாசாதிகளும். (௩௧)

கற்றறிந்தார் கூறுங் கருமப்பொரு ளினிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே
தெற்றென வின்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்
பற்றிமையிற் பாங்கினிய தில்.

ப - ரை. கற்று - பலநூல்களையுங் கற்று, அறிந்தார் - அவற்றி னுட்பொருளை யறிந்தவர், கூறும் - சொல்லுகிற, கருமப்பொருள் - உறுதிப் பொருளானது, இனிது-இனிதாகும்; பற்று அமையா-குடி களிடத்து அன்பில்லாத, வேந்தன் கீழ் - அரசனது குடையின்கீழ், வாழாமை - வாழாத தன்மையானது, முன் இனிது - மிகவுமினிதா கும்; தெற்றெனல் இன்றி - வறுமையால் தெளிவுகுன்றி, தெளிந் தாரை - தம்மை யாதரிப்பவரென்று தேர்ந்தடைந்தவரை, தீங்கு ஊக்கா - தீங்குசெய்ய நினையாத, பற்றிமையின் - அன்புடைமையி னும், பாங்கு இனியது - மிகவுமினியது, இல் - வேறொன்றுமில்லை, எ - று.

க - ரை. அறிவு நூல்களைக் கற்றறிந்தவர் சொல்லும் உறுதிப் பொருளும், குடிகளிடத் தன்பில்லாத அரசன்கீழ் வாழாமையும்,

வறுமையாற் றளர்ந்து தம்மை வந்தடைந்தவரை அன்போடு காப்பா ற்றுதலும் இனியவென்பதாம்.

வி - ரை. உறுதிப்பொருள் கூறுவோராதலால் அவர் கற்றநூல் கள் அறிவு நூல்களென்பது தானேபெறப்பட்டது. பற்று - அன்பு. வேந்தன்கீழ் என்றது வேந்தனதுகுடைநிழலின்கீழ் என்றபடி. தெற் றெனல் - தெளிவாயிருத்தல். ஊக்கல் - செய்தல். பற்றிமை - அன் புடையாந் தன்மை. (௩௨)

ஊர்முனிவ செய்தொழுகா வூக்க மிகவினிதே
தானே மடிந்திராத் தாளாண்மை முன்னினிதே
வாண்மயங்கு மண்டமருண் மாறா மறமன்னர்
தானை தடுத்த லினிது.

ப - ரை. ஊர் - ஊரிலுள்ளார், முனிவ - வெறுக்கத்தக்க தீச் செயல்களை, செய்து ஒழுகா - செய்து அத்தீநெறிக்கண்ணே யொழு காத, ஊக்கம்-மனவுறுதி, மிக இனிது-மிகவு மினிதாகும்; தானே - வேறொரு தடையின்றித் தனக்குத்தானே, மடிந்து இரா - சோம்பி யிராத, தாளாண்மை - முயற்சியானது, முன் இனிது - மிகவுமினி தாகும்; வாள் - வாளாயுதங்கள், மயங்கு-நெருங்கிக்கலக்கிற, மண்டு அமருள் - மூண்டபோரினின்றும், மாறா - மீளாத, மற மன்னர் - வீரத்தையுடைய அரசரது, தானை - சேனையை, தடுத்தல் - விலக்கு தல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. ஊரிலுள்ளார் வெறுத்தற்குரிய தீச்செயல்களைச் செய் யாமையும், சோம்பியிராமல் முயற்சியோடிருத்தலும், இருவேந்தரது பகை தணித்தலும் இனியவென்பதாம்.

வி - ரை. ஊர் என்றது ஊரிலுள்ளாரை யாதலால் இடவாகு பெயர். மடிதல் - சோம்பியிருத்தல். மயங்குதல் - கலத்தல். அமர் - சண்டை. மறமன்னர் தானை தடுத்தலாவது - அரசரிருவர் பகை

கொண்டு போர்செய்யுங்கால் அவ்விருவர்க்கிடையே சென்று போரை விலக்கி அவரைச் சமாதானப்படுத்தல். (௧௩)

எல்லியம் போது வழங்காமை முன்னினிதே [தே
சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதன் மாண்பினி
புல்லிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை
கொள்ளா விடுத லினிது.

ப - ரை. எல்லியம்போது - இராக்காலத்தில், வழங்காமை-சஞ்சரியாதிருத்தல், முன் இனிது-மிகவுமினிதாகும்; சொல்லுங்கால் - (ஒன்றைச்) சொல்லுமிடத்து, சோர்வு இன்றி - மறப்பில்லாமல், சொல்லுதல் - சொல்லுதலினது, மாண்பு - மாட்சிமை, இனிது - இனிதாகும்; புல்லிக்கொளினும்-வலியவந்து தழுவிக்கொண்டாலும், பொருள் அல்லார் - ஒரு பொருளாக மதிக்கப்படாதவராகிய கீழ்களது, கேண்மை - சிநேகத்தை, கொள்ளா - ஏற்றுக்கொள்ளாமல், விடுதல் - விட்டொழிதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. இராக்காலத்தில் வெளியில் சஞ்சரிக்காதிருத்தலும், ஒன்றைப் பேசும்போது முன்பின் செய்திகளை மறவாமற் பேசுதலும், வலியவந்து தழுவிக்கொண்டாலும் கீழ்களது சிநேகத்தைக் கொள்ளாது விடுதலும் இனியவென்பதாம்.

வி - ரை. எல்லி-இராத்திரிவழங்குதல்-சஞ்சரித்தல். சோர்வு-மறதி. புல்லுதல் - தழுவுதல். பொருளல்லார்-ஒரு பொருட்டன்மையுடையரல்லாதவர் (ஒன்றுக்கும் பற்றாதவர்). கேண்மை - கேளாந்தன்மை, (சிநேகம்). கொள்ளாது விடுதல் என்பது கொள்ளா விடுதல் என நிலைமொழியீறு தொகுத்தல் பெற்றது. (௧௪)

ஒற்றினா லொற்றிப் பொருடெரியு மாண்பினிதே
முற்றான் றெரிந்து முறைசெய்தன் முன்னினிதே

பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்தூற்றுப் பாங்கறிதல்
வெற்றிவேல் வேந்தற் கினிது.

ப - ரை. ஒற்றினால்-ஒற்றரைக்கொண்டு, ஒற்றி-புறத்தே நிக ழுஞ் செயல்களை யறிந்து, பொருள் - உண்மைப்பொருளை, தெரி யும் - தெரிந்து செய்கிற, மாண்பு - மாட்சிமை, இனிது - இனிதா கும்; முன் - (ஒருகாரியத்தைச் செய்தற்கு) முன்பே, தான் தெரி ந்து - தான் ஆராயவேண்டுவனவற்றை ஆராய்ந்தறிந்து, முறைசெய் தல் - செய்யவேண்டிய கிரமப்படியே செய்தல், முன் இனிது - மிகவு மினிதாகும்; பற்று இலன் ஆய் - ஒருவர்மீது பற்றில்லாதவனாகி, பல் உயிர்க்கும் - பல வுயிர்களுக்கும், பாத்தூற்று - இரங்கி, பாங்கு அறிதல்-நன்மையை யறிதல், வெற்றி வேல் - வெற்றிவேலைத் தாங் கிய, வேந்தற்கு - அரசனுக்கு, இனிது - இனிதாம், எ - று.

க - ரை. ஒற்றரைக்கொண்டு புறத்து நிகழுஞ் செய்திகளைத் தெரிந்துகொண்டு உண்மை கண்டு அதற்கேற்ப நடத்துதலும், செய் தற்குமுன்னே யாலோசித்துத் தெரிந்துகொண்டு முறைசெய்தலும், பக்ஷபாதமில்லாமல் எல்லாரையு மொப்பநாடுதலும் அரசனுக்குஇனி யவா மென்பதாம்.

வி - ரை. ஒற்று - பண்பாகுபெயர். முறைசெய்தல்-செங்கோல் செலுத்தல். பற்று - அன்பு. பாத்தூறல் - இரங்கல். பாங்கு-நன்மை. வெற்றி - சயம். (௩௫)

ஒளிவித் தழுக்கா றுரையாமை முன்னினிதே
செவ்வியராய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே
கல்வித்தாங் கொண்டுதாங் கண்டது காமுற்று
வெளவா விடுத லினிது.

ப - ரை. ஒளவித்து - மனங்கோணி, அழுக்காறு-பொறாமைச் சொற்களை, உரையாமை - சொல்லாமை, முன் இனிது - மிகவுமினி

தாகும்; செவ்வியர் ஆய் - மனச் செப்ப முடையவராய், சினம்-கோப த்தை, செற்று-கோபித்து, கடிந்து-நீக்கி, வாழ்வு-வாழ்தல், இனிது - இனிதாகும்; கவ்விக்கொண்டு - உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, தாம்-தாங்கள், கண்டது - கண்ட பொருளை, காமுற்று - விரும்பி, வெள வா - அதனைக் கவர்ந்துகொள்ளாது, விடுதல் - ஒழிதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. பிறராக்கங்கண்டு பொறாமை பேசாமையும், கோப மில்லாமல் நடுவுநிலை யுள்ளவராயிருத்தலும், பிறர்பொருளைக் கவர் ந்துகொள்ள இச்சியாமையும் இனியவென்பதாம்.

வி - ரை. ஒளவித்து உரையாமையென வியையும். ஒளவித்தல் - மனக்கோட்ட முடையாதல். செற்று என்பதற்குப் பகுதி செறு. கவ்வல் - உறுதியாய்ப்பற்றல். வெளவாது என்பது வெளவா என ஈறுதொகுத்த லாயிற்று. வெளவல் - கவர்தல். (கூக)

இளமையை மூப்பென் றுணர்த லினிதே
கிளைஞர்மாட் டச்சின்மை கேட்ட லினிதே
தடமென் பணைத்தோட் டளிரிய லாரை
விடமென் றுணர்த லினிது.

ப - ரை. இளமையை - ஒருவன் தன் இளமைப்பருவத்தை, மூப்பு என்று-முதுமைப்பருவமென்று, உணர்தல்-அறிதல், இனிது-இனிதாகும்; கிளைஞர் மாட்டு - உறவினரிடத்து, அச்சு இன்மை - அஞ்சுதற் கேதுவாகிய துன்பமில்லாமையை, கேட்டல் - கேட்கு தல், இனிது - இனிதாகும்; தடம் மென்பணை தோள்-பெரிய மெல் லிய பருத்ததோள்களையும், தளிர் இயலாரை - தளிர்போன்ற சாய லையும் உடையமாதரை, விடம் என்று உணர்தல்-விஷமென்றறிதல், இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. ஒருவன் தனது இளமைப்பருவத்தை முதுமைப்பருவமாக நினைத்தலும், உறவினரது க்ஷேமத்தைக்கேட்டலும், மாதரை நஞ்சென்றறிதலும் இனியவென்பதாம்.

வி - ரை. இளமை நீர்க்குமிழி போல்வதாதலால் 'இளமையை மூப்பென்றுணர்தலினிது' என்றும், உறவினர் நிர்ப்பயராய் வாழ்தலைக் கேட்டல் ஒருவனுக் கின்பந்தருவதாதலால் 'கிளைஞர்மாட்டச் சின்மை கேட்டலினிது' என்றும், ஆடவரைக் கொல்லுதற் கமைந்தவராதலால், 'தடமென்பணைத் தோட்டளிரிய லாரைவிடமென்றுணர்தலினிது' என்றும் கூறினார். மூப்பு - தொழிலாகுபெயர்; மூ - பகுதி. அஞ்சு - முதனிலைத்தொழிற்பெயர்; அது அச்சு என வலித்தல்பெற்றது. பணைத்தோள் - மூங்கில்போலுந் தோள் எனினுமமையும். இயல் - சாயல் (நிறம்). (௧எ)

சிற்றா ளுடையான் படைக்கல மாண்பினிதே
நட்டா ருடையான் பகையாண்மை முன்னினிதே
யெத்துணையு மாற்ற வினிதென்ப பால்படுங்
கற்றா வுடையான் விருந்து.

ப - ரை. சிற்றாள் உடையான்-சிற்றாளையுடையவனது, படைக்கலம் - ஆயுதம், மாண்பு - மாட்சிமையாக, இனிது - இனிதாகும்; நட்டார் உடையான் - சுற்றத்தாரையுடையவன், பகை ஆண்மை - பகைவரோடு கொள்பகையை யாளுந்தன்மை, முன் இனிது - மிகவு மினிதாகும்; பால்படும் - பால்சொரிகிற, கற்றா உடையான் - கறவற் பசுவையுடையவனது, விருந்து - விருந்தானது, எத்துணையும் - எவ்வகையாலும், ஆற்ற இனிது - மிகவு மினிதாகும், என்ப - என்று சொல்லுவர் பெரியோர், எ - று.

க - ரை. சிற்றாளுடையவனது ஆயுத மாட்சியும், உறவினரது உதவியுள்ளவன் பகைவரோடு பகைக்கு மாண்மையும், கற்றாவுடையவனிடம் விருந்தும் இனிய வென்பதாம்.

வி - ரை. சிற்றான் - சிறுவன். கட்டார் - சிநேகர் எனினுமாம். ஆண்மை-ஆளுந்தன்மை. கன்று ஆ கற்று என வலித்தல் பெற்றது; கன்றையுடைய பசு என்பது பொருள் (கறவற்பசு). விருந்து - விருந்துசெய்தல். (௩௮)

பிச்சைபுக் குண்பான் பிளிறாமை முன்னினிதே
துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே
யுற்ற பேராசை கருதி யறனொரூஉ
மொற்க மிலாமை யினிது.

ப - ரை. பிச்சைபுக்கு உண்பான் - ஐயமேற் றுண்பவன், பிளிறாமை - கோவியாமை, முன் இனிது - மிகவுமினிதாகும்; துச்சில் இருந்து - ஒதுக்குக் குடியாயிருந்து, துயர் கூரா - துன்பப்படாத. மாண்பு-மாட்சிமை, இனிது-இனிதாகும்; உற்ற-மிகுந்த, பேராசை-பெரிதாகிய ஆசையை, கருதி - எண்ணி, அறன் - தருமத்தை, ஒருவும் - நீங்குகிற, ஒற்கம் இல்லாமை - மனத்தளர்ச்சி யில்லாமை, இனிது - இனிதாகும், எ - று.

க - ரை. ஐயமேற்றுண் டுயிர்வாழ்பவன் கோவமில்லாதிருத்தலும், ஒதுக்குக் குடியிருந்து துன்பப்படாமையும், மிகுந்த பேராசையால் அறநெறியைக் கைவிட்டு மனந் தளராதிருத்தலும் இனியவென்பதாம்.

வி - ரை. புக்கு - இறந்தகால வினையெச்சம்; புகு என்னும் பகுதியொற்றிரட்டித்து இறந்தகாலங் காட்டிற்று. பிளிறல் - உறுமுதல்; அது இவ்விடத்துக் கோவித்தலைக் குறித்தது. துச்சில் - ஒதுக்கிடம். ஒற்கம் - தளர்ச்சி; பகுதி ஒல்கு. துயர்கூர்தல் - துன்பமிகுதல் எனினுமாம். (௩௯)

பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே
வித்துக்குற் றுண்ணா விழுப்ப மிகவினிதே

பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலிற் காழினியது இல்.

ப-ரை. பத்து கொடுத்தும் - பதின்மடங்கதிகமான இறையிறுத்தாயினும், பதி இருந்து வாழ்வு - தன் ஊரிலிருந்துகொண்டு வாழ்தல், இனிது - இனிதாகும்; வித்து - விளைவிற்குக் காரணமாகிய வித்தை. குற்று உண்ணா - குற்றியுண்ணாத, விருப்பம் - மேன்மையானது. மிக இனிது - மிகவு மினிதாகும்; பற்பல நாளும் - பலப்பல நாளும், பழுது இன்றி - பழுது இல்லாமல், பாங்கு உடைய - தகுதியுடைய நூல்களை, கற்றலின் - கற்றலினும், காழ் இனியது - உறுதியாகிய இனியது, இல் - வேறொன்றுமில்லை, எ-று.

க-ரை. பத்துக் கொடுத்தாயினும் தன்னூரிலிருந்தே வாழ்தலும், விதைக்க வைத்திருக்கும் நெல்லைக் குற்றியுண்ணாமையும், எந்நாளும் அறிவுநூல்களைக் கற்றலும் இனியவென்பதாம்.

வி-ரை. பதி-ஊர். வித்து-விதைத்தற்கென் றெடுத்துவைத்த நெல். குற்று குற்றி என்பவற்றிற்குப் பகுதி குறு; இது:

"கொல்லைக் குறவரை வாயினை யார்கரிக் கோட்டை-வினா
நெல்லைக் குறவரை யாதுகொள் காளத்தி நேயரை"

"இலைக்குறச் சத்திக்கத்திகொடு பறித்துக்
கொடாதிசிறைப்பிறப்பே"

என்றற்றொடக்கத் தான்றோர் செய்யுட்களா லினிதுவிளங்கும். கற்றலின் என்பதில் இன் ஐந்தாவத னுறழ்பொருளில் வந்தது. காழ்-வயிரம்; அது இவ்விடத்து உறுதியென்னும் பொருள் பயந்துநின்றது. பற்பலநாளும் என்றது எந்நாளும் என்றபடி.

இனிது நாற்பது மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

இரண்டாம் பத்து

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
[illegible]	2[illegible]	குழவிதளர்	1[illegible]
அகர்சென்று	10	சொல்லாமை	6
அந்தமை[illegible]	7	சலவரை	16
ஆற்றுக்கேணி	6	குழவிபிணி	11
ஆற்றுகை	23	சிற்றுருடை	31
இவ்வளவைமை	30	தங்கணமர்	9
[illegible]	3	தானக்கொடி	22
உருகசெயி[illegible]	8	நச்சித்தற்	21
ஊர்முனிவ	27	நட்டார்புறங்	16
எல்லியபே[illegible]	28	நன்றிப்பயன்	24
ஏவதுமாறு	4	பத்துக்கொடுத்	32
ஒவ்வாயவெ	20	பிறைபுக்கா[illegible]	[illegible]
ஒற்றிஞ	28	பிறைபுக்குண	32
ஒளிவித	29	பிறன்மனை	1[illegible]
கடமுண்டு	10	பிறன்மனை	13
கண்ணுமுன்	1	மன்றின்முகா	15
கயலைக்	24	மானமழிந்த	12
கற்றார்முற்	14	யாவோடுங்கூட	5
கரறியிந்தா[illegible]	26	வருவாயறிந்து	18
[illegible]	19	வெல்வது	19

நீதிநூற்றிரட்டு விருத்தியுரை 8-ம் பாகம்.

உ

சங்கச்செய்யுள்.

மதுரைத்தமிழாசிரியர்மகனார்

பூதஞ்சேந்தனார்செய்த

இன்னாநாற்பது

மூலமும்,

மஹாவித்வான் கா. இராமசாமிநாயுடு அவர்களால்

இயற்றப்பட்ட

விருத்தியுரையும்.

இவை

பென்ஷன் சுபேதார்-தஞ்சை. சாம்பசிவம் பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை-எஸ். குமாரசுவாமிபிள்ளையால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1909.

Copyright] விலை அணா-1½ [Registered.

கடவுள் துணை.

இன்னா நாற்பது

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
அடக்க ...	... 39	தலைதண்டமாக ...	... 13
அறமனத்தார் ...	... 6	தன்னைத்தான் ...	... 33
ஆற்றலிலாதான்	... 8	நட்டாரிடுக்கண்	... 26
ஆன்றவிந்த ...	... 18	நறிய ...	... 37
ஈத்தவகையார் ...	... 22	நெடுமரநீள்கோட்	... 31
உடம்பாடிலாத ...	... 12	பகல்போலு ...	... 9
உண்ணாதுவைக்கும்	... 18	பந்தமில்லாத ...	... 2
ஊரனுடையா ...	... 20	பண்ணமையா ...	... 32
எருதிலுழவர்க் ...	... 5	பார்ப்பாரிற் ...	... 3
எழிலி ...	... 35	பிறன்மனையாள்	... 38
ஏமமில்மூதூர் ...	... 25	புல்லார்புரவி ...	... 17
ஒழுக்க ...	... 34	பெரியாரோ ...	... 27
கல்லாதானூருங்	... 29	பெருமையுடை ...	... 28
கள்ளில்லா ...	... 10	பொருளிலான் ...	... 36
கள்ளுண்பான் ...	... 33	பொருளுணர்வா	... 10
குலத்துப் ...	... 21	மணியிலாக்குஞ்ச	... 14
குறியறியான் ...	... 30	மாரிநாட்கூவுங் ...	... 22
கொடுக்கும் ...	... 18	முக்கட்பகவ ...	... 1
கொடுங்கோன் ...	... 4	யானையின்மன்னரை	... 23
சிறையில் ...	... 5	வணரொளிமைம்	... 16
சிறையில்லா ...	... 24		

உ

கடவுள் துணை.

இன்னா நாற்பது

மூலமும் உரையும்.

முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா
பொற்பன வூர்தியை யுள்ளா தொழுகின்னா
சக்கரத் தானை மறப்பின்னா தாங்கின்னா
சத்தியான் றாடொழா தார்க்கு.

பதவுரை. முக்கண் - மூன்று கண்களையுடைய, பகவன் - சிவபிரானது, அடி - திருவடியை, தொழாதார்க்கு - வணங்காதவர்க்கு, இன்னா - துன்பமுண்டாம்; பொற்பு - அழகாகிய, அன்னவூர்தியை - அன்னவாகனனாகிய பிரமனை, உள்ளாது - நினையாமல், ஒழுகு - ஒழுகுதல், இன்னா - துன்பந்தருவதாம்; சக்கரத்தானை - சக்கரப்படையை யுடையவனாகிய திருமாலை, மறப்பு - மறத்தல், இன்னா - துன்பந்தருவதாம்; ஆங்கு - அவ்வாறே, சத்தியான் - வேற்படையை யுடையவனாகிய முருகக் கடவுளின், தாள் - திருவடியை, தொழாதார்க்கு-வணங்காதவர்க்கு, இன்னா - துன்பமுண்டாகும் என்றவாறு.

கருத்துரை. சிவபெருமான் முதலியவர்களுடைய திருவடிகளைத் தொழாதார்க்கு உண்டாவது துன்பமேயா மென்பதாம்.

விருத்தியுரை. சோமசூரியாக்கினிகளை மூன்றுகண்களாக வுடையவராதலால் சிவபெருமானை 'முக்கட்பகவன்' என்றார்; "இமையாத முக்கண் மூவரிற் பெற்றவன்" என்றார் மணிவாசகரும். ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறுகுணங்களுக்கும் பகம் என்று பெயர், இந்த ஆறு குணங்களையு முடையவன் பகவன். அன்னை அனை எனத் தொகுத்தலாயிற்று. ஒழுகு - முதனிலைத் தொழிற்பெயர். மறப்பு - தொழிற்பெயர். சத்தி - வேல் இன்னாது - தீயது; இது இன்னா என ஈறு தொகுத்தல் பெற்றது. இச் செய்யுளில் முக்கட்பகவன் முதலிய மூவரையும் வழிபடலால் ஆறு மூவரையும் அங்கமாகவுடைய முதற்கடவுள் வணக்க மெனக் கொள்க. (௧)

பந்தமில் லாத மனையின் வனப்பின்னா
தந்தையில் லாத புதல்வ னழகின்னா
அந்தண ரில்லிருந் தூணின்னா வாங்கின்னா
மந்திரம் வாயா விடின்.

ப-ரை. பந்தம் இல்லாத - சுற்றமில்லாத, மனையின் - வீட்டின், வனப்பு - அழகானது, இன்னா - துன்பந்தருவதாம்; தந்தை இல்லாத - தகப்பனில்லாத, புதல்வன் - புத்திரனது, அழகு - அழகானது, இன்னா - துன்பந்தருவதாம்; அந்தணர் இல் இருந்து - வேதியர் வீட்டிலிருந்து, ஊண் - (வேதியரல்லாதார்) உண்ணுதல், இன்னா - துன்பந்தருவதாம்; ஆங்கு - அவ்வாறே, மந்திரம் - ஆலோசனை, வாயா விடின் - வாய்க்காதொழியின், இன்னா - (அரசர்க்குத்) துன்பந்தருவதாம், எ-று.

க-ரை. சுற்றமில்லாத மனையினழகும், தந்தையில்லாத புதல்வனழகும், பார்ப்பார் வீட்டிற் பார்ப்பாரல்லாதா ரிருந்துண்ணுமுணவும், மந்திராலோசனையில்லாத காரியமுந் தீயவென்பதாம்.

வி-ரை. பந்தம் - கட்டு; அது இங்கு உறவினர்க்காயிற்று. உறவினரில்லாத மனைவாழ்க்கை எவ்வளவு அழகாயிருப்பினும் அது பயனற்றதென்பது தோன்ற'பந்த மில்லாத மனையின் வனப்பின்னா' என்றார். புதல்வன் - புதல்போற் கிளைப்பவன் என்பது பொருள். அந்தணர் - அழகிய தட்பமுடையார்; வேதத்தி னந்தத்தை யணுவோர் எனினுமாம். மந்திரம்-சூழ்ச்சி (ஆலோசனை). ஊன்ம் - முதனிலை திரிந்த தொழிற்பெயர். (உ)

பார்ப்பாரிற் கோழியு நாயும் புகலின்னா
வார்த்த மனைவி யடங்காமை நன்கின்னா
பாத்தில் புடவை யுடையின்னா தாங்கின்னா
காப்பாற்றா வேந்த னுலகு.

ப-ரை. பார்ப்பார் - வேதியரது, இல் - வீட்டில், கோழியும் நாயும் - கோழிகளும் நாய்களும், புகல் - நுழைதல், இன்னா - துன்பந்தருவதாம்; ஆர்த்த - (தாலி) கட்டின, மனைவி - மனையாள், அடங்காமை - (கணவனுக்கு) அடங்கா தொழுகுதல், நன்கு இன்னா - மிகவுந் துன்பந்தருவதாம்; பாத்து இல் - இணையில்லாத, புடவை - புடவையை, உடை-உடுத்தல், இன்னா - துன்பந்தருவதாம்; ஆங்கு - அவ்வாறே, காப்பாற்றா - காக்கமாட்டாத, வேந்தன் - அரசனது, உலகு - ஊர்கள், இன்னா - துன்பமுடையனவாம், எ-று.

க-ரை. பார்ப்பார் வீட்டிற் கோழியும் நாயும் புகுதலும், அடங்காத மனைவியை யொருவ னுடைத்தா யிருத்தலும், தனிப்புடவை யுடுத்தலும், காப்பாற்றாத அரசனூரி லிருத்தலும் தீயவென்பதாம்.

வி-ரை. ஆர்த்தல் - கட்டுதல். மனைவியென மேல் வருதலால் ஆர்த்தல் என்பதற்குத் தாலிகட்டின எனப் பொருளுரைக்க லாயிற்று. அடங்காமை-எதிர்மறைத் தொழிற்பெயர். ஒற்றைப்புடவை

யுடுக்கலாகா தென்பதுதோன்ற, 'பாத்தில் புடைவை யுடையின்னா' என்றார். உடை - தொழிற்பெயர். (௬)

கொடுங்கோன் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா
கடுமொழியாளர் தொடர்பின்னா வின்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு.

ப-ரை. கொடுங்கோல் - கொடுங்கோல் செலுத்துகிற, மறம் - கொலைத் தொழிலையுடைய, மன்னர்கீழ் - அரசரது குடையின்கீழ், வாழ்தல் - தழ்வாழ்தலானது, இன்னா - துன்பமாம்; புணை இன்றி - தெப்பமில்லாமல், நெடு நீர் - பெருநீரை, நீந்துதல் - நீந்திக் கடத்தல், இன்னா - துன்பந் தருவதாம்; கடுமொழி ஆளர் - வன்சொல் வழங்குவோருடைய, தொடர்பு - நட்பு, இன்னா-துன்பந் தருவதாம்; உயிர்க்கு - உயிர்களுக்கு, தடுமாறிவாழ்தல் - தடுமாற்றமடைந்து வாழ்தலானது, இன்னா - துன்பந்தருவதாம், எ-று.

க-ரை. கொடுங்கோ லரசர்கீழ் வாழ்தலும், பெருவெள்ளத்தில் தெப்பமில்லாமல் நீந்துதலும், வன்சொல்லுடையாரது நட்பும், தடுமாறி வாழ்தலும் தீங்கென்பதாம்.

வி-ரை. கோடுங்கோல் கொடுங்கோல் எனக் குறுகிற்று. கொடுங்கோல் என்பதற்கு நீதிநெறி தவறின அரசாட்சி யென்பது பொருள். தொடர்பு - சம்பந்தம் எனினுமாம். தடுமாறுதல் - மனங் கலங்குதல். எக்காலத்துந் துன்பமே தருதலால் 'கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தலின்னா' என்றும், கைந்நீத்தினால் அபாயம் நேரிடுமாதலால், 'நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா'என்றும், அவமானத்துக் கேதுவாதலால், 'கடுமொழி யாளர் தொடர்பின்னா' என்றும், மனக்கலக்கத்தோடு வாழ்தல் உயிர்க்கின்பந்தாராதாதலால் 'தடுமாறி வாழ்த லுயிர்க்கின்னா' என்றும் கூறினார். கடுமொழி-துன்பப்பயன் தருஞ்சொல். (௭)

எருதி லுழவர்க்குப் போகீர மின்னா
கருவிகண் மாறிப் புறங்கொடுத்த லின்னா
திருவுடை யாரைச் செறலின்னா வின்னா
பெருவலியார்க் கின்னா செயல்.

ப-ரை. எருது இல் - எருதில்லாத, உழவர்க்கு - உழுதொழிலாளர்க்கு, போகு ஈரம் - செவ்விகழியும் ஈரம், இன்னா - துன்பந் தருவதாம்; கருவிகள் - (கையிற்பிடித்த) படைகளின் தொழில்கள், மாறி-மாறுபட்டு, புறங்கொடுத்தல்-(பகைவர்க்குப்)புறங்கொடுத்தல்-இன்னா - துன்பந் தருவதாம்; திரு உடையாரை - செல்வமுடையவரை, செறல் -பகைத்துக்கொள்ளுதல், இன்னா-துன்பந்தருவதாம்; பெரு வலியார்க்கு - பெருவலியை யுடையவர்க்கு, இன்னா செயல்- துன்பஞ்செய்தல், இன்னா - துன்பந்தருவதாம், எ-று.

க-ரை. எருதில்லாத வுழவர் முதலியோர்க்குச் செவ்விகழியும் ஈரமுதலியவும் தீயவென்பதாம்.

வி-ரை. எருது - உழுமாடு. உழவர்-உழுதொழில் செய்வோர். செவ்வி - பதம். கையிற் பிடித்த ஆயுதங்களால் அவ்வவற்றின் தொழில்களைச் செய்வித்துப் பகைவரை வெல்லாது புறங்கொடுத்தல் அரசர்க்குத் தீங்கு ஆதலால், 'கருவிகள் மாறிப் புறங்கொடுத்த லின்னா' என்றார். திரு - செல்வம். செறல் - செறநினைத்தல். தம்மின் வலியார்க்குத் தீங்கு செய்தால் அவர் அதற்குப் பதின்மடங்கு தீங்கு செய்யவல்லராதலால் 'பெருவலியார்க் கின்னாசெயல் இன்னா' என்றார். (ரு)

சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா
புரைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா
முறையின்றி யாளு மரசின்னா வின்னா
மறையின்றிச் செய்யும் வினை.

ப-ரை. சிறை இல் கரும்பினை - வேலியில்லாத கரும்பை, காத்து ஓம்பல்-காப்பாற்றுதல், இன்னா - துன்பந்தருவதாம்; புரை சேர்-துவாரங்கள் பொருந்திய, பழங்கூரை-பழைய கூரை வீட்டில், சேர்ந்து ஒழுகல் - பொருந்தி வாழ்தல், இன்னா - துன்பந்தருவதாம்; முறை இன்றி ஆளும் - செங்கோல் முறைமையில்லாமல் ஆளுகிற, அரசு - அரசாட்சி, இன்னா - துன்பந் தருவதாம் ; மறை இன்றி - மந்திராலோசனை யில்லாமல், செய்யும் வினை - செய்யுங் காரியம்; இன்னா - துன்பந்தருவதாம், எ-று.

க-ரை. வேலியில்லாத கரும்பைக் காப்பாற்றுதலும், ஒழுக்கல் வீட்டில் வாழ்தலும், முறைகெட ஆளுமரசாட்சியும், ஆலோசனை யில்லாமற் செய்யுங்காரியமும் தீயவென்பதாம்.

வி-ரை. வேலியில்லாத கரும்பைக் காத்தலிற் பயனில்லை யாதலால் 'சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா' என்றும், ஒழுக்கல் வீட்டிலிருத்தல் எப்பொழுதும் அபாயத்துக் கேதுவாதலால், 'புரைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா' என்றும், முறைசெய்யாத அரசன் கெடுதல் திண்ணமாதலால் 'முறையின்றி யாளு மரசின்னா' என்றும், எண்ணாது செய்யும் வினை முட்டின்றி முடிவுபெறா தாதலால், 'மறையின்றிச் செய்யும் வினை இன்னா' என்றும் கூறினார். பயனின்றென்பதை வற்புறுத்தற்குக் காத்து என்றமையாது ஓம்பல் என்றும் கூறினார். (௬)

அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா
மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுக லின்னா
இடும்பை யுடையார் கொடையின்னா வின்னா
கொடும்பா டுடையார்வாய்ச் சொல்.

ப-ரை. அற மனத்தார் - தருமசிந்தை யுள்ளவர்கள், கூறும் - சொல்லுகிற, கடுமொழியும் - கடுஞ் சொல்லும், இன்னா - துன்ப

தருவதாம்; மற மனத்தார் - வீரத்தன்மையுள்ள நெஞ்சுடையவர், ஞாட்பில் - போரில், மடிந்து ஒழுகல் - சோம்பியிருத்தல், இன்னா - துன்பந்தருவதாகும்; இடும்பை உடையார் - (வறுமையால்) துன்புறுவோர் செய்யும், கொடை - வண்மை, இன்னா - துன்பந் தருவதாம்; கொடும்பாடு உடையார் - கொடும்பாடுடையவரது, வாய்ச்சொல் - வாய்ச்சொற்களும், இன்னா - துன்பந் தருவனவாம், எ-று.

க-ரை. தருமசிந்தை யுள்ளவர்கள் சொல்லுங் கடுஞ்சொல்லும், வீரர் போர்முகத்தில் சோம்பியிருத்தலும், வறியர் கொடையும், நடுவுநிலைமை யில்லாதவரது சொல்லும் தீயவென்பதாம்.

வி-ரை. தருமசிந்தை யுள்ளவர் வாயிற் கடுமொழி யுண்டாதல் தீதாதலால் 'அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா' என்றும், வீரர் போர்முகத்தில் சோம்பியிருத்தல் தீதாதலால், 'மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுக லின்னா' என்றும், வறிஞர் கொடையுடைமை விரும்பின் அது முற்றுறாதாதலால், 'இடும்பையுடையார் கொடை யின்னா' என்றும், கொடியாரது சொல் துன்பந்தருவ தாதலால், 'கொடும் பாடுடையார் வாய்ச் சொல் இன்னா' என்றும் கூறினார். கடுமொழி - நஞ்சுபோலுஞ் சொல் எனினுமாம். ஞாட்பு - போர்க்களம். மடிதல் - சோம்பியிருத்தல். கொடை - தொழிற்பெயர். கொடும்பாடு - ஒரு சொல்லாய் கொடுமையெனப் பொருள்பட்டு நின்றது. கொடுமை - நடுவுநிலைமையின்மை. இது,

"தேமென்கிளவிதன்பங்கத்திறையுறைதில்லையன்னீர்
பூமென்றழையும்மம்போதுங்கொள்ளீர்தமியேன்புலம்ப
வாமென்றருங்கொடும்பாடுகள்செய்துநுங்கண்மலராங்
காமன்கணைகொண்டலைகொள்ளவோமுற்றக்கற்றதுவே"

என்னுந் திருக்கோவைச் செய்யுளானும் அதனுரையானும் இனிது விளங்கும் அவரதுவாய் நன்மொழியின் றியாதென்ப துணர்த் தற்கு வாய்ச்சொல் என மிகைபடக் கூறினார். (எ)

ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா
நாற்ற மிலாத மலரி னழகின்னா
தேற்ற மிலாதான் றுணிபின்னா வாங்கின்னா
மாற்ற மறியா னுரை.

ப-ரை. ஆற்றல் இலாதான் - (பகைவரை வெல்லும்) வலியில்லாதவன், பிடித்த படை - கையிற்பிடித்த ஆயுதமானது, இன்னா - துன்பந் தருவதாம்; நாற்றம் இல்லாத - மணமில்லாத, மலரின் - பூவினது, அழகு - அழகானது, இன்னா - துன்பந்தருவதாம்; தேற்றம் இலாதான் - தெளிவில்லாதவன், துணிபு - ஒருகாரியஞ் செய்யத் துணிதல், இன்னா - துன்பந் தருவதாம்; ஆங்கு - அவ்வாறே, மாற்றம் அறியான் - பேச அறியாதவனது, உரை - சொல்லானது, இன்னா - துன்பந்தருவதாம், எ-று.

க-ரை. வலியில்லாதவன் பிடித்த ஆயுதமும், மணமில்லாத மலரினழகும், தெளிவில்லாதவனது காரியத்துணிபும், சொல்லவறியாதவனது சொல்லும் தீயவென்பதாம்.

வி-ரை. வலியில்லாதவன் பிடித்த ஆயுதம் பயன்படாதாதலால் 'ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா' என்றும், மணமற்ற மலரை யொருவரும் விரும்பாராதலால் 'நாற்ற மிலாதமலரி னழகின்னா' என்றும், மனத்தெளிவில்லாதான் ஒரு காரியத்தைத் துணிந்து செய்யத் தொடங்குதல் தீங்காதலால் 'தேற்ற மிலாதான் றுணிபின்னா' என்றும், எதிரியின் சொற்பொரு ளறியாதவன் சொல் தீமை பயக்கு மாதலால் 'மாற்ற மறியா னுரை யின்னா' என்றுங்கூறினர். படை-தொழிலாகுபெயர், படுத்தற்றொழிலையுடையது; படுத்தல்-கொல்லுதல். நாற்றம்-இங்கு நறுநாற்றத்தைக் குறித்தது. தேற்றம் - தொழிற்பெயர்; துணிபு - நிச்சயித்தல். மாற்றம்-சொல்; இது சொற்பொருளை யுணர்த்திற்று. (அ)

பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா
நகையாய நண்பினார் நாரின்மை யின்னா
இகலி னெழுந்தவ ரோட்டின்னா வின்னா
நயமின் மனத்தவர் நட்பு.

ப - ரை. பகல்போலும் நெஞ்சத்தார் - சூரியன்போன்ற மனத்தையுடையவர், பண்பு இன்மை-நற்குணமில்லாதிருத்தல், இன்னா - துன்பந்தருவதாம்; நகை ஆய நண்பினார்-நகைத்தற்குரிய நண்பராது, நார் இன்மை - அன்பில்லாமை, இன்னா - துன்பந் தருவதாம்; இகலின் எழுந்தவர் - போர்செய்ய வெழுந்தவர், ஓட்டு-புறங்காட்டியோடுதல், இன்னா - துன்பந் தருவதாம்; நயம் இல் மனத்தவர் - விருப்பமில்லாத மனத்தை யுடையவரது, நட்பு - நட்பானது, இன்னா-துன்பந்தருவதாம், எ - று.

க - ரை. பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மையும், நகையாகிய நண்புடையாரது அன்பின்மையும், போர்க்கெழுந்தவர் ஓடுதலும், நீதியில்லாதவரது நட்பும் தீயவென்பதாம்.

வி - ரை. களங்கமற்ற மனத்தை யுடையவர் நற்குணமாறுதல் தீமையாதலால் 'பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா' என்றும், அன்பிலார் செய்யும் நகை நட்புத்தீமை பயத்தலால் 'நகையாய நட்பினார் நாரின்மை யின்னா' என்றும், போர்க்கென் றெழுந்தவர் முதுகுகொடுத் தோடுதல் அவமானமாதலால் 'இகலி னெழுந்தவ ரோட்டின்னா' என்றும், விருப்பமில்லாத மனத்தாரது நட்புத் துன்பமே தருதலால் 'நயமில் மனத்தவர் நட்பு இன்னா' என்றும் கூறினார். ஓட்டு - தொழிற்பெயர்; ஓடுதல். பகல் - நுகத்தின் நடுவாணியெனினுமாம்; இது ஒருபாற் கோடாமையாகிய நடுவுநிலைமையைக் குறிக்கும். (௯)

கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா
வள்ளல்க ளின்மை பரிசிலர்க்கு முன்னின்னா
வண்மை யிலாளர் வனப்பின்னா வாங்கின்னா
பண்ணில் புரவி பரிப்பு.

ப - ரை. கள் இல்லா - கள் இல்லாத, மூதூர்-பழையவூர்கள், களி கட்கு - கள்ளுண்டு களிப்பார்க்கு, நன்கு இன்னா-மிகவும் துன்பந்தருவதாம்; வள்ளல்கள் இன்மை - வள்ளல்களில்லாதிருத்தல், பரிசிலர்க்கு - இரவலர்க்கு, முன் இன்னா - மிகவுந் துன்பந் தருவதாம்; வண்மை இலாளர் - கொடையில்லாதாருடைய, வனப்பு-அழகானது, இன்னா - துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, பண் இல் - கல்லணையில்லாத, புரவி - குதிரையானது, பரிப்பு - தாங்குதல், இன்னா - துன்பந்தருவதாம், எ - று.

க - ரை. களிகட்குக் கள்ளில்லாத வூரும், பரிசிலர்க்கு வள்ளல்களில்லாமையும், கொடையில்லாதவ ரழகும், பண்ணில்லாத குதிரையின் செலவும் தீயவென்பதாம்.

வி - ரை. களி - கள்ளுண்டுகளிப்பவன்; இவனுக்குக் கள்ளிலா வூர் தீதாதலால் 'கள்ளிலா மூதூர் களிகட்கு நன்கின்னா' என்றும், கொடுப்பவரின்மை வறியார்க்குத் தீதாதலால் 'வள்ளல்க ளின்மை பரிசிலர்க்கு முன்னின்னா' என்றும், ஈகையிலாதவரது அழகு பயனுடைத்தன் றாதலால் 'வண்மை யிலாளர் வனப்பின்னா' என்றும், கல்லணையில்லாத குதிரை ஒருவனைத் தாங்குதல் முடியாதாதலால் 'பண்ணில் புரவி பரிப்பு இன்னா' என்றும் கூறினார். வள்ளல் - வரையாது கொடுப்போன். பரிசிலர் - யாசகர். கல்லணை - குதிரைமேற் றவிசு. பரிப்பு - தொழிற்பெயர். (௧0)

பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா
விருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக் கின்னா

வருளில்லார் தங்கட் செலவின்னா வின்னா
பொருளில்லார் வண்மை புரிவு.

ப-ரை. பொருள் உணர்வார் - பொருளறிவோர், இல் வழி - இல்லாத இடத்தில், பாட்டு உரைத்தல் - பாட்டுப்பாடுதல், இன்னா—, இருள் கூர் - இருள்மிகுந்த, சிறு நெறி - சிறுவழியில், தனி போக்கு - தனியே போகுதல், இன்னா—, அருள் இல்லார்கண் - அன்பில்லாதவரிடத்தில், செலவு - செல்லுதல், இன்னா—; பொருள் இல்லார் - பொருளில்லாதவர், வண்மை புரிவு - கொடைத்தொழிலை விரும்புதல், இன்னா—, எ-று.

க-ரை. பொருளறிவா ரில்லாதவிடத்தில் பாட்டுரைத்தலும், இருள் மிகுந்த சிறுவழியில் தனியே செல்லுதலும், இரக்கமில்லாதவரிடத்து ஒன்றைப் பெறவிரும்பிச் செல்லுதலும், பொருளில்லாதவர் கொடையை விரும்புதலும் தீயவென்பதாம்.

வி-ரை. பொருளறிவா ரில்லாதவிடத்து ஒருவன் தான்பாடின பாட்டைச் சொல்லுதல் பயன்படாதாதலால் 'பொருளுணர்வா ரில்வழிப்பாட்டுரைத்த லின்னா' என்றும், இருண்ட சிறுவழியில் ஒருவன் தனியேபோதல் அவனுக்குத் தீமைபயக்குமாதலால், 'இருள்கூர் சிறுநெறிதான் றனிப்போக் கின்னா' என்றும், அன்பில்லாரிடத்திற்குச் சென்றால் அவர் அவமதித்தலால் மானக் கேடுண்டாமாதலால், 'அருளிலார் தங்கட் செலவின்னா' என்றும், பொருளிலாதவன் ஈகையைவிரும்புதல் இன்பந்தராதாதலால், 'பொருளிலார் வண்மை புரிவு இன்னா' என்றும் கூறினர். பாட்டு-கவி. கூர்தல்-மிகுதல். சிறுநெறி-நெருக்கமானவழி. போக்கு - தொழிற்பெயர் தங்கண் என்பதில் கண் ஏழனுருபு இடப்பொருட்டு. செலவு, புரிவு என்பன தொழிற்பெயர்கள்.

(கக)

உடம்பா டிலாத மனைவிதோ ளின்னா
விடனில் சிறியாரோ டியாத்தநண் பின்னா
விடங்களி யாளர் தொடர்பின்னா வின்னா
கடனுடையார் காணப் புகல்.

ப - ரை. உடம்பாடு இலாத - தன்னோடு பொருத்தமில்லாத, மனைவி - மனையாளது, தோள் - தோள்சேர்தல், இன்னா—; இடன் இல் - மனதில் விரிந்த இடமில்லாத, சிறியாரோடு - சிறியவரோடு, யாத்த நண்பு - பிணித்த நட்பானது, இன்னா—; விடம்-விடம்போன்ற, களியாளர் - கள்ளுண்டு களிப்பவரோடு, தொடர்பு - தொடர்ச்சியுடைத்தாதல், இன்னா—; கடன் உடையார்-கடன் கொடுத்தவர், காண-பார்க்கும்படி, புகல்-(அவர்க்கெதிரே) செல்லுதல், இன்னா—, எ - று.

க - ரை. உடம்பாடில்லாத மனைவியைச் சேர்தலும், சிறுநெஞ்சரோடு நட்பும், களியரோடு சம்பந்தமும், கடன்கொடுத்தவர் கண்ணுக்கெதிரே செல்லுதலும் தீயவென்பதாம்.

வி - ரை. மனவொற்றுமை யில்லாத மனையாளைச் சேர்தலில் இன்பமில்லையாதலால் 'உடம்பாடிலாத மனைவிதோ ளின்னா' என்றும், சிறுமனத்தர் நட்புத் துன்பந்தருத லொருதலையாதலால் 'இடனில் சிறியாரோ டியாத்த நண்பின்னா' என்றும், களிகள் தொடர்பு தீமை பயக்குமென்ப துண்மையாதலால் 'விடங்களியாளர் தொடர் பின்னா' என்றும், கடன்றந்தவர்க் கெதிரே சென்றால் அவர் கடன் கொடுத்த பொருளைக்கேட்பதனால் துன்பம் விளையுமென்பதுபற்றி 'கடனுடையார் காணப் புகல் இன்னா' என்றும் கூறினார். உடம்பாடு - உடம்படுதல். மனைவியைப் புணர்தல் என்பது மனைவிதோள் என்றது இடக்கரடக்கல்; இது தகுதி வழக்கு மூன்றனுளொன்று இது,

"நலக்குரியார் யாரெனி னாமநீர்வைப்பிற்
பிறர்க்குரியா டோடோயாதார்"

"தாம்வீழ்வார்மென்றோட் டுயிலினினிதுகொல்
தாமரைக்கண்ணானுலகு"

"தந்நலம்பாரிப்பார் தோயார்தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார்தோள்"

"நிறைநெஞ்சமில்லவர் தோய்வர்பிறநெஞ்சிற்
பேணிப்புணர்பவர்தோள்".

"மெல்லியாடோள்சேர்".

என்றற்றொடக்கத் தான்றோர் செய்யுட்களா லினிது விளங்குதல் காண்க. இடன் இடம் என்பதன் போலி. (கஉ)

தலைதண்ட மாகச் சுரம் போதலின்னா
வலைசுமந் துண்பான் பெருமித மின்னா
புலையுள்ளி வாழ்த லுயிர்க்கின்னா வின்னா
முலையில்லாள் பெண்மை விழைவு.

ப-ரை. தலை தண்டம் ஆக-சிரச்சேதமாகும்படி, சுரம்போதல்-பாலைநிலத்திற்செல்லுதல், இன்னா—; வலை சுமந்து-வலையைச்சுமந்து, உண்பான்-(அதனால்) உண்டுஉயிர்வாழ்வோனது, பெருமிதம்-செருக்கானது, இன்னா— ; புலை உள்ளி வாழ்தல் - புலாலுணவை விரும்பி வாழ்தல், உயிர்க்கு-எல்லாவுயிர்களுக்கும், இன்னா—; முலை இல்லாள்-முலையில்லாதவளாகிய ஒருமாது, பெண்மை - பெண்தன்மையை, விழைவு - விரும்புதல், இன்னா—, எ - று.

க-ரை. தலையிழக்கச் சுரத்திற் செல்லுதலும், வலைசுமந்து சீவநஞ்செய்பவனது பெருமிதமும், புலையை நினைத்து வாழ்தலும், முலையில்லாதவள் பெண்தன்மையை விரும்புதலும் தீயவென்பதாம்.

வி-ரை. மனித்தர் வழங்கரும் வெங்கொடும் பாலைவழி யேகல் தலையிழத்தற் கேதுவாதலால் 'தலைதண்டமாகச் சுரம்போதலின்னா' என்றும், இழிதொழிலாகிய வலைசுமத்தல் செய்வோன் செருக்குதல் அவனுக்குப் பிறரால் நகைக்கப்பட்டுத் தீமை தருதலால் 'வலைசுமந் துண்பான் பெருமித மின்னா' என்றும், புலாலுணவு உடம்பு பருக்கைக் கேதுவாயினும் பாவமாய் உயிர்க்குத் தீமை பயத்தலால் 'புலையுள்ளி வாழ்த லுயிர்க்கின்னா' என்றும், தனமில்லா மாது தன்பெண்மைக்கனமடையாளாதலால் 'முலையிலாள் பெண்மை விழைவின்னா' என்றும், கூறினர். புலாலுணவு உடம்பு பெருக்கைக் கேதுவென்பது,

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙன மாளு மருள்."

என்பதனாலும், தனமில்லா மாது பெண்மைக் கனமடையாளென்பது,

"கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று."

என்பதனாலும் உணர்க. (கூ)

மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்னா
துணிவில்லார் சொல்லுந் தறுகண்மை யின்னா
பணியாத மன்னர்ப் பணிவின்னா வின்னா
பிணியன்னார் வாழு மனை.

ப - ரை. மணி இல்லா - மணியை யணியாத, குஞ்சரம்-யானையை, வேந்து - அரசன், ஊர்தல் - மேற்கொண்டு செலுத்தல், இன்னா—, துணிவு இல்லார்-துணிவில்லாதவர்கள், சொல்லும்-சொல்லுகிற, தறுகண்மை - வீரவார்த்தைகள், இன்னா—, பணியாத மன்னர் - (முன்னே) வணங்காத மன்னரது, பணிவு - வணக்கமானது,

இன்னா—; பிணி அன்னார் - பிணிபோன்ற மனைவியர், வாழும்-வாழ்கின்ற, மனை - வீடானது, இன்னா—, எ - று.

க - ரை. மணியில்லாத யானை யேறுதலும், துணிவில்லாதவன் சொல்லும் வீரவார்த்தைகளும், பணியாத வேந்தர் பணிதலும், பிணி போலு மனைவியர் வாழும் வீடும் தீயவென்பதாம்.

வி - ரை. அரசன் தன் வருகையை முன்னே யறிவிக்குங் குறியாகிய மணியணியாத யானை யேறிவருதல் அழகன்றாதலால் 'மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்னா' என்றும், துணிவில்லாதவன் சொல்லும் வீரச்சொற்களாற் பயனிலவாதலால் 'துணிவில்லார் சொல்லுந் தறுகணமை யின்னா' என்றும், முன்பொருகாலமும் வணங்காத மன்னர் வணங்குதல் தீமைகுறித்தாதலால் 'பணியாத மன்னர் பணிவின்னா' என்றும், கணவனது வழிபாட்டின் மனமில்லாத மனைவியர்வாழு மனையிலிருத்தல் துன்பமேயாதலால் 'பிணியன்னார் வாழு மனை யின்னா' என்றும் கூறினார். மணி-இருபக்கத்திலும் அசைந்தொலித்துக்கொண்டு வரும்படி யானைக்குக கட்டுமணி.

"வைந்நுதிபொருத வடுவாழ்வரிநுதல்
வாடாமாலையோடையொடுதுயல்வரப்
படுமணியிரட்டு மருங்கிற்கடுநடைக்
கூற்றத்தன்னமாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந்தன்னவேழம்".

என்ற மேலோர் வாக்கினாலும் யானையானது தெய்வத்தையேனும் அரசனையேனும் தாங்கிச்செல்லும்போது இருமருங்கு மசை யொலி மணி யணிந்தே வருத லழகென்பது விளங்கும். பணியாத மன்னர் பணிவின்னா என்றது,

"தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னார்
அழுதகண் ணீரு மனைத்து".

என்றதைக் கருதிப்போலும். (கச)

வணரொளி யைம் பாலார் வஞ்சித்த லின்னா
துணர் தூங்கு மாவின் படுபழ மின்னா
புணர் பாவை யன்னார் பிரிவின்னா வின்னா
வுணர்வா ருணராக் கடை.

ப - ரை. வணர்-குழற்சியையும், ஒளி-ஒளியையுமுடைய, ஐ பாலார் - கூந்தலையுடைய மாதர், வஞ்சித்தல் - தம்கணவரை வ சனை செய்தல், இன்னா—; துணர் - கொத்தாக, தூங்கும்-தொங் கிற, மாவின் - மாமரத்தினின்று, படு - விழுகின்ற, பழம் - கனிய னது, இன்னா—; புணர்-தம்மைப்புணர்ந்த, பாவை அன்னார்-பாவை போல்வாராகிய மாதரது, பிரிவு - பிரிவானது, இன்னா—, உண வார் - அறியுந்தன்மையர், உணராக்கடை-அறியாராகிய விடத்தில் இன்னா—, எ - று.

க - ரை. மாதர் கணவரை வஞ்சித்தலும், விழுந்த மாங்கனி யும், மாதரது பிரிவும், அறிபவர் அறியாமையும் தீயவென்பதாம்.

வி - ரை. மாதர் தம் கணவரைப் பேணாது வஞ்சிப்பாராயின் அதுபோலுந் துன்பம் அக்கணவர்க்கு வேறொன்றில்லை யாதலால் 'வணரொலி யைம்பாலார் வஞ்சித்த லின்னா' என்றும், சிக்கம் முத லியவற்றால் விறக்கப்பட்ட மாங்கனி சிறந்தாற்போலக் கனிந்து தானே நிலத்தில் விழுந்த கனி சிறவாமைபற்றி, 'துணர்தூங்கு மாவின் படுபழ மின்னா' என்றும், தாம் மணம்புணர்ந்த பாவைபோ லழகுடையவாகிய மாதரை ஆடவர் பிரிதல் துன்பத்துக் கேதுவா தலால் 'புணர்பாவை யன்னார் பிரிவின்னா' என்றும், சொல்வதன் முன்பே குறிப்பினால் உட்கருத் தறியுந்தன்மையர் சொல்லியும் அறி யாராயின், அது துன்பந் தருதல்பற்றி 'உணர்வா ருணராக்கடை யின்னா' என்றும் கூறினார். வணர் - நெரிவு. ஐம்பால்-ஐந்து பகுப்பி னையுடைய கூந்தல். ஐந்து பகுப்பாவன:-குழல், கொண்டை, சுருள், பனிச்சை, முடி, என்பன. இவற்றுள், மயிரைச் சுருட்டி முடித்தல்

குழல் என்றும், பக்கத்தின் முடித்தல் கொண்டையென்றும், பின்னேசெருகல் சுருள் என்றும், பின்னி விடுதல் பனிச்சையென்றும், உச்சியிற் சேர்த்து முடித்தல் முடியென்றும் சொல்லப்படும். (கரு)

புல்லார் புரவி மணியின்றி யூர்வின்னா
கல்லா ருரைக்குங் கருமப் பொருளின்னா
வில்லாதார் நல்ல விருப்பின்னா வாங்கின்னா
பல்லாரு ணாணப் படல்.

ப-ரை. புல் ஆர்-புல்லை யுண்ணுகிற, புரவி-குதிரையை, மணி இன்றி-மணியில்லாமல், ஊர்வு-ஏறுதல், இன்னா—; கல்லார் உரைக்கும் - கல்வி கல்லாதவர் சொல்லுகிற, கருமப்பொருள் - காரியப் பயன், இன்னா—; இல்லாதார்-பொருளில்லாதவர், நல்ல - நல்லவை யாகிய தருமங்களை, விருப்பு - விரும்புதல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, பல்லாருள் - பலர் நடுவே, நாணப்படல் - நாணப்படுதல், இன்னா—, எ - று.

க-ரை. மணியில்லாத குதிரையி லேறுதலும், கல்லாதார் சொல்லுங் காரியமும், வறியவன நல்லவற்றை விரும்புதலும், பலரானும் நாணப்படுதலும் தீயவென்பதாம்.

வி-ரை. மணியின்றி யேறுகுதிரைக் கழகில்லை யாதலால் 'புல்லார் புரவி மணியின்றி யூர்வின்னா' என்றும், கல்லாதார் அறிவின்மையாற் சொல்லுங் காரியங்கள் உறுதியைத்தரா வாதலால் 'கல்லாதார் சொல்லுங் கருமப்பொரு ளின்னா' என்றும், உயர்ந்தபொருள்களைப் பொருளில்லாதவர் விரும்பின் அவை கிடையாமையாலுண்டாந்துன்ப மதிகமாதலால் 'இல்லாதார் நல்லவிருப்பின்னா' என்றும், பலர்க்கெதிரில் அவமானமடைந்து நாணுதல் மிகவுந் துன்பந் தருவதாதலால் 'பல்லாருணாணப் படல் இன்னா' என்றும் கூறினார். மணி-

கிங்கிணி ஊர்வு - தொழிற்பெயர். நல்ல என்பதற்கு நல்லவற்றைச் செய்ய விரும்புதல் எனினுமாம். (கசு)

உண்ணாது வைக்கும் பெரும்பொருள வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா
கண்ணி லொருவன் வனப்பின்னா வாங்கின்னா
வெண்ணிலான் செய்யுங் கணக்கு.

ப-ரை. உண்ணாது வைக்கும் - தான் நுகராமல் வைக்கிற, பெரும்பொருள் - பெரும்பொருளை, வைப்பு (புதைத்து) வைத்தல், இன்னா—; நண்ணா - மனம் பொருந்தாத, பகைவர் - பகைவரை, புணர்ச்சி - கூட்டல், நனி - மிகவும், இன்னா—; கண் இல் ஒருவன் - கண்ணில்லாதவொருவனது, வனப்பு-அழகானது, இன்னா—; ஆங்கு-அவ்வாறே, எண் இல்லான்-ஆலோசனையில்லாதவன், செய்யும் கணக்கு-ஒருகாரியஞ்செய்ய எண்ணும் எண்ணங்கள், இன்னா—, எ-று.

க-ரை. உண்ணாமல் புதைத்துவைக்கும் பொருளும், மனப் பொருத்தமில்லாத பகைவரைச் சேர்தலும், கண்ணில்லாதவனது அழகும், ஆலோசனை யில்லாதவன் ஒருகாரியஞ்செய்ய எண்ணுதலும் தீயவென்பதாம்.

வி-ரை. தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால்* 'உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா' என்றும், பகைவருறவு தீங்கு பயத்தலால் 'நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா' என்றும், குருடனழகு தனக்கும் பிறர்க்கும இன்பந் தராமையால் 'கண்ணிலொருவன் வனப்பின்னா' என்றும், ஆலோசனை யில்லாதவன் செய்யுங் காரியம் பழுதுபடு மாதலால் 'எண்ணிலான் செய்யுங் கணக்கு இன்னா' என்றும் கூறினார். வைப்பு - தொழிற்பெயர். (கஎ)

ஆன்றவிந்த சான்றோருட் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா

நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா வாங்கின்னா
வீன்றாளை யோம்பா விடல்.

ப-ரை. ஆன்று - (கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களால்) நிறைந்த, அவிந்த - மனமடங்கப்பெற்ற, சான்றோருள் - பெரியோர் நடுவே, பேதை புகல் - அறிவிலாதொருவன் பிரவேசித்தல், இன்னா —; மாணாறு - மயங்கி, இருண்ட போழ்தில் - இருண்ட காலத்தில், வழங்கல் - சஞ்சரித்தல், பெரிது இன்னா - மிகவும் துன்பந் தருவதாம்; நோன்று - பொறுத்து, அவிந்து வாழாதார்-மனமடங்கி வாழாதவர், நோன்பு - நோற்றல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, ஈன்றாளை - பெற்ற தாயை, ஓம்பாது விடல்-காப்பாற்றுமற் கைவிடுதல், இன்னா—, எ - று.

க-ரை. பெரியோர் நடுவே பேதை புகுதலும், இருட்காலத்தில் சஞ்சரித்தலும், பொறுமை யில்லாதவரது நோன்பும், பெற்றதாயைக் காப்பாற்றாது விடுதலும் தீயவென்பதாம்.

வி-ரை. சான்றோர் நடுவில் அறிவிலியொருவன் புகுதல் இருதிறத்தார்க்குந் துன்பந்தருதலால் 'ஆன்றவிந்தசான்றோருட் பேதை புகலின்னா' என்றும்' சந்த்யாகாலத திருளிற் சஞ்சரித்தல் துன்பத்துக் கேதுவாதலால் 'மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா' என்றும், பொறுமை யில்லாதவரது நோன்பு பலியாதாதலால் 'நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா' என்றும், பெற்ற தாயைக் காப்பாற்றாமைபோலப் பெரும்பாவம் வேறொன்றின்மையான் 'ஈன்றாளை யோம்பாவிடல் இன்னா' என்றும் கூறினார். ஆன்றவிந்த சான்றோருட் பேதைபுக லின்னா என்றதற்குதாரணம்:—

திருக்குறள்:

"கழாக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாத்துட் பேதை புகல்".

மான்று என்பதற்குப்பகுதி மால். பகலினிறுதியும் இரவின் முதலுமயங்குங் காலமாகிய சந்த்யாகாலத்தை 'மான்றிருண்டபோழ்து' என்றார். நோன்று என்பதற்குப் பகுதி நோல். நோன்பு - தவம். (கஅ)

உரனுடையா னுள்ள மடிந்திருந்த லின்னா
மறனுடை யாளுடையான் மார்பார்த்த லின்னா
சுரமரிய கானஞ் செலவின்னா வின்னா
மனவறி யாளர் தொடர்பு.

ப-ரை. உரன் உடையான் - அறிவுடையவன், உள்ளம் மடிந்திருத்தல் - மனமழிந்திருத்தல், இன்னா—; மறன் உடை - வீரத் தன்மையையுடைய, ஆள் உடையான் - ஆட்களை யுடையவன், மார்பு ஆர்த்தல் - மார்பைத்தட்டுதல், இன்னா—; சுரம் - சுரமாகிய, அரிய - செல்லுதற்கரிய, கானம் - காட்டில, செலவு - போதல், இன்னா—; மனம் வறியாளர் - மனவறுமை யுள்ளவரது, தொடர்பு - தொடர்ச்சியானது, இன்னா—, எ - று.

க-ரை. அறிவுடையவன் மனமடிந்திருத்தலும், வீரரை யுடையவன் மார்பைத் தட்டுதலும், சுரத்திற் செல்லுதலும், மனத்திருப்தி யில்லாதவரது நட்பும் தீயவென்பதாம்.

வி-ரை. அறிவுடையவன் அறிவிலான்போல மனமடிந்திருத்தல் தகாதாதலால் 'உரனுடையா னுள்ள மடிந்திருத்தலின்னா'என்றும், வீரரைத் தன்வசத்தி லுடையவன் அவர்களைக் கொண்டே எல்லா வெற்றிகளு மடையலாயிருக்க, தான் மார்தட்டுதல் மிகையாதலால் 'மறனுடை யாளுடையான் மார்பார்த்த லின்னா' என்றும், சுரத்திற் செல்லுதல் யாவர்க்குந் துன்பமே யாதலால் 'சுரமரிய கானஞ் செலவின்னா' என்றும், மனத்திருப்தி யில்லாதவர் தொடர்பால் ஒருகாலமும் இன்பமில்லையாதலால் 'மனவறியாளர் தொடர்பு

இன்னா' என்றும் கூறினார். உரம்-அறிவு; அது உரன்எனப் போலி யாயிற்று. (௧௧)

குலத்துப் பிறந்தவன் கல்லாமை யின்னா
நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா
நலத்தகையார் நாணாமை யின்னாவாங் கின்னா
கலத்தல் குலமில் வழி.

ப-ரை. குலத்து பிறந்தவன் - நற்குலத்திற் பிறந்தவன், கல்லாமை-கல்வி கல்லாதிருத்தல், இன்னா—; நிலத்து இட்ட - நிலத்தில் வித்தின, நல் வித்து - நல்ல வித்தானது, நாறாமை - முளையாதொழிதல், இன்னா—; நலத்தகையார் - நல்ல அழகினை யுடையவராகிய மாதர், நாணாமை - நாணாதொழுகுதல், இன்னா—; ஆங்கு அவ்வாறே, குலம் இல்வழி கலத்தல் - குலமில்லாத வழியிற் சேர்தல், இன்னா—; எ - று.

க-ரை. நற்குலத்தில் பிறந்தவன், கல்லாதிருத்தலும், நல்ல நிலத்தில் விதைத்தவிதை முளையாமையும், அழகிய மாதர் நாணமின்றி யொழுகுதலும், குலமில்லாத வழியிற் கலத்தலும் தீயவென்பதாம்.

வி-ரை. நற்குலத்திற் பிறந்தவன் கல்வி கல்லாதிருத்தல் துன்பத்துக்கேதுவாதலால் 'குலத்துப்பிறந்தவன் கல்லாமையின்னா' என்றும், மண்ணிலிட்டவித்து முளையாதாயின் அதை யிட்டவனுக்குப் பெருந்துன்பந் தருமாதலால் 'நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா' என்றும், நாணுதற்குரிய நற்குணமுடையார் நாணாராயின் அது துன்பத்துக் கேதுவாமாதலால் 'நலத்தகையார் நாணாமை யின்னா'என்றும், முன்பின் கலவாத சந்ததியிற்கலத்தல் துன்பத்துக் கேதுவாதலால் 'கலத்தல் குலமில்வழி யின்னா' என்றும் கூறினார். கல்லாமையின்னா என மேல்வருதலால், குலம் நற்குலத்தைக் குறித்

தது. நாஞமை நாணுகமை எதிர்மறைத் தொழிற்பெயர்கள். நாறு தல்-முளைத்தல். வழி - சந்ததி. (௨0)

மாரிநாட் கூவுங் குயிலின் குரலின்னா
வீரமி லாளர் கடுமொழிக் கூற்றின்னா
மாரி வளம்பொய்ப்பி னூர்க்கின்னா வாங்கின்னா
மூரி யெருத்தா லுழவு.

ப - ரை. மாரி நாள் - மழைகாலத்தில், கூவும் - கூவுகிற, குயிலின் குரல் - குயிற்குரலானது, இன்னா—; ஈரம் இல்லாளர் - அன்பில்லாதவரது, கடு மொழிகூற்று - வன்சொற்பகுதியானது, இன்னா—; மாரி-மழையானது, வளம் குன்றின்-தான்பெய்தலாகிய வளங்குறையுமாயின், ஊர்க்கு-உலகத்திலுள்ளார்க்கு, இன்னா—; ஆங்கு - அவ்வாறே, மூரி எருத்தால் - முதிர்ந்த எருதைக்கொண்டு, உழவு - உழுதல், இன்னா—, எ-று.

க-ரை. மழைநாளில் கூவும் குயிற்குரலும், அன்பில்லாதவர் கூறும் கடுஞ்சொல்லும், ஊர்க்குமழைபெய்யாதிருத்தலும், கிழமாட்டைக் கட்டி யுழுதலும் தீயவென்பதாம்.

வி-ரை. குயிற்குரல்வெயிற்காலத்தன்றி மழைகாலத்தில் இன்பந் தராதாதலால் 'மாரிநாட் கூவுங் குயிலின் குரல் இன்னா' என்றும், அன்பில்லாதவர் சொல்லும் வன்சொல் துன்பந் தருமாதலால் 'ஈரமிலாளர் கடுமொழிக் கூற்றின்னா' என்றும், மழைபெய்யாதாயின் உலகத்துக் கின்பமென்பது சிறிதுமில்லை யாதலால் 'மாரிவளம் பொய்ப்பினூர்க் கின்னா' என்றும், கிழமாட்டைக் கொண்டுழுதலால் மிகுபயன் தராமையால் 'மூரியெருத்தா லுழவு இன்னா' என்றும் கூறினார். (௨௧)

ஈத்த வகையா லுவவாதார்க் கீப்பின்னா
பாத்துண வில்லா ருழைச்சென் றுணவின்னா

மூத்த விடத்துப் பிணிபின்னா வாங்கின்னா
வோத்திலாப் பார்ப்பா னுரை.

ப-ரை. ஈத்தவகையால் - கொடுத்தவளவைக்கொண்டு, உவவாதார்க்கு - சந்தோஷிக்காதவர்க்கு, ஈப்பு - கொடுத்தல், இன்னா—; பாத்து - பகிர்ந்து, உணவு - உண்ணுதல், இல்லார் உழை - இல்லாதவரிடத்து, சென்று - போய், உணவு - உண்ணுதல், இன்னா—; மூத்த இடத்து - வயதுமுதிர்ந்தகாலத்தில், பிணி-நோயுண்டாதல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, ஒத்து இல்லா - வேதாத்தியயநமில்லாத, பார்ப்பான் உரை-அந்தணன் சொல்லானது, இன்னா—, எ-று.

க-ரை. பெற்றவளவில் மனமகிழாதவனுக்குக் கொடுத்தலும், பகிர்ந் துண்ணுதவரிடத்துச் சென்றுண்ணுதலும், முதுமைப்பருவத்தில் நோயும், வேதாத்தியயந மில்லாத பார்ப்பானது சொல்லும் தீயவென்பதாம்.

வி-ரை. மனத்திருப்தி யில்லாதவர்களுக்குக் கொடுத்தலாற் பயனில்லை யாதலால் 'ஈத்த வகையா லுவவாதார்க் கீப்பின்னா' என்றும், பகிர்ந்துண்ணுத பாவிகளிடத் துண்பது பாவமாதலால் 'பாத்துண வில்லா ருழைச்சென் றுணவின்னா' என்றும், முதுமைப்பருவத்திற் பிணி மிகுதுன்பஞ் செய்யுமாதலால் 'மூத்தவிடத்துப் பிணியின்னா' என்றும், வேதமோதாத பார்ப்பான் சொல் பயனற்றதாதலால் 'ஒத்திலாப் பார்ப்பா னுரை இன்னா' என்றும் கூறினார். ஒத்து-வேதம். (உஉ)

பாரையின் மன்னரைக் காண்ட னனியின்னா
வூனைத்தின் றூனைப் பெருக்குதன் முன்னின்னா॥
தேனெய் புளிப்பிற் சுவையின்னா வின்னா
கான்யா றிடையிட்ட வூர்.

ப-ரை. யானை இல் - யானைப்படையை யுடையரல்லாத, மன்னரை - அரசரை, காண்டல் - காணுதல், நனி - மிகவும், இன்னா—; ஊனை தின்று - (பிறிதோருடம்பி னூனைத்) தின்று, ஊனை பெருக்குதல் - தன்னூனைப் பெருக்குதல், முன் இன்னா - மிகவுமின்னா—; தேன் நெய் புளிப்பின்-தேன் நெய் என்பன புளிக்குமாயின், சுவை-அந்த இன் புளிப்பாகிய சுவையானது, இன்னா—; கான்யாறு-காட்டாற்றின், இடையிட்ட ஊர் - இடையி லுண்டாக்கப்பட்ட வூரானது, இன்னா—; எ-று.

க-ரை. யானைப்படையில்லாத அரசரைப் பார்த்தலும், மாமிசத்தைத் தின்று மாமிசத்தைப் பெருக்குதலும், தேன் நெய் என்பன புளித்தலும், காட்டாற்றினிடையிட்ட வூரும் தீயவென்பதாம்.

வி-ரை. யானைப்படை நால்வகைப் படையுள்ளுஞ் சிறந்ததாதலாலும், அதனையுடைய னல்லாத ராஜதரிசநம் பயனற்றதாதலாலும் 'யானையின் மன்னரைக் காண்ட னனியின்னா' என்றும், புலாலுண்டல் மிகுபாவமாதலால் 'ஊனைத்தின் றூனைப் பெருக்குதல் முன்னின்னா' என்றும், தேன் நெய் என்பவை புளித்தால் அவை நஞ்சுக்குச் சமமாதலாற் 'தேனெய் புளிப்பிற் சுவையின்னா' என்றும், காட்டாற்றின் பெருக்குக் கெதிரேயிருக்கு மூருக்கு எக்காலத்தும் அபாயமே யாதலால் 'கான்யா றிடையிட்ட வூர் இன்னா' என்றும் கூறினர். (உ௩)

சிறையில்லா மூதூரின் வாயில்காப் பின்னா
துறையிருந் தாடை கழுவுத லின்னா
வறைபறை யாயவர் சொல்லின்னா வின்னா
நிறையில்லான் கொண்ட தவம்.

ப-ரை. சிறை இல்லா - மதிலில்லாத, மூதூரின் - பழைய வூரினது, வாயில் - வாயிலை, காப்பு - காவல் செய்தல், இன்னா—;

துறை இருந்து - நீர்த் துறையின்கண்ணிருந்துகொண்டு, ஆடைகழுவுதல் - ஆடை தோய்த்தல், இன்னா—; அறை - ஒலிக்கிற, பறை ஆயவர் - பறைபோன்றவராது, சொல் - சொற்கள், இன்னா—; நிறை இல்லான் - ஐம்பொறிகளைத் தடுக்கும் வலியில்லாதவன், கொண்ட- எடுத்துக்கொண்ட, தவம் - தவமானது, இன்னா—, எ-று.

க-ரை. மதிலில்லாதவூரின்வாயில்காத்தலும், தண்ணீர்த்துறையில் ஆடைதோய்த்தலும், பறையன்னவர் வாய்ச் சொல்லும், ஐம்பொறி வெற்றியில்லாதவன் மேற்கொண்ட தவமும் தீயவென்பதாம்

வி-ரை. மதிலில்லாத வூரில் வாயில் காப்பதனாற் பயனில்லையாதலால் 'சிறையில்லா மூதூரின் வாயில் காப்பின்னா' என்றும், தண்ணீர்த்துறையில் புடைவை தோய்த்தல் யாவரும் அருவருத்தற் கேதுவாதலாலும், மிருபாவமாதலாலும் 'துறையிருந் தாடை கழுவுத லின்னா' என்றும், வாயடக்க மில்லாதவருடையசொல் துன்பந் தருவதாதலால் 'அறைபறையாயவர் சொல்லின்னா' என்றும், இந்திரிய நிக்கிரக மில்லாதவன் மேற்கொண்ட தவம் நிறைவேறாதாதலால 'நிறையில்லான் கொண்ட தவம் இன்னா' என்றும் கூறினார். காப்பு - தொழிற்பெயர். நிறை - தொழிற்பெயர். நிறுத்தல்என்பது பொருள்; அதாவது பொறிகளைப் புலன்கள் மேற்செல்லாது தடுத்தல். (உ௪)

ஏமமில் மூதூ ரிருத்தன் மிகவின்னா
தீமை யுடையா ரயலிருத்த னன்கின்னா
காமமுதிரி னுயிர்க்கின்னா வாங்கின்னா
யாமென் பவரோடு நட்பு.

ப-ரை. ஏமம் இல்-காவலில்லாத, மூதூர்-பழையவூரில், இருத்தல்-வாழ்தல், மிக -மிகவும், இன்னா—; தீமை உடையார்-பொல்

லாங் குடையவரது, அயல் இருத்தல்-பக்கத்திலிருத்தல், நன்கு-மிகவும், இன்னா—; காமம் முதிரின் - காமநோய் மிகுந்தால், உயிர்க்கு-தன்னுயிர்க்கு, இன்னா—; ஆங்கு-அவ்வாறே, யாம் என்பவரோடு-யாமென்று அகங்கரிப்பவரோடு செய்த, நட்பு-நட்பானது; இன்னா—, எ-று.

க-ரை. காவலில்லாத ஊரிலிருத்தலும், தீயவரயலிலிருத்தலும், காமமுதிர்தலும், அகங்காரிகளோடு நட்பும் தீயவென்பதாம்.

வி-ரை. காவலில்லாத ஊரிலிருத்தல் அபாயத்துக் கேதுவாதலால் 'ஏமமின் மூதா ரிருத்தல் மிகவின்னா' என்றும், தீயவர் அயலிலிருத்தலும் தீதாதலால் 'தீமை யுடையா ரயலிருத்த னன்கின்னா' என்றும், அளவுகடந்த காமம் உடற்கேயன்றி உயிருக்குந் தீங்கு விளைத்தலால் 'காமமுதிரி னுயிர்க் கின்னா' என்றும், அகங்காரிகளுடைய நட்புக் கேட்டிற் கேதுவாதலால் 'யாமென்பவரோடு நட்பு இன்னா' என்றும் கூறினார். தீமையுடையா ரயலிருத்த லின்னாவென்றவிடத்து, அவரோடு கூடியிருத்தல் இன்னாவென்பது சொல்லாமே விளங்கும். (உ௬)

நட்டா ரிடுக்கண்கள் காண்ட னனியின்னா
வொட்டார் பெருமிதங் காண்டல் பெரிதின்னா
கட்டில்லா மூதா ருறையின்னா வாங்கின்னா
நட்டக வற்றினாற் சூது.

ப-ரை. நட்டார்-நட்டவரது, இடுக்கண்கள்-துன்பங்களை, காண்டல்-காணுதல், நனி-மிகவும், இன்னா—; ஒட்டார்-பகைவருடைய, பெருமிதம்-செருக்கை, காண்டல் - காணுதல், பெரிது - மிகவும், இன்னா—; கட்டு இல்லா-கட்டுப்பாடில்லாத, மூதார்-பழையவூரில், உறை-வாழ்தல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, நட்ட-நட்பட்ட, கவற்றினால்-கவற்றினலாடுகின்ற, சூது-சூதாட்டமானது, இன்னா-, எ-று.

க-ரை. நட்டாரது துன்பத்தைப் பார்த்தலும், பகைவரது பெருமிதத்தைப் பார்த்தலும், கட்டுப்பாடில்லாத ஊரில் வாழ்தலும், சூதாடுதலும் தீயவென்பதாம்.

வி-ரை. நட்டாரது துன்பங் கண்டுழி விரைந்து அதனை நீக்க முயலாது பார்த்திருத்தல் மிகுபாவமாதலால் 'நட்டா ரிடுக்கண் கள் காண்ட னனியின்னா' என்றும், பகைவரது செருக்கைக் கண்டால் மனம்பதைக்கு மாதலால் 'ஒட்டார் பெருமிதங் காண்டல் பெரிதின்னா' என்றும், கட்டுப்பா டில்லாத ஊரிலிருப்பின், நீதி கிடைப்ப தரிதாதலால் 'கட்டில்லா மூதூ ருறையின்னா' என்றும், சூதாட்டம் கெடுதிக்கெல்லாம் பிறப்பிடமாதலால் 'நட்ட கவற்றினாற் சூது இன்னா' என்றும் கூறினார். கவறு-தாயக்கட்டை. (உசு)

பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா
வரியவை செய்து மெனவுரைத்த லின்னா
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா வின்னா
பெரியார்க்குத் தீய செயல்.

ப-ரை. பெரியாரோடு - பெரியவருடன், யாத்த - பிணித்த, தொடர்-தொடர்பை, விடுதல்-விடுதலானது, இன்னா—; அரியவை - தம்மாற் செய்தலருமையான காரியங்களை, செய்தும் என உரைத்தல்-செய்வோமென்று சொல்லுதல், இன்னா—; பரியார்க்கு-தம்மிடத் திரக்கஞ் செய்யாதவர்க்கு, தாம் உற்ற - தாமடைந்த துன்பங்களை, கூற்று-சொல்லுதல், இன்னா—; பெரியார்க்கு-பெரியோர்க்கு, தீய செயல்-தீமைசெய்தல், இன்னா—; எ-று.

க-ரை. பெரியார் தொடர்ச்சியை விடுதலும், செய்தற் கரியவற்றைச் செய்வோமென்று சொல்லுதலும், அன்பில்லாதவர்க்குத் தாமடைந்த துன்பத்தைச் சொல்லுதலும், பெரியோர்க்குத் தீயவை செய்தலும் தீயவென்பதாம்.

வி-ரை. பெரியார் தொடர்பு விடுதல் மிகுதியுந் துன்பத்திற் கேதுவாதலால் 'பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா' என்றும், செய்தற் கரியவற்றைச் செய்வோமென்று சொல்லி அவை முடியாமையால் அவமானப்படுதல் மிகு துன்பமாதலால் 'அரியவை செய்து மெனவுரைத்த லின்னா' என்றும், தம்மிடத் திரக்கமில்லாதவர்க்குத் தமது துன்பங்களைச் சொல்லிக்கொள்ளுதல் மிகவும் பயனில்செயலும் இழிவுமாதலால் 'பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா' என்றும், பெரியோருக்குத் தீங்கு செய்தல் தமக்கே தீங்கு பயக்குமாதலால் 'பெரியார்க்குத் தீமை செயல் இன்னா' என்றுங்கூறினார். பெரியாரோடியாத்த தொடர்விடுத லின்னா, என்பதற்குதாரணம்:— திருக்குறள்: "பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே, நல்லார் தொடர்கை விடல்" யாத்தல்-பிணித்தல். பரிதல் - இரங்குதல். கூற்று - தொழிற்பெயர்; கூறுதல் என்பது பொருள். (உஎ)

பெருமை யுடையாரைப் பீடழித்த லின்னா
கிழமை யுடையார்க் களைந்திடுத லின்னா
வளமை யிலாளர் வனப்பின்னா வின்னா
விளமையுண் மூப்புப் புகல்.

ப-ரை. பெருமை உடையாரை - பெருமையுடையவரை, பீடு அழித்தல்-பெருமையழியச்செய்தல், இன்னா—; கிழமை உடையார்- உரிமையுடையவரை, களைந்திடுதல் - கெடுத்துவிடுதல், இன்னா—; வளமை இல்லாளர் - செல்வ மில்லாதவருடைய, வனப்பு - அழகானது, இன்னா—; இளமையுள் - இளமைப்பருவத்தில், மூப்பு புகல் - முதுமைப் பருவத் துண்டாவனவாகிய நோய்களுண்டாதல், இன்னா—; எ-று.

க-ரை. பெருமை யுடையவரைப் பெருமைகெடச் செய்தலும், உரிமை யுடையவரை விலக்கிவிடுதலும், செல்வ மில்லாதவரது அழகும், இளமையில் நோய்களுண்டாதலும் தீயவென்பதாம்.

வி-ரை. பெருமை யுடையவரைப் பெருமைகுறைத்தல் பாவ மாதலால் 'பெருமை யுடையாரைப் பீடழித்த லின்னா' என்றும், உரியாரை உரியாரல்லரென்றல் அநியாயமாதலால் 'கிழமையுடையார்க் களைந்திடுத லின்னா' என்றும், செல்வ மில்லாதவரது அழகு பயன்படுத லின்மையால் 'வளமையிலாளர் வனப்பின்னா' என்றும், முதுமையி லுண்டாதற் குரியநோய்கள் இளமையி லுண்டாமாயின் அதுபோன்ற துன்பம் வேறொன்று மில்லையாதலால் 'இளமையில் மூப்புப்புகல் இன்னா' என்றும் கூறினார். உண்டாத லருமை தோன்ற 'புகல்' என்றார். (உஅ)

கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா
வல்லாதான் சொல்லு முரையின் பயனின்னா
இல்லார்வாய்ச் சொல்லி னயமின்னா வாங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல்.

ப-ரை. கல்லாதான் ஊரும் - கல்லாதவன் ஏறி நடத்துகிற, கலி - ஆரவாரத்தையுடைய, மா - யானையானது, பரிப்பு-(அவனைச்) சுமந்து செல்லுதல், இன்னா—; வல்லாதான் சொல்லும்-செய்யமாட்டாதான் சொல்லுகிற, உரையின் பயன்-சொல்லின் பொருளானது, இன்னா—; இல்லார் வாய் - பொருளில்லாதவர் வாயிலுண்டாகிற, சொல்லின் - சொல்லினது, நயம்-நன்மையானது, இன்னா—; ஆங்கு-அவ்வாறே, கல்லாதான்-கல்விகற்காத ஒருவன், கோட்டி கொளல்-ஆரவாரித்தல், இன்னா—; எ-று.

க-ரை. கல்லாதவ னேறிநடத்துகிற மாவின் செலவும், செய்யமாட்டாதான் சொல்லும் சொற்பொருளும், இல்லாதவன் சொல்லும் நற்சொல்லும், கல்லாதவன் சபையி லொன்றைச்சொல்ல நினைத்தலும் தீயவென்பதாம்.

வி-ரை. யானை நடத்தும் வகை யறியாதவனை யானைசுமத்தல் தீதாதலால் 'கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா' என்றும், செய்யமாட்டாதவன் செய்வேனென்று சொல்லுதல் பயனில்சொல் லாதலால் 'வல்லாதான் சொல்லு முரையின் பயனின்னா' என்றும், பொருளில்லார் சொல்லுஞ் சொல் செல்லாதாதலால் 'இல்லார் வாய்ச்சொல்லி னயமின்னா' என்றும், கல்வி கல்லாதவன் சபையிற் பேசத்துணிதல் அவனுக்கு அவமானத்தை விளைக்குமாதலால் 'கல் லாதான் கோட்டி கொளல் இன்னா' என்றும் கூறினார். ஊர்தல் - ஏறிநடத்துதல். (உக)

குறியறியான் மாநாக மாட்டுவித்த லின்னா
தறிவறியா னீரின்கட் பாய்ந்தாட லின்னா
வறிவறியா மக்கட் பெறலின்னா வின்னா
செறிவிலான் கேட்ட மறை.

ப-ரை. குறி அறியான் - அடக்குமுறை யறியாதவன், மா நா கம் - பெரிய சர்ப்பங்களை, ஆட்டுவித்தல் - ஆடச் செய்தல், இன்னா—; அறிவு அறியான்-அறியவேண்டுவதாகிய நீந்துதலை அறியாத வன், நீரின்கண் - நீரினிடத்தில், பாய்ந்து ஆடல் - குதித்து விளை யாடுதல், இன்னா—; அறிவு - அறிய வேண்டியவற்றை, அறியா - அறியாத, மக்கள் பெறல் - மக்களைப்பெறுதல், இன்னா—; செறிவு இல்லான் - அடக்க மில்லாதவன், கேட்ட மறை - கேட்ட இரகசி யம், இன்னா—; எ று

க-ரை. அடக்குமுறை யறியாதவன் பாம்பைப்பிடித் தாட்டுத லும், நீந்த வறியாதவன் நீரிற் பாய்ந்து விளையாடுதலும், அறிய வேண்டியவற்றை யறியாத மக்களைப் பெறுதலும், அடக்கமில்லாத வன் கேட்ட ரகசியங்களும் தீயவென்பதாம்.

வி-ரை. மந்திரம் முதலிய முறையறியாதவன் பாம்பைப்பிடித் தாட்டுதல் அவனுக்கு மரணஹேதுவாதலால் 'குறியறியான் மாநாக

மாட்டுவித்த லின்னா' என்றும், நீந்த அறியாதவன் நீர்விளையாடுதல் அவனுயிர்க் கிறுதிபயக்கு மாதலால் 'அறிவறியா னீரின்கட் பாய்ந் தாட லின்னா' என்றும், அறியவேண்டுவனவாகிய புருடார்த்தங்களை யறியாத மக்களைப் பெறுதல் மிகுதியாகிய பாவப்பயனாதலால் 'அறி வறியாமக்கட் பெறலின்னா' என்றும், அடக்கமில்லாதவன் கேட்ட ரகசியம் உடனே பலரறிய வெளிப்படுமாதலால், 'செறிவிலான் கேட்ட மறை யின்னா' என்றும் கூறினார். குறி - பாம்பின் குறிமுதலிய வை யெனினுமாம். (௩0)

> நெடுமர நீள்கோட் டுயர்பாய்த லின்னா
> கடுஞ்சின வேழத் தெதிர்சேற லின்னா
> ஒடுங்கி யரவுறையு மில்லின்னா வின்னா
> கடுமபுலி வாழு மதர்.

ப-ரை. நெடு மரம் - நெடிய மரத்தினது, நீள் கோட்டு - நீண்ட கிளையின், உயர் - உயரத்திலிருந்து, பாய்தல் - கீழே குதித்தல், இன்னா—; கடு சினம் - கொடிய கோபத்தையுடைய, வேழத்து - யானையின், எதிர் சேறல் - எதிரே செல்லுதல், இன்னா—; அரவு - பாம்பானது, ஒடுங்கி - அடங்கி, உறையும் - வாழ்கின்ற, இல்-வீடானது, இன்னா—; கடும்புலி வாழும் - கடுமையாகிய புலிகள் வாழ் கின்ற, அதர் - வழியானது, இன்னா—, எ - று.

க-ரை. நீண்ட மரத்தின் நீள்கொம்பிலிருந்து நிலத்திற் குதித் தலும், கடுங்கோபத்தையுடைய யானைக்கெதிரே செல்லுதலும், பாம்புவாழும் வீட்டில் வாழ்தலும், கடும்புலிகள் வாழும் வழியும் தீய வென்பதாம்.

வி-ரை. நீண்ட மரக்கிளையிலிருந்து நிலத்திற் குதித்தால், கால்கைகள் ஒடிய நேரிடுமாதலால் 'நெடுமர நீள்கோட் டுயர்பாய்த லின்னா' என்றும், கொடுங்கோபத்தையுடைய யானை எதிர்ப்பட்ட

வரைக் கொல்லுதல் திண்ணமாதலால் 'கடுஞ்சின வேழத் தெதிர் சேற லின்னா' என்றும், பாம்புவாழும் மனையிலிருத்தல் எப்பொழு தும் அபாயத்துக்கே யேதுவாதலால் 'ஒடுங்கி யாவுறையு மில்லின் னா' என்றும், புலிகள் சஞ்சரிக்கும் காட்டுவழியிற் செல்லுதல் உயிர்க் கிறுதி பயக்கு மாதலால் 'கடும்புலி வாழு மதர் இன்னா' என்றும் கூறினார். சேறல் - செல்தல். (௩௧)

பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா
வெண்ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா
மண்ணின் முழவி னொலியின்னா வாங்கின்னா
தண்மை யிலாளர் பகை.

ப-ரை. பண் அமையா - பண்ணுதலமைந்திராத, யாழின் கீழ்-யாழின்கீழிருந்து, பாடல் - பாடுதல், பெரிது - மிகவும், இன்னா—; எண் அறியா - கணிதமறியாத, மாந்தர் - மக்கள், ஒழுக்கு - நடத்து கிற, நாள்கூற்று-நாள்செலவு, இன்னா—; மண் இல் - மண்ணுதலில் லாத,முழவின்-மத்தளத்தின், ஒலி-ஓசையானது, இன்னா—; ஆங்கு-அவ்வாறே, தண்மை இலாளர் - குணமில்லாதவரோடு, பகை-பகை கொள்ளுதல், இன்னா—; எ-று.

க-ரை. பண்ணமையாத யாழின்கீழ்ப்பாடுதலும்,கணிதமறியாத மக்களது நாட்செலவும், மண்ணுதலில்லாத மத்தளத்தி னோசையும், நற்குண மில்லாதவரது பகையும் தீயவென்பதாம்.

வி-ரை. பண்ணமையா யாழின் கீழ்ப் பாடுதல் சிறந்துகாட்டா தாதலால் 'பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா' என் றும், கணிதமறியாதவர் நாள்பார்த் தமைத்தல் பழுதாதலால் 'எண் ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா' என்றும், மார்ச்சனையில் லாத மத்தளத்தோசை இன்பந்தரா தாதலால் 'மண்ணின் முழவி னொலி யின்னா' என்றும், துர்ஜநரோடு பகைகொள்ளின் அது

தீமைசெய்தல் தவறாதாதலால் 'தண்மை யிலாளர் பகைஇன்னா' என்றும் கூறினார். பண் - இசையெனினுமாம். பாடல் - குரலாற் பாடுதல். எண் - சோதிடநூல் எனினுமாம். மண் - மார்ஜனை. தண்மை - தட்பம், (சாந்தகுணம்). (கூஉ)

தன்னைத்தான் போற்றா தொழுகு தனன்கின்னா
முன்னை யுரையார் புறமொழிக் கூற்றின்னா
நன்மையி லாளர் தொடர்பின்னா வாங்கின்னா
தொன்மை யுடையார் கெடல்.

ப-ரை. தன்னை(-ஒருவன்) தன்னை, தான்-தானே, போற்றாது ஒழுகுதல் - காத்துக்கொள்ளாமல் நடத்தல், நன்கு - மிகவும், இன்னா—; முன்னை - ஒருவனெதிரே, உரையார் - சொல்லாதவராய், புறமொழி கூற்று - புறங்கூறுதல், இன்னா—; நன்மை இலாளர் - நற்குண மில்லாதவரது, தொடர்பு - நட்பு, இன்னா—; ஆங்கு - அவ்வாறே, தொன்மை உடையார் - பழமையுடையவர், கெடல் - கெடுதல், இன்னா—; ஏ - று.

க-ரை. தன்னைத்தான் காத்துக்கொள்ளாமல் நடத்தலும், எதிரேபேசாதிருந்து புறத்தே பேசுதலும், நற்குண மில்லாதவரது தொடர்ச்சியும், பழமையாகிய நற்குடியிற் பிறந்தவரது அழிவும் தீயவென்பதாம்.

வி-ரை. தன்னைத்தான் காத்துக்கொள்ளாமல் ஒழுகுதல் தனக்குக் கேடு தருதல் ஒருதலையாதலால் 'தன்னைத்தான் போற்றா தொழுகுத னன்கின்னா' என்றும், புறங்கூறல் பெரும்பாவ மாதலால் 'முன்னை யுரையார் புறமொழிக் கூற்றின்னா' என்றும், தீயார் நட்புத் தீங்கு பயத்தலால் 'நன்மையி லாளர் தொடர்பின்னா' என்றும், செல்வக்குடியிற் பிறந்தவரது கேடானது எல்லாரு மிரங்குதற்குரிய துன்பந்தருமாதலால் 'தொன்மையுடையார் கெடல் இன்னா' என்றும் கூறினார். தன்னைத்தான் போற்றா தொழுகுதலாவது, மனமொழி மெய்களால் தனக்குத் தீங்கு நேரிடும்படி யொழுகுதல். ()

கள்ளுண்பான் கூறுங் கருமப் பொருளின்னா
முள்ளுடைக் காட்டி னடத்த னனியின்னா

வெள்ளம் படுமாக் கொலையின்னா வாங்கின்னா
கள்ள மனத்தார் தொடர்பு.

ப-ரை. கள் உண்பான் - கள்ளுண்பவனொருவன், கூறும் - சொல்லுகிற, கருமப்பொருள் - சொற்பொருளானது, இன்னா—; முள் உடை காட்டில் - முள்ளுள்ள காட்டில், நடத்தல் - நடத்தலானது, நனி - மிகவும், இன்னா—; வெள்ளம் படும் - நீர்ப்பெருக்கிலகப்பட்ட, மா - மிருகத்தை, கொலை - கொல்லுதல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, கள்ள மனத்தார்-வஞ்சமனத்தாரது, தொடர்பு-நட்பானது, இன்னா—; எ - று.

க-ரை. கள்ளுண்பவன் சொல்லுஞ் சொற்பொருளும், முள்ளுள்ள காட்டில் நடத்தலும், வெள்ளத்திலகப்பட்ட மிருகத்தைக் கொல்லுதலும், வஞ்சமனத்தாரது தொடர்பும் தீயவென்பதாம்.

வி-ரை. களியன் சொல்லுஞ்சொல் கட்செருக்கோடு கூடியதாதலால் 'கள்ளுண்பான் கூறுங் கருமப்பொருளின்னா' என்றும், முட்காட்டில் நடக்கில் காலின் முட்டைத்தல் முதலிய அநேக துன்பங்களுளவாமாதலால் 'முள்ளுடைக் காட்டி னடத்த னனியின்னா' என்றும், நொந்தாரை நோவுவிப்பதுபோல, முன்னமே வெள்ளத்தாலலைக்கப்பட்ட மிருகத்தைக் கொல்லுதல் மகாபாதகமாதலால் 'வெள்ளம் படுமாக்கொலையின்னா' என்றும், வஞ்சமனத்தார் நட்புத் தீமை தருதலில் முற்பட்டதாதலால் 'கள்ள மனத்தார்தொடர்பு இன்னா' என்றும் கூறினார். மா-மிருகத்தின் பொதுப்பெயர். கொலை-தொழிற்பெயர்.

(௩௰)

ஒழுக்க மிலாளர்க் குறவுரைத்த லின்னா
இழித்தகு நூலும் விழையாதார்க் கின்னா
விழித்த தொழிலவர் நட்பின்னா வின்னா
கழிப்புலாய் மண்டிலக் கொட்பு.

ப-ரை. ஒழுக்கம் இலாளர்க்கு - நல்லொழுக்க மில்லாதவர்க்கு, உறவு உரைத்தல் - தொடர்பைச் சொல்லுதல், இன்னா—; இழித்தகும் நூலும் - சிறுநூல்களும், விழையாதார்க்கு - விரும்பா

தவர்க்கு, இன்னா—; இழித்த - (கண்டார்) இழித்துச் சொல்லுதற் குரிய, தொழிலவர் - தொழிலையுடையவரது, நட்பு - நட்பானது, இன்னா—; கழிப்பு உலாய் - (வெறுத்துக்) கழித்தற் குரியதாகிய மண்டிலம் - குதிரையினது, கொட்பு - சுழன்றோடுதல், இன்னா— எ-று.

க-ரை. ஒழுக்க மில்லாதவர்க்கு உறவுசொல்லுதலும், சிறுநூல்களையும் விரும்பாதவர்க்குச் சொல்லுதலும், இழிதொழிலாளரது நட்பும், குதிரையின் சுற்றோட்டமும் தீயவென்பதாம்.

வி-ரை. தீயொழுக்கமுடையார்க்குத் தொடர்புகூறல் தீமையைத் தருமாதலால் 'ஒழுக்க மிலாளர்க் குறவுரைத்த லின்னா' என்றும், விருப்ப மில்லாதவர்க்குச் சிறுநூல்களைக் கற்கையுந் துன்பமாதலால் 'இழித்தகு நூலும் விழையாதார்க் கின்னா' என்றும், இழிதொழிலாளர் நட்புத் தீமை செய்தலால் 'இழித்த தொழிலவர் நட்பின்னா' என்றும், நேரோட்டமின்றிச் சுழன்றோடுதல் என்றும் குதிரைக்குத் துன்பமாதலால் 'கழிப்புலாய மண்டிலங் கொட்பு இன்னா' என்றும் கூறினார். கழிப்புலாய மண்டிலங் கொட்பு என்பதற்கு, நல்லவரால் கழிக்கப்பட்ட நாட்களில் சென்று திரிதலென்று வைத்தலு மொன்று. (ங௫)

எழிலி யுறைநீங்கி னீண்டையார்க் கின்னா
குழலி னினிய மரத்தோசை நன்கின்னா
குழவிக ளுற்ற பிணியின்னா வின்னா
வழகுடையான் பேதை யெனல்.

ப-ரை. எழிலி - மேகமானது, உறை நீங்கின் - நீர் துளித்தலொழியுமாயின், ஈண்டையார்க்கு - இவ்வுலகத்தார்க்கு, இன்னா—; குழலின் இனிய - குழலினும் இனிய, மரத்து ஓசை - மரத்தொலியானது, நன்கு - மிகவும், இன்னா—; குழவிகள் உற்ற - குழந்தைகள் அடைந்த, பிணி - நோய்கள், இன்னா—; அழகு உடையான் - அழகுடையவன், பேதை எனல் - பேதையென்று பிறரால் இகழப்படுதல், இன்னா—; எ-று.

க-ரை. மேகமானது மழைபெய்யாமையும், குழலோசையினும் மரத்தோசையும், குழந்தைகளுக்கு நேர்ந்த நோய்களும், அழகுள்ளவன் பேதையாயிருத்தலும் தீயவென்பதாம்.

வி-ரை. மழையில்லையாயின் உலகியல் சிறிதும் நடவாதாதலால் 'எழிலி யுறைநீங்கி னீண்டையார்க்கின்னா' என்றும், குழலோசையினும் மரத்தோசை யின்பந்தராதாதலால் 'குழலி னினிய மரத்தோசை யின்னா' என்றும், பிணித்துன்பம் குழந்தைகள் பொறுத்தலரிதாதலால் 'குழவிக ளுற்ற பிணியின்னா' என்றும், அழகுடையவன் அதற்கேற்ப அறிவுடையானென்று சொல்லப்படுதலன்றி பேதையென்று சொல்லப்படுதல் மிகவும் இழிவாதலால் 'அழகுடையான் பேதையெனல் இன்னா' என்றும் கூறினார். பேதை - அறிவிலான். (நக)

பொருளிலான் வேளாண்மை காமுறுத லின்னா
நெடுமாட நீணகர்க் கைத்தின்மை யின்னா
வருமனை பார்த்திருந் தூணின்னா வின்னா
கெடுமிடங் கைவிடுவார் நட்பு.

ப-ரை. பொருள் இலான்-பொருளில்லாதவன், வேளாண்மை - (பிறர்க்கு) உபகாரஞ் செய்தலை, காமுறுதல் - விரும்புதல், இன்னா, நெடுமாடம் - நெடிய மாடங்கள் நிறைந்த, நீள் நகர் - பெரிய நகரத்தில், கைத்து இன்மை - பொருளில்லாதிருத்தல், இன்னா—; வரு- வந்திருக்கிற, மனை - வீட்டை, பார்த்திருந்து - பார்த்துக்கொண்டேயிருந்து, ஊண் - உண்ணுமுணவு, இன்னா—; கெடும் இடம் - கெடும்பட்டதில், கைவிடுவார் - கைவிடுவோருடைய, நட்பு - நட்பானது, இன்னா—; எ-று.

க-ரை. பொருளில்லாதவன் வேளாண்மை செய்ய விரும்புதலும், பெரிய பட்டணத்தில் ஒருவன் பொருளில்லாதிருத்தலும், பிறர்மனையை எதிர்பார்த்திருந்து உண்ணுதலும், கெடுங்காலத்தில் கைவிடுவோரது நட்பும் தீயவென்பதாம்.

வி-ரை. வறியன் தானே துன்புறும்போது பிறர்க்கு உபகரிக்கக் கருதின் அது முடியாதாதலால் 'பொருளிலான் வேளாண்மை

காமுறுத லின்னா' என்றும், பெரிய நகரத்தில் வறியனா யிருத்தல் தீதாதலால், 'நெடுமாட நீணகர்க் கைத்தின்மை யின்னா' என்றும், பிறர்மனை யுணவுக் கெதிர்பார்த்திருந்துண்டல் மிகுதுன்பமாத லால் 'வருமனை பார்த்திருந் தூணின்னா' என்றும், கெடுதிக்காலத்தில் கைவிடுவார் நட்புத் துன்பஞ்செய்தலால் 'கெடுமிடங் கைவிடுவார் நட்பு இன்னா' என்றும் கூறினார். காமுறுதல்-ஒருசொல்; இதற்குப் பகுதி-காமுறு. (௧௭)

நறிய மலர் பெரிது நாறாமை யின்னா
துறையறியா னீரிழிந்து போகுத லின்னா
வறியான் விளைப்படுத லின்னா வாங்கின்னா
சிறியார்மேற் செற்றங் கொளல்.

ப-ரை. நறிய மலர் - நல்லமலரானது, பெரிது நாறாமை - மிக வும் மணக்காமை, இன்னா—; துறை அறியாதவன் - துறையறியா தவன், நீர் இழிந்து போகுதல் - நீரிலிறங்கிச் செல்லுதல், இன்னா; அறியான்-அறிவில்லாதவன், விளைபடுதல் (அறிவுடையோரால்)வினை வப்படுதல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, சிறியார்மேல் - சிறிய வர்மீது, செற்றம் கொளல் - கோவங்கொள்ளுதல், இன்னா—; எ-று.

க-ரை. நல்ல மலரானது மணக்காமையும், துறையறியாதவன் நீரிலிறங்கிச் செல்லுதலும், பேதையானவன் பெரியோரால் வினை வப்படுதலும், சிறியவர் மீது கோவங்கொள்ளுதலும் தீயவென்ப தாம்.

வி-ரை. மணமில்லாதமலர் பயன்படுத லின்றாதலால் 'நறியமலர் பெரிது நாறாமையின்னா' என்றும், இறங்கு துறையறியாதவன் நீரில் இறங்கிச் செல்லுதல் அவனுக் கபாயத்தை யுண்டுபண்ணுமாதலால் 'துறையறியா னீரிழிந்து போகுத லின்னா' என்றும், அறிவிலான் அறிவுடையவரால் வினவப்படின் இருதிறத்தார்க்கும் பயன் துன் பமேயாதலால் 'அறியான் வினைப்படுத லின்னா' என்றும், தன்னின் மெலியாரிடத் துண்டாகுங் கோவம் இம்மைக்கட்பழியும் மறுமைக் கட்பாவமும் பயத்தலின் சிறியார்மேற் செற்றங் கொளல் இன்னா என்றும் கூறினார். (௧௮)

பிறன்மனையாள் பின்னோக்கும் பேதைமை யின்னா
மறமிலா மன்னர் செருப்புகுத லின்னா
வெறும்புறம் வெம்புரவி யேற்றின்னா வின்னா
திறனிலான் செய்யும் வினை.

ப-ரை. பிறன் மனையாள் - பிறன் மனையாளுடைய, பின் - இடத்தை, நோக்கும் - பார்க்கிற, பேதைமை - அறியாமை, இன்னா—; மறம் இலா - வீரத்தன்மையில்லாத, மன்னர்-அரசர், செரு - போர்க்களத்தில், புகுதல்-பிரவேசித்தல், இன்னா—; வெறும் புறம் - வெறுமையாகிய முதுகினையுடைய, வெம் புரவி - வேகத்தையுடைய குதிரைமேல், ஏற்று - ஏறுதல், இன்னா—; திறன் இலான் - செய்வகையறியாதவன், செய்யும் வினை - செய்யுங்காரியம், இன்னா—; எ - று.

க-ரை. பிறன்மனையா ளிடத்தைப்பார்க்கும் பேதைமையும், வீரத்தன்மை யில்லாத அரசர் போர்முகத்திற் பிரவேசித்தலும், குதிரையின் வெறுமுதுகிலேறுதலும், செய்யும்வகை யறியாதவன் செய்யுங் காரியமும் தீயவென்பதாம்.

வி-ரை. பிறர்மனை நயத்தல்போலப் பெரும்பாவ மொன்றில்லை யாதலால், 'பிறன்மனையாள் பின்னோக்கும் பேதைமை யின்னா' என்றும், வீரத்தன்மை யில்லாத அரசர் போர்க்கெழுதல் அவமானத்திற் கேதுவாதலால், 'மறமிலா மன்னர் செருப்புகுத லின்னா' என்றும், கல்லணை யில்லாத குதிரைமேலேறுதல் அபாயத்துக் கேதுவாதலால் 'வெறும்புறம் வெம்புரவி யேற்றின்னா' என்றும், வகையறியாதவன் செய்யுங் காரியம் முற்றுப்பெறா தாதலால் 'திறனிலான் செய்யும் வினை இன்னா' என்றும் கூறினார். வெறும்புறம் - கல்லணையில்லாத முதுகு. ஏற்று - தொழிற்பெயர். (௩௧)

கொடுக்கும் பொருளில்லான் வள்ளன்மை யின்னா
கடித்தமைந்த பாக்கினுட் கற்படுத லின்னா
கொடுத்து விடாமை கவிக்கின்னா வின்னா
மடுத்தழிப் பாடா விடல்.

11-ரை. கொடுக்கும் - கொடுத்தற்குரிய, பொருள் இல்லான் - பொருளில்லாதவனது, வள்ளன்மை-கொடைத்தன்மை, இன்னா—; கடித்து அமைந்த - பிளந்தமைந்த, பாக்கினுள் - பாக்கினிடத்தில், கல் படுதல் - கல்லுண்டாயிருத்தல், இன்னா—; கொடுத்து - பொருள்கொடுத்து, விடாமை - அனுப்பாமை, கவிக்கு - கவிகளுக்கு, இன்னா—; மடுத்தழி - தானத்துக்கேற்க, பாடாவிடல் - அகப்படா தொழிதல், இன்னா—; எ - று.

க-ரை. பொருளில்லாதவனது உதாரத்துவமும், கடித்த பாக்கினுள்ளே கல்லிருத்தலும், கவிகளுக்குக் கொடுத்தனுப்பாமையும், கொண்ட தானத்துக் ககப்படா தொழிதலும் தீயவென்பதாம்.

வி - ரை. பொருளில்லாதவனது ஔதாரியம் தீதாதலால், 'கொடுக்கும் பொருளில்லான் வள்ளன்மை யின்னா' என்றும், கடித்த பாக்கிற கல்லிருக்குமாயின் அது மூர்ச்சை முதலிய தீமைகளை யுண்டாக்கலால் 'கடித்த மைந்த பாக்கினுட் கற்படுத லின்னா' என்றும், வித்வான்களுக்குப் பொருள்கொடுத் தனுப்பாமை துன்பமாதலால் 'கொடுத்து விடாமை கவிக்கின்னா' என்றும், தானத்துக்கேற்க அகப்படா தொழிதல் தீதாதலால், 'மடுத்துழிப்பாடாவிடல் இன்னா' என்றும் கூறினார். கவிபாடுவோனைக் கவியென்றது வடநூன் மதம்பற்றி யென்க. படாவிடல் என்பது பாடாவிடல் என நீட்டல் பெற்றது. (௪0)

அடக்க முடையவன் மீளிமை யின்னா
துடக்க மிலாதவன் றற்செருக் கின்னா
வடைக் கலம் வவ்வுத லின்னாவாங் கின்னா
வடக்க வடங்காதார் சொல்.

ப-ரை. அடக்கம் உடையவன்-ஐம்பொறியடக்கமுடைய ஒருவன், மீளிமை - சொல்வன்மை, இன்னா—; துடக்கம் இலாதவன் - தொடங்கிய காரியத்தைச் செய்யமாட்டாதவன், தற்செருக்கு - தன்னைத்தானே மதித்தல், இன்னா—; அடைக்கலம்-அடைக்கலப் பொருளை, வவ்வுதல் - கவர்ந்து கொள்ளுதல், இன்னா—; ஆங்கு - அவ்வாறே, அடக்க - அடக்கவும், அடங்காதார் - அடங்காதவருடைய, சொல் - சொல்லானது, இன்னா—;எ-று.

நீதிநூற்றிரட்டு விருத்தியுரை 9-ம் பாகம்.

உ

சங்கச்செய்யுள்.

காரியாசான் செய்த

சிறுபஞ்சமூலம்

மூலமும்,

மஹாவித்வான் கா. இராமசாமி நாயுடு அவர்களால்

இயற்றப்பட்ட

விருத்தியுரையும்.

இவை

பென்ஷன் சுபேதார்-தஞ்சை. சாம்பசிவம்பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை - எஸ். குமாரசுவாமிபிள்ளையால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1909.

Copyright] விலை அணா 4. [Registered.

கடவுள் துணை.

சிறுபஞ்சமூலம்

மூலமும் உரையும்.

கடவுள் வாழ்த்து.

முழுதுணர்ந்து மூன்றொழித்து மூவாதான் பாதம்
பழுதின்றி யாற்றப் பணிந்து-முழுதேத்தி
மண்பாய ஞாலத்து மாந்தர்க் குறுதியா
வெண்பா வுரைப்பன் சில.

பதவுரை. முழுது உணர்ந்து-முற்று முணர்ந்து, மூன்று ஒழித்து-காமமுதலிய மூன்றையும் நீக்கி, மூவாதான்-மூவாதவனாகிய கடவுளது, பாதம்-திருவடியை, பழுது இன்றி-குற்றமின்றி, ஆற்ற-மிகவும், பணிந்து-வணங்கி, முழுது ஏத்தி-(அவனுடைய மங்கள) குணங்கள் முழுதும் துதித்து, மண்பாய-மண்பரந்த, ஞாலத்து-இவ்வுலகத்திலுள்ள, மாந்தர்க்கு-மக்களுயிர்க்கு, உறுதி ஆ-உறுதியுண்டாக, சிலவெண்பா-சிலவெண்பாக்களை, உரைப்பன்-(யான்) சொல்லுவேன், எ-று.

கருத்துரை. கடவுளுடைய திருவடியை வணங்கித் துதித்து, இவ்வுலகிலுள்ள மக்களுயிர்க குறுதியைத் தருவதாகிய பொருளமைந்த சில வெண்பாக்களை யான் சொல்லுவேன் என்பதாம்.

விருத்தியுரை. ஆசிரியர்தாமெடுத்துக்கொண்ட நூல்இடையூறின்றியினிது முடிதற்பொருட்டு, ஆன்றோ ராசாரப்படி இக்கடவுள் வாழ்த்துக் கூறலாயினர். முழுதுணர்தலை சர்வஜ்ஞத்வம் என்று கூறுவர் வடநூலார். மூன்று என்றது காம வெகுளி மயக்கங்களை. இவையிறைவனுக் கியல்பாகவே யில்லையாதலால் 'மூன்றொழித்து' என்

றும், என்றுமொருதன்மையனு யிருத்தலால் 'மூவாதான்' என்றும் கூறினார். மூவாதான் என்பதற்குப் பகுதி மூ. பிறவிப் பெருங்கடற்கோர் பெருமரக்கல மாதலால் இறைவனது பாதத்திற்கண் வைத்தார். பழுது - வழிபாட்டின் முறையிற் குற்றம். காயத்தின் றொழிலாகிய பணிதலும், வாக்கின் றொழிலாகிய ஏத்துதலும் மனத்தின் வழிபவாதலால் மனத்தின் றொழிலாகிய சிந்தித்தலுங்கொள்ளப்படும். படவே முக்கரண வழிபாடு மடங்கிற்று. உறுதி-அறம் பொருள் இன்பம் வீடு என்பன.

இச்செய்யுளில், நூற்பெயர்க்கேற்ப ஐந்தென்னுந் தொகைகோடல் யாங்ஙனமெனின், முக்குற்றமொழித்தலும், முழுதுணர்ச்சியும், மூவாமையும் ஆகிய ஐந்தனையுங் கொள்கவென்றுராய்ற்று. ()

ஒத்த வொழுக்கங் கொலைபொய் புலால்களவோ
டொத்த விவையல வோர்நாலிட்-டொத்த
உறுபஞ்ச மூலந்தீர் மாரிபோற் கூறீர்
சிறுபஞ்ச மூலஞ் சிறந்து.

ப-ரை. ஒத்த-பொருந்திய, ஒழுக்கம்-நல்லொழுக்கம், கொலை பொய் புலால் களவோடு ஒத்த இவை அல்ல-கொலை பொய் புலால் களவோடு பொருந்திய இவையல்லாதனவாகிய, ஓர் நால் இட்டு-ஒரு நான்கையுஞ் சேர்த்து, ஒத்த - பொருந்திய, உறு - மிக்க, பஞ்ச மூலம்-சிறுவிலைக்காலத்தை, தீர்-ஒழிக்கிற, மாரிபோல்-மழைபோல, சிறுபஞ்சமூலம்-சிறுபஞ்சமூலத்தை, சிறந்து - சிறப்பித்து, கூறீர் - (நீங்கள்) சொல்லுங்கள், எ-று.

க-ரை. சிறுவிலைக் காலத்தை யொழிக்கிற மழைபோல, மக்கட்குக்கொலை முதலியவற்றை யொழித்து நல்லொழுக்க முதலியவற்றைத் தருதலால், சிறுபஞ்சமூலத்தை நீங்கள் சிறந்தெடுத்துச் சொல்லுங்கள் என்பதாம்.

வி-ரை. சிறுபஞ்ச மூலமாவன-சிறிய ஐந்துவேர்கள்; அவை:—கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சில்வேர், பெருமல்லிவேர் என்பன, இவ்வைந்தும் மக்களுடற்குப்

பிணிமுதலியவற்றையொழித் திதஞ்செய்வதுபோல, உயிர்க்குறுதி யைச் செய்வனவாகிய நல்லொழுக்க முதலிய வைந்தனையுங் கூறுத லால், இந்நூற்குச் சிறுபஞ்சமூலம் என்பது உவமையாகுபெயரா யமைந்தது. நல்லொழுக்க முதலியன வந்தாவன:—நல்லொழுக்கம், கொல்லாமை, பொய்கூறாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை என் பன. கூறீர் என்பதற்கு வினைமுதலாகிய நீங்கள் என்பது வருவிக்கப் பட்டது. ஒழுக்கம் என வாளாகூறினரேனும் கொல்லாமைமுதலிய வற்றிற்கேற்ப நல்லொழுக்கமென் றுரைக்கப்பட்டது. (உ)

பொருளுடையான் கண்ணதே போக மறனு
மருளுடையான் கண்ணதே யாகும்-அருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியு
முய்யான் பிறர்செவியிற் குய்த்து.

ப-ரை. போகம் - இன்பமானது, பொருள் உடையான் கண் ணதே ஆகும்-பொருளுடையவ னிடத்ததே யாகும்; அறம்-அறமும், அருள் உடையான் கண்ணதே ஆகும் - அருளுடையவனிடத்ததே யாகும்; அருள் உடையான்-அருளுடையவன், பழி செய்யான்-பழிக் கப்படுங் காரியங்களைச் செய்யான்; பாவம் சேரான்-பாவத்தைத்தருங் காரியங்களைச் சேரான்; புறமொழியும் - புறங்கூற்று மொழிகளையும், பிறர் செவியிற்கு உய்த்து உய்யான்-பிறர் காதுகளிற் செலுத்தான், எ - று.

க-ரை. போகம் முதலிய வைந்தும் பொருளுடையான் முத லிய ஐவரிடத்தவே யாகும் என்பதாம்.

வி-ரை. பொருள் - செல்வம். அருள்-எல்லா வுயிர்களின்மேலு முளதாகுங் கருணை. அறன் - அறம் என்பதன்போலி. உய்த்தல் - செலுத்தல். (புகுத்தல்) பொருளுடையவன் இன்பமொன்றனையே நுகர்வான்; அருளுடையவன் அறப்பயனைக் கைக்கோடலேயன்றி

பழிபாவங்களைச் செய்யாமையும் புறங்கூறாமையு முடையனுவனெ ன்றதாயிற்று. (௩)

கற்புடைய பெண்ணமிர்து கற்றடங்கி னுனமிர்து
நற்புடைய நாடமிர்தந் நாட்டுக்கு-நற்புடைய
மேகமே சேர்கொடி வேந்தமிர்து சேவகனு
மாகவே செய்யி னமிர்து.

ப-ரை. கற்பு உடைய பெண்-கற்புள்ள பெண்ணனவள், அமிர்து - (தன் கணவனுக்கு) அமிர்தத்தோ டொப்பவளாவள்; கற்று - (அறிவு நூல்களைக், கற்று, அடங்கினுன்-அடங்கினவன், அமிர்து - (உலகத்தார்க்கு)அமிர்தத்தோ டொப்பவனுவன்; நற்புஉடையநாடு - நற்குணமுடையநாடு, அமிர்து - (அந்நாட்டரசனுக்கு) அமிர்தத்தோ டொப்பாகும்; அ நாட்டுக்கு - அந்த நாட்டுக்கு, நற்பு உடைய - நன்மையுள்ள, மேகம் சேர்-மேகத்தின் குணமமைந்த, கொடி-வெற்றிக் கொடியையுடைய, வேந்து - வேந்தனுனவன், அமிர்து - அமிர்தத்தோ டொப்பவனுவான்; சேவகனும் - அவ்வேந்தனது சேவகனும், ஆகவே செய்யின்-அவனுக்கு நன்மையா மவற்றையே செய்வனுயின், அமிர்து - அவ்வேந்தனுக்கு அமிர்தத்தோ டொப்பவனுவன் என்பதாம்.

க-ரை. கற்புடைய பெண் முதலானோர் அவள் கணவன் முதலானோர்க்கு அமிர்தத்தை நிகர்ப்பர் என்பதாம்.

வி-ரை. கற்பு - பாதிவிரத்தியம்; அது கணவன் முதலானோரிடத்து நடக்கவேண்டிய முறைமைக ளெல்லாவற்றையுங் கற்றல். கற்பு - தொழிற்பெயர். அடங்கினுன் என மேல்வருதலால் கற்று என்பதற்கு அறிவு நூல்களைக்கற்று எனப் பொருளுரைக்கலாயிற்று. நாடு - தேசம். அடங்கினுன் என்றது மனமொழி மெய்க ளடங்கப் பெற்றவனை. இவ்வடக்கம் அறிவு நூல்களைக் கல்லாதவனுக் குண்

டாத வருமையென்பது தோன்ற 'கற்றடங்கினன்' என்றார். மேகம்-பொருளாகுபெயர். மேகத்தின் குணம் - கைம்மாறு வேண்டாமை. செய்யின் என்பது செய்தலருமை தோன்ற நின்றது. (௪)

கல்லாதான் றான்காணு நுட்பமுங் காதிரண்டு
மில்லாதா ளெக்கழுத்தஞ் செய்தலு-மில்லாதா
னொல்லாப் பொருளில்லார்க் கீத்தளியா னென்றலு
நல்லார்கள் கேட்பி னகை.

ப-ரை. கல்லாதான்-(ஆசிரியனிடத்துக் கற்கவேண்டிய முறைப் படியே) கல்லாதவனாகிய ஒருவன், தான்காணும்-தானே ஆராய்ந்து காண்கிற, நுட்பமும் - நுண்பொருளும், காது இரண்டும் இல்லாதாள் - இரண்டுகாது மில்லாதவளாகிய ஒருத்தி, எக்கழுத்தம் செய்தலும்-(யான் அழகுடையேனென்று) இறுமாத்தலும், இல்லாதான் - பொருளில்லாதவன், ஒல்லா பொருள்-இசையாத வோர்பொருளை, இல்லார்க்கு - வறியார்க்கு, ஈத்து - கொடுத்து, அளியான் என்ற லும்-அருளுடையானென்று சொல்லப்படுதலும், (ஆகிய இவற்றை) நல்லார்கள் கேட்பின் - நல்லோர்கள் கேட்பாராயின், நகை - சிரித் தற் கேதுவாம், எ-று.

க-ரை. கல்லாதவனொருவன் நுண்பொருள் காண்டல் முதலிய வற்றை நல்லோர்கள் கேட்டால் நகைப்பார்கள் என்பதாம்.

வி-ரை. தான்காணு நுட்பமும் என மேல்வருதலால் கல்லா தான் என்பதற்கு, ஆசிரியனிடத்துக் கற்கவேண்டிய முறைப்படி யே கல்லாதவனாகிய வொருவன் எனப் பொருள் கூறலாயிற்று. கன விய குழை முதலியவை யணியப்பெற்று முகத்திற்குப் பேரழகு செய்வது காதாகலால், அவை யில்லாதவள் யான் பேரழகுடையே னென்றல் சிரிப்புக் கிடமாதலால், 'காதிரண்டு மில்லாதா ளெக்க

ழுத்தஞ் செய்தலும்' என்றும், பொருளில்லாதவன் வறியர்க்குக் கொடுத்து அருளுடையா னெனப்படுதல் ஒருவாற்ரு னு மியைவதன் ருகலான் 'இல்லாதாரெஞெல்லாப் பொருளில்லார்க் கீத்தளியானென் றலும்' என்றும், பொருத்த மற்ற இக்காரியங்களை நல்லார்காணின் நகையாதிரார் ஆகலான், 'நல்லார்கள் கேட்பினகை' என்றும் கூறி ஞர். கல்லாதான் ருன்காணு நுட்பமும் என்பதற்கு, "கல்லாதா ஞெட்பங் கழிய நன்ருயினும், கொள்ளா ரறிவுடையார்" என்னுந் திருக்குறளை உதாரணமாகக் கோட லமையும். (ரு)

உடம்பொழிய வேண்டி னுயர்தவ மாற்றீண்
டிடம்பொழிய வேண்டுமே லீகை-மடம்பொழிய
வேண்டி னறிமடம் வேண்டேல் பிறர்மனை
யீண்டி னியையுந் திரு.

ப-ரை. உடம்பு - உடம்பெடுத்தல், ஒழிய வேண்டின்-உன்னை விட்டு நீங்க வேண்டுமாயின், உயர் தவம் ஆற்று - உயர்ந்த தவத் தைச் செய்வாயாக; ஈண்டு - இவ்வுலகத்தில், இடம் - எல்லா விடங்களிலும், பொழிய வேண்டுமேல் - (ஒருவன் தன் புகழினல்) நிறைய வேண்டுவானுயின், ஈகை-ஈதலைச் செய்க; மடம் பொழிய வேண்டின்-மெல்லியவீரம் தனக்குள்ளே நிறையவேண்டினுஞயின், அறிமடம் - அறிவின்கண் அடங்கி யொழுகுக; பிறர்மனை வேண் டேல்-பிறர் மனைவியை விரும்பாதொழிக ; ஈண்டின் - இவையாவும் பொருந்துமாயின், திரு இயையும்-செல்வம் வந்து தானே நிறையும், எ-று.

க-ரை. பிறவியை யொழிக்க வேண்டுமாயின் தவத்தைச் செய்க ; புகழ் வேண்டுமாயின் ஈதலைச்செய்க; வீரம் வேண்டுமாயின் அறிவிலடங்குக ; பிறன்மனை யவாதொழிக; இவை பொருந்து மாயின் செல்வம் தானேவந்து நிரம்பும் என்பதாம்

வி-ரை. வேறுவழியால் ஒழிக்கவொண்ணாத பிறவியையொழித் தற்குரியது தவமாதலால் அதனை 'உயர்தவம்' என்றார். ஆற்றுதல்-செய்தல். "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம், ஈண்டு முயலப் படும்", கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலின், "ஆற் றலைப்பட்டவர்க்கு" என்னுந் திருக்குறட் செய்யுட்கள் இங்கு உதகரிக்கத்தக்கன. மனையி லுள்ளாளை மனையென்றே கூறினர் இடவாகு பெயரான். அன்றியும், இவளில்லாதது வீடன்று, காடா கும் என்றறிஞர் கூறுதலால் இவளிருத்தல்பற்றி மனையென்று ரெனினு மமையும். (௬)

படைதனக்கு யானை வனப்பாகும் பெண்ணி
னிடைதனக்கு நுண்மை வனப்பா-நடைதனக்குக்
கோடா மொழிவனப்புக் கோற்கதுவே சேவகர்க்கு
வாடாத வன்கண் வனப்பு.

ப-ரை. யானை - யானையானது, படைதனக்கு - சேனைக்கு, வனப்பு ஆகும் - அழகாகும்; நுண்மை-நுட்பமானது, பெண் இடை தனக்கு - பெண்ணின் இடைக்கு, வனப்பு ஆம்-அழகாகும்; கோடா மொழி - ஒருபக்கத்துச் சாயாத சொல்லானது, நடை தனக்கு - ஒருவனது ஒழுக்கத்துக்கு, வனப்பு - அழகாகும்; கோற்கு - செங் கோலுக்கும், அதுவே-அதுவேயழகாகும்; வாடாத வன்கண்-கெடாத வன்கண்மையானது, சேவகர்க்கு - சேவகரா யிருப்பவர்க்கு, வன ப்பு - அழகாகும், எ - று.

க-ரை. யானை முதலியவை படை முதலியவற்றிற்கு அழகு செய்வன வென்பதாம்.

வி-ரை. நால்வகைப் படையுள்ளும் யானைப்படை சிறந்ததாக லான் 'படைதனக்கு யானை வனப்பாகும்' என்றும், இடை சிறுத் திருத்தல் மாதர்க்கழகாதலால் 'பெண்ணி னிடைதனக்கு நுண்மை

வனப்பாம்' என்றும், பக்ஷபாதமின்றிப்பேசுதல் ஒருவனது ஒழுக்கத்துக் கழகாதலால், 'நடைதனக்குக் கோடா மொழிவனப்பு' என்றும், செங்கோலுக்கும் அதுவே யாதலால் 'கோற்கதுவே' என்றும், சேவகர்க்கு ஒருகாலத்துங் குறையாத வீரத்தன்மையே யழகாதலால் 'சேவகர்க்கு வாடாத வன்கண் வனப்பு' என்றும் கூறினார். (எ)

பற்றினன் பற்றற்ற னூறவசி யெப்பொருளு
முற்றின னாகு முதல்வனாற்-பற்றினாற்
பாத்துண்பான் பார்ப்பான் பழியுணர்வான் சான்றவன்
காத்துண்பான் காணான் பிணி.

ப-ரை. பற்று அற்றான் -பற்றற்றவனாகிய இறைவனாற் சொல்லப்பட்ட, நூல் - நூற்பொருளை, பற்றினன்-பற்றியொழுகுவோன், தவசி-தவசியாவான்; எப்பொருளும்-எல்லாப் பொருள்களையும், முற்றினன் - முற்றவுணர்ந்தவன், முதல்வன் ஆகும் - முதல்வனாவான்; நூல் பற்றினால் - நூல்களின் பொருள்களைப் பற்றுதலால், பாத்து உண்பான் - பகுத்துண்பவன், பார்ப்பான் - பார்ப்பானாவான்; பழி உணர்வான் - பழிக்கேதுவான காரியங்களை யறிந்து விலக்குவோன், சான்றவன்-சான்றோனாவான்; காத்து - (தான் உண்ணத்தகாதவற்றை யுண்ணாமல்) தடுத்து, உண்பான் - (உண்ணத் தகுவனவற்றை) உண்பவன், பிணி காணான்-நோய்களைக் காணாதவனாவான், எ-று.

க-ரை. பற்றற்றவனது நூலைப்பற்றினவன் தவசியாவான்; எல்லாமறிந்தவன் முதல்வனாவான்; பகுத்துண்பவன் பார்ப்பானாவான்; பழியறிவோன் சான்றோனாவான்; காத்துண்பவன் நோய்காணாதவனாவான் என்பதாம்.

வி-ரை. பற்றற்றான் என்றது முதற்கடவுளை; இவன் இயல்பாகவே பற்றற்றிருப்பவனாதலால் 'பற்றற்றான்' என்றார். இதனை, "பற்றுக பற்றற்றான் பற்றினையப்பற்றைப், பற்றுக பற்றுவிடற்கு"

என்னுந் திருக்குறளானு முணர்க. பற்றற்ருனூல் என்றது முதனூலாகிய வேதத்தை. தவசி - தவஞ்செய்வோன். முதல்வன் - தலைமைப்பாடுடையவன். முதல்வனூற்பற்று-வேதார்த்தத்தில் சிரத்தை. பகுத்து எனற்பாலது பாத்து என மருவிற்று. சான்றவன் - கல்வியறிவொழுக்கங்களால் நிறைந்தவன். காத்தல் - தடுத்தல். (அ).

கண்வனப்புக் கண்ணோட்டங் கால்வனப்புச் செல்லாமை
யெண்வனப் பித்துணையா மென்றுரைத்தல்-பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் றன்னாடு
வாட்டானன் றென்றல் வனப்பு.

ப-ரை. கண் வனப்பு-கண்ணுக் கழகாவது, கண்ணோட்டம் - பிறர்மேல் கண்ணோடுதலாம்; கால் வனப்பு-காலுக்கழகாவது, செல்லாமை-பிறரிடத்தி லிரக்கப்போகாமையாம்; எண் வனப்பு-ஆலோசனைக்கழகாவது, இத்துணையாம் என்று உரைத்தல்-இந்தக்காரியம் இவ்வளவினதென்று துணிந்துரைத்தலாம்; பண் வனப்பு-பண்ணுக் கழகாவது, கேட்டார் நன்று என்றல் - கேட்டவர் நன்றென்று சொல்லுதலாம் ; கிளர் - படைகளோடுகூடி விளங்குகிற, வேந்தன் வனப்பு - அரசனுக் கழகாவது, தன் நாடு - தனது நாட்டை, வாட்டான் - வருத்தான், நன்று - இது அழகிது, என்றல் - என்று சொல்லுதற் குரியனாதலாம், எ-று.

க-ரை. கண்ணுக்குக் கண்ணோட்டமும், காலுக்கு இரக்கச் செல்லாமையும், சூழ்ச்சிக்குத் துணிந்துரைத்தலும், பண்ணுக்குக் கேட்டவர் நன்றென்றலும், அரசனுக்குத் தன்னாட்டி லுள்ளாரை வருத்தானென்று யாவராலும் புகழப்படுதலும் அழகென்பதாம்.

வி-ரை. கண்ணோட்டம் - கண்ணோட்டஞ் செய்தல்; இதனை வடநூலார் தாக்ஷிண்யம் என்பர். செல்லாமை - நடவாமை; இது இரக்கச் செல்லாமை யென்றிங்குப் பொருள்பட்டது. இரக்கச்

செல்லாமையால் காலுக் கழகுண்டாய விடத்து காலையுடையவனுக் கழகென்பது சொல்லாதே யமைந்தது. சூழ்ச்சி முடிவு காண்டற்குச் செய்வதாதலாலும், முடிவுகண்டு துணிந்துரையா விடத்து அச் சூழ்ச்சிக்குப் பயனில்லை யாதலாலும் 'எண்வனப் பித்துணையா மென் றுரைத்தல்' என்றார். பண் - இந்தளம், நட்டபாடை முதலியன; இராகம் எனினுமாம். இராகங்களாவன - நாட்டை, மத்தியமாவதி, தோடி, பைரவி, காம்போதி முதலியன. வாட்டுதல் - வருத்துதல்.

கொன்றுண்பா னாச்சாங் கொடுங்கரிப்போ வானாச்சா
நன்றுணர்வார் முன்கல்லா னாவுஞ்சா-மொன்றானுங்
கண்டுழி நாச்சாங் கடவான் குடிப்பிறந்தா
னுண்டுழி நாச்சா முணர்ந்து.

ப-ரை. கொன்று - ஒருயிரைக் கொன்று, உண்பான் - அதன் தசையை யுண்பவனுடைய, நா - நாவானது, சாம் - அற்றுவிழும்; கொடு - கொடுமையாகிய, கரி - சாக்ஷிசொல்ல, போவான்-போகிறவனுடைய, நா - நாவானது, சாம் - அற்றுவிழும்; நன்று உணர்வார்முன் - மிகவுங் கற்றறிந்தவர்க்கெதிரே, கல்லான் - கல்லாதவனுடைய, நாவும் - நாவும், சாம் - அடங்கும்; ஒன்றானும் கண்டுழி - கடன்கேட்க வந்தவனைக் கடன்வாங்கினவன் கண்டபோது, நா - அவனது நாவும், சாம் - அடங்கும்; குடிப்பிறந்தான் - குடிப்பிறந்தானொருவன், கடவான் - ஒருவர்செய்த நன்றியை மறவாதவனாதலால், உண்டுழி - நன்றி செய்தவனிடத்து ஒரு தவறுண்டாய விடத்து, உணர்ந்து - (அவன்செய்த நன்றியை) அறிந்து, நா-குடிப்பிறந்தவனது நாவானது, சாம்-அந்நன்றி செய்தவனது குற்றத்தை யெடுத்துச் சொல்லுதற்கஞ்சி அடங்கும், எ-று.

க-ரை. புலாலுண்போன் முதலியோருடைய நாக்கள் அடங்குமென்பதாம்.

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
 [redacted]IYUR, MADRAS-41

வி-ரை. கொன்று என்பதற்குச் செயப்படுபொருளாகிய வுயிர் வருவித் துரைக்கப்பட்டது. கொன்றுண்பா னுச்சாம் என்றது கொன்றுண்பவனது நாவானது காலதூதுவரா லறுபட்டுவிழும் என்றபடி. கொடுங்கரி - பொய்ச்சாட்சி. போவான் - நியாயஸ்தலத்துக்குப்போவோன். குடி-இருமாபுந் தூயவாகப்பெற்ற வுயர்குடி. நன்று-நன்மை யெனினுமாம். கண்டவுழி உண்டவுழி யென்பன கண்டுழி உண்டுழியென விகாரம் பெற்றன. (௧0)

சிலம்பிக்குத் தன்சினை கூற்றநீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான்-வலம்படா
மாவிற்குக் கூற்றமா ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை.

ப-ரை. சிலம்பிக்கு - சிலந்திப்பூச்சிக்கு, தன் சினை-அதன் முட்டையே, கூற்றம் - யமனாகும்; விலங்கிற்கு - மிருகங்களுக்கு, நீள் கோடு - நீண்டகொம்புகளே, கூற்றம்-யமனாகும்; வலம்படா-வெற்றியுண்டாகாத, மாவிற்கு - கவரிமாவிற்கு, மயிர்தான் - அதன் மயிரே, கூற்றம் - யமனாகும்; ஞெண்டிற்கு - நண்டுக்கு, தன் பார்ப்பு ஆம் - தன் குஞ்சுகளே யமனாகும்; நாவிற்கு - ஒருவனது நாவுக்கு, நன்று அல் வசை - நன்மையல்லாத வசை கூறுதல், (கூற்றம்)-யமனாகும், எ - று.

கு-ரை. சிலம்பிக்கு அதன் முட்டையும், மிருகங்களுக்கு அவற்றின் நீண்ட கொம்புகளும், கவரிமாவிற்கு அதன் மயிரும், நண்டுக்கு அதன் குஞ்சுகளும், ஒருவனது நாவுக்குப் பிறரை வசை கூறுதலும் யமனாகு மென்பதாம்.

வி-ரை. சிலந்திப்பூச்சி முட்டையிட்டவுடன் தானழிதலால் 'சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்' என்றும், மிருகங்களுக்கு நீண்ட கொம்பிருந்தால் அது மரங்கள் முதலியவற்றில் குத்தி முறியப்பெ

ற்று வருந்துமாதலாலும், அக்கொம்பு எவர்மீதாயினும் பட்டு அபாயம் விளைக்குமென்று அறுக்கப்படு மாதலாலும் 'நீள்கோடு விலங்கிற்குக் கூற்றம்' என்றும், கவரிமாவானது முட்செடி முதலியவற்றிற் பட்டுத் தன் மயிரொன் றுதிர்ந்தால் அது தன்னுயிரை விட்டுவிடுமாதலால் 'மயிர்தான் வலம்படா மாவிற்குக் கூற்றம்'என்றும், நண்டு தன் குஞ்சுகள் வெளிப்பட்டவுடனே இறந்துபோமாதலால் 'ஞெண்டிற்குத் தன்பார்ப்பு' என்றும், பிறர்பழி கூறுவோனடையும் பயன் இம்மையிற் பலராலும் இகழப்படுதலும், மறுமையில் எரிவாய் நிரயமுமேயாதலாலும் 'நாவிற்கு நன்றல் வசை' என்றும் கூறினார். நீள்கோடு விலங்கிற்குக் கூற்றம் என்றமையால் கொம்புகள் மிதமாயிருத்தலே நன்மையென்றதாயிற்று. விலங்கு - எருது முதலாயின. (கக)

நாணிலான் சால்பு நடையிலா னன்னோன்பு
ஊணிலான் செய்யு முதாரதைபு - மேணிலான்
சேவகமுஞ் செந்தமிழ் தேற்றான் கவிசெயலு
நாவகமே நாடி னகை.

ப-ரை. நாண் இல்லான் சால்பும்-நாணமில்லாதவனது அமைதியும், நடையிலான் நல் நோன்பும் - நல்லொழுக்க மில்லாதவனது நல்ல நோன்பும், ஊண் இல்லான் செயயும் உதாரதையும்-தனக்கே உண்பொருளில்லாதவன் செய்கிற உதாரத்துவமும், ஏண் இல்லான் சேவகமும் - வலியில்லாதவனது சேவகமும், செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்-செந்தமிழ்த்தேர்ச்சியில்லாதவன் கவிசெய்தலும்,(ஆகிய இவ்வைந்தும்) நாவகமே நாடின்-நாவினிடத்துக் கொண்டாராயின், நகை - சிரிப்புக்கிடமாம், எ - று.

க-ரை. நாணமில்லாதவன் அமைதி, நன்னடையில்லாதவனது நோன்பு, உண்பொருளில்லாதவனது உதாரத்துவம், வலியில்லாதவனது சேவகம், செந்தமிழ்த் தேர்ச்சியில்லாதவன் கவிபாடுதல் என்னு மிவ்வைந்தும் பயனில வென்பதாம்.

வி-ரை. "அன்பு நாணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ டைந்து சால்பூன்றிய தூண்" என்ற திருக்குறளின்படியே, நாணில் வழி சால்பு நிலைபெறுமையின் 'நாணிலான் சால்பும்' என்றும், நல் லொழுக்கமில்லாதவனது நோன்பு முற்றுப்பெறாதாதலால்'நடையி லானன்னோன்பும்' என்றும், தனக்கே யுண்பொருளில்லாதவன் பிறர்க்குபகரித்தல் முடியாதாதலால் 'ஊணிலான் செய்யு முதாரதை யும்' என்றும், உடல்வலி மனவலிகளில்லாதவன் சேவகனாயிருத்தல் தகாதாதலால் 'ஏணிலான் சேவகமும்' என்றும், செந்தமிழ்ப்பயிற்சி யும் தேர்ச்சியுமில்லாதவன் கவிசெய்யின், அது கற்றுவல்ல அறிஞ ரால பழிக்கப்படுதலேயன்றி, அவர்க்கு நகையையும் விளைக்குமாத லால் 'செந்தமிழ்தேற்றான் கவிசெயலும்' என்றுங்கூறினார். உம்மைக ளைந்தும் எண்ணுப்பொருளில் வந்தமையால் எண்ணும்மைகள். நாவகமே நாடினகை யென்பதனைச்சால்பு முதலியவைந்தனிற்றிலும் சேர்த்துரைத்துக்கொள்க. நோன்பு - விரதம், தவம எனினுமாம். உதாரத்துவம் - பெருங்கொடைத்தன்மை. தேற்றாதான் என்பது தன்வினையில் வந்தது. (கஉ)

கோறலு நஞ்சூனைத் துய்த்தல் கொடுநஞ்சு
வேறலு நஞ்சுமா றல்லானைத்-தேறினா
னீடாங்கு செய்தலு நஞ்சா மிளங்கிளையை
நாடாதே தீதுரையு நஞ்சு.

ப-ரை. கோறலும் - ஒருயிரைக் கொல்லுதலும், நஞ்சு - ஒரு வனுக்கு நஞ்சுபோலும்; ஊனை துய்த்தல் - பிறிதொன்றின் தசை யைத் தின்னுதலும், கொடு நஞ்சு - கொடிய நஞ்சுபோலும்; மாறு அல்லானை - தனக்கெதிராகாதவனை, வேறலும் - எதிர்த்து வெல்லு தலும், நஞ்சு - நஞ்சுபோலும்; தேறினான் - ஒரு கருமத்துக்குரியவ னென் றாராய்ந்து தெளியப்பட்டவனாகிய வொருவன், நீடாங்கு செய்தலும் - (அக்கருமத்தின்மேல்விடாமல்) கால நீட்டிப்புச் செய்

தலும், நஞ்சு ஆம் - நஞ்சுபோலும்; இளங்கிளையை - இளையசுற்றத்தாரை, நாடாதே - ஆராயாமலே, தீது உரையும்-தீங்குரைத்தலும், நஞ்சு-நஞ்சுபோலும், எ-று.

க-ரை. கொலைசெய்தலும், புலாலுண்டலும், நிகரில்லாதவனை யெதிர்த்து வெல்லுதலும், ஆராய்ந்து தெளிந்த ஒருவனை வினைமேற் செலுத்தாது காலநீட்டம் செய்தலும், இளங்கிளைஞரை ஆராயாது தீங்குசொல்லுதலும் ஆகிய இவ்வைந்தும் ஒருவனை நஞ்சுபோலத் துன்பஞ்செய்யு மென்பதாம்.

வி-ரை. துய்த்தல் என்பதனீற்றி[illegible]ண் ணும்மை கூட்டியுரைக்கப்பட்டது. கோறல் என்பதற்குப் பகுதி கொல்; வேறல் என்பதற்குப் பகுதி வெல். இளங்கிளை - புதியவுறவினர். தீதுரை என்பதில் உரை முதனிலைத் தொழிற்பெயர். கோறல் முதலிய வைந்தும் நஞ்சுபோல ஒருவனுயிர்க்குறுகண் செய்வனவாதலால் இவற்றைச் செய்யலாகா தென்பதிதனாற் போந்தபொருள். தீதுரையாவது மனம் வருந்தும்படியான பழி மொழிகளை யெடுத்துரைத்தல். நான்காவது நஞ்சு நீங்கலாக ஏனைய நான்கு நஞ்சும் பெயர்ப் பயனிலைய. (கஙு)

இடரின்னா நட்டார்க ணீயாமை யின்னா
தொடர்பின்னா நள்ளார்கட் டூயார்ப் - படர்பின்னா
கண்ட லவிர்பூங் கதுப்பினா யின்னாதே
கொண்ட விரதங் குறைவு.

ப-ரை. நட்டார்கள் - நட்டாரிடத்து, இடர் - (கண்ட) துன்பம், இன்னா - தீயது; (நட்டார்கள்)-நட்டாரிடத்து, ஈயாமை இன்னா-கொடாமை தீயது; நள்ளார்கள்-மனப்பொருத்த மில்லாதவரிடத்து, தொடர்பு இன்னா - நட்புக் கோடல் தீயது; தூயார் - மனந் தூயாரை, படர்பு - விட்டு நீங்குதல், இன்னா - தீயது, கொண்ட விரதம் குறைவு - ஒருவனெடுத்துக்கொண்ட விரதத்தைச் செய்து முடிக்காமல் குறையாய் விடுதல், இன்னாதே-தீமையைத் தருவதேயாம்,எ-று.

க-ரை. நட்டாரிடத்திற் றுன்பமிருக்கக் காண்டலும், அவர்கட் கீயாமையும், பகைவரை நட்டலும், தாயாரை நீங்குதலும், எடுத்த விரதத்தை முடிக்காமையும் ஆகிய இவ்வைந்தும் தீயவா மென்பதாம்.

வி-ரை. நண்பினர் துன்புறக் கண்டவன் அத்துன்பத்தை யொழிக்க முயலாவிடின் மிகுபாவமாதலால் 'இடரின்னா நட்டார்கண்' என்றும், அவர்க்கீயாமை உலோபகுணமாமாதலால், 'ஈயாமையின்னா' என்றும், பகைவனை நட்புக்கோடல் அபாயகரமான பெருங்குற்றமாதலால் 'தொடர்பின்னா நள்ளார்கண்' என்றும், பெரியோரைக் கைவிடுதல் பெருந் துன்பத்துக் கேதுவாதலால் 'தாயார்ப் படர்பின்னா' என்றும், விரதக் குறைவு சாதப்பயன் றராமையால் 'இன்னாதே கொண்ட விரதங் குறைவு' என்றுங் கூறினார். 'கண்டலவிர்பூங் கதுப்பினாய்' என்றது மகடூஉ முன்னிலை; இதற்குத் தாழை மடலின் மணங்கமழும் கூந்தலை யுடையாளே என்பது பொருள். கண்டல் - தாழை, கதுப்பு - மென்மயிர். (கச)

கொண்டான் வழியொழுகல் பெண்மகன் றந்தைக்குத்
தண்டான் வழியொழுக றன்கிளையஃ - தண்டாதே
வேல்வழி வெம்முனை வீடாது மன்னுடு
கோல்வழி வாழ்தல் குணம்.

ப-ரை. கொண்டான்வழி-தன்னைக்கொண்ட கணவன் சொல்வழியே, ஒழுகல் - தவறாது நடத்தல், பெண்-பெண்குணமாகும்; தந்தைக்கு-தந்தைக்கு, தண்டான்-இடையறாதே, வழி-அவன் சொல்வழியே, ஒழுகல் - தவறாது நடத்தல், மகன் - மகன் குணமாகும்; அஃது - அவன்போலவே வழியொழுகுதல், தன்கிளை-தன்கிளையின் குணமாகும்; அண்டாதே-பகைவரோடு கூடாதே, வேல்வழி-அவரை வெல்லும் வழியால், வீடாது-இடைவிடாமல் வாழ்தல், வெம்முனை -

அரசனது வெம்முனையின்கட் போயிருந்தார் குணமாகும்; மன்கோல் வழி வாழ்தல் - அவ்வரசனது கோல்வழியே வாழ்தல், நாடு குணம் - நாட்டின் குணமாகும், எ - று.

க-ரை. பெண் கணவன் சொல்வழியே யொழுகுதலும், மகன் தந்தையின் சொல்வழியே யொழுகுதலும், இளை அவன்போலவே வழியொழுகுதலும், வெம்முனையின்கட் போயிருந்தார் பகைவரோடு சேராதே அவரை வெல்லும வழியால் இடைவிடாமல் வாழ்தலும், நாடு அரசனது கோல்வழியே வாழ்த[illegible] அவ்வவர்க்குரிய குணங்களாகும் எனபதாம்.

வி-ரை. ஒழுகுதல்-நடத்தல். தண்டுதல்-தடைபடல். அண்டுதல் - கூடுதல் வெம்முனை - கொடியபோர். வீடுதல்-ஆடையறுதல். மன் - அரசன். குணம் என்பதனைப் பெண்முதலிய வைவர்க்குங் கூட்டி யுரைத்துக்கொள்க. (க௫)

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
யிழைத்ததீங் கெண்ணி யிருத்த - லிழைத்த
பகைகெட வாழ்வதும் பலபொருளார் நல்லார்
நகைகெட வாழ்வது நன்று.

ப-ரை. பிழைத்தல்-(தனக்குப் பிறனொருவன் செய்த) பிழையை, பொறுத்தல் - பொறுத்துக்கொள்ளுதல், பெருமை - பெருமையாகும்; இழைத்த - பிறர்செய்த, தீங்கு - தீமையை, எண்ணியிருத்தல் - நினைத்துக்கொண்டே யிருத்தல், சிறுமை - சிறுமையாகும்; இழைத்த - தான்செய்த, பகை - பிழைகள், கெட-கெடும்படி, வாழ்தலும் - வாழ்வதும், பலபொருளார் - பலபொருள்களையு முதவினோரும், நல்லார் - நல்லோரும், நகை - இகழ்ந்து நகைத்தல், கெட - இல்லையாம்படி, வாழ்வதும்-வாழ்தலும், நன்று-நன்மையாம், எ - று.

க-ரை. தனக்குப் பிறன்செய்த பிழையைப் பொறுத்துக்கொள்ளுதல் பெருமையாகும்; பிறன் செய்த தீமையை நினைத்துக்கொண்டேயிருத்தல் சிறுமையாகும்; தான்செய்த பிழைகள் கெடும்படி வாழ்தலும், உதவிசெய்தவரும் நல்லோரும் நகைத்தல் இல்லையாம்படி வாழ்தலும் நன்மையாம் என்பதாம்.

வி-ரை. பிழைத்தல் - பிழைசெய்தல். எண்ணியிருத்தல் - மறவாதிருத்தல். இழைத்தல் - செய்தல். நகை - நகைத்தல (தொழிற்பெயர்). பெருமை சிறுமையென்பன பண்பாகுபெயர்களாய் அவற்றை யுடையாரை யுணர்த்தின. பின்பு அவர்கள் குணங்களை யுணர்த்தினமையால் முதலாகுபெயர்களுமாம். ஆதலால் இவை இருமடியாகுபெயர்கள். (கசு)

கதநன்று சான்றாண்மை தீது கழிய
மதநன்று மாண்பில்லார் முன்னர்—விதநன்றாற்
கோய்வாயிற் கீழுயிர்க்கீ துற்றுக் குரைத்தெழுந்த
நாய்வாயு ளல்ல தசை.

ப-ரை. மாண்பு இல்லார் முன்னர் கதம் நன்று - நற்குணமில்லாதார் முன்பு கோவம் நன்று; சான்றாண்மை தீது - சான்றாண்மை தீதாகும்; கழியமதம் நன்று - மிக்க வலிசெய்தல் நன்று; கோய் வாயின் - கோய்போலும் வாயையுடைய, கீழ் உயிர்க்கு - கீழ்மக்களுக்கு, ஈ - கொடுக்கிற, துற்று - உணவு, குரைத்து எழுந்த - குரைத்துக் கொண்டே எழுந்த, நாய் வாயுள் - நாயின்வாயிற் கொடுத்த, நல்ல தசை விதம் நன்று - நல்ல மாமிச விதத்திலும் நன்மையாம், எ-று.

க-ரை. நற்குண மில்லாதவர்க் கெதிரில் கோவமே நன்று; சான்றாண்மைதீது; மிக்கவலிசெய்தல் நன்று; கீழ்மக்கட் கீயுமுணவு நாய்வாயிற் கொடுத்த தசைக்கு நிகராகும் என்பதாம்.

வி-ரை. சுதம் - கோவம். மதம் - வலி. சான்றாண்மை - சால்புடைமை. கழிய - கழியென்னும் உரிச்சொல் லடியாகப் பிறந்த வினையெச்சம். மாண்பு - நற்குணம். கோய்-கள்முகக்கும் பாத்திரம். கூழுயிர் என்பதில் உயிர் மக்களுயிரை யுணர்த்திற்று. குறைத்தல் - சத்தித்தல். (கஎ)

நட்டாரை யாக்கிப் பகைபணித்து வையெயிற்றுப்
பட்டா ரகலல்கு லார்ப்படிந்—தொட்டித்
தொடங்கினா ரில்லகத் தன்பிற் றுறவா
வுடம்பினா னாய பயன்.

ப-ரை. நட்டாரை ஆக்கி - தம்மோடு நட்புச் செய்தவரைச் செல்வராக்கி, பகை பணித்து-பகைவரைத் தாழ்த்தி, வை - கூர்மையாகிய, எயிறு - பல்வினையுடைய, பட்டு ஆர்-பட்டாடை யணியப்பெற்ற, அகல் அல்குலார் - அகன்ற அல்குலையுடைய மாதரை, படிந்து - சேர்ந்து, ஒட்டி - தொடர்வுற்று, தொடங்கினார் (அகத்து)-முறையாயினா ரிடத்தும், இல் அகத்து - தாம்பிறந்த குடியிற் பிறந்தவரிடத்தும், அன்பின் - அன்பினால், துறவா-நீங்காமையும் ஆகிய இவ்வைந்தும், உடம்பினான் ஆய-இந்த அரிதான மக்கட் பிறப்புப் பிறந்ததனா லுண்டாகிய, பயன் - பயன்களாம், எ - று.

க-ரை. நட்டாரை உயர்த்தலும், பகைவரைத் தாழ்த்தலும், மாதரைச் சேர்ந்து உறவாதலும், அவரிடத்தும் தாம் பிறந்த குடியிற் பிறந்தவரிடத்தும் அன்புடைமையும் ஆகிய இவ்வைந்தும் உடம்பெடுத்ததனாற் பெற்ற பயன்களாம் என்பதாம்.

வி-ரை. ஆக்குதல் - செல்வத்தா னுயரச்செய்தல். பணித்தல்-தாழ்த்தல். அன்பின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றுவதன் கருவிப்பொருளில் வந்தது. துறவாமை யென்பது துறவா என ஈறு தொகுத்தலாயிற்று. உடம்பு என வாளாகூறினாரேனும், நட்டா

ரை யாக்கல் முதலிய குணங்கள் பிறவுடம்புகட்கின்மையால் மக்களுடம்பு என்று பொருள் கூறலாயிற்று. (கஅ)

பொய்யாமை பொன்பெறினுங் கள்ளாமை மெல்லியலார்
வையாமை வார்குழலார் நச்சினு—நையாமை
யோர்த்துடம்பு பேருமென் றூனவா யுண்ணானேற்
பேர்த்துடம்பு கோட லரிது.

ப-ரை. பொன் பெறினும் - பொன் பெற்றானாயினும், பொய்யாமை - பொய் சொல்லாமையும்; கள்ளாமை - (பிறர்பொருளைக்) களவு செய்யாமையும்; மெல் இயலார் - எளியாரை, வையாமை - வையாமையும்; வார் குழலார் - மாதர், நச்சினும் - விரும்பினாலும், நையாமை - மனந்தளராமையும்; உடம்பு பேரும் என்று ஓர்த்து - தன்னுடம்பு மெலியுமென்று அறிந்து, ஊன் - பிறிதோருடம்பின் தசையை, அவாய் - விரும்பி, உண்ணானேல் - ஒருவன் உண்ணானாயின், (அவன்) பேர்த்து - மீட்டும், உடம்பு கோடல் - பிறிதோருடம்பைக் கொள்ளுதல், அரிது - இல்லை, எ-று.

க-ரை. பொய் சொல்லாமையும், பிறர்பொருளைக் கள்ளாமையும், எளியாரை வையாமையும், பிறமாதர் விரும்பினும் அவரைத் தான் விரும்பாமையும், உடம்பு மெலியுமென்று ஊன் உண்ணாமையும், ஒருவன் உடையனாயின், அவன் வேறோருடம்பெடுக்கமாட்டான் என்பதாம்.

வி-ரை. பொன்பெறினும் பொய்யாமை யென்றதனால் அவனது நிராசை பெறப்பட்டது. கள்ளல்-பிறர்பொருளை வஞ்சித்துக் கொள்ளல். மெல்லியலார் - பொருளில்லாமையால் மெலிந்திருப்பவர். வார்குழலார் - நீண்ட கூந்தலையுடையவர். நச்சல் - விரும்புதல். நைதல் - மனந்தளர்தல். ஓர்ந்து என்பது ஓர்த்து என வலித்தல் பெற்றது. உண்ணானேல் என்பதில் ஏல் எனின் என்பதன் மரூஉ.

பேர்த்துடம்பு கோடலரிது என்றது இனிப்பிறவான் என்றபடி. கோடல்-கொள்ளுதல். "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால், மனக்கவலை மாற்ற லரிது", "அறவாழி யந்தணன் றாள் சேர்ந்தார்க் கல்லாற், பிறவாழி நீந்த லரிது" என்னுந் திருக்குறட் செய்யுட்களில் அரிது என்பது இன்மைப் பொருள் தந்ததுபோல ஈண்டும் அரிது இன்மைப் பொருள்தந்து நின்றது. (கக)

தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்காற்
பூதரே முன்பொருள் செய்யாதா—ராதரே
துன்பமி லேம்பண்டி யாமே வனப்புடையே
மென்பா ரிருகா லெருது.

ப-ரை. கற்றவர் - அறிவு நூல்களைக் கற்றவர், தேவரே - தேவரை யொப்பாரே யாவர்; கல்லாதார் - அவற்றைக் கல்லாதவரைப்பற்றி, தேருங்கால்-ஆராய்ந்துபார்க்குமிடத்து, பூதரே - பசாசுகளோ டொப்பவரேயாவர்; முன் - முதுமைப் பருவம் வருவதற்கு முன்பே, பொருள் செய்யாதார் - பொருளைத் தேடி வைத்துக் கொள்ளாதவர், ஆதரே-அறிவிலாரேயாவர்; பண்டு-முன்னே, யாம்-யாம் (செல்வ முடையோமா யிருந்ததனால்), துன்பம் இலேம்-துன்ப முடையே மல்லேம், வனப்பு உடையேம் - அழகுடையேம், என்பார் - என்று சொல்லுவோர், இருகால் எருது - இருகால் மாடுகளுக்கு நிகராவர், எ-று.

க-ரை. அறிவு நூல்களைக் கற்றவர் தேவரை நிகர்ப்பார்; கல்லாதவர் பிசாசுகளை நிகர்ப்பார்; முதுமைப்பருவம் வருதற்கு முன்பே பொருள்தேடி வைத்துக்கொள்ளாதவர் அறிவிலாதவரே யாவர்; யாம் முன்னே செல்வரா யிருந்தமையால் துன்பமிலேம், அழகுளேம் என்பவர் இரண்டுகால் மாடுகளை நிகர்ப்பார் என்பதாம்.

வி-ரை. தேவரே என்பதில் ஏகாரம் தேற்றம், அன்றிப் பிரிநிலை யெனினுமாம்; பூதரே, ஆதரே என்பனவு மன்ன. தேர்தல்

ஆராய்தல். முன்பொருள் செய்தலாவது - உடம்பு தளர்ந்து அங்கு மிங்கும் ஓடிப் பொருள்தேட இயலாத முதுமைப் பருவம் வருதற்கு முன்பே, அப்பருவத்தி லுதவும்பொருட்டு இளமைப் பருவத்திற்றானே பொருளீட்டி வைத்துக்கொள்ளுதல். நாற்காலெருதிற் பிரித்தற்கு 'இருகா லெருது' என்றார். (உ0)

கள்ளான்சூ தென்றுங் கழுமான் கரியாரை
நள்ளா னுயிரிரங்க நாவாடான்—நள்ளானூ
னூண்மறுத்துக் கொள்ளானே லூனுடம் பெஞ்ஞான்றுந்
தான்மறுத்துக் கொள்ளான் றளர்ந்து.

ப-ரை. கள்ளான் - (பிறர் பொருளைக்) களவு செய்யாதவனாய், சூது - சூதாட்டத்தில், என்றும் - எக்காலத்தும், கழுமான்-பொருந்தாதவனாய், கரியாரை - கீழ்மக்களை, நள்ளான் - நட்புக்கொள்ளாதவனாய், உயிர் இரங்க-பிறவுயிர்களிரங்கும்படி, நா ஆடான்-நாவாடாதவனாய், ஊன் நள்ளான் ஆய்-ஊனுணவைப் பொருந்தாதவனாய், மறுத்து-தடுத்து, கொள்ளானேல்-அவ்வூனுணவை ஒருவன் கொள்ளாதிருப்பானாயின், தான் - அவன்றான், மறுத்து - மீட்டும், ஊன் உடம்பு-தசையோடு கூடிய வுடம்பை, எஞ்ஞான்றும் - எந்நாளும், தளர்ந்து - ஒழுக்கம் தளர்ந்து, கொள்ளான் - எடுக்கமாட்டான், எ-று.

க-ரை. கள்ளாமலும், சூதாடாமலும், கீழ்மக்களை நட்புக்கொள்ளாமலும், பிறர் மனம் வருந்தும்படி வன்சொற் சொல்லாமலும், ஊனுண்ணாமலும், ஒருவனிருப்பானாயின், அவன் மீட்டும் பிறக்கமாட்டான் என்பதாம்.

வி-ரை. கள்ளல் - திருடல். கழுமல் - பற்றல். கரியார் - இருடர். இரங்கல் - வருந்தல். நாவாடல் - பேசுதல். உயிர் என்றது மக்களுயிரை, இரங்குதற்குரியது அதுவே யாதலான். (உக

பூவாது காய்க்கு மரமுள நன்றறிவார்
மூவாது மூத்தவர் நூல்வல்லார்—தாவா
விதையாமை நாறுவ வித்துள மேதைக்
குரையாமை செல்லு முணர்வு.

ப-ரை. பூவாது காய்க்கும் - பூவாமலே காய்க்கின்ற, மரமும் உள - மரங்களுமுள்ளன; நன்று அறிவார் - நன்மையை யறிபவர், மூவாது மூத்தவர் - ஆண்டுகளால் மூவாராயினும் அறிவினால் மூத்த வரோடொப்பர்; நூல் வல்லார்-நூல்களைக் கற்றுவல்லவர் (அப்பெற் றியரேயாவர்); தாவா - கெடாதிருக்க, விதையாமை - பாத்திகட்டி விதைக்காமலே, நாறுவ - முளைப்பனவாகிய, வித்து உள - வித்து முளவாயிருக்கின்றன; மேதைக்கு - அறிவுடையவனுக்கு, உரையா மை - பிறர் அறிவியாமலே, உணர்வு செல்லும் - அறிவுதோன்றும், எ - று.

க-ரை. பூவாமற் காய்க்குமரம்போல அறிவுடையார் ஆண்டுக ளால் மூவாராயினும் அறிவினால் மூத்தவரேயாவர்; நூல்களைக் கற்று வல்லாரும் அத்தன்மையரே; பாத்திகட்டி விதைக்காமலே முளைக் கிற வித்துமுண்டு; அதுபோல, அறிவுடையார்க்குப் பிறர் அறிவி யாமலே அறிவு தானேதோன்றும் என்பதாம்.

வி-ரை. பூவாது காய்க்குமரம் - பலா முதலாயின. மூவாது, மூத்தவர் என்பவற்றிற்குப் பகுதி மூ. விதையாமை நாறுவவித்து என் றது பாத்திகட்டி விதைக்காமல் தானே முளைக்கும் வித்து; அவை பறவையெச்சம் முதலாயினவற்றாலுள்ள வித்து. மேதை-பேரறிவு; அது அதனையுடையானையுணர்த்தினமையால்பண்பாகுபெயர்.(உஉ)

பூத்தாலுங் காயா மரமுமுள நன்றறியார்
மூத்தாலு மூவார்நூ றேற்றாதார்—பாத்திப்

புதைத்தாலு நாருத வித்துள பேதைக்
குரைத்தாலுஞ் செல்லா துணர்வு.

ப-ரை. பூத்தாலும்-பூத்திருந்தனவாயினும், காயா-காய்க்காத, மாமும் உள - மரங்களுமுண்டு; (அதுபோல) நன்று அறியார் - நன்மையறியாதவர், மூத்தாலும்-ஆண்டுகளால் முதிர்ந்தாலும், மூவார் - அறிவினால் முதிரார்; நூல் தேற்றுதார் - அறிவு நூல்களைக் கற்றுத் தெளியாதவர் (அத்தன்மையரேயாவர்); பாத்தி புதைத்தாலும் - பாத்திகட்டிப் புதைத்தாலும், நாருத வித்து உள - முளைக்காத வித்துமுண்டு; (அதுபோல) பேதைக்கு - அறிவிலானுக்கு, உரைத்தாலும் - பிறர் சொன்னாலும், உணர்வு செல்லாது - அறிவு தோன்றாது, எ-று.

க-ரை. பூத்தாலுங் காய்க்காத மரமுண்டு; அதுபோல, நன்மையறியாதவர் ஆண்டின் முதிர்ந்தாலும் அறிவின் முதிரார்; அறிவு நூல்களைக் கற்றுத் தெரியாதவர் அத்தன்மையரேயாவர். பாத்தி கட்டிப் புதைத்தாலும் முளைக்காத வித்துமுண்டு; அதுபோல, அறிவிலானுக்குப் பிறர் சொன்னாலும் அறிவு உண்டாகாது என்பதாம்.

வி-ரை. பூத்தாலுங் காயாமரம் என்றது பாதிரிமர முதலானவற்றை. தேற்றுதார் - தன்வினைப்பொருளில் வந்தது. நாறல் - முளைத்தல். பேதை - அறிவிலான். (உரு)

வடிவிளமை வாய்த்த வனப்பு வணங்காக்
குடிகுலமென் றைந்துங் குறித்து—முடியாத்
தளங்கா நிலைகாணார் தொக்கீர் பசுவா
விளங்காற் றுறவா தவர்.

ப-ரை. வடிவு - உருவு, இளமை - இளம்பருவம், வாய்த்த வனப்பு - பெற்ற அழகு, வணங்கா குடி - தாழாத குடிப்பிறப்பு,

குலம் - உயர்குலம், என்கிற ஐந்தும் - என்று சொல்லப்படுகிற ஐந்தும், குறித்து - தாம் குறித்து, முடியா - நுகர்ச்சி முடியப்பெற்று, துளங்கா நிலை காணார் - அழியாத நிலையைக் காணமாட்டார்; (ஆதலால்) இளங்கால் துறவாதவர் - இளம்பருவத்திலே துறவாதவர், தொக்கு - கூடி, ஈர் - பாரத்தை யிழுக்கின்ற, பகடு - எருதோடொப்பர், எ-று.

க-ரை. உருவு, இளம்பருவம், அழகு, உயர்குடி, உயர்குலம் இவ்வைந்தும் முடிவுபோக நுகர்வது அருமையாதலால், இளமைப் பருவத்திற்றானே துறவாதவர் பாரத்தை யிழுத்துச் செல்லுகிற எருதை நிகர்ப்பர் என்பதாம்.

வி-ரை. வணங்காக்குடி யென்றமையால் உயர்குடியென் றுரைக்கலாயிற்று. வணங்கா என்பதனை குலம் என்பதன்முன் சேர்த்து உயர்குலம் என்றுரைத்துக்கொள்க. என்ற ஐந்தும் என்பது என்றைந்தும் என நிலைமொழி யீறு தொகுத்தல் பெற்றது. தொக்கு என்பதற்குப் பகுதி தொகு. துளங்கா நிலை-அசையா நிலை. ஈர்த்தல்-இழுத்தல். ஆல் - அசை. துறத்தல் - இருவகைப் பற்றுக்களையும் விடுதல். இருவகைப் பற்றுக்களாவன - அகப்பற்று புறப்பற்று என்பன. நான் என்றல் அகப்பற்று, எனது என்றல் புறப்பற்று; இவற்றை அஹங்காரம் மமகாரம் என்பர் வடநூலார். (உ௬)

கள்ளுண்டல் காணிற் கணவர்ப் பிரிந்துறைதல்
வெள்கில ராய்ப்பிறரிற் சேற—லுள்ளிப்
பிறர்கருழ மாராய்த றீப்பெண் கிளைமைத்
திறமதுதீப் பெண்ணின் றொழில்.

ப-ரை. கள் உண்டல் - கள்ளுண்டலும், காணில் - ஆராய்ந்து பார்க்கின், கணவன் - தன் கணவனை, பிரிந்து உறைதல்-(புணர்ச்சி வேண்டாதே) பிரிந்துறைதலும், வெள்கு இலர் ஆய் - நாணுதல்

இல்லாதவராய், பிறர் இல் சேறல் - பிறர்மனைக்குச் செல்லுதலும், பிறர் கருமம் உள்ளி - பிறர் கருமத்தை நினைத்து, ஆராய்தல் - பிற ருடனாராய்தலும், தீ பெண் - தீய பெண்டிரோடு, கிளைமை - சிநேக முடைமையும், (ஆகிய ஐந்தும்) திறமது - தனக்கே யுரியதாக, தீ பெண்ணின்தொழில் - தீய பெண்டிரின் தொழில்களாம், எ-று.

கு-ரை. கள்ளுண்டல், கணவனைப் பிரிந்துறைதல், பிறர் மனைக்குச் செல்லுதல், பிறர் கருமத்தைப் பிறருடனாராய்தல், தீயபெண்டிரோ டிணங்குதல் ஆகிய ஐந்தும் தீப்பெண்ணின் தொழில்களாமென்பதாம்.

வி-ரை. வெள்கு - முதனிலைத் தொழிற்பெயர். உள்ளல் - நினைத்தல். கருமம் - காரியம். ஆராய்தல்-ஆலோசித்தல். கிளைமை - உறவாந்தன்மை (இணக்கம்). திறன் - கூறுபாடு (பங்கு). பஞ்ச மகா பாதகங்களுள் ஒன்றாதலால் கள்ளுண்டலை முதற்கட் கூறினார். தீப்பெண்ணின் தொழில்கள் வேறு பலவுளவாயினும் இவ்வைந்தும் அவற்றின் மிக்கன வென்பது தோன்ற இவ்வாறு கூறலாயினர். கள்ளுண்டல் தன் மதிமயக்கத்துக்கும் தன் குடிப்பழிக்கு மேதுவாதலாலும், கணவனைப் பிரிந்துறைதல் கற்பழிவாதலாலும், 'பிறர்மனைக்குச் செல்லுதல் அவமான மாதலாலும், பிறர்கரும மாராய்தல் தனக்குரிய தலைமையாலும், தீப்பெண்டிரிணக்கம் தனக்குத் தீங்கு பயத்தலாலும் இவ்வைந்தும் தீப்பெண்ணின் தொழில்' என்றார். (உகூ)

பெருங்குணத்தார்ச் சேர்மின் பிறன்பொருள்வெள வன்மின்
கருங்குணத்தார் கேண்மை கழிமி—னொருங்குணர்ந்து
தீசொல்லே காமின் வருங்காலன் றிண்ணிதே
வாய்ச்சொல்லே யன்று வழக்கு.

ப-ரை. பெருங்குணத்தார் - பெருங்குணத்தாரை, சேர்மின் - சென்றடையுங்கள்; பிறன்பொருள்-பிறன்பொருளை வெளவல்மின் -

கவராதேயுஙகள்; கருஙகுணத்தார் - தீக்குணத்தாரது, கேண்மை - நட்பை, கழிமின் - விடுங்கள்; ஒருங்கு உணர்ந்து - முற்றுமறிந்து, தீ சொல்லே - (பிறரைச் சொல்லும்) தீய சொற்களையே, காமின் - (சொல்லாது) தடுங்கள்; காலன்வரும்-யமன்வருவான், திண்ணிதே- இது உண்மையே, வாய்ச்சொல்லே அன்று-இது வாய்ச் சொல்லே யன்று, வழக்கு - உண்மை வழக்கேயாம், எ-று.

க-ரை. நற்குண முடையாரைச் சேருங்கள்; பிறன்பொருளைக் கவராதேயுங்கள்; தீக்குண முடையாரை யொழியுங்கள்; தீயசொற் களை வழங்காதிருங்கள்; காலன் வருவான்; இது உண்மையென்ப தாம்.

வி-ரை. பெருங்குணம் - பெருமைக் கேதுவாகிய சாந்தமுதலிய நற்குணங்கள். பிறன்-அந்நியன். அஞ்ஞானம் கருமையாதலால் கருங்குணத்தார் என்றது அஞ்ஞானிகளை. அஞ்ஞானிகள் - அறிவிலாதார். கருங்குணத்தார் கேண்மை கழிமின் என்றமையால் அவரைக் கழித்தல் சொல்லாதே யமையும். "யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்னுந் திருக்குறளின் பொருளை அடியொற்றி இவரும் 'தீச்சொல்லே காமின்' என்றார். காத்தல்-தம்மிடத் துண்டாகாது தடுத்தல்; காவாராயின், அத் தீச்சொற் பயனாகிய துன்பத்தை யநுபவிப்ப ரென்றதாயிற்று. திண்ணிது என்பதில் திண்மை உண்மை யென்னும் பொருளில் வந்தது.

(உசு)

வான்குருவுக கூடரக்கு வானுலண்டு கோற்றருதல்
தேன்புரிந்தி யார்க்குஞ் செயலாகா—தாம்புரீஇ
வல்லவர் வாய்ப்பன வென்றொரா ~~சேரவொ~~ருவர்க்
கொல்காதோ ரொன்று படும்.

ப-ரை. வான் குருவி கூடு - வாலிய தூக்கணங் குருவியினாற் செய்யப்படும் கூடும், அரக்கு - (பேரெறும்புகளாற் செய்யப்படும்) அரக்கும், வால்-வாலிய, உலண்டு - உலண்டு என்னும் புழுக்களால் நூற்கப்பட்ட நூலும், கோல் தருதல்-(வேறொருவகைப் புழுக்களாற் செய்யப்பட்ட) கோற்கூடும், தேன் - தேனீக்களாற் றிரட்டப்பட்ட தேன்பொதியும், (ஆகிய இவ்வைந்தும்) புரிந்து-விரும்பி, யார்க்கும்-யாவர்க்கும், செயல் ஆகா - செய்தல் முடியா; (ஆதலால்) வல்லவர் - எல்லாம் கற்று வல்லவரும், தாம் புரீஇ - தாம் விரும்பி, வாய்ப்பன என்னார் - நமக்கிவை வாய்ப்பாகச் செய்யலாமென்று கருதவுமாட்டார், ஒரோவொருவர்க்கு-ஒவ்வொருவர்க்கு, ஒல்காது - குறையாது, ஒரொன்று - ஒரோவொரு அருமையாகிய செய்கை, படும்-உண்டாயிருக்குமாதலால், எ-று.

க-ரை. தூக்கணங் குருவியின்கூடு முதலியவற்றைச் செய்தற் கருமை நோக்கி, அவற்றை, எல்லாங்கற்று வல்லவரும் செய்யலாமென்று மனத்தினால் நினைக்கவுமாட்டார் என்பதாம்.

வி-ரை. வான் என்பதற்கு அறிவினால் மேம்பட்ட என்றுரைத்தலுமாம். அரக்கு, தேன் என்பவற்றைச் செய்தற்குரிய பேரெறும்பும், தேனீக்களும் வருவித் துரைக்கப்பட்டன. உலண்டு - கோற்புழு. புரீஇ-சொல்லிசை யளபெடை. ஒல்கல் - குறைதல். படுதல் - உண்டாதல். செய்தலருமை நோக்கி, வல்லவர் வாய்ப்பனவென்னார் என்பதில் என்னார் என்பதற்குச் செய்யக் கருதவுமாட்டார் என்றுரைக்கப்பட்டது. இதனால், அற்பவுயிர்களாற் செய்யப்படுங் காரியங்கள் எல்லாங் கற்று வல்லவராலுஞ் செய்யலாகாதென்பது கூறப்பட்டது. (உஎ)

அறனறிந்தா னன்னெறிக்க ணிற்க வடங்கா
புறனறிந்தான் புன்னெறிபோ காது—புறனறிந்தான்

கண்டெடுத்துக் கட்களவு சூது கருத்தினாற்
பண்டெடுத்துக் காட்டும் பயின்று.

பொழிப்புரை. அறத்திற்குப் புறமாகிய பாவவினைகளை யுலகத்தின்கண்ணே நட்டான், சொல்லியடங்காத புல்லிய நெறியிற் போகாதே குற்றமில்லாத அறத்தினைச் சொல்லும் நூலினை யுலகத்துள்ளே நட்ட முழுதுணர்ந்த அறிவினாற் சொல்லப்பட்ட நன்னெறியின்கண்ணே நின்றொழுகுக; பாவநெறியினை நட்டவன் ஆராய்ந்தெடுத்துக் கள்ளினையும், களவினையும், சூதினையும் தன் கருத்தினாலே பயின்று பண்டுசெய்தாரை யெடுத்துக காட்டும், எ-று. (உஅ)

ஆணாக்கம் வேண்டாதா னாசா னவற்கியைந்த
மாணாக்க னன்பான் வழிபடுவான்—மாணாக்கன்
கற்பனைத்து மூன்றுங் கடிந்தான் கடியாதா
னிற்பனைத்து நெஞ்சிற்கோர் நோய்.

ப-ரை. ஆண் ஆக்கம் வேண்டாதான்-பிரமசரியம் காப்பவன், ஆசான்-ஆசிரியனென்றற்குரியவன்; அவற்கு இயைந்த மாணாக்கன்-அவனுக்கேற்ற மாணவனாவான், அன்பான் - அன்புடையோனும், வழிபடுவான் - வழிபடுவோனும் என்றிருவகையர்; மாணாக்கன் - மாணாக்கனாவான், கற்பு அனைத்தும் - கற்குமளவும், மூன்றும் - காம வெகுளி மயக்கங்கள் என்கிற மூன்றையும், கடிந்தான் - ஒழித்தவனே; கடியாதான் - (அவற்றைக்) கடியாதவன், நிற்பு அனைத்தும் - நிற்குமளவும், நெஞ்சிற்கு - ஆசிரியனது மனத்திற்கு, ஓர் நோய் - ஒரு நோய்போல்வான், எ-று.

க-ரை. பிரமசரியங் காப்பவன் ஆசிரியனாவான், அவனை அன்பு செய்து வழிபடுவோர் முதலியோர் மாணாக்கராவார் என்பதாம்.

வி-ரை. ஆணாக்கம்வேண்டாமை-பிரமசரியம். ஆணாக்கம் என்றது ஆண்மக்கட்குரிய இணைவிழைச்சு முதலியவற்றை. வேண்டா

தான் - விருப்பாசவன். இவ்வாறு கூறுதலால் இணைவிழைச்சு முதலியவை யில்லாதவனே ஆசிரியனுயிருத்தற்குரியானென்றதாயிற்று. வழிபடுவான் - ஆசிரியனேவியது செய்வோன். காமவெகுளி மயக்கங்களை முக்குற்றமென்பர். காமவெகுளி மயக்கங்களைக் கடிந்துநின்று ஆசிரியனிடத்துக் கற்பார் நன்மாணுக்கர் என்றும், அவற்றைக் கடியாதுநின்று கற்பவர் தீமாணுக்கர் என்றும் சொல்லப்படுவர். (உக)

நெய்தன் முகிழ்த்துணை யாங்குடுமி நேர்மயிரு
முய்த லொருதிங்கள் நாளாகுஞ்—செய்த
னுணங்குநூ லோதுதல் கேட்டல்மா ணுக்கர்
வணங்கி வலங்கொண்டு வந்து.

ப-ரை. (மாணுக்கர்க்கு) குடுமி-குடுமியானது, நெய்தல் முகிழ் துணை ஆம் - நெய்தல் மொட்டினளவினதாயிருத்தல் தகுதி; நேர் - நீண்ட, மயிரும் - மயிரும், உய்தல் - கழுவாதொழிதல், ஒரு திங்கள் நாள் ஆகும் - ஒருமாதகாலமாகும்; மாணுக்கர் செய்தல் - மாணுக்கர் செய்கையானது, வந்து வணங்கி - (ஆசிரியனை) வந்து தொழுது, வலங்கொண்டு - பிரதக்ஷிணஞ்செய்து, நுணங்கு நூல் ஓதுதல் - நுண்ணிய நூல்களை யோதுதலும், கேட்டல்-கேட்டலுமாம், எ-று.

க-ரை. மாணுக்கனுக்குக் குடுமி நெய்தல் மொட்டினளவாயிருத்தல்வேண்டும். அவன் தலைமயிர் ஒருமாதம்வரையிலுங் கழுவாதிருக்கலாம். ஆசிரியனை வலம்வருதலும், அவனிடத் தோதுதலும், பாடங் கேட்டலும் அவனுக்குரிய செய்கைகள் என்பதாம்.

வி-ரை. நெய்தல் - ஆம்பல். முகிழ் - மொட்டு (மொக்கு). துணை - அளவு. உய்தல் - ஒழிதல் (கழுவாதொழிதல்); அதாவது தலைமுழுகாதொழிதல். செய்தல் - செய்கை. நுணங்குதல் - நுட்பமாதல். ஓதல் - படித்தல். நேர்மயிர் - வினைத்தொகை நிலைத்தொடர். கேட்டல் - சிரவணஞ் செய்தல். (உ0)

ஒருவ னறிவானு மெல்லாம்யா தொன்று
மொருவ னறியா தவனு—மொருவன்
குணனடங்கக் குற்றமில் லானு மொருவன்
கணனடங்கக் கற்றானு மில்.

ப-ரை. எல்லாம் அறிவான் ஒருவனும் - எல்லாவற்றையும் அறிவானொருவனும், யாது ஒன்றும் அறியாதவன் ஒருவனும் - யா தொன்றையு மறியாதானொருவனும், குணன் அடங்க இல்லான் ஆம் ஒருவனும் - குணமுழுது மில்லாதானொருவனும், குற்றம் இல் லானுமொருவன் - குற்றமுழுது மில்லாதானொருவனும், கணன் அடங்க கற்றானும் - நூற்றொகுதிமுழுதும் கற்றானொருவனும், இல் - இவ்வுலகிலில்லை, எ-று.

க-ரை. எல்லாமறிந்தவனும், யாதுமறியாதவனும், குணமில் லாதவனும், குற்றமில்லாதவனும், எல்லா நூல்களுங் கற்று வல்லவ னும் உலகத்தில் இல்லையென்பதாம்.

வி-ரை. அறிவானும் என்றவும்மை பிரித்து ஒருவன் என்பத னீற்றில் கூட்டப்பட்டது. அறியாதவனும் என்றவும்மை பிரித்து ஒருவன் என்பதனீற்றில் கூட்டப்பட்டது. அடங்க - முழுதும். குணம் குணன் எனவும், கணம் கணன் எனவும் போலியாயிற்று. கற்றானும் என்றவும்மை பிரித்து ஒருவன் என்பதனீற்றில் கூட்டப் பட்டது. கற்றானும் என மேல்வருதலால், கணன் நூற்றொகுதி யென் றுரைக்கப்பட்டது. (கக)

உயிர்நோய்செய் யாமை யுறுநோய் மறத்தல்
செயிர்நோய் பிறர்கட்செய் யாமை—செயிர்நோய்
விழைவு வெகுளி யிவைவிடுவா னாயி
னிழிவன் றினிது தவம்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
THIRUVANMIYUR, MADRAS-41.

ப-ரை. உயிர்நோய் செய்யாமை - பிறிதோருயிர்க்குத் துன்பஞ் செய்யாமையும், உறுநோய் மறத்தல் - பிறவுயிர்களால் நேர்ந்த துன்பத்தை மறந்துவிடுதலும், செயிர் நோய் பிறர்கண் செய்யாமை - கோவத்தால் பிறரிடத்துத் துன்பஞ் செய்யாமையும், (ஆகிய இம் மூன்றையும் ஒருவன் உடையனாய்) செயிர் நோய் விழைவு வெகுளி-குற்றத்தைச் செய்யும் துன்பத்தைத் தருகிற ஆசையும் கோவமும் ஆகிய, இவை-இவற்றை, விடுவான் ஆயின் - விடுவானானால், தவம் - (அவன் செய்யும்) தவமானது, இழிவு அன்று - இழிவன்றி, இனிது-இன்பத்தைத் தருவதாகும், எ-று.

ப-ரை. பிறவுயிர்க்குத் துன்பஞ் செய்யாமையும், பிறவுயிர்களால் தனக்குவந்த துன்பத்தை மறத்தலும், கோவமிகுதியால் பிறர்க்குத் தீங்குசெய்யாமையும் ஆகிய இவற்றை யுடையனாய், விழைவு வெகுளிகளை யொருவன் விட்டுவிடுவானானால், அவனுடைய தவமானது அவனுக்கு இனிதாய் முடிவுறும் என்பதாம்.

வி-ரை. உயிர் பிறர் என்றது முறையே அஃறிணையுயிரையும் மக்களையும். உயிர்நோய் செய்யாமை யுறுநோய் மறத்தல் என்பதற்கிணங்க, "உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை' என்றார் பெருநாவலரும். மறத்தல் - நினைவிலு மில்லாமல் விட்டொழித்தல். விழைவு வெகுளி என்பவற்றை காமக்ரோதம் என்பர் வடநூலார். (௩௨)

வேட்பவன் பார்ப்பான் விளங்கிழைக்குக் கற்புடைமை
கேட்பவன் கேடில் பெரும்புலவன்—பாட்டவன்
சிந்தையா னாகுஞ் சிறத்த லுலகினுட்
டந்தையா னாகுங் குலம்.

ப-ரை. வேட்பவன் பார்ப்பான் - வேள்வி செய்பவன் பார்ப்பானவான்; விளங்கிழைக்குக் கற்புடைமை - மாதுக்குக் கற்புடைமை

சிறந்தது; கேட்பவன் - பலநூல்களையும் ஆசிரியனை யடுத்துக் கேட்பவன், கேடு இல் - அழிவில்லாத, பெரும்புலவன் - பெரியபுலவனுவான்; அவன் - அப்புலவன், சிந்தையான் ஆகும் பாட்டு - மனத்தானுராய்ந்து பாடும்பாட்டு, உலகினுள் - உலகத்தில், சிறந்தது - மேம்பட்டது; குலம் - ஒருவனது குலனுடைமை, தந்தையான் ஆகும் - அவனது தந்தையாலே அழகுபெற்று விளங்கும், எ-று.

க-ரை. யாகஞ் செய்பவன் பார்ப்பான்; கற்புடையவள் பெண்; பலநூல்கள் கேட்டறிந்தவன் பெரும்புலவன்; அவனுற் பாடப்படும் பாட்டு உலகிற் சிறந்தது; ஒருவனது குலனுடைமை யழகுபெற்று விளங்குவது அவனது தந்தையாலேயா மென்பதாம்.

வி-ரை. வேட்டல் - யாகஞ்செய்தல். விளங்கிழை - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். கற்பு - பதிவிரதாதர்மம். குலம் - குலனுடைமை, அதாவது உயர் குடிப்பிறப்பு. (௩௩)

வைப்பானே வள்ளல் வழங்குவான் வாணிக
னுய்ப்பானே யாசா னுயர்கதிக்கு—உய்ப்பா
னுடம்பினார் வேலி யொருப்படுத்தா னூரத்
தொடங்கானேற் சேறற் றுணிவு.

ப-ரை. வைப்பானே-பொருளை யீட்டிவைப்பவனே, வள்ளல் - வள்ளலென்று சொல்லப்படுவான்; வழங்குவான் - அப்பொருளைப் பிறர்க்குக் கொடுப்பவனே, வாணிகன் - வாணிகனென்று சொல்லப்படுவான்; உய்ப்பானே ஆசான் - (அக்கொடையினுலாய பயன் விளைவு மறுமைக்குத் தனக்கு விளைத்துக்கொள்ளுதலால்) ஒருவர்க்கு ஆசிரியனுவான், உயர் கதிக்கு உய்ப்பான் - உயர்கதியிற் செலுத்தவல்லோன், உடம்பின் ஆர் வேலி - உடம்பாகிய வேலியை, ஒருப்படுத்து (போக்கி)-ஒருப்படுத்து நீக்கி, ஊன் - அவற்றின்

தசையை, ஆர - உண்ண, தொடங்கானேல் - ஆரம்பியாஞயின், சேறல் - (அவன்) உயர்கதியிற் செல்லுதல், துணிவு - உண்மையாம், எ-று.

க-ரை. பொருளீட்டி வைப்பவன் வள்ளல்; அதனை வழங்குவோன் வாணிகன்; அக்கொடைப்பயனைத் தனக்கு விளைத்துக் கொள்வோன் ஆசிரியன்; உயர்கதியிற் செலுத்த வல்லவன் ஒருயிரை வதைத்து அதன் தசையை யுண்ணுஞயின் அவன் உயர்கதியடைதல் உண்மை யென்பதாம்.

வி-ரை. வள்ளல் - வரையாது கொடுப்போன். வழங்கல் - தாராளமாகக் கொடுத்தல். வாணிகன் - வியாபாரி. உய்த்தல் - செலுத்தல். உயர்கதி - மோக்ஷம். உடம்பின் என்பதில் இன் அல்வழிச்சாரியை. ஒருப்படுத்தல் - சம்மதப்படுத்தல். ஆர்தல் - உண்டல. தொடங்கானேல் என்பதில் எல் எனின் என்பதன் மரூஉ. சேறல் - செல்லுதல். (௩௪)

வைததனு லாகும் வசைவணக்க நன்றாகச்
செய்ததனு லாகுஞ் செழுங்குலமும்—செய்த
பொருளினு லாகுமாம் போக நெகிழ்ந்த
வருளினு லாகு மறம்.

ப-ரை. வைததனல் - (ஒருவன் பிறனை) வைததனல், வசை ஆகும் - (அவனுக்கு) வசையுண்டாகும்; நன்றாக வணக்கம் செய்ததனல் - நன்மை வணக்கம் என்பவற்றைப் பிறர்க்குச் செய்ததனல், செழுங் குலமும் ஆகும் - வளமையாகிய குடிப்பிறப்புமாகும்; செய்த பொருளினல் - ஈட்டின பொருளினல், போகம் - இன்பம், ஆகும் - உண்டாகும்; நெகிழ்ந்த - (பிறர்பொருட்டுத்) தன்மனம்நெகிழ்ந்த, அருளினல் - அருள்காரணமாக, அறம் ஆகும் - அறமுண்டாகும், எ-று.

க-ரை. ஒருவனை ஒருவன் வைததனால் வசையும், வணக்கத்தால் உயர்குடிப்பிறப்பும், பொருள்செய்ததனால் இன்பமும், அருளினால் அறமும் உண்டாமென்பதாம்.

வி-ரை. வைதல் - திட்டுதல். வசை - பழி. வணக்கம்-பணிவு செய்தபொருள் என்பதில் செய்த என்பது ஈட்டிய எனப் பொருள் பட்டது. பேகாம் - அநுபவம் - இன்பம். நெகிழ்தல் - உருகுதல். அருள் - காரணங்கருதாது ஒருதன்மைத்தா யெல்லார்மீதுஞ் செல்லும் பெருங்கருணை. (௩௫)

இல்லியலார் நல்லறமு மேனைத் துறவறமு
நல்லியலி னாடி யுரைக்குங்கா—னல்லியற்
றானத்தாற் போகந் தவத்தாற் சுவர்க்கமா
ஞானத்தால் வீடாக நாட்டு.

ப-ரை. இல் இயலார்-மனைவாழ்க்கை யியற்கையாகவுடையார் (செய்த), நல் அறமும் - நல்ல அறமும், ஏனை துறவறமும்-மற்றைத் துறந்தோர் செய்யும் நல்ல அறமும், நல் இயலின் - நன்மையாகிய முறையால், நாடி - ஆராய்ந்து, உரைக்குங்கால் - சொல்லுமிடத்து, நல் இயல் தானத்தால் போகம் - நல்லியலாகிய கொடையினால் செல்வநுகர்ச்சியும், தவத்தால் சுவர்க்கம் ஆ - தவத்தினால் சுவர்க்க நுகர்ச்சியாகவும், ஞானத்தால்-ஞானத்தினால், வீடு ஆக-வீடாகவும், நாட்டு - நிலைபெறுத்துவாயாக, எ-று.

க-ரை. இல்லறத்தார் செய்த அறமும், துறவறத்தார் செய்த அறமும், ஆராயின், கொடையால் செல்வநுகர்ச்சியும், தவத்தால் சுவர்க்கமும், ஞானத்தால் வீடும் பெறுவரென்பதாம்.

வி-ரை. இல்-இல்வாழ்க்கை. இயலார் - இயல்பாகவுடையவர். நல்லியல்-நன்மையாகிய முறைமை, அதாவது ஒருபாற்கோடாமை.

நடுவுநிலைமை). தானம் - கொடுத்தல். போகம்-இன்பநுகர்ச்சி. வீடு-முத்தி. (௩௯)

மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பு
முகிர்வனப்புங் காதின் வனப்புஞ்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு.

ப-ரை. மயிர் வனப்பும்-தலைமயிரா லுண்டாகும் அழகும், கண் கவரும்-(கண்டார்து) கண்களைக் கவர்தற்குரிய, மார்பின் வனப்பும்-மார்பினாலுண்டாகும் அழகும், உகிர் வனப்பும் - நகத்தாலுண்டாகும் அழகும், காதின் வனப்பும் - செவியினாலுண்டாகும் அழகும், செயிர் தீர்ந்த - குற்றம் நீங்கின, பல்லின் வனப்பும் - பல்லினாலுண்டாகும் அழகும், வனப்பு அல்ல - அழகல்ல; நூற்கு இயைந்த - நூல்கட்குப் பொருந்திய, சொல்லின் வனப்பே - சொல்லழகே, வனப்பு - அழகாகும், எ-று.

க-ரை. தலைமயிரினழகும், மார்பினழகும், நகத்தினழகும், செவியினழகும், பல்லினழகும் ஆகிய இவற்றினும், நூல்களிலுள்ள சொல்லழகே சிறந்த தென்பதாம்.

வி-ரை. மயிர்வனப்பு என வாளாகூறினாரேனும், அது ஆண்மக்கள் பெண்மக்களுடைய தலைமயிரையே குறித்தது. கண் கவர்தலாவது - பிறிதோரிடத்துச் செல்லாது தன்னிடத்தே பதிந்து பறிப்பரிதாய் நிற்குமாறு பார்ப்பவர்கள் கண்களை வயப்படுத்தல். மயிர் வனப்பு முதலிய ஐவகைவனப்பினும் கல்வியழகே சிறந்ததென்றற்கு இவ்வாறு கூறினர். இளமைப்பருவத்திலுள்ள மயிர்வனப்பு முதலியவை முதுமைப்பருவத்தில் நரை முதலியவற்றாற் கெட்டொழிதல் போலாது, கல்வியழகு மேன்மேலுஞ் சிறந்து நிற்றலால், 'நூற்கியைந்த சொல்லின் வனப்பேவனப்பு' என்றார். இதற்குதாரணம்: நாலடி

யார், "குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்ச ளழகு மழகல்ல-நெஞ்சத்து, நல்லம் யாமென்னு நடுவு நிலைமையால், கல்வி யழகே யழகு." (௩௭)

தொழீஇ யடவுண்ணார் தோழரிற் றுஞ்சார்
வழீஇய பிறர்பொருளை வௌவார்—கெழீஇக்
கலந்தபிற் கீழ்காணார் காணாய் மடவாய்
புலந்தபிற் போற்றார் புலை.

ப-ரை. தொழீஇ - தொழுத்தையானவள், அட - சமைத்து வைக்க, உண்ணார் - (அவ்வுணவை அறிவுடையார்) உண்ணமாட்டார்; தோழர் - நண்பரது, இல் - வீட்டில், துஞ்சார் - (தனியே புகுந்து) உறங்கமாட்டார்; வழீஇய - மறந்த, பிறர் பொருளை - பிறரது பொருள்களை, வௌவார் - கவர்ந்துகொள்ளமாட்டார்; கெழீஇ - தழுவி, கலந்தபின் - சிலரைநட்டபின்பு, கீழ் - (அவரது) கீழ்மையாகிய குணத்தை, காணார் - ஆராய்ந்து பார்க்கமாட்டார்; புலந்தபின் - (சிலரோடு) பகைத்தபின்பு, புலை - (அவரது) கீழ்மைக் குணத்தை, போற்றார் - போற்றாது அவரை வஞ்சித்துக் கெடுப்பார், எ-று.

க-ரை. தொழுத்தை சமைத்ததை யுண்டலும், தோழர்வீட்டில் தனியேபுகுந்துறங்கலும், பிறர்மறந்துவைத்த பொருளைக் கவர்ந்து கொள்ளலும், ஒருவரைச் சிநேகித்த பின்பு அவரது தீக்குணத்தை யாராய்தலும், ஒருவரைப் பகைத்தபின்பு அவரை வஞ்சித்துக் கெடுக்காது அவரது இழிகுணத்தைப் போற்றுதலும் அறிவுடையார் செயல்களன் றென்பதாம்.

வி-ரை. தொழுத்தை - அடிமைப்பெண். அடல் - சமைத்தல். வழுவிய எனற்பாலது வழீஇயவென அளபெடுத்தது. இது சொல்லிசையளபெடை. கெழீஇ என்பதுமது. காணாய் - பாராய். மடவாய்.

மகவே முன்னிலை. இவ்வாறு மகவே முன்னிலையாய்க் கூறல் கவி மரபு. இது "பல்லவத்தின் சந்தமடிய வடியான் மருட்டிய தாழ் குழலே", "வேய்புரையு மென்றோளி", "சிறுநுதற் பேரமர்க்கட் செய்ய வாயைய நுண்ணிடையாய்", "வாரும்வட முந்துயிலு முகிண்முலை வாணுதலே" என்றற்றொடக்கத்தனவற்று 'லினிது விளங்கும். புலத்தல் - பகைத்தல். (௩அ)

பொய்யாமை நன்று பொருணன் றுயிர்நோவக்
கொல்லாமை நன்று கொழிக்குங்கால்—பல்லார்முற்
பேணாமை பேணுந் தகைய சிறிதெனினு
மாணாமை மாண்டார் மனம்.

ப-ரை. பொய்யாமை - பொய்சொல்லாதிருத்தல், நன்று - (ஒருவற்கு) நன்மையாம்; பொருள்நன்று-பொருள் செய்தல் நன்மையாம்; உயிர்-பிறிதோருயிர், நோவ - வருந்த, கொல்லாமை - கொல்லாதிருத்தல், நன்று - நன்மையாம்; கொழிக்குங்கால் - ஆராயுமிடத்து, பேணும் தகைய-(ஒருவன் தான்) விரும்புந் தன்மையவற்றை, பல்லார்முன் பேணாமை - பலரறிய விரும்பாமை, (நன்று - நன்மையாம்); மாண்டார்-மாட்சிமைப்பட்டாரது, மனம்-மனமானது, சிறிது எனினும் - சிறிதாயினும், மாணாமை-(மனைவாழ்க்கைக்கு மீள்கைக்கண்) ஒருப்படாமை, (நன்று - நன்மையாம்), எ-று.

க-ரை. ஒருவன் பொய் சொல்லாதிருத்தலும், பொருள்செய்தலும், பிறிதோருயிரைக் கொல்லாதிருத்தலும், தான் விரும்புமவற்றைப் பலரறிய விரும்பாமையும், தவசிகளுடைய மனம் இல்வாழ்க்கையில் மீளாமையும் நன்மையென்பதாம்.

வி-ரை. பொய்யாமை - எதிர்மறைத் தொழிற்பெயர்; உடன் பாட்டில் பொய்த்தல் எனவரும். பொய்யாமை யென்பதற்கு மெய்

சொல்லுதல் என்பது பொருள். பொருணன்று என்பதில் செய்த வென வொருசொல் வருவித்துச் சேர்த்துரைக்கப்பட்டது. கொழித்தல்-ஆராய்தல். பேணல் - விரும்பல். மாண்டார் - மாட்சிமையுடையவர், மனமிறந்தவர் எனினுமாம். பொய்யாமை நன்று என்றதனால் பொய்த்தல் தீது என்பதும், பொருணன்று என்றதனால் பொருள் செய்யாமை தீது என்பதும், கொல்லாமை நன்று என்றதனால் கொல்லுதல் தீது என்பதும், பேணாமை நன்று என்றதனால் பேணுதல் தீது என்பதும், மாணாமை நன்று என்றதனால் மாண்டல் தீது என்பதும் பெறப்பட்டன. (௩௧)

பண்டாரம் பல்கணக்குக் கண்காணி பாத்தில்லா
ருண்டா ரடிசிலே தோழிற்—கொண்டார்
யாக்கைக்குத் தக்க வறிவில்லார்க் காப்படுப்பிற்
காக்கைக்குக் காப்படுத்த சோறு.

ப-ரை. பண்டாரம் - பண்டாரத்தினையும், பல் கணக்கு - பல கணக்கனையும், கண்காணி - கண்காணியையும், இல்லார் - தன் கோயிலினுள்ளுறையு மங்கையரையும், உண்டு ஆர் அடிசில்-தனக்குண்ணவாக்கு முணவினையும், பாத்து-பகுத்து, யாக்கைக்கு தக்க-மக்களுடம்பிற்குத்தக்க, அறிவில்லார்-அறிவிலாரையும், தோழன் கொண்டாராய் - தன்தோழரைப்போலக் கொண்டவராய், கா படுப்பின் - காவாவிடின், (அக்காவல்) காக்கைக்கு-காகத்திற்கு, சோறு காப்பு அடுத்த - சோற்றுக்காவலமைத்தாற்போலும், எ-று.

த-ரை. பண்டார முதலியோரைக் காவாவிடின், அக்காவல் சோற்றுக்காவற் றொழிலைக் காகத்திற் கிட்டாற்போலும் என்பதாம்.

உடையிட்டார் புன்மேய்வா ரோடுநீர் புக்கார்
படையிட்டார் பற்றேது மின்றி—நடையிட்டா

ரிவ்வகை யைவரையு மென்று மணுகாரே
செவ்வகைச் சேவகர் சென்று.

ப-ரை. உடை இட்டார் - (தமக்குஞ்சி) உடுத்த புடவையைப் போகவிட்டவர், புல் மேய்வார் - புற்பறித்து வாயிலிட்டார், ஓடு நீர் புக்கார்-ஓடுகிற நீரிற் புகுந்தவர், படை இட்டார்-கைப்படையை விட்டவர், பற்று எதும் இன்றி - பற்றுச் சிறிதுமில்லாமல், நடையிட்டார் - (ஓடமாட்டாது) நிலைதளர்ந்திருந்தவர், இவ்வகை ஐவரையும் - இவ்வகைப்பட்ட ஐவரையும், செவ்வகை சேவகர் - செவ்வகையினராகிய சேவகர், என்றும் - எந்நாளும், சென்று - தீங்குசெய்யச் சென்று, அணுகார் - சேரமாட்டார், எ-று.

க-ரை. உடுக்கையிழந்தவர் முதலிய ஐவரையும் வருத்தாதொழிதல் வீரர்க்குரிய தருமமென்பதாம்.

வி-ரை. உடை-உடுக்கை, தொழிலாகுபெயர்; இது ஆடையென்னும் பொருளுணர்த்துவது. படை - படுத்தற்குரியது. படுத்தல்-கொல்லுதல். ஆயுதம் என்பது பொருள். செவ்வகைச் சேவகர் என்றது-அறம்பொருள் செய்யுஞ்சேவகரை. இவர் உடையிட்டார் முதலிய ஐவரையும் சென்றணுகி வருத்தலாகாதென்ப திதனாற் போந்த பொருள். (சஅ)

பூவாதாள் பூப்புப் புறக்கொடுத் தாளிலிங்கி-
யோவாதாள் கோல மொருபொழுதுங்—காவாதாள்
யார்யார் பிறர்மனையா ளுள்ளிட்டிவ் வைவரயுஞ்
சாரார் பகைபோற் சலித்து.

ப-ரை. பூவாதாள் - பூப்பில்லாத கன்னியும், பூப்பு புறக்கொடு தாள் - பூப்புத் தவிர்ந்தவளும், இலிங்கி - இலிங்கியும், ஒருபொழுதும் - ஒருகாலத்தும், கோலம் ஓவாதாள் காவாதாள் - கோலஞ்செ

கலை யொழியாதவளாய்த் தன் கற்பைக்காவாத வேசையும், யார் யார் பிறர் மனையாள்-பிறராகிய யாவர்க்குமுரிய மனையாளும், உள்ளிட்ட இ ஐவரையும் - உள்ளிட்ட இந்த ஐவரையும், பகைபோல் சலித்து - பகைவரைப்போல வெறுத்து, சாரார் - (அறிவுடையார்) சேரார் எ - று.

க-ரை. பூப்பில்லாத கன்னி, பூப்பொழிந்தவள், இலிங்கி, வேசை, பிறன்மனைவி என்னும் இவ்வைவரையும் அறிவுடையார் சேரார் என்பதாம்.

வி-ரை. பூவாதாள்-திரளாதபெண். பூப்புப்புறக்கொடுத்தாள் - பூப்பு நின்றுவிட்டவள். இலிங்கி-தவஞ்செய்யுங் கன்னிகை. தன்னை யெப்பொழுதும் அலங்கரித்துக்கொண்டு, ஆடவரை மயக்குமவளாதலாலும், கற்புப்பேணுதவளாதலாலும், வேசையை, 'ஓவாதாள்கோல மொருபொழுதுங் காவாதாள்' என்றார். உள்ளிடல் - அடக்கல். சலித்தல் - வெறுத்தல். பகைபோல் - பகைவரை வெறுத்தல்போல. சார்தல் - பொருந்தல். பகை - பண்பாகுபெயர். (சஉ)

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித்—திருவாக்குந்
தெய்வதையு மெஞ்ஞான்றுந் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு.

ப-ரை. வருவாய்க்கு தக்க வழக்கு அறிந்து - தம் கணவரது வருவாய்க்குத் தகுதியையும் அதற்கேற்ப வழங்குதலையும் அறிந்து, சுற்றம் வெருவாமை வீழ்ந்து - சுற்றத்தார் வெருவாவண்ணம் அவர்களை விரும்பித்தழுவி, விருந்து ஓம்பி - விருந்தினரை உபசரித்து, திருவாக்கும் - செல்வத்தை மேன்மேலும் உயரச்செய்கிற, தெய்வத்தை - தேவதையை, எஞ்ஞான்றும் - எந்நாளும், தேற்றம் தெளி

னாகிய, வழிபாடு செய்வதே-வழிபடுதலைச் செய்வதே, பெண்டீர் சிறப்பு - மாதர்க்குச் சிறப்பாவன, எ-று.

க-ரை. தம் கணவரது வருவாயினளவை யறிதலும், அதற்கேற்ப வழங்குதலும், சுற்றத்தாரைத் தழுவலும், விருந்தினரை யுபசரித்தலும், தெய்வவழிபாடும், ஆகிய இவ்வைந்து தொழில்களும் மாதர்க்குச் சிறப்பாவன வென்பதாம்.

வி - ரை. வருவாய் - வருமானம். வழக்கு - வழங்கல், அதாவது செலவுசெய்தல். சுற்றம் - சூழ்ந்திருப்பவர், இது தொழிலாகுபெயர். வெருவாமை - எதிர்மறை வினையெச்சம். விருந்து - பண்பாகுபெயர். ஓம்புதல்-உபசரித்தல். தெற்ற எனப் பாடமோதி சடக்கென வெனப் பொருள்கூறலுமாம். வழிபாடு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; முதனிலை வழிபடு. சிறப்பைத் தருமவற்றைச் சிறப்பென்றார் கருவியாகுபெயரான். (சஙு)

நாள்கூட்ட மூர்த்த மவற்றோடு நன்றாமக்
கோள்கூட்டம் யோகங் குணனுணர்ந்து—தோள்கூட்ட
லுற்றானு மல்லா னுமைந்து முணர்வானாற்
பெற்றானுட் கொள்க பெரிது.

ப-ரை. நாள் கூட்டம் - நாட்பொருத்தம், மூர்த்தம் - முகூர்த்தம், அவற்றோடு-அவற்றுடனே, நன்றாம்-நன்மையாகிய, அ கோள் கூட்டம் - அந்தக் கிரகப்பொருத்தம், யோகம்-யோகமும், குணன்-(இவற்றாலுண்டாகிற) நன்மையும், உணர்ந்து-ஆராய்ந்தறிந்து, பெற்றால்-(இவையைந்தும் நன்மையாயிருக்கிற) நாளைப் பெற்றால், ஐந்தும் உணர்வான்-இவ்வைந்தனையு மறிந்து சிலநன்மையாகிய காரியங்களைச் செய்வோனும், தோள்கூட்ட லுற்றானும் - (ஒருவனோடொருத்தியைத்) தோள் கூட்டலுற்றவனும், பெரிது நாள் கொள்க - மிகவும் நல்லநாளாகக் கொள்க, எ-று.

க-ரை. ஒருவனோடொருத்தியைச் சேர்க்கலுற்றவனும், வேறு சில நற்காரியங்களைச் செய்யலுற்றவனும், நாட்பொருத்த முதலிய வைந்தும் நன்மையா யமையப்பெற்ற நாளை யாராய்ந்தறிந்து, அந்த நாளை நல்லநாளாகக் கொள்க என்பதாம்.

வி-ரை. மூர்த்தம் - நன்முகூர்த்தம். கிரகம் - ஞாயிறு முதலாயின. தோள்கூட்டல் - தோள் புணர்வித்தல். "நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற் - பிறர்க்குரியா டோடோயா தார்" என்பது திருக்குறள். நாட்கொள்ளல் - நன்னாளாகக் கோடல். (சச)

பேணடக்கம் பேணாப் பெருந்தகைமை பீடுடைமை
நாணொடுக்க மென்றைந்து நன்றாகப்—பூணொடுக்கம்
பொன்வரைக்கோங் கேர்முலைப் பூந்திருவே யாயினுந்
தன்வரைத் தாழ்த்த லரிது.

ப-ரை. பேண் - உறவினரைப் பேணலும், அடக்கம்-அடக்கமுடைமையும், பேணா - (பிறனொருவனைப்) பேணாத, பெருந்தகைமை - பெருந்தன்மையும், பீடு உடைமை - பெருமையுடைமையும், நாண் ஒடுக்கம் - நாணத்தாலுண்டாகும் ஒடுக்கமும், என்ற ஐந்தும் என்று சொல்லப்பட்ட ஐந்தனையும், (பொருந்தாது), பூண் ஒடுக்கம்-பூணடங்கின, பொன்வரை-பொன்மலைபோன்ற, கோங்கு ஏர்-கோங்கரும்பி னழகையுடைய, முலை - தனங்களையுடைய, பூ திருவே ஆயினும்-தாமரைமலரில் வாழ்கின்ற இலக்குமியேயாயினும், தன்வரை - (தன் கொழுநனைத்) தன்னளவின், தாழ்த்தல்-தாழ்த்துதல், அரிது-(நன்மையாதல்) இல்லை, எ-று.

க-ரை. ஒருத்தி, திருமகளை நிகர்த்தவளேயாயினும், சுற்றந் தழால் முதலிய ஐந்தனையும் கைவிட்டுத் தன்கணவனைத் தன்னளவிற் றாழ்த்துதல், அவளுக்கு நன்மையைத் தருதலில்லை யென்பதாம்.

வி-ரை. பேண் - முதனிலைத்தொழிற்பெயர். அடக்கம் - ஒடுக்கம்; பகுதி அடங்கு. பேணல் - காத்தல். பீடு - பெருமை. பூண் - ஆபரணம். பொன்வரைக் கோங்கேர்முலை என்பதற்குப் பொன்மலையும் கோங்கரும்புமாகிய இவற்றினழகையுடைய தனம் எனினுமமையும். பூ - செந்தாமரைமலர் எனக்கொள்க மேல் திருவென வருதலான். தாழ்த்தல் - கீழ்ப்படுத்தல். அரிது ஈண்டின்மை குறித்தது.

வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலு
நீர்சான் றுயரவே நெல்லுயருஞ் — சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்
ஓவா துரைக்கு முலகு.

ப-ரை. வார்சான்ற - நீட்சிமிகுந்த, கூந்தல் - கூந்தலையுடையாய், வரம்பு - வயல்வரம்பு, உயர-உயரவே, நீர்சான்று-நீர்நிறைந்து, உயரவே - உயர்ந்துவரவே, நெல் உயரும் - நெல் உயர்ந்து விளையும்; சீர் சான்ற - சிறப்புமிக்க, தாவா - அழியாத, குடி உயர - குடிகள் உயரவே, தாங்கு அரு-பகைவரால் தாங்குதற்கரிய, சீர்-சிறப்பினையுடைய, கோ - அரசன், உயரும் - உயர்வான், (என்று) உலகு - இவ்வுலகமானது, ஓவாது உரைக்கும் - ஒழியாமற் சொல்லிநிற்கும் எ-று.

க-ரை. வரம்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயர்வான் என்பதாம்.

வி-ரை. வார் - நீட்சி. சான்ற - சால என்னு முரிச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சம். வரம்பு என் வாளா கூறிநூரேனும், மேல் வருவனவற்றிற் கேற்ப, வயல்வரம்பு என்றுரைக்கப்பட்டது. சான்று சால என்னு முரிச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சம்; இது உயர வென்னும் வினைகொண்டது. தாவா எதிர்மறைப் பெயரெச்சம். இது குடியென்னும் பெயர்கொண்டது. கோ என்னும் ஓரெழுத்

தொருமொழி னகரச் சாரியை பெறாது கோ என்றே நின்றது. என்று என ஒருசொல் வருவித் துரைக்கப்பட்டது. ஒவாது என்னும் வினையெச்சம் உரைக்கும் என்னும் வினைகொண்டது. தாவா ஓயாது என்பவற்றிற்குப் பகுதிகள் முறையே தா ஓ. உலகு இடவாகுபெயராய் உலகிலுள்ளாரை யுணர்த்திற்று. உலகு-உயர்ந்தோர் எனினுமாம். வார்சான்ற கூந்தல்-அண்மைவிளி, மகடூஉ முன்னிலை.

அழியாமை யெத்தவமுஞ் சார்ந்தாரை யாக்கல்
பழியாமை பாத்தல்யார் மாட்டு—மொளியாமை
கன்றுசா வப்பால் கறவாமை செய்யாமை
மன்றுசார் வாக மனை.

ப-ரை. எ தவமும் - எவ்வகைப்பட்ட தவத்தினையும், அழியாமை - கெடுக்காமையும், சார்ந்தாரை - தம்மை வந்தடுத்தவரை, ஆக்கல் - உயரச்செய்தலும், பழியாமை - பிறர்தம்மைப் பழியாமல், யார்மாட்டும் - யாவரிடத்தும், ஒளியாமை - மறைக்காமல், பாத்தல்-பகுத்துண்டலும், கன்று சாவ - கன்று இறத்தலும், பால்கறவாமை-(அந்தக்கன்றையீன்ற தாய்ப்பசுவின்) பாலைக்கறவாமையும், மன்று சார்வு ஆக - மன்றையடுத்திருக்க, மனை செய்யாமை - மனையெடாமையும், (ஆகிய இவை நன்மையென்று சொல்லுவர் பெரியோர்), எ-று.

க-ரை. தவத்தை யழிக்காமையும், அடைந்தாரை யாக்குதலும், பகுத்துண்டலும், கன்றுசெத்தபசுவைப் பால்கறவாமையும், மன்று சார்வாக மனையெடாமையும் நற்செயல்களா மென்பதாம்.

வி-ரை. தவத்தையழித்தலாவது-தவத்திற்கு இடையூறு செய்தல். தவத்திற் கிடையூறுசெய்தல் மஹாபாதகமாதலால் அழியாமை யெத்தவமும் என அதனை முற்கூறிவற்புறுத்தினர் பழியாமை-எதிர்மறைத் தொழிற்பெயரன்று. எதிர்மறை வினையெச்சம். இதுவும்

ஒளியாமையும பாத்தல் என்னும் வினைகொண்டு முடிந்தன. கன்று சாவ என்றதனால் பால் கறவாமை யென்றது அதன் தாய்ப் பசுவி னிடத்தென்பது பெறப்பட்டது. மன்று - சபை. நீதித்தலம் எனி னுமாம். மனைசெய்தல்-வீடெடுத்தல் (வீடுகட்டுதல்). (சஎ)

நசைகொல்லார் நச்சியார்க் கென்றுங் கிளைஞர்
மிசைகொல்லார் வேளாண்மை கொல்லா—ரிசைகொல்லார்
பொன்பெறும் பூஞ்சுணங்கின் மென்முலையாய் நன்குணர்ந்தா
ரென்பெறினுங் கொல்லா ரியைந்து.

ப-ரை. நச்சியார்க்கு - தம்மை விரும்பினவரது, நசை - விருப் பத்தை, என்றும் - எக்காலத்தும், கொல்லார் - கொல்லமாட்டார்; கிளைஞர்மிசை - தம்கிளைஞர் மிசையுமிசையை, கொல்லார்-கொல்ல மாட்டார்; வேளாண்மை கொல்லார் - உபகாரத்தைக் கொல்லமாட் டார்; இசை கொல்லார் - தமக்குவரும் புகழைக் கொல்லமாட்டார்; நன்கு உணர்ந்தார் - அறத்தை யறிந்தவர், என்பெறினும்-எவ்வின் பத்தைப் பெறலாயிருப்பினும், இயைந்து - மனமிசைந்து, கொல் லார் - ஒருயிரையுங் கொல்லமாட்டார்; பொன் பெறும்-பொன்னிற த்தைப்பெற்ற, பூ - அழகாகிய, சுணங்கின் - தேமலையுடைய, மெல் முலையாய் - மெல்லிய தனங்களையுடையாளே, எ-று.

க-ரை. நன்குணர்ந்தார், நசைகொல்லார், கிளைஞர்மிசைகொல் லார், வேளாண்மை கொல்லார், இசைகொல்லார், ஒருயிரையுங் கொல்லார் என்பதாம்.

வி-ரை. நசை - விருப்பம். கொல்லல் - கெடுத்தல். கிளைஞர் - உறவினர். மிசை - மிசையப்படுவது (சோறு); மிசைதல் - உண்டல். வேளாண்மை - ஒருவர் தமக்குச் செய்தநன்றி, என்பெறினும் என் றது எவ்வகைப்பட்ட மேம்பாட்டினைப் பெறலாயிருப்பினு மென்ற

படி. பொன்பெறுஞ் சுணங்கின் மென்முலையாய் என்றது மகடூஉ முன்னிலை. நன்கு என்றது தருமத்தை, அதனினுமிக்க நன்மை பயப்பதொன் றின்மையான். (௪௮).

நீண்டநீர் காடு களர்நிவந்து விண்டோயு
மாண்ட மலைமக்க ளுள்ளிட்டு—மாண்டவ
ராய்ந்தன வைந்து மரணு வுடையானை
வேந்தனு நாட்டல் விதி.

ப-ரை. நீண்ட நீர் - மிகுந்த நீரும், காடு - காடும், களர் - சேறும், நிவந்து விண் தோயும் - உயர்ந்து ஆகாயத்தைத் தொடுகிற, மாண்டமலை - பெரியமலையும், (மாண்ட) மக்கள் - மாட்சிமைப்பட்ட காலாட்களும், உள்ளிட்டு - அசப்படுத்து, மாண்டவர் - பெரியோர், ஆய்ந்தன - ஆராய்ந்தெடுத்தனவாகிய, ஐந்தும் - இவ்வைந்தனையும், அரண் ஆ உடையானை - தனக்கு அரணாக வுடையவனை, வேந்தன் ஆ நாட்டல் - அரசனாக நியமித்தல், விதி - விதியாகும், எ-று.

க-ரை. நீர், காடு, சேறு, மலை, காலாட்கள் என்னுமிவ் வைந்தனையும் தனக்காணாக வுடையவனை அரசனாக நியமித்தல் விதியாகு மென்பதாம்.

வி-ரை. நீண்ட நீர் - ஆழ நீளங்களுள்ள நீர், காடு - குறுங்காடு பெருங்காடுகள். களர் - காலாழுஞ் சேற்றுநிலம். மாண்டமலை - "விசும்பினுக்கேணி நெறியன்ன சின்னெறிமேல் மழைதூங், கசும் னிற் றுன்னியளை நுழைந்தா லொக்குமைய மெய்யே; இசும்பினிற் சிந்தைக்கு மேறற்கரிது" என்றபடியே, பகைவரணுகுமை வெருவி யோட்டெடுத்தற் குரியமலை. மாண்டமக்கள் - போர்த்தொழிலிற் கைவந்தமக்கள். மாண்டவர் - கல்வி கேள்வி யறிவொழுக்கங்களிற் சிறந்தவர். மாண் தவர் எனப்பிரித்து, மாட்சிமைப்பட்ட தவத்தினரை

யுடையவர் என்றுரைத்தலுமாம். மாண்ட என்னும் அடை மக்களுக்குங் கூட்டப்பட்டது. அரண் - காவல். விதி - முறைமை. (சக)

பொச்சாப்புக் கேடு பொருள்செருக்குத் தான்கேடு
முற்றாமை கேடு முரண்கேடு—தெற்றத்
தொழின்மகன் றன்னோடு மாற்றாயி னென்று
முழுமகற்குக் கேடி னுரை.

ப-ரை. பொச்சாப்பு கேடு - மறதி கேடாம்; பொருள் செருக்கு கேடு - பொருள் மிகுதியா யுடைமையாற் களித்தல் கேடாம்; முற்றாமை கேடு - தான் அறிவு முதிராமை கேடாம்; முரண் கேடு - பிறரொடு முரணுதல் கேடாம்; தெற்ற-தெளிவாக, தொழில் மகன் தன்னோடு - தனக்குத் தொழில்செய்யு மகனோடு, மாறு ஆயின் - மாறுபட்டுச சீறுவனாயின், என்றும் - எந்நாளும், உழுமகற்கு - உழு மகனுக்கு, கேடின் உரை - கேடாகச சொல்லக்கடவை, எ-று.

க-ரை. மறதி, பொருட்செருக்கு, பேரறிவின்மை, முரண், தொழின்மகனோடு மாறுபடல், இவ்வைந்தும் உழுமகன் உடையனாயின், அவன் கெட்டொழிதல் திண்ணமென்பதாம்.

வி-ரை. பொச்சாப்பு - கடைப்பிடி யின்மை; கடைப்பிடி - கருமமுடிக்குந் துணிவு. பொருள் செருக்கு-பொருள் மிக்குடைமை யான்வருஞ் செருக்கு. செருக்கு - களிப்பு. செருக்குத்தான் கேடு என்பதில் தான் அசை. தொழின்மகன் றன்னோடு என்பதில் தன் சாரியை. முற்றல்-அறிவு முதிர்தல். முரணல்-பகைத்தல். தொழின் மகன்-வேலைக்காரன். மாறுபடல் சீறுதற்காதலால், மாறாயின் என்பதற்கு மாறுபட்டுச் சீறுவனாயின் எனப்பொருள் கூறலாயிற்று. உழு மகன் - உழுதொழில் செய்து வாழுமகன். கேடினுரை - கேடாகச் சொல்லுக எனப்பொருள்படலால் இன் அல்வழிச்சாரியை. (சο)

கொல்லாமை நன்று கொலைதீ தெழுத்தினைக்
கல்லாமை தீது கதந்தீது— நல்லார்
மொழியாமை முன்னே முழுதுங் கிளைஞர்
பழியாமை பல்லார் பதி.

ப-ரை. கொல்லாமை நன்று - ஒருயிரையுங் கொல்லாமை நன்மையாம்; கொலை தீது-கொல்லுதல் தீமையாம்; எழுத்தினை கல்லாமைதீது-எழுத்தைக் கற்றுக்கொள்ளாமை தீமையாம்; கதம் தீது - பிறரைக் கோவித்தல் தீமையாம்; நல்லார் மொழியாமை முன்னே - அறிவுடையார் தமக்குச் சொல்வதற்கு முன்பே, கிளைஞா முழுதும் பழியாமை - தன்னைச் சேர்ந்தவரெல்லாரும் பழியாதவழி யொழுகுவான, பல்லார் - பலர்கரும், பதி - இறைவனாதற்குரியன், எ-று.

க-ரை. ஒருயிரையுங் கொல்லாதிருத்தல் நன்மை, கொல்லுதல் தீமை, எழுத்தைக் கல்லாமை தீமை, கோவம் தீமை, அறிவுடையார் சொல்வதற்கு முன்பே ஒருவராலும் பழிக்கப்படாத நல்வழியில் நடத்தலையுடையோன் பலர்க்கும் இறைவனாயிருத்தற்குரியன் என பதாம்.

வி-ரை. "அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல், பிறவினை யெல்லாந் தரும்."

"நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங், கொல்லாமை சூழு நெறி."

"கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற், செல்லா துயிருண்ணுங் கூற்று."

" தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி, இன்னுயிர் நீக்கும் வினை."

என்றற் றொடக்கத் தான்றோர் செய்யுட்களான் மிக்சிறந் தெடுத்துக் கூறப்பட்டமையான், இவரும் 'கொல்லாமை நன்று' என்றார். கொலை - தொழிற்பெயர். எழுத்தினைக் கல்லாமை - வித்தையைக் கல்லாமை. கதம் - கோவம். பதி - தலைவன். (கக)

உண்ணாமை நன்றவா நீக்கி விருந்துகண்மா
றெண்ணாமை நன்றிகழ றீதெளியா—ரெண்ணி
னரியரா வார்பிறரிற் செல்லாரே யுண்ணார்
பெரியரா வார்பிறர் கைத்து.

ப-ரை. அவா நீக்கி - (துறந்து) அவாவினை யொழித்து, உண்ணாமை - உண்ணாது நோற்றல், நன்று - நன்மையாம்; விருந்து - விருந்தினரை, கண்மாறு எண்ணாமை - கண்மாறுதல் நினையாமை, நன்று - நன்மையாம்; எளியார் இகழல் - தம்மி னெளியாரை யிகழ்ந் துரைத்தல், தீது - தீமையாம்; எண்ணின் - ஆராயுமிடத்தில், அரியர் ஆவார் - பெறுதற் கரியராவார் (யாரெனின்), பிறர் இல் செல்லாரே-பிறரில்லாளை விரும்பி அவரிடத்திற் செல்லாதவரே; பெரியர் ஆவார் - பெரியராவார் (யாரெனின்), பிறர் கைத்து உண்ணார் - பிறர்பொருளை யுண்ணாதவரே, எ-று.

க-ரை. ஆசை யொழித்துத் துறந்து உண்ணாது நோற்றல் நன்மை; விருந்தினரைக் கண்ணோட்டஞ் செய்தல் நன்மை; எளியாரை யிகழ்தல் தீமை; பிறர்மனை நோக்காதவர் அரியர்; பிறர்பொருளுண்ணாதவர் பெரியர் என்பதாம்.

வி-ரை. உண்ணாமை நோற்றற்கே யாதலால், உண்ணாமையென்பதற்கு உண்ணாது நோற்றல் என்றுரை வரையலாயிற்று. விருந்து - பண்பாகுபெயர். கண்மாறெண்ணாமை - கண்ணோட்டஞ் செய்தல். எளியார் இகழ்தல் என்றமையால் தம்மினெளியா ரென்பது தானே பெறப்பட்டது. இல் - இடவாகுபெயர். கைத்து - பொன் (பொருள்). (கஉ)

மக்கட் பெறுதன் மடனுடைமை மாதுடைமை
யொக்க வுடனுறைத லூணமைவு—தொக்க
வலவலை யல்லாமை பெண்மகளிர்க் கைந்து
தலைமகனைத் தாழ்க்கு மருந்து.

ப-ரை. மக்கள் பெறுதல் - தான் மக்களைப் பெறுதலும் மடன் உடைமை - அடக்க முடைமையும், மாது உடைமை - அழகுடைமையும், ஒக்க உடன் உறைதல் - (கணவனது) கருத்துக்கிசைய அவனோடுறைதலும், ஊண் அமைவு-(அவனுண்ணும்) உணவினை விரும்புதலும், தொக்க - கூடிய, ஐந்து - ஐந்து குணங்களும் அலவலை அல்லாமை - அற்ப காரியங்க ளல்லாமையால், பெண் மகளிர்க்கு - பெண்டிர்க்கு, தலைமகனை - தம்கொழுநனை, தாழ்க்கும்-தம்மிடத்தில் வணககுகிற, மருநது - மருநதாகும, எ-று.

க-ரை. மக்கட்பேறும், அடக்க முடைமையும், அழகுடைமையும், கணவனுடைய கருத்துக்கிசைய அவனோ டுடனுறைதலும், அவனுண்ணும் உணவை விரும்புதலும் ஆகிய இவ்வைந்து குணங்களும் பெண்டிர்க் கிருக்குமாயின், அவை அவர் கணவரை வணக்கு மருந்தாகும் என்பதாம்.

வி-ரை. மகளிர்க்கு மக்கட்பேறுபோலச் சிறந்ததொன் றின்மையான் அதனை முற்கூறினர். மடன் - மடம் என்பதன் போலி இது அறியாமையெனப் பொருள்படுவ தாயினும் இங்கு அடக்கமெனப் பொருள்பட்டது. மாது-விருப்பம், அது இங்கு விருப்பத்தைத் தருவதாகிய அழகை யுணர்த்திற்று. ஊணமைவு - கணவன் உண்டு எஞ்சின மிச்சிலையுண்ண விரும்புதல். அலவலை-அற்பகாரியம். தலைமகன் - ஒருசொல்; இது கணவனென்னும் பொருட்டு. தாழ்த்தல் - வணக்குவித்தல். (௩௩)

கொண்டான் கொழுந னுடன்பிறந்தான் றன்மாமன்
வண்டார்பூந் தொங்கன் மகன்றந்தை—வண்டாரா
யாப்பார்பூங் கோதை யணியிழையை நற்கியையக்
காப்பார் கருது மிடத்து.

ப-ரை. கொண்டான்-கணவனும், கொழுநனுடன் பிறந்தான்-கணவனுடன் பிறந்தவனும், தன் மாமன் - தன்மாமனும், வண்டு ஆர் - வண்டுகள் மொய்க்கின்ற, பூ தொங்கல் - புஷ்பமாலையை யணிந்த, மகன் - மகனும், தந்தை - தந்தையும், யாப்பு ஆர் - தொடுத்தலமைந்த, பூ கோதை - மலர்மாலையை யணிந்த, அணியிழையை-ஒருமாதை, கருதுமிடத்து - நினைக்குமிடத்து, நன்கு இயைய நன்மையுண்டாக, காப்பார் - காப்பவராவர், வண்தாராய் - வளவிய பூமாலையை யுடையவனே, எ-று.

க-ரை. கணவன், கணவனுடன் பிறந்தவன், மாமன், மகன், தந்தை, இவ்வைவரும் ஒரு மாதைக் கற்புக்கழிவு வாராமற் காப்பவராவர் என்பதாம்.

வி-ரை.* வண்டாராய் என்றது மகடூஉ முன்னிலை. வண்டார் பூந்தொங்கன் மகன் என்றமையால அறிவறிந்த மகனெனக்கொள்க. அணியிழை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர்; ஆபரணமணிந்த பெண்ணென்பது பொருள். நன்கியையக் காத்தலாவது - கற்பாகிய நன்மை யமையக் காத்தல், இது சிறைக்காவல். யாப்பு - தொழிற்பெயர்; கட்டுத லென்பது பொருள். கோதை - மாலை. (சு)

ஆம்பல்வாய் கண்மனம் வார்புருவ மென்றைந்து
தாம்பல்வா யோடி நிறைகாத்த—லோம்பார்
நெடுங்கழைநீண் மூங்கி லெனவிகழ்ந்தா ராட்டுங்
கொடுங்குழை போலக் கொளின்.

ப-ரை. ஆம் - உண்டாகிய, பல் - பல்லும், வாய் - வாயும், கண் - கண்ணும், மனம் - மனமும், வார் புருவம்-நீண்டபுருவமும், என்ற ஐந்தும் - என்று சொல்லப்பட்ட வுறுப்பைந்தையும் (கண்டு), தாம் பல்வாய் ஒடி - தாம் பலவிடங்களிலோடி, நிறை காத்தல் ஓம்பார் - தமது நிறையைக் காவாத ஆடவர், ஆட்டும் - அசைவிக்கிற, கொடுங்குழை - கொடுங்குழை யணிந்த பெண்ணை, நெடு கழை நீள் மூங்கில் என - நெடிதாய்த் திரண்ட நீண்மூங்கில்போலக் கருதி, இகழ்ந்தார் - இகழ்ந்தாராய், போல - அம்மூங்கிலைப்போல, கொளின் - கொள்வாராயின், (அவ்வாடவர் நிறைகாத்த லோம்புவர்) எ-று.

க-ரை. பல்லும், வாயும், கண்ணும், மனமும், புருவமும், ஆகிய ஐந்துறுப்பையும் உடைய பெண்களை மூங்கில்போலக் கருதி யிகழ்ந்த ஆடவர், தமது நிறை காப்பவராவர் என்பதாம்.

வி-ரை. மாதரை மூங்கில்போலக்கொண் டிகழ்த லாவது, மூங்கிலிலுள்ள முத்து அவர் பல்லாகவும், மூங்கிலின் குழல் அவர் வாயாகவும், மூங்கிலின்கண் அவர் கண்ணாகவும், மூங்கிலின் பொய்ப்பட்ட வுள்ளம் அவர் மனமாகவும், மூங்கிலின் வில் அவர் புருவமாகவும் கொண்டிகழ்தல். இவ்வகையாய்க் கருதினால் அவர்மேலன்பு நிகழாது வெறுப்புண்டா மென்றதாயிற்று. குழல் - மூங்கிலினுட்புரை. கண்-மூங்கிற்கணு. உள்ளம்-உள்ளிடம். (நூ)

பொன்பெறுங் கற்றான் பொருள்பெறு நற்கவி
யென்பெறும் வாதி யிசைபெறு—மூன்பெறக்
கல்லார்கற் றாரினத் தல்லார் பெறுபவே
நல்லா ரினத்து நகை.

ப-ரை. கற்றான் - கற்று வல்லவன், பொன் பெறும் - பொன்னைப் பெறுவான்; நல் கவி - பாடவல்லவன், பொருள் பெறும்

(அரசனால்) எல்லாப் பொருள்களையும் பெறுவான்; வாதி - வாது செய்து வெல்லவல்லவன், என்பெறும்-எதுபெறுவானெனின், இசை பெறும் - (வென்றான் என்றும்) புகழைப் பெறுவன்; முன்பெற - கால முண்டாக, கல்லார் - (கல்வி) கல்லாதாரும், கற்றார் இனத் தர் அல்லார் - கற்றாரினத்த ரல்லாதாரும், நல்லார் இனத்து - நல்லோர் கூட்டத்தினடுவே, நகை பெறுப - அவரால் நகைக்கப்படு தலைப் பெறுவர், எ-று.

க-ரை. கற்றுவல்லவன் பொன்பெறுவன்; கவிபாட வல்லவன் அரசனால் நன்குமதிக்கப்பட்டு அவனாலெல்லாப் பொருள்களையும் பெறுவான்; வாதுசெய்து வென்றவன் புகழ்பெறுவன்; கல்லாதவ ரும், கற்றாரினத்த ரல்லாதாரும் நல்லோர்களால் நகைக்கப் பெறு வர் என்பதாம்.

வி-ரை. கவியேற்றுக் கொள்ளுதற் குரியவன் அரசனாதலால் நற்கவி பொருள்பெறும் என்பதற்கு நல்ல கவிபாட வல்லவன் அரச னால் எல்லாப் பொருள்களையும் பெறுவான் என்று பொருள் கூற லாயிற்று. வாதி - தர்க்கவாதஞ் செய்பவன். முன்பெற - இளமைக் காலத்தில். கல்லார் என்பதற்குச் செயப்படு பொருளாகிய கல்வி வருவிக்கப்பட்டது. நகை-நகைக்கப்படுதல். நல்லார் என்றது கற்று வல்ல பெரியோரை. (௫௬)

நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்
தொல்லை யுயிர்க்கூற்றங் கோலாகி—யொல்லுமெனின்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றுக மானத்தா
னாயி னழித லறிவு.

ப-ரை. நல்ல - (பிறர்செய்த) நல்லனவற்றை, வெளிப்படுத்து - வெளியாக்கி, தீய - (பிறர்செய்த) தீயனவற்றை, மறந்தொழிந்து - நினையாது மறந்தொழிந்து, உயிர்க்கு - (இடையூறு நேரிட்ட) பிற

வுயிர்களுக்கு, ஒல்லை - விரைவில், ஊற்றங்கோல் ஆகி - ஊன்றுகோலாகி, ஒல்லும் எனின் - தனக்கியலுமாயின், பிறர் பொருள்கண் - பிறர்பொருளிடத்தில், மாயம் - வஞ்சனைசெய்தலை, மாற்றுக - ஒழிக; மானத்தால் - மானத்தின்பொருட்டு, அழிதல் - தான் சாதலை, ஆயின் - (ஒருவன்) ஆராய்வனாயின், அறிவு - (அவனுக்கதுவே) அறிவாவது, எ-று.

க-ரை. பிறர் செய்த நன்மையை வெளிப்படுத்தித், தீமையை மறந்து, பிறவுயிர்களுக் கிடையூறு நேரிட்டால் அவ்விடையூற்றை யொழித்து ஊன்றுகோலாகி, பிறர்பொருளை வஞ்சித்த லொழிந்து, மானத்தின்பொருட்டுச் சாதலே நன்மையென் றொருவன் ஆராய்வானாயின், அதுவே அவனுக்கறிவாவது என்பதாம்.

வி-ரை. மறந்து என்னுது மறந்தொழிந்து என்றமையால் மனத்து நினைத்தலுமாகா தென்றதாயிற்று. ஊற்றங்கோல் - ஊன்றுகோல். ஒல்லுதல் - இசைதல். ஆய்தல் - ஆராய்தல். மானத்தால் என்பதில் ஆல் என்னுமூன்றுவது நான்காவதன் பொருட்டுப் பொருளில் வந்தது. (௫௭)

தன்னிலையுந் தாழாத் தொழினிலையுந் துப்பெதிர்ந்தா
ரின்னிலையு மீடி லியனிலையுந்—துன்னி
யளந்தறிந்து செய்வா னரசமைச்சன் யாதும்
பிளந்தறியும் பேராற்ற லான்.

ப-ரை. தன் நிலையும் - தனது நிலைமையினையும், தாழா - தாழ்தலில்லாத, தொழில் நிலையும் - (தான் தொடங்கிச் செய்யும்) வினையினது நிலைமையினையும், துப்பு - வலியினால், எதிர்ந்தார் - (தன்னோடு) எதிர்த்தவராகிய பகைவரிடத்துளதாகிய, இன் நிலையும் - இனிய நிலைமையினையும், ஈடு இல் - கேடில்லாத, இயல் நிலையும் - உலகவழக்கு நிலைமையினையும், துன்னி - முன்புகுந்து, அளந்து

அறிந்து - ஆராய்ந்தறிந்து, செய்வான் - செய்வோன், அரசன் - அரசனுவான்; யாதும் - எல்லாவற்றையும், பிளந்து அறியும் - பாகுபடுத்தறிகின்ற, பேராற்றலான் - பெரிய ஆற்றலையுடையவன், அமைச்சன் - அமைச்சனுவான், எ-று.

க-ரை. தனது நிலைமை, தான் செய்யத் தொடங்கின வினையினது நிலைமை, வந்தெதிர்த்த பகைவரது நிலைமை, உலகியலின் நிலைமை, என்பவற்றை யாராய்ந்து செய்பவனே அரசனுவான்; இவற்றையேயன்றி மற்றெல்லாக் காரியங்களையும் பகுத்தறிய வல்லவனே அமைச்சனுவான் என்பதாம்.

வி-ரை. தாழ்தல் - தாமதித்தல். துப்பு - வலி. ஈடு - அழிவு. இயல் - உலகியல். அளத்தல்-பிரமாணங்களால் அளவிடல். யாதும் என்றது அரசனுக்குச் சொன்ன நான்கேயன்றி மற்றெல்லாவற்றையு மென்றபடி. ஆற்றல் - வினைமுடிக்குந் திறம். (ருஅ)

பொருள்போக மஞ்சாமை பொன்றுங்காற் போந்த
வருள்போகா வாரறமென் றைந்து—மிருடீரக்
கூறப் படுங்குணத்தான் கூர்வேல்வல் வேந்தனுற்
றேறப் படுங்குணத்தி னன்.

ப-ரை. பொருள் - பொருளும், போகம் - இன்பமும், அஞ்சாமை - (இடுக்கண் வந்தால் அதற்கு) அஞ்சாமையும், பொன்றும் கால் - பிறிதோருயிர் அழியவந்த விடத்து, போந்த அருள் - மிக்க அருளும், போகா - நீங்காத, ஆர் - அரிய, அறம் - அறமும், என்ற ஐந்தும் - என்று சொல்லப்பட்ட இவ்வைந்தும், இருள் தீர - குற்றந்தீர, கூறப்படும் - சொல்லப்படுகிற, குணத்தான் - தன் குணங்களாக வுடையவன், கூர் - கூரிய, வேல் - வேற்படையையுடைய, வல் வேந்தனுல் - வலிய அரசனுல், தேறப்படும் - (ஒரு கருமத்தின்

மேற் செலுத்தத் தக்கவனென்று) தெளியப்படுகிற, குணத்தி ஞன் - குணத்தை யுடையவனென்று சொல்லப்படுவான், எ-று.

க-ரை. பொருளும்,இன்பமும்,இடுக்கண்வந்த காலத்து அதற் கஞ்சாமையும், பிறிதோருயிர் அழியவந்தவிடத்து அதற் கிரங்கும் அருளுடைமையும், அருமையாகிய அறமும், என்று சொல்லப்பட்ட இவ்வைந்தனையு முடையவன், அரசனு லொருகருமத்தின்மேற் செலுத்துதற் குரியனுவான் என்பதாம்.

வி-ரை. இன்பமுதலியவற்றை நுகர்தல் பொருளில்வழி கூடா மையின், பொருளை முன்வைத்தார். அஞ்சாமை யென்றது இடுக்க ணழியாமையை. இடுக்க ணழியாமையாவது - வினையின்கண் முயல் வான், தெய்வத்தானுதல், பொருளின்மையானுதல், மெய்வருத்தத் தானுதல் தனக்கிடுக்கண் வந்துழி, அதற்கு மனங்கலங்காமை. "இடு க்கண் வருங்கா னகுக வதனை, அடுத்தூர்வ தஃதொப்ப தில்" என் பது திருக்குறள். அறம்போலச் சிறந்தது மக்களுயிர்க்குப் பிறி தொன்றின்மையான் 'ஆரறம்'என்ருர். என்றைந்தும் என்பதில், சிலே மொழி யீற்றகரம் தொகுத்தல். தேறல்-தெளிதல் (நம்புதல்). (கரு)

நன்புலத்து வையடக்கி நாளுமா டோம்போற்றிப்
புன்புலத்தைச் செய்தெருப் போற்றியபின்—னின்புலத்தின்
பண்கலப்பை யென்றிவை பாற்படுப் பானுழுவோன்
நுண்கலப்பை நூலோது வார்.

ப-உரை. நன் புலத்து - விளைபுலத்திலுள்ள, வை-வைக்கோலே, அடக்கி - (தன்னிடத் துள்ளதாகத்) திரட்டி, நாளும்-நாள்தோறும், மாடு-உழுபசுகளை, போற்றி-பாதுகாத்து, புன் புலத்தை - புல்லிய புலத்தை, செய்து - நன்புலமாகத் திருத்தி, எருபோற்றியபின் - எருவினுல் அதனைப் போற்றின பின்பு, பண் - பண்ணப்பட்ட, கல

ப்பை என்றிவை - கலப்பை யென்பவைகளை, இன்புலத்தின்பால் படுப்பான் - நன்புலத்தின் பகுதிப் படுப்பவன், உழவோன் - உழவனென்று (சொல்லுவர்), நுண் - நுண்ணிய, கலப்பை நூல் - உழவு நூலை, ஓதுவார்-ஓதியுணர்ந்த அறிவுடையார், எ-று.

க-ரை. விளை புலத்திலுள்ள வைக்கோலைத் திரட்டித் தன்னிடத்திற் சேர்த்து, உழுபசுக்களைக் காப்பாற்றி, புன்புலத்தை நன்புலமாகத் திருத்தி, எருப்பெய்த பின்பு, கலப்பை முதலியவற்றை அந்த நன்புலத்தின்பாற் படுப்பவன் உழவனென்று சொல்லுவர் உழவுநூலோதி யுணர்ந்த அறிவுடையோர் என்பதாம்.

வி-ரை. நன்புலம்-நன்செய், இதனை நஞ்சை யென்பது உலகவழக்கு. அடக்கல்-தன்னிடத்திற் சேர்த்தல். மாடோ என்னுமோகாரம் இசைநிறை. புன்புலம் - புன்செய், இதனைப் புஞ்சை யென்பது உலகவழக்கு. எருப்போற்றல்-எருப்பெய்தல். செய்தல் - திருத்தல். இன்புலம் - நன்செய்; இது இன்பந்தருதலால் 'இன்புலம்' என்றார். என்ற இவை யெனற்பாலது என்றிவையென நிலைமொழி யீற்றகரம் தொகுத்தலாயிற்று. உழவோன் என்பதனீற்றில் என்று என ஒரு சொல்வருவித் துரைக்கப்பட்டது. (௬0)

ஏலாமை நன்றீ தறீதுபண் பில்லார்க்குச்
சாலாமை நன்றுநூல் சாயினுஞ்—சாலாமை
நன்று தவனனி செய்தறீ தென்பாரை
யின்றுகா றியாங்கண் டிலம்.

ப-உ.ரை. ஏலாமை - (ஒருபொருளை ஒருவரிடத்துச் சென்றிரந்து அவர் கொடுக்க) ஏற்றுக்கொள்ளாமை, நன்று - நன்மையாய்; பண்பு இல்லார்க்கு - நற்குண மில்லாதவர்க்கு, ஈதல் - (அவர் வேண்டிய தொருபொருளை) கொடுத்தல், தீது - தீமையாம்; நூல் சாலாமை - நற்குண மில்லாதவர்க்கு நூல்களை) நிரம்ப அறியாமை, நன்று -

நன்மையாம்; சாயினும் சாலாமை நன்று - சாய்ந்தாலும் ஒருவன் சால்புடையனல்லாமை நன்மையாம்; நனி தவம் செய்தல் - மிகுதியாய்த் தவஞ்செய்தல், தீது-தீமையாம், என்பாரை-என்று சொல்லுவோரை, இன்றுகாறு - இன்றளவும், யாம் கண்டிலம் - நாம் கண்டிலேம், எ-று.

க-ரை. ஒருபொருளை யொருவரிடத்துச் சென்று இரந்து அதனை யவர் கொடுக்க ஏற்றுக்கொள்ளாமை நன்று; நற்குணமில்லாதவர்க்குக் கொடுத்தல் தீது; நற்குண மில்லாதவர்க்கு நூல்களை நிரம்பக் கற்பியாமை நன்று; ஒருவன் சால்புடையனல்லாமை நன்றென்றும், மிக்க தபஞ்செய்தல் தீதென்றும் சொல்லுவோரை இது வரையும் யாம் கண்டிலேம் என்பதாம்.

வி-ரை. ஏலாமை சாலாமை யென்பன எதிர்மறைத் தொழிற்பெயர்கள். இவற்றிற்குப் பகுதிகள் முறையே ஏல் சால் என்பன. பண்பு - குணம், அது இங்கு நற்குணத்தைக் குறித்தது. சாலாமை யென்பது நிரம்ப வறிவியாமை யெனவும் சால்புடைய னல்லாமை யெனவும் இருவகையாய்ப் பொருள் கொள்ளக்கிடந்தது. சாய்தல் - கெடுதல். தம்போல்வாரையு முளப்படுத்த 'யாம் கண்டிலம்'என்றார். 'இன்றுகா றியாங்கண் டிலம்' என்றமையால் இனிக் காண்டுமோ வென்னு மையம் நிகழ்தற் கிடமாயிற்றென்க. (சுக)

அரம்போற் கிளையடங்காப் பெண்வியக்கத் தொண்டு
மரம்போன் மகன்மாறாய் நின்று— கரம்போலக்
கள்ளநோய் காணு மயலேந்து மாகுமே
யுள்ளநோய் வேண்டா வுயிர்க்கு.

ப-ரை. அரம்போல் - அரம்போலத் தன்னைத் தேய்க்கின்ற, கிளை - உறவும், அடங்கா - தனக்கடங்காத, பெண் - மனைவியும், வியக்கத்தொண்டு - அடங்காதன செய்யும் அடிமையும், மரம்

போல் மகன் - மரம்போன்ற தன் புதல்வனும், மாறு ஆய் நின்று - மாறுபட்டு நின்று, காரம்போல-நஞ்சுபோல, கள்ளம் நோய்காணும் - வஞ்சனையாகிய நோயைச் செய்கிற, அயல் - அயலிருப்பும், ஐந்தும் - ஆகிய இவ்வைந்தும், ஆகும் எல் - உளவாயின், உயிர்க்கு - உயிர்களுக்கு, உள்ளநோய் - மற்றொரு மனோவியாதி, வேண்டா - வேண்டப்படாது, எ-று.

க-உ ர. அரம்போலத் தன்னைத் தேய்க்கின்ற உறவும், தனக்கடங்காத மனைவியும், அடங்காதன செய்யும் அடிமையும், மரம்போன்ற தன் புதல்வனும், நஞ்சுபோல நோயைச் செய்கிற அயலிருப்பும், ஆகிய இவ்வைந்தும் ஒருவனுக் குளவாயின், அவனுயிர்க்கு வேறொரு மனோவியாதி வேண்டப்படாது என்பதாம்.

வி-ரை. அரம்போல என்றமையால் அதன்றொழிலாகிய தேய்த்தல் வருவிக்கப்பட்டது. கிளை - தொழிலாகுபெயர். தொண்டு - பண்பாகுபெயர். மரம்போல மகன் என்றது மரம்போல் அறிவில்லாதமகன் என்றபடி. காரம் - நஞ்சு. அயல் - அயன்மை, இது பண்பாகு பெயராய் அயலிருப்பாரை யுணர்த்திற்று. எல் - எனின் என்பதன் மரூஉ. உள்ளம் - உள்ளிடம், அது அங்குள்ள மனத்தை யுணர்த்தலால் இடவாகுபெயர். உயிர் என்றது மக்களுயிரை அரம் போற் கிளை முதலியவற்றை யுணர்தற்குரிய ததுவே யாதலான். கிளை முதலியவற் றிறுதியில் எண்ணும்மைகள் தொக்கன. (சு௨)

நீரற நன்று நிழனன்று தன்னில்லுட்
பாரற நன்றுபாத் துண்பானேற்—பேரற
நன்று தளிசாலை நாட்டற் பெரும்போக
மொன்றுமாஞ் சால வுடன்.

ப-ரை. நீர் அறம் - நீரறஞ் செய்தல், நன்று - நன்மையாம்; நிழல் நன்று - நிழலறஞ்செய்தல் நன்மையாம்; தன் இல்லுள் - தன்

வீட்டில், பார் அறம் நன்று - பிறர் உறைய இடங்கொடுத்தலாகிய அறம் நன்மையாம்; பாத்து - பிறவுயிர்களுக்குப் பகிர்ந்து, உண்பானேல் - உண்பானாயின், பேர் அறம் - (அது) பெரிய அறமாம்; தளி சாலை-கோயிலோடு சாலைகளை, நாட்டல்-நிலைபெறுவித்தல், நன்று - நன்மையாம்; (இவ்வைந்தனையுஞ் செய்தவர்க்கு) பெரும்போகம் - பேரின்பம், உடன் - உடனே, சால - மிகுதியாக, ஒன்றும் - உண்டாகும், எ-று.

க-ரை. நீர் அறம், நிழலறம், பாரறம், பாத்துண்டலாகிய அறம், கோயிற்சாலைகளை நிலைபெறுவித்தலாகிய அறம், என்னும் இவ்வைந்தனையுஞ் செய்தார்க்கு உடனே பேரின்பம் வாய்க்கும் என்பதாம்.

வி-ரை. நீரறம் - தண்ணீர் வார்த்தலாகிய தருமம். நிழலறம் - சோலை முதலியவற்றால் நிழலையுண்டாக்கி அதுவாயிலாக வருவோரது இளைப்பாற்றுதலாகிய தருமம். பாரறம் - தன் வீடு நாடி வருவோர்க்குத் தங்கியிருக்கு மிடங் கொடுத்தலாகிய தருமம். பாத்துண்டல் - உண்டற்குரிய எல்லாப் பொருள்களையும் பிறருக்குப் பகிர்ந்துண்டல். தளி-கோயில். சாலை - கோயிலைச்சார்ந்த சாலை. நாட்டல் - அழியாது நிலைபெறச் செய்தல். ஒன்றுமாம் என்பதில் ஆம் அசையிடைச்சொல். "மணியுமா மென்றும் பெருமை சிறுமை, அணியுமாந் தன்னை வியந்து" என்னுந் திருக்குறளில் ஆமிரண்டும் அசை நிலைகளாய் வந்தமை காண்க. சால - உரிச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சம்; இது ஒன்றும் என்னும் வினைகொண்டது. ()

பிடிப்பிச்சைப் பின்னிறை யையங்கூழ் கூற்றோ
டெடுத்திரந்த வுப்பித் துணையோ—டடுத்து
சிறுபய மென்னார் சிதவலிப் பீவார்
பெறுபயன்பின் சாலப் பெரிது.

ப-ரை. பிடிப்பிச்சை - ஒரு பிடியுளடங்கும் பிச்சை, பின்னிறை - விரலிறையு ளடங்கும் பிச்சை, ஐயம் - உண்டோ இல்லையோ வென்றையப்படும் பிச்சை, கூழ் - கூழ்வார்த்தல், கூற்றோடு எடுத்திரந்த உப்பு - ஒருவன் சொல்லப்பட்ட ஓடெடுத்திரந்த வுப்பு, இத்துணையோடு அடுத்து-இத்துணையும் பொருந்தி, சிறுபயன் என்னார்- சிறுபயனைத் தருவனவென்று நினையாதவராய், சிதவலிப்பு - மனவுறுதியோடு, ஈவார் - கொடுப்பவர், பின் - பின்பு, பெறுபயன் - அடையும் பயன், சால பெரிது - மிகப்பெரிது, எ-று.

க-ரை. பிடிப்பிச்சை முதலியவை சிறியவை, இவைதரும் பயனும் சிறியனவென்று நினையாது கொடுப்பவர், பின்பு பெறும்பயன் மிகப்பெரிது என்பதாம்.

வி-ரை. பிச்சை - பிச்சைச்சோறு. விரலிறை - விரற்சந்திலடங்கும் பிச்சை. ஐயம் - சந்தேகம். கூழ் - மாச்சாதம். ஓடு - பிக்ஷாபாத்ரம். இத்துணை - இவ்வளவும். சித்தவலிப்பு - சிதவலிப்பெனத் தொகுத்தல் பெற்றது. சித்தம் - மனம். பிடிப்பிச்சை முதலியவை தரும் பயன் சிறிதென் றெண்ணாமல் மனவுறுதியோடு கொடுப்பவர் இக்கொடையால் பின்பு பெறும்பயன் மிகப் பெரிதென்ப திதனாற் கூறப்பட்டது. "இறப்பச் சிறிதென்ன தில்லென்ன தென்றும்,அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க - முறைப்புரவின், ஐயம்புகூஉந் தவசிகடிஞைபோல், பைய நிறைத்து விடும்" என்பது நாலடியார். (கூச)

வெந்தீக்காண் வெண்ணெய் மெழுகுநீர் சேர்மண்ணுப்
பந்தன் மகற்சார்ந்த தந்தையென்—றைந்தினு
ளொன்றுபோ லுண்ணெகிழ்ந் தீயிற் சிறிதெனினுங்
குன்றுபோற் கூடும் பயன்.

ப-ரை. வெம் தீ - வெப்பமாகிய நெருப்பை, காண் - கண்ட, வெண்ணெய் - வெண்ணெயும், மெழுகு - மெழுகும், நீர் சேர் மண் -

நீர் சேர்ந்தமண்ணும், உப்பு-உப்பும், அந்தம்-அழகையுடைய, மகன் சார்ந்த - மகனைத்தழுவிய, தந்தை - தகப்பனும், என்ற ஐந்தினுள்-என்று சொல்லப்பட்ட ஐந்தினுள்ளே, ஒன்றுபோல் - ஒன்றுபோல, உள நெகிழ்ந்து - (இரவலரைக்கண்டு) மனமிரங்கி, ஈயின் - ஒருவன் கொடுப்பானாயின், சிறிது எனினும்-(ஈயப்பட்டபொருள்) சிறிதாயி னும், பயன் - (அதனாலுளதாகும்) பயன், குன்றுபோல் கூடும்-மலை போல மிகப் பெரிதாய் வந்துசேரும், எ-று.

க-ரை. நெருப்பைக்கண்ட வெண்ணெய் முதலியபொருள்களி லொன்றைப்போல மனமுருகி இரவலர்க்கு வேண்டும்பொருள் சிறி தாய இயைந்தவளவிற் கொடுத்த வொருவனுக்கு அச்சிறுகொடை யா லுண்டாகும்பயன் மலைபோல மிகப்பெரிதா மென்பதாம்.

வி-ரை. நெருப்பைக்கண்ட வெண்ணெய் மெழுகு என்பவை போலவும், நீர்சேர்ந்தமண் உப்பு என்பவைபோலவும், மகனைத் தழுவிய தந்தைபோலவும், இரவலரைக்கண்டு மனநெகிழ்ந்து ஒரு வன் கொடுக்கும்பொருள் சிறிதாயினும் அக்கொடையால் அவனுக் குண்டாகும் பயன் மலைபோல மிகப்பெரிதா மென்பதிதனாற் கூறப் பட்டது. வெண்ணெய் முதலியவற்றினிறுதியில் எண்ணும்மைகள் தொக்குநின்றன. இவ்வாறு மனநெகிழ்ந்தீயாத ஈகையாற் பயனில்லை யென்பதும் இதனாற்போந்த பொருள். காண் வெண்ணெய் - வினைத் தொகை நிலைத்தொடர். நெருப்பைக் காண்டலும் விரைந்துருகு வன வெண்ணெய் மெழுகுகளாதலால் அவற்றை முற்கூறினார். (சுரு)

குளந்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்
துளந்தொட் டுழுவய லாக்கி—வளந்தொட்டுப்
பாகு படுங்கிணற்றோ டென்றிவ்வைம் பாற்படுத்தா
னேகுஞ் சுவர்க்கத் தினிது.

ப-ரை. குளம் தொட்டு - குளத்தைக் கல்லி, கோடு பதித்து - மரக்காவைநட்டு, வழிசீத்து-வழிசீத்துத் திருத்தி, உள்ளம்.தொட்டு-

(மேடாயின நிலங்களை) உள்ளே தோண்டி, உழுவயல் ஆக்கி - உழுவயலாகச்செய்து, வளம் தொட்டு - வளம்படத்தோண்டி, பாகுபடும் கிணறொடு - பாகுபடுத்தப்பட்ட கிணறெடுத்தலோடுகூடி, என்ற இவ்வைம்பால் படுத்தான - என்ற இந்த ஐந்துபகுப்பையுஞ் செய்தவன், சுவர்க்கத்து - சுவர்க்க லோகத்தில், இனிது - இனிதாக, ஏகும் - செல்வான், எ-று.

க-ரை. குளம்வெட்டுதல் முதலிய அறங்களெல்லாவற்றையும் செய்தவன், சுவர்க்கலோகத்தை யடைவா னென்பதாம்

வி-ரை. தொடுதல் - தோண்டுதல் கோடு-மரக்கிளை, அது சினையாகுபெயராய் மரத்தை யுணர்த்தி, அது அவ்வாகுபெயராய் மரக்காவை யுணர்த்தினமையால் இது இருமடியாகுபெயர் சீத்தல்-திருத்திச்சுத்தப்படுத்தல். உள்ளம் - உள்ளிடம் பாகுபடுதல் - பகுக்கப்படுதல். செய்யவேண்டிய பகுப்புக்களெல்லாஞ் செய்தல் இனிது ஏகும் என்றது, இடையூறின்றிச் சென்று, இடையூறு நிலத்துப் பெரும்பாம்பாய் வீழ்ந்த நகுஷன்போலாது இடையூறின்றிச் செல்வான் என்றபடி. (சுசு)

போர்த்து முரிந்திடும் பூசியு நீட்டியு
மோர்த்தொரு பான்மறைத் துண்பானமே—யோர்த்த
வறமாமேற் சொற்பொறுக்க வன்றேற் கலிக்கட்
டுறவறம் பொய்ய யில்லறமே வாய்.

ப-ரை. போர்த்தும் - முழுமெய்யும் தோன்றாமற் போர்த்தும், உரிந்திடும் - உடுத்தவுடையைக் களைந்தும், பூசியும் - உடம்பு முழுதும் நீறுபூசியும், நீட்டியும் - சடையை நீட்டியும், ஓர்த்து ஒருபால் மறைத்து - ஆராய்ந்து உடம்பில் ஒரு பக்கத்தை மறைத்தும், உண்பான் - உண்டற்கு, மேய ஓர்த்த - மேவி யாராய்ந்து கொண்டனவாகிய இவ்வேடங்களாலும், மேல் சொல் அறம் ஆம் - மேலோர் சொல்லிய துறவறமே; பொறுக்க - (துறவறமாயின் பிறர்சொல்லிய கடுஞ்சொற்களை) பொறுத்துக் கொள்க; அன்றேல் - பொறாராயின், கலிக்கண் - இக்

கலிகாலத்தில், துறவறம் பொய் - துறவறம் பொய்யாம்; இல்லற மே வாய் - இல்லறமே மெய்யாம், எ-று.

க-ரை. முழுமெய்யுந் தோன்றுமற் போர்த்தல் முதலிய வேடங் களைந்தும் மேலோர்சொல்லிய துறவறத்துக் குரியனவே யாயினும், பிறர்சொல்லுங் கடுஞ்சொற்களைப் பொறுராயின், அத்துறவறத்தாற் பயனில்லை, இல்லறமே பயனுடைத் தென்பதாம்.

வி-ரை. போர்த்தும் முதலிய வும்மைகள் எண்ணும்மைகளாத லால் மறைத்து என்பதனீற்றிலும் அவ்வும்மை சேர்க்கப்பட்டது. உண்பான் என்பதில் பான் எதிர்கால வினையெச்ச விகுதி. மேவி யென்பது மேய் என்றுயது. வாய்மை - மெய், இது வாய் என ஈறு தொகுத்தலாயிற்று. போர்த்தல் முதலிய வேடங்களாற் பயனில்லை, துறவறத்திற்குரிய பொறுமை யில்லையாயின் அத்துறவானது பொய் த்துறவேயென்ப திதனுற் போந்தபொருள். "உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செயயாமை, அற்றே தவத்திற் குரு" என்பது திருக் குறள். (கஎ)

தான்பிறந்த வின்னினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ராற்கருதற் பாடுணர்ந்து—தான்பிறராற்
சாவ வெனவாழான் சான்றோராற் பல்யாண்டும்
வாழ்க வெனவாழ்த னன்று.

ப-ரை. தான் பிறந்த இல் நினைந்து - தான் பிறந்த குடியை நினைத்து, தன்னை கடைப்பிடித்து - தன்னை நல்லொழுக்கத்தில் வழுவாதபடி கடைப்பிடித்து, தான் பிறரால் கருதற்பாடு உணர் ந்து - தான் பிறரால் மதிக்கப்படுதற்குரிய செய்கைகளை யறிந்து, தான் பிறரால் சாவ என வாழான் - தான் பிறரால் செத்தொழிக வென்று சொல்லும்படி யொழுகாது, சான்றோரால் - பெரியோரால், பல் யாண்டும் - பல வருடத்தளவும், வாழ்க என - வாழ்கவென்று,

சொல்லும்படி, வாழ்தல் - ஒருவன் உயிர் வாழ்ந்திருத்தல், நன்று - நன்மையாம், எ - று.

க-நா. ஒருவன் தான் பிறந்த குடியின் பெருமையை நினைத்தல் முதலியவற்றை யுடையனாய் உயிர்வாழ்தல் நன்மையா மென்பதாம்.

வி-ரை. இல் - குடி, இது இதன் பெருமையைக் குறித்தலால் முதலாகுபெயர். கடைப்பிடித்தல் - உறுதியாய்ப் பற்றுதல். வாழான் - முற்றெச்சம். சான்றோர்-கல்வியறி வொழுக்கங்களால் நிறைந்தவர், சால் என்பதிதன் பகுதி. 'சான்றோரால் பல்யாண்டுர் வாழ்க வென' என்றது பெரியோர் ஒருவனது நல்லொழுக்கங் கண்டு மனமகிழ்ந்து இவன் இவ்வுலகத்தில் பல்யாண்டும் இனிது வாழ்ந்திருப்பானாகவென்று ஆசிகூறும்வண்ணம் என்றபடி. (௬௨)

நெடுக்கல் குறுக்கல் துறைநீர்நீ டாடல்
வடுத்தீர் பகல்வா யுறையே—வடுத்தீரா
வாகுமந் நான்கொழிந் தைந்தடக்கு வானாயின்
வேதும்பம் வேண்டான் விடும்.

௬௩-உரை. (ஒருவன்) நெடுக்கல் - மயிரைச்சடையாக நீட்டுதலும், குறுக்கல் - மயிரைக் குறைத்தலும், துறைநீர் - கங்கை முதலாகிய நதித்துறைகளின் புண்ணிய தீர்த்தங்களில், நீடு ஆடல்-நெடிதாகப் போயாடுதலும், வடு தீர் பகல் - குற்றம் நீங்கின பகற்காலத்தில், வாயுறை - உண்ணுதலும் என்று சொல்லப்படுகிற, வடுதீரா ஆகும்-குற்றம் நீங்காதனவாகிய, அ - அந்த, நான்கும் ஒழித்து - நான்கையுமொழித்து, ஐந்து அடக்குவானாயின் - ஐம்புலன்களையும் அடக்குவானாயின், (அவன்) வே - மயானத் தீயில் வேதற்குரிய, கும்பம் - குடம்போன்ற வுடம்பினை, வேண்டான் விடும் - விரும்பாதவனாய் விட்டொழிவான், எ-று.

க-ரை. ஒருவன் மயிரைச் சடையாக நீட்டுதல் முதலிய நான்கையும் ஒழித்து, ஐம்புலன்களையும் அடக்குவானாயின் அவன் இந்தச சரீரசம்பந்தத்தை யொழித்துப் பிறவியற்றவனாவான் என்பதாம்.

வி-ரை. நெடுக்கல் - பிறவினை. நெடுகச்செய்தல் என்பது பொருள். குறுக்கல் என்பதுமது, குறுகச்செய்தலென்பது பொருள். துறை - நீர்த்துறை. வாயுறை - உணவு. ஐம்புலன்களாவன - சத்த பரிச ரூப ரச கந்தங்கள். வே - முதனிலைத் தொழிற்பெயர், வேதல் என்பது பொருள். குடம் உடைந்தொழிதல்போல அழிந்தொழிதலால் உடம்பைக் 'கும்பம்' என்றார். கும்பம் - உவமையாகுபெயர். வேண்டான் முற்றெச்சம். வேகும்பம் வேண்டான்-விடும்பிறவியில்லாதவனாவா னென்றபடி. "மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம், பழித்த தொழித்து விடின்" என்பது திருக்குறள். (சு௫)

கொன்றான் கொலையை யுடன்பட்டான் கோடாது
கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங்கால்—கொன்றதனை
யட்டா னிடவுண்டா னைவரினு மாகுமெனக்
கட்டெறிந்த பாவங் கருது.

ப-ரை. கொன்றான் - ஒருயிரைக் கொன்றவன், கொலையை உடன்பட்டான் - கொலைக்கஞ்சாமல் உடன்பட்டவன், கோடாது - நாணாமல், கொன்றதனை கொண்டான் - கொல்லப்பட்ட தோருயிர் நின்ற வுடம்பாகிய மாமிசத்தை விலைக்குக் கொண்டவன், கொழிக்குங்கால் - ஆராயுமிடத்து, கொன்றதனை அட்டான் - கொல்லப்பட்டதனுடைய வூனைசசமைத்தவன், இட உண்டான் - சமைத்ததனை யிடவுண்டவன் (என்று சொல்லப்படுகிற), ஐவரினும்-இந்த ஐவரிடத்தும், கட்டு எறிந்த பாவம்-வரம்பழித்ததனா லுண்டாகிய பாவமானது, ஆகும் என-நிகழும் என்று, கருது-நீ கருதுவாயாக, எ-று.

க-ரை. ஒருயிரைக்கொன்றவன், கொலைக்கு உடன்பட்டவன், கொன்றதனை விலைக்குக் கொண்டவன், அதனைச் சமைத்தவன், சமைத்ததனையுண்டவன் என்னும் இவ்வைவரும் பாவிகளென்பதாம்.

வி-ரை. கொலை - தொழிற்பெயர், கொல்லுதல் என்பது பொருள். உடன்படல்-சம்மதித்தல். கோடல்-கொள்ளல், அஞ்சல். கொழித்தல் - ஆராய்தல். அடுதல் - சமைத்தல். கட்டெறிதல் - வரம்பு கடத்தல், மேலோர் கொலை செய்யலாகாதென விதித்த ஏற்பாட்டைக் கடத்தல். இதற்கு உதாரணம்: கொலைமறுத்தல், "கொன்றான் கொலச்சொன்னான் கூசவறுத்தானட்டான்" என்று முதற் குறிப்பினையுடைய செய்யுள். (எ0)

சிறைக்கிடந்தார் செத்தார்க்கு நோற்பார் பலநா
ளுறைக்கிடந்தா ரொன்றிடையிட் டுண்பார்—பிறைக்கிடந்து
முற்றனைத்து முண்ணா தவர்க்கீந்தார் மன்னவராய்க்
கற்றனைத்தும் வாழ்வார் கலந்து.

ப-ரை. சிறை கிடந்தார் - சிறையின் கண் கிடந்தவரும், செத்தார்க்கு நோற்பார்-செத்தவர்க்கு நன்மைவேண்டி உண்ணாது நோற்பவரும், பலநாள் உறை கிடந்தார்-பலநாளும் தமது பிணிக்கு மருந்தாக உண்ணாது கிடந்தவரும், ஒன்று இடையிட்டு உண்பார் - ஒருநாளிடையிட் டுண்பவரும், பிறை கிடந்து-பிறையாயிருந்து, முற்றனைத்தும் - அது நிரம்புமளவும், உண்ணாதவர்க்கு - உண்ணாதவரும் ஆகிய இவ்வைவருக்கும், ஈந்தார் - உணவு கொடுத்தவர்கள், மன்னவர் ஆய் - அரசராய்ப் பிறந்து, அனைத்தும் கலந்து கற்று - எல்லா நூல்களையும் ஒருமிக்கக்கற்று, வாழ்வார் - நீடுவாழ்வார்கள், எ-று.

க-ரை. சிறைகிடந்தார் முதலிய ஐவருக்கும் உணவு கொடுத்தவர்கள் கல்வியறிவுள்ள அரசராய் நீடுவாழ்வார்களென்பதாம்.

வி-ரை. சிறை - சிறைச்சாலை, காவற்சாலை. உண்ணாது நோற்றல் - உபவசித்தல். பலநாளுறை கிடந்தார் - பலநாளும் உண்ணாது கிடந்தவர்(லங்கணஞ்செய்தவர்). ஒருநாளிடையிட்டுண்பார்-இரண்டு நாளுக்கோர்தரம் உண்பவர். பிறைக்கிடந்து முற்றனைத்து முண்ணார் - சாந்திராயண விரதங்காப்பவர், இவர் தவசிகளெனப்படுவர். வாழ்வார் என்றது பிறவியற்று என்றுமொருதன்மையராய் முத்தியுலகில் வாழ்ந்திருப்பார் என்றபடி. (எக)

ஈன்றெடுத்தல் சூல்புறஞ் செய்தல் குழவியை
யேன்றெடுத்தல் சூலேற்ற கன்னியை—யான்ற
வழிந்தாளை யில்வைத்தல் பேரறமா வற்ற
மொழிந்தார் முதுநூலார் முன்பு.

ப-ரை. ஈன்று எடுத்தல் - தாய் தானீன்ற குழவியை யோம்பி வளர்த்தல், சூல் புறஞ்செய்தல்-தான்கொண்ட சூலை யழியாது புறப்படுத்தல், குழவியை - (வளர்ப்பவரில்லாத) குழவியை, ஏன்று எடுத்தல்-ஏன்று வளர்த்தல், சூல் ஏற்ற கன்னியை-சூல்கொண்ட கன்னியையும், ஆன்ற அழிந்தாளை - மிகவுமழிந்தவளையும், இல்வைத்தல் - தன் வீட்டில் வைத்துப் பாதுகாத்தலும், (ஆகிய இவ்வைந்தும்) முதுநூலார்-பழைய நூலறிவுள்ள பெரியோர், முன்பு - முற்காலத்தில், பேர் அறம் ஆ-பெரிய அறமாக, அற்ற மொழிந்தார் - மிகவும் சொன்னார்கள், எ - று.

க-ரை. ஈன்றெடுத்தல் முதலிய ஐந்தும் பெரிய அறமாக முற்காலத்தில் நூலறிவையுடைய பெரியோர் சொன்னார்கள் என்பதாம்.

வி-ரை. ஈன்றெடுத்தல் ஏன்றெடுத்தல் என்பவற்றில் எடுத்தல் வளர்த்தல் என்னும் பொருட்டு. புறஞ்செய்தல்-வெளிப்படுத்தல், மகப்பெறுவித்தல் எனினுமாம். ஏன்றெடுத்தல் - கண்டெடுத்த குழவியை வளர்த்தல், சூலேற்ற கன்னி - கருப்பங்கொண்ட கன்னி.

ஆன்றவழிந்தாள் - அழிந்த மனையாள் என்றலு மொன்று. முது நூலார்-வேதாகமாதிகளாகிய பழைய நூல்களை யாராய்ந்தறிந்தவர். என்று எற்ற என்பவற்றிற்குப் பகுதி எல். பேரறமாமொழிந்தார் எனவியையும். (எ௨)

வலியழிந்தார் மூத்தார் வடக்கிருந்தார் நோயால்
நலிபழிந்தார் நாட்டறைபோய் நைந்தார்—மெலிவொழிய
வின்னவரா மென்னரா யீந்த வொருதுற்று
மன்னவராச் செய்யு மதித்து.

ப-ரை. வலி அழிந்தார் - வலியழிந்தவர், மூத்தார் - முதியார், வடக்கிருந்தார்-உழைத்துண்ணமாட்டாத சோம்பர், நோயால் நலிபு அழிந்தார் - பிணியினால் நலிந்தழிந்தவர், நாட்டு அறைபோய் நைந்தார் - தமது நாடுவிட்டுப்போய்த் தளர்ந்தவர், (என்று சொல்லப்படு கிற இவ்வைவருடைய) மெலிவு ஒழிய - தளர்ச்சி நீங்கும்படி, இன்னவர் ஆம் என்னார் ஆய் - இன்னாரவரென்று ஆராயாமல், ஈந்த - கொடுத்த, ஒரு துற்று - ஒரு கவளவுணவு, (கொடுத்தவரை அடுத்த பிறவியில்) மதித்து - கணித்து, மன்னவர் ஆ செய்யும் - அரசராகச் செய்யும், எ - று.

க-ரை. வலியழிந்தார் முதலிய வைவருக்கும் ஒருதுற்றுணவு கொடுத்தவர் அவ்வறப்பயனால் அரசராய்ப் பிறப்பார் என்பதாம்.

வி-ரை. வலி - சரீரபலம். மூத்தார்-வயது முதிர்ந்தவர். வடக் கிருந்தார் - உழைத்துண்ணமாட்டாத அசக்தர். நலிபு - செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அறைபோதல் - ஓடிப்போதல். இன்னவர் ஆம் என்னாராய் - உற்றார் அயலாரென்று ஆராயாமல். ஒருதுற்று - சிறிதுணவு எனினுமாம். ஒருதுற்றுக் கொடுத்தவர்க்கே இங்ஙனம் அரசராகப்பிறத்தல் பயனெனின், விசேடமாக அன்னதா

னம் செய்பவர்க்குண்டாகிற பயன் இவ்வளவென்று மதித்துரைத்த வினையயாதென்றவாறாயிற்று. (எ௩)

கலங்காமை காத்தல் கருப்பஞ் சிதைந்தா
லிலங்காமை பேரறத்தா லீற்றம்—விலங்காமைக்
கோடல் குழவி மருந்து வெருட்டாமை
நாடி னறம்பெருமை நாட்டு.

ப-ரை. கருப்பம் - வயிற்றுட் கருவானது, கலங்காமை - அழியாமல், காத்தல்-காத்தலும், (கருப்பம்)சிதைந்தால்-கருப்பம் சிதைந்தால், இலங்காமை - (பிறர்க்கு) வெளிப்படாமல், பேர் அறத்தால் ஈற்றம் - மறையப்பெயர்த்து வாங்குதலும், குழவி-குழவியை, விலங்காமை கோடல்-இடைவிலங்காமற் செய்து கொள்ளுதலும், மருந்து-(குழவிபிறந்து நோய்கொண்டால் அதற்கு) மருந்தும், வெருட்டாமை - (அக்குழவியை) அச்சுறுத்தாமையும், (ஆகிய இவ்வைந்தினையும்) நாடின் - ஆராயின், பெருமை அறம் - பெரிய அறமென்று, நாட்டு - நிலைபெறுத்துவாயாக, எ - று.

க-ரை. கருப்பம் கலங்காமை காத்தல் முதலிய ஐந்தும் பேரறமாக நாட்டுவாயாக என்பதாம்.

வி-ரை. கலங்காமை இலங்காமை விலங்காமை என்பன எதிர்மறை வினையெச்சங்கள், இவற்றுள் ஆமை மூன்றும் வினையெச்ச விகுதிகள். வெருட்டாமை - எதிர்மறைத் தொழிற்பெயர். இலங்குதல் - பிறர்க்குப் புலப்படுதல், ஈற்றம் - ஈன்றல். விலங்காமை - விலகாமை. வெருட்டாமை யென்பதற்குப் பகுதி வெருட்டு, இது பிறவினைப்பகுதி; தன்வினைப்பகுதி வெருள். அறம் பெருமையென்பன முன்பின்னாகமாற்றிப் பொருள் கொள்ளப்பட்டன. (எச)

சூலாமை சூலிற் படுந்துன்ப மீன்றபி
னோலாமை யேற்றால் வளர்ப்பருமை—சால்பவை

வல்லாமை வாய்ப்ப வறிபவ ருண்ணாமை
கொல்லாமை நன்றாற் கொழித்து.

ப-ரை. சூலாமை (துன்பம்) - சூல்கொள்ளாமையால் வருந் துன்பமும், சூலின்பமும் துன்பம் - சூலினாலுண்டாகுந் துன்பமும், ஈன்ற பின் ஏலாமை - குழவியைப் பெற்றபின்பு அதனை யேற்றுக் கொள்ளாமை, ஏற்றால் வளர்ப்பு அருமை - ஏற்றுக்கொண்டால் அதனை வளர்த்தலருமை, சால்பவை வல்லாமை - (வளர்த்தபிள்ளை) சால்புகுணங்களை மாட்டாமையும், (ஆகிய இவ்வைந்தினையும்,) வாய்ப்ப அறிபவர் - வாய்ப்ப உணர்வோர், கொழித்து-ஆராய்ந்து, கொல்லாமை - ஒருயிரைக் கொல்லாமையும், உண்ணாமை - (அதன் தசையை) உண்ணாமையும், நன்று-நன்மையாம், எ-று.

க-ரை. சூல்கொள்ளாமையால் வருந்துன்பமுதலியவைந்தினையும் நன்குணர்ந்த பெரியோர், ஒருயிரைக் கொல்லாமையும் அதன் தசையை யுண்ணாமையும் நன்றென்பதாம்.

வி-ரை. சூலாமை - சூல் என்னும் பெயரடியாகப்பிறந்த எதிர்மறைத் தொழிற்பெயர். சூலல்-கருக்கொள்ளல். வளர்ப்பு-தொழிற்பெயர். சால்பு - நிறைகுணம். வாய்ப்பவறிதல் - நன்குணர்தல். கொழித்தல் - ஆராய்தல். கொல்லாமை - கொலைசெய்யாமை. உண்ணாமை - ஊனுண்ணாமை. கொல்லாமை உண்ணாமை யென்பன எதிர்மறைத் தொழிற்பெயர்கள். ஆல் - அசை. (எகு)

சிக்கர் சிதடர் சிதலைப்போல் வாயுடையார்
துக்கர் துருநாமர் தூக்குங்காற்—றொக்க
வருநோய்கள் முன்னெளிற் றீர்த்தாரே யின்னா
வொருநோயு மின்றிவாழ் வார்.

ப-ரை. சிக்கர் - தலைநோயுடையாரையும், சிதடர் - பித்துடையாரையும், சிதலைப்போல் வாய் உடையார் - வாய்ப்புற்றுடையாரை

யும், துக்கர் - கயநோய் கொண்டாரையும், துருநாமர் - மூலநோய் கொண்டாரையும், தூக்குங்கால் - ஆராயுமிடத்து, தொக்க - கூடி வருத்துகின்ற, அரு நோய்கள் - தீர்த்தற்கரிய நோய்களை, முன்னாளில் - முற்காலத்தில், தீர்த்தாரே - தீர்த்தவரே, இந்நாள் - இக்காலத்தில், ஒருநோயும் இன்றி வாழ்வார் - ஒருபிணியுமில்லாமல் சுகமாய் வாழ்ந்திருப்பவர், எ-று.

க-ரை. தலைநோயுடையார் முதலிய ஐவரையும் அவர்படுந் துன்பங்களினின்று முற்காலத்தில் ஒழித்தவரே இக்காலத்தில் ஒரு நோயுமில்லாமல் வாழ்ந்திருப்பவர் என்பதாம்.

வி-ரை. சிதல் - கறையான், அது இங்கு அது உறையும் புற்றைக் குறித்தது. துக்கம் - கயநோய் (க்ஷயரோகம்). துருநாமம் - மூலவியாதி. நோய் - துன்பம். முன்னாள் இந்நாள் என்றது முற்பிறப்பையும் இப்பிறப்பையும். (எக)

பக்கம் படாமை யொருவர்க்குப் பாடேற்றல்
தக்கம் படாமை தவமல்லாத்—தக்கா
ரிழியினர்க்கே யானும் பசித்தார்க் கீதல்
கழிசினங் காத்தல் கடன்.

ப-ரை. ஒருவர்க்கு பக்கம் படாமை - எல்லாவுயிர்க்கும் ஒத்தலும், பாடு ஏற்றல் - படுந்துன்பமாற்றுதலும், தக்கம் படாமை - ஒரு பொருளினிடத்தும் பற்றுப்படாமையும் ஆகிய இம்மூன்றும், தவம் - தவத்தார்க்குரிய குணங்களாம்; தவம் அல்லா - தவஞ்செய்தலில்லாத, தக்கார் - தகுதியாகிய இல்வாழ்வார்க்கு, இழி இனர்க்கேயானும் - இழி குலத்தார்க்கேயாயினும், பசித்தார்கண் ஈதல் - பசித்தவர்க்கு உணவு கொடுத்தலும், கழிசினம் காத்தல் - மிகுகோபத்தைத் தடுத்தலும், கடன் - குணங்களாம், எ - று.

க-ரை. பக்ஷபாத மில்லாமை முதலிய மூன்றும் துறவறத்தார்க்கும், பசித்தவர்க்குணவு கொடுத்தலும் மிகுசோவத்தைத் தக்காத்தலும் இல்லறத்தார்க்கும் தகுதியாகிய குணங்க ளென்பதாம்.

வி-ரை. பக்கம்படாமை-ஒருபக்ஷத்திற் சாயாமை, இது நடுவு நிலைமை யெனப்படும். தக்கம்படாமை-ஒருபொருளினும் பற்றின்றி யிருத்தல். இழியினர் - இழிவாகிய இனத்தார். இனம் - குலம். ஆயினும் எனற்பாலது ஆனும் எனத் தொகுத்தலாயிற்று. பசித்தார்கண் என்பதில் கண் என்னும் ஏழனுருபு நான்கனுருபின் பொருளில் வந்தது. (எஎ)

புண்பட்டார் போற்றுவா ரில்லாதார் போகுயிரார்
கண்கெட்டார் காலிரண்டு மில்லாதார்—கண்கண்பட்
டாழ்ந்து நெகிழ்ந்தவர்க் கீந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து.

ப-ரை. புண்பட்டார்கண் - போரின்கண்ணே புகுந்து புண்பட்டவரிடத்தும், போற்றுவார் இல்லாதார்கண் - பாதுகாக்கும் களைகணில்லாதவரிடத்தும், போகு உயிரார்கண் - உயிர்போகுந் தன்மையை யுடையவரிடத்தும், கண்கெட்டார்கண்-குருடரிடத்தும், கால் இரண்டும் இல்லாதார்கண்-இரண்டு கால்களுமில்லாதவராகிய முடவரிடத்தும், கண்பட்டு - கண்ணோடி, ஆழ்ந்து நெகிழ்ந்து-மனமிகுதியாய் நெகிழ்ந்து, அவர்க்கு - (புண்பட்டார் முதலிய) அவ்வைவருக்கும், ஈந்தார் - அவர் வேண்டுவனவாகிய உணவு முதலியவற்றைக் கொடுத்தவர், கடைபோக மகிழ்ந்து வாழ்ந்து கழிவார் - இடையூறுபட்டொழியாமல் கடைபோக மகிழ்ந்து வாழ்ந்து கழிவார், எ - று.

க-ரை. புண்பட்டவர் முதலிய ஐவர்க்கும் மனமிரங்கி அவர் வேண்டுவன கொடுத்தாதரித்தவர், நெடுங்காலம் இடையூறின்றி மகிழ்ந்து வாழ்ந்து கழிவார் என்பதாம்.

வி-ரை. புண்பட்டார் - போர்முகத்திற் சென்று காயம்பட்டவர். போற்றுதல்-பாதுகாத்தல். களைகண்-ஆதரவு, புகல். கண்கெட்டார் - கட்பார்வை யழிந்தவர் எனினுமாம். வேண்டுவன - உணவு முதலியவை. இடையூறு - தடை, துன்பம். கடைபோகவாழ்தல் - முடிவுபோக வாழ்தல். கழிதல் - உடம்பைவிட்டு நீங்குதல். (எஅ)

பஞ்சப் பொழுது பாத்துண்பான் காவாதா
னஞ்சா துடைபடையுட் போந்தெறிவா—னெஞ்சாதே
யுண்பதுமு னீவான் குழவி பலிகொடுப்பா
னெண்பதின் மேலும்வாழ் வான்.

ப-ரை. பஞ்சப்பொழுது - சிறுவிலைக்காலத்தில், பாத்து உண்பான் - பலர்க்கும் பகிர்ந்து பின்பு தானுண்பவன், காவாதான்-தன்னிடத்துள்ள பொருளைக் காவாது பிறருக்கே யுதவுவோன், உடைபடையுள்-உடைந்த தன் படையினுள்ளே, அஞ்சாது போந்து-அஞ்சாமற் புகுந்து, எறிவான் - (பகைவர் படையை)எறிந்து (தன்படையை உய்யக்கொள்பவன்), எஞ்சாதே - ஒருநாளும்ஒழியாமல், உண்பது - தானுண்பதை, முன் - முன்னே, ஈவான் - பிறர்க்குக் கொடுத்துப் பின்னுண்பவன், குழவி பலிகொடுப்பான் - பசித்த குழவிகளுக்குச் சோறளிப்பவன், (ஆகிய இவ்வைவரும்) எண்பதின் மேலும் - எண்பது வயசுக்கு மேலும், வாழ்வான் - சுகமாக உயிர் வாழ்ந்திருப்பான், எ - று.

க-ரை. பஞ்சக்காலத்தில் பலர்க்கும் பகிர்ந்து பின்பு தானுண்பவன் முதலிய ஐவரும் எண்பது வயதுக்குமேலும் சுகமாக உயிர் வாழ்ந்திருப்பார் என்பதாம்.

வி-ரை. பஞ்சம் - சிறுவிலைக்காலம். பகுத்து எனற்பாலது பாத்து என மரூஉவாயிற்று. அஞ்சாது போந்து எனவியையும். பஞ்சப்பொழுது என்பதனீற்றில் ஏழனுருபு தொக்கது. குழவிபலி-நான்

காம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். பலி - சோறு. வாழ்வான் என்ற குறிப்பால் எண்பது வயதைக் குறித்தது. வேண்டப்படுவனவாகிய இசையெச்சங்கள் வருவித் துரைக்கப்பட்டன. பாத்துண்டல் எல்லாக்காலத்தும் பேரறமேயாயினும் சிறுவிலைக் காலத்தில் அது செய்தல் மிகச்சிறந்து காட்டுமென்பது தோன்ற 'பஞ்சப்பொழுது பாத்துண்பான்' என்றும், அச்சிறப்பு நோக்கியே அதனை முன்னெடுத்தும் கூறினர். (௭௧)

வரைவில்லாப் பெண்வையார் மன்னைப்புற் றேறார்
புரையில்லார் நள்ளார்போர் வேந்தன்—வரைபோற்
கடுங்களிறு விட்டுழிச் செல்லார் வழங்கார்
கொடும்புலி கொட்கும் வழி.

ப-ரை. வரைவு இல்லா-விவாகமில்லாத, பெண் - (பொதுப்) பெண்டிரை, வையார் - (தமக்கு மனைவியாகத் தமது வீட்டில்) வைத்துக்கொள்ளார்; மன்-நிலைபெற்ற, நை-நைதலையுடைய, புற்று-புற்றின்மேல், ஏறார் - ஏறமாட்டார்; புரை இல்லார்-தமக்கொப்பில்லாதாரை, நள்ளார் - நட்புக்கொள்ளார்; போர் வேந்தன் - போர்த்தொழிலில் வல்ல அரசனது, வரைபோல் - (உருவத்தால்) மலைபோன்ற, கடுங்களிறு - கடுங்களிறு, விட்டுழி - விடுபட்டவிடத்து, செல்லார் - அதனெதிரே போகார்; கொடும்புலி-கொடிய புலிகள், கொட்கும் - சுழலாநின்ற, வழி - காட்டுவழியில், வழங்கார்-நடவார் (அறிவுடையார்), எ - று.

கூ-ரை. அறிவுடையார் பொதுப்பெண்டிர் விழைவு முதலியவற்றைச் செய்யார் என்பதாம்.

வி-ரை. வரைவு-வரைதல், தொழிற்பெயர்; இது மணஞ் செய்தல் என்னும் பொருளது. வரைவில்லாப்பெண் என்றதனால் பொதுப்பெண் என்பது விளங்கிற்று. இவர் ஒருவனையே மணம்புரிந்துகொ

ள்ளாது பலர்க்கும் போகமாதரா யிருத்தலால் இவர்க்குப் பொதுப் பெண்டிர் என்னு மிப்பெயர் வழங்கலாயிற்று. மன்னை என்பதற்கு மிகுதியாக நைந்த எனினுமாம். மிகுதியாக நைதலாவது பழைய தாய்த் தலைமழுங்கி யிருத்தல். புரை - ஒப்பு. இல்லார் - இல்லாரை யெனப் பொருள்படலால் இரண்டனுருபு தொக்கது. வரைபோல் என்ற வுவமையால் உருவப்பெருமையும் கருநிற முதலியனவுங் கொள்க. கடுமை - கொலைத்தொழில் வன்மை. விட்டவுழி விட்டுழி யெனத் தொகுத்தல் பெற்றது. கொட்கல் - சுழலல். கொடும்புலி கொட்கும் என்னும் அடையால் வழி காட்டுவழி யென்பது பெறப் பட்டது. வையார் முதலியவற்றிற்கு வினைமுதலாகிய அறிவுடையார் என்பது வருவிக்கப்பட்டது. (௪0)

தக்கார் வழிகெடா தாகுந் தகாதவ
ருக்க வழியரா யொல்குவர்—தக்க
வினத்தினா னாகும் பழியும் புகழு
மனத்தினா னாகு மதி.

ப-ரை. தக்கார் - தகுதியுடையாரது, வழி - சந்ததி, கெடாது ஆகும் - என்றுந் தளராது விருத்தி யடைவதாகும்; தகாதவர் - தகுதியற்றவர், உக்க வழியராய் - அழிந்த வழியை யுடையவராய், ஒல்குவர் - தளர்வார்; பழியும் புகழும் - (ஒருவனுக் குளவாகும்) பழியும் புகழும், தக்க இனத்தினான் ஆகும் - அவன்சேர்ந்த இனத் தினா லுளவாகும்; மதி - அறிவானது, மனத்தினான் ஆகும் - (ஒருவ னது) மனத்தினளவே யுண்டாகும், எ-று.

க-ரை. தகுதியுடையார் சந்ததி யென்றுங் குன்றாது எழில் பெற்று விளங்கும்; தகுதி யில்லாதார் சந்ததி குன்றிக் குறையும்; ஒருவனுக்குப் பழியும் புகழும் அவன் சேர்ந்த இனத்தினா லுளவா கும்; அறிவானது அவனது மனத்தினளவே யுண்டாகும் என்பதாம்.

வி-ரை. தக்கார் - தகுதியுடையார் (நடுவுநிலைமை யுடையவர்). தகாதவர் அஃதில்லாதவர். இவ்விருவர்க்கும் எச்ச முண்மையும் இன்மையும் குறிகளாதலால், 'தக்கார் வழிகெடா தாகுந் தகாதவர், உக்க வழியரா யொல்குவர்' என்றார். "தக்கார் தகவில ரென்ப தவரவர், எச்சத்தாற் காணப் படும்" என்பது திருக்குறள் எல்லார்க்கும் அறிவு அவரவர் மனத்துளதாயினும் அது அவரவர் சேர்ந்த இனத்தளவாகவே விளங்கும் என்பது தோன்றும்வண்ணம், 'தக்க வினத்தினா னாகும் பழியும் புகழும்' என்றார். "மனத்தா னாந்தர்க் குணர்ச்சி யினத்தானாம், இன்னா னெனப்படுஞ் சொல்" என்பது திருக்குறள். தக்க வினத்தினா னாதம் பழியும் புகழும் என்றாராயினும் தீயினத்தாற் பழியும் நல்லினத்தாற் புகழும் உளவாமெனக்கொள்க.

கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சா
னிகழ்ந்தவை யின்புறா னில்லார்—மொழிந்தவை
மென்மொழியா லுண்ணெகிழ்ந் தீவானே லிண்ணோரா
லின்மொழியா லேத்தப் படும்.

ப-ரை. (ஒருவன்) கழிந்தவை - இறந்த பொருட்கு, தான் இரங்கான் - தானிரங்காதவனும், கைவாரா - தனக்குக் கைவராதவற்றை, நச்சான் - விரும்பி வருந்தாதவனும், இகழ்ந்தவை - பெரியோரா லிகழப்பட்டவற்றை, இன்புறான் - விரும்பாதவனும், இல்லார் - பொருளில்லாதவர், மொழிந்தவை - இரந்து வேண்டிக்கொண்டவற்றை, மென்மொழியால் - இன்சொல்லோடு, உள் நெகிழ்ந்து - மனமகிழ்ந்து, ஈவான் - கொடுப்பவனும், எல் - ஆயின், (அவன்) விண்ணோரால் - தேவர்களால், இன்மொழியால் - இன்சொற்களால், ஏத்தப்படும் - துதிக்கப்படுவான், எ-று.

க-ரை. ஒருவன் இரவலர் விரும்பின பொருள்களை இன்சொல்லோடு வழங்குதல்முதலிய நற்செயல்களை யுடையனாயின், அவன்

தேவர்களால் இன்சொற்களைக்கொண்டு துதிக்கப்படுவான் என்பதாம்.

வி-ரை. கழிந்தவை - நிகழ்ந்தவை. இரங்கல் - அநுதபித்தல். கைவாரா - கைகூடாதவை. நச்சல் - விரும்பல், இது நத்தல் எனவும் வழங்கும். இகழ்ந்தவை - பழிக்கப்பட்டவை, அவை தீச்செயல்கள். இன்புறல் - விரும்பல். இல்லார் - ஒரு பொருளுமில்லாத வறியர். மொழிந்தவை - கேட்டவை மென்மொழி - பணிமொழி. எல் எனின் என்பதன் மரூஉ. விண்ணோர் - சுவர்க்க லோகத்தை யிடமாகவுடையவர், இது இடத்தான் வந்தபெயர். (அஉ)

காடுபோற் கட்கினிய வில்லம் பிறர்பொரு
ளோடுபோற் றாரம் பிறந்ததா—யூடுபோய்க்
கோத்தின்னு சொல்லானுய்க் கொல்லானேற் பல்லவ
ரோத்தினு லென்ன குறை.

ப-ரை. (ஒருவன்) கட்கு இனிய - கண்ணுக்கினிய, இல்லம் - பிறருடைய இல்லத்தை, காடுபோல் - காடுபோலக்கொண்டு விரும்பாமல், பிறர் பொருள் - பிறர்பொருளை, ஓடுபோல் - ஓடுபோலக் கொண்டு விரும்பாமல், தாரம் - பிறன் மனையாளை, பிறந்த தாய் - தான் பிறத்தற் கிடமாயிருந்த தாயாகக்கொண்டு விரும்பாது, ஊடு போய் - பிறரிடத்தே சென்று, கோத்து - தொடுத்து, இன்னு சொல்லானுய்-பழிமொழிகளைச் சொல்லாதவனுய், கொல்லானேல் - ஒருயிரையுங் கொல்லாதவனுயின், (அவனுக்கு) பல்லவர் - பெரியார் பலரும் கூறிய, ஒத்தினுல் - நூல்களால், என்ன குறை - என்ன குறையுண்டு, எ-று.

க-ரை. ஒருவன் பிறரது அழகிய இல்லத்தைக் காடுபோலவும், பிறர்பொருளை ஓடுபோலவும், பிறன் மனையாளைத் தன்தாயாகவும் கருதி விரும்பாமல், பிறரைப் பழித்துரையாமல், ஒருயிரையுங் கொ

ல்லா திருப்பானுயின், அவனுக்குப் பெரியோர் சொல்லிய நூல்க ளால் என்ன குறையுண்டு என்பதாம்.

வி-ரை. காடுபோல் என்றதனுனே கருதலும் விரும்பாமையும் பெறப்பட்டன. பிறர்பொருள் ஓடுபோல் என்றதற்கும், தாரம் பிற ந்தாய் என்பதற்கும் இவ்வாறே யுரைத்துக்கொள்க. பிறர் என்பது இல்லத்திற்கும் தாரத்திற்கும் கூட்டி யுரைக்கப்பட்டது. கோத்தல்- கற்பித்தல் (கோவை செய்தல்). பல பெரியோர்சொன்ன நூல்களிற் பொதிந்திருப்பது வேதசாரமேயாதலால் அவற்றை 'ஓத்து' என்ருர். ஓத்து - வேதம். என்னகுறை யென்றது அந்நூல்களால் அவனைக் குறைகூறக் கிடந்த தொன்றுமில்லை யென்றபடி. (அ௩)

தோற்கன்று காட்டிக் கறவார் கறந்தபால்
பாற்பட்டா ருண்ணர் பழிபாவம்—பாற்பட்டா
ரேற்றவா தின்புற்று வாழ்வன வீடழியக்
கூற்றுவப்பச் செய்யார் கொணர்ந்து.

ப-ரை. பாற்பட்டார் - நன்னெறியின்பாற்பட்டவர், தோல் கன்று காட்டி - தோலாற்செய்த கன்றினைக்காட்டி, கறவார் - பசு வைக் கறவார்; பாற்பட்டார் - நன்னெறிப்பட்டவர், கறந்தபால் - அவ்வாறு கறந்தபாலை, உண்ணர் - பருகார்; பழி பாவம் - பழியை யும் பாவத்தையும், பாற்பட்டு - தம்மே லேற்றுக்கொண்டு, அவா வாது-விரும்பாமல், இன்புற்று - தம் கிளைகளோடு இன்புற்று, வாழ் வன-வாழ்வனவாகிய உயிர்களை, ஈடு அழிய-(அவற்றின்) பெருமை குன்ற, கொணர்ந்து-கொண்டுவந்து, கூற்று உவப்ப செய்யார்-கூற்று வன் விரும்பக் கொலைசெய்யார், எ - று.

க-ரு. நன்னெறிப்பட்டவர் தோற்கன்று காட்டிப் பசுவின் பாலைக் கறத்தல் முதலிய தீச்செயல்களைச் செய்யார் என்பதாம்.

வி-ரை. தோற்கன்று காட்டலாவது இறந்துபோன கன்றின் தோலையுரித்து அதனுள்ளே வைக்கோலைப் பொதிந்து அதனை உயிர்க் கன்றுபோல் அதன் தாய்ப் பசுவுக்குக் காட்டுதல். யாற்பட்டார் என்பது கறவார் என்பதனோடுங் கூட்டி யுரைக்கப்பட்டது. பழிபா வம் - உம்மைத்தொகை. அவாவாது எனற்பாலது அவாது எனத் தொகுத்தலாயிற்று. இன்புற்று வாழ்தல் - மனமகிழ்ந்து வாழ்தல். செய்தல் - கொலைசெய்தல், இது கூற்றுவப்ப என மேல்வருதலாற் பெறப்பட்டது. (அ௬)

நகையொடு மந்திரம் நட்டார்க்கு வாரம்
பகையொடு பாட்டுரையென் றைந்துந்—தொகையொடு
மூத்தோ ரிருந்துழி வேண்டார் முதுநூலுள்
யாத்தா ரறிந்தவ ராய்ந்து.

ப-ரை. நகையொடு-சிரிப்புடன், மந்திரம் - செவிச்சொல்லும், நட்டார்க்கு - தம் உற்றார்பொருட்டு, வாரம் - பக்ஷபாதம் பேசுத லும், பகையொடு - பலரொடு பகை கொள்ளுதலுடனே, பாட்டு உரை - பாட்டுக்குப் பொருள் சொல்லுதலும், என்ற - என்று சொல் லப்பட்ட, ஐந்தும் - இவ்வைந்தும், தொகையொடு - கூட்டத்தோடு, மூத்தோர் - பெரியோர், இருந்துழி - இருக்குமிடத்தில், வேண் டார் - செய்யவிரும்பார் அறிவுடையோர்; (இந்த நீதியை) ஆய்ந்து அறிந்தவர் - ஆராய்ந்தறிந்தவர், முது நூலுள் - பழைய நூல்களில், யாத்தார் - கட்டுரைத்து வைத்தார், எ-று.

க-ரை பெரியோர் கூடியிருக்கு மிடத்தில், நகைமுதலிய ஐந் தையும் அறிவுடையோர் செய்யா ரென்பதாம்.

வி-ரை. நகை - தொழிற்பெயர், பகுதி நகு, விகுதி ஐ. மந்தி ரம் - இரகசியம், அது இங்குச் செவிச்சொல்லின் மேலதாயிற்று. வாரம் - அன்பு, அது இங்குப் பக்ஷபாதத்தைக் குறித்தது. பகை -

பிளவுபடல் (வேறுபடல்); இதற்குப் பகுதி-பகு, ஐ-தொழிற்பெயர் விகுதி; இதனை விரோதமென்பர் வடநூலார். உரை- உரைகூறுதல். என்றஐந்தும் என்றைந்தும் எனத் தொகுத்தல் பெற்றது. தொகை தொகுதல், இதுவும் தொழிற்பெயர்; பகுதி - தொகு, விகுதி-ஐ. மூத்தோர்-வயதானும் அறிவானும் முதிர்ந்தவர். இருந்துழி இருந்த வுழி யென்பதன் தொகுத்தல் விகாரம்; உழி - இடம். யாத்தல் - பொதிந்துவைத்தல்; "செவிச்சொல்லுஞ் சேர்ந்தநகையு மவித்தொழுகல், ஆன்ற பெரியா ரகத்து" என்னுந் திருக்குறளை யிதற்குதாரணமாகக் கொள்ளலாம். (அரு)

வைதா னொருவ னினிநீய வாழ்த்திய
தெய்தா வுரையை யறிவானே—னெய்த
வறிவறி யாவான் டெனவுரைப்பார் வாயுட்
டறிவெறியார் தக்காரே தாம். (அசு)

.... (அஎ)

.... (அஅ)

.... (அகூ)

.... (கூ0)

.... (கூக)

....
செடியவன் னொன்றுரா அ யத்தன்
தெவ்வாத தலைப்பா னிவையென்னும் பெற்றினைத்
தெய்வமாத் தேறுமாற் றோர்ந்து. (கூஉ)

சத்தமெய்ஞ் ஞானந் தருக்கஞ் சமயமே
வித்தகர் கண்டவீ டுள்ளிட்டாங்—கத்தகத்
தந்தவிவ் வைந்து மறிவான் றலையாய
சிந்திப்பிற் சிட்டன் சிறந்து.

ப-ரை. சத்தம்-வழக்கு நூலும், மெய்ஞானம்-சொன்முடிபு நூலும், தருக்கம் - தருக்க நூலும், சமயம் - சமய நூலும், வித்தகர் - அறிவின்மிக்கோர், கண்ட - செய்த, வீடு - வீட்டு நூலும், உள்ளிட்டு - உட்பட, அத்தக இவ்வைந்தும்-அத்தகைமையாகிய இவ்வைந்தனையும், அந்தம் அறிவான் - அழகாயறிபவன், சிந்திப்பின் - ஆலோசிக்குமிடத்தில், சிறந்து - சிறப்படைந்து, தலை ஆய சிட்டன் - தலைமையாய சிட்டனுவான், எ-று.

க-ரை. சத்தநூல் முதலிய ஐந்துமறிந்தவன் தலைமைபெற்ற சிட்டனென்று சொல்லப்படுவான் என்பதாம்.

வி-ரை. ஆங்கு-அசை. சிட்டன்-மேலானவன். தலை-தலைமை (முதன்மை). சிறத்தல் - மேம்படுதல். தருக்கம் - நியாயசாத்திரம். சமயநூல்-உட்சமயம் புறச்சமயங்களைப் பிரதிபாதிக்கும் நூல்கள்.

கண்ணுங்காற் கண்ணுங் கணிதமே யாழினோ
டெண்ணுங்காற் சாந்தே யிலைநறுக்கிட்—டெண்ணுத
லிட்டவிவ் வைந்து மறிவா னிடையாய
சிட்டனென் றெண்ணப் படும்.

ப-ரை. கண்ணுங்கால் - நினைக்குமிடத்து, கண்ணும்-நினைத்தற்குரிய, கணிதம் - கணிதமும், யாழினோடு-யாழினுடன், எண்ணுங்கால் - ஆலோசிக்குமிடத்து, சாந்து-சந்தனமரைத்தல், இலை நறுக்கிட்டு - இலைகிள்ளி, எண்ணுதல் - எண்ணல், இட்ட-ஏற்படுத்தப்பட்ட, இவ்வைந்தும் - இந்த ஐந்துதொழில்களையும், அறிவான் -

அறிந்து செய்யவல்லவன், இடை ஆய சிட்டன் என்று-இடையாகிய சிட்டன் என்று, எண்ணப்படும் - எண்ணப்படுவான், எ-று.

க-ரை. கணித நூல் முதலிய ஐந்தனையும் கற்றுவல்லவன் இடையாகிய சிட்டனென்று சொல்லப்படுவான் என்பதாம்.

வி-ரை. கண்ணுங்கால் எண்ணுங்கால் என்னும் வினையெச்சங்கள் எண்ணப்படும் என்னும் வினைகொண்டு முடிந்தன. இதில் கணிதம், யாழ்வாசித்தல், சந்தநமரைத்தல், இலேநுக்கல், அவற்றை யெண்ணுதல் என்றைந்துதொழில்க ளடங்கியிருக்கின்றன. நறுக்கு-முதனிலைத் தொழிற்பெயர். இட்ட என்னும் பெயரெச்சம் ஐந்து என்னும் எண்ணுப்பெயர்கொண்டு முடிந்தது. அறிவான்-வினையாலணையும்பெயர். கண்ணல்-நினைத்தல். (கூ௪)

நாணில னாய்நன்கு நள்ளாதா னாய்ப்பெரியார்ப்
பேணில னாய்ப்பிறர் சேவகனா—யேணில்
பொருந்திய பூண்முலையார் சேரிகைத் தில்லான்
பருத்தி பகர்வுழி நாய்.

ப-ரை. நாண் இலன் - நாணமில்லாதவன், நாய்-நாயோடொப்பான்; நன்கு நள்ளாதான் - நன்மையாகப் பிறரோடு நட்புக்கொள்ளாதவன், நாய்-நாயோடொப்பான்; பெரியார் பேணிலன்-பெரியாரைப் பேணாதவன், நாய்-நாயோடொப்பான்; பிறர் சேவகன்-பிறரிடத்துச் சேவகஞ்செய் துயிர்வாழ்வோன், நாய் - நாயோடொப்பான்; ஏண் இல் - பெருமையில்லாத, பூண் பொருந்திய- ஆபரணங்களையுடைய, முலையார்-தனங்களையுடையவராகிய பொதுப்பெண்டிர் வாழ்கின்ற, சேரி - சேரியின்கண், கைத்து இல்லான்-கைப்பொருளின்றி அவர் மீதுள்ள ஆசையாற்சென்று திரிவோன், பருத்தி பகர்வுழி-பருத்தி விற்குமிடத்திற் போய்நிற்கின்ற, நாய் - நாயோடொப்பான், எ-று.

க-ரை. நாணமில்லாதவன் முதலிய ஐவரும் நாயைநிகர்ப் பார் என்பதாம்.

வி-ரை. அருட்பெறல் யாக்கையைப் பெற்ற மக்கள் அப்பேற் றக்குரிய நாணுடைமை முதலிய பெருங்குணமில்வழி அவர் மிகவும் இழிபிறப்பினரென் றெண்ணப்படுவாராதலின் அவரை 'நாய்' என் றிழித்துக் கூறினார். இழிவிற் கெல்லையாய்ச் சிறந்து நிற்பது நாயென் றல் வெளிப்படை. நாணிலன் முதலியோரை ஒருவர்க்கொருவர் இழிவிற் சிறந்தோராக வுய்த்துணர்ந்து கொள்க. குலப்பெண்டிருள் பூணின்முலையா ரிருப்பினு மிருக்கலாம்; பொதுப்பெண்டிர் அவ்வா றிருக்கலாகா தென்றற்கு, 'பொருந்திய பூண்முலையார்' என்றார். அவர் பூண் முலையாராயிருத்தல் ஆடவரை மயக்குதற்கென்க. சேரி-தெரு. எண் - மனநிலை யெனினுமாம். (௧௫)

நாணெளிது பெண்மை நகையெளிது நட்டானே
லேணெளிது சேவக னேற்பெரியார்ப்—பேணெளிது
கொம்பு மறைக்கு மிடையா யளியன்மீ
தம்பு பறத்த லரிது.

ப-ரை. கொம்பு-வஞ்சிக்கொம்பை, மறைக்கும்-மறைக்கின்ற, இடையாய்-இடையையுடையவளே, பெண்மை - (ஒருத்தி) பெண் மைக்குணமுடையளாயின், (அவளுக்கு)நாண் எளிது-நாணமெளிதா கும்; நட்டானேல்-ஒருவனோடொருவன் நட்டானாயின், (அவனுக்கு) நகை எளிது-மகிழ்ந்து நகுதலெளிதாகும்; சேவகனேல் - ஒருவன் சேவகனாயின், (அவனுக்கு) எண் எளிது-வலிசெலுத்தலெளிதாகும்; பெரியார்-குணத்தாற் பெரியாராயின், (அவர்க்கு) பேண் எளிது-பிற ரைப் பேணுதலெளிதாகும்; அளியன்மீது-(யாவரிடத்தும்) அருளு டையான்மேல், அம்பு பறத்தல் - பிறரெய்யும் அம்பு விரைந்து செல் லுதல், அரிது - அரிதாகும், எ-று.

க-ரை. பெண்குணமுடையாள் முதலாயினோராகிய நால்வரிடத்தில் நாண் முதலியவை யுளவாக வெளிதாகும்; யாவரிடத்தும் அருளுடையான்மேல், பிறரெய்யும் அம்பு விரைந்து செல்லுதல அரிதாகுமென்பதாம்.

வி-ரை. கொம்புமறைக்கு மிடையாய் என்றது மகடூஉமுன்னிலை (விளி). கொம்பு - பூங்கொம்பு எனினுமமையும். நாண்-நாணுடைமை. பெண்மை - பெண்மைக்குரிய குணங்கள்; அவை: நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்பனவாம். நட்டல்-நட்புக்கோடல் (சிநேகித்தல்).நாண் பேண் - முதனிலைத் தொழிற்பெயர்கள். சேவகன்-வீரன். எண் - வலி. அளி - யாவர்மீதும் ஒருதன்மைத்தாய அருளுடைமை; இதுவாயிலாக அன்னதானம் முதலியவை நிகழுமாதலான் ஈகையாளனை 'அளியன்' என்றூர். பறத்தல்-விரைந்துசேறல்.

இன்சொலா லாகுங் கிளைமை யியல்பில்லா
வன்சொல்லி னாகும் பகைமைமன்—மென்சொல்லி
னாய்வில்லா வாரருளா மவ்வரு ணன்மனத்தான்
வீவில்லா வீடாய் விடும்.

ப-ரை. இன்சொலான் - (ஒருவன் சொல்லும்) இன்சொல்லினால், கிளைமை - உறவாந்தன்மை, ஆகும் - உளதாகும்; இயல்பு இல்லா - நற்குணமில்லாத, வன்சொல்லின் - வன்சொல்லினால், பகைமை - பகைகள், ஆகும்-உளவாகும்; மன்-மிகுதியாகிய, மென்சொல்லின்-மென்சொல்லினால், ஓய்வு இல்லா-தளர்வில்லாத, ஆர் அருள் - அரிய அருளானது, ஆம் - உண்டாகும்; அ அருள்-அந்த அருளினாலாகிய, நல் மனத்தால்-(ஒருவனது)நல்லமனத்தினால், வீவு இல்லா-அழிவில்லாத, வீடு ஆய்விடும் - வீடு உண்டாய்விடும், எ - று.

க-ரை. இன்சொல் முதலியவற்றால் உறவு முதலியவை யுளவாமென்பதாம்,

வி-ரை. இன்சொல்-உறவாகிய உறுதியைத் தருஞ்சொல். வன்சொல் - பகையாகிய அழிவைத் தருஞ்சொல். இயல்பு-குணம்; அது இங்கு நற்குணத்துக்காயிற்று. இளமை பகைமை யென்பன அவற்றையுடையார் மேலனவாதலால் பண்பாகுபெயர்கள். மன் - அசைநிலை யெனினுமாம். அருள்பெற லரும்பேறாதலால் அதனை 'ஆரருள்' என்றார். வீவு - அழிவு; இது தொழிற்பெயர். வீடு-முத்தி. ஆய்விடும் என்பதில் விடும் துணிவுப்பொருண்மை விகுதி. (கஎ)

தக்க திளையான் றவஞ்செல்வ னூண்மறுத்த
றக்கது கற்புடை யாள்வனப்புத்—தக்க
தழற்றண்ணென் றோளா ளறிவில ளாயி
னிழற்கண் முயிறாய் விடும்.

ப-ரை. இளையான் - இளையவன், தவம் - (துறந்து) தவஞ்செய்தல், தக்கது - தகுதியுடைத்து; செல்வன் - செல்வமுடையோன், ஊண் மறுத்தல் - உணவு வெறுத்து விரதங்காத்தல், தக்கது-தகுதியுடைத்து; கற்பு உடையாள் - கற்புடையவளது, வனப்பு - அழகானது, தக்கது-தகுதியுடைத்து; அழல்-நெருப்பு, தண் என்-தண்ணிதென்று சொல்லுதற்குரிய, தோளாள் - தோள்களையுடையவளாகிய ஒருவன் மனைவியானவள், அறிவு இலள் ஆயின்-அறிவற்றவளாயின், நிழல்கண் - நிழலினிடத்து, முயிறு ஆய்விடும்-முயிற்றோடொக்கும், எ - று.

க-ரை. இளையான் முதலியோர் தவஞ்செய்தல் முதலியவை தகுதியுடையன; ஒருவன் மனையாள் அறிவின்றி யொழுகுவளாயின் அவ்வொழுக்கம் நிழலில் முயிறிருந்தாற்போலும் என்பதாம்.

வி-ரை. இளையான்-இளமைப்பருவமுடையவன். "உற்றநோய் நோன்றல்" முதலிய தொழில்கள் முதுமைப்பருவத்தில் செவ்வனே

நடத்த லியலாதாதலால், 'தக்கதிளையான்றவம்' என்றார். ஊண்மறுத்தல் என்றதனால் உபவாசாதிகளென்பது பெறப்பட்டது. 'கற்புடையாள் வனப்புத் தக்கது' என்றமையால், கற்பிலாள் வனப்புத் தகுதியற்றது என்பது தானே வெளியாயிற்று. 'அழற்றண்ணென்றோளாள்' என்றது தோளின் தண்மை மிகுதியைக் குறித்தது. அறிவிலள்-அறிவின்றி யொழுகுதலையுடையாள். நிழல்-மரநிழல். மூயிறு - ஓர்வகை யெறும்பு. (கூஅ)

பொய்யாற் சுவர்க்கம்வா யானிரயம் பொருள்செய்யா
மையார் மடந்தையால் வாழ்வினிது—மெய்யன்றான்
மைந்தக நீண்ட மலர்க்கண்ணாய் தீதன்றா
லெத்தவ மாளும் படல்.

ப-ரை. பொய்யால்-பொய்ந்நெறி யொழுக்கத்தால், சுவர்க்கம் - சுவர்க்கமுளதாம், வாயால் நிரயம் - மெய்ந்நெறி யொழுக்கத்தால் நிரயமுளதாம், பொருள்செய் ஆம் - பொருள்தேடுதல் இனிதாகும், மை ஆர் - குற்றம்பொருந்திய, மடந்தையால் - மனையாளோடு கூடி, வாழ்வு - இல்லின்கண் வாழ்தல், இனிது - இனிதாம், (என்று சிலர் சொல்லுதல்) மெய் அன்று ஆல்-மெய்யன்றாதலால், மை தக நீண்ட- மையெழுதத் தகுதியாக நீண்ட, மலர் - குவளைமலர்போன்ற, கண்ணாய் - கண்ணையுடையாளே, எத்தவம் - எவ்வகையாகிய தவத்தையாயினும், ஆள்படல் உம்-ஆளுதலைச் செய்தலும், தீது அன்று - தீதன்று (நன்மையேயாம்), எ - று.

க-ரை. பொய்ந்நெறி யொழுக்கத்தாற் சுவர்க்கமுண்டு என்றல் முதலிய வீண் வார்த்தை பேசுவாரும் உளர்; ஆயினும், தவஞ்செய்தலும்மெய்ந்நெறி யொழுக்கமுமே சிறந்தன வென்பதாம்.

வி-ரை. பொய் - பொய்ந்நெறியி லொழுகுதல். வாய்மையால் எனற்பாலது வாயாவென மை குறைந்து நின்றது. செய்-முதனிலைத் தொழிற்பெயர். மை - அஞ்சனம், கருமையெனினுமாம். தகுதல் - பொருந்துதல். மலர் என வாளா கூறினரேனும் கண்ணுக்குவமையாகப் புணர்க்கப்பட்டதனல் குவளைமலரென் றுரையுரைக்கப்பட்டது. தீதன்று என்றமையால் நன்றும் என்றவாறாயிற்று. 'எத்தவமாளும் படல் தீதன்று' என்றமையால் இல்வாழ்வொழித்துத் தவத்தின் மேற் சேறலே நன்றென்பது தெற்றெனவிளங்கிற்று. (கக)

புல்லறத்தி னன்று மனைவாழ்க்கை போற்றுடைத்தே
னல்லறத்தா ரோடு நடக்கலா—நல்லறத்தார்க்
கட்டிட்டுண் டாற்றவாழ்ந் தார்களே யிம்மையி
லட்டிட்டுண் டாற்றவாழ் வார்.

ப-ரை. புல் அறத்தின் - புல்லிய துறவறத்தினும், மனைவாழ்க்கை - இல்வாழ்க்கையானது, நன்று - நன்மை பயப்பதாம்; போற்று உடைத்தேல் - (இல்வாழ்க்கைநெறியிற் றவறாது அதனை) போற்றி யொழுகின், நல் அறத்தாரோடு நடக்கலாம்-நல்ல துறவறத்தாரோடு வைத்தெண்ணப்படலாம்; நல் அறத்தார்க்கு - நல்ல துறவறத்தார்க்கு, அட்டு - சமைத்து, இட்டு-பகிர்ந்திட்டு, உண்டு - (பிறகு) தாமுமுண்டு, ஆற்ற வாழ்ந்தார்களே-மிகவுமினிதாக (முற்பிறப்பில்) வாழ்ந்தவர்களே, இம்மையில் - இப்பிறப்பில், அட்டு இட்டு உண்டு-சமைத்திட்டுண்டு, ஆற்ற வாழ்வார் - மிகுதியாக வாழ்ந்திருப்பவர், எ - று.

க-ரை. துறவறத்தார் முதலியோர்க்குக் களைகணயிருத்தலால் இல்வாழ்க்கையே சிறந்ததென்பதாம்.

வி-ரை. மனைவாழ்க்கை நன்று என்றதனலே துறவு தீது என்பது தானே விளங்கிக்கிடக்கவும் புல்லறமென்றல் மிகையாகாதோ

வெனின்; ஆகாது, என்னை. "ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை, நோற்பாரி னோன்மை யுடைத்து", "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும், பிறன்பழிப்ப தில்லாயி னன்று", "அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற், போஒய்ப் பெறுவ தெவன்", "துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கும், இல்வாழ்வா னென்பான் றுணை","இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும், நல்லாற்றி னின்ற துணை" என்றற்றொடக்கத் தான்றோர் செய்யுட்களான் மனைவாழ்க்கைச் சிறப்பும் துறவற வாழ்க்கை யிழிவுந் தெற்றென விளங்குதலானென்க. முத்திக்கு வித்தாதலால் குற்றமற்ற துறவறத்தை 'நல்லறம்' என்றார். (கoo)

ஈவது நன்றுதீ தீயாமை நல்லவர்
மேவது நன்றுமே வாதாரோ—டோவாது
கேட்டுத் தலைநிற்க கேடி லுயர்கதிக்கே
யோட்டுத் தவநிற்கு மூர்ந்து.

ப-ரை. ஈவது-(பிறர்க்கு ஒருபொருளை) கொடுப்பது, நன்று = நன்மையாம்;ஈயாமை-கொடாமை, தீது-தீமையாம்;நல்லார்-நல்லோர், மேவாதாரோடு - பொருந்தாதவரோடு, மேவது-பொருந்தியிருப்பது, நன்று - நன்மையாம்; ஓவாது-இடையறாமல், கேட்டு - (நன்னெறிக்குக் காரணமாகிய நூற்பொருளை) கேட்டு, தலை - (அந்நெறியின்) கண்ணே, நிற்க - நிற்றலைச்செய்க; (நின்றால் அந்நிலை) கேடு இல் - அழிவில்லாத, உயர் - உயர்ந்த, கதிக்கு - வீட்டுநெறியின்கண்ணே, ஓட்டு - விரைந்துசெல்லுஞ் செலவின்கண், தவ ஊர்ந்து நிற்கும் - மிகுதியாக மேம்பட்டு நிற்கும், எ - று.

க-ரை. பிறர்க்கு ஒருபொருளைக் கொடுப்பது நன்று; கொடாமை தீது; பொருந்ாதவரோடும் பொருந்தியிருப்பது நன்று; நன்

னூற் பொருளைக்கேட்டு நன்னெறியில் நிற்கக்கடவன்; அந்நிலை அவனுக்கு வீட்டுநெறிக்குத் துணையாம் என்பதாம்.

வி-ரை. "நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம், இல்லெனினு மீதலே நன்று" என்ற திருக்குறட்கேற்க, 'ஈவது நன்றுதீயாமை' என்றார். பகைகோடல் ஒரு வாற்றானும் நன்மை பயவாதாதலால், 'மேவதுநன்று மேவாதாரோடு' என்றார். "கேடிலுயர்கதிக்கே யோட்டுத் தவசிற்கு மூர்ந்து' என மேல்வருதலால், கேட்டு என்பதற்கு நன்னூற்பொருளைக் கேட்டு என்றுரை யுரைக்கப்பட்டது. வீட்டினது பெறலருமையும் பெருமையும் தோன்ற, கேடில் என்றதையாது உயர் என்றும் கதியை விசேடித்தார். ஓட்டு - விரைசெலவு. தவ - மிகுதிப்பொருடரும் உரிச்சொல். ஊர்தல் - மேம்படுதல். (கOக)

உண்ணிடத்து மொன்னார் மெலிவிடத்து மந்திரங்கொண்
டெண்ணிடத்துஞ் செல்லாமை தான்றலையே—யெண்ணி
யுரைப்பூசல் கோற லுயர்தவமேற் கங்கைக்
கரைப்பூசை போறற் கடை.

ப-ரை. உண் இடத்தும் - பிறர் உண்ணுமிடத்தும், ஒன்னார் - பகைவர், மெலிவு இடத்தும்-தளர்ந்தவிடத்தும், மந்திரம் கொண்டு- மந்திராலோசனையை மேற்கொண்டு, எண் இடத்தும்-ஆலோசிக்குமிடத்தும், செல்லாமை - போகாமையே, தலை-தலையாய வொழுக்கமாம்; எண்ணி - ஆராய்ந்து, உரை - சொல்லுஞ் சொல்லில், பூசல் - மாறுபடுதலானது, உயர்-உயர்ந்த, தவம்மேல்-தவவேடத்தை மேற்கொண்ட காலத்தில், கோறல் - ஒருயிரைக்கொன்று தின்கை, போற்ற - ஆராயுமிடத்து, கங்கைக்கரை - கங்காநதிக் கரையிலுட்கார்ந்திருக்கிற, பூசை - பூனைபோல, கடை - கடையாய வொழுக்கமாம், எ - று.

க-ரை. பிறருண்ணுமிடத்தும், மெலிந்திருக்கிற பகைவரிடத்தும், பிறர் மந்திராலோசனை செய்யுமிடத்தும் போகாதிருத்தல் நன்று; தாம்சொல்லுஞ் சொல்லில் மாறுபடாமை நன்று; தவவேடம் பூண்டவொருவன் ஒருயிரைக் கொன்று அதன் தசையையுண்டல், கங்கைக்கரையி லுட்கார்ந்திருக்கிற பூனைபோலக் கடையாகிய கூடா வொழுக்கமாம் என்பதாம்.

வி-ரை. பிறருண்ணுமிடத்திற் சென்றால் அவர் அருவருப்பாராதலாலும், மெலிந்த பகைவர்மேற் சேறல் அறமன்றாதலாலும், பிறர் ஒரு காரியத்தைக் குறித்து ஆலோசிக்குமிடத்துச் சென்றால் அவர் ஐயுறுவாராதலாலும், 'உண்ணிடத்து மொன்னார் மெலிவிடத்து மந்திரங்கொண் டெண்ணிடத்துஞ் செல்லாமை நான்றலையே என்றார். நான் தேற்றப்பொருளில் வந்தது. தலை-முதன்மை. மந்திரம்-இரகசியம். பூசல் - மாறுபாடு. கொல்லுதல் தினற்காதலால் கோறல் என்பதற்குக் கொன்று தின்கை யென்றுரை கூறப்பட்டது. பூசை-பூனை. "பூசை பாக்கன் மார்ச்சாலம் பூனை" என்பது திவாகரம். "ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு பூசைமுற்றவு நக்குபு புக்கென" என்பது கம்பராமாயணம். (க0உ)

பத்தினி சேவகன் பொத்தில் கடிந்தவசி
பொத்தில் பொருட்டிறத்துச் செவ்வியான்—பொத்தின்றி
வைத்தார் வழக்குஞ் சான்றவர்தஞ் செம்மை
செத்தா லறிக சிறந்து.

ப-ரை. பத்தினி-பத்தினியும், சேவகன்-சேவகனும், பொத்து இல் - குற்றமில்லாத, கடிந்தவசி - கடிந்தவசியும், பொத்து இல் - குற்றமில்லாத, பொருள்திறத்து - பொருட்டிறத்தில், செவ்வியான்-செவ்வியனாய்த் தேறப்படுவோனும், பொத்து இன்றி - குற்றமில்லாமல், வைத்தார் வழக்கு-அரசனாலே முதன்மையாக நியமிக்கப்பட்—

வருடைய சால்பும், (ஆகிய இவ்வைவரும்) சான்றவர் - மேலோரா வர்; செம்மை - (இவருடைய) செம்மைக் குணத்தை, செத்தால் - (இவர்) இறந்துபட்டால், சிறந்து அறிக - மிகுதியாக அறிக, எ-று.

க-ரை. பத்தினி, சேவகன் முதலியோருடைய செம்மைக் குணங்கள், அவரிறந்தபின் மிகவும் உலகத்தாரால் அறியப்படும்.

வி-ரை. பத்தினி - இது கற்புடை மாதையும் நன்மனையாளை யும் குறிக்கும். சேவகன் - வீரன். தவசி - தவஞ்செய்வோன். கடுந் தவசியென்றது அங்கபாநாதிகளை வெறுத்து என்பெழுந்தியக்கும் யாக்கையனும் நிற்கும் கடுந்தவத்தோனை. இவனுக்குப் பொத்தா வது கூடாவொழுக்கம். பொருட்டிறத்துச் செவ்வியானுதலாவது - ஒருவர் தன்னிடத்து நம்பிவைத்த பொருளை வஞ்சித்துக் கவர்ந்து கொள்ள நினையாமை. பத்தினி சேவகன் முதலியோர் உயிர்வாழுங் காலத்தினும் இறந்தபின்பு புகழ் மிக்கு விளங்குவாராதலால், 'அவர் தஞ்செம்மை செத்தாலறிக சிறந்து' என்றார். (௪௦௬)

வழிப்படரல் வாயல் வருந்தாமை வாய்மை
குழிப்படரல் தீச்சொற்க ளோடு—மொழிப்பட்ட
காய்ந்து விடுதல் களைந்துய்க் கற்றவ
ராய்ந்து விடுத லறம்.

ப-ரை. வழிப்படரல்-பிறர்வழிச்சேறலும், வாயல்-வாய்த்தகாரி யங்களில், வருந்தாமை - முயன்ற மனம் வருந்தாமையும், வாய்மை குழிப்படரல்-மெய்ம்மையல்லா நெறியிற் சேறலும், தீ சொற்களோடு- பிறரைப்பழித்துரைக்குஞ் சொற்களோடு, மொழிப்பட்ட-பெரியோ ரால் சொல்லப்பட்ட வொழுக்கநெறியை, காய்ந்துவிடுதல்கள்-வெறு த்துவிட்டொழியுந் தொழில்களும், (ஆகிய) ஐந்து-ஐந்தும், உய்ய கற் றவர் - தாம் உய்ந்துபோம் வழியைக் கற்றவராகிய அறிஞர், ஆய் ந்து - ஆராய்ந்து, விடுதல் - விடுவது, அறம் - அறமாகும், எ - று.

க-ரை. பிறர் வழிசசேறல் முதலிய ஐந்தனையும் விட்டொழி தலே அறமெனப்படும் என்பதாம்.

வி-ரை. வழி - தீநெறி. படர்தல் - செல்லுதல். வாயல் - தொழிலாகுபெயர். வாய்மை - மெய்ம்மை. பிறரைப்பழித்துரைத்தலின் மேற்பட்ட தீமையொன்றில்லையாதலால் புறங்கூறலை 'தீச்சொல்' என்றே மொழிந்தொழிந்தார். உய்யக் கற்றவர்-உய்யு முபாயங் கற்றவர். ஆய்தல் - இவற்றினு ளுளவாகும் அநர்த்தங்களை யாராய்தல். பெரியோர்சொல்லைக் கடத்தலினு மிக்கதீங்குபயப்பதொன்றின்மையான் 'மொழிப்பட்ட காய்ந்துவிடுதல்'என அதன்கொடுமைதோன்ற இறுதியில் வைத்தார். வழிப்படர்தல் முதலியவைந்தும் முறையே ஒன்றினொன்று மிக்கன. உய்தல் - பிழைத்தல், அது பிறவித் துன்பத்தினின்றுந் தப்புதல். படர்தல் - நடத்தல் எனினுமாம். (க0ச)

மல்லிவர்தோண் மாக்காயன் மாணுக்கன் மாநிலத்து
பல்லவர் நோய்நீக்கும் பாங்கினாற்—கல்லா
மறுபஞ்சந் தீர்மழைக்கை மாக்காரி யாசான்
சிறுபஞ்ச மூலஞ்செய் தான்.

ப - ரை. மல் இவர் தோள் - மற்றொழில் மிகுந்த புயத்தையுடைய, மாக்காயன் - மாக்காயனது, மாணுக்கன் - மாணவகனும், மா நிலத்து - இந்தப் பெரிய நிலவுலகத்தில், பல்லவர்-பலருடைய, நோய் - பிறவிப் பிணியை, நீக்கும் - ஒழிக்கிற, பாங்கினால் - அழகுடனே, கல்லா - கற்காத, மறு - மறுத்தலால், பஞ்சம் தீர் - சிறுவிலைக்காலத்தை யொழிக்கிற, மழை கை - மேகம்போலுங் கையினையுடைய, மாக்காரியாசான் - மாக்காரியாசான் என்பவன், சிறுபஞ்ச மூலம் - சிறுபஞ்சமூலம் என்னும் இந்நூலை, செய்தான் - இயற்றினான், எ - று.

க-ரை. காரியாசான் என்பவன் இந்தச் சிறுபஞ்சமூலத்தைச் செய்தளித்தான் என்பதாம்.

வி-ரை. இந்நூலாசிரியராகிய காரியாசான் என்பவர் மாக்காயனார் மாணாக்கராதலால் 'மல்லிவர்தோண் மாக்காயன் மாணாக்கன்' என்றார். மாணாக்கன் காரியாசான் எனவியையும். மல்லிவர்தோண் மாக்காயன் என்றமையால் இம்மாக்காயன் என்பவர், கல்வி வல்லார் என்பதேயன்றிப் பகைவரை வெல்லியினும் வல்லார் என்பது விளங்குகிற்று. கல்லா - மறைமொழியக் கல்லாத. மழைக்கை - மேகம்போலுங் கொடைக்கை. காரியாசான் - காரியாசிரியன். (க௦௫)

சிறுபஞ்சமூலம்

மூலமும் உரையும் முற்றிற்று.

அறிவிப்பு.

இந்நூலில் ௮௬-வது பாட்டு சில பிரதிகளிலில்லாமலும், அதுமுதல் ௯௧-வது பாட்டுவரை ௫-பாடல்கள் முழுமையு மில்லாமலும், ௯௨-வது பாட்டிற்கு ௩-அடி மாத்திரமுமிருக்கின்றன. இது சங்கமருவிய கீழ்க்கணக்கினொன்றாய்ப் பழமையாய் வந்ததனால் குறைந்த பாடல்கள் சிதைந்தகாரணந் தெரியவில்லை. கல்விச்செல்வ மிக்குடையார் தமது பிரதிகளில் சிதைந்திருக்கும் பாடல்களைக் காண்பார்களாயின் ௨-வது முறை அச்சிடுவதற்குள் தெரிவிப்பார்களென்று எதிர்பார்க்கின்றேம்.

கடவுள் துணை.

சிறுபஞ்சமூலம்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள். பக்கம்.

அ.
அரம்போற்கிளை 58
அழியாமை 44
அறனட்டா 27
ஆ.
ஆம்பல்வாய் 51
ஆணைக்கம் 28
இ.
இடரின்னா 14
இல்லியலார் 34
இன்சொலானாகு 85
ஈ.
ஈவத்தன்று 89
ஈன்றெடுத்தல் 68
உ.
உடம்பொழிய 6
உடையிட்டார் 38
உண்ணாமை 40
உண்ணிடத்து 90
[illegible] 30

ஏ.
ஏலாமைநன் 57
ஒ.
ஒத்தவொழு 2
ஒருவனறிவா 30
க.
கண்ணாங்காற் 82
கண்வனப்பு 9
கதநன்று 17
கலங்காமை 79
கல்லாதான் 5
கழிநசவை 77
கள்ளான 21
கள்ளுண்டல் 24
கற்புடைய 4
கா.
காடபோற் 78
கு.
குளந்தொட்டு 62

கொ.
கொண்டான் / கொழுந 51
கொண்டான்வழி 15
கொல்லாமை 48
கொன்றான் 66
கொன்றுண்பா 10
கோ.
கோறலுநஞ் 13
ச.
சத்தமெய்ஞ் 82
சி.
சிக்கர்சிதடர் 71
சிலம்பிக்கு 11
சிறைக்கிடந் 67
சூ.
சூலாமைசூலிற் 70
த.
தக்கதிளையான் 86
தா[illegible] 76

செய்யுள்.	பக்கம்.
தன்னிலையுந்	54
தா.	
தான்பிறந்த	64
தொ.	
தொழீஇயட	36
தோ.	
தோற்கன்று	79
தே.	
தேவரேகற்றவர்	20
ந.	
நகைகொல்லார்	45
நகையொடு	80
நட்டாரை	18
நல்லவெளிப்படு	53
நன்புலத்து	56
நா.	
நாணிலனாய்	83
நாணிலான்	12
நாணொளிது	84
நாள்கூட்ட	41
நீ.	
நீண்டநீர்	46
நீரறநன்று	59
நெ.	
நெடுக்கல்	65
நெய்தன்முகிழ்	29
ப.	
பக்கம்படாமை	72
பஞ்சப்பொழுது	74
படைதனக்கு	7
பண்டாரம்	38
பத்தினிசேவகன்	90
பற்றினான்	8
பி.	
பிடிப்பிச்சை	60
பிழைத்தல்	16
பு.	
புண்பட்டார்	73
புல்லறத்தி	88
பூ.	
பூத்தாலுங்	22
பூவாதாள்	39
பூவாதுகாய்க்கு	22
பெ.	
பெருங்குணத்தார்	25
பே.	
பேணடக்கம்	42
பொ.	
பொச்சாப்பு	47
பொய்யாமைநன்	37
பொய்யாமைபொ	19
பொய்யாற்	87
பொருளுடையா	3
பொருள்போக	55
பொன்பெறுங்	52
போ.	
போர்த்துமுரி	63
ம.	
மக்கட்பெறுதன்	50
மயிர்வனப்பு	35
மல்லிவர்தோண்	93
மு.	
முழுதுணர்	1
வ.	
வடிவிளமை	23
வருவாய்க்கு	40
வரைவில்லா	75
வலியழிந்தார்	69
வழிப்படரல்	92
வா.	
வார்சான்ற	43
வான்குருவி	26
வெ.	
வெந்தீக்காண்	61
வே.	
வேட்பவன்	33
வை.	
வைததனை	33
வைதானொருவ	81
வைப்பானே	32

சிறுபஞ்சமூலம் செய்யுள் முதற்குறிப்பகராதி
முற்றிற்று.

நீதிநூற்றிரட்டு விருத்தியுரை: 10-ம் பாகம்.

உ

சங்கச்செய்யுள்.

விளம்பிநாகனார் செய்த

நான்மணிக்கடிகை

மூலமும்,

மஹாவித்வான் கா. இராமசாமிநாயுடு அவர்களால்

இயற்றப்பட்ட

விருத்தியுரையும்.

இவை

பென்ஷன் சுபேதார்-தஞ்சை. சாம்பசிவம்பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை - எஸ். குமாரசுவாமிபிள்ளையால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1910.

Copyright] விலை அணா 5. [Registered.

உ

கடவுள் துணை.

நான்மணிக்கடிகை

மூலமும் உரையும்.

பாயிரம்.

கடவுள் வாழ்த்து.

ஐந்தடியான் வந்த பஃறொடை வெண்பா.

மதிமன்னு மாயவன் வாண்முக மொக்கும
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரொக்கு நிறம்.

(பதவுரை.) மதி - பூர்ண சந்திரன், மன்னும் - அழியாத, மாயவன் - விசித்திர சக்தியையுடைய இறைவனது, வாள் முகம் ஒக்கும் - விளக்கமாகிய முகத்தைஒத்திருக்கும்; கதிர்சேர்ந்த ஞாயிறு - கிரணங்கள் நிரம்பிய சூரியன், சக்கரம் ஒக்கும் - அவனது சுதரிசனமென்னும் சக்கரத்தை ஒத்திருக்கும்; முதுநீர் - நிலையாயுள்ள நீரையுடைய, பழனத்து - வயலில் முளைத்த, தாளின் - தாளிலிருந்து, எதிர் - மேலெழுந்த, தாமரை மலர் - தாமரைப்பூவானது, அவன் கண் ஒக்கும் - அவ

ஒத்துக் கண்கள் ஒத்திருக்கும்; பூவைப் பூமலர் - காயாம்பூப்போலும் புதிய மலர், நிறம் ஒக்கும் - அவனது திருமேனியை ஒத்திருக்கும்; என்றவாறு.

(விருத்தியுரை.) கவி தாம் திருமாலினது திருவுருவைச் சிந்திப் பழித் தோன்றின திருமுகமண்டல முதலியவற்றின் காட்சியை யாவருங் காணக்கூடிய பூர்ண சந்திரன் முதலானவற்றைக் கொண்டு நிரூபித்தார். சந்திரன் முதலானவை உபமானமாகவும் சாலமேம் பது தோன்ற அவற்றை உபமேயமாகக் கூறினார். இக்காப்பு நிரயோ னமாய் இசையாமல் மனவணக்கமாம்.

சக்கரத்தோடு மாயவன் என்பதைப்போல், பிறத்தோடு மாயவன் என்பதைப்போலக் கூட்டுக. 'மதியன்ன மாயவன் வாண்முக மொக்கும்' என்றமையால் கலைகுறைவின்றி வெண்மையும் பூர்ணமாயிருத்தலால் சந்திரன் முகத்திற்கு உபமானமெனவும், 'கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்' என்றமையால் இருது வேறுபாட்டால் ஒளி குறைந்தும் வளர்ந்துமிகாத சூரியன் சக்கரம் ஒக்குமெனவும், 'முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின் எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும்' என்றமையால் நீர் நிறைந்த வயல்களில் பறிக்கப்படாமல் நாளதோறு மிருக்கிற தாமரைமலர் திருக்கண்களை யொக்குமெனவும், நேற்று முந்தாநாள் பூத்து வாடிப்போகாமல் அப்போது பூத்த காயாம்பூ நிறத்தை 'பூவைப் புதுமலரொக்கு நிறம்' எனவும் கொள்க. மன் என்னும் இடையடியாகப் பிறந்த மன்னும் என்னும் பெயரெச்சம் "தாய்முலை தழுவிய குழவிபோலவும்" என்கிறவிடத்திற் கொண்டதுபோல் தகுதிபற்றிப் பெயர்க்குமுன் கொள்ளப்பட்டது. மன்னும்வாள் = நிலைபெற்ற காந்தியுள்ள, மதி என்று கூட்டிவைத்தும் என்றதனால் சிறப்பே. 'ஒக்கும்' என்பது ஒத்திருக்குந் தன்மையதென இயல்பைக் காட்டியதே யல்லது எதிர்காலங் காட்டியதன்று. ஒ - பகுதி, உம் - விகுதி, கு - சாரியை, க் - சந்தி. (க)

படியை மடியகத் திட்டா னடியினான்
முக்காற் கடந்தான் முழுநிலம்—அக்காலத்
தாப்பனி தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை யழித்த மகன்.

(ப-உரை.) அக்காலத்து - பூர்வகாலத்தில், படியை - பூமியை மடியகத்து-வயிற்றினுள்ளே, இட்டான்-வைத்தவனும்; அடியினால் - தனது சீர்பாதங்களினால், முழுநிலம் - எல்லாவுலகங்களையும், முக்கால் - மூன்றுமுறை, கடந்தான்-தாவியளந்தவனும், ஆப்பனி-பசுக்களினது நடுக்கத்தை, தாங்கிய - ஏற்றுக்கொள்ள, குன்று எடுத்தான்-கோவர்த்தனகிரியைக் குடையாக எடுத்தவனும்; சோவின் - அரண்களினுடைய, அருமை - அருமையை, அழித்த - அழித்தவனாகிய, மகன் - புருடனும் (முன் சொன்ன மாயவனே), எ - று.

(வி-ரை.) பிரளயகாலத்தில் உலகங்களைத் தனக்குள் அடக்கினதனை 'படியை மடியகத் திட்டான்' என்றது. இங்கே படி என்றது "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்ற விதியால் எல்லாவுலகங்களையும் உணர்த்தும். "மடியகத்திட்டான்மகவை" என்னும் களத்திற முரைத்த காதைக்கண், மடி - வயிறென்பதற்கு இதனையே எடுத்துக் காட்டினார் அடியார்க்கு நல்லார். 'படையை மடியகத் திட்டான்' என்றும் பாடம். இதற்கு: படையை - (அவ்விறைவன்) தனது சுதரிசனமென்னும் ஆயுதத்தை, மடியகத்து - பாரதப் போரில், இட்டான் - (ஒளியின் சிறுமையில்) வைத்தவன் என்பது பொருள்.

மூவுலகங்களையும் தன்வசமாக்கிக்கொண்டு தேவர்களைத் துன்பப்படுத்திக்கொண்டிருந்த பலிச்சக்கிரவர்த்தியிடத்தில் மாணியாய்ச் சென்று தன்னடியால் மூவடி மண்கேட்டு, கொடுத்தே னென்றவுடனே மிகவுயர்ந்து மூவுலகங்களையும் மூவடியாக அளந்து கவர்ந்து

கொண்டு அவனைச் சிறைப்படுத்தினதனால் 'அடியினான், முக்காற் கடந்தான முழுநிலம்' என்றது. முழுநிலம் என்றது உலகங்களை யெல்லாம். அக்காலத்து என்பதை எல்லாவற்றோடும் கூட்டிக் கொள்க.

ஆயர்கள் மழை முதலான க்ஷேமத்தைக் குறித்து வருடந்தோறும் இந்திரனுக்கு ஒரு வேள்வி செய்வதுண்டு. கிருஷ்ணன் ஒருகால் அவர்களுக்கு ஒருவகையாய்த் தத்துவம் போதித்து அவ்வேள்வியைக் கோவர்த்தனகிரிக்குச் செய்விக்க, அதனால் இந்திரன் கோபமூண்டு ஆய்ப்பாடி முற்றும் அழிந்துபோகும்படி பெருமழை பெய்விக்க, அதைத் தாங்கமாட்டாமல் வருந்திய மாடுகளையும் மேய்ப்பர்களையும் காப்பதற்காக அந்த மலையைக் கொடைபோல் மேலெடுத்துக் காத்து இந்திரன் செருக்கை அடக்கினான். இதைத்தான் 'ஆப்பனி தாங்கிய குன்றெடுத்தான்' என்றது. 'ஆனிரை தாங்கிய' என்றும் பாடம்; இதற்கு: பசுக்கூட்டத்தைக் காப்பாற்றும்பொருட்டு என்பது பொருள். தாங்கிய - செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; தாங்கு - பகுதி, இய - விகுதி, எதிர்காலம் காட்டும்; நன்னூல் உயிரீற்றுப்புணரியல் சூ - கஎ-ன் விதியால் தாங்கிய குன்று என்னுமிடத்து வலி இயல்பாயிற்று. தாங்கிய என்பதைப் பெயரெச்சமாகக் கொள்ளின் அந்த அடை பொருந்தாமையேயன்றிப் பயனும் தோன்றாது சிறப்பில்லையாம்.

சாளுவராசன் கண்ணனை வெல்லவேண்டி வேண்டியபடி வானத்திற் பறக்கத்தக்க சவும்பமென்னும் ஒரு இருப்புப் பட்டணத்தைச் சிவனிடத்து வரமாகப் பெற்றுக்கொண்டு சண்டைக்கு வந்தபோது, அப்பட்டணத்தைக் கண்ணன் அழித்ததனால் 'சோவின் அருமை அழித்த மகன்' என்றது. காசிராசனாகிய சுதக்ஷிணன் சிவபெருமானை நோக்கி ஒரு யாகஞ்செய்து, சிவாநுக்கிரகத்தால் அதில் தோன்றிய ஒரு மகாபூதத்தைக் கண்ணன்மேலேவ, அதைச் சக்

கரத்தால் அவர் தூரத்தினபோது, அது அப்பூதத்தைக் கொன்று காசிப்பட்டணத்தையும் சுட்டெரித்தது. இதனாலும்: மலையரண், ஆயுதவரண், நீரரண், நெருப்பரண், காற்றரண், மூரன் என்கிற அவன் மந்திரியினுடைய பாசமாகிய அரண், இந்த ஆறு அரண்களுள்ள நரகா சுரனுடைய நகரத்தை அழித்ததனாலும், அக்கினிதேவனே தன் சுவாலைகளினால் அரணாகக் காத்துக்கொண்டிருந்த பாணாசுரன் பட்டணத்தை யழித்ததனாலும், சோவின் அருமை அழித்த என்பது ஒக்குமென அறிக. இங்கு 'மகன்' என்றது ஆண்மையைக் குறித்தது.

'கோவின்' எனவும் பாடமுண்டு. அதில் எருதுகளுடைய அருமை அழித்தவன் என்பது பொருள்; அல்லது சொர்க்கத்தின் அருமை யழித்தவன் எனவு முரைக்கலாம். சயிப்பியராசன் மகளாகிய சத்தியை யென்பவளை அவ்வரசன் * சுற்கமாக வைத்திருந்த யார்க்கு மடங்காத எழெருதுகளை யடக்கிக் கிருஷ்ணசுவாமி கலியாணஞ் செய்துகொண்டார். நரகாசுரனைக் கொன்றபின் இந்திரனுடைய நந்தவனத்திலிருந்த பாரிஜாத மரத்தைக் கருடன்மேலெடுப்பித்து வந்து தம் மனைவியாகிய சத்தியபாமையின் தோட்டத்தில் நாட்டினர்; இதனால் சொர்க்கத்திற்கிருந்த மகிமை குறைந்ததன்றோ. இவைதாம் 'கோவின் அருமை யழித்த' என்பதின் கருத்து .

என்னும்மைகள் விகாரத்தால் தொக்கன. முற்பாட்டிலுள்ள 'மாயவன்' என்பதை வருவித்து இப்பாட்டு முடிக்கப்பட்டது. 'மகன்' என்பதை எழுவாயாகக்கொள்ளின் நான்கு விஷயம் ஏற்படாமற் போவதுமன்றி (அவிம்ருஷ்டவிதேயாம்ஸம்) கருதிய துள்ளடங்கல் என்கிற குற்றமுமாம். 'சோவின் அருமை யழித்தமகன் என்பது எழுவாயாகும்போது அத்தன்மை சித்தமேயா யிருப்பதனு

---

* சுற்கம்=பரியம்.

லென உணர்க. தான் முன் தியானித்த கடவுளின் மகிமைகளைக் கூறியதனால் இது வாயாற்செய்த வணக்கமாம்.

இக்காப்புகளில் நந்நான்கு பொருளைக் கூறியதனால் இனி ஒவ்வொரு பாட்டிலும் நந்நான்கு விஷயம் கூறப்படுமெனக் குறிப்பித்தாரென்றறிக. (உ)

நூல்.

எள்ளற்க வென்று மெளியரென் றென்பெறினுங்
கொள்ளற்க கொள்ளார்கை மேற்பட—உள்கடினுஞ்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

(ப-உரை.) என்றும்-நட்பாக வருங்காலத்திலும், எளியர் என்று-(வலி முதலியன) குறைந்தவரென்று நினைத்து, எள்ளற்க - (பகைவரை ஒருவன்) இகழாதிருக்கக்கடவன்; என் பெறினும் - சிறந்த பொருளைப்பெறுவதாயிருந்தாலும், கொள்ளார் கை-கொள்ளத்தகாதவருடைய கைகள், மேற்பட-(தன்கைகளுக்கு) மேற்பட்டன ஆகும்படி, கொள்ளற்க-(அப்பொருளை) இராவாதிருக்கக்கடவன்; உள் கடினும்-(வறியகுடியிற் பிறந்தார் செய்கை) மனத்தை வருத்துவதாயிருந்தாலும், சிறு இல் பிறந்தாரை-அவ்வறிய குடியிற் பிறந்தவரை, சீறற்க - சீறாதிருக்கக்கடவன்; கூறு அல்லவற்றை - சொல்லத்தகாத சொற்களை, விரைந்து கூறற்க - (சொல்வதில்) விரைந்து சொல்லாதிருக்கக்கடவன், எ-று.

(வி-ரை.) கொள்ளார் - பகைவர் எனினும் ஒக்கும். தான் எவ்வளவு விசேஷமுள்ளவனா யிருந்தாலும் பொருள் முதலிய இல்லாதவர்களை எப்பொழுதும் இகழாமலிருக்கவேண்டும். எப்படிப்பட்ட பொருள் கிடைப்பதாயிருந்தாலும் தகாதவர் கையில் வாங்காதிருக்க வேண்டும். அற்பமனிதர் மனஞ் சுடத்தக்க துன்பஞ் செய்தாலும்

பேதைகளாகிய அவர்களுக்கு இயல்பென்று நினைத்து அவர்மேல் கோபங்கொள்ளாதிருக்கவேண்டும். சொல்லக்கூடாத பேச்சுக்களைக் காலமும் இடமும் அறியாமல் பதறிப்பேசாதிருக்கவேண்டும் என்பது கருத்து.

'என்பெறினும்' என்பதை மத்திமதீபமாக வைத்து இருபுறமுங் கூட்டுக. 'கள்ளற்க' முதலியன எதிர்மறை வியங்கோள் வினைமுற்று; கள்-பகுதி, அல்-பண்படி, இங்கு எதிர்மறை விகுதி; இவ்விரண்டுஞ் சேர்ந்து ஒருபகுதி, க - வியங்கோள் விகுதி. ல் ற் ஆனதும் ளகர மிருந்ததும் சந்தி. கொள், சீறு, கூறு இப்பகுதிகளின் மேலும் இவ்வாறே அமைத்துக்கொள்க. 'கொள்ளார்கை மேல்வர' என்றும், 'கொள்ளார்கை மேலவா' என்றும் பாடம். கூறப்படுவது கூறு, செயப்படுபொருளைக்காட்டும் ஐ விகுதி புணர்ந்து கெட்டது. என்-குறிப்பு வினையாலணையும் பெயர். (௪)

பறைபட வாழா வசுணமா வுள்ளங்
குறைபட வாழா ருரவோர் — நிறைவனத்து
நெற்பட்டக் கண்ணே வெதிர்சாந் தனக்கொவ்வாச்
சொற்பட வாழாது சால்பு.

(ப-ரை.) அசுணமா - கேகயப்பறவைகள், பறைபட - பறையினொலி (செவியில்) பட்டால், வாழா - உயிர் வாழா; உரவோர் - அறிவுடையோர், உள்ளம் குறைபட - (மானக்கேட்டால்) தமது ஊக்கம் சுருங்குதற்படி, வாழார் - உயிர்வாழார்; நிறை வனத்து-(மரங்கள்) அடர்ந்த வனத்தில், வெதிர் - மூங்கில்கள், நெற்பட்டக்கண்ணே - நெல்லுண்டானபோதே, சாம் - அழியும்; சால்பு - (பலநற்குணங்களாலும்) நிறைந்தவன், தனக்கு ஒவ்வா - தன்னிறைவுக்குத் தகாத, சொல்பட வாழாது-சொல்லுண்டாக உயிர் வாழான், எ-று.

(வி-ரை.) வீணை முதலிய மெத்தென்ற வாத்தியங்களின் ஓசையேயன்றிக் கொடுமையான தீம்பட்ட முதலியவற்றின் ஓசைகேட்

டால் அதைப்பொறுக்கமாட்டாமல் அசுணமென்னும் பறவை சாவது போல், மனம் நல்வழியிற் செலுத்த இடையூறு நேரிட்டால் விவேகிகள் உயிரிழப்பார்கள். மூங்கிலில் மணிபிடித்து முதிர்ந்தவுடனே அம்மூங்கில் வெடித்து அழிவதுபோல், பெருமையுள்ள ஒருவனுக்கு அவமானமான பழிச்சொல் சேர்ந்தால் அவன் பெருமைகெடும். இப்படிச் சொன்னதனால் மனக்குறைப்பட்டவன் பிழைத்திருப்பது வீணென்றும், பெருமையுள்ளவன் பழிச்சொல்வாராமல் தன்னைக்காத்துக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லியதாயிற்று.

அசுணம்-இசையறிவதோர் விலங்கு (சிந்தாமணியுரை-பதுமை-௨௩ ௭) ஒருவன் முதற்கண் யாழிசையைக் கேட்பித்து, இங்ஙனம் அவ்விசையின்பத்தே யின்புற்று மூழ்கியவளவில் வலியதோர் பறையை ஒலிக்க, அதன் வல்லோசையைக் கேட்கலாற்றாது இவ்விலங்கினரிய உயிர் விட்டு நீங்கும் என்ப. அசுணமா என்கிற பால்பகா அஃறிணைப்பெயர் வாரா என்னும் குறிப்பினால் பன்மையாக் கொள்ளப்பட்டது. பட என்பது செயினென் வாய்பாட்டின் திரிபாம். "உரவோ ரெனினு மட்டவோ ரெனினும்" என்றார் பதிற்றுப்பத்தினும் (அ - ௩). உரம்-அறிவு; "உரமொருவற்குள்ள வெறுக்கை" என்னுந் திருக்குறளா னுணர்க. உரவோர் என்பதற்குப் பதில் 'பெரியோர்' என்றும் பாடம்; இதற்கு: மிக்க மானமுடையோர் என்பது பொருள். ஒவ்வா-ஈறுகெட்ட பெயரெச்சம்; ஒ - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, வகரம்-சந்தி, தகர எழுத்துப்பேறோடு சேர்ந்த அகர விகுதி கெட்டது விகாரம். 'பட்டகண்' இதுவும் ஒருவகை எதிர்கால வினையெச்சம்; படு என்னும் பகுதி பட்ட என விகாரப்பட்டு, கண் விகுதி பெற்றது. சாகும் ஆகும் என்பவை ஈற்றுயிர்மெய் கெட்டு சாம் ஆம் என்றாயின. 'தனக்கொவ்வாச் சொற்பட்டாற் சாவதாம் சால்பு' என்றும்பாடம்; இதற்கு: ஒருவனுக்கு அடுக்காதசொல் நேர்ந்தால் அவனது பெருமை கெட்டுப்போம் என்பது பொருள். ()

மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்
தேறிய பின்னறிப மாநல மாசறச்
சுட்டறிப பொன்னி னலங்காண்பார் கெட்டறிப
கேளிரா னாய பயன்.

(ப-ரை.) மணி நலம்(காண்பார்)-இரத்தினத்தினது குணத்தை (அறியுமியல்பினர்), மண்ணி அறிப-சுத்திசெய்து அறிவார்கள்; மா நலம் (காண்பார்)-குதிரையினது குணத்தை(அறியுமியல்பினர்),பண் அமைத்து - சேணத்தை (அதன்மேல்) பொருந்த வைத்து, ஏறிய பின் - ஏறினபின், அறிப - அறிவார்கள், பொன்னின் நலம் காண்பார்-பொன்னினது குணத்தை அறியுமியல்பினர், மாசு அற-குற்றம் நீங்கும்படி, சுட்டு அறிப-தீயிற் சுட்டு அறிவார்கள்; கேளிரான்-உறவினரால், ஆய பயன் (காண்பார்)-உண்டாகும் பயனை (அறியும் இயல்பினர்), கெட்டு அறிப-(தமது செல்வம்) கெட வறுமை முதலியவற்றால் தாழ்ந்தபோது அறிவார்கள், எ-று.

(வி-ரை.) மணிகளைச் சுத்திசெய்து அவற்றின் குணங்களைக் காண்பது போலவும், குதிரைமேலேறி நடத்தியபின் அதன் யோக்கியதையைக் காண்பதுபோலவும், பொன்னைக் காய்ச்சியபின் அதன் ஏற்றத்தை யறிவதுபோலவும், தாம் துன்பமடைந்த காலத்தில் உதவி செய்வதனால் இவர்கள்தாம் நமக்குச் சரியான சுற்றத்தார் என்று அறியலாம் என்பதாம். "கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை, நீட்டி யளப்பதோர் கோல்" என்னுந் திருக்குறளை நோக்குக. மண் - பகுதி, இ - இறந்தகால வினையெச்ச விகுதி. அறி - பகுதி, ப - பலர்பால் விகுதி. ஆய, ஆ - பகுதி, ய்-இடைநிலை, அ - விகுதி, இதனை இடைக்குறையெனக் கொள்வாரு முண்டு. 'கேளிரா லாய பயன்' என்றும் பாடம். கெட்டு அறியவேண்டியது விதியன்மையால் இவ்வினையெச்சம் கெட்டால் என்பதன் திரிபென அறிக. அறிப நான்கும் உயர்திணைப் பலர்பால் வினைமுற்றுக்கள். சேணம்-குதிரை

முதுகின்மேலிடும் தவிசு. மா-எல்லா விலங்குகட்கும் பொதுப்பெயராயினும் 'பண்ணமைத்து, ஏறியபின் அறிப மாநலம்' என்ற குறிப்பால் குதிரையை யுணர்த்திற்று; அங்ஙனமாயின், யானை ஒட்டகம் முதலியவற்றைக் கொள்ளலாகாதோவெனின், அவை இதுபோலப் பெரும்பாலும் மக்கட்குபயோகப்படாமையால் அவற்றை யொழித்து குதிரையென்றே பொருளுரைக்கப்பட்டது. (௫)

கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி.

(பதவுரை.) அகில்-அகிற்கட்டையானது, கள்ளி வயிற்றின் பிறக்கும்-கள்ளிமரத்தினுள்ளே பிறக்கும்; ஒள் அரிதாரம் - சுத்தமான கோரோசனையென்கிற மருந்து, மான் வயிறு பிறக்கும்-மானின்வயிற்றிற் பிறக்கும், பல் விலைய முத்தம் - மிக்க விலையுள்ள முத்துக்கள், பெருங்கடலுள் பிறக்கும் - பெருமையாகிய கடலிற் பிறக்கும்; நல் ஆள் - நற்குண நற்செய்கைகளை ஆளுதலுடையான், பிறக்கும் குடி - பிறக்குங்குடியை, அறிவார் யார் - முன் அறியவல்லவர் யாவர் (ஒருவருமிலர்), எ - று.

(விசேஷவுரை.) மரங்களில் இழிந்த கள்ளியிலே சுகந்தமுள்ள அகிலும், மிருகமான பசுவின் வயிற்றில் தேவர்களுக்குந் திலகமிடத் தக்க கோரோசனையும், உவர் நீரும் புலானாற்றமுமுடைய கடலிலே விலையுயர்ந்த முத்தும் பிறப்பதுபோல், ஒரிழிகுலத்திலும் மேன்மையான பிள்ளை பிறக்கும்; ஆதலால், தாழ்ந்திருக்கிறதென்று நினைத்து ஒரு குலத்தையும் அவமதிக்கலாகாது என்பதாம். கள்ளிக் கட்டை மிகவும் முதிர்ந்தால் அது அகிற்கட்டைக்குச் சமானமான வாசனையுளதாம் என்பது இதனாற் பெறப்பட்டது. ஆன்வயிற்று

என்று பிரித்து பசுவின் வயிற்றிலே என்று பொருள் கொள்ளினு மமையும். நல்லாள் பிறக்குங்குடி என்பதற்கு "நல்லா ளிலாத குடி" என்னுந் திருக்குறளுரையையும் (1030) நோக்குக. (௪)

கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மதம்—மெல்லென்
றருளிற் பிறக்கு மறநெறி யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும்.

(இ-ள்.) கதிர் மணி - கிரணங்களையுடைய இரத்தினம், கல்லில் பிறக்கும் - மலையில் பிறக்கும்; உயர் மதம் - மிக்க காமமயக்கம், காதலி - விரும்பப்பட்ட நாயகியினது, சொல்லில் பிறக்கும் - இன்சொல்லிலே பிறக்கும்; அறநெறி - அறம் நடக்கும் வழி, மெல் என்ற - மென்மையான, அருளில் பிறக்கும் - கருணையில் பிறக்கும்; எல்லாம் அற(முன் சொல்லியவும் சொல்லப்படாதவுமான) முதலிய எல்லாம், பொருளில் பிறந்துவிடும் - செல்வப்பொருளில் பிறந்துவிடும், எ - று.

(வி-ரை.) சாதாரணமான கல்மலையில் மணிகள் பிறப்பதுபோல தனக்குப் பிரியமான பெண்ணின் பேச்சில் ஒரு ஆனந்தம் விளையும்; அருளொன்றிருந்தால் கொலை வஞ்சனை முதலிய பாவச்செய்கைகள் சிறிது முளைக்காமையால் எல்லாத் தருமவழிகளும் அருளிலே யுண்டாகும்; முன் சொன்ன பொருளும் போகமும் பின்சொன்ன தருமவழிகளும் யாவும் பொருளினா லுண்டாகு மாதலால் பொருளைத் தேடவேண்டு மென்பதாம்.

'கல்லில்' என்பதில் இல் ஏழனுருபு. அருளில், பொருளில் இவை ஐந்தாம்வேற்றுமை, ஏதுப்பொருளில் வந்தன. மெல்லென்ற அருள் என்பதில் அகரம் தொகுத்தல் விகாரம். 'மெல்லெ, னருளிற் பிறக்கும்' என்றும் பாடம். "அறனும் அருளுடையான் கண்ணதே யாகும்" என்பது சிறுபஞ்சமூலம். "பொருளானா மெல்லாம்"

என்பது திருக்குறள்-1002. பிறந்துவிடும் என்பதில் விடு துணிவுப் பொருளது, அசைநிலை; துணைவினை யெனினுமாம். (௫)

திருவொக்குந் தீதி லொழுக்கம் பெரிய
வறனொக்கு மாற்றி னொழுகல்—பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல் புலையொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு.

(ப-ரை.) தீது இல் ஒழுக்கம் - (தம் வருணத்துக்கு) குற்றம் உண்டாகாத ஒழுக்கம், திரு ஒக்கும் - (அக்குலத்துக்கு) செல்வத்தோடு சமானமாகும்; ஆற்றின் - இல்லறவழியில், ஒழுகல் - (தவறாமல்) நடத்தல், பெரிய அறன் ஒக்கும் - சிறந்த துறவறத்தை ஒக்கும்; பிறனை கொண்டு-(ஆராயாமல்)பிறனொருவனை நட்புக்கொண்டு, கண் மாறல்-பராமுகமாயிருப்பது, கொலை ஒக்கும்-அவனைக்கொல்லுதலை ஒக்கும்; போற்றாதார் முன்னர்-ஆதரித்தலையாதவரிடத்தில், செலவு - (ஒருபயன் பெறவேண்டி) செல்லுதல், புலை ஒக்கும் - (தன்னை யறுத்தெடுத்த) மாமிசத்தை ஒக்கும், எ-று.

(வி-ரை) ஒருவன் தன் குலாசாரங்களை நடத்தி வருவதே செல்வம்போல் சிறந்திருப்பதன்றிப் பிறர் குலாசாரங்களைக் கைக்கோடல் சிறப்பன்று; உலகத்துக்கு ஒத்த வழியில் நடப்பது தருமமேயன்றி, சாத்திரஞ் சொன்னதானாலும் உலகத்துக் கொவ்வாவழி நடப்பது தருமமன்று. முன்பு ஒருவனைச் சிநேகிதனாகக் கொண்டிருந்து பின்பு அவனைப் பராமுகமாய்ப் பார்ப்பதும் பகைப்பதும் அவனைக் கொலைசெய்வதுபோன்ற கெட்ட காரியமாகும். உபசரிக்காதாரிடத்திற்போவது தன் சதையைத் தானே அறுத்தெடுப்பது போல அருவருத்த தொழிலாம் என்றபடி.

தீது—தீமை - பகுதி, து - விகுதி, இதுவும் பண்புப் பெயரேயாம். தீமை செய்யுந் தன்மையையுடையதெனப் பொருட்பெய

ராக்கினும். கடைசியில் இக்கருத்தே யாகவேண்டும். பெரிய அறன் ஒக்கும் - பெரிய தருமத்தை ஒக்கும் எனினுமாம். கண்மாறல் - புறங்கூறல் கண் - தாக்ஷிணியம், அது மாறுதல் - உபேக்ஷை அல்லது பகை, எழுவாய்த்தொடர். போற்றுதார் - பகைவர் எனினுமாம். அறம் அறன் ஆனது போலி. புலை - நீசத்துவம் (இழிவு). ஆறு - வழி; பெரிய அறன் ஒக்கும் என மேல் வருதலால் இது நல்வழியைக் குறித்தது. புலை ஒக்கும்-(கீழாயினோரது) இழி தன்மையை ஒக்கும் எனினுமாம். கொலை—கொல் - பகுதி, ஐ - தொழிற்பெயர் விகுதி. செலவு—செல் - பகுதி, உ - விகுதி, அ - சாரியை, வ் - உடம்படுமெய். (௬)

> கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்
> டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை யொண்பொருள்
> செய்வமென் பார்க்குந் துயிலில்லை யப்பொருள்
> காப்பார்க்கு மில்லைத் துயில்.

(ப-ரை.) கள்வம் என்பார்க்கும் - (பிறர்பொருளைக்) களவு செய்வோமென்று சோர்வு பார்ப்பவருக்கும், துயில் இல்லை - நித்திரையில்லை; காதலிமாட்டு - (விரும்பப்பட்ட) நாயகியினிடத்து, உள்ளம் வைப்பார்க்கும் - உள்ளத்தை (இடைவிடாது) வைப்பவருக்கும், துயில் இல்லை - (அவளைக் கூடுமட்டும்) துயிலில்லை; ஒள் பொருள் - ஒள்ளிய பொருளை, செய்வம் என்பார்க்கும் - சம்பாதித்துச் சேர்க்கக் கடவோமென்று கருதுவார்க்கும், துயில் இல்லை - (அப்பொருள் கூடுமளவும்) துயிலில்லை; அப்பொருள் காப்பார்க்கும் - அப்படித் தேடிய பொருளைக் (கள்ளர் கொள்ளாமல்)காப்பவர்க்கும், துயில் இல்லை—, எ - று.

(வி-ரை.) திருட நினைப்பவர்க்கும், ஒருத்தியை இச்சித்து அவள்மேலேயே மனம் வைத்தவர்க்கும், பொருளீட்ட நினைத்து அலைபவர்களுக்கும், பொருளை உபயோகித்தற்குரிய வழியையறிந்

துயரியோகிக்காமல் பூசம்போல் ஈதலுக்கொண்டான் ஒருப்பவருக்கும், நீக்கிரைமுதலியனவுகள் இல்லையாம், ஆதலால், அபாயமில்லாமல் பொருளையும் காத்தலையும் நல்வழியில் அடைந்து அளவிட்டு அனுபவிக்க வேண்டுமென்பது கருத்து.

கள்வம் - தன்மைப்பன்மை யெதிர்கால வினைமுற்று; கள் - பகுதி; அம் - விகுதி; வகரம் இடைநிலை. 'செய்வம்' என்பது பிழைபாடே. 'நுண்பொருள் சேர்ப்பார் வெட்டார்க்கு' என்றும் பாடம். நுண் பொருள் என்பது எக்கம் கைப்பொருள் கெலிந்தது. 'இம்மைய தியை' என்றும் பாடம். ( )

கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்றா வுறாமுதல் — தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா வெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றா கெடும்.

(ப-ரை) கற்றார் முன் - (ஞானநூல்களைக்) கற்றறிந்தவரிடத்து, கழிவு இரக்கம் - கழிந்த பொருளுக்கு இரங்குதல், தோன்றா - உண்டாகமாட்டா, காதலித்த ஒன்று - விரும்பப்பட்ட ஒருபொருளை, உற்றார்முன் - தேடத் தொடங்கினோரிடத்து, உறாமுதல் - (அப்பொருள்) கிடையாத காரணங்கள், தோன்றா —; தெற்றென - தெளிவாக, அல்ல புரிந்தார்க்கு - தீவினைகளை விரும்பிச் செய்தவரிடத்து, அறம் - அறச்செய்கைகள், தோன்றா —; வெகுண்டார் முன் - கோபித்தவரிடத்து, எல்லாம் - (பிறர் கூறும்) நன்மைகளெல்லாம், தோன்றா கெடும் - தோன்றாதனவாகிக் கெடும், எ-று.

(வி-ரை.) கற்றவர்கள், எல்லாம் கடவுள் திருவுள்ளப்படியே நடக்குமென்கிற நிச்சயமுள்ளவர்களாதலால் எதற்கும் விசனப்படமாட்டார்கள்; ஒன்றின்மேல் மிகுவிருப்பம் வைத்தவர்கள் அப்பொருள் தமக்குக் கிடைக்குமென்று நம்புவார்களேயன்றி கிடையாதென்று நினைக்க

ட்டார்கள், இவைகளையே செய்யப்பயின்றவர்கள் தருமத்தை நினை யாட்டார்கள்; கோபம் மிகுந்தபோது இது நன்று, இது தீது, இது காரியம், இது அகாரியம் என்று ஒன்றும் தோன்றாது ஆனமையே இருள் கற்றுணர்ந்திருக்கவேண்டுமென்பதும், வீறுடைமை கொள்ளலாகா தென்பதும், தீச்செயல்களைச் செய்யலாகாதென்பதும், கோபங்கொள்ளக்கூ டாதென்பதும் கூறியதாயிற்று.

முன் - ஏழனுருபு. கழிவிரக்கம் - கழிவினுக்கிரக்கமென நான்கனுருபும்பயனும் உடன்தொக்க தொகை. இரக்கம் - "இரங்கல் கழிந்த பொருட்டாகும்" என்பது தொல்காப்பியம் (உரி-[illegible]) ருழுதல் - பெயரெச்சத்தொடர். உறு - ஈறுகெட்ட பெயரெச்சம், றவையின் காரணம் என்பது திரண்டபொருள். உறுமுதலென் பதனை 'உறுமது' என்றும் 'உசாவுதல்' என்றும் பாடம் ஓதுவாரு முளர். தோன்று - பலவின்பால் முற்று, ஆசையால் இரக்க முதலிய பலவாகிய அஃறிணைப் பெயர்களும் பன்மையாம் கடையில் இருக்கும் தோன்று என்பது பல் என்னும் விகுதிகெட்ட வினைமுற்றம். வெகுண்டார்—வெகுள்-பகுதி, ஆர் - விகுதி, ட்-இடைநிலை; ள் ண் ஆனது சந்தி. (௨)

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணி
தான்செல் லுலகத் தறம்.

(ப-ரை.) நிலத்துக்கு - மருதநிலத்துக்கு, நெல்லும் கரும்பும் - நெற்பயிரையும் கரும்பின் பயிரையும், அணி என்ப - அழகென்று சொல்லுவர் (அறிஞர்கள்); குளத்துக்கு - குளத்தினுக்கு, தாமரை - தாமரைமலரை, அணி என்ப—; (அவைபோல) பெண்மை நலத்து க்கு - பெண்தன்மைக்குரிய கற்பாதிய நன்மைக்கு, நாணம் - நாண

முடைமை, அணி என்ப—; தனக்கு அணி-(அக் கற்புடையாளோடு கூடிய) ஒருவனுக்கு அழகாவது, தான் செல் உலகத்து அறம் (என்ப) - தான் இனிச் செல்லும் மேலுலகத்துக்குத் துணையாகிய தருமமென்று சொல்லுவர், எ - று.

(வி-ரை.) விளைநிலத்தை நெல்லும் கரும்பும், குளத்தைத் தாமரையும் விளங்கச்செய்வதுபோல், நல்ல பெண்ணுக்கு நாணமும், ஒருவனுக்குத் தான் நற்கதி யடைதற்குக் காரணமான தருமமும் இருந்தால் அவர்களை விளங்கச்செய்யு மெனபதாம்.

'தாமரைப்பன்மை' என்றும் பாடம்; தாமரைகளின் பன்மை, அதாவது, பல தாமரைமலர்கள் என்பது பொருள். தாமரை - ஆகு பெயர். பெரும்பாலும் பயிர் செய்வோர் நிலத்தில் நெல்லையும் கரும் பையுமே பயிர்செய்வது வழக்கம். பெண்மை நலத்துக்கு - பெண்டி ரழகிற்கு எனினுமாம். செல்-வினைத்தொகை. உலகத்து அறம்-உல கத்துக்கு ஏற்ற என நான்கனுருபும்பயனு முடன்தொக்க தொகை யாகவேனும், உலகத்தை யடைவிக்குமென இரண்டனுருபும் பயனு முடன்தொக்க தொகையாகவேனுங் கொள்க. நிலத்துக்கு - குளத் துக்கு - நலத்துக்கு என்பவற்றிற்குப் பதில் நிலத்திற்கு - குளத்தி ற்கு - நலத்திற்கு எனவும் பாடம். தனக்கு அணியென்பதனீற்றில் என்பவென்னும் பயனிலை சேர்க்கப்பட்டது. என்பவென்னும் பய னிலைகள் நான்கிற்கும் தோன்றா வெழுவாயாகிய அறிஞர் என்பது வருவித் துரைக்கப்பட்டது. (கூ)

கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத்தி னாற்பிணிப்பர் மாநாகங்—கொந்தி
யிரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல்.

(ப-ரை.) களிற்றை-யானையை, கந்தின் பிணிப்பர் - (பாகர்கள்) கட்டுத்தறியினாலே தம்வசப்படுத்துவார்; மா நாகம் - சிறந்த சர்ப்

பத்தை, கதம் தவிர - அதன் கோபம் நீங்கும்படி, மந்திரத்தினல்- (மாந்திரியர் தேவதாஸ்தோத்திரமான) மந்திரத்தினல், பிணிப்பர்—; கயத்தை-கீழ்மக்களை, கொந்தி-' அரசர் ஆயுதங்களால் அவருடலைக்) கொத்தி, இரும்பின் - இருப்பு விலங்கால், பிணிப்பர்—; சான்றோரை - (கல்வியறிவு ஒழுக்கங்களால்) நிறைந்தவரை, நயத்தின் பிணித்துவிடல் - (அறிவுடையோர்) தம் இன்சொற்களால் வசப் படுத்திவிடக்கடவர், எ - று.

(வி-ரை.) யானையைக் கட்டுத்தறியிற் பூட்டி யடக்கிச் சுவாதீனஞ் செயவதுபோல் மூடனை விலங்கிடல் சிறையிடல் முதலியவற்றால் அவன் கர்வத்தை அடக்கிச் சுவாதீனஞ் செய்யவேண்டும்; சிறந்த சர்ப்பங்களை மந்திரங்களால் (மறைமொழிகளால்) சுவாதீனஞ் செய்வதுபோல யோக்கியர்களை வணங்கி நயம்பேசி சுவாதீனம் செய்துகொள்ளவேண்டு மென்பதாம்.

இதில் உபமான வாக்கியங்களையும் உபமேய வாக்கியங்களையும் நேர்வரிசையில் வைத்துப் பொருள்கொண்டபடியால் நேர்நிரனிறைப் பொருள்கோள்; 'கதந்தவிர' என்பதை எல்லாவிடத்துங் கூட்டிக்கொள்க. மந்திரம் - மறைமொழி; ''மறைமொழி தானே மந்திர மென்ப" என்பது தொல்காப்பியம் - செய் - கஎக. 'பிணித்துவிடல்'வியங்கோள் வினைமுற்று; அல்-விகுதி. விடு என்பதை 'பிறந்துவிடும்' என்பதற்குரைத்தாங் குரைக்க. கயம்-கஜம் என்னும் வடசொற்றிரிபு. கந்து - கட்டுத்தறி. மந்திரத்தினற் பிணிப்பர் என்றதனால், மாநாகம் நல்ல பாம்பை யுணர்த்திற்று. கொந்தி யென்றது அங்குசத்தாற் கொத்தி யென்றபடி; கொந்துதல் எறிதல்: "கொந்தழல்" என்ப(சிந்-கேம - அஅ) : ஈண்டுச் சுடச்சொல்லுதலின் மேற்று எனினுமாம். இரும்பு - ஆகுபெயர். சான்றோர்-கல்வி கேள்வி அறிவொழுக்கங்களாற் சிறந்தவர். நயம் - தாழவுரைத்தல் (இன்சொல்). (௧௦)

கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை கொல்லாக் கொளல்வேண்டும்—என்றும்
விடல்வேண்டுந் தங்கள் வெகுளி யடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை.

(ப-ரை.) (பிறர்செய்த) கடிய-(ஒருவர் தமக்கு) மற்றவர் செய்த அஞ்சத்தக்க தீச்செயல்களில், கன்றாமை வேண்டும் - வயிரங்கொள் ளாதிருத்தலே தகுதி; பிறர்செய்த நன்றியை-(தமக்குப்)பிறர்செய்த உபகாரத்தை, கொல்லா-சிதைக்காமல், கொளல்வேண்டும் - மறவா திருத்தலே தகுதி; என்றும் - (பிறர்) பொறுக்கக்கூடாத தீங்கு செய்த காலத்தும், தங்கள் வெகுளி - தம்மிடத்துண்டாகும் கோபத் தை, விடல்வேண்டும்-ஒழித்தலே தகுதி; ஆக்கம் - (தமது)செல்வத் தை, சிதைக்கும் வினை-கெடுக்குந் தொழிலை, அடல்வேண்டும்-கெடு த்தலே தகுதி, எ - று.

(வி-ரை.) பிறர் தனக்குச் செய்த தீமைக்குக் கோபியாமையும், அவர் செய்த நன்றியை விசேஷமாகக்கொண்டு பாராட்டுதலும்,யார் மாட்டும் கோபங்கொள்ளாமலிருப்பதும், தன் நன்மையைக் கெடுக் குங் காரியத்தை விடுவதும் அவசியமான காரியங்கள் என்பதாம்.

கன்றாமை-எதிர்மறைத் தொழிற்பெயர். 'வேண்டும்' என்பது ஒருவகை வியங்கோள்வினை, தொழிற்பெயர் எனினுமாம். கடிய இது பலவின்பால் வினையாலணையும்பெயர், நான்காம் வேற்றுமைத் தொகை, எதுப்பொருள்; மூன்றாம் வேற்றுமைத்தொகை யெனி னும் பொருந்தும். 'நன்றியை நன்றாக் கொளல்வேண்டும்' என்றும் பாடம் - இதற்கு: (பிறர் தனக்குச் செய்த அற்ப) உபகாரங்களையும் விசேஷ வுபகாரமாக மனதிற்கொள்ளவேண்டும் எனினுமாம். 'தன் கண்' என்றும் பாடம், ஆக்கம் சிதைக்கும் வினை - (தனக்கு) மேன்

மையைக் கெடுக்கும்படியான செய்கை எனினுமமையும். கடி - அச்சம். (கக)

பல்லினா னோய்செய்யும் பாம்பெல்லாங் கொல்லேறு
கோட்டானோய் செய்யுங் குறித்தாரை யூடி
முகத்தானோய் செய்வர் மகளிர் முனிவர்
தவத்தாற் றருகுவர் நோய்.

(ப-ரை.) பாம்பு எல்லாம் - எல்லாச்சாதிப் பாம்புகளும், பல்லினால்-(தீங்கு செய்த பிறரை) விஷப்பல்லினால், நோய் செய்யும்-துன்பஞ்செய்யும்; கொல் ஏறு - கொல்லுமியல்புடைய எருதுகள், குறித்தாரை - (நோய் செய்ய) குறிக்கப்பட்டவரை, கோட்டால் - தம் கொம்புகளால், நோய்செய்யும்—; மகளிர் - பெண்கள், ஊடி - பிணங்கி, முகத்தால்-(தம் கணவரைக் கோட்டமுள்ள தமது) முகக்குறியால், நோய் செய்வர் - துன்பஞ் செய்வர்; முனிவர் - முனிவர்கள், தவத்தால் - (தங்களுடைய) தவத்தின் வல்லமையால், நோய் தருகுவர்-(தம்மை அவமதித்தவருக்குத்)துன்பத்தைக் கொடுப்பார், எ-று

(வி-ரை.) மகிமையால் சொன்னபயன்படச் சபிப்பர் என்பதாம். பாம்பும் எருதும், பல்லும் கொம்புமாகிய அவயவங்களைக் கருவியாகக்கொண்டு நோய்செய்கின்றன; அதிலுமேலாய்ப் பெண்கள் முகத்தி லொன்றிநின்ற செய்கையாலேயே நோய் செய்கின்றனர்; முனிவரோ அங்ஙனமு மின்றித் தவமகிமையாலேயே நோய் செய்கின்றனர் என்பதாம்.

'கொல்களிறு' என்றும் பாடம்; இதற்கு: கொல்லுமியல்புடைய யானை என்பது பொருள். தருகுவர்—தா - பகுதி, குறுகல், ரு-விரித்தல், கு - சாரியை, வ் - இடைநிலை, அர் - விகுதி, சாரியை விகற்பமாதலின் தருவர் எனவும் வரும். 'தருக்குவர் நோய்' என்றும் பாடம்;

இதற்கு: (தம்மை யிகழ்ந்தார்க்குத்) துன்பத்தை மிகுவிப்பர் என்பது பொருள். தருக்கும் செருக்கும் மிகுதியையுங் குறித்துவரும்; “மிகுதியான் மிக்கவை செய்தாரை” (திருக்குறள் - ௧௫௮), “கவறுங் கழகமுங் கையுந் தருக்கி” (ஷை-௯௩௫), “மிகுதி யிறுவாய செல்வங்கள்” (நான்மணி - ௧௭.) என்பவற்றுரைகளான் உய்த்துணர்க. ()

பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரிற்—பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரிற்
[illegible] றீர்தலிற் றீப்புகுத னன்று.

(ப-ரை.) பண் அமையா - (நல்ல நரம்பினால்) கட்டுதல் அமையாத, அல்லது நல்லராகங்களுக்கு இசையாத, யாழின் - யாழிசையினும், பறை - (காதுக்கு வெறுப்பான ஓசையுள்ள) பறை (தம்பட்ட) ஓசை, நன்று - நன்மையுடையது; பீடு இலா-பெருங்குணமில்லாத, மாந்தரின்-ஆடவர் தன்மையினும், நிறை நின்ற - மனத்தைக் கற்பு வழியில் நிறுத்தலமைந்த, பெண் - பெண்தன்மை, நன்று—; பண் அழிந்து - குணம் அழியும்படி, ஆர்தலின் - உண்ணுதலினும், பசித்தல்-பசியால் வருந்துதல், நன்று—; பசைந்தாரின்-உள்ளன்பு உடையாரினின்றும், தீர்தலின் - நீங்கி உயிர்வாழ்வதினும், தீ புகுதல் நன்று - தீயில் நுழைதல் நன்மையுடையது, எ - று.

(வி-ரை.)இசைநன்றுயிராத வீணையைக் கேட்பதைக்காட்டிலும் தம்பட்டவோசை கேட்கலாம் என்றது, வீணைக்கு உரியகுணம் இன்மையாலும் தம்பட்டத்துக்கு உரியகுணம் உண்மையாலுமென்க. இது உபமானம். இப்படியே வீரதீரமில்லாத ஆண்மக்களைக்காட்டிலும் தமக்கு உரிய கற்புநிலையில் நிற்கும் பெண்மக்கள் சிறந்தோராவர். எந்த அன்னத்தைத் தின்பதினால் தன் ஒழுக்கங்கெட்டுத் தாழ்மை யடைவாரோ அதைத் தின்பதிலும் பசித்திருப்பதில் தாழ்

மை வாராதாகையால் அது மேன்மை; நல்ல அன்புள்ள சிநேகிதரை விட்டு நீங்கினால் தகுந்த துணையில்லாமைபற்றிப் பல துன்பங்களால் வருந்த நேரிடுமாகையால் தீயிற்குதித்துச் சாதல் நலமாம் என்றபடி.

'யாழின்' முதலியவற்றுள் ஐந்தனுருபு எல்லைப்பொருளில் வந்தது; நீக்கப்பொருள் என்றது பொருந்தாது. 'பசைந்தாரில்' இது நீக்கம். பண் அழிந்த எனப்பிரித்துப் பதனழிந்த உணவுகளை என்றுரைப்பினுமாம். அழிய என்னும் எச்சம் அழிந்து எனத் திரிந்து நின்றது. இதனால் அழிதல் நிச்சயம் என்பது பெறப்பட்டது. (கரு)

வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழா
மின்சொற் குழியி னினிதெழூஉம்—வன்சொற்
கரவெழூஉங் கண்ணில் குழியி னிரவெழூஉ
மின்மைக் குழியில் விரைந்து.

(ப-ரை) வண்மை - ஈகையாகிய பயிர், வளப்பாத்தியுள் - (நல்லோருடைய) செல்வமாகிய பாத்தியில், வளரும் - விருத்தியாகும்; கிளைக்குழாம்-சுற்றத்தின் கூட்டமாகிய பயிர், இன்சொல் குழியில் - மதுரமான சொல்லாகிய பாத்தியில், இனிது - (இடையூறில்லாமல்) நன்றாக, எழூஉம் - வளரும்; வன் சொல் கரவு - கடினச் சொற்களோடு கூடிய லோபகுணமானது, கண் இல் குழியில்-கண்ணோட்டமின்மையாகிய விளைநிலத்தில், எழூஉம்—; இரவு - யாசித்தலாகிய பயிர், இன்மைக் குழியில் - வறுமையாகிய பாத்தியில், விரைந்து எழூஉம் - விரைவாக வளரும், எ - று.

(வி-ரை.) செல்வ மிகுந்திருந்தால் இஷ்டமானமட்டுங் கொடுக்கக்கூடும், அப்படியில்லாதவன் கொடுக்கத்தலைப்படுதல் கூடாது; இனிய சொற்களைப் பேசி யுபசரித்தால் சுற்றத்தார் சேருவார்களாதலால் அப்படிச் செய்யவேண்டும்; தாட்சிணிய மில்லாதவன் கடின

மான சொற்களைப் பேசி நீக்குவதேயன்றி யாருக்குமொன்றுங் கொடான்; தரித்திரம் மிகுந்திருப்பவன் இரப்பது குற்றமன்று என்பதாம்.

'வளப்பாத்தி' இருபெயரொட்டுப் பண்புத்தொகை. எழூஉம் என்பது இன்னிசை யளபெடை (நன் - எழுத்து-கூ-ருக). 'வன் சொற்கரவு' என்பதற்குப் பதில் 'வன்சொலாம்கா' என்றும் பாடம்; இதற்கு: கடுஞ்சொல்லாகிய சோலை என்பது பொருள். குழியில் என்பதற்குப் பதில் குழியுள் என்றும் பாடம். 'இல்குழி' (நன்-மெய்யீறு-கூ-ந0) விதியால் இயல்பாயிற்று, பண்புத்தொகை. (கசு)

இன்றுமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

(ப-ரை.) இன்றுமை வேண்டின் - (ஒருவன் தனக்கு) இழிவை விரும்புவானானால், இரவு எழுக - (மானங்கெடவரும்) யாசித்தலை மேற்கொண்டு தோன்றக்கடவன்; இந்நிலத்து - இவ்வுலகில்கண், மன்னுதல் வேண்டின்-என்றும் தான் நிலைபெற்றிருத்தலை விரும்புவானானால், இசை நடுக - புகழை நாட்டக்கடவன்; தன்னொடு செல்வது - (மரணமடைந்து போங்காலத்து மறுமைக்குத்) தன்னுடனே செல்லுந் துணையாவதனை, வேண்டின் - விரும்புவானானால், அறம் செய்க - தருமஞ்செய்யக்கடவன்; வெல்வது வேண்டின் - (தீயசிந்தைகளை) வெல்லுங் கருவியை விரும்புவானானால், வெகுளி விடல் - சினத்தை விடக்கடவன், எ - று.

(வி-ரை.) இரப்பது மிகவும் பிரியமாகாத காரியம்; கீர்த்தியிலையாயிருந்தால் அவனிறந்திருந்தும் உயிரோடிருப்பவன் போலாம்; செல்வமுதலாயவொன்றும் பரலோகத்துக்கு உதவியன்று, தருமமே

யுதவி; கோபமில்லாதவனுக்கு எவனும் பகையாகமாட்டானுகையால் அவன் எல்லாரையும் ஜயித்தவன்போலாம் என்பதாம்.

வேண்டின் என்பது பொருணடையில் ஓரழகே யல்லது வேண்டாவிட்டால் அப்படிச் செய்யற்க என்று கூறியதன்று. இந் நிலத்தில் என்றும் பாடம். வெல்வது வேண்டின் என்பதற்கு (யாவரோடும்) ஜயத்தை விரும்புவானுனல் என்று பொருள் கூறினு மாம். (கரு)

கடற்குட்டம் போழ்வர் சலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும்.

(ப-ரை.) கலவர்-மரக்கலமுடையார், கடல் - கடலினது, குட்டம் - ஆழமாகிய நீரை, போழ்வார் - ஊடறுத்துச்செல்வர் (ஜயிப்பார்கள்); பாய் மா உடையான் - (போர்முகத்தில் அஞ்சாமல்) பாயுமியல்புள்ள (நல்ல) குதிரையையுடையவீரன், படைக்குட்டம்-(பகைவரது) சேனையாகிய கடற்கரையை, உடைக்கிற்கும் - உடைக்கமாட்டுவான்; தன் உடையான் - (ஐம்புலன்களிற் செல்லவிடாமல்) மனத்தைத் தன்வசப்படுத்தினவன், தோம் இல் - குற்றமில்லாத, தவக்குட்டம்-தவமாகிய கடலை, நீந்தும் - நீந்துவான்; கற்றான் - (நூல்களை ஐயமறக்) கற்றுணர்ந்தவன், அவைக்குட்டம் - (கற்றவர்கூடிய) சபையாகிய கடலை, கடந்துவிடும் - தாண்டி (ஜயித்து) விடுவான், எ - று.

(வி-ரை.) கப்பலுள்ளவற்குக் கடலைக் கடப்பதும், நல்ல குதிரைச்சேனை யுள்ளவனுக்குச் சத்துருவின் படையைக் கடப்பதும் சாதாரணமாவதுபோல், இந்திரிய வசப்படாதவனுக்குத் தவத்தை நிறைவேற்றுவதும், கல்வியுடையானுக்குச் சபையிற் சென்று மேன்மையடைவதும் சாதாரண மென்பதாம்.

கலவர்—கலம் - பகுதி, அர் - விகுதி, மகரங்கெட்டு வகரவுடம்படுமெய் தோன்றியது. பாய்மா என்பது பிறகுறிப்பிலொன்று. உடைக்கிற்கும்—உடை - பகுதி, கில் - ஆற்றலைக் காட்டவேசோர் விகுதி, கு - சாரியை, உம் - விகுதி. (கரு)

பொய்த்த விறுவாய நட்புக்கண் மெய்த்தாக
மூத்த லிறுவாய்த் திளநலம்—தூக்கின்
மிகுதி யிறுவாய செல்வங்க டத்தந்
தகுதி யிறுவாய்த் துயிர்.

(ப-ரை.) நட்பு - நட்புக்கள், பொய்த்தல் - பொய்யாக ஒழுகுதலாகிய (வஞ்சித்தலாகிய), இறுவாய - இறுதியுடையன ; இளநலம்- இளமைப்பருவத்தினழகு, கண் மெய்த்து ஆக - (காண்போர்)கண்களுக்கு மெய்ம்மையுடையதாக, மூத்தல் இறுவாய்த்து - மூப்பாகிய இறுதியையுடையது; செல்வங்கள் - சம்பத்துகள், தூக்குஇல்-(இம்மை மறுமைப் பயன்களை) ஆராய்தலில்லாத,மிகுதி இறுவாய-வேண்டாத செய்கையாகிய இறுதியையுடையன; உயிர் - உயிர்வாழ்தலானது, தத்தம் - தங்கள் தங்களது இருவினைக்கும், தகுதி இறுவாய்த்து - தகுந்த வாழ்நாளாகிய இறுதியையுடையது, எ - று.

(வி-ரை.) சினேகிதனோடு பொய்பேசினால் சினேகம் போய்விடும்; அதிக ஜம்பங்காட்டி நடந்தால் செல்வம் போய்விடும்; யோக்கியதை போய்விட்டால் பிழைத்திருப்பதும் போய்விட்டதுபோலாம்; இவையெல்லாம் எதைப்போலென்றால் வயது முதிர்ந்தால் யவ்வனத்தினு லுண்டாகிய அழகு முதலியவை கெடுவதுபோலென்பதாம்.

இறுவாய இறு-முதனிலைத் தொழிற்பெயர், ஆ-என்னும் பகுதியோடு யகர இடைநிலையும், அகர விகுதியும் புணர்ந்து வந்த ஆய

என்பதோடு சேர்ந்து இறுதியுடையன என்னும் பொருளைத்தந்தது; பலவின்பால் குறிப்பு வினைமுற்று. இறுவாய்த்து என்பது ஒருமை முற்று. து-ஒன்றன்பால் விகுதி. இறுவாய்-பகுதி, து அ-விகுதிகள் என்பது நேர்வழி. மூத்தல்—மூ - பகுதி, தல் - தொழிற்பெயர் விகுதி. மெய்த்து—மெய் - பண்படி, பகுதி, து - ஒன்றன்விகுதி, மெய்யையுடையது என்பது பொருள். மூன்றிடத்தும் தகரம் சந்தி. 'இளநலம்' இளமையில் மை கெட்டது "ஈறுபோதல்"; இளமையாகிய நலமென்னுமமையும். மிகுதி, தகுதி - தொழிற்பெயர்கள். இளைநலம் என்றும் பாடம். தகுதி இறுவாய்த்து என்பதற்குக் குணத்தையிறுதியாகவுடையது என்று பொருள் கூறினுமாம். நட்புக்கண் என்பதிலுள்ள கண் என்பதை மெய்த்தாக என்பதனோடு சேர்க்காமல் நட்புக்கள் என்று ஒரே பதமாகக்கொண்டு சினேகங்கள் என்றும் பொருள்கொள்ளலாம். தூக்கின் என்பதை ஒரேபதமாகக்கொண்டு ஆராயுமிடத்து என்றும் பொருள் கூறலமையும். 'செல்வங்கள் மிகுதி இறுவாய' என்னும் தொடருக்குச் சம்பத்துகள் வரம்பு கடத்தலாகிய அல்லது செருக்கினை யிறுதியாக வுடையன என்றுரைப்பினுமாம். (கஎ)

மனைக்காக்க மாண்ட மகளி ரொருவன்
வினைக்காகஞ் செவ்விய னாதல்—சினைச்செவ்வேல்
நாட்டாக்க நல்லனிவ் வேந்தென்றல் கேட்டாக்கங்
கேளி ரொரீஇ விடல்.

(ப-ரை.) மாண்ட மகளிர்-நற்குண நற்செய்கையுடைய பெண்டிரிருத்தல், மனைக்கு - (கொண்டவனுடைய) மனைக்கு, ஆக்கம் - உயர்ச்சியைத் தருவதாகும்; சினம் - கோபமமைந்த, செம் வேல் - (பகைவருதிரத்தில் தோய்ந்ததினால்) செந்நிறமாகிய படைத்தொழிலில், ஒருவன் செவ்வியன் ஆதல் - ஒருவன் தேர்ச்சியுடையவனாகுதல், வினைக்கு - போருக்கு, ஆக்கம் - உயர்வைத்தருவதாகும்; இவ்வேந்து - இவ்வரசன், நல்லன் என்றல் - நல்லவனென்று (குடிகளால்) சொல்லப்படுதல், நாடு ஆக்கம் - (அவனுடைய) நாட்டிக்கு உயர்

வைத் தருவதாகும்; கேளிர் - சுற்றத்தாரை, ஒரீஇ விடல் - (ஒருவன்) நீக்கிவிடுதல், கேடு ஆக்கம் - (அவனுக்கு வரும்) கேட்டுக்கு உயர்வைத்தரும் (மிக்க கேட்டை விளைக்கும்), எ - று.

(வி-ரை.) யோக்கியமான மனைவியிருப்பது குடித்தனத்துக்குச் செல்வமேயாம்; ஒருவன் நற்குணமுடையவனாயிருந்தால் அவன் செய்யுங் காரியங்கள் செல்வத்திற்குக் காரணமாம்; அரசன் நல்லவன் என்ற சொற்பெறுவது ஒரு ராச்சியத்திற்குச் செல்வம் வளரக் காரணமாம்; இஷ்டபந்துக்களை நீக்கி விடுவதனால் கேடுவரும் என்பதாம்.

கேட்டின் விளைவை ஆக்கம் என்றது எதிர்மறையிலக்கணை, இதுவோரழகு. மாண்ட—மாண் - பகுதி, பண்படி, ட் - இடைநிலை, அ - பெயரெச்சவிகுதி, மாள் என்னும் வினைப்பகுதி மேலும் இப்படியே வரும். செவ்வியன் - செம்மையில் மை கெட்டு மகரம் வகரமாய் இகரச்சாரியையோடு அன் விகுதி பெற்று வகரம் இரட்டி வந்தது. சினச்செவ்வேல் - ஈரடை யடுத்த வேல் என்பதின்மேல் பிறந்த அன்மொழித்தொகை. 'கேடு' கெடு என்னு முதனிலை நீண்டு தொழிற்பெயராயிற்று. ஒருவன் வினைக்கு செவ்வியனாதல் ஆக்கம் என்பதுவரையில் ஒரு தொடராகக்கொண்டு, ஒருவன் தான் செய்யும் காரியத்திற்குக் குணமுள்ளவனாயிருத்தல் உயர்வைத் தருவதாகும் என்று பொருள் கூறினுமாம். 'சினச்செவ்வேல் நாடு' என்னும் தொடருக்கு, உக்கிரமாகிய செவ்விய வேலாயுதமுள்ள அரசனுடைய இராச்சியத்திற்கு என்று பொருள் கூறினுமமையும். கேளிர் - சினேகிதர் என்றும் பொருள் கூறலாம். (கஅ)

பெற்றா னதிர்ப்பிற் பிணையன்னா ளதிர்க்கும்
கற்றா னதிர்ப்பிற் பொருளதிர்க்கும்—பாரிய
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும் பண்ணதிர்
பாட லதிர்ந்து விடும். [ப்பின்

(ப-ரை.) பெற்றான் - கொண்டகணவன், அதிர்ப்பின் - (இல்லறத்துக்குரிய ஒழுக்கத்தினின்று) கலங்குவானாயின், பிணை அன்னாள் - பெண்மானை ஒத்த அவன் மனையாளும் (அவன் வழியினளாகலான்), அதிர்க்கும் - அவ்வொழுக்கத்தினின்று கலங்குவாள்; கற்றான் - (நூல்களைக்) கற்றுணர்ந்தவன், அதிர்ப்பின் - அறிவுகலங்குவானாயின், பொருள் அதிர்க்கும் - (அந்நூலா லுணர்த்தப்பட்ட) பொருள்களும் கலங்கும்; பாரிய மண் அதிர்ப்பின் - தன் பெரிய நாட்டிலுள்ளார் (தன் ஆளுகைக்குள் அமையாமல்) கலங்குவாரானால், மன்னவன் கோல் அதிர்க்கும் - அரசனுடைய ஆளுமுறையுங் கலங்கும்; பண் அதிர்ப்பின் - யாழின் கட்டுநிலை கலங்குமானால், பாடல் அதிர்ந்துவிடும் - பாடுதற்றொழிலும் கலங்கிவிடும், எ - று.

(வி-ரை.) புருஷன் தவறாய் நடந்தால் அதைக்கண்டு பெண் சாதியும் தவறி நடப்பாளாதலால் புருஷன் தவறாமல் நடக்கவேண்டும்; வித்துவான் மதிமயங்கினால் நூற்பொருள் தாறுமாறாய்ப் போமாதலால் அவன் மதிமயக்கமின்றித் தெளிந்து பொருள்கூறவேண்டும்; நாட்டிலுள்ளவர்கள் அரசனால் கொடுமைசெய்யப்பட்டு மனநொந்தால் அவன் செங்கோல் நிலைப்படாதாகையால் அரசன் குடிகள் சௌக்கியத்தையே முக்கியமா யோசிக்கவேண்டும்; இவையெல்லாம், வீணையின் நரம்புகள் ஒழுங்காய்த் திருத்திவைக்காமல் வாசித்தால் இசைகள் சிதைந்துபோவதுபோலாம் என்றபடி.

அதிர்ப்பின் - எதிர்காலவினையெச்சம், அதிர் - பகுதி, இன் - விகுதி, இதுவே காலங்காட்டும், பகரம் எழுத்துப்பேறு, இடைநிலையன்று; 'அதிரின்' எனவும் வருதலாலெனை அறிக. பெற்றான் - கொழுநன்; "பெற்றாற் பிழையாத பெண்டிரும்" என்றார் "மாநிலந்தோன்றாமை" என்னும் பரிபாடலினும். தான் என்பதை அதிர்க்கும் என்பதனோடு சேர்த்துத் தானும் தன்னிலையில் கலங்குவாள் என்று பொருள்கூறினுமாம். பாரிய என்பதற்குப் பதில் பற்றிய என்றும்

பாடம். பற்றிய மண் அதிர்ப்பின் கோல் அதிர்க்கும் என்னுந் தொடருக்குத் தான் கைப்பற்றி யாளுகிற தேசமானது கலங்குமாயின் செங்கோலும் கலங்கும் என்றும் கூறலாம். (கக)

மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை—யிருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

(ப-ரை.) மனைக்கு பாழ் - வீட்டுக்குப் பொலிவின்மையாவது, வாள் நுதல் இன்மை - (நற்குண நற்செய்கையுடைய) ஒளிபொருந்திய நெற்றியுள்ள மனையாளையுடையதாயிராமை; தான் செல்லும திசைக்கு பாழ் - (ஒருவன்) தான் சென்ற இடத்துக்குப் பொலிவின்மையாவது, நட்டோரை இன்மை - (தன்னுடன்) நட்புக்கொண்டவரை உடையனுயிராமை; இருந்த அவைக்கு பாழ் - (பலர்) கூடின சபைக்குப் பொலிவின்மையாவது, மூத்தோரை இன்மை - (கல்வியறிவு கேள்விகளால்) முதிர்ந்தவரை உடையதாயிராமை; தனக்கு பாழ் - தனக்குப் பொலிவின்மையாவது, கற்று அறிவு இல்லா உடம்பு - (பல நூல்களையும்) கற்று அறிதலில்லாத உடம்பினனுயிருத்தல், எ - று.

(வி-ரை.) 'வாணுதல்' என்பது இங்கு விவேகத்துக்குங் குறிப்பாதலால் நல்ல அறிவுடைய பெண் இல்லையாயின் இல்லறம் பயன்படாது; தான்போகிற விடத்தில் தனக்கு ஒருவர் துணைசெய்பவரில்லையாயின் அவ்விடத்துச் சென்ற காரியம் கைகூடாது; வயதும் விவேகமும் முதிர்ந்தவரில்லாத சபையில் யாதொரு காரியமும் நிறைவேறாது; படிப்பில்லாமல் உடம்பைச் சுமந்துகொண்டிருப்பது பாரமேயன்றிப் பயனில்லையாம் என்றபடி.

'வாள்நுதல்' என்பதில் வருமொழி நகரம் ணகரமாகி (நன் - மெய்யீறு-கூ - கூச), ளகரம் கெட்டது (ஷை கூ-உசு) அன்மொழித்

தொகை. நட்டோர்-வினையாலணையும் பெயர்; நடு-பகுதி, டகரமிரட்டிக் காலங்காட்டியது, ஆர் விகுதியின் ஆகாரம் ஓகாரமாயிற்று (பொது.சூ-உ). கற்றதனாலாகிய அறிவு கற்றறிவு, பெயரெச்சத்தின் ஈறுதொக்கது; கற்று என வினையெச்சமாகவே கொண்டால் கற்றும் விவேகமடையாத எனக் கருத்துக்கொள்க. (உஉ)

மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்கும்
கூடார்கட் கூடி விடின்.

(ப-ரை.) ஒற்றுமை இன்மை - (தகுந்தவரோடு) ஒருமைப்பாடில்லாமையானது, மொய்-தன்வலியை (அல்லது ஒருகூட்டத்தின்) பலத்தை, சிதைக்கும்-அழிக்கும்; ஒருவனை பொன்போலும் மேனியை - (தன்னைக்கூறிய) ஒருவனது பொன்னை ஒக்கும் (உடலினது) நிறத்தை, பொய்-(அவன் பேசும்) பொய்யானது, சிதைக்கும்-அழிக்கும்; பெய்த கலம்-பாலைவார்த்த (கெட்ட) பாத்திரமானது, பாலின் சுவையை - பாலினது மதுரத்தை, சிதைக்கும்—; கூடார்கண் - நட்புச்செய்யத் தகாதவரிடத்து அல்லது தனக்கு இனமல்லாதாரிடத்து, கூடிவிடின்-நட்புச் செய்துவிட்டால், குலம் சிதைக்கும் - (அந்நட்பானது) தன்குலத்தினது பெருமையை அழிக்கும், எ - று.

(வி-ரை) ஒரு பயனைப்பற்றிக் கூடியிருப்பவர்களில் அல்லது ஒரு குடும்பத்தில் ஐக்கிய மில்லாமற்போனால் அக்கூட்டத்தின் காரியம் கைகூடாது; ஒருவன் அழகாயிருந்தும் பொய் பேசுகிறவனாயிருந்தால் அவனைப்பார்க்க உலகத்தார் அருவருப்பார்கள்; ஈயப்பாத்திரம் எண்ணெய்ப்பாத்திரம் முதலியவற்றுள் ஊற்றப்பட்ட பாலின் மதுரம் அப்பாத்திரச் சேர்க்கையாற் கெட்டுப்போவதுபோல், தகாதவரோடு கூடுவதினால் குலத்தின் மேன்மை கெட்டுப்போம் என்றபடி.

ஒற்றுமையின்மை - எழுவாய்த்தொடர். ஒற்றுமை - பண்புப் பெயர் என்னவேண்டும். ஒன்று என்பது வலிந்து மை விகுதிபெற்ற தொழிற்பெயர் என்னலாம். மை விகுதி உடன்பாட்டுத் தொழிற் பெயருக்கு வருவது கண்டிலம். 'ஒருவனை' ஐ யுருபை அது வுருபாக் கொள்க. (பெயர்-கு-நஅ). சிதைக்கும் என்பது இரண்டு செயப்படு பொருளுள்ளதன்று. பொய்சிதைக்கும்—"பொய்த்தபிற் றன்னெஞ்சே தன்னைச் சுடும்" ஆதலால் இவ்வாறு கூறினர். (உ௬)

புகழ்செய்யும் பொய்யா விளக்க மிகழ்ந்தொருவர்
பேணமை செய்வது பேதைமை—காணக்
குருடனாச் செய்வது மம்ம ரிருடீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு.

(ப-ரை.) பொய்யா விளக்கம்-பொய் சொல்லாமையாகிய விளக்கமானது, புகழ் செய்யும் - புகழை உண்டாக்கும்; பேதைமை - யாதும் அறியாமை, ஒருவர் பேணது - பெரியாரொருவரை (துணையாக) விரும்பாமல், இகழ்ந்து - (அறத்தினெல்லை) கடந்து, செய்வது-(தீங்கினை) செய்யவல்லது; மம்மர் - (கல்லாமையால் அல்லது செல்வமுதலியவற்றால் வரும்) மயக்கமானது, காண - (தன்னையுடையவர்களைச் செல்லும் வழியினியல்பை) அறியாத, குருடன் ஆ செய்வது - (ஒருவனைக்) குருடனாகச் செய்யவல்லது; கற்பு - கல்வியறிவு, இருள் தீர்ந்த - மயக்கத்தினின்று நீங்கிய, கண்ணர் ஆ செய்வது - கண்களுடையராகச் செய்யவல்லது, எ - று.

வி-ரை. சத்தியம் பேசுதலே ஒருவனுக்குக் கீர்த்தியாம்; புத்தியில்லாமற்போனால் எதையும் அலக்ஷியஞ்செய்து காத்துக்கொள்ள மாட்டான்; குடித்தல் முதலானவற்றால் மயங்கினவனுக்கு ஒன்றுந் தெரியாது; கல்வி இந்தக் கண்ணால் காணக் கூடாததையும் காணும் படியான கண்போலாம் என்பதாம்.

பொய்யாமையாகிய விளக்கம் பொய்யாவிளக்கம்,மை-கெட்டது. புகழப்படுவது புகழ், செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்டது. கற்பு—தொழிற்பெயர்; கல்-பகுதி, பு - விகுதி. கண்ணர்—வினையடியாகப்பிறந்த குறிப்புமுற்று; ஆ-க என்னும் ஈறுகெட்ட வினையெச்சம்இங்குவினையுரியாய் நின்றது. இகழ்ந்தொருவன் பேணாமை செய்வதுஎன்றும் பாடம். ஒருவன் என்பதைப் புகழ் என்னும்பதத்திற்கு முன்வைத்தும் பொருள் கூறலாம். பேதைமை இகழ்ந்து பேணாமை செய்யும் என்னுந் தொடருக்கு மூடத்தனம் தூஷித்து(ஒன்றையும்) பாதுகாவாமையைச் செய்யும் என்று பொருளுரைப்பினுமாம். குருடராச்செய்வது என்றும் பாடம். பொய்யாவிளக்கம்—"பொய்யாமையன்ன புகழில்லை", "பொய்யா விளக்கே விளக்கு" எனத் திருக்குறளிற் கூறியவாறு காண்க. பேணாமைசெய்வது—"யாதொன்றும் பேணாமை பேதை தொழில்" என்பது (திருக்குறள்-௮௩௩.) (௨௪)

மலைப்பினும் வாரணந் தாங்குங் குழவி
யலைப்பினு மன்னையென் றோடும்—சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினைசெய்யா ரொட்டா
ருடனுறையுங் காலமு மில்.

(ப-ரை.) மலைப்பினும் - (தன்னோடு பாகன்) போர்செய்தாலும், வாரணம் தாங்கும்-யானை (அவனைத்) தாங்காநிற்கும்; அலைப்பினும் - (தன்னைத்தாய்) அடித்து வருத்தினாலும், குழவி-பிள்ளை, அன்னை என்று ஓடும் - தாயே என்று சொல்லிக்கொண்டு (அவள் பின்னே) ஓடும்; நட்டார் - நட்புக்கொண்டவர், சிலைப்பினும் - (ஒரு பொருளைப் பற்றித் தம்மில் கோபங்கொண்டு) உரத்துப்பேசினும்,நடுங்கும் வினை செய்யார்-(ஒருவருக்கு ஒருவர்) நடுங்குதற்கு ஏதுவாகிய தொழிலைச் செய்யார்; ஒட்டாரும் - பகைவரும், உடன் உறையும் காலமும் - (ஒருவரை ஒருவர் மனத்தால்) பிரியாமல் நட்புக்கொள்ளும்படியான காலமும், இல் - இல்லையாம், எ - று.

(வி-உரை.) 'ஒட்டார் உடனுறையுங் காலமும் இல்' எனவுமுரைக்கலாம். 'மலைப்பினும் வாரணந்தாங்கும்' என்பது பலவானை ஒருவன் துணைப்பற்றினால் அந்தப் பலவான் தனக்குத் துன்பம் நேரிட்டிருக்கையிலும் அடுத்தவனைக் காப்பாற்றுவான் என்பதைத் தெரிவிக்கின்றது. 'குழவி அலைப்பினும் அன்னே என்றோடும்' என்பது தன்னை அன்போடு காப்பாற்றுகிறவர் ஒருகால் கோபித்தாலும் காப்பாற்றப்படுகிறவர் அவரை நேசித்தே நிற்கவேண்டும் என்றதைத் தெரிவிக்கின்றது. இப்படிச்சொல்வது பிறிதுமொழிதல் என்னுமலங்காரம். சினேகிதர் துன்பஞ்செய்யார், சினேககுணமில்லாதவர் ஒருவரோடுகூடி வாழமாட்டார் என்பது மற்ற வாக்கியங்களின் கருத்து; அல்லது இதனை 'சிலைப்பினு நட்டார் நடுங்கும் வினைசெய்யார்' என்பதற்கு உபமானமாகவுங் கொள்ளலாம். 'மலைப்பினும்' என்றதற்கு மேலேறியிருக்கிற பாகன் தன்னை வருத்தினாலும் என்று பொருளுரைத்தால், மேலான திறமுடையவன் பிறனால் தனக்கு வருத்தமுண்டானாலும் தான் அவனுக்குத் துணையாகவே நிற்பான் எனக் கருத்துக்கொள்க. குழவி—குழமை(இளமை)பகுதி, இ-உடைமைப்பொருள்விகுதி. அன்னை-அண்மைவிளியாதலின் இயல்பாய் நின்றது (பெயர்-௬-௩௬). அன்னாய் என்றும் அன்னையென்றும் பாடமோதலாம். "தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட், டன்னா யெனனுங் குழவி" என்றார் குறுந்தொகையினும் (௩௯௭) காலமும் என்பதில் உம்மை சிறப்புப்பொருளில் வந்து அக்காலத்தின் அருமையைக் குறிக்கின்றது. (௨௫)

நகைநல னட்டார்க ணந்துஞ் சிறந்த
அவைநல மன்பின் விளங்கும்—விசைமாண்ட
தேர்நலன் பாகனாற் பாடெய்து மூர்நலன்
உள்ளானா லுள்ளப் படும்.

(ப-உரை) நகை நலம்-முகமலர்ச்சியினது அல்லது சினேகத்தினது நன்மை, நட்டார்கண்-நட்புக்கொண்டவர்களுக்குள், நந்தும் சிறக்கும்; சிறந்த அவைநலம்-(கற்றறிந்தவர் கூடியதனால்) சிறந்த

அன்பின் விளங்கும் - (அக்கற்றவர்கள் ஒருவர்பால் ஒருவர் வைத்த அல்லது வருபவரிடத்து) அன்பினாலே விளங்கும்; விசைமாண்ட - விரைந்தோடுதல் மிகுந்த, தேர் நலன்-தேரினது நன்மை, பாகனால் - நடத்துந் தேர்ச்சியுள்ள சாரதியினால், பாடு எய்தும் - பெருமையடையும்; ஊர் நலன் - ஓர் நாட்டினது நன்மை, உள்ளானால்-உடைய அரசனால், உள்ளப்படும் - நன்குமதிக்கப்படும், எ - று.

(வி-ரை) சிநேகத்தினாலாகிய நன்மை சிநேகித்தவர் பரிபாலிப்பதனால் விர்த்தியாகும்; ஒரு சபையாருடைய சற்குணம் அச்சபைக்குவருகிறவரை ஆதரிப்பதனால் விளங்கும்;தேர் நன்றாயோடுந் திறம் அதனைச் செலுத்தும் பாகனுடைய வல்லமையால் மேம்படும்; ஒரு ஊர் நல்லதென்பது அவ்வூரை ஆளும் அரசனாலறிந்து கொள்ளலாம் என்பதாம்.

'நசை நலன்' என்றும் பாடம். இதற்கு: சிநேகத்தினது நன்மையென்பது பொருள். 'உள்ளானானுள்ளப்படும்' என்றும் பாடம். இதற்கு: அவ்வூரிலிருக்கிறவன் அல்லது அவ்வூர்க்கு முதன்மையுடையவன் நன்மையானே நிலைக்கப்படும் என்றுரைப்பினுமமையும். நலன் என்பதற்குப் பதில் நலம் என்றும் பாடம். நசை-முதனிலைத் தொழிற்பெயர். நட்டார்கண் என்பதில் உயர்திணைப் பெயரானது பற்றி வலி யியல்பாயிற்று (உயிர்-ரு-கூ). அன்பின் ஐந்தனுருபு ஏதுப் பொருளில் வந்தது. "அறனிலை திரியா அன்பினவை யத்து" என்பது புறம் - ௭௧. விசை - செலவு; "கடுவிசைக்க நாவாய்" புறம்-௨0௫. (௨௬)

அஞ்சாமை யஞ்சுதி யொன்றிற் றனக்கொத்த
. எஞ்சாமை யெஞ்ச லளவெல்லா—நெஞ்சறியக்
கோடாமை கோடி பொருள்பெறினு நாட்டாகி
நட்டார்கண் விட்ட வினை.

(ப-ரை.) அஞ்சாமை - (பழிபாவங்களை) அஞ்சாதிருத்தலை, அஞ்சுதி - அஞ்சுவாய்; அளவு எல்லாம் - (தேகத்தோடு கூடிவாழ) அளவுசெய்த நாளெல்லாம், ஒன்றின் - கூடுமாயின், தனக்கு ஒத்த - வருணத்துக்குத்தகுந்த ஒழுக்கங்களினின்று, எஞ்சாமை - சுருங்காமை, எஞ்சல் - சுருங்காதே; நெஞ்சு அறிய - மனமறிய, கோடாமை - யாவரிடத்தும் நடுவாகநிற்றலை, கோடி - கொள்ளுவாய்; பொருள் பெறினும் - மிக்கபொருள் பெறுவதாயிருப்பினும், நட்டார்கண் - தேறிக்கொண்ட நட்பினரிடத்து, விட்டவினை - செய்யவிட்டதொழிலை அல்லது ஒப்பித்த காரியத்தை, நாடாதி - ஆராயாமலிரு, எ-று.

(வி-ரை.) பழி என்பது இவ்வுலகத்தார் தூஷிக்கும்படியான செய்கை. பாவம் என்பது மறுமையில் துக்கம் அனுபவிக்க ஏதுவான காரியம். இவ்விரண்டுக்கும்பயப்பட்டு நடக்கவேண்டும். ஆயுசுஉள்ள மட்டும் கூடுமான நல்லகாரியங்களைச் செய்யவேண்டும். எவ்வளவு லாபம் கிடைப்பதாயிருந்தாலும் மனமறிந்து அக்கிரமம் செய்யாமலிருக்கவேண்டும். சிநேகிதரை நம்பி விட்ட காரியத்தை மறுபடி சோதியாமலிருக்க வேண்டும்.

அஞ்சாமை - இரண்டனுருபு தொக்கதாகக் கொள்க, செய்யுட்களில் பெரும்பான்மை அங்ஙனமே வருவது மரபாதலின். எஞ்சாமை - எதிர்மறை வினையெச்சம், மை - விகுதி. அளவு=காலம், ஏழனுருபு தொக்கது. 'அஞ்சாசை யஞ்சுவது' என்றும் பாடம். இதற்கு: (பழிபாவங்களை) அஞ்சாமலிருப்பதை அஞ்சல் வேண்டும் என்பது பொருள். எஞ்சும் அளவெல்லாம் என்றும் பாடம். ஒன்றின் தனக்கு ஒத்த எஞ்சும் அளவு எல்லாம் எஞ்சாமை (அஞ்சுவது) என்று பிரித்தும், நெஞ்சு அறிய கோடாமை (அஞ்சுவது) என்று பிரித்தும், கோடிபொருள் பெறினும் நட்டார்கண் விட்டவினை நாடாமை என்று பிரித்தும் பொருள் கொள்ளலாம். 'நாடாமை' என்றும் பாடம். இதற்கு: சோதியாமலிருத்தல்வேண்டும் என்பது பொருள்.

மேற்காட்டியவாறு அஞ்சாமை என்னும் பதத்தை மூன்றிடத்தும் வருவித்துப் பொருள்கொள்ளினுமாம். (உ௭)

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.

(ப-ரை.) அலைப்பான் - வதைப்பதற்கு, பிறிது உயிரை - வேறொரு பிராணியை, ஆக்கலும் - வளர்ப்பதும், குற்றம் - குற்றமாம்; விலைப்பாலில் கொண்டு - விலையாகிய உரிமையினால் வாங்கி, ஊன் மிசைதலும் - மாமிசத்தைத் தின்பதும், குற்றம்—; சொலல்பால அல்லாத - சொல்லுந் தகுதியில்லாத சொற்களை, சொல்லுதலும் குற்றம்—; கொலைப்பாலும் - ஜீவனை வதைப்பதாகிய தன்மையும், குற்றமே ஆம்—, எ - று.

(வி-ரை.) 'பிறவுயிரை' எனவும் பாடம். ஆடு முதலியவைகளைப் பின் கொல்லும்பொருட்டு வளர்ப்பதும் பாவம்; எலி முதலியவற்றைக் கொல்லுவதற்குப் பூனை முதலியவைகளை வளர்ப்பது பாவம் என்றுங்கொள்ளலாம். தான் நேரே ஒரு ஜீவனை வதைத்துத் தின்னாமற்போனாலும் பிறர் வதைத்ததை விலைக்குக்கொண்டு தின்பதும் பாவம். தகாத பேச்சுகளைப்பேசுவதும் பாவம். நோய்க்கொல்லுவதும் பாவமாம் என்கிறபடி. 'கொலைப்பாலும் குற்றமேயாம்' என்பதற்கு, ஒருவனைக் கொலைசெய்வதனால் வரும் சிறப்பும் குற்றமாம் என்றும் கருத்துக்கொள்ளலாம்.

உம்மைகள் எண்ணுப்பொருளோடு சிறப்பையும் குறிக்கும். அலைப்பான் - எதிர்கால வினையெச்சம்; அலை - பகுதி, பான்-விகுதி. இப்பாட்டு அடிமறிமாற்றுப் பொருள்கோள் (நன்-பொது-கு-கஅ).

கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலையின்
பானோக்கி வாழுங் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழு முலக முலகின்
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று.

(ப-ரை.) குடி எல்லாம் - (நாட்டிலுள்ள) குடிகளெல்லாம், கோல் நோக்கி வாழும் - (தம்மரசனது) செங்கோலைநோக்கி வாழாநிற்கும்; குழவிகள் (எல்லாம்) - இளம் பிள்ளைகளெல்லாம், தாய்-தங்கள் தாய்களினுடைய, முலைப்பால் நோக்கி - முலைப்பாலை நோக்கி, வாழும்—; உலகம் (எல்லாம்)-உலகத்துயிர்களெல்லாம், வானத்துளி நோக்கி-மேகத்தினது பெயலை நோக்கி, வாழும்—, கூற்று - யமன், உலகவிளி நோக்கி - உலகத்துயிர்களினது சாதலைநோக்கி, இன்புறும் - மகிழாநிற்பன், எ - று.

(வி-ரை.) குழந்தைகள் தாய் முலைப்பா லில்லாமற்போனால் பிழைத்து வாழாததுபோலக் குடிகளெல்லாம் அரசனுடைய நல்ல துரைத்தனமில்லாமற்போனால் சுகப்படமாட்டார்கள்; 'வானத்துளி நோக்கி வாழுமுலகம்' என்பதும் முந்தியதற்கே உபமானம்; 'விளி நோக்கி யின்புறூஉங் கூற்று' என்பது துட்டர் பிறர்கேட்டைக்கண்டு சந்தோஷிப்பார்கள் என்பதைத் தெரிவிக்கின்றது. இதுவும் பிறிது மொழிதல் என்னு மலங்காரம். (உக)

கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணருங் கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரு மந்நெறி
யிப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பா
லுயர்ந்த வுலகம் புகும்.

(ப-ரை.) கற்ப - (ஒருவன்) நூல்களைக் கற்பதனால், கழி மடம் - மிகுதியான பேதைமை, அஃகும் - குறைவன்; மடம் அஃக - அறி

யாமை நீங்குவதனால், புற்கம் தீர்ந்து-புல்லறிவு (ஈனமான சிந்தை) நீங்கி, இவ்வுலகின் கோள்-இவ்வுலகத்தினது இயல்பினை அல்லது இயற்கையை, உணரும் - அறிவான்; கோன் உணர்ந்தான் - அவ்வியற்கையை உணர்ந்தவன், தத்துவம் ஆனநெறி - உண்மையாகிய வழியில் அல்லது ஞானமார்க்கத்தில், படரும் - செல்லுவான்; அந்நெறி - சென்ற அவ்வழியினால், இப்பால் - இம்மையில், உலகின் - உலகத்தில், இசைநிறீஇ - புகழை நிலைபெறச்செய்து, உப்பால் - மறுமையில், உயர்ந்த உலகம் - (எல்லாவுலகங்களினும்) உயர்ந்த முத்தியுலகத்தில், புகும் - புகுவான், எ-று.

(வி-ரை.) படிக்க அறியாமை நீங்கி அதனால் பொன்னாசை முதலிய ஈனமான கருத்துக்கெட ஞானமார்க்கத்தால் முத்தியடையலாம் என்பதாம். இது காரணமாலையென்னு மலங்காரம். கழிமடம்-உரிச்சொற்றொடர். புற்கம்-புல் என்னும்பண்படிப் பகுதிமேல் கு ச்சாரியையும் அம் விகுதியும் சேர்ந்துவந்த பண்புப்பெயர். இங்கே தீர்ந்து என்பது, வாய்திறந்து தூங்கினான் என்றதுபோல் பின்னிட்ட காரியம் முன் சொல்லப்பட்டது. இவ்வுலகம் என்பது, காணப்படு முலகங்களை யெல்லாம். 'உப்பால்' என்பது மனிதலோகமாகிய இவ்வுலகும், தேவலோகமாகிய அவ்வுலகுமல்லாத வேறுலகம்; அதாவது மோக்ஷவுலகத்தைச் சுட்டுகின்றது. பால் - இடம். நிறீஇ - நிறுவு என்னும் பகுதிமேல் இ என்கிற வினையெச்ச விகுதி வரப் பகுதி ஈறுகெட்டு உகரம் இகரமாய் அளபெடுத்துநின்றது. ()

குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம்—அழித்துச்
செறுவுழி நிற்பது காமந் தனக்கொன்
றுறுவுழி நிற்ப தறிவு.

(ப-ரை.) நீர் - நீரானது, குழித்த உழி - குழி செய்யப்பட்ட இடத்தில், நிற்பது-நிற்கும் இயல்புடையது; பாவம் - பாவமானது,

பல்லோர் - (அறிவுடையோர்) பலராலும், பழித்த உழி - பழிக்கப் பட்டவனிடத்து, நிற்பது—; காமம்-காமமானது, அழித்து - (ஒருவன்) தவவொழுக்கத்தைக் கெடுத்து, செறுவுழி - (தீய ஒழுக்கத்தில்) சேர்ந்தால், நிற்பது - (அவனிடத்து) நிற்கும் இயல்புடையது; அறிவு - கல்வியறிவானது, தனக்கு ஒன்று - தனக்கொரு துன்பம், உறுவுழி-வந்தால், நிற்பது - (உதவிநிற்கும்) இயல்புடையது, எ-று.

(வி-ரை.) பள்ளத்தில் நீர் நிற்பதுபோல் பலரும் பழிக்கும்படியான நிலையில் நிற்கிறவனிடத்தில் நிச்சயமாய்ப் பாவமிருக்கும். நண்பர் பலவிதத்திலும் குற்றங்காட்டித்தடுத்தாலும் காமமானது ஒழியாமல் நிற்குமாதலால் அதனைக்கடிவதற்கு உறுதிகொண்டிருக்கவேண்டும். ஆபத்து வந்தபோது அதை நீக்கும் உபாயம் விவேகமேயாகையால் அதனைச் சம்பாதிக்கவேண்டும் என்பதாம்.

குழித்த உழி என்பது 'குழித்துழி' எனத் தொக்குவழங்கியது. உழி - இடம். பெயரெச்சத்தொடர். பழித்துழியு மிவ்வாறே. செறுவுழி-வினைத்தொகை. நிற்பது - வினையாலணையும்பெயர், எழுவாய் பெயர்கொண்டு முடிந்தது. நிற்பதுணர்வு என்றும் பாடம். (கக)

திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்கு
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற் றுள்ளும்
இன்மையி னின்னாத தில்லை யில்லெனினாத
வன்மையில் வன்பாட்ட தில்.

(ப-ரை.) ஒருவற்கு - ஒருவனுக்கு, திருவின்-செல்வப்பொருள்போல, திறல் உடையது - வலியுடையது அல்லது சாதிக்கவல்ல சாமர்த்தியமுள்ளது, இல்லை - (பிறிது) இல்லை; கற்றலின் - கல்வியறிவுபோல, வாய்த்த - நீங்காத்துணைகள், பிற இல்லை - வேறில்லை; எற்றுள்ளும் - (துன்பந்தருவன ஆகிய) எல்லாவற்றிலும், இன்மை

யின் - வறுமைபோல, இன்னாதது - துன்பந்தருவது, இல்லை-வேறு இல்லை; இல் என்னாத - (அவ்வறியவர்க்கு) இல்லையென்று சொல்லாத, வன்மையின் - வல்லமைபோல, வன்பாட்டது இல்-வேறு வல்லமையானது இல்லை, எ - று.

(வி-ரை.) செல்வத்தினால் எதையும் சாதிக்கலாம் ஆனாலும், அச்செல்வத்தையும் சாதிக்கவல்லது கல்வியாதலால் கல்வியேமேலானதாம்; தரித்திரத்தைக் காட்டிலும் சகலவிதத்திலும் பிரியமாகாதது வேறில்லை; ஆனாலும், எனக்கு இல்லையென்று ஒருசொல்சொல்வது மிகவும் கொடியசெய்கையாதலால் இவ்வறுமையைப் பொறுத்தாகிலும் மானத்தைக் காப்பது மேலாம்; முதல் வாக்கியமும் மூன்றும் வாக்கியமும் அனுவாதம்.

'கற்றலிலொத்த' எனவும்பாடம்; பொருளில் வித்தியாசமில்லை. 'வன்பாட்டது' வன்பாடு - வன்மை, வன்படு என்னும் இருசொலொட்டாகிய முதனிலை, பாடு என விகாரப்பட்டுத் தொழிற்பெயரானது அதனையுடையது வன்பாட்டது. வன்பாடு - பகுதி, து - விகுதி, அ - சாரியை. 'வன்பட்டது' என்பது பாடமாயின் வினையாலணையும்பெயர். இன்னாதில்லை—"இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி, னின்மையே யின்னா தது" (திருக்குறள் - 1041). வன்மையின் வன்பாட்டதில்—"இரந்துதீர் வாமென்னும் வன்மையின் வன்பாட்டதில்" (ஷை 1063). 'இல்லென்னாத' என்பதற்குப் பதில் 'இலம் என்னும்'என்றும் பாடம். 'இலம் என்னும் வன்மையின் வன்பாட்டது இல்' என்னுந் தொடருக்கு - நாங்கள் தரித்திரர் என்று (பிறரிடத்திற்) சொல்லும் கடினமனத்தைக் காட்டிலும் கடினத்தன்மையுள்ளது இல்லை என்பது பொருள். (௩௨)

புகைவித்தாப் பொங்கழ லோன்றுஞ் சிறந்த
நகைவித்தாற் றோன்று முவகை—பகையொருவன்

முன்னம்வித் தாக முளைக்கு முளைத்தபின்
இன்னாவித் தாகி விடும்.

(ப-ரை.) பொங்கு அழல்-(அடுக்களையில்) எரிகின்ற தீயினது இருப்பு, புகைவித்துஆக-(புறத்தில்) புகை காரணமாக, தோன்றும்-விளங்கும்; உவகை - (உள்ளத்தில்) மகிழ்வினது இருப்பு, சிறந்த நகை - (புறத்தில்) மிக்க முகமலர்ச்சி, வித்து ஆ - காரணமாக, தோன்றும்—; பகை - (உள்ளத்திலுள்ள) பகைமைக் குணம், ஒருவன் முன்னம் - ஒருவனது குறிப்புச் செய்கை, வித்து ஆக-காரணமாக, முளைக்கும் - (புறத்தில்) தோன்றும்; முளைத்தபின்-தோன்றின பிற்காலத்து, இன்னா வித்து* ஆகிவிடும்-(செய்யப்படும்) துன்பந் தருஞ் செய்கைகளுக்கு (அப்பகைமை) காரணமாய் முடியும், எ-று.

(வி-ரை.) புகையைக்கண்டு நெருப்பு இருக்கிறதென்று அறிவதுபோல் ஒருவனைக் கண்டபோது நகைமுகமாயிருந்தால் அவனிடத்துச்சந்தோஷமுண்டென்றறியலாம். அப்படியே முகக்கடுப்புமுதலிய குறிப்பால் பகை அறியலாம். இவ்விதமாய்த் தோன்றின பகையால் அவனிடத்து இவனுக்கும் பிரியமில்லை யாய்விடும். இன்னாமையின் வித்து - இன்னாவித்து. பொங்கு அழல் - வினைத்தொகை. 'ஆகிவிடும்' விடு அசைநிலை; உறுதிப்பொருளைக் காட்டுமென்றும் கூறுவர். (௩௩)

பிணியன்னர் பின்னோக்காப் பெண்டிர் உலகிற்
கணியன்ன ரன்புடைய மாக்கள்—பிணிபேணும்
புல்லன்னர் புல்லறிவி னுடவர் கல்லன்னர்
வல்லென்ற நெஞ்சத் தவர்.

(ப-ரை.) பின் நோக்கா பெண்டிர் - மேல் விளைவை அல்லது பின்னிட்டு வரும் கேட்டை ஆராயாத பெண்டிர்கள், பிணி அன்னர்-

(கொண்ட கணவருக்கு) நோயை ஒப்பாவர்; அன்பு உடை மாக்கள்-(எல்லா உயிர்களிடத்தும்) அன்புடைய மனிதர், உலகிற்கு-உலகத்துயிர்களுக்கு, அணி அன்னர் - ஆபரணத்தை ஒப்பாவர்; புல் அறிவின் ஆடவர் - சிற்றறிவையுடைய ஆண்மக்கள், பிணி பேணும் - வியாதியை வளர்க்கும்படியான, புல் அன்னர் - விஷப் புல்லுக்கு ஒப்பாவர்; வல் என்ற - இளகுதலில்லாத, நெஞ்சத்தவர் - மனமுடையவர், கல் அன்னர் - கல்லை ஒப்பாவர், எ-று.

(வி-ரை.) தம் கணவருக்கு அல்லது தமக்குப் பின்வரும் அபவாத முதலிய கேட்டை யோசியாமல் ஒரு காரியஞ்செய்கிற பெண்கள் வியாதிபோல் துன்பந்தரத்தக்கவர்; எல்லாரிடத்தும் அன்புபாராட்டினால் அவர் உலகத்துக்கு ஆபரணம்போல் கொண்டாடத்தக்கவராவர்; ஈனபுத்தியால் கெடுகின்ற மனிதர் உலகத்துக்கு விஷப் புல்லைப்போல நீந்தலைக்குப் பாத்திரமாவர்; தயாதாக்ஷிணியமில்லாதவர் அங்கங்கே உபயோகமற்றுக் கிடக்கிற கற்களைப்போல் வீணாயிருப்பர் என்பதாம்.

'பிணிபயிரின் புல் அன்னர்' என்றும் பாடம். இதற்கு: (நீரைக்) கட்டுகின்ற பயிரிலுள்ள புல்லை ஒப்பாவர் என்பது பொருள். 'பிணிபயிலும்' என்றும் பாடம். இதற்கு: பிணியை வருவிக்கும் என்பது பொருள். அன்பு உடைமாக்கள் என்னும் தொடருக்கு - (சம்பந்தமுடையாரிடத்து அல்லது யாவரிடத்தும்) அன்புடைய மனிதர் என்று பொருள் கூறினுமாம். அன்னர்-அன் என்னும் இடைச்சொல்லடியாக வந்த குறிப்புமுற்று மாக்கள் என்றும் பன்மை. நெஞ்சத்தவர்-சினையடியாக வந்த பெயர்ப்பகுபதம். நெஞ்சம்-அத்து-அ - அர், பகுதி சாரியைகள் விகுதி. "மவ்வீறு ஒற்றழிந்து" "அத்தினகரம்" இவ்விரு சூத்திரங்களால் மகரமும் அகரமும் கெட்டன. (௩௪)

அந்தணரி னல்ல பிறப்பில்லை யென்செயினும்
தாயிற் சிறந்த தமரில்லை யாதும்

வளமையோ டொக்கும் வனப்பில்லை யெண்ணின்
இளமையோ டொப்பதூஉ மில்.

(ப-ரை.) அந்தணரின் - பார்ப்பாரைப்போல, நல்ல பிறப்பு - உயர்ந்த பிறப்பினர், இல்லை - இலர்; என் செயினும் - (தனக்கு) என்ன தீங்கைச் செய்தாலும், தாயின் - தாயைப்போல, சிறந்த தமர் இல்லை - சிறந்த உறவினரிலர்; யாதும் - சிறிதும், வளமை யோடு - செல்வத்தோடு, ஒக்கும் - ஒப்பாகும், வனப்பு இல்லை - அழகு இலது; எண்ணின் - ஆராய்ந்தால், இளமையோடு - (எல்லா இன்பங்களையும் அனுபவித்தற் குரியதாகிய) இளமைப் பருவத் தோடு, ஒப்பதும் - ஒத்த பருவமும், இல் - இலது, எ-று.

(வி-ரை.) பிராமணரைக்காட்டிலும் பிறப்பில் உயர்ந்தவரில்லா ததுபோல் பிறர் எவ்வளவு மேன்மை செய்தாலும் தாய்க்கு மேம் பட்ட உறவினரில்லையாம்; செல்வமிருந்தால் எல்லா அழகும் கை கூடும்; அதுபோல் இளம்பிராயமே எல்லா நன்மைகளையும் தேடிக் கொள்ளக்கூடியது; இளமை மாறு முன்னமே கல்விமுதலியவை களைத் தேடிக்கொள்க என்பதாம்.

'அந்தணரின் மிக்க பிறப்பில்லை' என்பதும் பாடம். இதனை யுவமானமாகக் கொள்ளாமல் விதியாகவே கொண்டு "ஆதலால் அந் தணரை மேன்மையாகக்கொண் டொழுகவேண்டும்" எனவும் கருத் துக்கொள்ளலாம். பிறப்பு அதனையுடையார்க்கு ஆகுபெயர் அந்தண ரின் - ஐந்தனுருபு, எல்லைப்பொருளில் வந்தது. நீக்கப்பொருள் என்பாருமுளர். (கூ௫)

இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ்சிறப்பின்
நீருண்டார் நீரான்வாய் பூசுப-தேரின்
அரிய வரியவற் றாற் கொள்ப பெரிய
பெரியரா னெய்தப் படும்.

(ப-ரை.) இரும்பு - இரும்பினை, இரும்பின்-இரும்பாற்செய்த கருவியால், இடை போழ்ப - (கொல்லர்) நடுவில் துண்டிப்பர்; பெருசிறப்பின் - மிக்க சிறப்பினையுடைய, நீர் - (சோற்றோடு கூடிய) நீரை, உண்டார் - உண்டவர், நீரால்-நீரினாலே, வாய் பூசுப-உண்ட வாயினைக் கழுவுவர், தேரின் - ஆராயுமிடத்து, அரிய - (பிறரால் அடைதற்கு) அரிய பொருள்களை, அறியவற்றால் - அருமையாகிய முயற்சிகளால், கொள்ப - (அறிவுடையோர்) செய்துகொள்வர்; பெரிய - பெரும்பேறுகள், பெரியரால் எய்தப்படும் - பேரறிவுடையோரால் அடையப்படும், எ-று.

(வி-ரை.) இரும்பை இரும்பினாலே துணிப்பதுபோலவும், மூக்குடிநீர் குடித்தவாயைத் தண்ணீராலேயே சுத்திசெய்வதுபோலவும், தெய்வபக்தி மோக்ஷ முதலியவைகளை தவம் நிஷ்டை முதலிய அருமையான சாதனங்களாலே தான் அடையவேண்டும். அப்படிப்பட்ட பெரிய சாதனங்கள் கல்வி கேள்விகளாற் சிறந்தவராலேதான் அடையப்படும் என்பதாம்.

வாய்பூசுவதென்பது மரபு. அரிய பெரிய - பலவின்பாற் பெயர்கள். அரு, பெரு-பண்படி, பகுதி; உகரம் இகரமாயிற்று. "ஈறுபோதலிடையுகர மிய்யாதல்" ய் - உடம்படுமெய், அ - விகுதி. (கசு)

மறக்களி மன்னர்முற் றோன்றுஞ் சிறந்த
அறக்களி யல்லாதார்க் கீயுமுற் றோன்றும்
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாங் கயக்களி
ஊரிற் பிளிற்றி விடும்.

(ப-உ.) மறக்களி - (வீரர்களுக்கு) வீரத்தால் வரும் களிப்பு, மன்னர் முன் - (தம்மையுடைய) அரசர்க்கு முன்னே, தோன்றும் - உண்டாம்; சிறந்த அறக்களி - (ஒருவன் மனத்தின்கண்) மிக்க அறத்தால் வருங்களிப்பு, அல்லாதார்க்கு - (மாறாகிய) வலியில்லா

தவர்க்கு அல்லது தரித்திரருக்கு, ஈயுமுன் - உதவுமிடத்து, தோன்றும் - உண்டாம்; வியக்களி - (பொருளுடையானுக்கு) ஏவு தலால் வருங்களிப்பு, நல்கூர்ந்தார் மேற்று ஆம் - (அவ்வேவுதல்) வறியாரிடத்ததாலுல் தோன்றும்; மயக்களி - கீழ்மைக்குணத்தால் வருங்களிப்பு, ஊரில் - (அக்குணமுடையோர் வாழும்) ஊரில், பிளிற்றிவிடும் - (இரையும்) பலரும் அறியத் தோன்றும், எ-று.

(வி-ரை.) சேவகர்க்குத் தாம் வீரங்காட்டியதனுல் உண்டான சந்தோஷம் தம்மை அரசர் கொண்டாடும்போது சிறந்து காணும். அப்படியே தருமஞ் செய்வதனுலாகுஞ் சந்தோஷந் தரித்திரருக்குக் கொடுக்கும்போது சிறந்து தோன்றும்; செல்வர், தமக்கொரு வேலை யிட்டால் அதனுல் தமக்குச் சிறிதுலாப முண்டாமென்கிற சந்தோஷத்தை வறியரே யன்றி மற்றவர் கொள்ளாமல் இழிவாகவே கொள்வர். மூடன் சந்தோஷப்படத்தகாத விஷயத்திற் சந்தோஷத்தை யடைந்து ஊரெல்லாம் நிறையும்படி ஆர்ப்பரிப்பான் என்பதாம்.

வியம்—பெருமை, அதனுற் செய்யு மேவலுக்கு ஆகுபெயர். 'வயம்' எனவும் பாடம்; அப்போது "வயம்" என்கிற வடமொழித் திரிபாக்கொண்டு பராதீனத்தினுல் வருஞ் சந்தோஷமென வுரைக்கலாம். 'அறக்களி யில்லாதார்க்கு' என்றும் பாடம். பிளிற்றுவிடும் என்றும் பாடம். வியக்களி நல்கூர்ந்தார் மேற்றும் என்பது யாதானும் ஒருபொருள் பெற்றுல் அதனைக்கண்டு வியக்குங்களி நல்கூர்ந்தார் மாட்டுத்தோன்று மென்பதாம். 'மறக்களி மன்னரிடத்தில் தோன்றும்' என்னவுமாம். 'ஈயும் முன்' பெயரெச்சத்தொடர். 'முன்' இடம்-இங்குகாலத்துக்காயிற்று. 'மேற்று' மேல்-பகுதி, று-விகுதி.

மையாற் றளிர்க்கு மலர்க்கண்கள் மாசிருள்
நெய்யாற் றளிர்க்கு நிமிர்சுடர்—பெய்யல்
முழுங்கத் தளிர்க்குங் குருகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமா மேல்.

(ப-ரை.) மலர் கண்கள் - (நீலோற்பலத்தின்) மலர் போலுங் கண்கள், மையால் தளிர்க்கும் - கண்ணுக்கு இடுகிற மையினால் நன்கு விளங்கும்; மால் இருள் - பேரிருளில், திமிர்சுடர் - ஒளி மிகுகின்ற விளக்கம் அல்லது திமிர்ந்து எரிகிற சோதி(தீபம்), நெய்யால் தளிர்க்கும் - நெய்யினால் நன்கு விளங்கும்; குருகு - குருக்கத்தி, பெய்யல் முழங்க-(மேகம்) பெய்தலுக்கு முழங்கினால், இலை தளிர்க்கும் - இலைகள் தளிர்க்கும்; மேல் - மேன்மைக் குணமுடையோர், நட்டார் வழங்க - உறவாயினோர்க்கு வழங்கும்பொருட்டு, தளிர்க்கும் - பொருள் சிறப்பர், எ-று.

(வி-ரை.) மையிடக் கண்கள் நாளுக்குநாள் விளங்கிவரும்; இருட்டிலே பிரகாசிக்கத்தக்க விளக்குக்கு எண்ணெய் வார்க்க வார்க்க வளர்ந்து விளங்கும்; மேகம் மழைபெய்யும்படி வருகிற முழக்கங் கேட்டால் குருக்கத்தி மரத்தினிலைகள் செழிப்பாகும்; இவைபோல் மேலானவர்கள் தம்முடைய நேசருக்குக் கொடுக்கக் கொடுக்க மகிழ்வார்கள் என்பதாம்.

குருக்கத்திமரம் மேககர்ஜித முண்டானபோது தழைந்து வளரும் என்பது சாஸ்திர சம்பிரதாயம். 'இலங்கிலை' எனவும் பாடம்; அதற்கு விளங்குகின்ற இலைகள் என்பது பொருள். குருகு- மயில் என்கிறபறவை, என்று உரைத்து இலை என்பதை வழங்க என்பதோடு கூட்டி யுரைக்கலாம். இலையையாகினும் வழங்க என்பதாம். மேல் - ஆகுபெயர். 'நட்டார் வழங்கத் தளிர்க்கு மாமேல்' என்பதற்கு-நேசர் தமக்கொரு சிறுபொருள் தந்தாலும் மேலானவர் களிப்பார்கள் எனவும் பொருள் கூறலாம். 'தளிர்க்கும்' என்பது இலக்கணையால் மகிழ்ச்சி முதலிய பொருளைத் தந்தது. (கஅ)

நகையினிது நட்டார் நடுவண் பொருளின்
தொகையினிது தொட்டு வழங்கின்—வகையுடைய

பெண்ணினிது பேணி வழிபடிற் பண்ணினிது
பாட லுணர்வா ரகத்து.

(ப-ரை.) நகை - முகமலர்ச்சி, நட்டார் நடுவண் - நட்பாயினோர்க்குள், இனிது - (அவர்க்கு) இன்பந் தருவதாகும்; பொருளின் தொகை - பொருளின் திரள், தொட்டு - (வெறுப்பில்லாமல்) எடுத்து, வழங்கின் - (உடையோரால் அறத்தின்பொருட்டு) கொடுக்கப்பட்டால், இனிது - இன்பந்தருவதாகும்; வகை உடைய-(குணத்தின்) வகைகளையுடைய, பெண் -பெண்ணினது தன்மை, பேணி-(கணவனை உண்டி முதலியவற்றால்) காத்து, வழிபடின்-(அவனைத்தெய்வமாகக் கருதி) வழிபாடு செய்தால், இனிது - (யாவர்க்கும்) இன்பந்தருவது; பண்-பாலையாழ் முதலியவை, பாடல் உணர்வார் அகத்து - பாடுதற்றொழிலை அறிபவரிடத்து, இனிது - இன்பந்தருவன ஆகும், எ-று.

(வி-ரை.) சிநேகிதர் நடுவிலிருந்து பேசிச் சிரிப்பது இன்பமாயிருக்கும்; அப்படியே பொருளை யெடுத்துச் சற்பாத்திரத்தில் வழங்கினால் இன்பமாகும்; ஒருபெண் தன் கணவனை உபசரித்து நடப்பளாயின் யாவர்க்கும் இன்பமாயிருப்பாள்; சங்கீதத்தின் திறமறிந்தவர்களிடத்தில் பாட்டுப் பாடினால் இன்பமாயிருக்கும்.

இனிது என்பது பண்பியை உணர்த்தாமல் பண்பை உணர்த்தினமையால் பெண் என்பதையுங் கொண்டு முடிந்தது. 'வகைமாண்ட' என்றும் பாடம். இதற்கு : நல்ல நிலைமையுள்ள என்பது பொருள். 'தகையுடைய'என்றும் பாடம். இதற்கு: சிறப்புடைய என்பது பொருள். (௩௧)

இரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சார்வொன் றீவோர்—பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
செய்யாமை செல்சா ருயிர்க்கு.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

(ப-ரை.) எஞ்ஞான்றும் - எந்நாளிலும், கரப்பவர்க்கு - (இரந்தவர்க்கு ஒன்றும் ஈயாமல்) ஒளித்துவைக்கு மியல்புடையார்க்கு, செல்சார் - செல்லுதற்குரிய பற்றுக்கோடு, கவிழ்தல் -, (அவரைக் கண்டவளவில்) முகங்கவிழ்தலாம்; இரப்பவர்க்கு - யாசிக்கு மியல்புடையார்க்கு, செல்சார் —, ஒன்று ஈவார் - (அவர் வேண்டியதாகிய) ஒருபொருளைக் கொடுக்கு மியல்புடையார்; பரப்பு அமைந்த - (போரில்) சோம்பலின்மையுள்ள, தானைக்கு - சேனைக்கு, செல்சார்—, தறுகண்மை - (போர்முகத்தில்) இரக்கமின்மை; உயிர்க்கு - (ஒருவனது) உயிர்க்கு, செல்சார்—, ஊன் உண்டல் செய்யாமை - (மற்றவுயிர்களினது) தசையை உண்ணுமை, எ-று.

(வி-ரை.) உலோபிகள் யாசகரைக் கண்டால் முகம் கவிழ்ந்து நிற்பார்கள்; யாசகரோ உதாரர்களையே அடுத்திருப்பார்; சேனையானது வீரத்தையே பற்றிநிற்கும், அதுபோல் புலால் தின்னுமையே ஆத்மாவுக்கு ஆதாரவாயிருக்கும். அவ்வவைகளுக்கு அதது இருந்தால் காரியம் அனுகூலமாவதுபோல் ஊனுண்ணுமையாகிய தன்மை ஆத்மாவுக்கு இருந்தால் கடைத்தேறுங் காரியத்துக்கு அனுகூலமாகு மென்பதாம்.

செல்சார் - செல்லும்படியாகிய சார்பு, வினைத்தொகை. சார் - முதனிலைத்தொழிற்பெயர், சாரும்படியான பொருளுக்கு ஆகுபெயர். தறுகண்மை - மை பகுதிப்பொருள் விகுதி. 'ஒன்றீவார்' என்றும் பாடம். (௭0)

கண்டதே செய்பவாங் கம்மிய ருண்டெனக்
கேட்டதே செய்ப புலனுள்வார்—வேட்ட
இனியவே செய்ப வமைந்தார் முனியாதார்
முன்னிய செய்யுந் திரு.

(ப-ரை.) கம்மியர் - கம்மாளர், கண்டதே - (தாம் கண்ட) பொருள்போல்வதனையே, செய்ப - செய்யவல்லார்; புலன் ஆள்வார்-

அறிவினை யாளுதலுடையார், உண்டு என - (பெரும்பயன்) உண்டென்று, கேட்டதே - (ஆசிரியர்பால்) கேட்ட அறத்தையே செய்ப—; அமைந்தார் - (நற்குணங்களால்) நிறைந்தவர், வேட்ட (தாம்) விரும்பினவற்றுள், இனியவே - (பிறர்க்கு) இனிமையாயினவற்றையே, செய்ப—; திரு - திருமகள், முனிபாதார் - (தமயினு எளியாரிடத்தும்) கோபஞ்செய்யாதவர், முனனியவே - கருதினவற்றையே, செய்யும் - செயவள், எ-று.

(விசேஷம்.) சிறபிகள் ஒன்றைக் கண்டால் அதைப்போல் மறு ருவ[illegible]ாகள், விததுவான்கள் சாஸ்திரஙகள சொல்லியதையே செய்வார்கள்; குணவானகள் பிறர்க்குப் பிரியமானதைச் செயவார்கள், கோப முதலியவைகளை நீக்கின மகாத்துமாககள நினைத்ததையெல்லாம் திருமகள் நிறைவேற்றுவாள் என்றதனல் சம்மியருக்கு வித்துவானகளும் விததுவான்களுக்குக குணவானகளும் மேலானவர் எனறும், யாவருககும் யோகிகள மேலானவர் எனறுஞ் சொன்னதாம். இதில் ஸாரம் எனனு மலஙகாரத்தோடு வேற்றுமை எனனு மலஙகாரமுங் கூடியிருக்கின்றது.

'கண்டதே செயப' எனவும பாடம். 'கேட்டதே செயப' எனறும் பாடம். 'வேட்ட' வேள - பகுதி, ட் - இடைநிலை, அ - பலவின்பால் விகுதி, ஏழாம் வேற்றுமைத்தொகை. 'முனனிய' வினையாலணையும்பெயர்; முன்னு - பகுதி, இன - இடைநிலை, இறுதிகெட்டுநின்றது, அ - விகுதி, ப - உடமபடுமெய், இரண்டாம வேற்றுமைத் தொகை. இவை விரியுங்கால் வேட்டவற்றுள் முனனியவற்றை என அற்றுச்சாரியை பெற்றுவரும. மற்றவையு மிபபடியே. (சஏ

திருவுந் திணைவகையா னில்லா பெருவலிசு
கூறறமுங் கூறுப செய்துண்ணு—தாறற
மறைக்க மறையாதாங் காமமுறையும
இறைவகையா னின்று விடும்.

(ப-ரை.) திருவும் - செல்வங்களும், திணை வகையால் - குடியினது வகைகளில் அல்லது சாதிபேதத்தால், நில்லா - (தக்கபடி) நிலைபெறா; பெருவலி - மிக்க வலியையுடைய, கூற்றமும் - யமனும், கூறுப - (தன்னால் உண்ணப்படுபவனால்) சொல்லப்படுவனவற்றை, செய்து உண்ணாது - செய்து (பின் அவனுயிரைக்) கொள்ளான்; காமம் - காமமும், ஆற்ற மறைக்க - மிகுதியாக மறைக்கவும், மறையாது - மறைபடாது அல்லது வெளிப்படாமலிராது; முறையும் - செங்கோலும், இறை வகையால் - அரசனது செய்கைவகையால், நின்றுவிடும் - நிலைத்துவிடும், எ-று.

(வி-ரை) சம்பத்து "இன்னாருக்குண்டு இன்[illegible]லை" என்று சாதிபேதத்தைப்பற்றி யிருப்பதன்று; அதிருஷ்டத்தின்படியே நிற்பதும் போவதுமாயிருக்கும். எமன் கொண்டுபோகுங் காலத்தில் "இன்னகாரியம் தீர்த்துவருகிறேன் சற்றிரு" என்றால் அப்படியே நடத்திக்கொண்டுபோவதில்லை; காலநியதிப்படியே கொண்டுபோம். ஒருவன்கொண்டிருக்கிற காமத்தை மேலுக்கு மறைத்தாலும் அது வெளியரகாமல் நில்லாது, மணமொப்பப் போக்கினாலே மறையும் இவையெல்லா மிப்படி நியதிபற்றி யிருக்கின்றன. ஜனங்கள் நடக்கவேண்டியகிரமங்களோ அரசன்கட்டளையின்படி எல்லாவிதத்திலும் நிற்குமென்பதாம். அரசன் முறையேயாண்டால் ஜனங்கள் கிரமமாய் நடப்பார்கள் என்றபடி.

திரு: பால்பகாவஃறிணைப்பெயர், ஆகலால் 'நில்லா' எனப்பன்மை வினைகொண்டது. கூறுப: கூறு - பகுதி, ப் - இடைநிலை, அ - பலவின்பால் விகுதி; கூறுவ எனவும் வரும். முறையும் - இதில் உம்மைசிறப்பு; பலரிடத்தும் வெவ்வேறாகி ஒருவர்க்கு அடங்காமையே சிறப்பு. மற்றவை எண்ணும்மை. (சஉ)

பிறக்குங்காற் பேரெனவும் போரா விறக்குங்கால்
நில்லெனவு நில்லா வுயிரனைத்து—நல்லான்

உடம்படிற் றானே பெருகும் கெடும்பொழுதிற்
கண்டனவுங் காணாக் கெடும்.

(ப-ரை) உயிர் அனைத்தும் - எல்லாப் பிராணிகளும், பிறக்குங்கால் - உண்டாகும்போது, போ் எனவும் - போ என்று சொன்னாலும், போா - போகமாட்டா; இறக்குங்கால் - சாகும்போது, நில் எனவும் - இரு என்று சொன்னாலும், நில்லா - நிலைபெறமாட்டா; நல்லாள் - திருமகள், உடம்படின் - அங்கீகரித்தால், தானே பெருகும் - (செல்வம்) தானேவளரும்; கெடும்பொழுதில் - (அச்செல்வம்) கெடும்படியானகாலத்தில், கண்டனவும் - கண்ணுக்கு எதிரில் தோன்றியிருக்கும் பொருள்களும், காணா - காணப்படாமல், கெடும் - நாசமாகும்.

(வி-ரை.) சகல பிராணிகளும் பிறக்கும்போதே இறக்கச்சொன்னாலும் இறக்கமாட்டார்கள்; இறக்கும்போது நிற்கச்சொன்னாலும் நிற்கமாட்டார்கள்; இவ்வகையாய் ஆயுள் சதமல்ல; அப்படியே திருமகள் கடாக்ஷம் உண்டானால் செல்வம் வளர்ந்தேறும் ; அது நீங்கினால் இருப்பதும் போய்விடும் ; ஆதலால், செல்வமும் சதமல்ல: இவற்றை நம்பாமல் அறஞ்செய்க வென்றதாயிற்று.

பெயர் என்பது பேர் என மருவியது. காணாமல் என்பது ஈறுகெட்டு காணா என நின்றது. (௬௩)

போரறின் வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரறின் வாடு மரமெல்லா—நீர்பாய்
மடையறின் நீணெய்தல் வாடும் படையறின்
மன்னர்சீர் வாடி விடும்.

(ப-ரை.) பொருநர் - போர்செய்யவல்ல வீரர்களது, சீர்-வீரத்தின் சிறப்பு, போர் அறின்-போர் இலதானால், வாடும்-வருந்தும்;மரம்

எல்லாம் மரங்களெல்லாம், கீழ் வீழ்ந்த-கீழேபாய்ந்த, வேர் அறின்-வேரறுத்தால், வாடும்-உலரும்; நீள் செய்தல்- நீரினளவு) வளர்கின்ற செய்தற்கொடி, நீர்பாய் - (வருவாயின்வழியே) நீர் பாய்கின்ற, மடை அறின்-குளம் நீர்வற்றினால், வாடும்-உலரும்; மன்னர் சீர் - அரசரது செல்வம், படை அறின் - சேனையிலதானால், வாடிவிடும் - நீங்கிப் போம், எ-று.

(வி-ரை.) சுத்தவீரர் சண்டை நேரிடாமற்போனால் மனக் குறைப்பட் டிருப்பதுபோலவும், வேர் அற்றால் மரங்கள்வாடி அழி வதுபோலவும்,நீர்மடை யில்லாமற்போனால் அதனருகிலிருக்கும் ஆம் பல்வாடுவதுபோலவும்,சேனையில்லாமற்போனால் அரசன் வாடி இளை த்துப்போவான்; ஆதலால், தன்னரசு நிலைபெறும்பொருட்டுத் தக்க சேனைகளை வைத்துக் காக்கவேண்டு மென்பதாம்.

போரின்றி, வேரின்றி, மடையின்றி, படையின்றி எனவும் பாடம். இன்றி: இல் - பகுதி, றி - விகுதி, எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம். பொருநர்: பொரு - பகுதி, நர் - பலர்பால் விகுதி 'மடையின்றிவாடும் பயிர்கள்' எனவும் பாடம். 'கொடையின்றி மன்னர்சீர் வாடி விடும்' என்கிற பாடத்தில் மந்திரிகள் சேனாபதி கள் முதலான அவரவர்க்குத் தக்கபடி கொடாமற் போனால் அரசர் சீர்வாடிவிடும் என்பது கருத்து. (சச)

ஏதிலா ரென்பா ரியல்பில்லார் யார்யார்க்கும்
காதலா ரென்பார் தகவுடையார்—மேதக்க
தந்தை யெனப்படுவான் றன்வாத்தி தாயென்பாள்
முந்துதான் செய்த வினை.

(ப-ரை.) யார் யார்க்கும் - எல்லாருக்கும், ஏதிலார் என்பார் - அயலாரெனப்படுவோர், இயல்பு இலார் - நட்பின்தன்மை யில்லாத

வர்; (யார் யார்க்கும்) காதலார் என்பார் - எல்லாருக்கும் அன்புள்ளாரெனப்படுவோர், தகவு உடையார் - நடுவுநிலைமையுடையார்; மேதக்க - மேன்மையுள்ள, (யார் யார்க்கும்) தந்தை எனப்படுவோன் (கற்றவர்) எல்லார்க்கும் பிதா என்று சொல்லப்படுவோன், தன்வாத்தி-தனக்கு நூல்களைக் கற்பித்தவன்; (யார் யார்க்கும்) தாய் என்பாள்-பிறந்த எல்லார்க்கும் தாயென்று சொல்லப்படுவோள், முந்து - முற்பிறப்பில், தான்செய்த வினை - அவனவன் செய்த நல்வினைகள், எ-று.

(வி-ரை.) சற்குணமில்லாதவர் எல்லாருக்கும் வேண்டாதவர்; சற்குணமுடையவர்கள் இஷ்டராவார்; தனக்குக் கல்விகற்பித்தவன் தந்தைக்குச் சமானமாவான்; முற்பிறப்பில் தான்செய்தநல்வினையே தனக்கு இப்பிறப்பில் தாயைப்போல் வேண்டிய நன்மைகளைப் பயக்குமென்பதாம்.

'யார்யார்க்கும்' என்கிற அடுக்கு எப்படிப்பட்ட சகலமானவருக்கும் என்கிற பொருள்பற்றிவந்தது. மேதக்க மேதகு-பகுதி, அ-பெயரெச்சவிகுதி, ககரமிரட்டிக் காலங்காட்டிற்று. உபாத்தியாய என்கிற ஆரியமொழி உபாத்தியாயன் என்றும், உவாத்தி என்றும், வாத்தி என்றும் திரிந்தது. முந்து என்னும் முதனிலைத் தொழிற்பெயர் ஆகுபெயராய் முற்பிறப்பை யுணர்த்தியது. (௪௫)

பொறிகெடு நாணற்ற போழ்தே நெறிபட்ட
ஐவராற் றுனை வினைகெடும் —பொய்யா
நலங்கெடு நீரற்ற பைங்கூழ் நலமாறின்
நண்பினார் நண்பு கெடும்.

(ப-ரை) நாண் - (தனக்கு ஒவ்வாத இழிதொழிலில் ஒருவன்) நாணுதல். அற்ற போழ்தே - நீங்கினபோதே, பொறிகெடும் - (அவனது புகழாகிய) செல்வங்கெடும்; நெறிபட்ட - நல்வழியிலமைந்த,

ஐவரால் - ஐம்பொறிகளால், வினைதானே கெடும் - தீவினை முயற்சியில்லாமலே கெடும்; நீர் அற்ற பைங்கூழ்-நீரைப்பெறாதபயிர், பொய்யா - பொய்க்காத, நலம் கெடும் - விளைவுகெடும்; நலம் மாறின் (ஒருவனது) நற்குணம் வேறுபட்டால், நண்பினர் நண்புகெடும் (தன்னோடு) சிநேகர் கொண்ட சிநேகம் கெடும், எ - று.

(வி·ரை.) நாணுதல் என்பது செய்யாக்காரியஞ்செய்ய மனந்துணியாமை, அது ஒருவற்கு இல்லாமற்போனால் கண்முதலியவை இருந்து பயனில்லை; அல்லது சூதாடல், கள்குடித்தல், விபசரித்தல் முதலிய தீச்செயல்கள் செய்வதனால் பொருள்கெடும்; கண் செவி வாய்முதலிய இந்திரியங்கள், விஷயங்களிற் செல்லாமல் நெறிப்பட்டிருந்தால் மனம் கடவுளைப்பற்ற வினைகள்கெடும்; நீர் வாண்டாப் பயிரின் செழிப்பு கெடுவதுபோல் சிநேகிதனிடத்தில் அன்பு மாறினால் சிநேகம் கெடும் என்பதாம்.

அஃறிணையான இந்திரியங்களை, வினைகெட ஏதுவான சிறப்பு நோக்கி ஐவீர் என உயர்திணையாகக் கூறியதாம் (நன் - பொது சூ-உ அ;) "ஐவர்குமைக்கும்", "ஐவரை அறவாக்கிய" என்று பிரயோகங்களுண்டு. 'பைங்கூழ் நலம்கெடும்' என்பது (பொது - சூ - உக ன் உரையை விதியாக்கொள்க. (சக

நன்றிசா நன்றறியா தார்முன்னர்ச் சென்ற
விருந்தும் விருப்பிலார் முற்சாம்—அரும்புணர்ப்பின்
பாடல்சாம் பண்ணறியா தார்முன்ன ரூடல்சாம்
ஊட லுணரா ரகத்து.

(ப-ரை.) நன்றி அறியாதார் முன்னர் - (ஒருவர்செய்த) உபகாரத்தை மறக்கு மியல்பினரிடத்து, நன்றி சாம் - செய்த உபகார

அழியும்; விருப்பு இலார் முன் - அன்பில்லாதவரிடத்து, சென்ற விருந்தும் - சென்றவிருந்தினரும், சாம் - வாடுவர்; பண் அறியாதார் முன்னர் - பாலையாழ் முதலிய பண்ணை யறியாரிடத்து, அருபுணர்ப்பின் - (பண்ணோடு) அருமையாகிய பொருத்தத்தையுடைய, பாடல் சாம் - பாடுதற்றொழில்கெடும்; ஊடல் - (காமத்திற் கின்பமாகிய) ஊடுதலை, உணரார் அகத்து - அளவறிந்து நீங்காதநாயகரிடத்தில், ஊடல்சாம் - (அன்புடைய மாதர்) ஊடுதல் பயன்படாமல் அழியும், எ - று.

(வி-ரை.) உபகாரஞ்செய்த நன்மையைக் கொண்டாடாதவரிடத்தில் உபகாரம் பயன்படாது; அன்போடு ஆதரியாதவரிடத்தில் வரும் விருந்தினர் பயனடையமாட்டார்; சங்கீதரஸம் தெரியாதவரிடத்தில் நல்ல முறையான பாடல் சிறவாது; முன் ஊடியநா பின் சந்தோஷத்தைத் தருமென்கிற விசேஷத்தை அறியாதவரிடத்தில் அது உபயோகமாகா தென்பதாம்.

> "ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
> கூடலிற் றோன்றிய வுப்பு."

பயன்படாமையை 'சாம்' என்று உபசரித்தபடி. சாவும் என்பது ஈற்றுயிர்மெய் கெட்டது (நன் - வினை - சூ - உஉ. நன்றி, நன்று; இரண்டும் பண்புப்பெயர். றி - று - விகுதிகள், நல்-பகுதி; லகரம் றகரமாகி மெலிந்தது. விரும்பு என்பது வலித்தலால் விருப்பு ஆயிற்று, முதனிலைத்தொழிற்பெயர். முன்னர் அகத்து, இவை ஏழனுருபு. (௬௭)

> நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
> மாற்ற முரைக்கும் வினைநலம்—தூக்கின்
> அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்ன
> முகம்போல முன்னுரைப்ப தில்.

(ப-ரை.) தூக்கின் - ஆராயுமிடத்து, மலர் உண்மை-நல்லமலர்களினது இருப்பை, நாற்றம் உரைக்கும் - (அம்மலர்களின்) மணமானது அறிவிக்கும்; வினை நலம் - (ஒருவனுடைய) செய்கையினது நன்மை, கூறிய மாற்றம் - (அவன்) பேசியசொல், உரைக்கும் - அறிவிக்கும், அகம் - (ஒருவன் பிறர்க்குத் தோன்றாமல்) தன்னுள், பொதிந்த - மறைத்துவைத்த, தீமை-தீமையை, மனம் உரைக்கும் - (அவனுக்குத்) தன்மனமே அறிவிக்கும்; முன்னம்-(ஒருவனது) கருத்தை, முகம்போல-முகத்தைப்போல, முன் உரைப்பது-முன்னே தெரிவிக்கவல்லது, இல் - இல்லை, எ-று.

(வி-ரை.) வாசனையாலே பூவிருப்பதை அறிவதுபோல ஒருவன் பேசுகிற பேச்சினாலே அவன் செய்கை யிப்படிப்பட்டதென்று அறியலாம்; ஒருவன் உள்ளேவைத்திருக்குங் கேடான காரியங்களை அவன் எண்ணத்தா லறியலாம்; அவ்வெண்ணத்தை முகக்குறியா லறியலாம் என்றபடி.

நாற்றமுதலிய அஃறிணைகளை உரைக்கும் என்று உயர்திணைபோல் கூறியது (நன் - பொது - சூ - ௫அ) விதியாலெனவறிக. இவ்வாறுரைத்தல் ஸமாதி என்பதோர் குணவலங்காரமாம். (௪அ)

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லை தவமும்
அரசிலா ரில்வழி யில்லை அரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.

(ப-உ.ரை.) மழை இன்றி - மழையில்லாவிட்டால், மா நிலத்தார்க்கு - பெரியபூமியிலுள்ளார்க்கு, இல்லை - (பொருளும் இன்பமுமாகிய உலகியல்) இலதாகும்; மழையும்-(அத்தன்மையதாகிய) மழையும், தவம் இலார்-தவஞ்செயலுடையார், இல்வழி-இல்லாத இடத்து,

இல்லை - பெய்தலில்லை; தவமும் - (அத்தன்மையதாகிய) தவமும், அரசு இலார் - துரைத்தனமுறைமை யில்லாதவர்கள், இல்வழி - இருக்குமிடங்களில், இல்லை - நடத்தலிலது; அரசனும் - அவ்வரச னும், இல்வாழ்வார் - இல்லறத்தோடு கூடிவாழ்பவர், இல்வழி - இல்லாவிடத்து, இல் - இலனுவான், எ - று.

(வி-ரை.) மழையில்லாமலொருநன்மையு முண்டாகாது; நல்ல தவசிகளிருந்து தெய்வபிரார்த்தனை செய்யாதவிடத்து மழையுமுண் டாவதில்லை; அரசர்கள் முறையே ஆண்டு துஷ்டரை யடக்காவிடின் தவமும் நன்முய் நிறைவேறுவதில்லை; இல்லறத்தாரான குடிகள் நாட்டில் செவ்வையாய் வாழ்ந்திராவிடின் அரசர்க்குச் செல்வ முதலி யன பெருகித் துரைத்தனம் கிரமமாய் நடப்பதுமில்லை என்பதாம்: எனவே, அரசன் குடிகளைச் செழிக்கக்காத்துத் தான் முறையே அர சாட்சி செலுத்தித் தவமுதலிய தருமங்களைப் பாதுகாத்தால் கடவுள் மழைபெய்வித்து யாவருக்கும் சுகமுண்டாக்குவார் என்றதாயிற்று.

இங்கு ஒன்றுக்கொன்று காரணமாக முறையே கூறியதனுல் இது காரணமாலை என்னு மலங்காரம். இது அடிமோனையும் ஒரூஉத் தொடை பெற்றுவந்த இன்னிசைவெண்பா. இல்வழி இல்=வாஸஸ் தானம். வழி - ஏழனுருபு. இல்வாழ்வார் இல்வழி - இது பண்புத் தொகை. உம்மைகள் சிறப்பில் வந்தன. இல் ஈறுகெட்ட குறிப்பு முற்று. (௫௧)

போதினு னந்தும் புனைதண்டார் மற்றதன்
தாதினு னந்துஞ் சுரும்பெல்லாம்—தீதில்
வினையினு னந்துவர் மாக்களுந் தத்தம்
நனையினு னந்து நறா.

(ப-ரை.) போதினுல் - போரும்பினுல், புனை தண் தார்-தொடு க்கப்பட்ட குளிர்ச்சிபொருந்தியமாலை, நந்தும் - மிகுதியாக விளங

குப்; அதன் தாதினால் - அம்மலர்களினுடைய தாதுக்களின் மணத்தினல், சுரும்பு எல்லாம்-வண்டுகளெல்லாம், நந்தும்-(அப்போரும்புகளில்) வந்து சேரும்; தீது இல் - தீங்கில்லாத, வினையினால் - நற்செய்கையினால், மாக்களும் - மனிதர்களும், நந்துவர் - உயர்வர்; தத்தம் - மாமுதலியவற்றின், நினையினால் - அரும்பின் செழுமையினால், நறா நந்தும் - தேன்பெருகும், எ - று.

(வி-ரை.) நல்ல புஷ்பங்களால் மாலை வளர்வதுபோலவும், வண்டுகள் அந்தப் பூந்தாதுகளால் வளர்வதுபோலவும், பூங்கொத்தின் வளத்தால் அந்தத்தேன் வளர்வதுபோலவும், நற்செய்கைகளால் மனிதர் செழித்து வளர்வார் என்பதாம்.

இது எடுத்துக்காட்டுவமை. தமது தமது என்பது வேற்றுமைதொக்கவழி தம்தம் என நின்று "மவ்வீறு" என்கிற சூத்திரத்தினல் மகரங்கெடப் பொதுவிதியால் தகரம் மிகுந்து 'தத்தம்' என்றாயிற்று; அடுக்குத்தொடர். (௫0)

சிறந்தார்க் கரிய செறுதலெஞ் ஞான்றும்
பிறந்தார்க் கரியதுணை துறந்து வாழ்தல்
வரைந்தார்க் கரிய வகுத்தூண் இரந்தார்க்கொன்
றில்லென்ற லியார்க்கு மரிது.

(ப-ரை.) சிறந்தார்க்கு - மேம்பட்டவர்களுக்கு, செறுதல் - வெறுத்தல், அரிய - கூடாததாம்; பிறந்தார்க்கு - (நற்குடிப்) பிறந்தவர்க்கு, எஞ்ஞான்றும் - எப்போதும், துணை துறந்து - கூடப்பிறந்தாரைவிட்டு, வாழ்தல்-சுகப்பட்டிருத்தல், அரிய—; வரைந்தார்க்கு பொருக்கூட்டத்தினின்கினவர்க்கு, வகுத்து ஊண் - (முன்கூடயிருந்தோருக்குப்) பகுத்து உண்பது, அரிய—; இரந்தார்க்கு-யாசிப்பவர்க்கு, ஒன்று இல்லை எனல் - (அவர்விரும்பிய) ஒருபொரு

இல்லையென்று சொல்லுதல், யார்க்கும் - எப்படிப்பட்டவர்க்கும், அரிது—, எ-று.

(வி-ரை.) சிறந்தவர் ஒருவரையும் வெறுப்பதில்லை; நல்லகுடியிற் பிறந்தவர் உடன்பிறந்தவர்களை விட்டிருக்கமாட்டார்கள்.

" திண்பொரு ளெய்த லாகுந் தெவ்வரைச் செகுக்க லாகும்
நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையு நண்ண லாகும்
ஒண்பொரு ளாவ தையா வுடன்பிறப் பாக்க லாகா
எம்பியை யீங்குப் பெற்றே னென்னெனக் கரிய தென்றான்

ஒருகுடும்பத்தினின்றும் பிரிந்துவந்தவர்கள் மறுபடி அக்குடும்பத்தாருக்குப் பகுத்துக்கொடுத்து உண்பது நடவாதகாரியம்; யாசித்தவருக்கு இல்லையென்பது எல்லாருக்கும் கூடாத காரியமாம்: என்றால் யாசகர்க்கு இல்லையென்று சொல்லலாகாதென்றபடி.

'வரைந்தார்க்கரிய வகுத்துண்' என்பதற்கு, உணவு இவ்வளவு என்று ஏற்படுத்திக்கொடுக்கப்பெற்றவர் பிறருக்கு அதனைப் பகுத்துக்கொடுப்பது அரிது என்றும் பொருள் கொள்ளலாம். அரிது என்பது முன் வாக்கியமிரண்டில் இன்மையையும், பின் வாக்கியமிரண்டில் கூடாமையையு முணர்த்தியதென வறிக. அரியது - ஈறு தொகுத்தல்; செறுதல் முதலியவற்றைப் பன்மையாகவேனுங்கொள்ளவேண்டும். அரிது என்னும் பாடம் சிறந்தது. குவ்வுருபு கர்த்தாப் பொருளில் நியதியாய் மயங்கிவந்தது. 'என்றலியார்க்கும்' இதில் இகரம் சாரியை (நன்-மெய்யீறு - ௯ - ௫). (௩௧)

இரைசுடு மின்புறு யாக்கையுட் பட்டால்
உரைசுடு மொண்மை யிலாரை—வரைகொள்ளா
முன்னை யொருவன் வினைசுடும் வேந்தனையும்
தன்னடைந்த சேனை சுடும்.

(ப-ரை.) இரை - கொழுமையான உணவு, இன்பு உறு-(பிணியால்) துன்பப்படுகின்ற, ஆக்கையுள் பட்டால் - உடலினுள் சேர்ந்தால், சுடும் - வருத்தும்; உரை - (அறிவுடையோரது) சொல் தம் வாயிற்சொல்லே, ஒண்மை இல்லாரை - அறிவில்லாரை, சுடும் - வருத்தும்; ஒருவன் - ஒருவனது, வரைகொள்ளா - அறத்தினது எல்லையைக் கொள்ளாத, முன்னை வினை - முற்பிறப்பிற் செய்த தீவினையானது, சுடும் - (பிற்பிறப்பில் அல்லது இம்மையில்) வருத்தும்; வேந்தனையும் - அரசனையும், (வரைகொள்ளா) - நெறியில்லாத, தன் அடைந்த சேனை - அவனைச் சார்ந்து வாழ்கின்ற சேனை, சுடும் - (முறையறிந்து காக்காவிட்டால்) வருத்தும், எ-று.

(வி-ரை.) ஜீரணசக்தி போதாதவர்க்கு உணவே துன்பஞ்செய்யும்; விவேகமில்லாமல் கண்டபடியே பேசினல் அப்பேச்சினலேயே அவருக்குத் தீங்குவிளையும்; முற்பிறப்பில் கிரமந்தப்பி நடந்த பாவம் பிற்பிறப்பில் தீமைசெய்யும்; நல்ல நிபந்தனையில் சேனையை நிறுத்தாமற்போனல் அச்சேனையினலேயே அரசன் கேடு அடைவான் என்பதாம்.

'வரைகொள்ளா' என்பது பின்னிரண்டு வாக்கியங்களிலும் கூட்டிக்கொள்ளப்பட்டது. கடைசி வாக்கியத்தில் அது வினையெச்சம், பெயரெச்சமாக்கொள்வது சிறப்பன்று. ஒருவன் வரைகொள்ளாமலிருந்தது அவன் வினைமேலேற்றப்பட்டது. வேந்தனையும்: சிறப்பும்மை. (௫௨)

எள்ளற் பொருள திகழ்த லொருவனை
உள்ளற் பொருள துறுதிச்சொல்—உள்ளறிந்து
சேர்தற் பொருள தறநெறி பன்னூலும்
தேர்தற் பொருள பொருள்.

(ப-ரை.) ஒருவனை இகழ்தல் - பிறனொருவனை (ஒருவன்) அவமதித்தல், எள்ளற் பொருளது - (தன்னை அறிவுடையோர்) நிந்தித்தலாகிய பொருளமைந்தது; உறுதிச்சொல் - (ஒருவன் சொல்லும்) நன்மையாகியசொல், உள்ளற்பொருளது-(அவனது) நன்கு மதித்தலாகிய பொருளமைந்தது; அறநெறி-அறத்தினதுவழி, உள்அறிந்து-(ஒருவன்தன்) உள்ளத்தில் தெளிந்து, சேர்தற்பொருளது - (பின் அதில்) சேர்ந்து நடப்பதாகிய பொருளமைந்தது; பொருள்-மெய்ப் பொருள்கள், பல்நூலும் - பலநூல்களினாலும், தேர்தல்பொருள - ஆராய்தலாகிய பொருளமைந்தன, எ-று.

(வி-ரை.) ஒருவனை யிகழ்தால் பிறர் இவனை யிகழ்வார்கள் ; இதஞ்சொல்லுகிறவனே சிநேகிதனாவான்; சத்தியதர்மத்தை கைக்கொள்ளவேண்டியது தருமமே; பல சாஸ்திரங்களையும் ஆராய்ந்து சகல பதார்த்தங்களையும ஒருநூற்பொருளையும் நிச்சயிக்கவேண்டுமென்பதாம்.

பொருளது: குறிப்புமுற்று; பொருள் என்பதும் அப்படியே, பன்மை. (௲௩)

யாறு ளடங்குங் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள.

(ப-ரை.) யாறு-நதிகள், உள் அடங்கும்-தம்முள் அடங்குகின்ற, குளம் உள - பெருங்குளங்கள் உள்ளன; வீறுசால் - எல்லாப் பெருமைகளும் நிறைந்த, மன்னர் - அரசர், விழையும் - விரும்பித் தழுவும், குடி உள-குடிகளுள்ளன; தொல் மரபின்-பழமையாகிய முறைமையையுடைய, வேதம் - வேதத்தின்பொருள், உறுவன - பொருந்து

வனவாகிய, பாட்டு உள - செய்யுள்களுள்ளன, வேள்வியோடு ஒப்ப - யாகத்தோ டொப்பனவாகிய, வேளாண்மை உள-ஈகைகள் உள்ளன, எ-று.

(வி-ரை.) ஊராறுமுழுதும் அடங்கத்தக்க குளமிருப்பதுபோல் அரசரும் மேம்பட்டதென விரும்பும்படியான குடித்தனமுமிருக்கும். "அரசறிய வீற்றிருந்தவாழ்வும்" அரசரே மேலென்று மதிக்கவேண்டாம், அதிலும் விசேஷமான குடித்தனமும் உண்டென்றபடி. வேதமே விசேஷமல்ல, அதற்குச் சமானமான பெரியோர்செய்த நூல்களு முண்டாகையால் அவற்றையும் மேன்மையாகக்கொண்டாடுக என்றாராயிற்று. வேள்வியே தேவர்க்குப் பிரியமான செய்கையென்று எண்ணவேண்டாம்; காலத்தில் தக்கபாத்திரங்களுக்குச் செய்யுமுபகாரங்களும் தேவர்க்கு மிகவும் பிரியமானவைகளாம்: ஆதலால், அப்படிப்பட்ட உபகாரங்களைச் செய்யவேண்டும் என்பதாம்.

சால் : உரியடியாகவந்த வினைத்தொகை, உரியாகக்கொண்டு உரித்தொடர் என்பது நேர்வழி. உள: பலவின்பால் குறிப்புமுற்று; உள் - பண்படி, பகுதி; அ - விகுதி. ஒப்ப பலவின்பாற்பெயர்; ஒ - பகுதி, ப் - சந்தி, ப் - இடைநிலை, அ - விகுதி. (௯௪)

எருதுடையான் வேளாள னேலாதான் பார்ப்பான்
ஒருதொடையான் வெல்வது கோழி—உருவோ
டறிவுடையா ளில்வாழ்க்கைப் பெண்ணென்ப சேனைச்
செறிவுடையான் சேனு பதி.

(ப-ரை.) எருது உடையான் - மிக்க உழுமாடுகளுடையான், வேளாளன் - வேளாளனுவான்; ஒரு தொடையான் - ஒரு தொடையின் வல்லமையாலே, வெல்வது - வெல்ல வல்லதாகிய, கோழி - சேவல்போல, ஏலாதான்-(ஒருவரது பகையை) ஏற்றுக்கொள்ளாத

வன், பார்ப்பான் - பிராமணனாவான்; உருவோடு - (கணவன் விரும்பத்தக்க) உருவத்தோடு, அறிவு உடையாள் - (இல்லறவொழுக்கத்தை) அறிதலுடையவள். இல்வாழ்க்கை - இல்வாழ்க்கைக்குரிய, பெண் என்ப - பெண்ணென்று சொல்லப்படுவாள்; சேனை - (போர்முகத்தில்) தன்படையை, செறிவு உடையான் - விட்டு நீங்காமையை உடையவன், சேனாபதி - படைத்தலைவனாவான், எ-று.

(வி-ரை.) உழுது வேளாண்மைசெய்யு மியல்பையுடையவனே வேளாளனாவான்; அதுபோல், வீண்பகைகொண்டு வெல்லத்தலைப் படாமல் யாரிடத்தும் சாந்தமாயிருப்பவனே பார்ப்பானாவான்; அழகும் விவேகமுமுள்ள பெண்ணே இல்லறத்துக்கு இசைந்தவள்; சேனைகளெல்லாம் தன்மேல் பிரியமாயிருக்கும்படி நடந்துகொள்பவனே சேனாபதியாவனென்பதாம்.

கோழி என்பதோடு போல என்பது சொல்லெச்சமாச் சேர்க்கப்பட்டது; இவ்வுவமையை ஏலாதான் என்பதின் பகுதியாகிய ஏல் என்பதோடு கூட்டுக. ஆகவே கோழி பகையேற்பதுபோல் பகையேற்பது இல்லாதவன் எனப் பொருள்கூடும். தொடு - பகுதி, ஐ - தொழிற்பெயர்விகுதி. தொடுதல் - பரிசித்தல், சம்பந்தம் என்பதாம். கோழிபோல் வெல்வதை ஏலாதான் எனவுங் கூட்டலாம். ஒரு என்பது எதுவோவொன்று எனக் காரணமாகாததைக் காரணமாகக்கொண்டு என்னுங் கருத்தைப் பயந்தது. ஒருதொடையானும் என உம்மைவிரித்துப் பொருள்கூறலும் அமையும். 'ஏருடையான் வேளாளனேலாதான் பார்ப்பானும்,' நேருடைய வெல்வது எனவும் பாடம். எதிர்த்துவருவனவற்றை வெல்லுகின்ற எனப் பொருள் கூறுக. என்ப என்பதை எல்லாவற்றோடுங் கூட்டிக்கொள்க; பலர்பால்முற்று; என் - இடைச்சொல் பகுதி, ப - விகுதி, இதுவே காலங்காட்டும் (நன் - பதவி - சூ - ௧௮). (௫௫)

யானை யுடையார் கதனுவப்பர் மன்னர்
கடும்பரிமாக் காதலித் தூர்வர் கொடுங்குழைய
நல்லாரை நல்லவர் நாணுவப்ப ரல்லாரை
அல்லா ருவப்பது கேடு.

(ப-ரை) யானை உடையார் - யானையை ஆளுதலுடையவரசர், கதன் உவப்பர் - (போர்முகத்தில் அதனது) கோபித்தலை மகிழ்வார்; மன்னர் - அரசர், கடு பரிமா - (ஓடுதலில்) வேகமாகிய குதிரையை, காதலித்து - விரும்பி, ஊர்வர் - நடத்துவார்; கொடு குழைய - வளைவாகிய காதணியணிந்த, நல்லாரை - சிறந்த அழகுடைய மாதரை, நல்லவர் - நற்குணமுடையார், நாண் உவப்பர் - (அம்மாதரிடத்துள்ள) நாணமென்னுங் குணத்தினால் மகிழ்வார்; அல்லாரை - தீயாரிடத்து, அல்லார் - தீயோரால், உவப்பது - விரும்பப்படுவது, கேடு - கேட்டைத்தருஞ் செய்கையாம், எ-று.

(வி-ரை.) யானைக்காரர் அதன் சவுரியத்துக்குச் சந்தோஷப்படுவர்; அரசர் மிகுந்த வேகமுள்ள குதிரையேற விரும்புவர்; என்றால், சாதாரணமான ஜனங்கள் அதனால்வரும் நன்மைதீமைகளை யோசியாமல் தங்கள் மனத்துக்கு ஒத்த கொடுஞ்செய்கைகளையும் உகந்து கொள்வார்களென்பதாம். அயல் மனையாளை விரும்பாத உத்தமகுணமுள்ளவர் அப்பெண்கள் பிறரைக்கண்டால் நாணி நடப்பதற்குச் சந்தோஷப்படுவர், அப்படியல்லாத துஷ்டர் நாணமின்றி அயல்மனைவிகள் தங்களோடு பேசுவதைச் சந்தோஷிப்பர். இது இவ்விருவர்க்கும் இம்மைக்கு மறுமைக்குங் கேட்டைத் தருவதாம் என்றபடி.

கதம் - கதன், போலி. உவ - பகுதி, அர் - விகுதி. பகரங்கள் சந்தியு மிடைநிலையும். உக என்கிற பகுதியுமுண்டு; உகப்பர் என வரும். கொடுங்குழைய: குறிப்புப்பெயரெச்சம். கொடுங்குழை: பண்புத்தொகை, பகுதி, பொருள்; அ-விகுதி, ய் - உடம்படுமெய் (நன் -

வினை - கு - உ) நல்லவர்: நல் - பகுதி, பண்படி; அ - சாரியை, வ்-உடம்படுமெய், அர்-விகுதி. நல்லாரை - நல்லாரிடத்து, வேற்றுமை மயக்கம்;அல்லது நல்லாரை அவர்கொண்டிருக்கும் நாணினால் உவப்பர் எனவு முரைக்கலாம். கேடு : ஆகுபெயர். (௫௪)

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை மக்களி
னொண்மையவாய்ச் சான்ற பொருளில்லை யீன்றாளி
னெண்ணக் கடவுளு மில்.

(ப-ரை.) கண்ணில் சிறந்த - (உயிர்களுக்குக்) கண்ணைப்போல் மேம்பட்ட, உறுப்பு இல்லை-வேறு அவயவமில்லை; கொண்டானின்-(குலமகளுக்குக்) கணவனைப்போல, துன்னிய கேளிர்-நெருங்கிய உறவினர், பிறர் இல்லை - மற்றவரில்லை; மக்களின் - (தாய் தந்தையர்க்கு) நற்குணமுள்ள பிள்ளைகளைப்போல, ஒண்மைய ஆய் - ஒளியுள்ளன ஆகி,சான்ற பொருள் இல்லை-நிறைந்த பொருள்கள் வேறில்லை ஈன்றாளின்-(பிள்ளைகளுக்குத்) தாயைப்போல, எண்ணக் கடவுளும் இல் - (உயர்வாக) மதிப்பதற் குரியவளுமில்லை, எ-று.

'கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கல்வியின்
நுண்ணிய வாய பொருளில்லை கொண்டானில்
துன்னிய கேளிர் பிறரில்லை யீன்றாளில்
என்னக் கடவுளு மில்.' எனவும் பாடம்.

(வி-ரை.) கண்ணைக்காட்டிலும் சிறப்பான அவயவமில்லாத போல் பெண்டிருக்குக் கணவனைக் காட்டிலு மேலான வுறவினரில்லை ; ஆதலால், கணவனைக் கண்போலப் பாதுகாக்கவேண்மென்றதாயிற்று. தன் மக்களைப்போலத் தன் மனத்திற்குப் பிர

யான பொருள் வேறொன்றுமில்லை. "தம்பொருளென்பதம்மக்கள்." தாயைக்காட்டிலும் தெய்வமும்வேறில்லை யென்பதாம். "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்." இப்படியே வேதத்திலுஞ் சொல்லப் பட்டிருக்கிறது. தெய்வத்தை வழிபடுவதுபோல் தாயையும் வழிபட வேண்டுமென்பது கருத்து. மற்றொருபாடத்தில் கல்விபோல் நட்ப மான சாரியங்களை அறிவிப்பது வேறில்லை யென்பதாம். மற்ற தெல்லாம் ஒன்றே.

'ஈன்றாளோடு என்ன' சமானமென்று சொல்லும்படி என்று உரைக்க. 'ஈன்றாளோடின்ன கடவுளுமில்' எனப் பாடங்கொள்ளு தல் நன்றாம். இன் உருபுகள் ஒப்புப்பொருளில் வந்தன. சான்ற-சால் என்னும் உரியடியாகப் பிறந்த பெயரெச்சம். (௫௭)

கற்றன்னர் கற்றாரைக் காதலர் கண்ணோடார்
செற்றன்னர் செற்றாரைச் சேர்ந்தவர்—தெற்றென
உற்ற துரையாதா ருள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்லறிவி னார்.

(ப-ரை.) கற்றாரை காதலர் - கல்வி கற்றவர்களின்மேல் பிரிய மாயிருப்பவர், கற்றன்னர்-கல்வி கற்றவரோடொப்பர்; கண் ஓடார்-தாக்ஷிணியமில்லாதார், செற்றன்னர் - பகைவரோ டொத்தவர்; தெற்றென - தெளிவாக, உற்றது உரையாதார் - (தன் சிநேகித ருக்கு) உண்மையைச் சொல்லாதவர், செற்றாரை சேர்ந்தவர் - பகை வரைச் சேர்ந்தவரே; புல்அறிவினார் - தீயசிந்தை யுள்ளவர்கள், உள்-உள்ளே, கரந்து - மறைந்து, பாம்பு உறையும்-பாம்புவாசஞ்செய்கிற, புற்று அன்னர் - புற்றுக்குச் சமானமானவர், எ-று.

(வி-ரை.) கற்றவர்மேல் அன்புவைத்தவர் தாம் கல்லாதாராயி னும் மற்றவர்போலவேயாவர்; உற்றவரிடத்தில் சிறிதும் தாக்ஷிணிய மில்லாதவர் அவர்களுக்குப் பகைவரோடு சமானமானவராவர்; நேசி

த்தவருக்கு இதஞ் சொல்லாதவரும் பகையோடு சேர்ந்தவரேயாவர்; துஷ்ட எண்ணங்களை உட்கொண்டு மேலுக்குத் தோன்றாதவர்கள் உள்ளே பாம்புகளிருக்கிற புற்றைப்போன்றவர் என்று நால்வகையாகப் பிரித்துக் கருத்துக்கொள்க.

கற்றவர் அன்னர் கற்றன்னர் எனத் தொகுத்தலாயிற்று. கற்றனர் என்பதே விரித்தலாலே கற்றன்னர் என்றாயிற்றெனவுஞ் சொல்லலாம். அப்படியானால் 'கற்றனர் கற்றாரைக் காதலவர்' என்றே யிசைக்கலாம். செற்றன்னர் என்பது மிப்படியே. "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்." (௧அ)

மாண்டவர் மாண்ட வினைபெறுப வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே—யாண்டும்
பிறப்பார் பிறப்பா ரறனின் புறுவர்
துறப்பார் துறக்கத் தவர்.

(ப-ரை.) மாண்டவர் - (அறிவால்) மாட்சிமைப்பட்டவர், யாண்டும் - எக்காலத்தும், மாண்டவினை - மாட்சிமைப்பட்ட செய்கைகளை, பெறுப - செய்யப்பெறுவர்; வேண்டாதார் - (நல்வினையை) விரும்பாதவர், வேண்டா வினையும் - (தம்மால்) வேண்டப்படாத தீவினைப் பயனையும், பெறுப - பெறுவார்கள்; பிறப்பார் - பிறப்பவர், பிறப்பு - அப்பிறப்பில் செய்த, ஆர் அறன் - அருமையாகிய அறத்தினால், இன்பு உறுவர் - (மறுமையில் தேவராய்) இன்பத்தை அடைவர்; துறப்பார் - (யானென்னும் அகப்பற்றையும் எனதென்னும் புறப்பற்றையும்) துறப்பவர், துறக்கத்தவர் - முத்தியுலகத்தாராவர், எ-று.

(வி-ரை.) யோக்கியர் நற்கருமப்பயனை யடைவர்; மற்றவர் தீவினைப்பயனைப்பெறுவர்; நற்கருமங்களும் ஒருவிருப்பத்தாற்செய்தால் பிறப்புக்கு ஏதுவாகையால் அப்படிப்பட்ட கருமங்களைச் செய்பவரும் சொர்க்கபோக மனுபவித்துப் பின்பு பிறக்கவே பிறப்பார்கள்; அப்

படிப்பட்ட கருமங்களைத் துறந்து மோக்ஷத்துக்கு உரிய நிஷ்டை பெற்றவர் மோக்ஷலோகத்தை அடைவார்கள் என்பதாம்.

'பிறப்பார் அறன்' என்பதற்குப் பிறக்கும்படியானவர் செய்யத்தக்க அறன் எனவு முரைக்கலாம். 'துறக்கம்' என்பது இவ்வுலகத்தைத் துறந்தவிஞல் அடையத்தக்க வுலகத்துக்கு வந்ததனுல், முக்கியமானதுபற்றி ஈண்டு மோக்ஷலோகமெனக் கொள்ளப்பட்டது. சொர்க்கம் என்பதற்கும் இப்படியே பொருள் கொண்டிருக்கின்றனர். தேவலோகம் என்றாலும் மேலான தேவனுடைய லோகம் என்பதே சரியான பொருள். (௬௯)

என்று முளவாகு நாளு மிருசுடரும்
என்றும் பிணியுந் தொழிலொக்கும்—என்றுங்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாரும்
சாவாரு மென்று முளர்.

(ப-ரை.) என்றும் - எக்காலத்தும், நாளும் - நாண்மீன்களும், இருசுடரும் - சந்திரனும் சூரியனும், உள ஆகும் - உள்ளன ஆகும்; என்றும் - எக்காலத்தும், பிணியும் - (தொழிலுண்டாகாமைக்குக் காரணமாகிய) நோயும், தொழில் - (உழவுமுதலிய) தொழிலும், ஒக்கும் - உள்ளன ஆகும்; என்றும் - எக்காலத்தும், கொடுப்பாரும் - (ஒளிக்காமல்) கொடுப்பவர்களும், கொள்வாரும் - ஏற்போரும், அன்னர் - உளர் ஆவர்; என்றும் - எக்காலத்தும், பிறப்பாரும் - பிறப்பவர்களும், சாவாரும் - இறப்பவர்களும், உளர்-உளர் ஆவர், எ-று.

(வி-ரை) சிருட்டிகாலமுதல் பிரளயகாலம் வரையில் மாறாமல் கிரகங்களும் நக்ஷத்திரங்களும் இருப்பதுபோல் மனிதருக்குப் பிறப்பும் இறப்பும் பிணி முதலியனவும் அவர்களுடைய பலவகைப்பட்ட தொழில்களும் என்றும் வெள்ளம்போ லிடையறா திருப்பனவே யாதலால் அவைகளைப்பற்றிச் சந்தோஷத்தையும் விசனத்தையும் அடையவேண்டாம் என்பதாம்.

'இருசுடரும்' என்பது கிரகங்களுக்கெல்லாம் உபலக்ஷணம். உபலக்ஷணமாவது: ஒன்றினால் அதன் இனங்களைக் கொள்வது. ()

இனிதுண்பா னென்பா னுயிர்கொல்லா துண்பான்
முனிதக்கா னென்பான் முகனொழிந்து வாழ்வான்
தனிய னெனப்படுவான் செய்தநன் றில்லான்
இனிய னெனப்படுவான் யார்யார்க்கே யானும்
முனியா வொழுக்கத் தவன்.

(ப-ரை.) இனிது உண்பான் என்பான் - நல்லுணவை உண்பவ னென்று சொல்லப்படுவான், உயிர் கொல்லாது - பிற உயிர்களைக் கொல்லாமையாலாகிய உணவை, உண்பான் - உண்டுவாழ்பவன்; முனிதக்கான் என்பான்-(யாவராலும்) வெறுக்கத்தகுந்தவனென்று சொல்லப்படுவோன், முகன் ஒழிந்து - முகமலர்ச்சியில்லாதவனாகி, வாழ்வான் - வாழ்பவன்; தனியன் எனப்படுவான் - துணையில்லாதவ னென்று சொல்லப்படுவான், செய்த நன்று இல்லான் - (பிறர்க்கு) உபகாரஞ் செய்தலில்லாதவன்; இனியன் எனப்படுவான் - நல்லா னென்று சொல்லப்படுவோன், யார் யார்க்கே ஆனும் - எவரெவரிடத்தே ஆனாலும், முனியா - வெறுக்கப்படாத, ஒழுக்கத்தவன் - நடையையுடையவன், எ-று.

(வி-ரை.) ஒரு பிராணியை வதைத்துத் தின்னாமையே நல்ல வுணவாம்; பிறரைக்காண முகமலர்ந்திராமல் முகக்கோட்ட முடையானை யாவரும் வெறுப்பார்கள்; இவ்வுலகத்தில் எந்தத்துணையைத் தேடினும் மறுமைக்குரிய நல்லறந் தேடாதவன் துணையற்றவனே யாவான்; யாரிடத்தும் கோபமின்றிச் சாந்தமாய் நடக்கவல்லவன் யாவருக்கும் இஷ்டனேயாவான் என்றது.

ஆயினும் என்பது ஆனும் என இடைக்குறையாயிற்று. முனியா ஒழுக்கம் - முனியாமையாகிய ஒழுக்கம், பொய்யாவிளக்கம்

என்பதுபோல். முனிதக்கான் முனிய என்பது ஈறுதொக்கது; அல்லது, முனி: முதனிலைத்தொழிற்பெயர். முனிதற்குத் தக்கான் என நான்கனுருபு தொக்கதாக் கொள்ளலாம். "அவன் முகங்கொடுத்தான், முகங்கொடுக்கவில்லை" என்பதுபோல் "முகன் ஒழிந்து" என்பதும் வழக்கு. (சுக)

ஈத்துண்பா னென்பா னிசைநடுவான் மற்றவன்
கைத்துண்பான் காங்கி யெனப்படுவான்—தெற்ற
நகையாகு நண்ணார் முற்சேறல் பகையாகும்
பாடறியா தானை யிரவு.

(ப-ரை.) ஈத்து - (வறியார்க்குக்) கொடுத்து, உண்பான் என்பான் - (தானும்) அநுபவிப்பவனென்று சொல்லப்படுவோன், இசை நடுவான்-புகழை நிறுத்தவல்லவன்; அவன் கைத்து - அந்தக் கொடுப்பானுடைய பொருளை, உண்பான்-உண்பவன், காங்கி எனப்படுவான் - குடம்போலுஞ் சுதந்தரமில்லான் அல்லது பிறர்பொருள்மேல் ஆசையுள்ளான் என்று சொல்லப்படுவான்; நண்ணார்முன்-பகைவரிடத்து, சேறல் - (ஒருவன் நட்பை விரும்பிச்) செல்லுதல், தெற்ற நகை ஆகும் - (பிறர் தன்னைத்) தெளிய அவமதித்துச் சிரித்தற்குக் காரணமாகும்; பாடு - (பிறருடைய) வறுமைத்துன்பத்தை, அறியாதானை-உணரமாட்டாதவனிடத்து, இரவு-இரத்தல், பகை ஆகும் - இரப்போனுக்கு விரோதமாகும், எ-று.

(வி-ரை.) பிறர்க்குக்கொடுத்து உண்பவனுக்குக் கீர்த்தியுண்டு; அவன் கொடுப்பதை வாங்கி யுண்பவனுக்குப் பிறர்பொருளை யிச்சிக்கிறவன் என்கிற அபகீர்த்தியுண்டு; அப்படி இரப்பதிலும் தன்மேலன்பில்லாதவரிடத்துச் சென்று இரப்பது இகழ்ச்சிக்குக் காரணமாம்; தன் தகுதி யறியாதவரிடஞ் சென்று இரப்பதனால் அவன் தன்னை அவமதிக்கநேரிடு மானதைப்பற்றித் தனக்கு அவன்மேல்

பகையுண்டாகும். எனவே கொடுப்பது மேன்மையேயன்றி யிரப்பது மேன்மையன்றெனவும், இரப்பதிலும் பகைவரிடத்தும் தகுதியறியாதாரிடத்துஞ் செல்லாமல் தகுந்தவரிடத்துச் செல்லவேண்டுமெனவுஞ் சொல்லியதாம்.

ஈந்து என்பது வலிந்து ஈத்து என்று ஆயிற்று; அல்லது சந்தியால் வந்த தகரம் மெலியாது நின்றதெனவுங் கொள்ளலாம். என்பான் என்பது எழுவாயின் சொல்லுருபு. காங்கி என்பது காங்க்ஷி என்னும் ஆரியத்தின் திரிபு. தெற்ற—தெற்று - பகுதி, அ - வினையெச்சவிகுதி. சேறல்—செல்-பகுதி, முதல் நீண்டது, தல்-விகுதி, (மெய் - சூ - உசு) தகரம் றகரமாக லகரம் கெட்டது. நகை, பகை அததன் காரணத்துக்கு ஆகுபெயர். (சுஉ)

நெய்விதிர்ப்ப நந்து நெருப்பழற் சேர்ந்து
வழுத்த வரங்கொடுக்கு நாகம் தொழுத்திறந்து
கன்றூட்ட நந்துங் கறவை கலம்பரப்பி
நன்றூட்ட நந்தும் விருந்து.

(ப-ரை.) நெருப்பு அழல் - தீயினது சுடர், நெய் விதிர்ப்ப - நெய்யைச் சிந்த, நந்தும்-ஓங்கும்; சேர்ந்து வழுத்த-சரணமடைந்து துதிக்க, நாகம் - தேவலோகம், வரம் கொடுக்கும் - இஷ்டத்தைத் தரும்; தொழுத்திறந்து - கொட்டிலைத்திறந்து, கன்று ஊட்ட-கன்றினைப்பாலுண்ணச்செய்ய, கறவை-கறக்கும்பசு, நந்தும்-பால்பெருகும் அல்லது களிக்கும்; கலம் பரப்பி-உண்கலத்தை விரித்து, நன்று ஊட்ட - இனிமையாக உண்பிக்க, விருந்து - விருந்தாகவந்தவன், நந்தும் - மனங்களிப்பான், எ - று.

(வி-ரை.) நெய்பெய்தால் நெருப்புவளர்ந்து விளங்குவதுபோல் தேவர் தம்மைத் துதிக்கத் துதிக்கப் பிரசன்னராகி வரந்தருவர்;

கன்றின் வரவை எதிர்பார்த்திருக்கிற பசுவினிடத்துக் கன்றை ஊட்டவிட அப்பசுக்களிப்பதுபோல் விருந்தினரை நன்குபசரித்துப் போசனமிட அவன் களிப்பானென்பதாம்.

நாகம் என்பது இடவாகுபெயராய்த் தேவரை யுணர்த்தியது. நாகர் எனப்பாடமாயின் கொடுப்பர் என வினையை மாற்றிக்கொள்க. செய்யுமென்முற்று பலர்பாலுக்கு வருவதன்று (வினை - சூ - ௨௧). ஊண் என்பது முதனீண்டு விகுதி பெற்று ஊட்டு எனப் பிறவினைப் பகுதியாயிற்று. நன்று என்னும் பண்புப்பெயர் ஊட்ட என்னும் வினைக்கு உரியாகின்றது. 'வரங்கொடுப்பர் தேவர்' எனறும், 'வரங்கொடுப்பா நாகர்' எனறும் பாடமுண்டு. (௩௧)

பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழியின்மை கேட்டா லறிக பொருளின்
நிகழ்ச்சியா னாக்க மறிக புகழ்ச்சியால்
போற்றாதார் போற்றப் படும்.

(ப-ரை.) பழி இன்மை - (ஒருவர்) பழிக்கப்படுங் குணமிலரா யிருத்தலை, மக்களால் - (அவருக்கு) நன்மக்களுளராயிருத்தலால், ஒருவன காண்க - ஒருவன் அறியக்கடவன்; கெழி இன்மை - (ஒருவர் தன்னிடத்து) நட்புரிமை இலராயிருத்தலை, கேட்டால் - தான் செல்வமிழத்தலால் அல்லது அவன் தனக்குச் செய்யும் கெடுதியால், (ஒருவன்) அறிக - ஒருவன் அறியக்கடவன்; ஆக்கம் - (ஒருவரது) நல்வினையை அல்லது செல்வ நிலைமையை, பொருளின் நிகழ்ச்சியால் - (அவரிடத்துப்) பொருளினது நீங்காமையினாலே அல்லது பொருள் வரும வழியால், (ஒருவன்) அறிக - ஒருவன் அறியக்கடவன், புகழ்ச்சியால் - (ஒருவன் பலராலும்) புகழப்படுதலாலே, போற்றாதார் - பகைவராலும், போற்றப்படும் - வணங்கப்படுவான், எ - று.

(வி-ரை.) ஒருவன் தனக்குப் பிறக்கும் பிள்ளைகள் நல்லவரா யிருந்தால் தான் பழிப்பில்லாதவனாவான்; அல்லது, நல்ல பிள்ளை களைப் பெறுவதனால் பழிப்பில்லாதவனென்பதை அறியலாம்; ஒரு வன் தனக்குக் கேடு செய்வதினால் அவன் சிநேகமில்லாதவனென் பதை யறியலாம்; ஒருவனுக்குப் பொருள் வரும்வழி நீதியுள்ளதா யிருப்பதனால் விருத்தியாவதை யறியலாம்; ஒருவன் கொடுப்பது முதலிய சற்குணங்களால் கீர்த்தி பெற்றிருப்பானாயின் அவனைப் பகைவரும் கொண்டாடுவர் என்பதாம்.

கெழுமை என்னும் பண்பு ஈறு கெட்டுவந்தது. 'செழுவின்மை' என்றும் பாடம். போற்றுதார் போறறுதலே படும அடையும் எனவு முரைக்கலாம். (கூ௭)

> கண்ணுள்ளுங் காண்புழிக் காதற்றும் பெண்ணின்
> உருவின்றி மாண்ட வுளவாம் ஒருவழி
> நாட்டுள்ளு நல்ல பதியுள பாட்டுள்ளும்
> பாடெய்தும் பாட்டே யுள.

(ப-ரை.) கண்ணுள்ளும் - (மக்களுடைய) கண்களிலும், காண் புழி - ஆராய்ந்தால், ஒருவழி - சிறுபான்மை, காதற்று - (கண்டோ ரால்) விரும்பப்படுங்கண், ஆம் - உளது; பெண்ணின் - பெண்களுள் ளும், உரு இன்றி - அழகிய உருவமில்லாதிருந்தும், (ஆராய்ந்தால் சில ரிடத்து) மாண்ட - மாட்சிமைப்பட்ட குணமுஞ் செய்கையும், உள - உண்டு; நாட்டுள்ளும் - நாடுகளிலும், நல்ல பதி - (ஆராய்ந்த சிறுபான் மை) நல்ல நாடுகள், உள - உண்டு; பாட்டுள்ளும் - பாட்டுகளிலும், பாடு எய்தும் - (ஆராய்ந்தால் சிறுபான்மை) பேரழகு அமைந்திருக் கும், பாட்டே உள - பாட்டுகள் உண்டு, எ - று.

(வி-ரை.) ஒருவன் வெளிப்படையாகக்கண்கொண்டு பாராமல் உட்கண்ணால் பார்க்கும் பொருள்களிலும் அவன் இச்சித்த பொருள்

கள் உண்டு. அழகில்லாமற்போனாலும் குணமுள்ள பெண்களு முண்டு; எவ்வளவு கேடான ராச்சியத்திலும் ஒரு நல்ல இடமிருக் கும்; ஒருவன் சீரின்றிப்பாடிய பல பாட்டினுள்ளும் சில நல்ல பாட் டிருக்குமென்றபடி; ஆகவே எதையும் முழுதும் சாரமற்றதென்று நினைத்து அசட்டை செய்யாமல் ஆராய்ந்து சாரமறிய வேண்டுமென் பதாம்.

உம்மைகள் சிறப்புப்பொருளில் வந்தன. பாட்டே என்பதில் ஏகாரமும் சிறப்புப்பொருளில் வந்ததெனக் கொள்ளவேண்டும் 'பாட்டுமுள' எனப் பாடங்கொள்ளல் நன்று. (சுடு)

திரியழற் காணிற் றொழுப விறகின்
எரியழற் காணி னிகழ்ப—ஒரு குடியிற்
கல்லாது மூத்தானைக் கைவிடுப கற்றானின்
இளமை பாராட்டு முலகு.

(ப-ரை.) திரி-திரித்த நூலிலேற்றிய, அழல் காணின்-விளக் குச் சுடரைக் கண்டால், உலகு தொழுப - தேசத்தார் மதித்துக் கைகூப்புவர்; விறகின் - விறகினிடத்து, எரி அழல் காணின் - எரி கின்ற சுடரைக்கண்டால், இகழ்ப - அவமதிப்பர்; ஒருகுடியில் - ஒரு குடும்பத்தில், கல்லாது-(கல்வியைக்) கற்காமல், மூத்தானை-முதிர்ந் தவனை, (உலகு) கைவிடுப - தேசத்தார் ஏற்றுக்கொள்ளார்; கற்றா னின் - கல்வியை யறிந்தவனிடத்துள்ள, இளமை - இளமைப் பரு வத்தை, (உலகு) பாராட்டும்-தேசத்தார் மதித்து ஏற்றுக்கொள்வர், எ - று.

(வி-ரை.) திரியிலேற்றிய சுடரும் விறகிலேற்றிய சுடரும் இர ண்டும் அக்கினியின் சொரூபமேயானாலும் நன்மை பயக்குங்குணம் பற்றிச் சனங்கள் சிறிதான தீபத்தைத் தொழுவதும் பெரிதானா லும் மற்றதை அப்படிச்செய்யாது இகழ்வதும்போல், ஒரே குடும்பத்

திற் பிறந்தவர்களில் சிறியவனானாலும் கற்றவனை மேற்கொள்ளுதலும் பெரியவனானாலும் கல்லாதவனைத் தள்ளிவிடுதலும் உலகத் தியல்பாயிருக்கின்றது என்பதாம்.

தீபத்தில் லக்ஷ்மியின்களை யுண்டென்றும் அதனைக் கும்பிட்டால் க்ஷேமமாகுமென்றும் சாஸ்திரஞ் சொல்லுகின்றது. இப்படி உலகத்தார் நடப்பதுமுண்டு. 'தொழுவர்' என்றும் பாடம். 'ஒரு குடியுள்' என்றும் பாடம், 'கல்லாத மூத்தோனை' என்றும் பாடம். 'கைவிடுப கற்றான்' என்றும் பாடம். "மூத்தோனைக் கைவிட்டுக் கற்றானிளமை பாராட்டும்" என்று பாடமோதின் நான்கு காரியம் சொல்லப்படாவாம். (௬௬)

கைத்துடையான் காமுற்ற துண்டாகும் வித்தின்
முளைக்குழா நீருண்டே லுண்டாம் திருக்குழாம்
ஒண்செய்யாள் பார்த்துறி னுண்டாகு மற்றவள்
துன்புறுவ ளாயிற் கெடும்.

(ப-ரை.) கைத்து உடையான் - பொருளையுடையவன், காமுற்றது - விரும்பிய பொருள், உண்டாகும் - கிடைக்கும்; நீர் உண்டு எல் - (தன்னிடத்து) நீருள்ளதாயிருந்தால், வித்தின் முளைக்குழாம் உண்டாம் - விதைகளினது முளைகளின் திரள் தோன்றும்; ஒள் செய்யாள் - அழகிய திருமகள், பார்த்து - (ஒருவனது நன்மையைக்) கண்டு, உறின் - சேர்ந்தால், திருக்குழாம் - பெருஞ்செல்வம், உண்டு ஆகும் - உண்டாகும்; அவள் - அத்திருமகள், துன்பு உறுவள் ஆயின் - (அவனது தீமையைப்பார்த்துத்) துன்பப்படுவாளானால், கெடும் - (அப்பெருஞ்செல்வம்) இலதாகும், எ - று.

(வி-ரை.) நீர்வளமிருந்தால் விதைகள் முளைப்பதுபோல திரவியமுண்டானால் நினைத்த காரியமெல்லாம் கைகூடும்; அந்தத் திரவியமும் திருமகள் கடாக்ஷமுண்டானால்தான் உண்டாகும்; அவள்

மனக்கோட்ட மடைந்தால் நாசமாகும்; என்றதனால் திருமகள் மனம் கோணுதபடி நடக்கையின்றி நன்னடக்கையைக் கைக்கொள்ள வேண்டு மென்றதாயிற்று.

பார்த்துறின் இதில் உறு துணைவினை. மற்று: அசை. 'உறவாளாகில்' என்றும் பாடம். (௬௭)

ஊனுண் டுழுவை நிறம்பெறூஉ நீர்நிலத்துப்
புல்லினு னின்புறூஉங் காலேய நெல்லின்
அரிசியா னின்புறுவர் கீழெல்லாந் தத்தம்
வரிசையா னின்புறூஉ மேல்.

(ப-ரை.) ஊன் உண்டு - தசையையுண்டு, உழுவை - புலிகள், நிறம் பெறும் - (உடலின்) ஒளியை அடையும்; காலேயம் - பசுக்கூட்டம், நீர் நிலத்து - நீர்வளமுள்ள நிலத்தில் முளைத்த, புல்லினான் இன்பு உறும் - புல்லினாலே சுகித்திருக்கும்; கீழ் எல்லாம் - கீழ்மக்களெல்லாம், நெல்லின் அரிசியான் - நெல்லிலுண்டாகிய அரிசியினால், இன்பு உறுவர் - உள்ளமகிழ்வர், மேல் - மேன்மக்கள், தத்தம் - (பிறரால் செய்யப்படும்) தத்தமக்குரிய, வரிசையான் - முறையாகிய உபசாரத்தினால் அல்லது கிரமமான செய்கைகளால், இன்பு உறும் - உள்ள மகிழ்வர், எ-று.

(வி-ரை.) மாமிசந்தின்று புலி களிக்கும் என்பது பிறர்க்குத் தீங்குசெய்து துஷ்டர் களிப்பார்கள் என்பதைக் குறிப்பிக்கும்; நல்ல புல்லைத்தின்று மாடுகள் களிப்பதுபோல் அரிசி அகப்பட்டால் கீழ் மக்கள் அதைத்தின்று அவ்வளவோடே களித்திருப்பார்களே யன்றித் தாம் நடக்கவேண்டிய வொழுங்கைச் சிந்திக்கமாட்டார்கள்; மேன்மக்களோ உணவு முதலிய வுலகவாழ்க்கைகளைக்கொண்டு களியாமல் தாம்செய்யவேண்டிய நற்செய்கைகளைச்செய்து சந்தோஷிப்பார்க ளென்றபடி.

அளபெடைகள் இன்னிசைக்கு வந்தன. கீழ், மேல்: ஆகுபெயர்கள். 'அரிசியானின்புறாஉம்' என்றும் பாடம். (கூஅ)

பின்னவாம் பின்னதிர்க்குஞ் செய்வினை யென்பெறினு
முன்னவா முன்ன மறிந்தார்கட்—கென்னும்
அவாவா மடைந்தார்கட் குள்ளந் தவாவாம்
அவாவில்லார் செய்யும் வினை.

(ப-ரை.) பின் - (செய்யத்தொடங்கிய) பின்பு, அதிர்க்கும் - நடுக்கத்தைத் தருகின்ற, செய்வினை - காரியங்கள் அல்லது செய்யப்படும் தொழில்கள், பின்ன ஆம் - (ஆராய்ந்து துணியாதார்க்கு) - பின்தோன்றுவன ஆகும்; என் பெறினும் - பெரும்பயனை அடையக்கூடுமாயினும், முன்னம் - (செய்யத்தொடங்கும்) முன்னே, அறிந்தார்க்கு - ஆராய்ந்து துணிந்தவர்க்கு, முன்ன ஆம் - (அச்செய்வினைகள்) முன்னே தோன்றுவன ஆகும்; என்னும் - (பாரும்பொருளல்லாத) எதன் விருப்பத்தையும், அடைந்தார்கட்கு - கொண்டவர்கட்கு, உள்ளம் - (அதுகாரணமாக) உள்ளத்தில், அவா ஆம் - (விட்ட) விருப்பங்கள் உண்டாகும்; அவா - அவ்விருப்பம், இல்லார் செய்யும் வினை - இல்லாத துறவிகள் செய்யும் துறவறத் தொழில்கள், தவா ஆம் - கெடாவாம், எ-று.

(வி-ரை.) முன்னதா யோசியாமற்போனால் துன்பந்தரத்தக்க காரியங்கள் முன்தோன்றாமல் அனுபவிக்கும்போதுதான் தெரியும்; யோசிப்பவர்களுக்கோ முன்னிட்டே தோன்றுமாகையால் அவர்கள் துன்பமடையார்கள்; பொன் மண் முதலியவைகளை முயன்று அடைந்துகொண்டேயிருப்பவருக்கு மேன்மேல் ஆசைவளர்ந்து வருமேயல்லது கெடுவதில்லை; அப்படிப் பொருண்முயற்சி செய்யாமல் அறவினை செய்பவர்களுக்கு அவாக்கெட்டு மனம் சுத்தமாயிருக்கும்.

'பின்னவா முன்னூர்க்குப் பின்னதிர்க்குஞ் செய்வினை' என்றும் பாடம். 'பின்னவர் பின்னதிர்க்கும்' என்றும் பாடம். பின்ன,

முன்ன இவை குறிப்புவினையாலணையும் பெயர்கள். குறிப்பு முற்றாகக்கொண்டால் ஆம் - அசை. பின், முன் - பகுதிகள், அ-விகுதி. முன்னார்: முன்னு-பகுதி, (யோசித்தல்), ஆர் - விகுதி; இது இடைநிலையின்றி வந்ததனால் எதிர்மறையை யுணர்த்தும்;எதிர்மறை ஆகாரம் புணர்ந்துகெட்டதெனவுங் கொள்ளலாம். தவா: தவு - பகுதி, ஆ - எதிர்மறைப் பலவின்பால் விகுதி (நன் - வினை - சூ - ௪௦) "முற்றுமற்றொரோவழி' என்றதனால் உகரம் கெட்டது. (௬௬)

கைத்திலார் நல்லவர் கைத்துண்டாக் காப்பாரின்
வைத்தாரி னல்லர் வறியவர்—பைத்தெழுந்து
வைதாரி னல்லர் பொறுப்பவர் செய்தாரின்
நல்லர் சிதையா தவர்.

(ப-ரை) கைத்து - பொருள், உண்டு ஆக - உண்டாயிருக்க, காப்பாரின் - (பொருளாலாகும்பயனை அடையாமல்) அதைக்காப்பவரினும், கைத்து இலார் - அப்பொருளில்லாதவர், நல்லவர் - (உலகத்தாரால் பழிக்கப்படாமையால்) நல்லவராவர்; வைத்தாரின் - (பொருளை) வைத்து இறந்தவரினும்; வறியவர் - தரித்திரர், நல்லர் - (வைத்து இறவாமையால்) நலலவராவர், பைத்து எழுந்து - கோபித்தெழுந்து, வைதாரின் - நிந்தித்தவரினும், பொறுப்பவர் - (அந்நிந்தையைப்) பொறுத்துக்கொண்டிருப்பவர், நல்லர் - நல்லவராவர்; செய்தாரின் - உபகாரம் செய்தவரினும், சிதையாதவர் - அவ்வுபகாரத்தை மறவாதவர், நல்லர் - நல்லவராவர், எ-று.

(வி-ரை.) பணமிருந்தும் அதைத்தவரைக் காப்பாற்றாமலிருக்கிறவர்களைக் காட்டிலும் பணமில்லாதவர்களே யோக்கியர்; தானும் அனுபவியாமல் பணத்தைச் சும்மாவைத்து இழப்பவரைக்காட்டிலும் தரித்திரரே மேலானவர் (இவர்களுக்குப் பழிப்பில்லாமையாலென அறிக); ஒருவர் பொல்லாங்கு செய்ததைக்குறித்து அவரைத்

திட்டுவதினும் பொறுப்பது நல்லது; நூதனமாக வொருதருமகாரி யத்தைச் செய்வதைப்பார்க்கிலும் ஒருவர்செய்த தருமகாரியத்தை அழிக்காமலிருப்பது நல்லது.

'கைத்தில்லார் நல்லராங் கைத்துண்டாய்க் காவாரின்' என் றும் பாடமுண்டு. வறியவர். வறுமை ஈ-றுபோய் உகர மிகரமானது பகுதி, அ - சாரியை, ய்-உடம்படுமெய், அர்-விகுதி. கைத்து: கை - பகுதி, (கோபித்தல்), த் - சந்தி, த் - இடைநிலை, உ - விகுதி. (எ0)

மகனுரைக்குந் தந்தை நலத்தை யொருவன்
முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை—அகனீர்ப்
பிலத்தியல்பு புக்கா னுரைக்கு நிலத்தியல்பு
வான முரைத்து விடும்.

(ப-ரை.) மகன் - புத்திரன், தந்தை - தந்தையினுடைய, நல த்தை - நற்குணத்தை, உரைக்கும் - (தான் நற்குணமுடைமையால் பிறர்க்கு) அறிவிப்பான்; ஒருவன் முகன் - ஒருவனுடைய முகம், உள் நின்ற வேட்கை - (அவனது) மனத்திலுள்ள விருப்பத்தை, உரைக்கும் - (பிறர்க்கு) அறிவிக்கும்; அகல் நீர் - விசாலமான தன் மையையுடைய, பிலத்து இயல் - குகையின் குணத்தை, புக்கான் உரைக்கும் - (அதில்) இறங்கினவன் (பிறர்க்கு) அறிவிப்பான்; நில த்து இயல்பு - ஒரு நிலத்தினது தன்மையை, வானம் - மழையா னது, உரைத்துவிடும் - சொல்லிவிடும், எ-று.

(வி-ரை.) மகன் அயோக்கியனுயிருந்தால் அவன் தகப்பனும் அயோக்கியனு யிருப்பானென்று ஊகிக்கலாம்; உள்ளே ஒருவனுக் கிருக்கிற ஆசையை அவன் முகக்குறியால் அறியலாம்; குகையிற் போனவனுடைய சுகாசுகங்களால் குகையின் தன்மையை அறிய லாம்; மழைபெய்தபோது தண்ணீர் தங்காமலும் பயிர்செழிக்காமலு மிருப்பதனாலே தீயநிலமென்றும், நீர்தங்கியும் பயிர்செழித்தும் வரு

வதனால் நன்னிலமென்றும் அறியலாமென்றவாறு. இவை இரண்டும் உபமானம்.

'அகனீர்ப்பிலத்தியல்பு புக்கானுரைக்கும்' என்னும் தொடருக்கு, பசவின நீரையுடைய பள்ளத்தினது நிலையை என்றுரைப்பினுமாம். 'புலத்தியல்பு' என்றும் பாடம். 'நிலத்தியல்பு' வானமுரைத்து விடும்' என்னும் தொடருக்கு, நிலத்திலுள்ள மக்களது தன்மையை மழையானது (பெய்தும் பெய்யாதும் அவர்க்கு) அறிவிக்கும் என்று பொருள் கூறினுமமையும். (வினை - சூ - உ௩ - தினல் உரைக்கும் என்பது ஆண்பாலுக்கு வந்தது) முகன்: போலி. (எக)

பதிநன்று பல்லா ருறையி னொருவன்
மதிநன்று மாசறக் கற்பின்—நுதிமருப்பின்
ஏற்ற‌ன்வீ றெய்து மினநிரை தான்கொடுக்கும்
சோற்றான்வீ றெய்துங் குடி.

(ப-ரை.) பல்லார் - (முயற்சியுடைய) பலகுடிகள், உறையின் - வசித்தால், பதி நன்று-நாடு சிறப்புடையதாகும்; மாசு அற - (விபரீதம் ஐயம் ஆகிய) குற்றமில்லாமல், கற்பின் - (கற்கத்தகும் நூல்களைக்) கற்றால், ஒருவன் மதி நன்று-ஒருவனது அறிவு தெளிவுடையதாகும்; நிரை இனம்-பசுக்கூட்டம், நுதி மருப்பின் - கூர்மையாகிய கொம்புகளையுடைய, ஏற்றான் - ரிஷபத்தினாலே, வீறு எய்தும் - (அச்சமில்லாமல்) தைரியத்தை யடைந்திருக்கும்; குடி - தன்குடும்பம், தான் கொடுக்கும் - (முயற்சியுடைய ஒருவன்) தான்கொடுக்கின்ற, சோற்றான் - உண்டியினால், வீறு எய்தும் - பெருமையடைந்திருக்கும், எ-று.

(வி-ரை.) அனேகர் குடியிருக்கிறவூர்தான் வாசத்துக்குத் தக்கவிடம்; நன்றாய்க் கல்வி கற்றால்தான் புத்தி தெளிவாயிருக்கும்; நல்ல

விருஷபங்களை என்றால் பசுமாடுபெருமையாகக் கொள்ளப்படும்,அல்லது நல்ல விருஷபங்களைச் சேர்ந்தால் நல்ல கன்றுகளைப் பெற்றுப் பசுமாடு பெருமையடையும்; அன்னதானஞ் செய்வதனால் ஒரு குலம் பெருமைபெறு மென்றவாறு. வீறு: முதனிலைத்தொழிற் பெயர். (எ௨)

ஊர்ந்தான் வகைய கலினமா நேர்ந்தொருவன்
ஆற்றல் வகைய தறஞ்செயல் தோட்ட
குளத்தனைய தூம்பி னகலங்க டத்தம்
வளத்தனைய வாழ்வார் வழக்கு.

(ப-ரை.) கலினமா - கடிவாளம்பூண்ட குதிரைகள், ஊர்ந்தான் - (தம்மேல்) ஏறிநடத்துவோனுடைய, வகைய - (நடத்தும்) வகைக்கிசைந்தன ஆம்; அறம் செயல்-தருமகாரியத்தைச்செய்வது, ஒருவன்—,நேர்ந்து-(செய்ய) உடன்பட்டு, ஆற்றல் வகையது - செய்யுந்திறத்திற்குத் தக்கதாயிருக்கும்; தூம்பின அகலங்கள்-தூம்புகளினுடைய அல்லது நீர்க்கால்களின் விரிவுகள், தோட்ட - தோண்டப்பட்ட, குளத்து அனைய - குளங்களின் அளவின ஆம்; வாழ்வார் - (இல்லாளோடு கூடி) வாழ்வாரது, வழக்கு - செய்கைகள், தத்தம் வளத்து அனைய - வருவாயின் அளவின ஆம், எ-று.

(வி-ரை.) ஏறிச்செலுத்துகிறவனுடைய சாமர்த்தியத்திற்குத் தக்கதாய் நடக்கும் குதிரைகள்; ஒருவன் செய்கிற நேர்மையின்படி சிறந்திருக்கும் தருமங்கள்; நீர் தங்கியிருக்கிற ஏரிக்கு ஏற்றதாயிருக்கும் வாய்க்கால்களின் பரப்பு; இப்படியே அவரவருடைய வளத்துக்குத் தக்கபடியிருக்கும் அந்தந்தக் குடும்பத்தாருடைய காரியங்கள். (காரியங்களாவன: தம்முடைய சுகத்துக்குச் செலவு செய்வதும் பிறருக்குக் கொடுப்பதும்.)

வகைய முதலானவை குறிப்புமுற்றுக்கள். தொட்ட : தொடு-(தோண்டுதல்) பகுதி, அ - பெயரெச்சவிகுதி, டகரமிரட்டி இறந்த காலங் காட்டிற்று. வழக்கு - (வழங்குதல்) முதனிலை வலிந்துநின்ற தொழிற்பெயர். மா என்கிற பலபொருளொருசொல் இங்கு கலினம் என்கிறதினால் குதிரைக்கு வந்தது. இது குறிப்புச்சொல் (பொது - சூ - ௩௧, பெயர் - சூ - ௪௨). (எ௩)

ஊழியும் யாண்டெண்ணி யாத்தன யாமமும்
நாழிகை யானே நடந்தன—தாழ்வியாத்
தெற்றென்றார் கண்ணே தெளிந்தனர் வெற்றென்றார்
வெஞ்சொலா லின்புறு வார்.

(ப-ரை.) ஊழியும் - யுகமுடிவுகளும், ஆண்டு எண்ணி-வருடங்களாய் எண்ணப்பட்டு, யாத்தன - அளவு செய்யப்பட்டன; யாமமும் - சாமப்பொழுதும், நாழிகையானே - (ஏழை) நாழிகையினாலேயே, நடந்தன - (அளவு செய்யப்பட்டு) கழிந்தன; தாழ்வியா - காலத்தை நீட்டிக்காமல், (விரைவில்) தெற்றென்றார் கண்ணே - தெளியப்பட்டவரிடத்திலேயே, தெளிந்தனர் - (நல்லோர்) ஐயப்படார்; வெற்றென்றார் - அறிவாகிய பயனில்லாதவர், வெம் சொலால் - (பிறரை வைத) கடுஞ்சொற்களினால், இன்பு உறுவார்-உள்ள மகிழ்வார், எ - று.

(வி-ரை.) மகாகாலமென்று சொல்லப்படுகிற யுகமும் வருஷம் வருஷமாய் எண்ணக் கழிந்தேபோகின்றது; அது பிரத்தியக்ஷமாகாமற்போனாலும் பிரத்தியக்ஷமான தினமென்கிற ஒரு சிறுபொழுதும் நாழிகை நாழிகையா யெண்ணக் கழிந்துபோகின்றது; இப்படியே நம்முடைய வாழ்நாளெல்லாம் முதலில் பெரிதாத்தோன்றியும் சிறிது சிறிதாய்க் கழிந்துபோகின்றன; இதை யெண்ணி நல்லவர் நல் வழைத் தாமதியாமல் வழிப்பட்டு நற்கேள்விகள் கேட்டுத் தெளி

ந்து இன்பமாய்க் காலங்கழிக்கின்றனர்; தீயவரோ பிறர்மேல் வீணுகத் தீயசொற்களைச் சொல்லிச் சந்தோஷித்துக் காலங்கழிக்கின்றனர் என்பது கருத்து.

யாத்தன: செய்வினை செயப்பாட்டு வினையாகக் கொள்ளப்பட்டது (பொதுவியல்-கூ-சக). யாத்தல் - கட்டல், அது இங்கே கழிதலுக்குக் குறிப்பாகின்றது. யாமம் - இரவின்பெயர், அது "பஞ்சராத்திரம் - தசராத்திரம்" என்கிற வடநூல் வழக்கால் தினத்துக்கு ஆயிற்று. பின்னே தீயர் என்று வந்தபடியால் "பிறவிப் பெருங் கட னீந்துவர்" என்பதில் இறைவனடி சேர்ந்தார் என்பது போல் இங்கு நல்லவர் என்பது வருவிக்கப்பட்டது. 'தாழீயர்' என்றும் பாடம். 'தாழியர்' எனப் பாடங்கொண்டு தாழ்மையானவர் பணிவுள்ளவர் என்று நல்லவருக்கு ஆக்குதலும் பொருந்தும். தாழ்: முதனிலைத் தொழிற்பெயர், பகுதி, இ - அதனையுடையவன் என்னும் பொருளில்வந்த விகுதி, வில்லி யென்பதுபோல்; அர்: பன்மைவிகுதி, தாழா என்னும் வினையெச்சம் இகரச்சாரியை பெற்று தாழியா எனவந்தது என்று கொள்ளவேண்டும். 'வெட்கென்றார்' என்றும் பாடம், 'வெஞ்சொல்லா லின்புறுவர்' என்றும் பாடம். (எச)

கற்றான் றளரி னெழுந்திருக்குங் கல்லாத
பேதையான் வீழ்வானேற் கான்முரியு மெல்லாம்
ஒருமைத்தாஞ் செய்த கருவி தெரிவெண்ணின்
பொய்யாவித் தாகி விடும்,

(ப-ரை.) கற்றான் - கல்வியறிவுடையான், தளரின் - (ஒரு காலத்தில்) தளர்ச்சியடைவானாயின், எழுந்திருக்கும் - (அத்தளர்ச்சியினின்று) நீங்குவான்; கல்லாத - கல்வியறிவில்லாத, பேதையான் - பேதையானவன், வீழ்வான் எல் - (தன்னிலையினின்றும்) தளர்ந்

தால், கால் முரியும் - (அதற்கு) ஊன்றுகோலாகிய முயற்சி கெடு வான் அல்லது கால் முறிந்துபோனதுபோல் மறுபடி அதினின்றும் தப்பி எழுந்திருக்கமாட்டான்; ஒருமை - ஒருபிறப்பிலே, தான் செய்த எல்லாம்-ஒருவன் செய்தன ஆகிய வினைகளெல்லாம், கருவி- (மறுமைப்பயனுக்கு அல்லது மறுபிறப்பில்வரும் இன்ப துன்பங் களுக்குக்) காரணங்களாகும்; எண்ணின் - ஆராயுமிடத்து, தெரிவு - (ஐயமில்லாமல் தெளிந்த) தெளிவு, பொய்யாவித்து - (முத்தியடை தற்கு) உண்மையாகிய காரணம், ஆகிவிடும் - ஆகாமற்போகாது, எ-று.

(வி-ரை.) கற்றவன் ஏதாகிலும் கிஞ்சித்து ஆசாரத்தில் வழுவி ஞல் வகைதெரிந்தவனுகையால் மறுபடி சரிப்படுத்திக்கொள்வான்; மூடனே வகைதெரியாமல் கெட்டு நரகத்துக்கு ஆளாவான்; இப்படி நேரிடுவதெல்லாம் முந்திய பிறப்பிற் செய்த கருமவசத்தினலேயே; இவைகளைக்குறித்து யோசித்துப் பார்த்தால், அவைகளுள் நற்கரு மத்தால்வந்த தத்துவவுணர்ச்சி மறுபடியும் இப்படித் துன்பங்க ளில்லாம லிருக்கும்படியான காரணம் என்றவாறு.

கால்முரியும் என்கிற சினைவினை கல்லாதான் என்கிற முதலைக்கொண்டது (வினை - சூ - உ௬). இம்மை, மறுமை, இருமை என்பவைபோல் ஒருமை என்பதிலும் மை விகுதி பிறப்பை யுணர்த் தியது, செய்த-பலவின்பாற்பெயர், கருவி என்னும் பெயர்கொண்டு முடிந்தது. 'தான்செய்த' என்றும் பாடம். 'வீயாவித்தாகிவிடும்' என் றும் பாடம். (எ௫)

தேவ ரனையர் புலவருந் தேவர்
தமரனைய ரோரூ ருறைவார் தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார் கற்றன்னர்
கற்றாரைக் காத லவர்.

(ப-ரை.) புலவரும் - அறிவுடையாரும், தேவர் அனையர் - தேவரை ஒப்பாவர்; ஓர் ஊர் - அவ்வறிவுடையோரிருக்கும் ஊரில், உறைவார் - வசிப்பவர், தேவர் - அத்தேவர்களுக்கு, தமர் அனையர் - உறவினரை ஒப்பாவர்; பேணி - (அவர் நட்பினை) பாதுகாத்துக் கொண்டு, ஒழுகுவார் - (அவர் குறிப்பின்படி) நடப்பவர், தமருள்ளும் - அவ்வுறவினருள்ளும், பெற்றன்னர் - (அப்புலவர்களது அறிவைப்) பெற்றாரொப்பர் அல்லது தேவாநுக்கிரகம் பெற்றவரோ டொப்பர்; கற்றாரை - அக்கல்வியறிவினரை, காதலவர் - விரும்புமாணாக்கர் அல்லது நேசிப்பவர், கற்றன்னர் - (எல்லா நூல்களையும்) கற்றார்போல்வர் அல்லது கற்றவர்க்குச் சமானமாவர், எ-று.

(வி-ரை.) அறிவுவிளங்கினவர் தேவருக்குச் சமானமானவர்; (அறிவின் விளக்கத்தாலேதான் 'புதர்' என்கிறபெயர் இருவருக்கும் வந்தது); அவரோடு கூடியிருப்பவர் தேவரைச் சேர்ந்தவருக்குச் சமானமானவர்; அவர்களிலும் அப்புலவரை வழிபட்டவர்கள் தேவாநுக்கிரகம் பெற்றவரோ டொப்பர்; இப்படியே கற்றாரிடத்து அன்பு செலுத்துகிறவர் கற்றார்க்குச் சமானமானவர் என்பதாம்.

புலமை: மை கெட்டுநின்றது, பகுதி, அர்: விகுதி. பெற்றவரை அன்னர், கற்றவரை அன்னர் என்பவை 'பெற்றன்னர்' 'கற்றன்னர்' எனச் சில எழுத்துக்கெட்டு மருவிவந்தன. (எசு)

தூர்ந்தொழியும் பொய்பிறந்த போழ்தே மருத்துவன்
சொல்லென்ற போழ்தே பிணியுரைக்கு நல்லார்
விடுகென்ற போழ்தே விடுக வதற்குரியான்
தாவெனிற் றாயம் வகுத்து.

(ப-ரை.) பொய் - (நட்புக்கொண்ட இருவரில் ஒருவனிடத்து) தோய், பிறந்தபோழ்தே - முளைத்தபோதே, தூர்ந்து அழியும் -

(நட்பாகிய பாத்தி) தூர்ந்துபோம்; மருத்துவன் - வைத்தியன, சொல் என்ற போழ்தே - (பிணியாளியை நோக்கி) சொல்லுக என்று கேட்டபோதே, பிணி உரைக்கும் - (அவன்) நோயைச் சொல்லு வான்; நல்லார் - நல்லறிவினர், விடுக என்ற போழ்தே - தீச்செயலை ஒழிக என்று சொன்னபோதே, விடுக - (அதை) ஒருவன் ஒழியக் கடவன்; உரியான் - பாத்தியதை யுடையவன், தருக என்னின் - (தன்பாகத்தைத்) தரக்கடவாயென்று கேட்டால், தாயம் வகுத்து - உரிமைப் பொருளைப் பங்கிட்டு, விடுக - (ஒருவன்) தரக்கடவன, எ-று.

(வி-ரை.) பொய்பேசினவுடனே சினேகம் போய்விடும், ஆகை யால் நேசனோடு பொய்பேசலாகாது; வைத்தியன் சொல்லென்ற வுடனே பிணியாளி தன் உபத்திரவங்களைச் சொல்வதுபோல், பெரியோர் இந்தத் துராசாரங்களை விட்டுவிடு என்றபோதே விட வேண்டும்; அப்படியே பங்காளி பங்கிட்டுத்தா என்றவுடனே அவ னுக்கு உற்றதைப் பகிர்ந்து கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் மனஸ்தாபமும் வழக்கும் நேரிடு மென்பதாம்.

முதலிரண்டு வாக்கியங்களில் தகுதியால் சினேகம் என்றும் பிணியாளி என்றும் எழுவாய்கள் வருவிக்கப்பட்டன. அல்லது இர ண்டாம் வாக்கியத்தில் பிணி என்பதையே பிணியாளனுக்கு ஆகு பெயராக்கிச் செயப்படுபொருளையாவது வருவிக்கவேண்டும். மூன் றும் வாக்கியத்துள்ள விடுக என்பது நாலாம் வாக்கியத்துள்ளும் கூட்டப்பட்டது. மருந்து கொடுப்பவன் மருத்துவன். மருந்து : பகுதி, அன் : விகுதி, குற்றியலுகரம் கெடாமையை "மெய்விட் டோடும்" என்பதனல் அமைத்துக்கொள்ளவேண்டும் (உயிர் - சூ - கஅ - உரையைக்காண்க). மென்றொடர் வன்றொடரானது (உயிர் - சூ - ௬௪). தாயம் ; வடசொல். (எஎ)

நாக்கி னறிப வினியசுவை மூக்கினான்
மோந்தறிப வெல்லா மலர்களு நோக்குள்ள
கண்ணினாற் காண்ப வணியவற்றைத் தொக்கிருந்
தெண்ணினா னெண்ணப் படும்.

(ப-ரை.) இனியவை - சுவையுடைப் பொருள்களை, நாக்கின் - நாக்கினால், அறிப-(யாவரும்) அறிவார்கள்; எல்லாமலர்களும்-எல்லா நன்மலரின் மணத்தையும், மூக்கினால் மோந்து அறிப - மூக்கினால் மோந்து அறிவார்கள்; அணியவற்றை - அழகுள்ள பொருள்களை, நோக்கு உள்ள - காணுந்தொழிலமைந்த, கண்ணினால் காண்ப-கண்களினால் காண்பார்கள்; தொக்கு இருந்து - (அறிவுடையோர் பலரோடு) கூடியிருந்து, எண்ணினான் - கருத்தினால் அல்லது புத்தியினால், எண்ணப்படும் - (கருத்துப்பொருள்) ஆராய்ந்தறியப்படும் அல்லது (காணக்கூடாத பொருள்களை) எண்ணவேண்டும், எ-று.

(வி-ரை.) நாக்கினால் உருசியையும், மூக்கினால் புஷ்பவாசனையையும், கண்ணினால் அலங்காரங்களையும் அறிவதுபோல், செய்யத்தக்க காரியங்களைப் பலரோடு சேர்ந்து ஆலோசித்துப் புத்தியால் அறியவேண்டும் என்பதாம்.

நோக்கக் கருவியாயிருப்பதுநோக்கு, அம்-விகுதி சேர்ந்து கெட்டது. 'உள்ளும்' உள்ளப்படும், நோக்கென்று உள்ளப்படுகிற. அணியப்படுவன அணி, செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. அல் என்னும் பன்மைச் சுட்டுப்பெயர் பிறபெயர்களோடு அசைநிலைபோல் சேர்வதுண்டு. இது எழுவாயுருபு என்பாருமுளர். "குணமது கைவிடேல்" எண்ணப்படும், இதுவும் வியங்கோளாம். (எஅ)

சாவாத தில்லை பிறந்த வுயிரெல்லாந்
தாவாத தில்லை வலிகளும்—மூவா

இளமை யிசைந்தாரு மில்லை வளமையிற்
கேடின்றிச் சென்றாரு மில்.

(ப-ரை.) பிறந்த உயிர் எல்லாம் - பிறந்த எல்லா வுயிர்களிலும், சாவாத இல்லை - சாகாதவை இல்லை; வலிகளும் - வன்மைகளிலும், தாவாத இல்லை-கெடாதவைகளில்லை; மூவாது - மூத்துக்கழியாமல், இளமை இசைந்தாரும் இல்லை-இளமை நிலைக்கப்பெற்றவருமில்லை; வளமையில் - (பெற்ற) செல்வங்களில், கேடு இன்றி - (இடையே) அழிவை யடையாமல், சென்றாரும் இல்-முற்றும் அநுபவித்தவரும் இல்லை, எ - று.

(வி-ரை.) பிறந்தவர் சாகாமற்போவது மில்லை; எப்படிப்பட்ட வல்லமையும் அழியாமலிருப்பது மில்லை; என்றும் இளம்பிராயத்தோ டெவரு மிருப்பதுமில்லை; செல்வங்கெடாமலிருப்பது மில்லை; எனவே ஒன்றுஞ் சதமன்று, தருமமே சதமென்றதாயிற்று.

தாவாத—தா : பகுதி, ஆ : எதிர்மறை விகுதி, த் : எழுத்துப் பேறு, அ : பலவின்பால் விகுதி, சாவாதவு மிப்படியே. (எசு)

சொல்லா னறிப வொருவனை மெல்லென்ற
நீரா னறிப மடுவினை யார்கண்ணும்
ஒப்புரவி னானறிப சான்றாண்மை மெய்க்கண்
மகிழா னறிப நறா.

(ப-ரை.) ஒருவனை - ஒருவனது தன்மையை, சொல்லான் - (அவன் பேசும்) சொல்லினாலே, அறிப - (அறிவுடையோர்) அறிவார்கள்; மடுவினை - மடுவினது தன்மையை, மெல்லென்ற நீரான் அறிப - (அதிலுள்ள) நீரினாலே அறிவார்கள்; சான்று ஆண்மை - பல குணங்களாலும் நிறைந்து அவற்றையாளுந் தன்மையை, யார்

கண்ணும் - எவரிடத்தும், ஒப்புரவினன் - (ஒப்ப நடக்கும்) உலக நடையினால், அறிப - அறிவார்கள்; நறா - (ஒருவன்) மது உண்டமையை, மெய்க்கண்-(அவனது) உடலிற்றோன்றும், மகிழான்-களிப்பின் குறியால், அறிப - அறிவார்கள், எ-று.

(ப-ரை.) ஒருவனுடைய குணகுணங்களை யவன் பேச்சினாலும், மடுவின் யோக்கியதையை மெல்லிதான தண்ணீரினாலும் அறிவது போல எல்லாரிடத்திலும் ஒத்த நடைக்கையினால் ஒருவனுடைய நற்குணமுடைமையையும், உடம்பு மதித்துக் களித்திருப்பதினால் ஒருவன் கள்ளுண்டதையும் அறியலா மென்றபடி.

மகிழ் : முதனிலைத்தொழிற்பெயர். நறா : அதனை யுண்டதற்கு ஆகுபெயர். மெல்லெனல் - இலேசாயிருத்தல். (௮0)

நாவன்றோ நட்பறுக்குந் தேற்றமில் பேதை
விடுமன்றோ வீங்கிப் பிணிப்பி னவாஅப்
படுமன்றோ பன்னூல் வலையிற் கெடுமன்றோ
மாறு ணிறுக்குந் துணிபு.

(ப-ரை.) நா - (இதம் பேசாத) நாக்கு, நட்பு அறுக்கும் அன்றோ-(ஒருவரோடு கொண்ட) நட்பினை நீங்கச்செய்யுமன்றோ; வீங்கி-(ஒருவர் அன்பு) மிகுந்து, பிணிப்பின் - (சிநேகிதத்தால்) கட்டினும், தேற்றம் இல் - (நட்பின் தன்மையை) அறியமாட்டாத, பேதை - அறிவிலி, விடும் அன்றோ - (அந்நட்பை) ஒழிவானல்லனோ; அவா - (நன்மாணாக்கனுடைய) விருப்பம், பல நூல்வலையில் - பல நூல்களாகிய வலையில், படும் அன்றோ - உட்படுமன்றோ, மாறுள் - (பலரோடு கொள்ளும்) பகையில், நிறுக்கும் - நிறுத்தவல்ல, துணிவு - துணிவானது, கெடும் அன்றோ - (அத்துணிவுடையானைக்)கெடுக்குமன்றோ, எ-று.

(வி-ரை.) நாவினால் தகாத சொற்களைப் பேசினால் சிநேகம் கெடுமாகையால் நாக்கைக் காத்துக்கொள்ளவேண்டும்; "யாகாவா ராயினு நாகாக்க" தெளிவில்லாதமூடன் தன்னைப் பிறர் கொஞ்சம் இறுகப்பிடித்தால் தப்பித்துக்கொள்ள வகைதெரியாமல் தன்பொருளைக்கொடுத்து விடுவான்; நல்ல நூல்களைக் கற்றிருந்தால் வீணாசையெல்லாம் கெட்டுப்போம்; ஒருவன் பலரோடு பகை பாராட்டுவானானால் உடனே கெடுவான்.

அன்றே என்பது வெளிப்படை யென்பதைக் குறிப்பிக்கின்றது (அன்று ஏ). 'அவா அ' என்பது பாட்டின் ஓசை நிறைக்க வந்த அளபெடை (எழுத்து - சூ - ௬௬). (௮௧)

கொடுப்பி னசனங் கொடுக்க விடுப்பின்
உயிரிடை யிட்ட விடுக்க எடுப்பின்
கிளையுட் கழிந்தா ரெடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல்.

(ப-ரை.) கொடுப்பின் - (ஒருவன் ஒருவருக்கு ஒருபொருளைக்) கொடுக்க வேண்டினால், அசனம் கொடுக்க - உணவைக் கொடுக்கக் கடவன்; விடுப்பின் - துறக்கவேண்டினால், உயிர் இடையிட்ட - ஒருயிருக்கு இடையூறு வந்தவற்றை, விடுக்க - துறக்கக்கடவன்; எடுப்பின் - தாங்கவேண்டினால், கிளையுள் - சுற்றத்தாருள், கழிந்தார் - பொருளில்லாரை, எடுக்க - தாங்கக்கடவன்; கெடுப்பின் - கெடுக்கவேண்டினால், வெகுளி கெடுத்துவிடல் - கோபத்தைக் கெடுத்துவிடக் கடவன், எ-று.

(வி-ரை.) எல்லாத் தானங்களிலும் அன்னதானஞ் சிறந்தது; ஒருவருக்குப் பிராணபத்து வந்ததை நிவர்த்தி செய்வது உபகாரத்திற் பெரிது; தம்மவரில் வறுமைமுதலியவற்றால் இளைத்துப்போனவர்களுக்கு உதவிசெய்து அவர்களை நல்லநிலையில் வைப்பது சகாயம்

களில் மேலானது; தனக்குக் கோபம் வரவொட்டாமல் மனதைத் திடப்படுத்துவது குணங்களுள் உத்தமமாம்.

கொடுப்பின் முதலிய எச்சங்கள் மற்றவை செய்வதிலும் இதிது விசேஷமெனக்குறிப்பிக்க வந்தனவேயன்றி அப்படிச்செய்ய இஷ்டமிருந்தால் என்பதை யுணர்த்தினவையல்ல. அசனம் : வடசொல். எடுக்க கெடுப்பின் என வினைமுற்றின்முன் வலி இயல்பாயிற்று (உயிரீறு-சூ-கஎ). (அஉ)

> நலனு மிளமையு நல்குரவின் கீழ்ச்சாம்
> குலனுங் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்
> வளமில் குளத்தின்கீழ் நெற்சாம் பரமல்லல்
> பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.

(ப-ரை.) நல்குரவின்கீழ் - வறுமையின் கீழமைந்த, நலனும் - நற்குணமும், இளமையம் - இளமையுருவும், சாம் - விளங்கமாட்டா; கல்லாமைக்கீழ் - கல்வியறியாமையின் கீழமைந்த, குலனும் - உயர் குலமும், குடிமையும் - உயர்குடிப்பிறப்பும், சாம் - விளங்கமாட்டா; வளம் இல் - நீராகிய வளப்பமில்லாத, குளத்தின் கீழ் - குளத்தின் கீழமைந்த, நெல் சாம் - நெற்பயிர் விளையமாட்டா; பரம் மல்லல் - பாரமிகுதியாகிய, பண்டத்தின் கீழ்-பொருளின் சுமையின் கீழமைந்த, பகடு - எருதுகள், சாம் - விரைந்து செல்லமாட்டா, எ-று.

(வி-ரை.) தரித்திரமிருந்தால் ஒருவனுடைய அழகும் இளம்பருவமும் (போகமின்மையால்) பயனின்றிக்கெடும்; கல்வி கற்காதவனுக்கு நல்ல குடிப்பிறப்பும் குடிவளமுமிருந்தால் அவை சிறப்பில்லாமற் கெடும்; இவை, நீரில்லாத ஏரியின்கீழ்ப் பயிர் கெடுவதுபோலென அறிக. அதிகபாரம் போட்ட பண்டியை இழுக்கும் எருதும் மார்புடைந்து சாகும். பாரத்தை அளவிட்டுப்போடவேண்டுமென்பதாம்.

பரம், பாரம் : வடசொல். (அங)

நல்லார்க்குந் தம்மூரென் றாரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றாரில்லை அல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றாரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

(பொ-ரை.) நல்லார்க்கும் - நல்லவர்களுக்கும், தம் ஊர் என்று ஊர்-தம்முடைய ஊர் என்று சொல்லத்தக்கவூர் ஒன்றும், இல்லை—, நல் நெறி செல்வார்க்கும் - நல்லவழியில் நடப்பவர்களுக்கும், தம்மூர் என்று ஊர் இல்லை—, அல்லா கடைகட்கும் - நல்வழிச் செல்பவரல்லாத அற்பருக்கும், தம் ஊர் என்று ஊர் இல்லை—; தம் கைத்து உடையார்க்கும் - தமது பணமுள்ளவர்களுக்கும், எவ்வூரும் - எந்த வூரும், ஊர் - தம்மூராம், எ-று.

(வி-ரை.) நல்ல குணமுள்ளவர்களுக்கும் நல்ல நடக்கையுள்ள வர்களுக்கும் தமது என்று ஒரு ஊரில்லை; என்றால் எவ்வூரிலும் அவர்களுக்குத் தம்மூரில் நடப்பதுபோல மேன்மையே நடக்குமென்றபடி; அயோக்கியருக்கும் அப்படியே தமக்கென்று ஒரு ஊரில்லை, அவர்களுக்குத்தம்மூரிலும்பிறவூரிலும் அவமதிப்பே நடத்தலாலென அறிக; செல்வமுள்ளவர்களுக்கு எங்கும் வேண்டியபடி நடக்குமாதலால் அவர்களுக்கும் எல்லாம் தம்மூரேயா மென்பதாம்.

என்ற என்னு மிடைச்சொல் பெயரோடு சேர்ந்து அப்பொருளின் தன்மையைக் காட்டிற்று (இடை - சூ - ᲂ). (அச)

கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்
மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகு வாள்.

(ப-ரை.) கல்லா ஒருவர்க்கு - கல்வியறிவில்லாத ஒருவருக்கு, தம் வாயில் - தமது வாயிற்பிறந்த, சொல் கூற்றம் - சொல் கூற்றுவனாம்; மெல்லிய வாழைக்கு - மென்மையாயுள்ள வாழைமரத்துக்கு, தான் ஈன்ற - தான் பெற்ற, காய் கூற்றம் - காய் கூற்றுவனாம்; அல்லவை செய்வார்க்கு - பாவத்தொழிலைச் செய்பவருக்கு, அறம் கூற்றம் - அறம் கூற்றுவனாம்; இல் - தன் குடும்பத்துக்கு, இருந்து - அக்குடும்பத்தி லிருந்துகொண்டு, தீங்கு ஒழுகுவாள் - கெட்டவழியில் நடப்பவள், கூற்றமே - கூற்றுவனே ஆம், எ-று.

(வி-ரை.) மூடனுக்கு அவன் வாயிலே வருகிற சொல்லே எமனைப்போல் கேடுதருவதாம்; அது எதுபோலெனில், வாழைமரத்துக்கு அதிலுண்டாகிற காயே அதைநாசமாக்குவதுபோலென்க. (குலைபோட்டபின் வாழையை வெட்டிப்போடுகிறார்கள்.) பாவஞ்செய்கிறவரைத் தருமம் கெடுக்கும்; நன்னடக்கையில்லாத பெண் குடித்தனத்துக்குக் கேடுசெய்பவளாம் என்றவாறு.

"அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்றகாய் கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழு காப்பெண்."

கூறுசெய்வது கூற்றம் என்னலாம். பிராணன் போனபின்பு பஞ்சபூதங்களும் பிரிந்து கூறாய்த் தம்மினத்திற் சேருகின்றன என்பது சாஸ்திரம். அனுபவத்திற்கும் ஒக்கும். 'இல்லிருந்து' எனபதனால் அவள் இல்விட்டுப்போனால் அவளுக்கேயன்றி அக்குடிக்குத் தீங்கில்லை என்றதாயிற்று. (அ௩)

நீரான் வீறெய்தும் விளைநில நீர்வழங்கு
பண்டத்தாற் பாடெய்தும் பட்டினங் கொண்டெய்தும்
நாட்டான் வீறெய்து மாமன்னன் கூத்தொருவன்
ஆடலாற் பாடு பெறும்.

(ப-உரை.) நீரான் - நீர்வளத்தினால், விளைநிலம்-பயிர் விளையும் படியான நிலமானது, வீறு எய்தும் - பெருமையை அடையும்; நீர் வழங்கு பண்டத்தான் - சமுத்திரங்கொடுக்கும் வஸ்துக்களால், பட்டினம் - நகரமானது அல்லது நெய்தனிலத்து ஊர், பாடு எய்தும்—; கொண்டு எய்து நாட்டான் - தான்கொண்டு ஆளுகின்ற நாட்டின் குணத்தால், மன்னன்-அரசன், வீறுஎய்தும்—; ஒருவன் ஆடலால்-ஒருவன் ஆடும் திறத்தினால், கூத்து—, பாடு பெறும் - பெருமையை அடையும், எ-று.

(வி-ரை.) 'பாடலால்' எனவும் பாடம். நீர்நன்றாய்ப் பாய்வதனாலே பயிர் நிலம் நல்ல பலன் தந்து பெருமைபெறும்; கப்பல் வழியாய்த் தேசாந்தரத்திலிருந்து வரும் பலவகைப் பண்டங்களால் ஒருபட்டினம் யாவர்க்கும் வேண்டிய கொடுத்துப் பெருமைப்படும்; அல்லது கடலிலுண்டாகிற சங்கு முத்து முதலிய பொருள்களால் ஒருபட்டினத்துக்குப் பெருமை என்றுமாம். ஒரு அரசனுக்கு அவனாள்கின்ற ராச்சியம் குடிவளம் பொருள்வளங்களை யுடைத்தாயிருப்பதனால் பெருமையுண்டு; கூத்து ஆடுகிறவன் அல்லது ஆட்டுகிறவன் திறத்தினால் பெருமைபெறும் என்றதாம். கூத்து என்பது நாடகம். (அ௯)

ஒன்றூக்கல் பெண்டிர் தொழினலம் என்றும்
அறனூக்க லந்தண ருள்ளம் பிறனூக்கல்
நாடுகோண் மன்னர் தொழினலங் கேடுகக்கும்
கேளி ரொரீஇ விடல்.

(ப-உரை.) பெண்டிர்-குலப்பெண்களுடைய, தொழில்-தொழில்களில், நலம் - சிறப்புள்ளது, என்றும் - கணவன் அழகு செல்வ முதலிய கெட்ட காலத்தும், ஒன்று ஊக்கல்-கற்பாகிய வொன்றை மனவெழுச்சியோடு காத்தல்; அந்தணர் உள்ளம்-பிராமணருடைய

ஊக்கம், என்றும் - மிக்க வறுமை வந்தகாலத்தும், அறன் - தமகுல தருமத்தை, ஊக்கம்-மனவெழுச்சியோடு செய்தல்; மன்னர் - அரசர்களது, தொழில் - தொழில்களில், நலம் - சிறப்புள்ளது, என்றும் - பெருஞ்செல்வத்தை அடைந்த காலத்தும், பிறன் ஆளும் - பகைவனால் ஆளப்படும், நாடு - நாட்டை, கோள்-(அவனை வென்று) தம்வசப்படுத்துதல்; கேளிர் - (ஒருவன்) உறவினரை அல்லது சிநேகிதரை, ஒரீஇவிடல் - நீக்கிவிடுதல், என்றும் - மிக்க வலியுடையனாகிய காலத்தும், கேடு உகக்கும்-(தனக்கு) வரும் கேட்டை விரும்பும், எ-று.

(வி-ரை.) கணவனோடு ஒரு மனமாயிருந்து நல்லகாரியத்தைச் செய்தல் மனைவிக்கு நலம்; எப்பொழுதும் தருமத்தை விர்த்திசெய்வது பார்ப்பாருக்கு நலம்; முறையின்றி யாளுகிறவர்களுடைய ராச்சியத்தைச் சீர்ப்படுத்தும்பொருட்டுத் தன்வசமாக்க முயல்வது அரசனுக்கு நலம்; தமக்கு இதஞ்செய்யுஞ் சுற்றத்தாரை நீக்கிவிடாமல் அனுசரித்துவருதல் எவர்க்கும் நலமென்றவாறு. அவர்க்கு நலம் என்னுமல் அவர் தொழிலுக்கு நலம் என்றது, அது அவர் செய்ய வேண்டிய காரியம் என்பதை அறிவிக்க.

'கோள்' கொள் என்னு முதனிலை முதனீண்டு தொழிற்பெயராயிற்று. ஒன்றி என்பது ஈறுதொக்கது. ஒன்று என்பதற்கே ஒன்றி எனப் பொருள்கொள்வதுமாம். (அஎ)

கள்ளாமை வேண்டுங் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியரோ டியார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை.

(ப-ரை.) கடிய-(பிறர் பொருளைக் களவு செய்தால் பின்) அஞ்சத்தக்கவை, வருதலால் - நேரிடுதலால், கள்ளாமை வேண்டும் -

களவு செய்யாமையே தகுதி; தகுதி உடையன - (பெரியோரால் சொல்லப்படும்) தகுதியுடைய சொற்களை, தள்ளாமை வேண்டும் - தள்ளாமல் கொள்ளலே தகுதி; சிறியரோடு - பேதையாரிடத்தில் அல்லது அற்பரிடத்தில், நள்ளாமை வேண்டும் - சிநேகியாமையே தகுதி; யார் மாட்டும் - இளையாரிடத்தும் அல்லது எவரிடத்தும், பகை கொள்ளாமை வேண்டும் - பகை கொள்ளாதிருத்தலே தகுதி, எ-று.

(வி-ரை.) திருடுவதும், நல்லகாரியங்களைக் கைவிடுவதும், அற்பரோடு சினேகிப்பதும், எவ்வளவு தாழ்ந்தவரையாவது பகைப்பதும் கேட்டைத்தருமென்பதாம்.

கடியவருதலால் என்கிற ஏதுவாக்கியத்தை எல்லாவாக்கியங்களிலும் கூட்டிக்கொள்க. கள்ளாமைமுதலிய எதிர்மறைத்தொழிற் பெயர்கள் எழுவாய், வேண்டும் : பயனிலை. (அஅ)

பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்
தருக்குக வொட்டாரைக் கால மறிந்தாங்
கருக்குக யார்மாட்டு முண்டி. சுருக்குக
செல்லா விடத்துச் சினம்.

(ப-ரை.) நட்டாரை - சிநேகிதரை, நன்றின்பால் - சுகவாழ்க்கையில், உய்த்து - நடத்தி, பெருக்குக - (ஒருவன்) பெருகச் செய்யக்கடவன்; காலம் அறிந்து - (பகைவர்மேல் செல்லும்) காலத்தை அறிந்து, ஆங்கு - அந்தக்காலத்தில், ஒட்டாரைத் தருக்குக - பகைவரிடத்துக் களிப்போடு (போர்க்கு) செல்லக்கடவன்; யார்மாட்டும் - மிக்க நட்பினரிடத்தும், உண்டி - (பலமுறை சென்று) உண்ணுதலை, அருக்குக - தவிரக்கடவன்; சினம் செல்லா இடத்து - தன் கோபம் செல்லுதற்குரியதாகாத இடத்தில், சுருக்குக - (அதைத்) தணியச் செய்யக்கடவன், எ-று.

(வி-ரை) தன்னைச் சிநேகித்தவரை எப்படியாவது விர்த்தி செய்யவேண்டும்; காலம்பார்த்துச் சத்துருக்களை அடக்கவேண்டும்; கண்டவிடத்துச் சாப்பிடுவதை விடவேண்டும்; தனக்கு வசப்படமாட்டாதவர்மேல் கோபங் காட்டாதிருக்கவேண்டும் என்றபடி.

அருக்குக என்பதற்கு "கேடு அரிது" என்பதுபோல் இல்லையாக்கவேண்டும்; அதாவது, விடவேண்டுமெனப் பொருள்கொள்ளலாயிற்று. திராவிடமன்றிச் சாதாரணமாய் எங்கும் உண்பதினால் சிலர் வஞ்சனையால் நஞ்சிட்டுக்கொல்ல முயலத் தீங்குவருமென்பது கருத்து. இந்தப்பாட்டு முக்கியமாய் அரசர்க்காகும். பிறரும் ஒட்டிக்கொள்ளலாம். (அக)

மடிமை கெடுவார்க ணிற்குங் கொடுமைதான்
பேணுமை செய்வார்க ணிற்குமாம் பேணின்
நாணின் வரைநிற்பர் நற்பெண்டிர் நட்டமைந்த
தூணின்க ணிற்குங் களிறு.

(ப-ரை.) மடிமை - சோம்புந்தன்மை, கெடுவார்கண் - (கல்விச் செல்வ முதலியவை) கெடுவோரிடத்து, நிற்கும் - நிலைபெறும்; கொடுமை - தீமை, பேணுமை - (காக்கவேண்டுமவற்றைச்) காவாமையை, செய்வார்கண் - செய்யும் பேதையரிடத்து, நிற்கும் - நிலைபெறும்; நல் பெண்டிர் - நல்லபெண்கள், பேணின்வரை-விரும்பிக்கொண்டவனது எல்லையிலும், நாணின்வரை - நாணத்தினது எல்லையிலும், நிற்பர் - நிலைபெறுவர், களிறு - யானை, நட்டு-நடப்பட்டு, அமைந்த-(தனக்குத்) தகுந்த அளவாயுள்ள, தூணின்கண் நிற்கும் - தூணில் நிலைபெறும், எ - று.

(வி-ரை.) சோம்பலுள்ளவன் கெடுவான்;வன்னெஞ்சன் எவர்க்கும் உதவிசெய்யமாட்டான்; நல்ல பெண்பிள்ளைகள் புருஷன் தம்மை அதிகமாகக்கொண்டாடினாலும் நாணத்தோடே யிருப்பார்களே

யன்றி எல்லை கடவார்; எப்படியென்றால், யானை கட்டுத்தறியில் கட்டப்பட்டிருந்தால் அதைவிட்டு அப்புறம் போகமாட்டாதுபோலே என்றபடி.

'மடமை கெடுவார்க ணிற்கும்' எனவும் பாடம். மடமை-மூடத்தனம். மடிமை: பண்புப்பெயர். ஆம் : அசை. (௧0)

மறையறிப வந்தண் புலவர் முறையொடு
வென்றி யறிப வரசர்க ளென்றும்
வணங்க லணிகலஞ் சான்றோர்க்கஃ தன்றி
அணங்கை வணங்கலள் பெண்.

(ப-ரை.) அம் தண் - அழகிய கருணையையும், புலவர் - அறிவையுமுடைய பிராமணர் அல்லது சற்குணமுள்ள வித்துவான்கள், என்றும் - எக்காலத்தும், மறை அறிப - வேதங்களை யாராய்வார்; அரசர்கள் - அரசர்கள், முறையோடு - (குடிகளைக் காக்கும்) முறையோடு, வென்றி-(பகைவரை) வெல்லுந் தொழிலையும், அறிப-ஆராய்வார்; சான்றோர்க்கு - (கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்தவர்க்கு, அணிகலம் - அணிதற்குரிய ஆபரணம், வணங்கல் - (யாவருக்கும்) பணிவுடையராயிருத்தலாம்; பெண் - பெண்ணெனப்பட்டவள், (என்றும் - எக்காலத்தும்), அஃது அன்றி - (தன் கணவனாகிய) அத் தெய்வத்தை அல்லாமல், அணங்கை - வேறுதெய்வத்தை, வணங்கலள் - வணங்கல் செய்யாள், எ - று.

(வி-ரை.) சற்குணமுள்ள வித்துவான்கள் வேதஞ்சொல்லும் பொருளையே பிரியமாக்கொண்டிருப்பர்; நியாயத்துக்கு ஒத்தவிதத்தில் ஜயங்கொள்ளப் பிரியமாயிருப்பர் அரசர்; யோக்கியர் எப்போதும் மேலானவருக்கு வணங்கிநிற்பதையே சிறப்பாகக்கொண்டிருப்பர்; நல்லபெண், தெய்வத்தைக்காட்டிலும் மேலாகத் தன் புருஷனை யுபசரித்து வருவதைச் சிறப்பாகக் கொண்டிருப்பாளென்றவாறு.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

'வணங்குவ பெண்' என்றும், "வணங்குவள்பெண்" என்றும், "அணங்கல் வணங்கின்று பெண்" என்றும் பாடமுண்டு. (௧௧)

பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள் காப்பினும்
பெட்டாங்கே பெட்கும் பிணையிலி—முட்டினும்
சென்றாங்கே சென்றொழுகுங் காமங் கரப்பினும்
கொன்றான்மே னிற்குங் கொலை.

(ப-ரை.) பண்பு உடையாள் - நற்குணமுடைய பெண், பட்டாங்கே - (காவல் செய்யாவிடினும்) தன்னியற்கையாகிய கற்புக்கே, பட்டு - உட்பட்டு, ஒழுகும் - நடப்பாள்; பிணையிலி - (கணவனோடு) உடன்படுதலில்லாதவள், காப்பினும் - காவல்செய்தாலும், பெட்டாங்கே - (காவல் செய்வதற்குமுன் காமர்களை) விரும்பினாற்போலவே, பெட்கும் - விரும்பி நடப்பாள்; காமம் - ஒருவனுடைய காமமும், முட்டு உறினும் - இடையூறு நேரிடினும், சென்றாங்கே - (இடையூறு நேரிடுதற்குமுன்) சென்றாற்போலவே, சென்று - போய், ஒழுகும் - (தீயொழுக்கத்தில்) நடக்கும்; கொலை - கொலைப்பாதகம், கரப்பினும் - (பலர் என்று) மறைக்கினும், கொன்றான்மேல் - அக்கொலை செய்தவன்மேல், நிற்கும் - நிலைபெறும், எ-று.

(வி-ரை.) நல்லபெண் யாதொரு நிர்ப்பந்தமுமின்றித் தானே நல்வழி நடப்பாள்; கெட்டபெண் எத்தனை நிர்ப்பந்தத்தில் வைத்திருந்தாலும் சாஸ்திரவிதியைத் தள்ளித் தன் இஷ்டப்படியே நடப்

டாள்; "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை." பல விரோதங்களால் தடைப்படுவதா யிருந்தும் காமம் பற்றினவிடத்தை விடாமலே யிருக்கும்; ஒருவன் கொலைசெய்தால் அது எத்தனை மறைத்தாலும் எப்படியாவது வெளிப்படும்.

இங்கு கொலை என்றது மற்றப் பெரும்பாவங்களையுங் குறிக்கும்; "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே". பட்டாங்கு - சாஸ்திரம், அதன் விதிக்கு ஆகுபெயர். பெட்ட+ஆங்கு - பெட்டாங்கு என்று மருவி வந்தது. பெட்ட - விரும்பின, பெட்டு - பகுதி, அ - பெயரெச்சவிகுதி. ஆங்கு - விதம், சென்றாங்கும் இப்படியே. பிணி-பிணித்தல்=கட்டு, முதனிலைத்தொழிற்பெயர். முட்டு: இதுவுமப்படியே. "பெட்டாங் கொழுகும் பிணியிலி - முட்டினும்" என்னும் பாடம். (கூஉ)

வன்கண் பெருகின் வலிபெருகும் பான்மொழியார்
இன்கண் பெருகி னினம்பெருகுஞ் சீர்சான்ற
மென்கண் பெருகி னறம்பெருகும் வன்கண்
கயம்பெருகிற் பாவம் பெரிது.

(ப-ரை.) வன்கண் - (சேனைக்கு) வீரம், பெருகின் - மிகுந்தால், வலி பெருகும் - (அரசனுக்கு) வலிமிகும்; பால் - பால்போலுஞ் சுவையுள்ள, மொழியார் - சொல்லையுடைய மனைவியரிடத்து, இன்கண் - (கடுகடுத்து நோக்காத) இனியபார்வை, பெருகின் - மிகுந்தால், இனம் பெருகும் - (கொண்டவனுக்கு) நல்லுறவினர் மிகுவார்; சீர்சான்ற - கீர்த்திமிகுந்த, மென்கண் - இரக்கமானது, பெருகின் - (ஒருவனிடத்து) மிகுமானால், அறம் பெருகும் - (அவன்மேற்கொண்ட) துறவறம் மிகும்; வன்கண் - கொடுமையுள்ள, கயம் - கீழாகிய தன்மை, பெருகின் - (ஒருவனிடத்து) மிகுமானால், பாவம் பெரிது - பாவம் மிகும், எ-று.

(வி-ரை.) தயிரியம் அதிகமாயிருந்தால் பலமும் அதிகமாகும்; பெண்ணுக்குச் சந்தோஷம் வளர்ந்து வந்தால் அந்தக்குலமும் வளரும்; 'பான்மொழியா ரின்கண்பெருகி னினம்பெருகும்' என்றதற்கு, ஒரு குலப்பெண் இன்பமாய்ப்பேசி யுபசரித்தால் இனத்தார் மிகுந்து வருவார்கள் என்றும் பொருள் கூறலாம்; சிறந்த கருணையிருந்தால் அவனிடத்துத் தருமம் வளர்ந்துவரும்; இழிவான மனக்கடுமை மிகுந்தவனிடத்துப் பாவமும் அதிகமாம் என்றபடி.

வன்கண் முதலானவைகளில் கண்: பண்புப்பெயர் விகுதி.

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றம்
தமரல்லார் கைத்துள்ள தூண்.

(ப-ரை.) இளமைப்பருவத்து - (கல்வியேறுதற்குரிய) இளமைப் பருவத்தில், கல்லாமை - (அக் கல்வியைக்) கற்காமல் விடுதல், குற்றம் - குற்றமாம்; வளம் - பொருள், இலாப்போழ்தத்து - இல்லாதகாலத்தில், வள்ளன்மை குற்றம் - ஈகைக்குணம் உடைமை குற்றமாம்; கிளைஞர் இல்போழ்தில்-உறவினர் (தன்பக்கத்தில்) இல்லாதகாலத்தில், சினம் - (பகைவர்மேற் கொள்ளும்) கோபம், குற்றம் - குற்றமாம்; தமர் அல்லார் - உள்ளன்பில்லாருடைய, கைத்து உள்ளது - இடத்திலுள்ள உணவை, ஊண் - உண்ணுதல், குற்றம்-குற்றமாம், எ-று.

(வி-ரை.) இளம்பிராயத்தில் படியாமை குற்றமாவதுபோல் பணமில்லாதபோது தானஞ்செய்தலும் குற்றமாம்; அப்படியே தனக்குப் பலமான உறவின ரில்லாதிருக்கையில் பிறரை அனுசரித்து நடப்பதைவிட்டுக் கோபித்தலும், தம்முடையவரல்லார் வீட்டில் உண்டலும் குற்றமாம் என்றவாறு.

பொழுது என்பது போழ்து என மருவியது; அதன்மேல் வேற்றுமையில் அத்துச்சாரியை வந்தது; இதற்கு விதி (உருபு-சூ-கச). 'வள்ளன்மை' வள்ளலின் தன்மை; மை : தன்மையைக்காட்டும் விகுதி. 'ஊண்' உண் முதனீண்ட தொழிற்பெயர். (கூச)

எல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடறீது—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்தக் கடை.

(ப-ரை.) எல்லா இடத்தும் - (வேள்விமுதலிய) எல்லாவிடங்களிலும், கொலை - (ஒருயிரைக்) கொலைசெய்வது, தீது - (செய்தானுக்குத்) தீயதாகும்; மக்களை - தன் புத்திரர்களை, கல்லா வளர - (கல்வியைக்) கற்காமலே வளரும்படி, விடல் தீது-(தந்தை) விடுதல் (தனக்கே அன்றி அச்சிறுவர்க்கும்) தீயதாகும்; நல்லார் - மாதர்கள், நாண் அற்று - நாணமில்லாமல், நிற்பின் - (பல ஆடவர் முன்) நின்றால், நலம் - (அவருடைய) அழகு, தீது - (அவர்க்கே அன்றித் தங் கணவருக்கும்) தீயதாகும்; கொள்கை - (வருணத்துக்குத் தக்கபடி) கொண்ட ஒழுக்கம், அழிந்தக்கடை - கெட்டபின், குலம் - (அக்கெட்டோனுடைய) குலம், தீது - கெட்டதாகும், எ-று.

(வி-ரை.) எப்படிப்பட்ட விஷயத்திலும் கொல்லுதல் கெட்டதேயாம்; பிள்ளைகளைப் படிப்பியாமல் சும்மா வளர்ப்பதுங் கெட்டது; வெட்கமில்லையாயின் ஒரு பெண்ணுக்கு இருக்கும் அழகு கெட்டது; நன்னடக்கை யில்லாமற்போனால் எந்த மேலான குலமும் கெட்டதேயாம்.

அழிந்தக்கடை : எதிர்கால வினையெச்சம். கடை : விகுதி. 'அழிந்தவிடத்து' என்றும் பாடம்.

ஆசார மென்பது கல்வி யறஞ்சேர்ந்த
போக முடைமை பொருளாட்சி யார்கண்ணும்
கண்ணோட்ட மின்மை முறைமை தெரிந்தாள்வான்
உண்ணாட்ட மின்மையு மில்.

(ப-ரை.) ஆசாரம் என்பது - நல்லொழுக்கமென்று சொல்லப் படுவது, கல்வி - (ஒருவன் கற்ற) கல்விப்பயனாகும்; அறம் சேர்ந்த - அறத்தோடு பொருந்திய, போகம் உடைமை-சுகாநுபவம், பொருள்-உடையபொருளின் பயனாகும், யார்கண்ணும் - எல்லாரிடத்தும், கண்ணோட்டம் இன்மை - தாக்ஷிண்ய மில்லாதிருத்தல், ஆட்சி - அளுகையாம்; உள் நாட்டம் இன்மை-குடிகளுடைய (நன்மையைத்) தன்னுள்ளத்தில் ஆராய்தலில்லாமை, இல் - இல்லாதிருத்தல், தெரிந்து ஆள்வான் - (பெரியாரோடு) எண்ணி அரசாள்வானது, முறைமை - நீதியாம், எ-று.

(வி-ரை.) கற்றறிந்து நடப்பதே நல்ல ஆசாரமாம்; தருமத்துக்கு ஒப்பப் போகமனுபவிப்பதே நல்ல பொருளுடைமையாம்; அரசன், தன்னவர் பிறர் என்று பாராமல் யாவரிடத்தும் சரியாய் நீதி செலுத்துவதுதான் நடுநிலைமையாம்; காரியா காரியங்களை நன்றாய் அறிந்து ஆளுகின்ற அரசன் மனமறியாமல் தவறிப்போகுங் காரியம் இல்லை என்றால், அப்படிப்பட்ட நீதிமானுடைய அரசாட்சியில் எல்லாம் சரியாகவே நடக்கும் என்றும், தவறு உண்டானால் அவன் அறிந்தே நடந்திருக்கவேண்டுமென்றும் சொல்லியதாயிற்று. (௩௯)

கள்ளி னிடும்பை களியறியு நீரிடும்பை
புள்ளினு ளோங்க லறியு நிரப்பிடும்பை
பல்பெண்டி ராள னறியுங் கரப்பிடும்பை
கள்வ னறிந்து விடும்.

(ப-ரை.) கள்ளின் இடும்பை - கள்ளினாலுண்டாம் துன்பம், களி - கள்ளுண்டு களிப்பவன், அறியும் - அறிவான்; நீர் இடும்பை - நீரினாலுண்டாம் துன்பத்தை, புள்ளினுள் - பறவைகளுள், ஓங்கல் அறியும் - உயர்ந்து பறக்கும் சாதகப்பறவை அறியும்; நிரப்பு இடும்பை - (மனக்குறைவுகளை) நிரம்பச் செய்தலினாலுண்டாம் துன்பத்தை, பல் பெண்டிர் ஆளன் - பல மனைவியரை ஆள்கின்ற கணவன், அறியும் - அறிவான்; கரப்பு-(உடையவன்தன் பொருளை) ஒளித்துவைப்பதினாலுண்டாம், இடும்பை - துன்பத்தை, கள்வன்- (பொருளைக்) களவுசெய்வோன், அறிந்துவிடும் - அறியாமலிரான், எ-று.

(வி-ரை) கள்ளினால் வரும் துன்பம் அதைக் குடிப்பவனுக்கே தெரியும்; நீரிலே இருக்கும் சங்கடம் அந்தத் தண்ணீரிலேயே எப்பொழுதும் நீந்தித்திரிகிற ஓங்கலென்கிற பறவைக்குத் தெரியும்; அதுபோல, வறுமையினால் வரும் கஷ்டம் பல பெண்களை மணந்து ஆள்கிறவனுக்குத் தெரியும்; திருட்டினால் வருங்கேடு திருடனுக்கே தெரியும் என்றபடி. அந்தந்தத் துன்பம் அவரவருக்குத்தெரியும் என்றது பிறருக்குத் தெரிவதிலும் அனுபவிக்கிறவருக்கு நன்றாய்த் தெரியுமென்பதற்காக. அவை மிகவுங் கடுமையென்றதாம். "புள்ளியுளோங்கலறியும்" என்று பாடமோதி, மதிப்புள்ள கப்பல் அறியும் என்று பொருள்கொள்வதுமாம்.

களி: வினைமுதற்பொருள் விகுதிபுணர்ந்து கெட்ட பெயர்.

மெய்ச்சொ னயமிலார் வாய்த்தோன்றுங் கற்றார்வாய்ச்
சாயினுந் தோன்றா கரப்புச்சொல் தீய
பரப்புச்சொற் சான்றார் வாய்த்தோன்றா கரப்புச்சொல்
கீழ்கள்வாய்த் தோன்றி விடும்.

(ப-ரை.) வடுச்சொல் - (பிறருடைய) குற்றத்தை வெளிப்படுக்குஞ் சொற்கள், நயம் இலார் வாய் - நீதியில்லாதவருடைய வாயில், தோன்றும் - பிறக்கும்; கரப்புச்சொல் - வஞ்சித்தலமைந்த சொற்கள், கற்றார் வாய்-(அறநூல்களைக்) கற்றவர்வாயில், சாயினும் - செல்வங்கெடுவாராயினும், தோன்றா-பிறவா; தீய - (ஒருவர்க்குத்) தீமையாயினவற்றை, பரப்புச்சொல் - மிகுத்தலைச் செய்கின்ற சொற்கள், சான்றோர்வாய்-(நற்குணங்களால்) நிறைந்தோரதுவாயில், தோன்றா-பிறவா; கரப்புச்சொல் - (இரப்பவர்க்குப்) பொருளை மறைத்து மறுக்குஞ் சொற்கள், கீழ்கள் வாய் - கீழ்மக்கள் வாயில், தோன்றிவிடும் - பிறவாமலிரா, எ-று.

(வி-ரை.) பிறரை நட்புக்கொள்ளுங் குணமில்லாதவர் பிறர் மேல் தூஷணை சொல்லிக்கொண்டே யிருப்பர்; கற்றறிந்தவர் எத்தனைச் சங்கடத்திலும் வஞ்சனை பேசமாட்டார்கள்; இதற்கு மாறாய் யோக்கியர் தூஷணை செய்யார்; கீழ்மக்கள் வஞ்சனை பேசுவார்கள்.

தோன்றாகரப்பு என்பது ஆகாரவீற்றுவினை முற்றாதலால் அதன்முன் வலி இயல்பாயிற்று. தீயபரப்பு என்பதில் (உயிர்-சூ-கஎ) ஞல் வலியியல்பு. (மெய் - சூ - உக) விதியால் வாய்த்தோன்றும் என்பதில் வலி மிகுந்தது. (கஅ)

வாலிழையார் முன்னர் வனப்பிலார் பாடிலர்
சாலு மவைப்படிற் கல்லாதான் பாடிலன்
கற்றொருவனும் பாடிலன் கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின்.

(ப-ரை.) வால் இழையார் முன்னர் - குற்றமில்லாத ஆபரணத்தை அணிந்த மாதரிடத்து, வனப்பு இலார் - அழகிலாத ஆடவர், பாடு இலர் - பெருமை யடைதலிலர்; கல்லாதான் - (பலநூல்களைக்) கற்காதவன், சாலும்-(கல்வி யறிவு கேள்விகளால்) நிறைந்த, அவைப்

படின் - சபையில் சேர்ந்தால், பாடு இலன் - பெருமை யடைத லிலன்; கற்றான் ஒருவனும் - கல்வி யறிவுடையானாகிய ஒருவனும், கல்லாதார் முன்னர்ப்படின் - கல்வியில்லாரிடத்துச் சேர்ந்தால், பாடு இலன் - பெருமையடைதலிலன்; பேதையார் முன்னர் படின் - யாதும் அறியாரிடத்தும் சேர்ந்தால், பாடு இலன் - பெருமையடைத லிலன், எ-று.

(வி-ரை.) ஸ்திரீகளிடத்தில், அழகில்லாதவன் பெருமைப்படா மைபோல் கற்றவர் சபையிலே கல்லாதவன் பெருமைப்படமாட் டான்; அப்படியே கற்றவனும், கல்லாதவரிடத்திலும் மூடரிடத்தி லும் பெருமை பெறமாட்டான்.

பேதையார்-தரித்திரர் அல்லது பெண்கள் எனவுமுரைக்கலாம். எச்சவும்மை வருவிக்கப்பட்டது. வாலிழையார் என்றது சொகசுக் காரிகள் என்பதற்கு. (கக)

மாசு படினு மணிதஞ்சீர் குன்றாவாம்
பூசிக் கொளினு மிரும்பின்கண்—மாசோடும்
பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும்.

(11-ரை.) மணி - இரத்தினங்கள், மாசுபடினும் - அழுக்குச்சே ர்ந்தாலும், தம் சீர் குன்றா ஆம் - தம்முடைய ஒளி குறையா ஆகும்; பூசிக்கொளினும் - (ஒருவன்) கழுவிக்கொண்டாலும், இரும்பின் கண் - இரும்பில், மாசு ஓடும் - துருப்பாவும்; கீழ் - கீழ்மகன், தன் னைப் பாசத்துள் இட்டு - தன்னைத் தளையிலிட்டு, விளக்கினும் - அறிவு விளங்கச் செய்தாலும், மாசு உடைமை - (தான்) குற்ற முடையனா யிருத்தலை, காட்டிவிடும் - பிறர்க்குக் காட்டாமலிரான்; (தளையிலிட்டு அறிவுவிளங்கச் செய்யாவிடினும் குற்ற முடையவனா யிருத்தலைக் காட்டாமலிரான்), எ-று.

(வி-ரை) அழுக்குப் பட்டாலும் ரத்தினங்களின் சிறப்புக்கெடாது; அதுபோல் யோக்கியனுக்கு வறுமை முதலிய நேர்ந்தாலும் அவன் சிறப்புக்கெடாது; இரும்பைச் சுத்திபண்ணிவைத்தாலும் அதில் மறுபடி துருவாகிய அழுக்கு ஏறுவதுபோலக் கீழ்மக்களுக்கு எத்தனை புத்தி சொல்லிவைத்தாலும் தம்மியற்கையான அயோக்கியதையையே மேற்கொள்வார்கள், அன்றியும், விலங்குமுதலானவைகளால் அவர்களை நிர்ப்பந்தித்துத் தடுத்தாலும் தம்மியற்கையையே காட்டுவார்க ளென்றபடி. 'மாசுபடினும்' என்பதற்கு முக்குணவயத்தால் யோக்கியருக்கு ஒருகுற்றம் நேர்பட்டாலும் உடனே அவர் அதை நீக்கிக்கொண்டு முன்போல் விளங்குவார்களெனவும் கருத்துகொள்ளலாம்.

இட்டு என்பது இட்டால் என்பதன் திரிபு. விளக்கினும் என்பதிலிருக்கும் உம்மையை இதனோடும் கூட்டிக்கொண்டு 'கீழ் தன்னை மாசுடைமை காட்டிவிடும்' என்பதோடு ஒருவாக்கிய மாக்குக. இங்ஙனஞ் செய்யாமற்போனால் நான்குவிஷயம் ஏற்படா. முந்திய சில பாட்டுகளிலும் இப்படியே அறிக. "உயர்திணைதொடர்ந்த" என்கிற சூத்திரத்து உரையின்படி 'மணிதஞ் சீர்குன்றா' என முடிந்தது. 'மணிதன் சீர்' என்றும் பாடம். 'மாசொட்டும்' என்றும் பாடம்.

எண்ணொக்குஞ் சான்றோர் மரியாரிற் றீராமை
புண்ணொக்கும் போற்றா ருடனுறைவு—பண்ணமைபல்
யாழொக்கு நட்டார் கழறுஞ்சொற் பாழொக்கும்
பண்புடையா ளில்லா மனை.

(ப-ரை.) சான்றோர்-(கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்த அல்லது சற்குண நிறைந்த, மரியாரில் - விரும்பப்பட்டவர்களினின்று, நீ்ராமை-(ஒருவன்) நீங்காதிருக்குங் கருத்து, எண் ஒக்கும்-ஆராய்ச்சியை ஒக்கும்; போற்றாருடன் - பகைவரோடு அல்லது விரும்பாத

வர்களோடு, உறைவு - வசித்தல், புண் ஒக்கும் - புண்போலத் துன்பம் செய்வதாகும்; நட்டார் - சிநேகர், கழறும் சொல் - இடித்துச் சொல்லுஞ் சொல், பண்ணிய - குறைவில்லா நரம்புக்கட்டமைந்த, யாழ் ஒக்கும் - யாழினிசைபோல (செவிக்கு) இனியதாகும்; பண்பு உடையாள் - நற்குணமுடைய மனைவி, இல்லா மனை - இல்லாத வீடு, பாழ் ஒக்கும் - பாழாகிய மனையை ஒத்திருக்கும், எ-று.

(வி-ரை.) நல்ல யோக்கியரைக் கைவிடாமல் சேர்ந்திருப்பது நல்லவிவேகஞ் சம்பாதிப்பதுபோலும், அதனால் விவேகம் வருமாதலால்; அறியாதவரோடு சேர்ந்திருப்பது தன் உடம்பில் புண்படுத்திக்கொள்வதுபோலாம், அதனால் துன்பம் வருமாதலின்; இஷ்டமானவர்கள் பேசும் பேச்சு, யாழின் இராகம்போல் காதுக்கு இனிப்பாயிருக்கும்; சற்குணநிறைந்த மனைவியில்லாத வீடு சுகத்திற்கு எதுவாகாமையால் பாழ்மனைபோலும் என்றவாறு.

எண் கருவிப்பொருள் விகுதிபுணர்ந்து கெட்டபெயர். 'அரியர் ஆ' என்றும், 'மரீஇயாரில்' என்றும் பாடம். மருவியார் 'மரீயார்' எனவந்தது என்று கொள்ளவேண்டும்; மரீயார் - சாகாதவர், அவராவார் தேவர்கள்; அவர்களோடொத்தவர்கள் என்றுங் கொள்ளலாம். ஐந்தாம்வேற்றுமை நீக்கத்தில்வந்தது. இயல்-வினைத்தொகை. 'பண்ணியல்' என்றும் பாடம். (௪0௪)

> ஏரி சிறிதாயி னீரருகு மில்லத்து
> வாரி சிறிதாயிற் பெண்ணூருந் மேலைத்
> தலைசிறி தாயின் வினையூரு மூரும
> புரஞ்சிறி தாயிற் பகை.

(ப-ரை.) ஏரி - (ஊரிலுள்ள) ஏரியானது, சிறிது ஆயின் - நீர்குறைந்ததானால், நீர் அருகும் - (அவ்வூர்க் கிணறு முதலியவற்றின்) நீர் குறையும்; இல்லத்து - இல்வாழ்க்கையில், வாரி - (கணவனுக்கு) வருவாய்ப்பொருள், சிறிது ஆயின் - குறைந்ததானால்,

பெண் - மனையாள், ஊரும் - (அவனை) மேற்கொள்வாள்; மேலைத் தவம்-முற்பிறப்பிற் செய்த நல்வினை, சிறிது ஆயின்-(ஒருவனுக்குக்) குறைந்ததானால், வினை ஊரும் - தீவினை (அவனை) மேற்கொள்ளும்; முரண் - (அரசனுக்குப் படை முதலான) வலி, சிறிது ஆயின் - குறைந்ததானால், பகை - பகைவர், ஊரும் - (அவ்வரசனை) மேற்கொள்வர், எ-று.

(வி-ரை.) எரி சிறியதாயிருந்தால் தண்ணீர் அற்பமாகி அதன் கரைமேற் புரளுவதுபோல் வரும்படி கொஞ்சமானால் போகங்களை அனுபவிப்பது கடினமானதைப்பற்றிப் புருஷனை மனைவி அலக்ஷி யஞ்செய்வாள்; ஓரரசனுக்குச் சேனைமுதலாகிய பலம் குறைவாயிருந் தால் அவனைப் பகைவன் மேற்கொள்ளுவதுபோல் புண்ணியம் குறைவாயிருந்தால் பாவம் மேலிடும் என்பது கருத்து.

அருகு என்னு முதனிலைக்குக் கிட்டுதல் என்கிற பொருளு முண்டாதலால் பின்வரும் உபமேயத்திற்கேற்பக் கரைமேற்புரளுஞ் என்று கருத்துக்கூறப்பட்டது; சுருங்கும் எனப்பொருள்கொள்ளின் உபமேயத்தோடு பொருத்தமில்லையாம். 'வாரி' என்பது 'வாரத்து, வரவு' என்பவைபோல் வா என்பதின்மேல் வந்ததோர் தொழிற்பெ யர் என்னலாம். 'நீரூரும்' என்றும் பாடம். 'ஊரு, முரண்சிறி தாயிற் பகை' என்றும் பாடம். (௧0௨.)

வைததனா லாகும் வசையே வணக்கமது
செய்ததனா லாகுஞ் செழுங்கிளை—செய்த
பொருளினா லாகுமாம் போக நெகிழ்ந்த
அருளினா லாகு மறம்.

(ப-ரை.) வைததனால் - ஒருவனைத் திட்டினதனால், வசையே ஆகும் - தனக்கு நிந்தையேயுண்டாகும்; வணக்கமது செய்ததனால் -

வணங்கி உபசாரஞ்செய்ததனால், செழுங்குலம் - மேன்மையான வமிசம், ஆகும்—; செய்தபொருளினால் ஆகும் போகம்-தான்சேர்த்த திரவியத்தினால் சுகானுபவமுண்டாகும்; நெகிழ்ந்த அருளினால் - மனம் தளர்ந்த இரக்கத்தினால், அறம் - தருமம், ஆகும்—, எ-று.

(வி-ரை.) ஒருவனைத் தூஷிப்பதனால் பகையுண்டாமேயன்றி வேறுபயனில்லை;வணங்கிப்பேசினால் இவனுக்கேயன்றி இவன்குலத்துக்கும் பெருமையுண்டாம்; பொருளைச் செலவழிப்பதற்கேற்ற போகங்களுண்டாவதுபோல் அருள் மிகமிகத் தருமமும்மிகுந்துவருமென்பதாம்.

'நெகிழ்ந்த அருள்' என்பதனால் எவர்க்கு என்னசங்கடம் நேரிட்டபோதிலும் மனம் கல்லைப்போலிராமல் தனக்கு நேர்ந்ததுபோல் எண்ணிக் கரைவதே அருளென்று அருளின்தன்மையைக் காட்டியதாயிற்று. ஆம் - அசை. (௪0௩)

ஒருவ னறிவானு மெல்லா மியாதொன்றும்
ஒருவ னறியா தவனும்—ஒருவன்
குணனடங்கக் குற்றமு ளானு மொருவன்
கணனடங்கக் கற்றானு மில்.

(ப-ரை.) எல்லாம் அறிவான் ஒருவனும் - எல்லாவற்றையும் அறிந்தவனாகிய ஒரு புருஷனும், யாதொன்றும் அறியாதவன் ஒருவனும் - எதையும் அறியாத ஒருவனும், குணன் அடங்க-குணம் உள்ளடங்கிப்போக, குற்றம் உளான் ஒருவனும் - குற்றங்களுள்ளவனாகிய வொருவனும், கணன் அடங்க - குறைகள் அடங்கிப்போகும்படி, கற்றான் ஒருவனும் - கல்வி கற்றவனாகிய வொருவனும், இல் = (இவ்வுலகத்தில்) இல்லை, எ-று.

(வி-ரை.) எல்லாம் அறிந்தவனும் இல்லை; ஒன்றும் தெரியாதவனும் இல்லை; ஒருகுணமுமில்லாமல் குற்றங்களைமாத்திரம் உடை

யவனுமில்லை; கிஞ்சித்தும் சந்தேக விபரீதங்க ளில்லாமல் படித்த றிந்தவனுமில்லை என்பதாம்.

இதனால் உள்ளமட்டும் அறிவையும் குணத்தையும் பார்த்துக் கொள்ள வேண்டுமேயல்லது குறைவைக்கண்டு இகழலாகாதென்ற தாயிற்று. எல்லாமறியாது என்கிறவிடத்தில் (மெய்பீறு - கு - ங) னல் இகரச்சாரியை தோன்றியது. (௧0௪)

மனைக்கு விளக்கு மடவாள் மடவாள்
தனக்குத்தகைசால் புதல்வர்—மனைக்கினிய
காதற் புதல்வர்க்குங் கல்வியே கல்விக்கும்
ஓதிற் புகழ்சா லுணர்வு.

(ப-ரை.) மனைக்கு விளக்கு மடவாள்-ஒருவன் வீட்டுக்கு மனை வியே விளக்குப்போலிருப்பவள்; மடவாள் தனக்கு - அந்த மனைவி க்கு, புதல்வர் - மக்கள், சால்பு ஆகும் - பெருமை ஆகும்; மனைக்கு இனிய-இல்வாழ்க்கைக்குப் பிரியமான, காதல் புதல்வர்க்கும் - ஆசை யான புத்திரருக்கும், கல்வியே சால்பாகும்—; கல்விக்கும்—; ஓதில்- சொன்னால், புகழ் சால் உணர்வு - கீர்த்திமிகுந்த விவேகயானது, (சால்பாகும்—), எ-று.

(வி-ரை.) நல்ல மனைவியிருந்தால்தான் அந்தவீடு விளங்கும்; நல்ல பிள்ளைகளைப் பெற்றால்தான் அந்தப் பெண்ணுக்குப் பெருமை; அந்தப்பிள்ளைகளும் கல்வி கற்றால்தான் மேன்மை பெறுவார்கள்; அப்படிப் படித்திருப்பதும் சாரத்தைக் கிரகித்திருந்தால்தான்புகழ் பெறுமென்றபடி. இது ஏகாவலி என்னுமலங்காரம்.

'மடவாள்' மடமை அல்லது மடம்-பகுதி, ஆள்-விகுதி. சால்பு: சால் என்னு முரியடியாகப் பிறந்த தொழிற்பெயர். (௧0௫)

இன்சொலா னாகுங் கிழமை யினிப்பிலா
வன்சொலா னாகும் வசைமனம்—மென்சொலின்
நாவினா னாகு மருள்மன மம்மனத்தால்
வீவிலா வீடாய் விடும்.

(ப-ரை.) இன்சொல்லான் ஆகும் கிழமை-இனிமையான சொற்களால் ஒருவனிடத்து உரிமையுண்டாகும்; வன்சொலான் - கடினமான சொற்களால் வசை மனம் - பழிப்புள்ள இதயம், ஆகும்—, [‛பகைமனம்' என்று மிருக்கலாம், அதற்குப் பகையுள்ளமனம் என்பது பொருள்]; மென்சொலின் - மெதுவான சொற்களுள்ள, நாவினான் - நாக்கினால், ஆகும் அருள் மனம் - கிருபையுள்ள மனம் உண்டாகும், அம்மனத்தால்—, வீவு இலா - நாசமில்லாத, வீடு ஆய் விடும் - மோக்ஷம் உண்டாகும், எ-று.

(வி-ரை.) நல்லபேச்சினால் எவனும் சொந்தமாவான்; கடினமான பேச்சினால் எவனுக்கும் மனதிற் பகையுண்டாம்; அன்றியும், எப்படிப்பட்ட கடினனிடத்தும் வணங்கி இனிமையாய்ப் பேசினால் அவனுக்கு இரக்கம் உண்டாம்; அப்படி ஒருவனுக்கு இரக்கமுண்டாகி உபகாரமுதலிய நற்செய்கைகளைச் செய்ய அதனால் மனமதெளிந்து மோக்ஷ காரணமாகு மென்றபடி.

வசைமனம் - அருள்மனம் என்று மனதைக் கூட்டிச்சொன்னது "வெளித்தோற்றத்துக்கு மாத்திரமல்ல, உண்மையாகவே" என்பதற்கு என்றறிக. வீவு-தொழிற்பெயர்; வீ - பகுதி, உ-விகுதி.

நான்மணிக்கடிகை மூலமும் உரையும்

முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை.

நான்மணிக்கடிகை

செய்யுள் முதற்குறிப் பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ.	
அஞ்சாமை	33
அந்தணரி	41
அலைப்பான்	35
ஆ.	
ஆசாரமென்பது	102
இ.	
இரும்பினிரும்	42
இரைசுடு	58
இளமைப்	100
இனிதுண்பா	68
இன்சொலா	111
இன்றைமை	22
ஈ.	
ஈத்துண்பா	69
ஊ.	
ஊர்ந்தான்	80
ஊழியும்	81
ஊனுண்டு	75
எ.	
எண்ணெக்குஞ்	106
எருதுடையான	61
எல்லாவிடத்	101
எள்ளற்க	6
எள்ளற்பொருள	59
என்றுமுள	67
ஏ.	
ஏதிலாரென்பா	51
ஏரிசிறிதாயி	107
ஒ.	
ஒருவனறி	109
ஒன்றாக்கல்	83
க.	
கடற்குட்டம்	23
கண்டதே	47
கண்ணிற்	64
கண்ணுள்ளுங்	72
கந்திற்பிணி	16
காப்பவர்	46
கல்லா	91
கல்லிற்பிறக்	11
கள்வமென்பார்	13
கள்ளாமை	94
கள்ளிவயிற்றி	10
கள்ளினிலிம்	102
கற்பக்கழி	36
கற்றுன்றளறி	82
கற்றன்னார்	65
கற்றார்முற்	14
கன்றாமை	18
கு.	
குழித்துழி	37
கை.	
கைத்திலார்	77
கைத்துடை	74
கொ.	
கொடுப்பி	89
கோ.	
கோனேக்கி	36
சா.	
சாவாத	86
சி.	
சிறந்தார்	57
சொ.	
சொல்லா	87
தி.	
திரியழ	73
திருவொசுக்	12
திருவிற்றிற	38
திருவுந்திணை	48
தூ.	
தூர்ந்தொழி	84

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
தே.		பறைநன்று	20	மழையின்றி	5[illegible]
தேவரனையர்	83	பறைபட	7	மறக்களி	4[illegible]
ந.		பி.		மறையறிப	97
நகையினிது	45	பிணியன்னர்	40	மனைக்காக்க	25
நகைநல	32	பிறக்குங்கா	49	மனைக்குப்பாழ்	28
நல்லார்	91	பின்னவாம்	76	மனைக்குவிள	110
நலனுமிளமை	90	பு.		மா.	
நன்றிசா	53	புகழ்செய்	30	மாசுபடினு	105
நா.		புகைவித்தா	39	மாண்டவர்	66
நாக்கினறிப	86	பெ.		மை.	
நாவன்றோ	88	பெருக்குக	95	மையாற்ற	44
நாற்றமுரை	54	பெற்றானதிர்	26	மொ.	
நி.		பொ.		மொய்சிதை	29
நிலத்து	15	பொய்த்த	24	யா.	
நீ.		பொறிகெடு	52	யாறுளடங்கு	60
நீரான்	92	போ.		யானையுடை	63
நெ.		போதினு	56	வ.	
நெய்விதிர்ப்ப	70	போரறின்	50	வடுச்சொ	108
ப.		ம.		வளப்பாத்தி	21
படியை	3	மகனுரைக்கும்	78	வன்கண்	99
பட்டாங்கே	98	மடிமை	96	வா.	
பதிநன்று	79	மண்ணணியறிப	9	வாலிழையார்	104
பல்லினு	19	மதிமன்னு	1	வை.	
பழியின்மை	71	மலைப்பினும்	31	வைததனை	108

நான்மணிக்கடிகை செய்யுள் முதற்குறிப்பகராதி

முற்றிற்று.

நீதிநூற்றிரட்டு விருத்தியுரை: 11-ம் பாகம்.

உ

கடவுள் துணை.

மதுரை கூடலூர்கிழார்

அருளிச்செய்த

முதுமொழிக்காஞ்சி

மூலமும்,

மஹாவித்வான் - கா. இராமசாமிநாயுடு அவர்களால்

இயற்றப்பட்ட

விருத்தியுரையும்.

இவை

பென்ஷன் சுபேதார்-தஞ்சை. சாம்பசிவம்பிள்ளை

அவர்கள குமாரர்

தஞ்சை - எஸ். குமாரசுவாமிபிள்ளையால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

1910.

Copyright]　　விலை அணா $2\frac{1}{2}$.　　[Registered.

உ

கடவுள் துணை.

மதுரை கூடலூர்க்கிழார்

அருளிச்செய்த

முதுமொழிக்காஞ்சி.

அஃதாவது அறிவுடையோர் குற்ற நீக்கி யாராயும் உலகத்திய
லுள் முடிந்த பொருளாகிய அறம்பொரு ளின்பங்களை விளங்கக
கூறுவதாம். காஞ்சியென்பதற் கிலக்கணம் "பாங்கருஞ் சிறப்பின்"
என்னும் தொல்காப்பியச் சூத்திரவுரையில் "வீடுபேறு நிமித்தமா
கப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றுங் குறிப்பினது
காஞ்சியாயிற்று" என நச்சினார்க்கினியர் கூறியிருத்த லறிக. முது
மொழிக்காஞ்சி யென்பது முதுமை மொழி காஞ்சி எனப் பிரிபடும்.
முதுமை - பழைமை, மொழி - சொல், காஞ்சி - ஊன்றல், (அஃதா
வது வற்புறுத்திக் கூறல்) எனவே முதுமொழிகளைக் கொண்டு அற
முதலியவற்றை வற்புறுத்திக் கூறல் முதுமொழிக்காஞ்சி யென்றா
யிற்று. இது தன்னையுணர்த்தும் நூலுக்காதலின் காரியவாகுபெயர்.
அன்றித் தனக்கிடமாகிய நூலின்மே னிற்றலின் தானியாகுபெயரு
மாம். காஞ்சி பலவகைப்படு மென்பதைப் புறப்பொருள் வெண்பா
மாலை முதலியவற்றா லறிக. முதுமொழி யென்பது பண்புத்தொகை
நிலைத்தொடர். மொழிக்காஞ்சி யென்பது மூன்றாம் வேற்றுமையுரு
பும் பயனு முடன்றொக்கதொகை.

இம் முதுமொழிக்காஞ்சியின்

ஆசிரியர்:—மதுரை-கூடலூர்க்கிழார்.

இடம்:—கூடலூரென்னும் பதிக்கண் பிறந்து மதுரையில் வசித்திருந்தவர்.

காலம்:—கடைச் சங்கத்தாரது காலம்.

ஜாதி சமயம்:—இவருக்குக் கிழாரென்னும் பெயரிருத்தலி
னிவரை வேளாளரென்று சிலரும வைசியரென்று சிலரும

கூறுவர்; கிழாரென்றபெயர் இருவருக்கு மூரியதாதலின் சமய மின்னதெனத் தெரியவில்லை.

இவருடனிருந்த புலவர்கள்:—அரிசிற்கிழார், ஆலத்தூர்க்கிழார் ஆவூர்க்கிழார், இடைக்குன்றூர்க்கிழார், நக்கீரர், ஔவை, கபிலர் முதலானோர்.

இவரியற்றிய வேறு நூல்கள்:—இவரிந்நூலன்றி வேறுநூ லியற்றவில்லை யாயினும் எட்டுத்தொகை நூல்களுள் இரண்டாவதாகிய குறுந்தொகையுள் 166-வது 'தணகடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை" என்கிற பாடலும், 167-வது "முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்"என்கிற பாடலும்,214-வது "மரங்கொல் கானவன் புனந்துளர்ந்து விக்கிய" என்கிற பாடலும், எட்டாவதாகிய புறநானூற்றுள் 229 ஆகிய "ஆடியழலற்குடத்து" என்கிற பாடலும் பாடியிருக்கின்றனர்.

விசேஷங்கள்:—இவர் கடைச்சங்கப்புலவர் நாற்பானொன்பதின்ம ருடனிருந்து கவிபாடிய நானூற்று நாற்பானொன்பதின்மரி லொருவரெனத் தெரிகின்றது.

இவ்வாசிரியரா லியற்றப்பட்ட இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களு ளொன்றாகும். பதினெண்கீழ்க் கணக்காவன:—நாலடி, நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியதுநாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணையைம்பது, ஐந்திணையெழுபது, திணைமொழியைம்பது, திணைமாலைநூற்றைம்பது, முப்பால், திரிகடுகம், ஆசாரக்கோவை,பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை யென்பனவாம். குறைந்த வடிகளுடன்கூடி அறம்பொருளின்பங்களைக் கூறுநூல் கீழ்க்கணக் கெனப்படும்.

கடவுள் துணை.

முதுமொழிக்காஞ்சி

மூலமும் உரையும்.

1. சிறந்தபத்து.

சிறப்புடைய பத்து விஷயங்கள் என்பது அதன்பொருள். சிறந்த பெயரெச்சமாதலின் வருமொழி வல்லொற்று மிகாதாயிற்று. பத்து-எண்ணலளவையாகுபெயர். சிறந்தனவாகிய பத்துவிஷயங்களென்புழிச் சிறந்த என்பது அன்சாரியை குறைந்த உடன்பாட்டுத் தெரிநிலை வினையாலணையும் பெயராம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.

(பதவுரை.) ஆர்கலி உலகத்து - கடல் சூழ்ந்த உலகத்தில் (உள்ள), மக்கட்கு எல்லாம் - மக்களியாவருக்கும், ஓதலின் - (நன்னூல்களைப்) படித்தலைப்பார்க்கினும், ஒழுக்கம் உடைமை-(தம் தம் வருணாச்சிரமத்திற்கு ஏற்ற) நல்லொழுக்கமுடைத்தாயிருத்தல், சிறந்தன்று - சிறப்புடையதாம், என்றவாறு.

(விருத்தியுரை.) ஒருவன் கல்வியுடையவனா யிருத்தலைப் பார்க்கினு மொழுக்கமுடையனா யிருத்தல் சிறந்த தென்பதாம். "கற்க

கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக" என்றபடி கல்விக்குப் பயன் ஒழுக்கமுடைமையாம். அவ்வொழுக்கமில்லாவிடின் கற்றதனாற் பயனில்லை என்பதும், "நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க, மென்று மிடும்பை தரும்" என்றதனாலும், "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" என்றதனாலுமறிக. மக்கட்கெல்லாம் எனப் பொதுமையிற் கூறினமையின் ஆண் பெண் என்னும் இருபாலாரு மோதுதற் குரியா ரென்பது பெறப்பட்டது. ஆர்கலி: நிறைந்த ஓசையையுடையது எனப் பொருள்படுதலின் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணக்குறி. ஓதல் - தொழிற்பெயர். ஓதலின் என்பதன்கணுள்ள இன் உருபு உறழ்ச்சிப்பொருளது. உறழ்ச்சி ஒன்றின் ஒன்றை மிகுத்துக்கூறுதல். இஃது எல்லைப்பொருளின்பாற்படும். உடைமை-குறிப்புத் தொழிற்பெயர், அதன் பொருள் உடைத்தாயிருத்தலென்பது. சிறந்தன் றென்பதில் அன் து சாரியை. ஒழுக்கம்-அம்மீற்றுத் தொழிற்பெயர்; பகுதி ஒழுகு; இதன் பொருள் நல்லோர் விதித்தவா றுசரித்துவருத லென்பது. உலகத்து என்பதில் அத்துச்சாரியை. எல்லாம்-மூவிடப்பொதுப்பெயர்.

(பழையவுரை.) கடல் சூழ்ந்த வுலகத்து மக்கட் கெல்லாம் ஓதலினும் மிக்க சிறப்புடைத்து ஆசாரமுடைமை என்றவாறு.

(2) காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.

(ப-ரை.) காதலின் - (ஒருவன் பிறரிடத்து வைத்திருக்கும்) அன்புடைமையைப் பார்க்கினும், கண் அஞ்சப்படுதல் - (அவர் வருந்துவதைக்) கண்டு (தான்) அஞ்சுதல், சிறந்தன்று—, எ - று.

(வி-ரை.) ஒருவன் பிறரிடத் தன்புடையவனா யிருத்தலினும் அவர் வருந்துதலைப் பார்த்தஞ்சுதல் சிறந்த தென்பதாம். கண்ணென்பது கண்டென்பதன் றிரிபு; கைமிகல் என்றாற்போல உபசார்க்கமுமாம். அஞ்சப்படுத லென்னுஞ் செயப்பாட்டு வினைத்தொ

ழிற்பெயர் அஞ்சுதல் என்னுஞ் செய்வினைத் தொழிற்பெயரின் பொருளில் வந்தது. உவப்பிற்கேது காதலெனப்படும்.

(பழையவுரை.) பிறர் தன்மேற் செய்யுங் காதலினுஞ் சிறந்தது மற்று அவராற் கண்ணஞ்சப்படுதல், எ-று.

(3) மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை.

(ப-ரை.) மேதையின் - (மேலுமேலு மொருவன் பல நூல்களைக் கற்று) அறிவுடையனுதலைப் பார்க்கினும், கற்றது - (தான் நல்லாசிரியன் மாட்டுக்) கற்ற நூற்பொருள்களை, மறவாமை - மறவாதிருத்தல், சிறந்தன்று—, எ-று.

(வி - ரை.) படித்தவற்றை மறவாமலிருப்பது மேலுமேலும் படித்தலினும் சிறப்புடைய தென்பதாம். மேதை - அறிவு; பண்புப்பெயர்; அஃது ஈண்டு ஆகுபெயர். கற்றது-வினையாலணையும் பெயர். மேதைக்கு முரண்மொழி பேதையாம்.

(பழையவுரை.) தானுக ஒன்றை மதிப்புடைமையான் அறியும் அறிவினும் மிக்க சிறப்புடைத்து தான் கற்றதனைக் கடைப்பிடித்திருத்தல், எ-று.

(4) வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை.

(ப-ரை.) வண்மையின் - (ஒருவன்) ஈகையுடையனு யிருத்தலைப் பார்க்கினும், வாய்மை உடைமை - உண்மை யுடையவனு யிருத்தல், சிறந்தன்று—, எ-று.

(வி-ரை.) ஒருவன் உண்மை பேசுபவனுயிருத்தல் ஈகையினுஞ் சிறந்த தென்பதாம். "யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும், வாய்மையி னல்ல பிற" என்முர் திருவள்ளுவனுரும். வாய்மை சொற்றவ முமையுமாம். ஈகை - கைம்மாறு கருதாது தருதல். வாய்மை யென்பதின் மை பகுதிப்பொருள்விகுதி; அது

வாயிற்றோன்றுஞ்சொல்லுக்காதலின்கருவியாகுபெயர். அஃதீண்டுக் கிளைத் தண்டென்பதுபோன் றுண்மை யுரைத்தலின்மே னின்றது.

(பழையவுரை.) செல்வத்தினும் மிக்க சிறப்புடைத்து மெய் யுடைமை, எ-று.

(5) இளமையிற் சிறந்தன்று மெய்பிணி யின்மை.

(ப-ரை.) இளமையின் - (ஒருவன்) இளமைப்பருவமுடையனா யிருத்தலைப் பார்க்கினும், மெய் - உடம்பின்கண், பிணி இன்மை - நோயின்றி யிருத்தல், சிறந்தன்று—, எ-று.

(வி-ரை.) நோயின்றியிருத்தல் இளமைப்பருவ முடைத்தாயிரு த்தலினுஞ் சிறப்புடையதென்பதாம். "நோயற்ற வாழ்வே வாழ்வு" என்பதீண்டறியத் தக்கதாம். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல் வம்" என்பதன் சிறப்பை யுணர்க. மெய்யென்பதீண்டு மங்கலவழு க்கா யுடம்பின்மே னின்றது; அஃதநித்த பதார்த்த மாதலின். அன்றி மெய்யாகிய வுயிரிருத்தற் கிடமா யிருத்தலின் தானியாகு பெயரென்றுங் கொள்ளலாம். பிணி-வினைமுதற் பொருளை யுணர்த் தும் இகரவிகுதி புணர்ந்து கெட்ட தொழிற்பெயர்; அதன்பொருள் பிணிப்ப (கட்டுவ) தென்பது. பிணியுடையார் தாம் கருதியவா றொழுகாமையையறிக. இன்மை-குறிப்புத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) இளமையினும் மிக்க சிறப்புடைத்து உடம்பு நோயின்மை, எ-று.

(6) நலனுடைமையி னாணுச் சிறந்தன்று.

(ப-ரை.) நலன் உடைமையின் - (ஒருவன்) அழகுடையவனா யிருத்தலைப் பார்க்கினும், நாணு - நாண (வெட்க) முடைத்தா யிரு த்தல், சிறந்தன்று—, எ-று.

(வி-ரை.) வெட்கமுடைமை யொருவனுக்கழகினுஞ் சிறந்ததா மென்பது. "இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச், செப்ப மும் நாணு மொருங்கு" என்றும், "ஒழுக்கமும் வாய்மையு நாணு மிம் மூன்றும், இழுக்கார் குடிப்பிறந் தார்" என்றும், "அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு, ஐந்துசால் பூன்றிய தூண்" என்றும், "நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின், வேண்டுக யார்க்கும் பணிவு" என்றும் திருவள்ளுவர் கூறுமாறறிக. "காமுற்ற பெண்ணுக்கு அணிகலம் நாணுடைமை என்பதுகாண்க. நீலமென்பது நீலென்றானாற்போல் நாணமென்பது கடைக்குறை ந்து நாணென்றாய் உகரச்சாரியைப் பெற்று நாணுவென்றாயிற்று. இது நாணுதலென்றும் வரும்.

(பழையவுரை.) அழகுடைமையினும் மிக்க சிறப்புடைத்து நாணுடைமை, எ-று.

(7) குலனுடை மையிற் கற்புச் சிறந்தன்று.

(ப-ரை.) குலன் உடைமையின் - (ஒருவன்) உயர்குடியிற் பிறந்திருத்தலைப் பார்க்கினும், கற்பு-கல்வியறிவுடையனாயிருத்தல், சிறந்தன்று—, எ-று.

(வி-ரை.) குலன் குலமென்பதன் போலிமொழி; இது கடைப் போலி. ஒருவன் மேன்மையடைதற்குக் கல்வியறிவுடைமை காரண மாவதன்றி, அவனது உயர்குடிப்பிறப்புக் காரணமாகா தென்பதாம். இதனை "மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங், கற்றா ரனைத்திலர் பாடு" என்கிற திருக்குறளும், "எக்குடிப் பிறப்பினும் யா வரே யாயினும், அக்குடியிற் கற்றோரை வருகென்பார்" என்ற நறுந் தொகையினும் காண்க. குலன் உடைமையின்-ஒருத்தி யுயர்குடிப்பிற ப்புஉடையவளையிருத்தலைப் பார்க்கினும், கற்பு-அவள் கற்புடையவ ளாயிருத்தல், சிறந்தன்று—, என வேறு பொருள் கொள்ளினுமாம்.

(பழையவுரை.) நல்ல குலனுடைமையினும் கல்வியுடைமை சிறப்புடைத்து, எ-று.

(8) கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.

(ப-ரை.) கற்றலின் - (ஒருவன் நன்னூல்களைக்) கற்றலைப் பார்க்கினும், கற்றாரை - கல்வியறிவுடையாரை, வழிபடுதல் - வழி பட்டொழுகுதல, சிறந்தன்று—, எ-று.

(வி-ரை.) கற்றாரை வழிபட்டு, அவருடனிருந் தொழுகுபவர்க்குப் பலவகைப்பட்ட கல்வியறிவுந் தாமே யுண்டாமென்பதாம். துரோணரது பிம்பத்தைப் பிரதிட்டைசெய்து பூசித்து வந்த ஏகலைவனென்ற வேடனுக்கு அக்குருபக்தியால் வில்வித்தை முழுவதும் கைகூடியமை, இதற்குத் திருஷ்டாந்தம். "கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்" என்ற மேல் தண்டாப்பத்திலிருத்தலுணர்க. கற்றார் - வினையாலணையும்பெயர். ஈண்டுக் கற்றவராவார் அறம்பொருளின்பம் வீடுகளைப் பயக்கு நூல்களை யையந்திரிபறக் கற்று அவற்றை நன்மாணாக்கர்க் குணர்த்துதற் குரியார்.

(பழையவுரை.) தான் ஒன்றைக் கற்கு மதனினுஞ் சிறப்புடைத்து கற்றாரை வழிபாடு செய்தல், எ-று.

(9) செற்றாரைச் செறுத்தலிற் றற்செய்கை சிறந்தன்று.

(ப-ரை.) செற்றாரை - (தன்னை) வருத்தியவரை, செறுத்தலின் - (தான்மாறாகத் துணைவலி நேரிட்டகாலத்து) வருத்துதலைப் பார்க்கினும், தன் செய்கை - தன்னைச் செப்பமுடையவனாக்கிக் கொள்ளுதல், சிறந்தன்று—, எ-று.

(வி-ரை.) ஈண்டுச் செப்பமுடைமையாவது-தன்னை வருத்தினவரை வருத்தாது அவர்க்கிதமானவற்றைப் புரிந்து அவரை நாணுமாறு செய்வித்தல். "இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண,

நன்னயஞ் செய்து விடல்" என்றார் திருவள்ளுவனார். செற்றார்-வினையாலணையும்பெயர். செறுத்தல் - தொழிற்பெயர், பகுதி செறு.

(பழையவுரை.) பகைவரைச் செறுத்தலினும் மிக்க சிறப்புடைத்து, தன்னைப் பெருகச்செய்தல், எ-று.

(10) முற்பெருகலிற்பிற் சிறுகாமை சிறந்தன்று.

(ப-ரை.) முன் பெருகலின் - முன்னே (ஒருவன் செல்வத்தால் மேலுமேலும்) விருத்தியாதலைப் பார்க்கினும், பின் சிறுகாமை - (உள்ளசெல்வம்) பின்னே குறையாதிருத்தல், சிறந்தன்று—, எ - று.

(வி-ரை.) செல்வம் மேன்மேலும் விருத்தியாதலைப் பார்க்கினும் உள்ள செல்வம் குறையாதிருத்தலொருவனுக்கு நலமாமென்பதாம். முன்பின் னென்பன இடத்தை யுணர்த்தாது காலமுணர்த்திய பண்புச்சொற்கள். இடைச்சொற்க ளென்பாருமுண்டு. இவற்றினுதிரூபம் முன்மை பின்மை யென்பன. இவை முன் பின்னென வருதலே யன்றி, முன்னே பின்னே, முன்பு பின்பு, முன்னர் பின்னர், முன்னை பின்னை யென்றற்றொடக்கத்தனவாகவும் வரும்.

(பழையவுரை.) செல்வம் முற்காலத்துப் பெருகிப் பின் அழிதலின் நின்ற நிலைமையிற் சிறுகாமை சிறப்புடைத்து, எ-று.

சிறந்தபத்து முற்றிற்று.

2. அறிவுப்பத்து.

அறிதற்குரியவாகிய பத்துவிஷயம், அறிவதாகிய பத்து விஷய மெனினுமாம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த வுலகத்திலுள்ள மக்களியாவருள்ளும், பெருமையில் பிறந்தமை - (ஒருவர்) பெருங்குடியிற் பிறந்திருத்தலை, ஈரத்தின் - (அவர் பிராணிகளிடத்து வைத்திருக்கும்) அன்பினால், அறிப-(மேலோர்) அறிவார்கள், எ-று.

(வி-ரை.) ஒருவர் பெருங்குடியிற் பிறந்தா ரென்பதை யவர் பிராணிகளிடத் தன்புடையரா யிருத்தலினா லறியலா மென்பதாம். "நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக், குலத்தின்க ணையப் படும்" எனத் திருவள்ளுவர் கூறியதுங் காண்க. ஈரத்தின் என்பதன் கணுள்ள ஐந்தனுருபு ஏதுப்பொருளது. பேர் - பெருமை யென்பதன் விகாரம். பெருங்குடி - உயர்குடி. அறிப - பகரவீற்றுப் பலர்பால் வினைமுற்று.

(பழையவுரை.) கடல்சூழ்ந்த வுலகத்து மக்களெல்லாருள்ளும், ஒருவன் பெருங்குடியிற் பிறந்தமையை அவன் ஈரமுடைமை யானே அறிவர், எ-று.

(2) ஈர முடைமை யீகையி னறிப.

(ப-ரை.) ஈரம் உடைமை - (ஒருவர் பிராணிகளிடத்து) அன்புடைத்தா யிருத்தலை, ஈகையின் - (தம்மை யாசித்தவர்க்குத் தம்மிடத் துள்ளதை இல்லை யென்னாது) கொடுத்தலினால், அறிப—, எ-று.

(வி-ரை.) ஒருவர் ஜீவர்களிடத் தன்புடையராயிருத்தல் அவரது கொடையாலறியப்படு மென்பதாம். "அறனும் அருளுடையான் கண்ணதே யாகும்" என்றபடி அருளில்லாதவர் அறஞ்செய்தலின்றும். ஈகை - கையீற்றுத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) ஒருவன் மனத்தின்கண் ஈரமுடையா னென்பதனை அவன் பிறர்க்குக் கொடுக்குங் கொடையினானே அறிவர், எ - று.

(3) சோரா நன்னட் புதவியி னறிப.

(ப-ரை.) சோராத நல் நட்பு - (எக்காலத்துந் தம்மிடத்தொருவர் வைத்துள்ள) மறத்தலின்றிய சிறந்த சிநேகத்தை, உதவியின்- (தமக்காபத்து நேரிடுங்காலத்துச் செய்யும்) உதவியினால், அறிப—, எ - று.

(வி - ரை.) மறவாத சிநேகம் ஆபத்து நேரிடுங்காலத்துச் செய்யு முதவியினு லறியப்படு மென்பதாம். "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதா நட்பு" என்றார் திருவள்ளுவனாரும். சோரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நட்பு - பண்புப்பெயர், பகுதி - நள். உதவி-தொழிற்பெயர்; விகுதி இ.

(பழையவுரை.) ஒருவன் தப்பாத கடைப்பிடியுடைய நல்ல நட்பினையுடைய னென்பது, அவன் நட்டார்க்குச் செய்யும் உதவியினானே அறிவர், எ - று.

(4) கற்ற துடைமை காட்சியி னறிப.

(ப-ரை.) கற்றது உடைமை - (ஒருவர்) கல்வியறிவுடைத்தாயிருத்தலை, காட்சியின் - (அவரது வார்த்தையின்) பொலிவினாலே, அறிப—, எ - று.

(வி-ரை.) கற்றவரை அவரது சொற்பொலிவா லறியலா மென்பதாம். "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல், கற்றாரோ டேனையவர்" என்றார் நாயனார். கற்றது - வினையாலணையும்பெயர். காட்சி - தொழிற்பெயர்; பகுதி காண். பொலிவு - விளங்கிய அறிவுடைமையைக் காட்டுந் தன்மை. காட்சியினென்பதற்கு முகவிளக்கத்தினாலென்றுங் கூறலாம்.

(பழையவுரை) ஒருவனது கல்வியை அவன்றன் அறிவினாலே அறிவர், எ-று.

(5) ஏற்ற முடைமை யெதிர்கோளி னறிப.

(ப-ரை.) ஏற்றம் உடைமை - (ஒருவர்) மேன்மை யுடைத்தாயிருத்தலை, எதிர்கோளின் - (பிறரை) எதிர்கொண் டழைப்பதனால், அறிப—, எ-று.

(வி-ரை.) கல்வி கேள்வி முதலியவற்றால் ஒருவர் மேன்மையுடையராயிருத்தலை அவர் பிறரை எதிர்கொண் டுபசரிப்பதனா லறியலாமென்பதாம் இதனை "இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை, விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார், குன்றா வொழுக்கமாக் கொண்டார் கயவரோ, டொன்றா வுணரற்பாற் றன்று" என்பதனாலறிக. எதிர்கோளின் என்பதில் எதிர்கொள் பகுதி; இது விகாரப்பட்டு எதிர்கோளென்றாயிற்று. கண்ணன் தூது சென்றபோது பீஷ்மாதியோர் எதிர்கொண்டவாறறிக. ஏற்றமுடைமை என்றும் பாடம்.

(பழையவுரை.) ஒருவன் ஆராய்ந்த துணியவல்லனென்பதனை, அவன் முறைகொண்டு பாதுகாக்குங் காப்பானே அறிவர், எ-று.

(6 சிற்றிற் பிறந்தமை பெருமிதத்தி னறிப.

(ப-ரை.) சிறுமை இல் பிறந்தமை - (ஒருவன்) இழிகுடியிற் பிறந்திருத்தலை, பெருமிதத்தின-(அவனது) செருக்கினால், அறிப—, எ-று.

(வி-ரை.) ஒருவன் இழிகுடியிற் பிறந்திருத்தலை அவனது செருக்கா லறியலா மென்பதாம். செருக்கு - கர்வம், அது பெரியாரைப் பணியாமை முதலியனவாம். இழிகுடி - வம்சாவளியின்றிய மரபு. "சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப், பேணிக்கொள்வே மென்னும் நோக்கு", "பணியுமா மென்றும் பெருமை சிறுமை, யணியுமாந் தன்னை வியந்து" என்பதுகுறள்.

(பழையவுரை.) சிறமையுடைய குடியின்கட் பிறந்தானென்பதனை அவன் செருக்கினானே அறிவர், எ-று.

(7) குத்திரஞ் செய்தலிற் கள்வனாத லறிப.

(ப-ரை.) குத்திரம் செய்தலின் - (ஒருவன்) வஞ்சகச்செய்கையுடைத்தா யிருத்தலினால், கள்வன் ஆதல் - (அவன்) திருடனாகவிருத்தலை, அறிப—, எ-று.

(வி-ரை.) ஒருவன் திருடனா யிருத்தலை அவனது வஞ்சகச் செயலா லறியலா மென்பதாம். வஞ்சகச் செய்கை - மாறுபாடான செய்கை. கள்வன் என்பதில் கள்-பகுதி, வ்-பெயரிடைநிலை, அன் உயர்திணையாண்பால்விகுதி. ஆதல்-குசசாரியை தொக்க தொழிற் பெயர்.

(பழையவுரை.) ஒருவனை ஒருவன் படிறுசெய்யும் படிற்றால் அவன் கள்வனாதல் அறிவர், எ-று.

(8) சொற்சோர் வுடைமையி னெச்சோர்வு மறிப.

(ப-ரை.) சொல் சோர்வு உடைமையின்-(ஒருவன் சொல்லுஞ்) சொல்லிற் றவறுடைத்தாயிருத்தலினால், எ சோர்வு உம்-(அவனது) எல்லாத் தவறுகளையும், அறிப—, எ-று.

(வி-ரை.) ஒருவனது தவறுகளை அவனது மாறுபாடுள்ள சொல்லா லறியலா மென்பதாம். "ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்,

காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு" என்றார் திருவள்ளுவனார். "சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதல் மாண்பினிது" என்பது இனியவை நாற்பது. எச்சோர்வு மென்பது அடைக்கலம் வைத்த பொருளை யபகரித்தல், அடுத்தாரைக் கெடுத்தல், பிறரையடுத்துக் கெடுத்தல் முதலியனவாம். சோர்வு வுவ்விகுதித் தொழிற்பெயர்.

(பழையவுரை.) சொற்சோர்வுபடச் சொல்லுதலான், அவனுடைய எல்லாச் சோர்வையும் அறிவர், எ-று.

(9) அறிவுசோர் வுடைமையிற் பிறிதுசோர்வு மறிப.

(ப-ரை.) அறிவு சோர்வு உடைமையின் - (ஒருவன்) அறிவு சோர்ந்திருத்தலினால், பிறிது சோர்வும் - (அதனின்) வேறாய (அவனது) உடலின்றளர்ச்சியையும், அறிப—, எ - று.

(வி-ரை.) அறிவின் சோர்வினால் உடலின் சோர்வை யறியலா மென்பதாம். சோர்தல்-விளக்கமின்றியிருத்தல். அறிவு-வுவ்விகுதித் தொழிற்பெயர்; பண்புப்பெயருமாம். பிறிதென்பது ஈண்டு இனம் பற்றி யுடம்புக்காயிற்று.

(பழையவுரை) ஒருவன் தன் அறிவின்கண் சோர்வுடைமையின், எல்லாச் சோர்வுமுடையனென்பது அறிவர், எ-று.

(10) சீருடை யாண்மை செய்கையி னறிப.

(ப-ரை.) சீர்மை உடைய ஆண்மை - (ஒருவரது) சிறப்புடைய வீரத்தை, செய்கையின் - (அவர் போர்முகத்தஞ்சாது போர்புரியும் வீரச்) செயலாலே, அறிப—, எ - று.

(வி-ரை.) ஒருவரது ஆண்மை அவரஞ்சாது செய்யும் செயலா லறியப்படு மென்பதாம். சீர்மை என்பதில் மை விகுதியும் உடைய என்பதின் அகரவிகுதியும் தொக்குநின்றன. உடைய - உடன்பாட்டுக் குறிப்புப்பெயரெச்சம். ஒவ்வொன்றும் ஒவ்வொன்று லறியப்

படுவதாயிருத்தலின் இப்பத்து ஞாபகவேது வணியாம். ஞாபகம் - அறிவிப்பது.

(பழையவுரை.) ஒருவன் புகழுடைய ஆள்வினைத்தன்மையை அவன் செய்கையான் அறிவர், எ-று.

அறிவுப்பத்து முற்றிற்று.

---

3. பழியாப்பத்து.

பழியாதபத்து விஷயம்; பழியாமை-நிந்தியாமை. பழியா - ஈறுகெட்ட வெதிர்மறைத் தெரிநிலைப்பெயரெச்சம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
யாப்பி லோரை யியல்புகுணம் பழியார்.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த வுலகத்துள்ள மக்களியாவருள்ளும், யாப்பு இல்லோரை - கட்டுப் பாட்டிற்கடங்காது நடப்பவரை, இயல்பு குணம் - (அவர்க்கு) இயற்கையாயுள்ள தீக்குணத்தைப்பற்றி, பழியார் - (அறிவுடையோர்) பழித்துக் கூறார், எ - று.

(வி-ரை.) உலகத்தோரொடொத்து நடவாதவரை அவரது தீவினையைக் கருதி யறிவுடையோர் பழியா ரென்பதாம். கட்டுப்பாட்டிற் கடங்கல் - மேலோ ரொழுகியவா றொழுகல். இயல்புகுணம் - அறிவுடையோர் யாதுரைக்கினும் மாறாதுள்ள பிறவித் தீக்குணம். யாப்பு-புவ்விகுதித் தொழிற்பெயர்.

(பழையவுரை.) கடல்சூழ்ந்த வுலகத்து மக்களெல்லாருள்ளும், ஒரு செய்கையின்கண்ணும் நிலையில்லாதா ரியற்கையாகிய குணத்தை யாவரும் பழியார், எ - று.

(2) மீப்பில் லோரை மீக்குணம் பழியார்.

(ப-ரை.) மீப்பு இல்லோரை - மேன்மை யில்லாதவரை, மீ குணம் - (அவர்) வெளிப்படக்காட்டும் (பேதைமைக்) குணத்தைப் பற்றி, பழியார்—, எ-று.

(வி-ரை.) மேன்மையில்லாதவர் தம்மிடத்து மேன்மை யிருப்பதுபோற் காட்டுவதைக் கண்டு அவரை மேலோர் பழியா ரென்பதாம். இதனை "சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப் பேணிக் கொள்வேமென்னு நோக்கு" என்பதனாலுமறிக. மீகுணமாவது, ஒருவன் மேன்மை தன்னிடத் தில்லாதிருக்கவும் அது தன்னிடத் துள்ளது போன்று நடிக்குந தன்மை.

(பழையவுரை.) மேன்மைக்குண மில்லாதார் மேன்மை செய்யாமைமை யாவரும் பழியார், எ-று.

(3) நிறையச் செய்யாக் குறைவினை பழியார்.

(ப-ரை.) நிறைய செய்யா - ஒருவன் முன்னரே யாலோசித்து முற்றுப்பெறச் செய்யாத, குறைவினை - குறைபாடுடைய காரியத்தைப்பற்றி, பழியார்—, எ-று.

(வி-ரை.) குறைவினை - செய்யுமாறு மேற்கொண்ட கருமம் முற்றுப்பெறுமை. ஒருவர் நன்காலோசியாது தொடங்கிய காரிய முடியாமையைப்பற்றி மேலோர் பழியா ரென்பதாம். "பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந், தாள்வினை யின்மை பழி" என்பது காண்க.

(பழையவுரை.) ஒரு வினையை நிரம்பச் செய்யாததற்கு முன்பே அக்குறைவினையை யாவரும் பழியார், எ-று.

(4) முறையி லரசர்நாட் டிருந்து பழியார்.

(ப-ரை.) முறையில் - நீதியில்லாத, அரசர் நாடு - அரசர்களது தேசத்தில், இருந்து - வசித்து, (அவ்வரசனையே) பழியார்—, எ-று.

(வி-ரை) நீதிதவறிய அரசர் தமது குற்றத்தை யெடுத்துக் கூறித் திருத்து மறிவுடையோரைத் தண்டித்தல் நிச்சயமாதலின் அவர் அவனது தேசத்திலிருந்து அவனைப் பழியா ரென்பதாம். நாடு எனும் நெடிற்றொடர்க் குற்றியலுகரமொழி டகரவொற் றிரட்டி நாட்டு என்றாயிற்று.

(பழையவுரை.) நடுவு செய்யாத அரசர் நாட்டின்கணிருந்து அவ்வரசர் நடுவு செய்யாமையை யாவரும் பழியார், எ-று.

(5) பெருமை யுடையத னருமை பழியார்.

(ப-ரை.) பெருமை உடையதன் - (யாவரும் விரும்பும்) மகத்துவமுடைய பொருளினது, அருமை-(கிடைத்தலின்) அருமையைப் பற்றி, (அதனைப்) பழியார்—, எ-று.

(வி-ரை.) பெருமையுடைய பொருள் தமக்குக் கிட்டாமை பற்றி அதனை மேலோர் பழியா ரென்பதாம். "அருமை யுடைத்தெ ன்ற சாவாமைவேண்டும்,பெருமை முயற்சிதரும்", "பெருமையுடை யவ ராற்றுவா ராற்றி, னருமை யுடைய செயல்" என்றார் திருவள்ளுவரும். பலபிணியைத்தீர்க்கு மருந்தொன்று தமக்குக் கிட்டுவதருமை யாயினும் அது தங்களுக்குக் கிட்டவில்லையே யென்று அதனைப் பழிப்போ ரொருவரு மில்லாமை காண்க. இங்ஙனமே உயர்வுள்ளன வான ஏனைய பொருள்களிலுங் கொள்க. உடையது - உடைமை யென்னும் பண்படியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும்பெயர்.

(பழையவுரை.) பெருமையுடைய தொன்றனை முயன்று முடித்துக்கொள்கை அரிதென்று அதனைப் பழித்து முயற்சி தவிரார.

(6) அருமை யுடையதன் பெருமை பழியார்.

(ப-ரை.) அருமை உடையதன்-(கிடைத்தற்கு) அருமையுடைய பொருளினது, பெருமை - மகத்துவத்தைப்பற்றி, (அதனைப்) பழியார்—, எ-று.

(வி-ரை.) கிடைத்தற் கருமையான பொருளினது பெருமையை மேலோர் பழியா ரென்பதாம்; "செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர், செயற்கரிய செய்கலாதார்" என்பதனாலறிக. பெருமை-கண்டாருங் கேட்டாரும் விரும்பும் மகிமை.

(பழையவுரை.) அருமையுடைய தொன்றனை முடித்துக்கொள்ளுட்பொழுது செய்கை பெரிதென்று பழித்து அதன்கண் உள்ள முயற்சிப் பெருமையைத் தவிரார், எ-று.

(7) செய்தக்க நற்கேளிர் செய்யாமை பழியார்.

(ப-ரை.) செய் தக்க-(சமய நேர்ந்தபோது) செய்யத்தக்க காரியத்தை, நல் கேளிர்-சிறந்த சுற்றத்தார், செய்யாமை - (சமயத்தில்) செய்யாமையைப்பற்றி, (அவரைப்) பழியார்—, எ-று.

(வி-ரை.) செய்யத்தக்கதைச் சமயம் நேர்ந்தபோது செய்யாதவுறவினரை மேலோர் பழியா ரென்பதாம். செய் என்பது செய்யவென்பதன் விகாரம். தக்க - துவ்விகுதி தொக்குநின்ற உடன்பாட்டுத் தெரிநிலை வினையாலணையும் பெயர். கேளிர் என்பதில் கேண்மை பகுதி. செய்யாமை-எதிர்மறைத் தொழிற்பெயர். செயத்தக்க என்றும் பாடம்.

(பழையவுரை.) தமக்கு உதவி செய்தற்குத் தக்க நல்லகேளிர் உதவி செய்திலரென்று பிறர்க்குச் சொல்லிப் பழியார், எ-று.

(8) அறியாத தேசத் தாசாரம் பழியார்.

(ப-ரை.) அறியாத தேசத்து-(தாம்) அறியாத நாட்டில் வாழ்வோரது, ஆசாரம்-ஒழுக்கத்தைப்பற்றி, (அவரைப்) பழியார்—, எ-று.

(வி-ரை.) தமது தேசத்தாரது ஆசாரத்திற்குத் தாமறியாத தேசத்தாரது ஆசார மாறுயிருப்பினும் அதனை யறிவுடையோர் பழியாரென்பதாம். ஆசாரக்கோவை: "அறியாத தேசத்தா ராசாரம்

மூத்தா, னிளையா னுயிரிழந்தா னஞ்சினு னுண்பா, னரசர் தொழி றலை வைத்தான் மஞளனென், றென்பதின்மர் கண்டீ ருரைக்குங் கான் மெய்யான, வாசாரம் வீடுபெற்றார்". தேசம்-இடவாகுபெயர்.

(பழையவுரை.) தாம் அறியாத தேசத்தின்கண் சென்று அங் குள்ளார் ஒழுகும் ஒழுக்கத்தைப் பழியார், எ-று.

(9) வறியோன் வள்ளிய னன்மை பழியார்.

(ப-ரை.) வறியோன் - தரித்திரன், வள்ளியன் அன்மை-ஈகை யை யுடையவ னாகாமையைப்பற்றி, (அவனைப்) பழியார்—, எ-று.

(வி-ரை.) தரித்திரன் தன்னை யிரப்போர்க்கு யாதுங் கொடா மையைப்பற்றி அவனை மேலோர் பழியா ரென்பதாம்; "இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும், வசையன்று வையத் தியற் கை" என்றது காண்க. வள்ளிய னென்பதில் வண்மை (ஈகை) பகுதி. செல்வமுள்ளபோது பிறர்க்குத் தன்னிடத்துள்ளதையேற்ற பெற்றி யாசகர்க் கீயாமை குற்றமாகுமே யன்றி யஃதில்லாதபோது ஈயாமை குற்றமாகாதெனு வீண்டுக் காட்டப்பட்டது.

(பழையவுரை.) வறுமை யுடையானை வண்மை யுடையனல்ல னென்று பழியார், எ-று.

(10) சிறியா ரொழுக்கஞ் சிறந்தோரும் பழியார்.

(ப-ரை.) சிறியார் - கீழ்மக்களது, ஒழுக்கம் - தீயவொழுக் கத்தைக் (கண்டு), சிறந்தோரும்-(அறிவா லிழிந்தோரே யன்றி அறி வால்) உயர்ந்தோரும், (அவரைப்) பழியார்—, எ-று.

(வி-ரை.) கீழ்மக்களது செய்கையைக் கண்டு அவரை மேன் மக்கள் பழியா ரென்பதாம். தீயவொழுக்கம் - கள்ளுண்டல் முதலி யனவாம். ஈண்டு உம்மை இறந்தது தழீஇய உயர்வு சிறப்பும்மை.

சிறந்தோர்-தெரிநிலை வினையாலணையும் பெயர். சிறியோர் என்றும் பாடம்.

(பழையவுரை.) சிறுமைக் குணமுடையாருடைய கீழ்மைக் குணத்தை ஒழுக்கத்தான் மிக்காரும் கண்டாற் பழியார், எ-று.

பழியாப்பத்து முற்றிற்று.

---

4. துவ்வாப்பத்து.

வெறுப்பனவாகிய பத்து விஷயம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பழியோர் செல்வம் வறுமையிற் றுவ்வாது.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த உலகத்திலுள்ள மக்களியாவருள்ளும், பழியோர் செல்வம் - (பிறர்க்குங்கொடாது தாமு மநுபவியாது அறிவுடையோரால்) பழிக்கப் படுபவரது செல்வம், வறுமையின் - தரித்திரத்தைப் பார்க்கினும், துவ்வாது - வெறுக்கத்தக்கது, எ-று.

(வி-ரை.) அறிவுடையோரால் பழிக்கப்படுகின்றவரது செல்வம் அவர்க்கேயன்றிப் பிறர்க்கும் பயன்படாமையின் அது வறுமையினுங் கொடியதென்பதாம்; "பழிமலைந்தெய்திய வாக்கத்திற்சான்றோர், கழிநல் குரவே தலை" என்றார் திருவள்ளுவனாரும். செல்வம்-தொழிற்பெயர், செல்வதென்னும் பொருளது. துவ்வா தென்பதில் து-பகுதி; இஃது அஃறிணை யொருமைத் தெரிநிலை யெதிர் மறை வினைமுற்று.

(பழையவுரை.) ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து எல்லா மக்களுள்ளும், பழியுடையோர் செல்வம் வறுமையின் நீங்கி யொழியாது, எ-று.

(2) கழிதறு கண்மை பேடியிற் றுவ்வாது.

(ப-ரை.) கழி - மிகுதியும், தறுகண்மை - அஞ்சத்தக்கவிடத் தஞ்சாமை, பேடியின் - பேடியின் செய்கையைப்பார்க்கிலும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) அஞ்சத்தக்கவிடத்து அஞ்சாது பிறரை வருத்துவோர் பேடியினுமிழிந்தவராவரென்பதாம்; "அஞ்சுவதஞ்சாமை பேதைமை யஞ்சுவ, தஞ்ச லறிவார் தொழில்" என்பது பொய்யாமொழி. பேடி-பொருளாகுபெயர்; பேடி-பெண்ணுறுப்புமிகுந்து ஆணுறுப்புக் குறைந்துள்ள பிராணி; "செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க், கொம்மை வரிமுலையா டோண்மரீஇ - யும்மை, வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை, யலியாகி யாடி யுண்பார்" என்றது நாலடி. கழி - உரிச்சொல். தறுகண்மை என்பதில் மை பகுதிப்பொருள் விகுதி. கழிதறுகண்மை யென்பதற்கு (வன்மையின்றியவரை) மிகுதியும் வருத்துதல் என்று பொருள்கூறினும் பொருந்தும்.

(பழையவுரை.) இடமும் காலமும் அறியாது மிக்க தறுகண்மை, பேடித்தன்மையின் நீங்கி யொழியாது, எ-று.

(3) நாணில் வாழ்க்கை பசித்தலிற் றுவ்வாது.

(ப-ரை.) நாண் இல் வாழ்க்கை - (ஒருவர்) வெட்க மில்லாமலுயிர்வாழ்தல், பசித்தலின்-(உணவின்றிப்) பசித்திருத்தலைப் பார்க்கினும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) நாணம் விட்டுப் பிறரை யிரந்துண் டுயிர்வாழ்தல் பட்டினிகிடந்து வருந்துதலினுங் கொடிதென்பதாம்; "நாணா லுயிரைத் துறப்பர் உயிர்பொருட்டால், நாண்துறவார் நாணாள் பவர்" என்று திருவள்ளுவரும், "உயிரினுஞ் சிறந்தன்று நாணே" என்று தொல்காப்பியனாரும் கூறினர். இல் - ஈண்டு வினையெச்சப்பொருளில் வந்தது.

(பழையவுரை.) நாணிழந்து உண்டுவாழும் வாழ்க்கை, பசித்தலின் நீங்கி யொழியாது, எ-று.

(4) பேணி லீகை மாற்றலிற் றுவ்வாது.

(ப-ரை.) பேண் இல் - விருப்பமில்லாமல், ஈகை - (யாசகர்க்கு ஒன்றைக்) கொடுத்தல், மாற்றலின் - (அவருக்கு இல்லையென்று) மறுத்துரைப்பதினும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) ஒருவர்க்கு ஒன்றை வெறுப்புடன் கொடுத்தல் அஃது இல்லையென்று கூறுவதினுங் கொடிதென்பதாம். மாற்றல்-அல் ஈற்றுத் தொழிற்பெயர், அதன் பகுதியாகிய மாறு றகர ஒற்றிரட்டித்து மாற்று என்றாயிற்று.

(பழையவுரை.) விருப்ப மில்லாத ஈகை, ஈகை மாறுதலின் நீங்கி யொழியாது, எ-று.

(5) செய்யாமை மேற்கோள் சிதடியிற் றுவ்வாது.

(ப-ரை.) செய்யாமை - (ஒருவர் தாம்) செய்து முடித்தற் கியலாத காரியத்தை, மேற்கோள் - (யாம் செய்து முடிப்போமென்று) மேற்கொள்ளுதல், சிதடியின் - அறிவில்லாதவனது செய்கையைக் காட்டிலும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) ஒருவர் தாஞ் செய்து முடித்தற் கியலாத காரியத்தை மேற்கொள்ளல் அறிவில்லான் றனக்குத்தானே துன்பந்தருஞ் செயல்களைச் செய்து வருந்துவதுபோலத் துன்பத்திற் கிடமென்பதாம்; "பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை, கையல்ல தன்கட் செயல்" என்றார் திருவள்ளுவரும். செய்யாமை - எதிர்மறைத்தொழிலாகுபெயர். கோள்-முதனிலைத் தொழிற்பெயர், கொள் என்பதன் றிரிபு. செய்யாமை மேற்கோள் என்பதற்குப் பிறர்செய்து முடித்தற்கரிய காரியத்தை யாம்செய்து முடிப்போமென் றுறுதி மொழி கூறலென்று பொருளுரைப்பினும் அமையும்.

(பழையவுரை.) செய்யத் தகாதனவற்றை மேற்கொண்டு செய்யத் தொடங்குவது மையற்றன்மையின் நீங்கி யொழியாது, எ-று.

(6) பொய்வே ளாண்மை புலைமையிற் றுவ்வாது.

(ப-ரை.) பொய் - பொய்யாக, வேளாண்மை - (ஒருவர்) உபகாரியாந் தன்மை, புலைமையின் - (பிறர்க்குத்) தீங்கியற்றுவதினும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) ஒருவர் யாம் பிறர்க்குபகாரஞ் செய்கின்றேமென்றிடம்பமாகப் பொய்கூறுதல் பிறரை வருத்துதலினுங் கொடிதென்பதாம். வேள் - உபகாரம். ஆண்மை - ஆளுந்தன்மை. புலைமை - இழிகுணம்; அது அதனாலாகுந் தீச்செயற்காதலின் ஈண்டுக் கருவியாகுபெயராம்.

(பழையவுரை.) பொய்பட்ட உபகாரம் புலைமையின் நீங்கி யொழியாது, எ-று.

(7) கொண்டுகண் மாறல் கொடுமையிற் றுவ்வாது.

(ப-ரை.) கொண்டு-(ஒருவரைச் சிநேகமாகக்) கொண்டு, கண்மாறல் - பிறகவரிடத்து உபேக்ஷையா யிருத்தல், கொடுமையின் - (அவர்க்குத்) தீமை செய்வதினும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) ஒருவரைச் சிநேகமாகக்கொண் டவரிடத்தில் அசட்டையா யிருத்தல் அவர்க்குத் தீங்கிழைப்பதனினுங் கொடிதென்பதாம். கொண்டு என்பதற்கு (ஆதரிப்பாரின்றி வருந்தி யடைக்கலம் புகுந்தோரைக் காப்பாற்றுகின்றேமென மேற்கொண்டு) என்று பொருள்கூறினும் பொருந்தும். கண்மாறல்-கண்ணோட்ட மின்மை. கண் என்பது அதனது ஒட்டத்திற்காதலி னிடவாகுபெயராம்.

(பழையவுரை.) ஒருவனை ஒருவன் நட்பாகக் கொண்டுவைத்துக் கண்ணோட்டத்தை மாறுதல் கொடுமையின் நீங்கி யொழியாது, எ-று.

(8) அறிவிலி துணைப்பாடு தனிமையிற் றுவ்வாது.

(ப-ரை.) அறிவிலி - (தக்கதின்னது, தகாத தின்னதென்று பகுத்துணரும்) அறிவில்லாதவனை, துணைப்பாடு-(ஒருவன்) துணை கொண்டிருத்தல், தனிமையின்-தனித்திருத்தலினும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) ஒருவன் தனித்துவாழுந் துன்பத்தினு மூடனை துணையாகக்கொண்டு வாழ்தல்கொடிதாம்; "இணக்கமறிந்திணங்கு", "மூர்க்கரோடிணங்கேல்", "நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும்" என்பனவும் நோக்கத்தக்கன. அறிவிலி - இகரவீற் றுயர்திணை யாண்பாற்பெயர். கோட்பா டென்பதுபோலத் துணைப்பாடு என்பது பாடீற்றுத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) அறிவில்லாதா னொருவனோடு துணைப்பாடு தனிமையின் நீங்கி யொழியாது, எ-று.

(9) இழிவுடை மூப்புர கத்திற் றுவ்வாது.

(ப-ரை.) இழிவு உடை - வலி குறைதலுடைய, மூப்பு - கிழத்தனமானது, அங்கதத்தின்-பாம்போடுவாழ்தலினும், துவ்வாது—, எ - று.

(வி-ரை.) மூப்புத் தன்னாலேயன்றிப் பிறராலும் வெறுக்கத் தக்கதா யிருத்தலின் அது பாம்புடன்கூடி வாழ்தலினும் வெறுக்கத் தக்கதாயிற்று. இழிவு வுவ்வீற்றுத் தொழிற்பெயர். மூப்பு - கிழத்தனம்; தொழிலாகு பெயர்.

(பழையவுரை.) இழிவினையுடைய மூப்பு, பிறர் வெறுத்து வெருளும் வெருட்சியின் நீங்கி யொழியாது, எ-று.

(10) தானோ ரின்புறல் தனிமையிற் றுவ்வாது.

(ப-ரை.) தான் - (ஒருவன் உறவினரை நீக்கித்) தானே, ஓர் - ஒப்பற்ற, இன்பு உறல் - சுகத்தை யனுபவித்தல், தனிமையின் - (மனைவிமக்களின்றித்) தனித்திருத்தலினும், துவ்வாது—, எ-று.

(வி-ரை.) ஒருவன் உறவினரின்றி மனைவி மக்களுடன் சுகித்துவாழ்தல் அனுபவிக்கும் பொருளின்றித் தான்மாத்திரம் இருந்து வருந்துதலினுங் கொடிதென்பதாம்; "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா, மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று", "மருந்தேயாயினும் விருந்தோ டுண்", "இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய, தாமே தமிய ருணல்" என்பவற்றானுமறிக. தான் என்பதிற் பிரிநிலை எகாரந் தொக்குநின்றது.

(பழையவுரை.) தானே ஒருவன் இன்புறுதல் வறுமையின் நீங்கியொழியாது, எ-று.

துவ்வாப்பத்து முற்றிற்று.

5. அல்லபத்து.

அல்லாதன (விலக்குவன) வாகிய பத்து விஷயம். நல்ல என்பது அன்சாரியை பெறாத எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
நீரறிந் தொழுகா தாடார மல்லன்.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல் சூழ்ந்த உலகத்துள்ள மக்களியாவருள்ளும், நீர் அறிந்து - (கணவனது) வருவாயைத் தெரிந்து, ஒழுகாதாள் - (அதற்குத் தக்கவாறு) நடவாதவள், தாரம் அல்லள் - (அவனுக்கவள்) மனைவியாகமாட்டாள், எ-று.

(வி-ரை.) கணவனது வரும்படியைத் தெரிந்து அதற்கேற்றவாறு நடவாதவள் மனைவியாகா ளென்பதாம். தாரம்-வடமொழிப் பெயர்; இது சாதியொருமை. ஒழுகாதாள் - எதிர்மறை வினையாலணையும் பெயர். நீர் அறிந்து என்பதற்குக் கணவனது குணத்தைத் தெரிந்தெனவும் பொருள் கொள்ளினுமாம். திரிகடுகம்:—"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன, செய்வகை செய்வான் றவசி-கொடிதொரீஇ, நல்லவை செய்வா னரச னிவர்மூவர், பெய்யெனப் பெய்யு மழை" என்பதனாலறிக.

(பழையவுரை.) ஆர்கலியால் சூழப்பட்ட வுலகத்து மக்கட்கெல்லாம், கொழுநனது குணமறிந்து ஒழுகாதாள் மனையாளல்லள், எ-று.

(2) தாரமாணாதது வாழ்க்கையன்று.

(ப-ரை.) தாரம் - மனைவியினால், மாணாதது - மாட்சிமைப் படாத வாழ்க்கை, வாழ்க்கை அன்று-இல்வாழ்க்கை யன்றாம், எ-று.

(வி-ரை.) ஒருவனது இல்வாழ்க்கை யவன்மனைவி யொத்து நடவாவிடத்துச் சிறப்புப் பெறாதென்பதாம்; "மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை, எனைமாட்சித் தாயினு மில்", "இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ, னில்லவண் மாணாக்கடை" என்றார் திருவள்ளுவனாரும். மாணாமையாவது கணவன் சொல்லுக்கு ஏறுமாறாக நடத்தல்; மாணாதது-வினையாலணையும்பெயர்.

(பழையவுரை.) மனையாள் மாட்சிமைப்படாத மனைவாழ்க்கை, மனை வாழ்க்கையன்று, எ-று.

(3) ஈரமல் லாதது கிளைநட் பன்று.

(ப-ரை.) ஈரம் - (மனத்தின்கண்) அன்பு, அல்லாதது - இல்லாத சிநேகம், கிளை-விருத்தியாதற்கு (ஏதுவாகிய), நட்பு அன்று - சிநேகமல்ல, எ-று.

(வி-ரை.) அன்பின்றிய சிநேகஞ் சிநேகமாகா தென்பதாம்; "முகநக நட்பது நட்பன்று நெஞ்சத், தகநக நட்பது நட்பு" என்றார் திருவள்ளுவரும். சிநேகம் அல்லாத தென்பதில் அன்மை யீண்டு இன்மைப் பொருளில் வந்தது. ஈரம்-பண்புப்பெயர். ஈரமில்லாதது என்றும் பாடம்.

(பழையவுரை.) மனத்தின்கண் ஈரமில்லாதது கிளையுமன்று நட்புமன்று, எ-று.

(4) சோரக் கையன் சொன்மலை யல்லன்.

(ப-ரை.) சோரம் கையன்-களவொழுக்க முடையோன், சொல்-(தான்கூறுஞ்) சொல்லில், மலை - மாறுபாடா யிருத்தல், அல்லன்-ஆகான், எ-று.

(வி-ரை.) பிறர் பொருளை யபகரிப்பவன் பொய் பேசுவானே யன்றி மெய்பேசா னென்பதாம். மலை-முதனிலைத் தொழிற்பெயர். சோரம்-வடமொழிப்பெயர். கை-ஒழுக்கம். சோரக்கையன் என்றும் பாடம்.

(பழையவுரை.) பிறர்க்கு ஒன்றையுதவாத கையுடையோன் புகழைத் தாங்கமாட்டான், எ-று.

(5) நேரா நெஞ்சத்தோ னட்டோ னல்லன்.

(ப-ரை.) நேரா - ஒற்றுமைப்படுதலில்லாத, நெஞ்சத்தோன் - மனமுடையோன், நட்டோன் அல்லன் - நட்பினனாகான், எ-று.

(வி-ரை.) உள்ளே யொற்றுமையின்றி வெளியிலொற்றுமை யுடையோன்போலப் பேசுபவனது நட்பு நட்பாகா தென்பது; "மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ், சொல்லினாற் றேறற்பாற் றன்று" என்றார் திருவள்ளுவரும். நெஞ்சென்பதங்குள்ள மனதிற்காதலின் இடவாகுபெயர்.

(பழையவுரை.) வேறாய் உடன்படாத நெஞ்சத்தோன் நண்புடையனல்லன், எ-று.

(6) தேராமற் கற்றது கல்வி யன்று.

(ப-ரை.) தேராமல் - (நல்லாசிரியனை யடுத்துத் தான் கற்றற்குரிய நூற்பொருளைச் செவ்வையாகத்) தெளிந்தறியாமல், கற்றது - (ஒருவன் தானே) கற்றறிந்தது, கல்வி அன்று - கல்வியல்ல, எ-று.

(வி-ரை.) ஆசிரியனை யடுத்துக் கல்லாதகல்வி சிறிதும் பயன்படாதென்பதாம். தேராமல் - மல்லீற்று எதிர்மறை வினையெச்சம். கற்றது - வினையாலணையும்பெயர். 'தேராமைக் கற்றது' என்றும் பாடம்.

(பழையவுரை.) கற்பிக்கும் ஆசிரியனுக்கு ஒன்றைக் கொடாது கற்குமது கல்வியன்று, எ-று.

(7) வாழாமல் வருந்தியது வருத்த மன்று.

(ப-ரை.) வாழாமல் - (ஒருவனில்லறத்திருந்து)வாழுதலின்றி, வருந்தியது - துன்பமடைந்தது, வருத்தம் அன்று - துன்பமல்லவாம், எ-று.

(வி-ரை.) இன்பத்தின் பகுதி யறியாதவனுக்குத் துன்பத்தின் பகுதி யறியப்படா தென்பதாம். இது துறவறத்தை நோக்கிய தன்று. 'வாழாமை வருந்தியது' என்னும் பாடம்.

(பழையவுரை.) தன்னுயிர் வாழாமை வருந்தியது வருத்தமன்று, எ-று.

(8) அறத்தாற்றி னீயாத தீகை யன்று.

(ப-ரை.) அறத்து ஆற்றின் - தரும வழியினின்று, ஈயாதது - (இரப்பவர்க்குக் கொடுத்தற் குரியனவற்றைக்) கொடாதது, ஈகை அன்று - கொடையல்ல, எ-று.

(வி-ரை.) அதர்மவழியிலே நின்று ஒருவன் கொடையுடையனுதல் பசுவைக்கொன்று செருப்பைத் தானஞ்செய்வது போலாமென்பதாம். அறத்தாறு அறத்தினதாறென விரியும்.

(பழையவுரை.) அறத்தின் நெறியின் ஈயாதது ஈகையன்று. (ஈகை - பயன் கருதாது கொடுத்தல்).

(9) திறத்தாற்றி னோலா தநோன் பன்று.

(ப-ரை.) திறத்து ஆற்றின் - உண்மையான வழியினின்று, நோலாதது - விரதஞ் செய்யாதது, நோன்பு அன்று - விரதமல்ல, எ-று.

(வி-ரை.) உண்மை வழியினின்று விரதமனுட்டிக்க வேண்டுமென்பதாம். "நோரா நோன்பு சீராகாது" என்றனர் ஔவையார். நோலாதவென்பதில் நோல் பகுதி; நோற்றல் அகவிந்திரியமாகிய மனத்தையும், புறவிந்திரியமாகிய மெய் வாய் கண் மூக்குச் செவிகளையுந் தத்தம் விஷயங்களிற் செல்லாவாறு தடுத்தல்.

(பழையவுரை.) தன்குலத்திற்கும் நிலைமைக்குந் தக நோலாதது தவமன்று; (நோற்றல் - விரதங்காத்தல்).

(10) மறுபிறப் பறியா ததுமூப் பன்று.

(ப-உரை.) மறுபிறப்பு - (இப்பிறப்பிலேயே) வேறு பிறப்பை, அறியாதது - தெரிந்துகொள்ளாதது, மூப்பு அன்று-(ஒருவனுக்கு) முதுமைப்பருவமல்ல, எ-று.

(வி-ரை.) மறுபிறப்பை யறிதலாவது-எடுத்தவிப்பிறப்பிலேயே பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் முன்னவாறறிந்து ஞானயோகவலியால் பிறவியில்லாதவனுதல். ஒருவன் தனது வாணாளை வீணாக்காது முதுமைக்குள்ளாவது மறுபிறப்பை யடைய வேண்டுமென் றுணர்த்தியவாறும்.

(பழையவுரை.) மறுபிறப்பை யறிந்து அறத்தின்வழி யொழுகாதே மூத்த மூப்பு மூப்பன்று, எ-று.

அல்லபத்து முற்றிற்று.

6. இல்லைபத்து.

இன்மையாகிய பத்து விஷயம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்.
மக்கட் பேற்றிற் பெறும்பே றில்லை.

(ப-உரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த உலகத்துள்ள மக்களியாவருள்ளும், மக்கள் பேற்றின் - பிள்ளைகளைப் பெறுதலைப் பார்க்கினும், பெறும் பேறு - அடையத்தக்க பாக்கியம், இல்லை - பிறிதொன்றில்லை, எ-று.

(வி-ரை.) பிள்ளையில்லாதவர்க்கு வேறு செல்வங்க ளென்ன விருப்பினு மவற்றுற் பயனில்லை யென்பதாம்; "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த, மக்கட்பே றல்ல பிற" என்றார் திரு

உள்ளுவரும். ஈண்டு மக்களென்றது கல்வியறிவொழுக்கங்களு டைய பிள்ளைகளை. பேறு - பெறப்படுவது.

(பழையவுரை.) ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்து மக்கட் கெல்லாம் புதல்வரைப் பெறும் பேற்றிற் பெறும்பேறில்லை, எ-று.

(2) ஒப்புர வறிதலிற் றகுவர வில்லை.

(ப-ரை.) ஒப்புரவு - (தாம் வாழுந்தேச) முறைமையை, அறித லின் - அறிதலைப் பார்க்கினும், தகுவரவு - தக்கவரவுடைய பொருள், இல்லை—, எ-று.

(வி-ரை.) தேசத்தோடொத்து வாழாதவர் செல்வமுடையவ ராகா ரென்பதாம்; "ஒப்புரவொழுகு" என்றார் ஔவையார். தகு வினைத்தொகை. வரவு - தொழிலாகுபெயர்.

(பழையவுரை) செய்யக்கடவன செய்கையோடொக்குந் தகு தியில்லை, (ஒப்புரவு-உலகநடை) எ-று.

(3) வாய்ப்புடை வழக்கி னல்வழக் கில்லை.

(ப-ரை.) வாய்ப்பு உடைய - தகுதியுடைய, வழக்கின் வழக்கினை மேற்கொள்ளுதலைப் பார்க்கினும், நல்வழக்கு - சிறந்த வழக்கு, இல்லை—, எ-று.

(வி-ரை.) சிறப்புடைய வழக்கை மேற்கொள்ளுதல் நன்மை யைத் தருமென்பதாம். வாய்ப்பு-புவ்வீற்றுத் தொழிற்பெயர். உடை என்பது அகரவீறு தொக்குநின்ற குறிப்புப் பெயரெச்சம். வாய்ப் புடை வழக்காவது-ஒருவன் தனக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய பொருளைப்பற்றி யாரசரிடத்து முறையிட்டுப் பெறமுயலுதல்.

(பழையவுரை.) 'வாய்ப்புடை விழைச் சினல்விழைச் சில்லை' என்றும்பாடம். மக்கட்பேறு வாய்த்த கலவியோடொக்குங் கலவியின் நல்ல தில்லை, (விழைச்சு - கலவி), எ-று.

(4) வாயா வழக்கிற் றீவழக் கில்லை.

(ப-ரை.) வாயா - தகுதியாகாத, வழக்கின்-வழக்கினைப் பார்க்கினும், தீ வழக்கு - கொடியவழக்கு, இல்லை—, எ-று.

(வி-ரை.) முறைதவறி வழக்குத் தொடுத்தல் குற்றமாகுமென்பதாம். தீ என்பது தீமை யென்பதன் விகாரம், ஈண்டும் மேலுள்ள வழக்கென்பதற்கு ஈகையெனப் பொருள் கூறினும் பொருந்தும்.

(பழையவுரை.) 'வாயா விழைச்சிற் றீவிழைச்சில்லை' என்றும் பாடம். மக்கட்பேற்றின் பொருட்டன்றிக் கலக்குங் கலவிபோலத் தீயது இல்லை, (வாயா - பொருந்தாது) எ-று.

(5) இயைவது கரத்தலிற் கொடுமை யில்லை.

(ப-ரை.) இயைவது - (தான் யாசகர்க்குக்) கொடுக்கக் கூடிய பொருளை, கரத்தலின் - (இல்லையென்று) மறைத்தலைப் பார்க்கினும், கொடுமை - தீமை, இல்லை—, எ-று.

(வி-ரை.) யாசகர்க்குக் கொடுக்கக்கூடிய பொருளை யில்லையென்றுகூறி மறைத்தல் கூடாதென்பதாம். "இயல்வது கரவேல்" என்றார் ஔவையாரும். இயைவது-வினையாலணையும் பெயர்.

(பழையவுரை.) தான் பிறர்க்குக் கொடுக்கவியலும் பொருளை இல்லையென்று காக்குங் காப்பிற் கொடுமையில்லை, (இயைதல் - பொருந்துதல். கரத்தல் - ஒளித்தல்), எ-று.

(6) உரையில னாதலிற் சாக்கா டில்லை.

(ப-ரை.) உரை இலன் ஆதலின் - (அன்பினரோடு மனங்கலந்து ஒருவன்) வார்த்தையாடாதவனா யிருத்தலைப் பார்க்கினும், சாக்காடு - (அவனுக்கு) மரணம், இல்லை—, எ-று.

(வி-ரை.) இலௌகிக முறைமையிற் பேசத் தகுந்தோரிடத்து மனங்கலந்து பேசாதவன் தன் மரணத்திற்குத் தானே ஏதுவாகவுள்ளா னென்பதாம். சாக்காடு-காடீற்றுத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) "உணர்விலன்" என்றும் பாடம். ஒருவற்கு அறிவின்மையோ டொக்குஞ் சாக்காடில்லை, எ-று.

(7) நசையிற் பெரியதோர் நல்குர வில்லை.

(ப-ரை.) நசையின்-(ஒருவ னளவுக்கதிகமாகப் பொருள்களில்) ஆசை வைப்பதைப் பார்க்கினும், பெரியது - பெரிதாகிய, ஓர் நல்குரவு - ஒரு தரித்திரம், இல்லை—, எ-று.

(வி-ரை.) "போதுமென்னு மனமே பொன்செய்யு மருந்து" என்றமைந்திராது பொருள்களை மேன்மேலும் அளவுகடந்து விரும்புதலே பெருந்தரித்திர மென்பதாம். இதனை "வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை, யாண்டு மஃதொப்ப தில்", "காணியாசை கோடி கேடு", "அதிக ஆசை அதிக நஷ்டம்" என்பதனாலு மறிக. நல்குரவு - நல்கு உரவு எனப் பிரிபடும்; அதன்பொருள் பிறர் தருவதை யாசையோ டெதிர்நோக்கியிருத்த லென்பதாம். நசை - பண்புப்பெயர்.

(பழையவுரை.) ஆசையின் மிக்கதொரு வறுமையில்லை, எ-று.

(8) இசையிற் பெரியதோ ரெச்ச மில்லை.

(ப-ரை.) இசையின்-புகழுடைதலைப் பார்க்கினும், பெரியது - பெரிதாகிய, ஓர் - ஒரு, எச்சம் - சந்ததி, இல்லை—, எ-று.

(வி-ரை.) ஆதாரமாகிய வுலகமுள்ளளவும் ஆதேயமாகிய இசையிருத்தலின் அதைப் பார்க்கினும் பெரியதோர் சந்ததியில்லை யென்பதாம். "ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற், பொன்றாது நிற்பதொன் றில்" என்றார் நாயனார். எச்சம்-எஞ்சு (மிகு) வதென்னும் பொருளது. இசை யென்பதன் முரண்மொழி வசை. எச்சம் - வினைமுதற் பொருளை யுணர்த்தும் அம்மீற்றுத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) புகழுடைமையின் மிக்குப் பிற்பயப்பதோர் ஆக்கம் ஒருவற்கு இல்லை, எ-று.

(9) இரத்தலி னூஉங் கிளிவர வில்லை.

(ப-ரை.) இரத்தலின் ஊஉங்கு-(ஒருவரிடத் தொன்றை) யாசித்தலைப் பார்க்கினும், இளிவரவு - இழிவு (அவமானம்), இல்லை—, எ-று.

(வி-ரை.) பிச்சை யெடுப்பதற்கு மேற்பட்ட அவமானமில்லை என்பதாம். "ஏற்ப திகழ்ச்சி", "உரவோ ரென்கை யிரவா திருத்தல்", 'பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டிச், சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி, மல்லெலா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி,யில்லெலா மிரத்த லந்தோ விழிவிழி வெந்த ஞான்றும்" என்றார் பிறரும். இளிவரவு-இளி (அவமானம்) வரவு (வருதல்) எனப் பிரிபடும். ஊங்கு என்பது ஒன்றன் மிகுதியையும் பிறிதொன்றன் குறைவையுங் காட்டுவதோ ரிடைச் சொல். ஊஉங்கென்பது செய்யுளிசை யுயிரளபெடை.

(பழையவுரை.) இரந்து உயிர் வாழ்தலின்மேற் கீழ்மையில்லை; (இளிவரவு-எளனம்) எ-று

(10) இரப்போர்க் கீதலி னெய்துஞ் சிறப்பில்லை.

(ப-ரை.) இரப்போர்க்கு ஈதலின் - யாசிப்போர்க்கு (அவர் வேண்டியவற்றைக்) கொடுத்தலைப்பார்க்கினும், எய்தும் சிறப்பு - அடையுஞ் சிறப்பானது, இல்லை—, எ-று.

(வி-ரை.) ஒருவர்க்குக் கல்வி முதலியவற்றா லுண்டாகுஞ் சிறப்பினு மீதலா லுண்டாகுஞ் சிறப்பே மேன்மையுடைய தென்பதாம்; "ஐயமிட்டுண்", "சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கா, னீதி வழுவா நெறிமுறையின்—மேதினியி, லிட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர், பட்டாங்கி லுள்ள படி" என்றார் ஔவையாரும்.

(பழையவுரை.) இரப்போர்க்குக் கொடுப்பதின் மிக்கதாய் எய்தும் மேன்மையில்லை, எ-று.

இல்லைபத்து முற்றிற்று.

7: பொய்ப்பத்து.

பொய்ம்மையாகிய பத்து விஷயம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேரறிவினோ னினிது வாழாமை பொய்.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த வுலகத்துள்ள மக்களியாவருள்ளும், பெருமை அறிவினோன்-சிறந்த அறிவுடையவன், இனிது - சுகமாக, வாழாமை - வாழாதிருத்தல், பொய் - பொய்யாம், எ-று.

(வி-ரை.) ஒருவனுக்குப் பேரறிவுடைமையே பெருஞ்செல்வமாதலின் அவன் றுன்பமடைதற் கேதுவில்லையென்பதாம். இனிது-வினையுரிச்சொல். பேரறிவாவது - இது தக்கது இது தகாததென்று பகுத்தறியு மறிவு. பொய் என்பதின் ஈற்றில் ஆமென்னு மாக்கவினை தொக்குநின்றது.

(பழையவுரை.) ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்து எல்லா மக்களுள்ளும், ஒருவன் பேரறிவுடையவனாயின் அவன் மனத்தால் இன்புற்று ஒழுகாமை பொய், எ-று.

(2) பெருஞ்சீ ரோன்றன் வெகுளியின்மை பொய்.

(ப-ரை.) பெருமை சீரோன் - பெருஞ் சிறப்பிற் கேதுவாகிய செல்வமுடையவன், வெகுளி இன்மை - கோபமில்லாதிருத்தல், பொய்—, எ-று.

(வி-ரை.) செல்வமுடையோர் கோபமின்றி யிருத்தல் முடியாதென்பதாம். பெருமை யெனபது மைவிகுதி தொக்குப் பெரு என வந்தது. சீர் - காரியவாகுபெயர். வெகுளி - இகரவீற்றுத் தொழிற்பெயர். தன் - சாரியை.

(பழையவுரை.) பெருஞ் செல்வத்தைப் பெற்ற ஒருவன் வெகுளாமை பொய், எ-று.

(3) கள்ளுண் போன்சோர் வின்மை பொய்.

(ப-ரை.) கள் உண்போன் - கள்ளைக் குடிப்பவன், சோர்வு இன்மை - சோர்வில்லாதிருத்தல் பொய்—, எ-று.

(வி-ரை.) கள்ளுண்போன் தளர்ச்சி யில்லாதிருக்க முடியாதென்பதாம். இது பஞ்சமகா பாதகங்களி லொன்றும்; அவையாவன:*—கொலை, பொய், களவு, கட்குடித்தல், குருநிந்தை என்பன. சோர்வு - மனோவாக்குக் காயங்களின் றளர்ச்சி. கைத்து - (அறிவுடையோரால்) வெறுக்கத்தக்கது என்னும் பொருளது.

(பழையவுரை.) கள்ளை யுண்போன் ஒழுக்கஞ் சோர்வின்மை பொய், எ-று.

(4) கால மறியாதோன் கைத்துறல் பொய்.

(ப-ரை.) காலம் அறியாதோன் - சமயமறிந்து நடவாதவன், கைத்து உறல் - கருமமுடித்தல், பொய்—, எ-று.

(வி-ரை.) "அருவினை யென்ப வுளவோ கருவியாற், கால மறிந்து செயின்" என்றபடி எவ்வெக்காலத் தெதுவெது செய்யவேண்டுமோ வவ்வக்காலத் தஃததை செயல்வேண்டும்; அவ்வாறு செய்யாது சோம்பிக் கிடப்பவன் செல்வமுடையோ னாகா னென்பதாம்.

(பழையவுரை.) காலமறிந்து முயலாதோன் கருமம் முடிதல் பொய்; கையுறல்-(கருமம் முடித்தல்) என்றும் பாடம், எ-று.

(5) மேல்வர வறியாதோன் றற்காத்தல் பொய்.

(ப-ரை.) மேல்வரவு அறியாதோன் - இனி வரத்தக்கதை யறியாதவன், தன் காத்தல் - தன்னைக் காத்துக்கொள்ளுதல், பொய்—, எ-று.

(வி-ரை.) இனிவருவ திஃதென்பதை ஆய்ந்துணராதவன் றன்னைக் காத்துக்கொள்ளுதல் பொய்யா மென்பது. "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர், வைத்தூறு போலக் கெடும்", "அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா, ரஃதறி கல்லா தவர்" என்பது திருக்குறள். வரவு - தொழிலாகுபெயர். அறியாதோன் - வினையாலணையும்பெயர்.

(பழையவுரை.) எதிர்காலத்து வரும் இடையூ றறியாதான் தனக்கு அரண்செய்து காத்தல் பொய், எ-று. (அரண்-காப்பு.)

(6) உறுவினை காய்வோ னுயர்வுவேண்டல் பொய்.

(ப-ரை.) உறு வினை - (பயன்) தருங்காரியத்தை, காய்வோன்- (செய்யாது) வெறுப்பவன், உயர்வு-மேன்மையை, வேண்டல் - விரும்புதல், பொய்—, எ-று.

(வி-ரை.) பயன்தரத்தக்க காரியத்தைச் செய்யாது விடுபவன் மேன்மையடையா னென்பதாம். "சோம்பித் திரியேல்" என்றார் ஔவையாரும். உறு-வினைத்தொகை.

(பழையவுரை.) 'உறுவினைக் கயர்வோன்' என்பதும் பாடம். மிக்ககருமஞ் செய்கைக்கு மடிந்திருப்போன் தனக்கு ஆக்கம் வேண்டுதல் பொய், எ-று. (மடிதல்-அயர்வு, சோர்வு. ஆக்கம்-செல்வம்).

(7) சிறுமைநோ னாதான் பெருமைவேண்டல் பொய்.

(ப-ரை.) சிறுமை நோனாதான்-(பொருள்தேடுமிடத் துண்டாகும்) வருத்தத்தைப் பொறுக்காதவன், பெருமை-(பொருளினாலுண்டாகும்) பெருமையை, வேண்டல் - விரும்புதல், பொய்—, எ-று.

(வி-ரை.) பொருள்தேடுமிடத் துண்டாகும் வருத்தத்தை யெண்ணிச் சோம்பி யிருப்பவ னொருகாலத்தும் பெருமை யடையா

னென்பதாம். "சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்" என்றார் ஔவை யாரும். சிறுமை பெருமை யென்பன முரண்டொடை, விரோதாலங் காரமுமாம். சிறுமைக்குப் பெருமை முரண்மொழியாம்.

(பழையவுரை.) பிறர்க்குத் தான்செய்யும் பணிவினைப் பொறாதோன் தனக்குப் பெருமை வேண்டுதல் பொய், எ-று.

(8) பெருமைநோ ஞதோன் சிறுமைவேண்டல் பொய்.

(ப - ரை.) பெருமை-(பிறர் தனக்குச் செய்யும்) மேன்மையை, நோனாதோன் - (விரும்பி) ஏற்றுக்கொள்ளாதவன், சிறுமை-இழிவை, வேண்டல் பொய்—, எ-று.

(வி-ரை.) பிறர்செய்யுங் கௌரவத்தை விரும்பாதவனுக் கெஞ் ஞான்று மிழிவில்லை யென்பதாம்.

(பழையவுரை.) பிறர்க்குத் தான் அரியனும் பெருமை வேண்டாதான் தனக்குச் சிறுமைக்குணம் வேண்டுதல் பொய், எ-று.

(9) பொருணசை வேட்கையான் முறைசெயல் பொய்.

(ப-ரை.) பொருள் - செல்வத்தில், நசை வேட்கையான் - மிகுந்த விருப்பமுடையவன், முறை செயல் - ஒழுங்கான காரியத்தைச் செய்தல், பொய்—, எ-று.

(வி-ரை.) பேராசையுள்ளவன் நியாயவழியி னடவா னென்பதாம். நசை வேட்கை - ஒருபொருட் பன்மொழி.

(பழையவுரை.) பொருள் நசையால் வரும் வேட்கையையுடையான் முறைசெய்தல் பொய், எ-று. (நசை - இச்சை. வேட்கை - ஆசைப்பெருக்கம். முறை - நீதி.)

(10) வாலிய னல்லாதோன் றவஞ்செய்தல் பொய்.

(ப-ரை.) வாலியன் அல்லாதோன் - (மனத்) தூய்மையில்லாதவன், தவம் செய்தல் - தவத்தைச் செய்தல், பொய்—, எ-று.

(வி - ரை.) மனச்சுத்த முடையவனே தவஞ்செய்தற் குரியனு மென்பது. மனத்திற் காமவெகுளி மயக்கங்களை யுடையராய்ப் புறத் தே துறவுவேடம் பூண்டிருப்பவர் செய்யும் தவம் தவமாகாதென்க. "மனத்தது மாசாக மாண்டார் நீராடி, மறைந்தொழுகு மாந்தர் பலர்" என்றார் நாயனாரும். அல்லாதோன் எதிர்மறைக் குறிப்பு வினையா லணையும்பெயர்.

(பழையவுரை.) மனத்தின்கண் தூயனல்லாதோன் தவஞ்செ ய்தல் பொய், எ-று. (வாலியன் - தூயன், பரிசுத்தன்.)

போய்ப்பத்து முற்றிற்று.

8. எளிய பத்து.

எளியவென்பது எண்மையென்னும் பகுதியடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். எளியனவாகிய பத்து விஷய மெனப் பொருள் கொள்ளுங்கால் அன் சாரியை குறைந்து நின்ற அஃறிணைப் பலவின்பா லுடன்பாட்டுக் குறிப்பு வினை யாலணையும் பெயராம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
புகழ்வெய் யோர்க்குப் புத்தேளு டெளிது.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல் சூழ்ந்த வுலகத்துள்ள மக்களியாவருள்ளும், புகழ் - கீர்த்தியை, வெய்யோர்க்கு - விரும்புகின்றவர்களுக்கு, புத்தேள் நாடு-தேவருலகம், எளிது- (அ டை தல்) சுலபமாம், எ-று.

(வி - ரை.) புகழுடையோர் தவறாது சுவர்க்கமடைவ ரென்ப தாம். "நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப், போற்றாது புத்தே

ளுலகு'' என்றார் திருவள்ளுவரும். வெய்யோர்-குறிப்பு வினையாலணையும் பெயர். நாடு-நாடப்படுவதென்னும் பொருளது. நாடல் - விரும்பல். எளிது - குறிப்பு வினைமுற்று.

(பழையவுரை.) ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்து மக்களெல்லாருள்ளும், ஒருவர்க்குப் புகழ்விரும்பின் கடவுளர்வாழு நாடுபெறுத லெளிது, எ-று.

(2) உறழ்வெய் யோருக் குறுசெரு வெளிது.

(ப-ரை.) உறழ்-(யாவரோடும்) பகைக்கின்ற, வெய்யோருக்கு-கொடியவர்க்கு, உறு - நேரிடுகின்ற, செரு - சண்டை, எளிது—, எ - று.

(வி-ரை.) யாவரோடும் பகைக்கு மியல்புடையவர் பிறரோடு போர் புரிதலை யெளிதிலடைவ ரென்பதாம். உறழ், உறு என்பன வினைத்தொகைகள். செரு-முதனிலைத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) பிறரோடு கலகம் விரும்புவார்க்கு மிக்க செரு எளிது, எ-று.

(3) ஈரம்வெய் யோர்க்கு நசைகொடை யெளிது.

(ப-ரை.) ஈரம் - (பிராணிகளிடத்து) அன்பு, வெய்யோர்க்கு - மிகுதியாக வுடையவர்களுக்கு, (பிறர் விரும்பிய தொன்றை) நசை-விருப்பத்தோடு, கொடை - கொடுத்தல், எளிது—, எ-று.

(வி-ரை.) பிராணிகளிடத்து மிக்க வன்புள்ளவ ரியாவரொரு கேட்கினு மதனைத் தவறாது கொடுப்பரென்பதாம். "அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார், ரென்பு முரியர் பிறர்க்கு" என்றார் நாயனாரும். இந்நூலின்கண் "ஈர முடைமை யீகையி னறிப" என்று பிறிதோரிடத்திருப்பது மறிக. கொடை-ஐயீற்றுத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) மனத்துள் ஈரத்தை விரும்பி யிருப்பாருக்கு, பிறனொருவன் நசைகெடக் கொடுத்தல் எளிது, எ-று.

(4) குறளைவெய் யோர்க்கு மறைவிரி யெளிது.

(ப-ரை.) குறளை - கோட்சொல்லும், வெய்யோர்க்கு - கொடிய வருக்கு, மறை - இரகசியத்தை, விரி - வெளியிடுதல், எளிது—, எ - று.

(வி-ரை.) புறங்கூறுவோ ரெப்படிப்பட்ட இரகசியத்தையும் வெளியிடுவ ரென்பதாம். வெய்யோர்க் கென்பதற்கு விருப்பமுடை யோர்க்கெனப் பொருள் கூறினும் பொருந்தும். குறளை-புறங்கூறல். விரி - முதனிலைத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) குறளைச் சொல்லை விரும்புவார்க்கு, ஒருவன் மறையச்செய்த தொன்றனை வெளிப்படுத்திப் பிறரை யறிவித்தல் எளிது, எ-று.

(5) துன்பம் வெய்யோர்க் கின்ப மெளிது.

(ப-ரை.) துன்பம் - துன்பத்தை, வெய்யோர்க்கு - விரும்பிய வர்க்கு, இன்பம் - சுகமுண்டாதல், எளிது—, எ - று.

(வி-ரை.) இன்பத்தை விரும்பாது துன்பத்தையே விரும்பு வார்க்கு இன்ப மெளிதி லுண்டாகு மென்பதாம். "இன்பம் விழை யா னிடும்பை யியல்பென்பான், றுனப முறுத லிலன்" என்றார்.திரு வள்ளுவரும். என்பன முரண்டொடை, விரோதாலங்காரமுமாம் இன்பம் துன்பம் என்பன அம் சாரியைபெற்ற பண்புப்பெயர்கள்; இவை சாரியை பெறாதபோது இன்பு துன்பு எனவரும்.

(பழையவுரை.) ஒன்றனை முயன்று வருந்துன்பத்தை வெரு தார்க்கு, இன்பமெய்துதல் எளிது, எ - று. (வெருதார் - விரும்பு கின்றவர்).

(6) இன்பம்வெய் யோர்க்குத் துன்ப மெளிது.

(ப-ரை.) இன்பம் வெய்யோர்க்கு - இன்பத்தையே விரும்புவோர்க்கு, துன்பம் - துன்பமுண்டாதல், எளிது—, எ-று.

(வி-ரை.) இன்பத்தையே விரும்புபவர்க்குத் துன்ப மெளிதிலுண்டாகு மென்பதாம்.

(பழையவுரை.) முயன்று வருந்தாமைபால் வரும் இன்பத்தை விரும்புவார்க்கு, பொருளில்லாமையால் வருந்துன்பம் எளிது, எ-று.

(7) உண்டி வெய்யோர்க் குறுபிணி யெளிது.

(ப-ரை.) உண்டி - (மிகுதியும்) சாப்பாட்டில், வெய்யோர்க்கு-பிரியமுடையவருக்கு, உறு பிணி-வரத்தக்க நோய், எளிது—, எ-று.

(வி-ரை.) அளவின்றி யுண்போர்க்குக் கரையின்றி நோய் வருமென்பதாம். "இழிவறிந் துண்பான்க ணின்பம்போல் நிற்குங், கழிபே ரிரையான்கண் நோய்", "தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி, னோயள வின்றிப் படும்" என்றார் நாயனாரும். "மீதூண் விரும்பேல்" என்றார் ஔவையாரும். "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம்" என்பது பழமொழி. உண்டி - செயப்படுபொருளில் வந்த இகரவீற்றுத் தொழிற்பெயர். பிணி - வினைமுதற் பொருளில்வந்த இகரவிகுதி புணர்ந்து கெட்ட தொழிற்பெயர்.

(பழையவுரை.) உண்டி மிக விரும்பினார்க்கு மிக்க பிணி எளிது, எ-று.

(8) பெண்டிர்வெய் யோர்க்குப் படுபழி யெளிது.

(ப-ரை.) பெண்டிர் - மனைவியரிடத்து, வெய்யோர்க்கு - (மிக) விருப்பமுள்ளவர்களுக்கு, படு பழி-உண்டாகும் பழி (நிந்தை), எளிது—, எ-று.

(வி-ரை.) மனைவியரிடத்து மிக்க விருப்பங்கொண்டு அவரி னின்று நீங்காதிருப்போர்க்கு உலகநிந்தை யெளிதி லுண்டாகுமெ ன்பதாம். பழி-உலகநிந்தை. பெண்டிர் என்பதில் பெண்மை பகுதி; இஃது இர் ஈற்றுப் பன்மைப் பலர்பாற்பெயர். பெண்மை-அமைதித் தன்மை.

(பழையவுரை.) பெண்டிரை மிக விரும்பினார்க்கு உண்டாகும் பழி எளிது, எ-று.

(9) பாரம்வெய் யோர்க்குப் பாத்தூ ணெளிது.

(ப-ரை.) பாரம் - (தாம் செய்தற்குரிய) கடமையை, வெய் யோர்க்கு-விரும்பியவர்க்கு, பாத்து - (தம்மிடத்துள்ள பொருளைத் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் என்பவர்க்குப்) பகுத்து, ஊண் - (பின்னர்) உண்ணுதல், எளிது—, எ-று.

(வி-ரை.) தமக்குரிய கடமையை நன்குணர்ந்தவர் தம்மிடத் துள்ள பொருளைத் தக்கவாறு பகுத்துண்பா ரென்பதாம். கடமை - உரிமை. பாத்து-பகுத்தென்பதன் விகாரம். ஊண்-முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

(பழையவுரை.) பிறர் பாரத்தைத் தாங்குதல் விரும்புவார்க்கு பகுத்துண்டல் எளிது, எ-று.

(10) சார்பி லோருக் குறுகொலை யெளிது.

(ப-ரை.) சார்பு - (போர்முகத்து) உதவிபுரிவோர், இல்லோ ருக்கு - இல்லாதவருக்கு, உறு - நேரிடுகின்ற, கொலை—, எளிது—, எ-று.

(வி-ரை.) உதவியின்றிப் போர்புரிவோர் விரைவி லழிவ ரென் பதாம். சார்பு-தொழிலாகுபெயர். இல்லோர் - எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும்பெயர்.

(பழையவுரை.) நன் னட்பைச் சாராதோர்க்கு, பொருந்திய கொலைத்தொழில் செய்தலெளிது, எ-று.

எளியபத்து முற்றிற்று.

---

9. நல்கூர்ந்த பத்து.

நல்கூர்ந்த - குறிப்புப் பெயரெச்சம்; நல்கூர்தல் - வறுமையடைதல்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
முறையி லரசனாடு நல்கூர்ந் தன்று.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த உலகத்துள்ள மக்களியாவருள்ளும், முறை இல் - நீதியில்லாத, அரசன் நாடு - அரசனது தேசம், நல்கூர்ந்தன்று-வறுமை யுடையதாம், எ-று.

(வி-ரை.) நீதி தப்பிய வரசனது நாடு வறுமையால் வருந்துமென்பதாம். "முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி,யொல்லாது வானம் பெயல்" என்றார் நாயனாரும். நாடு என்பதீண்டு நாட்டிலுள்ளார்க்காதலின் இடவாகுபெயராம்.

(பழையவுரை.) ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்து எல்லா மக்கட்கும், முறைமை செய்யா வரசன் நாடு வறுமையுறும், எ-று.

(2) மிகமூத்தோன் காம நல்கூர்ந் தன்று.

(ப-ரை.) மிக மூத்தோன்-வயதால் மிகவும் மூத்தவன், காமம்-காம இன்பத்தை (விரும்புதல்), நல்கூர்ந்தன்று-வறுமை யுடையதாம், எ-று.

(வி-ரை.) வயது மிக்கு உடல் நடுங்கும் இயல்புடைய கிழவன் காம இன்பத்தை அடைதல் ஒருவாற்றானு முடியாமையின் அவனதையடைய விரும்புதல் பயன்படா தென்பதாம். காமமென்பது அதனாலாம் இன்பத்துக்காதலின் கருவியாகுபெயர். விரும்புதல் - சொல்லெச்சம். காமமாவது மகளிரைப் புணர விரும்புதல். மூத்தோன் என்பது "காம நல்கூர்ந்தன்று" எனப் பின்வரும் தொடர்மொழிப் பொருளால் வித்தையால் மூத்தோன், ஜாதியால் மூத்தோன், ஆசிரமத்தால் மூத்தோன் முதலியவர்களை உணர்த்தாது வயதால் மூத்தவனையே உணர்த்திற்று.

(பழையவுரை.) மிக மூத்தான் காமத்திற் றுய்க்கு நுகர்ச்சி வறுமையுறும், எ-று.

(3) செற்றுட னுறைவோனைச் சேர்தனல் கூர்ந்தன்று.

(ப-ரை.) செற்று - பகைத்து, உடன் உறைவோன் ஐ-தன்னுடன் வசிக்கின்றவனை, சேர்தல் - சேர்ந்திருத்தல், நல்கூர்ந்தன்று—, எ-று.

(வி-ரை.) ஒருவன் றன்னைப் பகைத்தவனுடன் கூடிவாழ்தல் மிகவுங் கொடிய தென்பதாம். "உடன்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட் பாம்போ டுடனுறைந் தற்று" என்றார் திருவள்ளுவரும். உறைவோன் - வினையாலணையும்பெயர்.

(பழையவுரை.) தன்னைச் செறுத்தொழுகுவானைச் சென்றடைதல் வறுமையுறும், எ-று. (செறல்-கெடுத்தல்).

(4) பிணிகிடந் தோன்பெற்ற வின்பநல் கூர்ந்தன்று.

(ப-ரை.) பிணி கிடந்தோன்-பிணியால் (வருந்திப்பாயிற்) கிடந்தவன், பெற்ற-(உணவு முதலியவற்றால்) அடைந்த, இன்பம்-சுகம், நல்கூர்ந்தன்று—, எ-று.

(வி-ரை.) பிணியால் வருந்திக் கிடப்பவனுக் கெவற்றானுடக் காலத்தின்ப முண்டாகா தென்பதாம்.

(பழையவுரை) பிணிபட்ட உடம்பை யுடையான் நுகரும் காமவின்பம் வறுமையுறும், எ-று.

(5) தற்போற் றாவழிப் புலவிநல் கூர்ந்தன்று.

(ப-ரை.) தன் போற்றாத வழி - (ஒருவன்) தன்னைப் பாதுகாத்துக்கொள்ளாதவிடத்து, புலவி - பிறரொடு மாறுகொள்ளுதல், நல்கூர்ந்தன்று—, எ-று.

(வி-ரை.) பாதுகாப்பின்றி யொருவன் பிறரோடு பகைத்தல் கூடா தென்பதாம். போற்றா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். தன் என்பது தற் என வருதலேயன்றி யியல்பாயும் வரும்; இது தான் என்பதன் விகாரமொழி.

(பழையவுரை.) தன்மே லன்பாற் போற்றுதார் திறத்துப் புலக்கும் புலவி வறுமையுறும், எ-று. (புலவி-பிணக்கு). -

(6) முதிர்வுடை யோன்மேனி யணிநல் கூர்ந்தன்று.

(ப-ரை.) முதிர்வு உடையோன் - கிழப்பருவ முடையவன், மேனி - உடம்பின்கண் (தரித்த), அணி - ஆபரணம் (அவனுக்கு), நல்கூர்ந்தன்று—, எ-று.

(வி-ரை.) கிழவன் றன்னை யாபரணத்தா லலங்கரித்துக்கொள்ளுத லழகாயிரா தென்பதாம். மேனி என்னும் சிறப்பெயர் அதனை யுடைய வுடம்புக்காதலின் பண்பாகுபெயராம். அணி - செயப்படுபொருண்மையை யுணர்த்து மிகரவிகுதி புணர்ந்துகெட்ட தொழிற்பெயர்; இஃது அணியப்படுவதென்றும் பொருளதாம்.

(பழையவுரை.) மூத்தவுடம்பினை யுடையான் அணியும் அணி வறுமையுறும், எ-று.

(7) சொற்செல் லாவழிச் சொலவுநல் கூர்ந்தன்று.

(ப-ரை.) சொல் - (ஒருவன் தனது) சொல். செல்லாத வழி - செல்லாதவிடத்து, சொலவு - (தன் குறையைச்) சொல்லுதல், நல் கூர்ந்தன்று—, எ-று.

(வி-ரை.) தன் குறையைக் கவனித்துக் கேட்காதா ரிடத்தி லொருவன் தனது குறையைச் சொல்லுதல் கூடா தென்பதாம். சொலவு - வுகரவீற்றுத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) தன் சொற் செல்லாவிடத்துச் சொல்லிய சொல் வறுமையுறும், எ-று.

(8.) அகம்வறி யோனண்ண னல்கூர்ந் தன்று.

(ப-ரை.) அகம் - மனதின்கண், வறியோன் - அன்பில்லாத வனை, நண்ணல் - (ஒருவன் சிநேகிதமாக) அடைதல், நல்கூர்ந் தன்று—, எ-று.

(வி-ரை.) அன்பில்லாதாரைச் சிநேகித்தல் துன்பத்திற் கிட மாமென்பது.

(பழையவுரை.) மனத்தில் நன்மையின்றி வறியானொருவனைச் சென்று நண்ணுதல் வறுமையுறும், எ-று.

(9) உட்கில் வழிச்சின நல்கூர்ந் தன்று.

(ப-ரை.) உட்கு-(தன்னைக்கண்டு பிறர்) அஞ்சுதல், இல் வழி - இல்லாதவிடத்து, சினம்-(ஒருவன்) கோபித்தல், நல்கூர்ந்தன்று—, எ-று.

(வி-ரை.) ஒருவன் றன்னின் மிக்காரு மொப்பாரு முள்ள விடத்துக் கோபித்தல் துன்பத்திற் கிடமாமென்பது. உட்கு - முதனிலைத் தொழிற்பெயர்.

(பழையவுரை.) மதியாதார்முன் வெகுளும் வெகுட்சி வறுமை யுறும், எ-று.

(10) நட்பில் வழிச்சேற னல்கூர்ந் தன்று.

(ப-ரை.) நட்பு இல் - (தனக்குச்) சினேகித ரில்லாதவிடத்து, சேறல் - (ஒருவன்) செல்லுதல், நல்கூர்ந்தன்று—, எ - று.

(வி-ரை.) சினேகித ரில்லாதவிடத்தி லொருவன் செல்லுதல் துன்பத்திற் கிடமாமென்பது. நட்பு-பண்பாகுபெயர். சேறல்-செல்தல் எனப் பிரிபடும்.

(பழையவுரை.) தன்னொடு நண்பில்லாதார் மாட்டு ஒன்றனை நச்சிய நசை வறுமையுறும், எ-று.

நல்கூர்ந்தபத்து முற்றிற்று.

---

10. தண்டாப்பத்து.

நீங்காதபத்து விஷயம்.

(1) ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓங்கல் வேண்டுவோ னுயர்மொழி தண்டான்.

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த வுலகத்துள்ள மக்களியாவருள்ளும், ஓங்கல்-(மேன்மேலும்) விருத்தியாதலை, வேண்டுவோன் - விரும்புகின்றவன், உயர் மொழி - (அறிவுடையோர் கூறும்) உயர்வாகிய சொற்களை, (மறக்காது கேட்டலினின்றும்), தண்டான் - நீங்கான், எ - று.

(வி-ரை.) அறிவுடையோர் சொற்படி நடப்பவன் மிகவும் விருத்தியாவ னென்பதாம். வேண்டுவோன் - வினையாலணையும்பெயர். உயர்மொழி-பண்புத்தொகைநிலைத்தொடர்; உயர்ந்த மொழியெனக் கொள்ளுங்கால் வினைத்தொகைநிலைத்தொடராம்.

(பழையவுரை.) ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்து எல்லா மக்களுள்ளும் உயர்வு வேண்டுவோன் பிறரை உயர்த்துச்சொல்லும் மொழிகளை மாறான், எ - று. (தண்டுதல் - மறுத்தல், விளக்குதல்).

(2) வீங்கல் வேண்டுவோன் பலபுகழ் தண்டான்.

(ப-ரை.) வீங்கல் வேண்டுவோன்-(எவ்விடத்துந் தனது பெயர்) பரவுதலை விரும்புகின்றவன், பல புகழ்-பலவகைப்பட்ட புகழினின்றும், தண்டான்—, எ - று.

(வி - ரை.) பிரசித்தமான பெயரையுடையவன் யாவராலும் புகழப்படுபவனு யிருப்பா னென்பதாம். புகழ் : ஈகை, கல்வி முதலியவற்றால் உண்டாவதா யிருத்தலின் 'பலபுகழ்' எனக் கூறினார். வீஙகல் - அல் ஈற்றுத் தொழிற்பெயர். புகழ் என்னுமிடத்து நீக்கப் பொருளில் வந்த ஐந்தனுருபு தொக்குநின்றது.

(பழையவுரை.) ஆக்கத்தை வேண்டுவோ னொருவன் தனக்குப் பல புகழ்வருஞ் செய்கைகளை யொழியான், எ - று. (ஆக்கம் - செல்வம்.)

(3) கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்.

(ப-ரை.) கற்றல்-(நல்லாசிரியரிடத்து நல்ல நூற்களைப்) படித்தலை, வேண்டுவோன் - விரும்புகின்றவன், வழிபாடு-(அவரை) வழிபடுதலினின்றும், தண்டான் —, எ - று.

(வி-ரை.) கல்வியறிவுடையனாக விரும்புவோன் தனது ஆசிரியரைத் தவறாது வழிபடுவனென்பதாம். "வழிபடுவோனே, உரைகோளாளர்க்கு உரைப்பது நூலே" என்று நன்னூலிலும், முதுமொழிக்காஞ்சி சிறந்தபத்தில் 'கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று' என்றதனாலுமறிக. கற்றல்-தல்லீற்றுத் தொழிற்பெயர். வழிபாடு-முதனிலைதிரிந்த தொழிற்பெயர்.

(பழையவுரை.) ஒன்றனைக் கற்றல் விரும்புவோன் தன்னைக் கற்பிக்கும் ஆசிரியர்க்குச் செய்யும் வழிபாடு ஒழியான், எ - று. (வழிபாடு - தொண்டு.)

(4) நிற்றல் வேண்டுவோன் றவஞ்செய றண்டான்.

(ப-ரை.) நிற்றல் - (வெகுகாலந் தனது சரீரங் கெடாது) நிலைபெறுதலை, வேண்டுவோன் - விரும்புபவன், தவஞ்செயல் - தவஞ்செய்தலினின்றும், தண்டான்—, எ - று.

(வி-ரை.) உலகத்தில் வெகுகால மிருக்க விரும்புவோன் றவத்தையே விரும்பிச் செய்வனென்பதாம். தவஞ்செயல் - ஆக்கப்பொருளில் வந்த இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.

(பழையவுரை.) பிறப்பினைக்கெடுத்துத் தன்னை நிலைப்பிக்க வேண்டுவோன் தவஞ்செய்த லொழியான், எ - று. (தவம்-நோன்பு.)

(5) வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்.

(ப-ரை.) வாழ்க்கை-(செவ்வையாக) வாழ்தலை, வேண்டுவோன்-மேன்மேல் விரும்புபவன், சூழ்ச்சி-(அதற்குரிய) ஆலோசனையினின்றும், தண்டான்—, எ - று.

(வி-ரை.) பலர் மதிக்க வாழவிரும்புவோன் அதற்குரிய ஆலோசனையினின்று நீங்கானென்பதாம். "சூக்கிவினைசெய்", "நுண்ணிய கருமமு மெண்ணித் துணி" என்றார் ஔவையாரும். சூழ்ச்சி - தொழிற்பெயர்; இதன் விகுதி சி.

(பழையவுரை.) வாழ்தலை மேன்மேலும் விரும்பிய ஒருவன் தான் எடுத்த தொழிலை யாராய்த லொழியான், எ - று.

(6) மிகுதி வேண்டுவோன் றகுதி தண்டான்.

(ப-ரை.) மிகுதி-(தேகப்) பொலிவை, வேண்டுவோன்-விரும்புபவன், தகுதி - (அதற்குத்) தகுதியாகவுள்ள வுணவுமுதலியவற்றினின்றும், தண்டான்—, எ - று.

(வி-ரை.) அழகுடையவனாக விரும்புவோன் நல்லுணவுண்டல், நல்லாடை தரித்தல் முதலியவற்றினின்று நீங்கானென்பதாம். பொலிவு-அழகு. தகுதி-பண்பாகுபெயர்.

(பழையவுரை.) "மிகுதி வேண்டுவோன் வருத்தந் தண்டான்" என்பதும் பாடம். அளவுக்கு மிக்க பொருளை வேண்டுவோன் முயற்சி வருத்தமென நீங்கான், எ - று.

(7) இன்பம் வேண்டுவோன் றுன்பந் தண்டான்.

(ப-ரை.) இன்பம்-(முன்னே) இன்பத்தை, வேண்டுவோன்-விரும்புபவன், துன்பம்-(பின்னே) துன்பமடைதலினின்றும், தண்டான்—, எ - று.

(வி-ரை.) முன் இன்பத்தை விரும்புவோன் பின் துன்பத்தினின்றும் நீங்கானென்பதாம். "நாய்போ லுழைத்தால் அரசன்போல் வாழலாம்" என வழங்கும் பழமொழியையுங் காண்க.

(பழையவுரை.) இன்பத்தை விரும்பிய ஒருவன், துன்பத்தைத் துன்பமென்று களையான், எ - று.

(8) துன்பம் வேண்டுவோ னின்பந் தண்டான்.

(ப-ரை.) துன்பம் - (முன்னே) துன்பத்தை, வேண்டுவோன் - விரும்புபவன், இன்பம்-(பின்னே) இன்பத்தினின்றும், தண்டான்—, எ - று.

(வி-ரை.) முன்பு துன்பத்தை விரும்புவோன் பின்பு இன்பத்தினின்றும் நீங்கானென்பதாம்.

(பழையவுரை) துன்பத்தை விரும்பிய ஒருவன் இன்பத்தை இன்பமென்று களையான், எ-று.

(9) ஏமம் வேண்டுவோன் முறைசெயல் தண்டான்.

(ப-ரை) ஏமம் - (தனக்குக்) காவலை, வேண்டுவோன் - விரும்பிய அரசன்; முறைசெயல் - (நீதிநூல்களிற் கூறிய) முறைப்படி அரசாட்சி நடத்துதலை, தண்டான்—, எ - று.

(வி-ரை தனது நாட்டுக்குடிகளுக்கு இன்பஞ்செய்ய விரும்பிய அரசன் முறைமைப்படி நீதி நடத்துவன் என்பதாம். முறை - பண்பாகுபெயர்; இதனது பகுதிப்பொருள் விகுதியாகிய மை தொக்குநின்றது.

(பழையவுரை.) குடிகளைக் காக்க விரும்பிய அரசன் முறைமைப்படி நடத்த லொழியான், எ-று. (ஏமம் - இன்பம்)

(10) காமம் வேண்டுவோ னின்பந் தண்டான்.

(ப-ரை.) காமம் வேண்டுவோன் - மகளிரது புணர்ச்சியின்பத்தை விரும்புகின்றவன், இன்பம் - (அம்மகளிரிடத் துண்டாகும்) இன்பத்தினின்றும், தண்டான் —, எ - று.

(வி-ரை) மங்கையர் புணர்சசியில் கருத்துடையவன் அவர் தரும் சுகத்தைவிட்டு நீங்கான் என்பதாம். காமம் இன்பம் என்பன பால்பகா அஃறிணைப்பெயர்கள். தண்டான் - தெரிநிலை எதிர்மறை வினைமுற்று.

இதற்குப் பழையவுரை கிடைக்கவில்லை.

தண்டாப்பத்து முற்றிற்று.

முதுமொழிக்காஞ்சி மூலமும் உரையும் முற்றிற்று.

Ripon Press.